கலைஞரின்
கடிதங்கள்



19

29.07.1990 - முதல்
01.06.1991 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 19

29.07.1990 - 01.06.1991

கி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்



சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00**

CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பொருளியல்
ஆய்வுத் துறை
தேனாம்பேட்டை
சென்னை-18



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
1657. பதரும் வருந்தும் பாதகச் செயல்!	29-07-1990	23
1658. சமூகநீதி - புதிய சரித்திரத் தொடக்கம்!	09-08-1990	27
1659. முதல் அழைப்பு விடுக்கிறேன்!	04-09-1990	31
1660. அழைக்கிறேன்; அழைக்கிறேன் உன்னை!	05-09-1990	35
1661. காத்திருக்கிறேன்; கழகத்தின் உயிரே!	10-09-1990	39
1662. விரிவானம் பாராய் தம்பி!	12-09-1990	44
1663. பயணம் தயாரா; என் பத்தரை மாற்றுத் தங்கமே!	13-09-1990	50
1664. என்னில் எல்லாமாக நிறைந்துள்ளாய்!	19-09-1990	55
1665. தேசிய ஒருமைப்பாடு கூட்டம்! - 1	25-09-1990	60
1666. தேசிய ஒருமைப்பாடு கூட்டம்! - 2	26-09-1990	65
1667. சரித்திரம் சபிக்கும்! சாபத்திற்கு ஆளாகாதீர்!	28-09-1990	71
1668. காற்றினிலே வரும் கீதம்!	02-10-1990	75
1669. பாவேந்தன் கேள்விக்குப் பதில் என்ன?	04-10-1990	80

1670. உடுமலையார் எழுதினாரே ஒரு பாட்டு!	06-10-1990	85
1671. அரசியல் அற்பத்தனம்!	07-10-1990	89
1672. ஆரியப் படை கடந்தார்!	08-10-1990	93
1673. ஐம்பெரும் முழ(ட)க்கம்!	17-10-1990	99
1674. ஒற்றுமை காத்திட ! உரிமைகள் பெற்றிட !	23-10-1990	102
1675. வெறுப்பும் நினைப்பும் நெருப்பில் கருகிட...	25-10-1990	106
1676. சூலம் தாங்கி வரும் கோலம் என்ன கோலமே!	01-11-1990	111
1677. ஆகஸ்ட் 7 - நவம்பர் 7!	09-11-1990	116
1678. மூப்பனார் முத்தார வாசகம்!	16-11-1990	121
1679. அன்பு மாறாமல் ஆயுளை நகர்த்திக் கொண்டிருக்கிறேன்!	18-11-1990	125
1680. நிலையற்றதை நினைத்துப் பார்த்தால்!	22-11-1990	129
1681. மறியலும் - மலரும் நினைவுகளும்!	24-11-1990	133
1682. சமூக நீதி அமைப்புகள் சங்கமிப்போம்!	04-12-1990	140
1683. வெளிச்சத்தில் இருட்டைத் தினிக்கின்றார்!	19-12-1990	144
1684. சமுதாய மறுமலர்ச்சி காண...!	22-12-1990	148
1685. பொங்கலில் பொங்கி எழுக!	14-01-1991	151
1686. போர் மூண்டுவிட்டது; பொறுப்பை உணர்வோம்!	18-01-1991	154

1687. அண்ணா கல்லறை முன் சபதம் ஏற்போம்; வா!	01-02-1991	158
1688. அடியே அனார்கலி! உனக்குப் பிறகு...	09-02-1991	161
1689. பேசினாரா? அல்லது பிதற்றினாரா?	10-02-1991	166
1690. சபாஷ் கூறிக்கொள்ளும் சகாய்!	13-02-1991	172
1691. சரித்திரத்தின் சாகாத எழுத்துக்கள்!	17-02-1991	178
1692. கேவலமல்ல! ''கிங்டம்''!	21-02-1991	182
1693. இந்திக்கு தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்; எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!	22-02-1991	187
1694. இங்கே கலைப்பு ஆர்.வி.க்கு இதிலே ஒரு களிப்பு!	24-02-1991	191
1695. உள்ளத்தில் ஒளி இருந்தாலே போதும்!	01-03-1991	195
1696. கலைக்கும் சர்க்கார்; நிலைக்கும் சர்க்காரா?	06-03-1991	200
1697. எய்தவர் தூண்டியவர்; யார்? யார்?	07-03-1991	205
1698. அடையாளம் காட்டப்பட வேண்டியவர்கள்!	08-03-1991	206
1699. அப்பனும் பாட்டனும் ஆற்றுக்குள்ளே!	09-03-1991	210
1700. தேசம் என்றால் என்னவென்று தெரியாதவர்கள்!	12-03-1991	216
1701. பாவம்; தானாகவே கிழிகின்றன!	13-03-1991	220

1702. மாசு கற்பித்தது யார்? எவர்? எப்போது?	14-03-1991	223
1703. ஆச்சரியக்குறியும்! கேள்விக்குறியும்?	15-03-1991	231
1704. களம் அதோ! அணி திரள்க; பணிபுரிக!	16-03-1991	237
1705. மாதிரிப் பட்டியல் - நமது மாநிலப் பட்டியல்!	18-03-1991	244
1706. புயலைக் கீறிக் கொண்டு புறப்படுக!	21-03-1991	249
1707. வெற்றி! வெற்றி! வெற்றியன்றி வேறில்லை!	22-03-1991	254
1708. நடுவர் மன்றம்; நமது நியாயத்தை உணரட்டும்!	24-03-1991	260
1709. விழல் விளைந்திடக் காரணமாவதோ?	28-03-1991	265
1710. இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!	29-03-1991	270
1711. அன்று தந்த விலையும் இன்று தந்த விலையும்!	30-03-1991	275
1712. என் வேண்டுகோள் ஏற்றிடுக!	25-04-1991	280
1713. உன்னை நம்பித்தான் முரசறைகிறேன்!	01-04-1991	283
1714. இன்றைய கடிதம்! இல்லை; கடிதங்கள்!	03-04-1991	290
1715. தவமிருப்போராக நாம்; வரம் தருவோராக அவர்களா?	05-04-1991	301
1716. வெற்றி முகட்டில் ஏறிடு! வீரத்திருமுகம் காட்டிடு!	06-04-1991	306

1717. ஆற்றிடுக கடமை! அளித்திடுக தேர்தல் நிதி!	08-04-1991	313
1718. கலைஞர் வேண்டுகோள்!	10-04-1991	318
1719. உன் நினைவுக்கு ஒரு நிகழ்ச்சி!	11-04-1991	320
1720. பொங்கி எழ வேண்டும்! புதுவேகம் காட்ட வேண்டும்!!	13-04-1991	323
1721. போலி நாடகங்கள்! பொல்லாத வார்த்தைகள்! முஸ்லீம்களை ஏமாற்றும் முயற்சிகள்!	19-04-1991	325
1722. பகலை இரவென்று சொல்பவர்கள்!	20-04-1991	331
1723. ஆசையும் பாசமும் அங்கே! அடியும் உதையும் இங்கே!	21-04-1991	336
1724. மானம் காக்கும் யுத்தம்; மறவாதே!	22-04-1991	342
1725. உயிரோட்டத்தில் ஒரு வேறுபாடும் இல்லை!	23-04-1991	345
1726. எதிரி ஏடுகளும், இனத்துரோக ஏடுகளும்!	24-04-1991	347
1727. சத்தான கருத்துக்களை முத்து முத்தாக....	26-04-1991	352
1728. கழக மென்னும் கண்ணகி கேட்கும் நீதி!	27-07-1991	361
1729. சென்னையின் செஞ்சதுக்கத்திலிருந்து!	28-04-1991	369
1730. பத்திரிகைகளின் பார்வையில் திராவிட இயக்கம்!	29-04-1991	374
1731. பதவிக்காகப் பறிபோவதோ சுயமரியாதை!	01-05-1991	380

1732. இரு குறள் தரும் எச்சரிக்கை இதுவே!	14-05-1991	385
1733. தேவை; ஓர் அலட்சியப் புன்னகை!	15-05-1991	391
1734. இதயங்கள் அருகருகேதான் இருக்கின்றன!	29-05-1991	395
1735. நான் மீண்டும் பணி தொடங்குகிறேன்!	01-06-1991	398

1657. பதரும் வருந்தும் பாதகச் செயல்!

உடன்பிறப்பே,

கழக அரசு மீண்டும் பொறுப்பேற்றவுடன் கடந்த காலத்தில் தொய்வுற்றுக் கிடந்த பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில், தொழில் வளத்தில், புதிய சாலைகளை அமைத்தல், பழைய சாலைகளைப் பழுது பார்த்தல் போன்ற பணிகளில், நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள் என்று பாசன வசதிக்கான நிலவள மேம்பாட்டில், மிகமிக அத்தியாவசியமாகி விட்ட மின்சார உற்பத்தியில், இப்படி எத்தனையோ சாதனைகளை அடுக்கடுக்காக நிகழ்த்தி வருகிறது.

அது மட்டுமல்ல; இந்தியாவில் உள்ள பல மாநிலங்களை ஒப்பிடும்போது இங்குதான் அரிசி விலை குறைவு! இங்குதான் பேருந்து கட்டணம் குறைவு! பத்து லட்சத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் பயன்பெறுமளவுக்கு பம்ப்செட் மின் கட்டணமும் குறைவு! எட்டாவது வரையில் படிக்கும் மாணவர்களுக்கு பேருந்துகளில் இலவசப் பயணம்! அதற்குமேல் படிக்கும் மாணவர்களுக்கு பேருந்து கட்டணம் ஐம்பது விழுக்காடுதான்!

அதுமட்டுமா? மாநிலங்களுக்கிடையிலான (இன்டர் ஸ்டேட் கௌன்சில்) குழு அமைத்திட அரசியல் சட்டத்தில் இடமிருந்தும் நாற்பது ஆண்டுகளாக அதனை அலட்சியப்படுத்திய மத்திய அரசு; இப்போது நமது தேசிய முன்னணி ஆட்சியில் அந்தக் குழுவை அமைத்து அதன் முதற்கூட்டம் ஆகஸ்டு நாலாம் தேதி பெங்களூரில் நடைபெறப் போகிறது என்ற செய்தி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நீண்டநாள் கோரிக்கைக்குக் கிடைத்த வெற்றி!

முடிவு காணமுடியாமல் முடங்கிப்போய் விடுமோ என திகைத்திடச் செய்த காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் (டிரிபூனல்) அமைத்திட; முன்பிருந்த மத்திய அரசுகள் முன்வராமல் இரட்டை வேடம் தாங்கி நடித்ததற்கு மாறாக - மாநில அரசின்

சட்டமன்ற தீர்மானத்தை மதித்து; நடுவர் மன்றம் அமைந்திட வழி விடுத்த நிகழ்ச்சி - தமிழக விவசாயிகள் வயிற்றில் பால் வார்த்த நிகழ்ச்சியாகும்!

மத்திய அரசின் துணையுடன் மாநில அரசு; விவசாயிகளின் கடன் ஐநூறு கோடி ரூபாயை மிக விரைவில் ரத்து செய்திடத் திட்டம் தீட்டிச் செயல்படுகிறது!

ஆதி திராவிடர்க்கு இலவச வீடு கட்டும் திட்டம், கைவிடப்பட்ட நிலையில் - கழக அரசு பொறுப்பேற்றவுடன், அவர்களுக்கு இலவச காங்ரீட் வீடுகளை மீண்டும் கட்டித்தரும் பணியை விரைந்து மேற்கொண்டுள்ளது!

மூடப்பட்ட தொழிற்சாலைகளை; எத்தனையோ சிரமங்களுக்கிடையே ஒன்றன்பின் ஒன்றாக திறந்திடும் முயற்சியில் வெற்றி பெற்று வருகிறது!

ஆதிக்கக்காரர்களுக்கு, சீமான் பூமான்களுக்கு ஆல வட்டம் சுழற்றும் அரசாக இல்லாமல் தவறிழைப்போர் யாராயினும் தக்க நடவடிக்கை எடுக்கத் தயங்காமல் நேர்மைப் பயணத்தில் நிமிர்ந்து நடக்கிற அரசாக நமது அரசு திகழ்கிறது!

மதபேத சாதிபேதச் சண்டைகளைத் தூண்டுவோர் யாராயினும், தமிழகத்தை வன்முறைக்களமாக்க நினைத்திடுவோர் எவராயினும் - கொஞ்சமும் தயவு தாட்சண்யம் பாராமல் சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன!

மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான சமூக ரீதியில் 20 விழுக்காடு தனி ஒதுக்கீடு பின்தங்கிக் கிடக்கிற எல்லா வகுப்பினரின் குடும்பங்களிலும் சுடர் ஜோதி எழ வேண்டும் என்பதற்காக பட்டதாரிகளே இதுவரை இல்லாத குடும்பத்து மாணவனுக்கு தொழிற் கல்வியில் ஐந்து மதிப்பெண் அதிகம் தர வேண்டுமென்ற நிலையெடுத்த காரணத்தால் பயன்பெற்றோர் பலநூறு பேர் என அறிந்து எப்படிப் பூரித்துப் போகிறேன் தெரியுமா? உடன்பிறப்பே, இத்தனையும் இதற்கு மேலும் எண்ணற்ற திட்டங்கள், புரட்சிகரச் சட்டங்கள் இந்த அரசின் சாதனை! நீ அறிவாய்!

அனைத்தையும் மக்களுக்கு விளக்கவும், மக்களைச் சென்றடைச் செய்திடவும், கிராமப்புறங்களில் இருபத்திநாலாயிரம்

பணியாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்! அரசின் திட்டங்கள் மக்களுக்குப் போய்ச்சேராமல் - வாய்க்கால் வழியோடி நெல்லுக்குப் போகாமல் புல்லுக்குப் போய்ச்சேரும் நிலையைத் தடுத்திட - எத்தனையோ ஏற்பாடுகள் இருக்கின்றன!

இருந்தும் சில நல்வாழ்வுத் திட்டங்களை, அதுவும் நலிந்தோர் நல்வாழ்வுத் திட்டங்களை, இடையில் சில சமூக விரோதிகள் ஏப்பம் விட்டுப் போகச் சதி செய்கின்றனர் எனக் கேள்வியுறும்போது நெஞ்சு பதைக்கிறது! நஞ்சென வாய்த்தனரே இவர் நமது நாட்டினில் என்ற ஏக்கப் பெருமூச்சு எழுகின்றது!

கழக ஆட்சி மீண்டும் அமைந்துள்ள இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில்தான் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட கருவுற்ற பெண்களுக்கு பேறுகால உதவியாக தலா இருநூறு ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது!

ஏழை வீட்டில் எட்டாவது வரை படித்துள்ள பெண்ணுக்குத் திருமணமாகாதிருந்தால், அந்தப் பெண்ணின் திருமணச்செலவுக்கு ஐயாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கும் - வீட்டில் விளக்கேற்றும் திட்டத்தை நமது அரசுதான் அறிவித்து, நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த ஒன்றரை ஆண்டில் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட ஏழைப் பெண்கள், இந்த உதவியினைப் பெற்றிருக்கிறார்கள்.

இதுபோன்ற நல்வாழ்வுத் திட்டங்களிலும் வஞ்சகப் பெருச்சாளிகள் சிலர் தங்களின் கைவரிசையைக் காட்டுகிறார்கள் என்கிறபோது; அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் - பாற்குடத்தில் பாஷாணத்துளியாகவன்றோ கருதப்பட வேண்டியவர்கள்!

சில கிழமைகளுக்கு முன்பு பசும்பொன் தேவர் மாவட்டத்தில் ஆசிரியர் ஒருவர், திருமண உதவிபெற போலிச் சான்றிதழ் தயாரித்து சில பெண்களின் பெயரைச் சொல்லி அரசின் பணத்தைக் கொள்ளையடிக்க முயன்று சிக்கிக் கொண்டார் என்ற செய்தி!

இதோ மற்றொரு கொடுமை! சென்னை திருவல்லிக்கேணியில் கற்பகம் என்பவரின் மகள்! பெயர் அமுல்! படித்தது ஆறாம் வகுப்பு வரையில்! அந்தப் பெண்ணை வைத்து அரசு நிதி ஐயாயிரத்தை

பெற முனைந்தார் அன்வர்பாட்சா என்பவர்! பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடினார்! அமுலின் தம்பி ராமு என்பவரையே மாப்பிள்ளையாக்கி இருவரையும் புகைப்படமெடுத்து திருமணப் பத்திரிகை அச்சிட்டு அதிகாரிகளை ஏமாற்ற முனைந்தார்! ஆறாவது படித்த பெண்ணை எட்டாவது படித்ததாக போலிச்சான்று! அதைவிட அக்கிரமம்; அக்காளுக்கும் தம்பிக்கும் திருமணமென்று பத்திரிகை!

நல்லவேளை! அந்த நச்சுத் திட்டம் வெற்றி பெறவில்லை! சிக்கிக்கொண்டு சிறைக் காவலில் இருக்கிறார்!

முறைப்படி உரியவர்களுக்குப் போய்ச்சேர வேண்டிய பயனை இடையில் தடுத்துப் பிழைத்திட முனையும் இழிதகைகள் குணம் அறவே ஒழிக்கப்பட; இளைய தலைமுறையின் கூரிய பார்வை இத்தகைய கழுகு மனிதர்களைக் கவனித்தபடி இருக்க வேண்டும்! நல்லெண்ணம் கொண்டோர் நமக்கேன் வம்பு என்று இருந்துவிடாமல் இந்த நச்சு நினைப்பினரை சட்டத்தின் முன்னே நிறுத்த வேண்டும்!

ஒரு ஆட்சியின் சாதனைகள், திட்டங்கள், இயற்றும் சட்டங்களின் பயன்கள் - மக்களுக்குப் போய்ச் சேராமல் இடையிலே அவற்றை விழுங்க எண்ணிடுவோர்; மாக்களிலும் கீழோர் எனின் மாக்கள் கோபித்துக் கொள்ளும்! மனிதரில் பதர் எனலாம்; பதரும்கூட வருத்தப்படும்! ஆம்; பதரும் வருந்தும் பாதகச் செயலன்றோ இது!

அன்புள்ள,

மு. க.

29-07-1990

1658. சமூகநீதி - புதிய சரித்திரத் தொடக்கம்!

உடன்பிறப்பே,

வி.பி. சிங் ஆட்சி கவிழுமா? என்ற தலைப்பில் கொட்டை எழுத்துச் செய்திகளை அதிக ஆவலுடனும் எதிர்பார்ப்புடனும் பக்கத்துக்குப் பக்கம் வெளியிட்டுப் பிற்படுத்தப்பட்ட மக்களின் குரல்களாக ஒலிக்கின்ற ஏடுகள்கூட ஒருபுறம் எரிச்சலைக் கக்கிக் கொண்டிருந்தாலும் - இழந்த வாய்ப்பைப் பெற வேண்டுமென்பதற்காக இந்திரா காங்கிரஸ் போன்ற கட்சிகளும் அவற்றிற்கு லாலி பாடும் கட்சிகளும்; வி.பி. சிங் ஆட்சி கலைக்கப்பட்டு மறு தேர்தலை மத்தியிலும் மாநிலத்திலும் நடத்த வேண்டுமென்று ஓயாது ஓலமிட்டுக் கொண்டிருந்தாலும் - காட்டுக் கூச்சலுக்கிடையே கம்பீரமாக நடந்து செல்லும் சிங்கத்தைப் போல் இந்தியப் பிரதமர் வி.பி. சிங் அவர்கள்; இவர்களின் அவலப் புலம்பலைப் பற்றி அக்கறை கொள்ளாமல் - தேசிய முன்னணியின் சார்பில் அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை வரிசைப்படுத்தி, வகைப்படுத்தி நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார் என்பதற்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு! இனிப்பான செய்தி! இந்திய நாடு முழுமையுமுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் நீண்ட நாளைய கோரிக்கைக்குக் கிடைத்துள்ள இமாலய வெற்றி!

இந்திரா காங்கிரசார் டெல்லிப் பேரரசை கட்டியாண்ட போது மாநில அரசின் சார்பாக எடுத்து வைத்த முறையீடுகள்; மூலையில் வீசி எறியப்பட்டன!

இன்ட்டர் ஸ்டேட் கவுன்சில் அமைத்திட (அதாவது மாநிலங்களுக்கிடையேயான குழு) அரசியல் சட்டத்தில் உள்ள பிரிவினைப் பயன்படுத்தி செயல்படுக எனக் குரல் கொடுத்த போதெல்லாம் மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு, காது கொடுத்துக் கேட்கவே விரும்பவில்லை! ஆனால் தேசிய முன்னணி அரசு - வி.பி. சிங் தலைமையில் இயங்கும் இந்த அரசு; அந்தக் குழுவினை

அமைத்து, விரைவில் அதன் முதல் கூட்டத்தையும் கூட்ட இருக்கிறது.

நமது மாநிலத்தின் அவசர அவசியத் தேவையான காவிரிப் பிரச்சினையில் மத்தியில் இருந்த காங்கிரஸ் அரசு; எத்தனை மெத்தனம் காட்டியது என்பதை நான் விளக்கத் தேவையில்லை! நாடறிந்த உண்மை! ஆனால் காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் மன்றத்தினை வலியுறுத்தி; சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினோம்! எத்தனையோ தீர்மானங்கள் கிடப்பிலே போடப்பட்டன! எனினும் நாம் அண்மையில் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் மத்திய அரசு செயல்பட்ட காரணத்தினால் காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு விட்டது! தேசிய முன்னணி அரசின் காலத்தில் தமிழகம் பெற்றுள்ள வாய்ப்பு இது!

இதோ; எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற்போல டெல்லிப் பாராளுமன்றத்திலே நமது பிரதமர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்; மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நடைமுறைக்கு வருமென்று!

அந்தப் பரிந்துரைகளை அமலுக்கு கொண்டு வந்து மத்திய அரசுப் பணிகளிலும் மாநில அரசில் உள்ளது போல பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு செய்ய வேண்டுமென நமது சட்டப் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுண்டு! அவற்றைக் காங்கிரஸ் மத்திய ஆட்சியினர் கண்டுகொள்ளவே இல்லை!

கழகம்; இங்கு ஆட்சி பொறுப்பை ஏற்று; காங்கிரஸ் அரசைப் பலமுறை வேண்டியும் வலியுறுத்தியும்கூட நடைபெறாத ஒன்று; இப்போது தேசிய முன்னணி அரசில் நடைமுறைக்கு வருகிறது!

எந்தப் பட்டியலின் அடிப்படையில் இடஒதுக்கீடு செய்வது? இப்படி ஒரு பிரச்சினை சமீபத்தில் டெல்லியில் எழுப்பப்பட்டது! இதுபோன்ற ஒரு காரணத்தால் மண்டல் கமிஷன் பரிந்துரை நடைமுறைக்கு வருவது தள்ளிப் போகுமோ என அஞ்சிய நமது தமிழக அரசு; மாநில அரசுகள் தயாரித்துள்ள பிற்படுத்தப்பட்டோர் பட்டியலின் அடிப்படையில் மண்டல் பரிந்துரைகளை நிறைவேற்றலாம் என்ற கருத்தினை நேரிலும், கடித வாயிலாகவும் மத்திய அரசுக்கும், மாண்புமிகு பிரதமருக்கும் தெரிவித்தது!

அந்தக் கருத்து பெரும்பகுதி ஏற்றுக் கொள்ளப்பட்டு,

மண்டல் குழு பரிந்துரைப்படியும், மாநில அரசுகள் தயாரித்துள்ள பட்டியல்களின்படியும் இரண்டிலும் பொதுவாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று வரையறை செய்யப்பட்டுள்ள அனைவருக்கும் (கல்வி, சமூக அடிப்படையில்) மத்திய அரசு, மற்றும் மத்திய அரசின் நிறுவனங்களில் 27 சதவிகித இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வருகிறது

எனப் பிரதமர் வி.பி. சிங் அறிவித்திருக்கிறார். இது ஒரு தொடக்கமே! முதல் கட்டமே! எனவும் தெரிவித்துள்ளார்!

தேசிய முன்னணி அரசு அமைவதற்கு முன்பு 12.5.89 அன்று சட்டப் பேரவையில் மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்த வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்திக் கழக அரசின் சார்பில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது!

ஆனால் அன்றிருந்த ராஜீவ் அரசு; அந்த தீர்மானத்தைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை! தீண்டினால் திருநீலகண்டம் என ஒதுங்கி ஓடி விட்டது!

இன்று நமது தேசிய முன்னணி அரசு, பிற்படுத்தப்பட்ட மக்களின் குரலுக்கு மதிப்பளித்து; இந்தியத் திருநாட்டில் சமூக நீதிக்கான புதிய சரித்திரத்தை எழுதத் தொடங்கி விட்டது!

அண்ணல் அம்பேத்கருக்கு - அவர் மறைந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு; பாரத ரத்னா பட்டம் வழங்கியுள்ள தேசிய முன்னணி அரசு; அவரது நூற்றாண்டு விழாவை சமூக நீதி ஆண்டாக ஆக்கி; இந்தச் சமூக நீதிக்குக் கால்கோள் விழா நடத்தியுள்ளது!

இந்தியாவின் தென்கோடி முனையில் நீதிக்கட்சி காலத்தில் வித்தூன்றப்பெற்று; தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய தலைவர்களால் அரண் அமைக்கப் பெற்று பாதுகாக்கப்பட்டு; திராவிட இயக்க ஆட்சியில் கிளைகள், விழுதுகள் என ஏராளமாக அமைந்து தழைத்து நிற்கும் இந்த சமூக நீதித் தரு; இன்று - இங்கு மட்டுமின்றி இந்தியத் தரணி முழுதும் சந்தனத் தென்றலை வாரி வழங்கத் தொடங்கி விட்டது!

உடன்பிறப்பே; இந்த மகிழ்ச்சியை விழா எடுத்துக் கொண்டாடுக!

துண்டு அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டாடுக!
தோரணங் கட்டிக் கொண்டாடுக! சுவர் ஒட்டிகள்
அச்சடித்துக் கொண்டாடுக!
வி.வி. சிங் வாழ்க என ஒலித்துக் கொண்டாடுக!

திராவிட இயக்கத்தின் வெற்றி இதுவென திண்தோள் பூரித்திடக் கொண்டாடுக!

அன்புள்ள,

மு. க.

09-08-1990

1659. முதல் அழைப்பு விடுக்கிறேன்!

உடன்பிறப்பே,

இந்த ஆண்டு இந்திய நாட்டின் ஆப்ரகாம் லிங்கனாக விளங்கி; தாழ்த்தப்பட்ட மக்களின் தலைநிமிரப் போராடிய அண்ணல் அம்பேத்கரின் நூற்றாண்டு விழா!

கிளம்பிற்றுக்காண் தமிழச் சிங்கக் கூட்டம் எனக் கிளர்ந்தெழுந்து சிலிர்த்து நின்று புரட்சி எனும் சொல்லுக்கு உண்மைப் பொருளாகத் திகழ்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் நூற்றாண்டு விழாவும் இதே ஆண்டில்தான்!

அரசு மட்டுமல்ல விழாக்கள் எடுப்பது; அனைத்து அமைப்புகளுமே எடுக்கின்றன எழுச்சி மிகு விழா! உணர்ச்சி மிகு விழா!

இதோ நமது கழகமும் தமிழகத் தலைநகரில் அவர்களின் புகழ்போற்றி மட்டுமல்ல; அவர்களின் கருத்துக்களுக்குச் செயலாக்கம் தந்திட பெரு விழா எடுக்கிறது!

செப்டம்பர் 15, செப்டம்பர் 16 இரு நாட்களிலும் சென்னையில் வழக்கம்போல் முப்பெரும் விழா! பெரியார் பிறந்த நாள் - அண்ணா பிறந்த நாள் - கழகம் பிறந்த நாள்; இந்த முப்பெரும் விழா ஒரு விழாவாகவும், அண்ணல் அம்பேத்கர் விழா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விழா, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைப் பெட்டகமாகக் கிடைத்துள்ள மண்டல் கமிஷன் வெற்றி விழா, அந்த உரிமைக்காகத் தென்னகத்தில் முதன் முதலில் கொடி உயர்த்திய திராவிட இயக்கத்தின் வேராகக் கிளம்பிய நீதிக்கட்சியின் வைரவிழா, என ஐம்பெரும் விழா நிகழ்ச்சிக்குத் தலைமைக் கழகம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. சென்னை மாவட்டக் கழகம் முன்னின்று பணிகளைத் தொடங்கியுள்ளது!

பெரியாரின் கொள்கைகளை, அண்ணாவின் வழியில் எடுத்துரைக்கவும்; வாய்ப்பு கிடைத்திடின் அவற்றினைச் சட்ட

வடிவம் தந்து உலவிட வைக்கவும் அரசியல் இயக்கமாகவும் தி.மு.கழகம் நடை போடுகிறது!

அரசியல் இயக்கமாகவும் என்று நான் கோடிட்டுக் காட்டுவதற்குக் காரணமே; கழகம் அடிப்படையில் ஒரு சமுதாயப் பேரியக்கம் என்ற உண்மை நிலையை என்றைக்கும் மறந்ததில்லை என்பதற்காகத்தான்!

அந்த உண்மையை உணர்ந்துள்ளதால்தான் ஆதிக்கபுரியினர், ஆத்திரமதியினர், வஞ்ச நெஞ்சத்தினர், வயிற்றெரிச்சல் வாழ்வினர் - நம்மை வெறுக்கின்றனர்! ஏடுகளில் வறுக்கின்றனர்! ஏதேதோ பொய்களைப் பேசித் திரிகின்றனர்! ஏசிக் குமுறுகின்றனர்!

சிங்கத்தை நரி அடிக்கும் திறமில்லையென்றாலும்

பொங்குற்றே சிங்கம் வீழ்ந்ததென்றால்

நரிமனம் பூரிக்காதா?

எனப் பாவேந்தர் உருக்கமுடன் பாடியது போல இந்தக் கழகம்; தானே தேயாதா? மாயாதா? ஓயாதா? என ஓலமிடும் ஒதியமிலார் உள்ளத்தினர் உள்ளனர் என்பதை நீயும் அறிவாய்! நானும் அறிவேன்!

* சென்னை ராஜ்யத்துக்கு தமிழ்நாடு என்று பெயர்! ஆம்; இயற்பெயர் இனிய பெயர்!
* சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும்!
* இருமொழித் திட்டமே தமிழகத்தில்!

அதாவது தமிழும் ஆங்கிலமும்!

இந்திக்குப் பள்ளிகளில் இடமில்லை!

இவை, நமது அண்ணன் முதலமைச்சராக இருந்து அறிவித்த அமுதச் செய்திகள்!

அவர் வழி தொடர்ந்து கழக ஆட்சியில் அன்றும் சரி; இன்றும் சரி - எத்தனை எத்தனை ஒளி மிகு திட்டங்கள்! சட்டங்கள்!

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு 1929-ல் பெரியார் நடத்திய சுயமரியாதை மாநாட்டு தீர்மானம் பெண்களுக்கும் ஆண்களைப் போல சொத்தில் சம உரிமை!

அந்தத் தீர்மானம் இப்போது தி.மு.க. ஆட்சியில்தானே சட்டமாக உருவெடுத்துள்ளது!

இட ஒதுக்கீட்டில் இந்திய நாட்டில் தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கிய இடம் உபயோகப்படுத்தப்படவில்லை; தமிழகத்தைப் போல மத்திய அரசிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு தேவை என 1973-ல் அலகாபாத்தில் நடைபெற்ற மாநாட்டில் எடுத்துரைத்தேன்! ஆம்; அய்யாவும் அண்ணாவும் என் நெஞ்சில் பதிய வைத்த உரிமை முழக்கம் அது!

1978-ல் மண்டல் கமிஷன் அமைக்கப்பட்டது! அதன் பரிந்துரைகள் 1980-ல் தரப்பட்டும்; மத்தியிலிருந்த காங்கிரஸ் ஆட்சியில் அந்த அறிக்கை கிடப்பில் போடப்பட்டது.

1989-ல் நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு மத்திய அரசை வலியுறுத்தி, சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினோம்! ஆனால் டெல்லியில் இருந்த ராஜீவ் அரசு அந்தத் தீர்மானத்தைக் குப்பைக் கூடையில் வீசியது!

நாமும் பங்கேற்றுள்ள தேசிய முன்னணி அமைந்தது! தேசிய முன்னணி அரசும் மலர்ந்தது!

இதோ; முகில் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதி போல் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நடைமுறைக்கு வருமென இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் அறிவித்துள்ளார்!

இதை எதிர்த்து இந்திய மண்ணில் சில பகுதிகளில் சலசலப்பு! வன்முறை வெறியாட்டங்கள்! ஆதிக்கம் புரிந்தோர்; தமது காலம் அஸ்தமித்ததே என அலறுகின்றனர்! ஆகா! ஊகு!! எனக் குதிக்கின்றனர்!

புரட்சிகரமான சிந்தனைகளுக்கும், செயல்களுக்கும், சட்டங்களுக்கும், திட்டங்களுக்கும் - துணை நிற்பது மட்டுமல்ல; அவற்றை இயற்றி நடைமுறைப்படுத்தவுமான இடத்தில் அமர்ந்திடவும் வாய்ப்பு பெற்றுள்ள இந்தக் கழகத்தைத் தகர்த்திடக் கடப்பாறைகளாய், மண்வெட்டிகளாய் செயல்பட முனைந்துள்ளவர்களின் சூதும் சூழ்ச்சியும் நொறுங்கிட நமது கையிருப்பைக் காட்ட எழுந்திட வேண்டாமோ?

அதற்குத்தான் நமது நெஞ்சுக்கு நீதியும், தோளுக்கு வாளுமாக-

பெரியார்
அண்ணா
அம்பேத்கர்
பாவேந்தர்
நீதிக்கட்சி
தி.மு.கழகம்
மண்டல் கமிஷன்
எனும் திருப்பெயர்களை ஏந்தி நிற்கிறோம்!

இன உணர்வுக்கு, சுயமரியாதைக்கு, மொழிப்பற்றுக்கு, உரிமைகளை நிலை நாட்டுவதற்கு, நாட்டின் ஒற்றுமைக்கு - என்றென்றும் நம் இதயத்தில் சிம்மாசனம் போட்டு வீற்றிருக்க வேண்டிய பெயர்கள் இவைகள்!

உடன்பிறப்பே; இந்திய நிலப்படத்தை உற்றுப் பார்! வடபகுதி; தேரின் அலங்காரத் திருவுருவமாகத் தெரியும்! தென்பகுதிதான் தேர்த் தட்டாக விளங்கும்! தேர்த்தட்டு இல்லையேல்; தேரின் மேல் பகுதி நிலைக்காது! நிற்காது!

தேரின் அடித்தளமாம் தென்னகம்; அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக் கோட்டம்!

இந்த உண்மையை உலகுக்கு உணர்த்திடத்தான் செப்டம்பர் 15, செப்டம்பர் 16 சனி ஞாயிறு; சென்னையில் ஐம்பெரும் விழா!

முதல் அழைப்பு இது! தொடர்ந்து எழுதுவேன்; உனக்குக் கடிதங்கள்! நீயும் குடும்பத்தினரும் ஏனைய உடன்பிறப்புகளும் சென்னைப் பயணத்திற்குத் தொடங்கிடுக ஏற்பாடுகள்!

அன்புள்ள,

மு. க.

04-09-1990

1660. அழைக்கிறேன்; அழைக்கிறேன் உன்னை!

உடன்பிறப்பே,

நான் சென்னையில் இருக்கும்போது சனி அல்லது ஞாயிறுக்கிழமையானாலும், அல்லது எந்த விடுமுறை நாளானாலும் காலையில் அரசின் தலைமைச் செயலகத்திற்கும் மாலையில் அண்ணா அறிவாலயத்தில் கழக அலுவலகத்திற்கும் செல்லத் தவறுவதில்லை என்பதை அறிவாய்! அதனால் நீயும் வருவாய்! ஆங்காங்குள்ள கழகச் செய்திகளைத் தருவாய்!

இப்போது நாலைந்து நாட்களாக உன்னைப் போன்ற உடன்பிறப்புகளின் கூட்டம், அண்ணா அறிவாலயத்தில் நிரம்பி வழிகிறது! பல்வேறு மாவட்டங்களில் இருந்து என் அன்பு உடன்பிறப்புகள் வரிசை வரிசையாக வருகின்றனர். மாலைகள், கைத்தறி ஆடைகளை மலை போல் குவிக்கின்றனர்! என்னைச் சூழ நின்று புகைப்படம் எடுத்துக் கொள்கின்றனர்! புன்னகை மின்னலிடும் முகத்தினராய் பாசமொழி பகருகின்றனர்!

1989 சட்டமன்றத் தேர்தலில் கழகம், மிகப் பெரும் வெற்றி பெற்ற போது அறிவாலயத்தில் நமது உடன்பிறப்புகள் குதூகலம் பெருக்கெடுத்திடக் குழுமியது போலவே இப்போதும் குழுமிடுகின்றனர். ஏன் என்று உனக்குத் தெரியாதா என்ன?

மாநிலம் முழுவதும் நடைபெற்ற கூட்டுறவுத் தேர்தல் - அதில் மகத்தான வெற்றியினை நமது உடன்பிறப்புகள் எல்லா அமைப்புகளிலும் பெற்றுள்ளனர்.

கூட்டுறவுத் தேர்தல்! ஆமாம்; கூட்டுறவுத் தேர்தல் - பல பேருக்குக் கூட்டுறவுத் தேர்தல் என்பதே மறந்து போய்விட்டது! நமது கழக அரசு, மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகுதான்

கூட்டுறவுத் தேர்தலை நடத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு; கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள், இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

கழகத்தினர், மிகப்பெரும்பாலான இடங்களில் மாபெரும் வெற்றியினை ஈட்டியுள்ளனர். இன்னும் அடுத்தகட்ட பொறுப்புகளுக்கான தேர்தல்கள் நடக்க இருக்கின்றன! அந்தப் பொறுப்புகளுக்கு வரவேண்டியோர் யார் என்பதை ஆங்காங்குள்ள கழக அமைப்புகள் கலந்து பேசி ஒற்றுமையாக முடிவுகளை எடுக்க வேண்டும். முடிவெடுக்க இயலாவிடில் மாவட்ட கழக அளவில் விவாதித்து அந்த அமைப்பின் முடிவுக்குக் கட்டுப்பட வேண்டும். அப்போதும் ஓரிரு இடங்களில் பிரச்சினை தீராவிடில், தலைமைக் கழகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து ஒருமித்த நல்ல முடிவுக்கு வழிகாணல் வேண்டும்!

எந்த நிலையிலும் கசப்பு, காழ்ப்பு, எள்முனையளவும் எந்த இடத்திலும் இருந்திடலாகாது!

எல்லாப் பகுதிகளிலுமாக ஏறத்தாழ எண்பது சதவிகிதத்திற்கு மேலாகக் கழகத்தினர் வென்றுள்ளனர் என்பது இனிப்பான செய்தி! இதைவிட இனிப்பான செய்தியை அடுத்த கட்டத் தேர்தல்களில் எனது உடன்பிறப்புகள் தந்தாக வேண்டும்! எல்லாவற்றையும்விட எனக்கு இனிப்பு தரும் செய்தி; தேர்ந்தெடுக்கப்பட்டோர் கூட்டுறவுத் துறையின் குறிக்கோள் உணர்ந்து பணியாற்றுகின்றனர் என்பதும், நேர்மையும் நாணயமும் அணுவளவும் தவறாது தொண்டு புரிகின்றனர் என்பதும்தான்!

எந்தப் பொறுப்பில் இருப்பினும் - அவர்கள் எவராயிருப்பினும் - அத்தகையோர்தான் எனது அன்புக்குரிய உடன்பிறப்புகளாக என் நெஞ்சில் நீங்காத இடம் பெறுவர்! மக்கள் மன்றத்திலும் மதிப்பும் மரியாதையும் பெறுவர்!

கூட்டுறவுத் துறை என்பது மேகங்கள் கூடி மழை பொழிவது போல் இருக்க வேண்டுமேயல்லாமல் காகங்கள் கூடி பங்கு போட்டுக் கொள்ளும் துறையாக இருக்கக்கூடாது என்று நான் பலமுறை கூறியிருக்கிறேன்; மறந்திருக்க மாட்டாய்!

மீண்டும் கழகம், ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும், 106 கோடி ரூபாய் விவசாயிகளின் கூட்டுறவுக் கடனை பொறுப்பேற்றுத் தீர்த்தது மட்டுமல்ல; தேசிய முன்னணி அரசின் உறுதிமொழிக்கேற்ப விவசாயிகளின் பத்தாயிர ரூபாய் வரையிலான கூட்டுறவுக் கடனை ரத்து செய்ய மட்டும் சுமார் 300 கோடி ரூபாய் ஆகிறது! அந்தப் பணி மிக வேகமாகத் தமிழகத்தில் நடைபெறுகிறது! வணிக வங்கிகளின் கடன் சுமார் 200 கோடி ரூபாய் விவசாயிகளின் பத்தாயிர ரூபாய் வரையிலான கடன் திட்டத்தில் மத்திய அரசு விரைவில் ரத்து செய்ய இருக்கிறது. இந்தச் சூழலில் விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களை மட்டுமல்ல; ஏனைய கூட்டுறவு அமைப்புகளையும் செம்மையாகக் கட்டிக் காத்து நேர்மையுடன் செயல்பட வைத்திட, நமது உடன்பிறப்புகள் சேவை செய்வர் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு! அந்த நம்பிக்கையுடன்தான் என்னை வந்து சந்திக்கும் அந்த வெற்றி வீரர்களை வாழ்த்துகிறேன்!

இந்த மகிழ்ச்சியான நேரத்தில் ஒரு யோசனை!

செப்டம்பர் 15 சனியன்றும் 16 ஞாயிறன்றும் சென்னையில் ஐம்பெரும் விழா நடைபெறுகிறது. முதல் நாள் கலையரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம், கவியரங்கம்!

அதுமட்டுமல்ல; அன்று காலை 9 மணிக்கு அண்ணா சதுக்கத்தில் அண்ணா அருங்காட்சியகம் திறப்பு விழா அரசின் சார்பாக நடைபெற இருக்கிறது! அண்ணன் துயிலுமிடத்திற்கு அருகே கடற்கரையை ஒட்டினாற்போல் அமைகிறது அருங்காட்சியகம்!

அண்ணாவின் வாழ்க்கை வரலாறு, அவர் ஈடுபட்ட அறப்போர்கள், அவர் அடைப்பட்டிருந்த சிறைச்சாலைகள், அவரது வாழ்வின் அரிய நிகழ்ச்சிகள்; ஒளியுமிழ் படங்களாக! ஒலி முழக்கத்துடன்; நிலையாக விளங்கும் வண்ணம் அந்த அருங்காட்சியகம் திகழ இருக்கிறது!

மறுநாள் மாபெரும் பேரணி - கடற்கரையில் பொதுக்கூட்டம் - பெரியார், அண்ணா, அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் எடுத்துரைத்த கருத்துக்களைப் படைக்கலன்களாக ஏந்தி, நீதிக்கட்சியின் நெடிய

பயணச் சிறப்பு போற்றி, கழகத்தின் வலிவையும் பொலிவையும் உலகுக்கு உணர்த்தி, மண்டல் கமிஷன் வெற்றிக்கு ஆனந்தப் பள்ளுப் பாடும் நாள்!

அந்த இரு நாட்களுக்கும் உன் போன்ற உடன்பிறப்புகள் - தவறாமல் வரவேண்டியிருக்கும்போது, இடையிலே கூட்டுறவு சங்க வெற்றிக்காக ஒரு பயணம் சென்னைக்கு வரவேண்டுமா?

எல்லோருமே செப்டம்பர் 15, 16 நாட்களில் சென்னைக்கு வந்தால் ஒரே செலவாகப் போய் விடுமல்லவா?

எனவே, இந்த என் யோசனையையும் சிந்தித்துப் பார்த்திடுக!

கூட்டுறவுச் சங்க வெற்றி; பதவி வாய்ப்புகளை வழங்கிடும் வெற்றி!

ஐம்பெரும் விழாப் பேரணியின் வெற்றி; அய்யா அண்ணா இருவரின் பகுத்தறிவுக் கருத்துக்களுக்கான வெற்றி! இனமான உணர்வின் வெற்றி! இந்த இயக்கத்தின் எதிர்கால வெற்றிகளுக்கான அடையாள வெற்றி!

அன்புள்ள,

மு. க.

05-09-1990

1661. காத்திருக்கிறேன்; கழகத்தின் உயிரே!

உடன்பிறப்பே,

நீராடும் கடலையே ஆடையாக உடுத்திக் கொண்டுள்ள நிலப்பெண்ணின் எழில் ததும்பும் முகமாகப் பரத கண்டமும் - அந்த முகத்தில் அழகிய பிறை நெற்றியாகத் தெக்கணமும் - அதில் திகழும் வண்ணத் திலகமாகத் திராவிடத் திருநாடும் - வண்ணத் திலகத்தின் வாசனையைப் போல் எத்திசையும் புகழ் மணக்கும் இன்பத் தமிழும் - எனக்கூறித் தமிழ்த்தாய் வாழ்த்து பாடி மனோன்மணீயம் நாடகக் காப்பியம் வழங்கியவர் சுந்தரனார்! இந்திய நாட்டு வரலாறு தெற்கே காவிரிக் கரையோரத்திலிருந்துதான் தொடங்கப்பட வேண்டும்; கங்கைக்கரை ஓரத்திலிருந்து தொடங்கி எழுதப்பட்டுள்ளது தவறு என வாதிட்டவர். வள்ளுவர் செய்திருக்குறளை வழுவற உணர்ந்தோர்; உள்ளுவரோ மனுவாதி குலத்துக்கொரு நீதி! எனக்குமுறும் எரிமலையாய்க் கொதித்தெழுந்தவர். அவரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை அரசு விழாக்களில் தொடக்கப் பாடலாகப் பாட வேண்டுமென ஆணை பிறப்பித்தது 1976க்கு முன்பு கழக ஆட்சியில்! இப்போது மீண்டும் கழக ஆட்சியில் அந்தத் தமிழ்ப் பெருமகனின் பெயரால் அவர் உலவிய நெல்லைச் சீமையில் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம்!

அதேபோல் வான்புகழ் கொண்ட வள்ளுவருக்கு ஆசிய கண்டத்திலேயே இல்லாத அளவுக்கு அத்துணை அரியதும் பெரியதுமான கோட்டம் கட்டியதும் நமது கழக ஆட்சியிலேதான்! வள்ளுவரின் திருவுருவை வரைந்த வேணுகோபால் சர்மாவைச் சிறப்பித்ததும் கழக ஆட்சியிலேதான்! வள்ளுவர் சிலை மிகப் பெரிய அளவில் குமரி முனையில் வைக்கப்படுமென அறிவித்ததும் கழக ஆட்சியிலேதான் - இன்று குமரிமுனையில் அந்தச் சிலையை 133 அடி உயரத்தில் நிறுத்திடுவதற்கான கால்கோள் விழா!

தமிழுக்கு, தமிழ்ப் பெரியோர்க்கு சிறப்பு செய்திடல் மட்டுமல்ல; தமிழ் மக்களுக்கு நாளும் நல்ல தொண்டு செய்திடப் பொறுப்பேற்றுள்ள கழக ஆட்சியின் சார்பில் நெல்லை, குமரி மாவட்டங்களில் அணைக்கட்டு திட்டங்கள், கூட்டுக் குடிநீர் திட்டங்கள், சாலைகள், பாலங்களுக்கான திட்டங்கள், நலிந்த பிரிவினருக்கு நல்வாழ்வுத் திட்டங்கள் எனப் பல கோடி ரூபாய்க்கு வளர்ச்சித் திட்டங்கள் பெருகிடும் வகையில் விழாக்கள் பலவும் எடுக்கப்பட்டன!

தூத்துக்குடியில் மட்டும் ஏற்கெனவே கழக ஆட்சியில் கூட்டுத் துறையில் எண்ணூறு கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாகி வளர்ந்து வரும் ஸ்பிக் உரத் தொழிற்சாலையின் நவீன மேம்பாட்டுக்காக 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழில் திட்டத் தொடக்க விழா!

நமது கழகத்தின் சமுதாயக் கொள்கைகளை விளக்கும் பாசறைகளாக அமைந்திடும் மணவிழாக்கள் தூத்துக்குடியிலும், நாகர்கோயிலிலும்!

இத்தனைக்கும் கிரீடம் வைத்தாற்போல் நெல்லை நகர்ப் பொதுக்கூட்டம்! இல்லை, இல்லை- மாநாடு! ஆமாம்; மாநாடாகவே இருந்தது! அந்த மாவட்டத்தில் அண்மையில் விபத்தொன்றில் உயிர் துறந்த இளைஞர் அணிக் கண்மணிகள், மற்றும் கழகச் செயல் மறவர்களின் குடும்பநிதி வழங்கிடத் தம்பி கோபால்சாமி, மாவட்டம் முழுவதும் பல ஊர்களில் கொடியேற்றிப் பேசி திரட்டிய நிதி- தொண்டர்கள் வழங்கிய நிதி - ஒரு லட்ச ரூபாய் அளவிலானதை அளித்திடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி!

ஏ, அப்பா! எங்கிருந்து பெற்றனரோ இந்தக் கலையுணர்வை? எங்கிருந்து கிடைத்ததோ இந்த ஆற்றல்? எப்படித்தான் பெருகியதோ இவ்வளவு ஆர்வம்? எத்தனை நாள் உழைப்போ ஊண் உறக்கமின்றி!

செப்டம்பர் 6-7-8 மூன்று நாள் நிகழ்ச்சிக்கென கோயில்பட்டி வரை முத்து நகர் விரைவுப் புகை வண்டியில் சென்று அங்கிருந்து நெல்லை நகருக்குச் செல்ல 35 கல் தொலைவு கடக்க வேண்டுமெனினும், கழகப் பதாகைகளும், கொடிகளும், தோரணங்களும், வரவேற்பு வளைவுகளும் - நெல்லை நகரையே

கோயில்பட்டி வரையில் நகர்த்திக் கொண்டு வந்து விட்டது போல் ஒரு தோற்றம்!

எழில்! எழுச்சி! எங்கணும்; எங்கணும்; அங்கிங்கெனாதபடி! கொள்கை முழக்கம் தாங்கி நிற்கும் வண்ணச் சுவரொட்டிகள்; வானத்தில் விண் மீன்களைப் போல எனக் கூறலாம்! ஆனால் அது எண்ணிக்கையை மட்டுமே குறிக்கும்! நான் நெல்லையில் கண்ட கழகக் குரல் ஒலிக்கும் சுவரொட்டிகளை; தடாகத்தில் நெருக்கமாகப் பரவியிருக்கும் தாமரை இலைகளுடன் ஒப்பிடலாம்! அதனுள் இருந்த வாசகங்களோ; தாமரை மலர்கள்! ரோஜா மலர்கள்! மல்லிகை முல்லை மணக்கும் நந்தவனம்தான்!

தமிழகத்தில் பல மாவட்டத் தலை நகரங்கள் - அண்மையில் புதுவை நகரம் - அங்கெல்லாம் விழாக்களில் கலந்து கொண்டிருக்கிறேன்! உன் போன்ற உடன்பிறப்புகளின் உழைப்பின் பெருமையைக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன்! கொடிக் காடுகளுக்குள் - மக்கள் கடலுக்குள் - எல்லா இடங்களிலும், நகரங்களிலும் நமது கழகத்தின் தானைத் தளகர்த்தர்கள் என்னை அழைத்துச் சென்று ஊக்கமும் உற்சாகமும் தந்து இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்? என என்னைப் பார்த்து விழியால் கேட்டு - என் புன்னகையைப் பதிலாகப் பெற்றிருக்கிறார்கள்!

அவர்கள் எல்லாம் கோபித்துக் கொள்ளக்கூடாது; அவர்களும் என் இனிய உடன்பிறப்புகள்தான் - அதனால் எனக்கு ஒரு ஆதங்கம்; அடடா; அவர்கள் எல்லாம் என்னுடன் வந்து நெல்லையைக் காணவில்லையே என்று! வந்திருந்தால், பாராட்டுவதில் கஞ்சத்தனம் காட்டாமல் என்னைப் போல நெல்லை சீமையின் கழகச் செயல்வீரர்களைப் போற்றிப் புகழ்ந்திருப்பர்!

இளைஞர் அணியினர் தேனீக்களெனப் பணிபுரிந்தனர் என்றும் அவர்களைத் தட்டிக் கொடுத்து வாழ்த்தியதோடு நிற்காமல்; தாங்களும் தங்களை உழைப்புக் களத்தில் ஓய்வின்றி ஈடுபடுத்திக் கொண்டதாகத் தம்பி கோபால்சாமி தன்னையும் தன்னையொத்த தளகர்த்தர்களையும் சுட்டிக் காட்டியபோது; தம்பி உடையான் படைக்கஞ்சான் என நமது அருமை அண்ணா அடிக்கடி கூறுவாரே; அந்த மந்திரச் சொல்தான் என் இதயத்தில் மணியோசையாக இசைத்தது!

நெல்லையில் மட்டுமா? எல்லையில்லாச் சோதனைகள், வேதனைகள், நெருப்பு நதியாகப் பெருகிப் பாய்ந்தபோது - அதில் எதிர்நீச்சல் போட்ட காரணத்தால் ஈட்டிகளாக, வாள்களாக, வேல்களாக மாறிய எஃகுத் துண்டங்களேதானே இந்த இயக்கத்தை வளர்த்துக் காத்திடும் இளமாமணிகள்! அவர்கள் எங்கணும் இருக்கின்றனர்! இதை எழுதும்பொழுது அவர்கள் எல்லாம் என் மனத்திரையில் எனக்குத் தரிசனம் தந்து கொண்டிருக்கிறார்கள்!

உடன்பிறப்பே! அவர்களையும் உன்னையும் பார்த்து ஒன்று கேட்கிறேன் - நெல்லையை, நெல்லையே வென்றது உண்மைதான்! குமரிக் கடலை வென்றிடும் கூட்டம் - தாமிரபரணி ஆறு சாலையின் இருபுறமும் வெள்ளத்தால் பெருகி வழிகிறதோ எனக் கருதத்தக்க மக்கள் அணிகள்; இடைவிடாது! எல்லாப் பகுதிகளிலும்! ஆனால்; மாநில அளவிலே நாம் நடத்திய தேசிய முன்னணித் தொடக்க விழா சென்னையில்! தி.மு.க. மாநில மாநாடு திருச்சியில்!

அவற்றுக்கு ஈடு இணையில்லை என்று மாற்றாரும் மனம் விட்டுப் புகழக் காரணம்; உன்னைப் போன்ற உடன்பிறப்புகளின் அயராப் பணி! துவளாத் தொண்டுதானே!

தேசிய முன்னணித் தொடக்க விழாவையும், திருச்சி மாநில மாநாட்டையும் ஒருசேரச் சென்னையில் செப்டம்பர் 16ஆம் நாள் கண்டிட விரும்புகிறேன்! என் ஆசை நிறைவேறுமா? என்பதுதான் அந்தக் கேள்வி!

உன்னை அழைப்பது வெறும் விழா நடத்த அல்ல!

பெரியார், அண்ணா, அம்பேத்கர், புரட்சிக் கவிஞர், தியாகராயர் இவர்கள் எல்லாம் உருவாக்கிய உணர்வுகளுக்கு ஒரு துளியளவு சேதாரமும் விளையாமல் பாதுகாத்திட, நமது கழகப் பட்டாளம் தயாராக இருக்கிறது என்பதை உலகுக்கு உணர்த்திட! இன்னும் உணர முடியாமல் தவிக்கிற தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிட!

மண்டல் கமிஷனுக்குப் பாராட்டு விழாவும் இந்த ஐம்பெரும் விழாவில் இணைத்திருக்கிறோம்; சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ள வேண்டுமெனப் பிரதமர் வி.பி. சிங் அவர்களைக் கழகச் சார்பில் அழைத்தேன்! மறுப்பின்றித் தயக்கமின்றி ஒத்துக் கொண்டார்!

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிற வி.பி. சிங் அவர்களை; அந்த மக்களின் பாதுகாப்பு அரணாக திகழும் தி.மு.கழகம், சிறப்பு விருந்தினராக அழைப்பது, பாராட்டுவது என்பது நமது கடமையாகும்!

அந்தக் கடமையைத் தமிழகத் தலைநகரில் செயல்படுத்திட, மாநில அளவில் நமது கழகம் நடத்திய தேசிய முன்னணித் தொடக்க விழாவாயினும்; திருச்சி மாநில மாநாடாயினும் - அவற்றை வென்று காட்ட நமது கழக உடன்பிறப்புகளால் மட்டுமே முடியும் என நம்பிக் கொண்டிருப்பவன் நான்!

செப்டம்பர் 16 ஐம்பெரும் விழா எனும் எழுச்சி நிறைந்த பெரும் காப்பியத்துக்கு - நெல்லையில் பாயிரம் எழுதப்பட்டுள்ளதாகவே நான் எண்ணுகிறேன்!

அந்த முன்னுரை கண்டு பூரித்துப் போயுள்ள என்னை நீ இன்பத் தேனாற்றில் மிதக்க விட வேண்டுமானால்; ஐம்பெரும் விழா காப்பியத்தின் ஒவ்வொரு எழுத்தாகவும் நீ இருக்க வேண்டும்!

செப்டம்பர் 15ஆம் நாளே உன்னை எதிர்பார்ப்பேன்! 16ஆம் நாள் உன் படை முகத்து நடை காண்பேன்! காத்திருக்கிறேன் கழகத்தின் உயிரே! உன்னைச் சென்னையில் பார்த்திட! களித்திட!

அன்புள்ள,

மு. க.

10-09-1990

1662. விரிவானம் பாராய் தம்பி!

உடன்பிறப்பே,

பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கோணாக் கடல்போல் மாப்பகை மேலிடு!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
கைக்குள திறமை காட்ட எழுந்திரு.

சிங்க இளைஞனே! சிறுத்தைப் புலியே! புரட்சிக் கவிஞர் உனக்கு விடுத்த அழைப்பு! உனக்கு இட்ட ஆணை! இந்த ஆணை கேட்டு இளைஞனாக உன்னைப்போல இருந்தபோது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய எழுச்சி வரிகளை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்;

இந்நாட்டான் இங்கு வாழ்ந்தான்
எந்நாட்டையும் புறங்காணும் புகழுடையான்
தமிழ்நாட்டான் - தலை குனிந்தான்
இதோ நிமிர்ந்தான்!
எழுச்சியுற்ற இளைஞன்தான்
ஏறுநடைச் சிங்கம்தான்!
கொழித்துவிட்ட உமிகள்தான்;
இனிக் குள்ளநரிக் கூட்டத்தார்!

அன்று நான் ஏட்டில் எழுதியதோடு மட்டுமல்ல; கவிஞரின் கட்டளைப்படியே பெரியாரின் மாணவனாய் - அண்ணாவின் தம்பியாய் - அந்த இளமைப் பருவந்தொட்டு இன்று

பேராசிரியர்க்குத் தோழனாய் முதுமைப் பருவம் வரையில் திராவிட இயக்கத்தை உயிராக, மூச்சாக, உதிர ஓட்டத்தின் சுழற்சியாக, இதயத்தின் துடிப்பாகக் கருதி உழைக்கிறேன்! உழைக்கிறேன்! உழைத்துக்கொண்டே இருக்கிறேன்!

என் இனிய இளைய தம்பியே! உங்களுக்கெல்லாம் அண்ணனாக, உங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவனாக; அல்ல! அல்ல! தலைமைத் தொண்டனாக பணியாற்றும் நான் எவ்வளவு பாக்கியம் செய்தவனாக இருக்க வேண்டும்! என்னையொத்த வயதினர் - எனக்கும் மூத்த வயதினர் - எனக்கும் உனக்கும் இடைப்பட்ட வயதினர் - உன் போன்ற இளங்காளையர் - எல்லோரும் இருக்கும் இந்த இயக்கம்; வயது தளர்ந்தோரிடம் அனுபவக் களஞ்சியத்தையும், நடுத்தர வயதினரிடம் ஆற்றல் கருவூலத்தையும், இளமையாளர்களிடம் அறிவார்ந்த ஆர்வப் பெட்டகத்தையும் பெற்று ஆயிரங் காலத்துப் பயிராகச் செழித்து நிற்கிறது!

இந்தப் பயிர் உயர, உயிரை உரமாக்கியோர் எத்தனை பேர்!

1916க்கு முன்பே திராவிடப் பேரியக்கத்தருவுக்கான வித்தூன்றப்பெற்று 75ஆம் ஆண்டு வைர விழா காணுகிற இந்நாள் வரையில் - இந்த இயக்கத்தின் மைய இழையாக இருந்து வருவது; ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற கொள்கை! சமூக நீதியை நிலை நாட்ட வேண்டுமென்ற குறிக்கோள்!

அந்த மைய இழையை அறுத்துவிட 1952-ல் உச்சநீதி மன்றம் வரையில் சென்று பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான உரிமைகளை வெட்டி வீழ்த்தினர்.

அய்யாவும் அண்ணாவும் ஆம் - திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் அன்றைக்குத் தமிழத்தில் புயலெனக் கிளம்பி; பூகம்பமென நாட்டைக் குலுக்கியிராவிட்டால் - அரசியல் சட்டத்தில் முதல் திருத்தமே வந்திருக்காது.

அது என்ன திருத்தம்? அதுதான் சமூக நீதியாகவும், கல்வி நீதியாகவும் பிற்படுத்தப்பட்டுள்ள மக்களுக்குக் கல்வி வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் திருத்தம்!

இன்று மாநில அலுவலகங்களில் அதிகாரிகளாக, அலுவலர்களாக, பொறியாளர்களாக, டாக்டர்களாக பிற்படுத்தப்

பட்டவர்கள் அமர்ந்திருக்கிறார்கள் என்றால் இதற்கு அன்று நடந்த கிளர்ச்சியே காரணம்!

சமூக அடிப்படையிலோ, கல்வி அடிப்படையிலோ இட ஒதுக்கீடு கூடாது - பொருளாதார அடிப்படையில்தான் இட ஒதுக்கீடு இருத்தல் வேண்டுமென - காங்கிரஸ் மகா சபையினர் அன்று கர்ச்சித்துப் பார்த்தனர்! ஆனால் இங்கே திராவிட இயக்கத்தின் எழுச்சியும் - அது நடத்திய கிளர்ச்சியும் - காங்கிரசிலேயிருந்த கோசல்ராம்கள், ஆர்.வி. சாமிநாதன்கள் போன்ற பிற்படுத்தப்பட்ட சமுதாயத் தலைவர்களையெல்லாம்கூட, இட ஒதுக்கீட்டில் பொருளாதார அடிப்படைக்கு எதிராகப் பேச வைத்தன! நமக்கு ஆதரவாக முழங்கிட வைத்தன!

அன்று இறுதியாக வென்றது திராவிட இயக்கம்! ஆம்; பெரியார் ஒரு முனையிலும், அண்ணா மற்றோர் முனையிலும் தலைமை வகித்து நடத்திய தாக்குதல் - இரட்டை குழல் துப்பாக்கியின் தாக்குதலாக அமைந்து; பொருளாதாரம் மட்டுமே என்று போலித்திரைபோட்டு - பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பொசுக்கிட நினைத்தோர் ஓடி ஒளிந்தனர்!

அடுத்த கட்டமாக அ.தி.மு.க. ஆட்சியில் மீண்டும் அந்தப் பொருளாதாரம் மட்டுமே என்ற போலித்தனம், புலிவேஷம் போட்டுக் கொண்டு வந்து; ஒன்பதாயிரம் ரூபாய் ஆண்டு வருமானம் உள்ளவர்கள் மட்டுமே பிற்படுத்தப்பட்டோர் என்ற உச்சவரம்பு ஆணையைப் பிறப்பித்தபோது - திராவிட இயக்கம் சிலிர்த்துக்கொண்டு கிளம்பியது!

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் அமைப்பு ரீதியாக அந்த ஆணையை எதிர்த்துப் போர் முரசு கொட்டியது மறைக்க முடியாத வரலாறு!

காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் மணிவர்மா, திண்டிவனம் இராமமூர்த்தி, திருமதி. ரமணிபாய் இவர்கள் எல்லாம் நம்முடன் சேர்ந்து நமது மேடைகளில் முழங்கினர்! எதற்காக? அ.தி.மு.க. ஆட்சி இட ஒதுக்கீட்டில் பொருளாதார அடிப்படையைப் புகுத்துவது ஆபத்து என்பதை விளக்குவதற்காக! காரணம்; அவர்கள் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த

தலைவர்கள்! காங்கிரசிலிருந்த எல்லா தலைவர்களுக்கும் அந்த உணர்வு வரவில்லை - இவர்கள் மட்டும் துணிவுடன் கிளர்ந்தெழுந்தனர்!

அந்தப் போராட்டத்திலும் திராவிட இயக்கமே இறுதியில் வென்றது!

சோஷியலி அன்ட் எஜுகேஷனலி அதாவது சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு என்ற திராவிட இயக்கத்தின் கொள்கை வென்றது!

இதனால் நாம்; பொருளாதாரத்தில் நலிவுற்றிருப்போரைக் கைதூக்கி விடவேண்டும் என்ற கருத்தை மறுப்போரல்ல! அதைக்காட்டி, சமூகம் மற்றும் கல்வி அடிப்படையில் பிற்படுத்தப்பட்டிருப்போரைப் புறக்கணித்துவிடக்கூடாது என்பதே நமது அழுத்தமான கருத்து!

பொருளாதாரத்தில் பின்தங்கியிருப்போருக்கென எத்தனையோ திட்டங்கள்! எத்தனையோ உதவிகள், சலுகைகள்!

ஆனால் ஒரு கால கட்டம் வரையில் குறிப்பிட்ட உயர்சமூகத்தினரே கல்வித் துறைக்கும், வேலை வாய்ப்புத் துறைக்கும் மொத்தக் குத்தகை எடுத்துக்கொண்டிருந்த கொடிய நிலையை அடியோடு மாற்றிடத்தான் திராவிட இயக்கம் தோன்றியது! அதன் தோற்றத்தின் விளைவே, இன்று தமிழகம் மட்டுமன்றி - இந்தியா முழுமையும் சமூக நீதிக்கான விடியல் என்பேன் உறுதியாக! உண்மையும் அதுதானே!

அந்த விடியலை வரவேற்கும் சேவலாக நமது இயக்கமும் - விடிகிறதோ என அதிர்ச்சியுறும் கூகையாகக் காங்கிரஸ் இயக்கமும் இருப்பதை நாடு காண்கிறது!

ஆம்; ராஜீவ் காந்தியும் காங்கிரஸ் தலைவர்களும் மண்டல் கமிஷன் பரிந்துரை நிறைவேற்றத்தைக் கடுமையாக எதிர்க்கிறார்கள்!

உடன் பிறப்பே; தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ்காரர்கள் என்ன சொல்கிறார்கள்? அல்லது என்ன செய்யப்போகிறார்கள்?

காங்கிரசில் இட ஒதுக்கீடு உரிமைக்கு ஆதரவு இல்லை என்பதால்தான் தென்னகத்தின் தீவிரக் காங்கிரஸ் தலைவராக

இருந்த தந்தை பெரியார் - 1925ஆம் ஆண்டு காங்கிரசிலிருந்து காஞ்சிபுரம் மாநாட்டில் வெளியேறினார்! அதுவும் அவரது உற்ற நண்பர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் இருந்து!

இந்த சரித்திரம் இங்குள்ள காங்கிரஸ் நண்பர்களுக்குத் தெரியாதா என்ன? தங்களுக்குப் பதவி கிடைத்தால் போதும்; தங்களைப் போன்ற பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு இந்திய அளவில் மண்டல் கமிஷனின் பலன் கிடைத்தால் என்ன; கிடைக்காவிட்டால் என்ன? என்று வாய் மூடி மௌனிகளாக தமிழகத்துக் காங்கிரஸ் கட்சியின் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத் தலைவர்கள் இருந்துவிட முடிவு செய்து விட்டார்களா? இதைவிட இவர்களால் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வேறு ஒரு துரோகம் செய்துவிட முடியுமா?

உடன்பிறப்பே! உழைக்கும் வர்க்கமே! மாணவச் செல்வங்காள்! இளைஞர் கூட்டமே! மகளிர் ஆடவர் என்ற வேறுபாடில்லாது - வராத மாமணிபோல வந்துள்ள மண்டல் கமிஷன் வெற்றியை மாற்றார் பறித்துக் கொள்ளாமல் காத்திட வேண்டியது நம் கடமையன்றோ!

அந்தக் கடமையை நிறைவேற்றத்தான் அன்றே பாவேந்தர் கட்டளையிட்டுள்ளார்!

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
அவரது இந்தக் கட்டளையை நிறைவேற்ற;
குறிக்கும் உன் இளைஞர் கூட்டமெங்கே?
மறிக்கொணாக் கடல்போல் மாப்பதை மேவிடு!

என அழைக்கிறேன்! செப்டம்பர் 15, 16 நாட்கள்; சென்னை குலுங்கிட - அன்னைத் தமிழகத்தின் ஆதரவு, வி.பி. சிங் அவர்கள் கொண்டுள்ள உறுதிக்கு உண்டு என நெஞ்சுயர்த்திக் காட்டிட - வா! வா! வா! திராவிட இயக்கத்தின் வைர விழா வெற்றி விழா கொண்டாடிட வா!

பகுத்தறிவுப் பகலவன் பெரியார் - இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழன் அண்ணா - புரட்சிக்கு உண்மைப் பொருளாய்

விளங்கிடும் பாவேந்தர் - அடிமை விலங்கொடிக்கச் சம்மட்டி தூக்கிய அண்ணல் அம்பேத்கர் - திராவிடப் பேரியக்கத் தோன்றல் தியாகராயர் - இவர்கள் வழங்கிய உணர்வை இடைவிடாது நாட்டு மக்கள் இதயத்தில் பதியவைக்கும் நமது தி.மு.க. - மறந்திடப்போமா! நன்றி காட்டும் நாள் மட்டுமல்ல; நமக்கெதிராகக் கிளம்பும் வஞ்சகத்தை, சூழ்ச்சிதனை வென்று காட்டும் நாள்!

இளஞாயிறு எழுகிறது! ஒளிவெள்ளம் எங்கணும் பரவுகிறது! விரிவானம் பாராய் தம்பி! என அழைக்கிறேன்!

விழியில் ஒளி தேக்கி - மொழியில் தமிழ் பொழிய - வீர நடை போட்டு வருக! வருக! தலைநகரில் உன் தடந்தோள் உயரட்டும்! தங்கமே; நீ வரும் வழி பார்த்து நிற்கின்றேன்! வா! வா! வா!

அன்புள்ள,

மு. க.

12-09-1990

1663. பயணம் தயாரா;
என் பத்தரை மாற்றுத் தங்கமே!

உடன்பிறப்பே,

களை கட்டிவிட்டது சென்னைத் தலைநகரம்! அறிக்கைத் தலைவர்கள் அலறுவதைக் கண்டாலே இந்த உண்மை தெரியுமே உனக்கு! அரசுப் பணம் ஆறு கோடி ரூபாயை செலவிட்டு ராஜீவ் காந்திக்கு தமிழ்நாட்டில் ஊர் ஊராகப் பவனி நடத்தியவர்கள்; வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு அலறுகிறார்கள்; பாரதக் கதையில் வரும் காந்தாரியைப் போல! மக்களே வராத மறைமலைநகர் காங்கிரஸ் மாநாட்டுக்கு; ஆம் - அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டுக்கு அரசாங்க இயந்திரங்கள் அனைத்தையும் பயன்படுத்திக் கோடி கோடியாகச் செலவு எனக் கூறி கொள்ளையடித்தவர்கள்; கூப்பாடு போடுகிறார்கள் இராமாயணக் கதையில் வரும் கூனிக் கிழவியைப் போல!

இவர்களை அலட்சியப்படுத்திட உன் வெற்றிப் புன்னகை ஒன்று போதும்! அண்மையில் நடந்த கூட்டுறவுத் துறைத் தேர்தலில் முதல் கட்டத்தில் நீ பெற்றுள்ள வெற்றியினால் சிலருக்குத் தலையே சுற்றுகிறது! உடன்பிறப்பே; உனக்கும் மிகவும் குறும்புதான்! நகரங்கள், பேரூர்கள், சிற்றூர்கள் அனைத்திலும்கூட கூட்டுறவுத் தேர்தலில் எண்பது சதவிகிதத்திற்கு மேற்பட்ட இடங்களில் வென்று காங்கிரஸ் அணியைப் பிணியாக்கிவிட்டாயே; ஆத்திரம் ஏற்படாதா அவர்களுக்கு!

அதுமட்டுமா? அந்த வெற்றித் திருமுகத்துடன் சென்னை ஐம்பெரும் விழாவில் என்னைக் காண வருகின்றாய் என்கின்றபோது அவர்களுக்குக் கோபம் கொப்பளிக்கத்தானே செய்யும்?

அதனால்தான் இருட்டறையில் கிடந்த சமுதாயத்தின் ஒளிவிளக்காய் - பகுத்தறிவுப் பகலவனாய் - பட்டி தொட்டி

யெல்லாம் முழங்கிய தென்னாட்டு சாக்ரடீஸ் தந்தை பெரியாருக்கு விழா எடுப்பதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அரசியலில் பண்பாடும் நாகரீகமும் போதித்து - அனைத்து நாடுகளில் வாழும் தமிழர்களின் இதயத்தில் சிம்மாசனம் போட்டு வீற்றிருந்த தென்னாட்டு பெர்னாட்ஷா அறிஞர் அண்ணாவுக்கு விழா எடுப்பது கண்டு வெறியேறித் தாக்குகின்றனர்!

தமிழுக்கு அமுதென்று பேர்! அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்! என்று முரசறைந்த புரட்சிக் கவிஞருக்கு விழா எனில் புலம்பித் தவிக்கின்றனர்!

பள்ளத்தில் தள்ளப்பட்டோரைக் கைதூக்கி விட்டு அவர்தம் உள்ளத்தில் இடம்பெற்ற அண்ணல் அம்பேத்கருக்கு விழா எனில் தூற்றுகின்றனர்!

ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்திடத் தோன்றிய திராவிட இயக்கத் தென்றல் தியாகராயருக்கு விழா எனில் தேம்பி அழுகின்றனர்! தேள் எனக் கொட்டுகின்றனர்!

ஆண்டாண்டு காலமாகப் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வரப்பிரசாதம் என வழங்கப்பட்டுள்ள மண்டல் கமிஷன் நடைமுறைக்கு வருவதை எதிர்ப்போரைக் கடிந்து கொள்ளத் துணிவின்றி அந்த வெற்றிக்கு விழா எடுக்கும் நம்மைக் கடித்துக் குதற கிளம்புகின்றனர்!

தி.மு.க.வில் இருந்துகொண்டே, அறிஞர் அண்ணாவுக்கு எதிராக முதுகில் குத்தும் கூட்டத்தைத் தயாரித்து - மூக்குடைப்பட்டுப் போனவர்களால் தி.மு.க. தொடக்க நாள் விழா கொண்டாடுவதைப் பொறுத்துக்கொள்ள முடியுமா? அதனால்தான் பொல்லாச் சொற்களின் விளை நிலமாக - ஆம்; விஷ நிலமாக மாறிக் கதறுகிறார்கள்!

உன் குறும்புத்தனம் பொல்லாத குறும்புத்தனம் என நானறிவேன்! நீ கூட்டுறவு வெற்றியுடன் விடப்போவதில்லை! கூடப் போகிறாய் சென்னையில்; குமரிமுனையில் முக்கடல் கூடுவதுபோல!

சில நாட்களுக்கு முன்புதான் குமரிமுனையில் வள்ளுவர் சிலை அடிக்கல் நாட்டும் விழாவின்போது அந்தக் காட்சியைக் கண்டு வந்தேன்!

கன்யாகுமரியில் கண்டது முக்கடலின் சங்கமம்; இதோ மக்கள் கடலின் சங்கமத்தைப் பார்! என்று கூறி சென்னையில் என்னைப் பெருந்திகைப்பில் ஆழ்த்தப் போகிறாய்!

பயணம் தயாரா?

பார்த்தால் தெரியவில்லையா?

பஸ்ஸிலா? ரயிலிலா?

அல்லது வாடகை வேனிலா?

எதுவும் கிடைக்காவிட்டால்

இருக்கவே இருக்கிறது

நடைவண்டி

ஏ, அப்பா அவ்வளவு தொலைவு

நடந்தே போவதா?

நடந்தால் என்ன? நமது தலைவர்கள்

இயக்கப் பிரச்சாரம் செய்ய எத்தனை

ஊர்களுக்கு - குக்கிராமங்களுக்கு

கல்லிலும் முள்ளிலும் நடந்தே

சென்றிருக்கிறார்கள் தெரியுமா?

சென்னைக்கு நீ மட்டுமா?

பெண்டாட்டி பிள்ளைகளுடனா?

பிறகென்ன? குடும்பத்துடன் கலந்து

கொள்ள வேண்டிய விழாவாயிற்றே?

ஆமாம் - நமது கழகமே ஒரு குடும்பம்

என்று அண்ணா அடிக்கடி சொல்வாரே!

நீ என்ன; என்னையே கேள்வி கேட்டுக்

கொண்டிருக்கிறாய்? உன் சேதி என்ன?

நீ புறப்படவில்லையா சென்னைக்கு?

என் வீட்டில் ஒரு இளைஞர் அணி இருக்கிறது!

அதுதான் என் மகன் - அவன் விடுவானா?

நாலு நாளாகத் தூங்கவே இல்லை! நாற்பது

இளைஞர்கள் கூட்டமாகச் செல்கிறார்களாம்!
ஏதேதோ எழுதிக்கொண்டு கிடக்கிறார்கள்!
அப்படியானால் மகளிர் அணிக்கு
விருப்பமில்லையாக்கும்!
என்ன அப்படி சொல்லிவிட்டாய்! எனக்கு
முந்தி அவள்தான் பயணம் கிளம்பிவிட்டாள்!
வீட்டைப் பூட்டிக் கொண்டு பாட்டி, தாத்தா,
அம்மா எல்லோருமே 16-ந் தேதி சென்னையில்
இருப்போம்!

உடன்பிறப்பே, இப்படி ஆங்காங்கு பல நகர்களில், ஊர்களில் உரையாடல் நடைபெறும் உங்களிடையே! இடையில் இருப்பது இன்னும் இரண்டொரு நாட்கள்தானே!

வருகிறாய்; மகிழ்கிறேன்! வந்தவுடன் பார்த்துப் பூரிப்படைவேன்! நான் உன் ஊருக்கு வந்தபோது உன் துணை மயில் அருகிருக்க நீ பெற்ற செல்வத்தை என் கையிலே கொடுத்து பெயர் சூட்டச் சொன்னாயே; அந்த மழலையுடனும், மயிலுடனும் உடன்பிறப்பே; நீ வரும்போது என் அன்புத் தம்பி குடும்பத்துடன் வந்திருக்கிறானேயென்று அகமகிழ்வேன்! வாழ்த்துவேன்!

ஆனாலும் ஒன்று; எல்லோர்க்கும் சொல்லுகிறேன். நீ எப்படி வந்தாலும் எச்சரிக்கையாக வா! வண்டி வாகனங்களில் வரும்போது பயணத்தில் மிகுந்த ஜாக்கிரதை தேவை! நெடுந்தொலைவிலிருந்து வந்தால் இடையிடையே ஓய்வு தேவை!

பத்திரமாக வந்து பத்திரமாக திரும்பிச் சென்றனர் என் பத்தரை மாற்றுத் தங்கங்கள் என்ற செய்திதான் என் வயிற்றில் பால் வார்க்கும் என்பதை நீ அறிவாயே!

இன்னொரு ரகசியம் தெரியுமா உனக்கு?

நெல்லை நிகழ்ச்சிகளை மிகவும் பாராட்டி எழுதிவிட்டேனாம்; அதனால் பகலிரவு பாராமல் பம்பரம்போல் சென்னை மாவட்டச் செயலாளர் தம்பி பாலுவும், கழகச் செயல்வீரர்களும் பணியாற்றுகின்றனர்! ரொம்பத்தான் வீம்பு!!

இந்த இயக்கத்தின் வலிவைக் காட்டுவதிலும் - வளர்ப்பதிலும் - இலட்சியத்துக்கு வெற்றி தேடுவதிலும் என் உடன்பிறப்புகளுக்கிடையே நடைபெறும் போட்டியைப் பார்த்துக் களிப்பதிலே எனக்குள்ள ஆர்வத்திற்கு எல்லையுண்டா என்ன!

என்ன இருந்தாலும் தலைநகருக்குத் தரவேண்டிய பெருமையைத் தந்துவிட வேண்டியதுதானே!

அன்புள்ள,

மு. க.

13-09-1990

1664. என்னில் எல்லாமாக நிறைந்துள்ளாய்!

உடன்பிறப்பே,

செப்டம்பர் 16 - அதே தேதியில்தான் 1921-ஆம் ஆண்டு நீதிக் கட்சி ஆட்சியிலே இங்கு இட ஒதுக்கீட்டுக்கான முதல் ஆணையே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என வரலாறு கூறுகிறது. எவ்வளவு பொருத்தமாக அதே நாளில் மண்டல் கமிஷன் வெற்றிவிழாவை நாம் கொண்டாடியிருக்கிறோம் என்பதை எண்ணி எண்ணிப் பூரித்துப் போகிறேன். திரு. முத்தையா முதலியார் அமைச்சராக இருந்தபோது 1927-இல் பிறப்பிக்கப்பட்ட இட ஒதுக்கீடு ஆணை, வரலாற்றுக் குறிப்பின்படி இரண்டாவது கட்ட ஆணையாகும். முதல் ஆணை முகிழ்ந்த நாளில் ஐம்பெரும் விழா அமைந்துவிட்டது! இப்படித்தான் 1938-ஆம் ஆண்டு நான் பொது வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த நாளும் - சென்னையில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கப்பட்ட நாளும் - 1924-இல் நான் பிறந்த நாளும் ஜூன் 3 என்றே பொருத்தமாக அமைந்து விட்டதை முன்பொருமுறை சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

1916-ஆம் ஆண்டுதான் திராவிட இயக்கத்திற்கான விதை ஊன்றப்பட்டது! தியாகராயரின் அறிக்கையும் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் அமைப்பும் 1916-ஆம் ஆண்டின் வரலாற்றுச் சிறப்புகளாகும்.

ஆனால் ஒன்று; அந்தக் காலத்தில் இந்தப் பேரியக்கத்தின் மாநாடுகளேகூட திரையரங்குகளில் ஆயிரம் பேர் கூடத்தக்க மன்றங்களில் மட்டுமே நடைபெறும். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் மாநில மாநாடு ஒன்று சென்னை வெலிங்டன் டாக்கீசில் நடைபெற்றுள்ளது என்றால் பார்த்துக் கொள்ளேன்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் செய்திகளையும், கொள்கைகளையும் தாங்கி வந்த ஆங்கில ஏட்டுக்குப் பெயர் ஜஸ்டிஸ்! அந்தப் பெயர்தான் பிறகு மக்களால் கட்சிக்கே

இடப்பட்ட பெயராயிற்று! ஜஸ்டிஸ் கட்சியென்றும் தமிழில் நீதிக் கட்சியென்றும் அழைக்கப்பட்ட அந்தக் கட்சி 1937-க்குப் பிறகு; ஆம் அப்போது நடைபெற்ற தேர்தலில் தோல்வியுற்ற பிறகு; தந்தை பெரியாரின் தலைமையை ஏற்றுக் கொண்ட பிறகு - பேரறிஞர் அண்ணாவின் அறிவுத்திறனாலும், ஆற்றலும் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட கால கட்டத்தில் திராவிடர் கழகமாக உருப்பெற்று; பின்னர் சமுதாயப் பணிகளை கவனிக்க திராவிடர் கழகமும், சமுதாய அரசியல் பணிகளைக் கவனிக்க திராவிட முன்னேற்றக் கழகமும் எனும் இருமுனைப் பணிகளை ஆற்றவும், நிறைவேற்றவும் வழி வகை காணப்பட்டன.

மாநாடு நடத்த மண்டபங்கள் போதுமென்ற நிலையிலேயிருந்து, மைதானங்கள் தேவைப்படுமளவுக்கு இந்த இயக்கம், மக்கள் இயக்கமாயிற்று! இன்று மைதானங்கள் போதவில்லை! ஏன்; கடற்கரைப் பெருவெளிகூட போதுமானதாக இல்லை என்கிற அளவுக்கு மக்களின் பேரார்வம் நமது இயக்கத்தின்பால் குவிந்திருப்பதைக் காணுகிறோம்!

திராவிடப் பேரியக்கத்தின் வரலாற்றையே - விழாவாக ஆக்கி அனைத்து நாடுகளுக்கும் அறிவிக்கும் வண்ணம்; திராவிட இயக்கத் தோன்றல் தியாகராயருக்கு விழா! இந்த இயக்கத்தின் தலைமையை ஏற்று பகுத்தறிவுப் பகலவனாய் - சுயமரியாதைச் சுடராய் - இனமான ஏந்தலாய் உலா வந்த பெரியாருக்கு விழா! அந்தப் பெரியாரின் அன்புக்கும் பாசத்திற்கும் உரியவராய் - அறிஞராய் - பேரறிஞராய் - இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழராய் - பவனி வந்த ஜனநாயகக் காவலர் அண்ணாவுக்கு விழா! அடித்தளத்து மக்களின் அல்லல் போக்க எழுந்த அண்ணல் அம்பேத்கருக்கு விழா! தமிழன்னைக்கு ஒளிமிகு அணிகளைப் பூட்டி மகிழ்ந்து, தன்மானப் புலவனாகத் தலைநிமிர்ந்து வாழ்ந்திருந்த புரட்சிக் கவிஞருக்கு விழா! தி.மு.கழகத்துக்கு விழா! திராவிடப் பேரியக்கத்துக்கு வைர விழா! இந்த இயக்கத்தின் உயிர்க் கொள்கையாம் சமூக நீதி வெற்றிக்கான மண்டல் கமிஷன் நடைமுறைக்கு வந்தமைக்கு; அதற்குக் காரணமான தேசிய முன்னணி அரசுக்கும், அந்த அரசின் தலைவர் வி.பி. சிங் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் விழா!

இந்த விழாக்கள் அனைத்தும் இணைக்கப்பட்ட திருவிழாவை, பெருவிழாவை; தமிழகத் தலைநகரில் நீ எத்துணை எழுச்சியுடன்

நடத்தியிருக்கிறாய் என்பதற்கு; எதிர்க்கட்சிகளின் எரிச்சலும், புலம்பலுமே சான்றுகளாகும்! பாவம்; திக்குமுக்காடுகிறார்கள்! திட்டித் தீர்க்கிறார்கள்!

விழா ஒரு கேடா? என விஷத்தை வாரி இறைக்கிறார்கள்!

பெரியார், அண்ணா, அம்பேத்கர், பாரதிதாசன், தியாகராயர் எனும் பெயர்களை மட்டுமே கேள்விப்பட்டவர்களுக்கு - அவர்களின் இலட்சியம், கொள்கை, கோட்பாடு இவைபற்றிக் கவலையில்லாதவர்களுக்கு - அறிந்துகொள்ளும் அக்கறைகூட இல்லாதவர்களுக்கு; நாம் நடத்திய விழா தேவையற்ற விழாவாகத் தெரிகிறது!

என் செய்வது; நமது விழாச் செய்திகள் கேட்டுத் தேள் கொட்டியதுபோல துடிப்பவர்களுக்கு - இச்செய்திகள் தேன் துளிகள்போலவா இனிக்கும்?

உடன்பிறப்பே; நீ என்னை எந்த அளவுக்கு மகிழ்ச்சியின் உச்சிக்கே தூக்கிக் கொண்டு போயிருக்கிறாயோ - அந்த அளவுக்கு மாற்றாரைச் சோகப் பள்ளத்தில் தள்ளிவிட்டிருக்கிறாய்!

புற்றீசல் புறப்பட்டதோ என வியப்பு! புதுவெள்ளம் பாய்கிறதோ என திகைப்பு! புலிக் கூட்டமோ! சிங்கங்களின் படை வரிசையோ! புறாக்களின் அணிவகுப்போ! அடடா; இஃதென்ன - சாதனைகளும் சரித்திர உண்மைகளும் நடமாடும் பல்கலைக் கழகங்களாகவே உருவெடுத்து அகன்ற வீதிகளில் அழகு சிந்தி நகர்ந்து கொண்டிருக்கின்றன! பார்த்துப் பார்த்து பரவசமுற்று பிரதமர் வி.பி. சிங் பிரம்மாண்டமான பேரணி என்று அந்த மேடையில் இருந்தவாறே உரக்கச் சொன்னார்! என் கண்கள் பனித்தன! ஆம்; ஆனந்த மிகுதியால்! உடன்பிறப்பே; உனக்குச் சேர வேண்டிய பரிசு அது; அதனால் பெருமைப்பட்டுக் கொண்டேன்!

நெல்லை நிகழ்ச்சிகளை குறிப்பிட்டுத்தான் முதல் அழைப்புக் கடிதம் எழுதினேன்! நெல்லை எழுச்சியை மட்டுமே விவரித்திருந்தேன். ஆனால் நெல்லையிலிருந்து திரும்பியதும் நாலைந்து நாட்கள் உடல் நலிவினால் அவதியுற்றதை உனக்குத் தெரிவிக்கவில்லை; நீ சோர்ந்துவிடக் கூடாது என்பதற்காக! அதனால் தர்மபுரிக்கு நமது சின்னசாமி வீட்டுத் திருமணத்திற்குக்கூட செல்ல முடியாமல் மிக வருந்தினேன்!

மருந்தினும் மேலாக ஐம்பெரும் விழா நிகழ்ச்சிகளில் உன் திருமுகம் கண்டதால் நலம் பெற்றுள்ளேன்! ஏ அப்பா; உன்னைக் காண்பதுதான் எவ்வளவு ஆரோக்கியம் தரும் ஒளடதமாக இருக்கிறது!

ஆயிரம், பதினாயிரம், லட்சம், லட்சோப லட்சம் மலர்களாகக் குவித்த வண்ணமிருந்து உடன்பிறப்புகளையெல்லாம் மணமிகு மாலையாக்கி, எழில்மிகு காட்சியாக்கி, எழுச்சிமிகு நிகழ்ச்சியாக்கிய சென்னை மாவட்டச் செயலாளர் தம்பி பாலுவையும், அவருடன் இணைந்து ஓய்வின்றி உழைத்திட்ட மாவட்ட கழக, பகுதிக் கழக, கிளைக் கழகக் கண்மணிகள்; இளைஞரணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, மாணவர் அணி, வழக்கறிஞர் அணிச் செயல்வீரர்களையும், வீராங்கனைகளையும் எப்படி வாழ்த்திப் பாராட்டுவது என்றே தெரியவில்லை! சென்னை மட்டுமல்ல, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கழகத் தளபதிகள் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டல்லவோ விழா வெற்றியை இரு மடங்கு ஆக்கியுள்ளனர்.

தேசிய முன்னணி தொடக்க விழாவை விட எழுச்சி அதிகம் என்றார் மத்திய அமைச்சர் அஜீத் சிங்!

ஆம்; சந்தேகமில்லை என வழிமொழிந்தார் ஜனதா தளத் தலைவர் பொம்மை!

இந்தக் கட்டுப்பாடு காக்கும் மந்திரத்தை எப்படிக் கற்றீர்? என வியப்பு மேலிட வினவினார் உபேந்திரா!

சகோதரர் என்.டி.ஆர்; பூரித்துப் போனார்? தேசிய முன்னணியின் தலைவராயிற்றே; எனவே மிகப்பெரும் வெற்றியென நெஞ்சுயர்த்தி மகிழ்ந்தார்!

என் இதயம் எப்படிக் குளிர்ந்திருக்கும் அப்போது! எவ்வளவு பூரிப்பில் மிதந்திருப்பேன்!

இந்தப் பெருமையைக் கழகத்திற்குக் கொண்டு வந்து சேர்த்துள்ள; உன் காலடி பட்ட கடற்கரை மணலை முத்தமிடுகிறேன் என்று நான் சொன்னபோது - என் குரல் தழுதழுத்ததே - ஆம்; அப்போது உன் நெஞ்சு நெகிழ்ந்ததையும் நான் உணர்வேன்!

இதுதானே உடன்பிறப்பே; நமது அன்புக்கும் பாசத்திற்கும் உறவுக்கும் அசைக்க முடியாத அடையாளம்!

கார் விபத்துக்கள் இரண்டு நடைபெற்று என் காதைத் துளைத்திட்ட செய்திகள் - கவலை அளித்திட்ட செய்திகள் - வராமல் இருந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்!

எனினும் இத்துடன் போயிற்றே என ஒரு ஆறுதல்!

என்னில் எல்லாமாக நிறைந்திருக்கிற என் உடன்பிறப்பே; என் அழைப்பை ஆணையாக ஏற்றுச் செயல்படுகிறாய்; காரணம் நானும் உன்னை எனக்குச் சமநிலையிலிருந்து எள்முனையளவும் குறைத்துப் பார்க்க நினைக்காததால்!

இந்த அன்பும் பாசமும்

என்றும் நீடிக்கும்!

கழகத்தின் வலிவும்

பொலிவும் வளர்ந்து

கொண்டேயிருக்கும்!

வாழ்க! வாழ்க!

அன்புள்ள,

மு. க.

19-09-1990

1665. தேசிய ஒருமைப்பாடு கூட்டம்! - 1

உடன்பிறப்பே,

தேசிய ஒருமைப்பாடு - ஒற்றுமை - என்ற சொற்றொடர்கள் மட்டும் அடிக்கடி பயன்படுத்திக் கொண்டு மாநிலங்களையோ, மாநில அரசுகளையோ மதிக்காமல் - டெல்லித் தலைநகரிலேயே தர்பார்களை நடத்திக் கொண்டிருந்த காங்கிரசார்; தங்களை மட்டுமே தேசிய ஒருமைப்பாட்டின் சின்னம் என்று கதவு அகலம் சுவரொட்டிகளை அச்சடித்து ஒட்டிக்கொள்ளத் தவறுவதில்லை.

ஆனால் சில மாதங்களுக்கு முன்பு டெல்லியில் எல்லா முதலமைச்சர்களும் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் தேசிய ஒருமைப்பாடு குழுக் கூட்டங்களை மாநிலத் தலைநகரங்களிலும் நடத்த வேண்டுமென்ற ஒரு கருத்தை நான் வெளியிட்டேன். அந்தக் கருத்தை பிரதமர் வி.பி. சிங் அவர்கள் உடனடியாக ஏற்றுக்கொண்டு சென்னையில் நடத்துகிறீர்களா என வினவினார். நானும் ஒப்புக்கொண்டேன். சில நாட்கள் கழித்து மத்திய உள்துறை அமைச்சரிடமிருந்து செப்டம்பர் 22 என நாள் குறித்து கடிதமும் வந்தது. மிகக் குறுகிய கால இடைவெளி - ஒரு மாதங்கூட இல்லை; இருந்தாலும் நமது மாநில அரசு அதிகாரிகளின் ஆர்வம், திறமை இவற்றின் மீது நம்பிக்கையின் அடிப்படையில் தேசிய ஒருமைப்பாடு குழுக் கூட்டத்தை மிகச் சிறப்பாக நடத்துவதற்குத் துணிந்து செயலில் இறங்கினோம்.

சுமார் 150 பிரதிநிதிகள், மத்திய அமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் என்பதால், டெல்லியில் இருப்பதுபோன்ற ஒரு கூடம்; அதுவும் குளிர்பதனம் செய்யப்பட்டதாக அமைக்கப்பட வேண்டும்; மொழி பெயர்ப்பு வசதிகளும் செய்யப்பட வேண்டும் என்பதால் சென்னையில் பல இடங்களைப் பார்த்தோம்.

வேறு இடங்களில் இத்தகைய வசதிகளுடன் கூடம் ஒன்றைத் தயார் செய்வதைவிட; அரசுக்கே உரிய நாமக்கல் கவிஞர்

மாளிகையில் வசதிமிக்க கூடத்தை அமைத்துவிட்டால் எப்போதும் நிரந்தரமாக இதுபோன்ற கூட்டங்களுக்கும், கருத்தரங்குகளுக்கும் பயன்படுமேயென்று ஒரு நல்ல முடிவுக்கு வந்தோம்.

கோட்டைக்குப் பக்கத்தில் பத்து மாடிக் கட்டிடம் முன்பு நாம் ஆட்சியில் இருந்தபோது கட்டப்பட்டது. 13 ஆண்டுகளாக அதனை பத்து மாடிக் கட்டிடம் என்றே அழைத்து வந்தனர். மீண்டும் நாம் ஆட்சிக்கு வந்து கடந்த ஆண்டு நாமக்கல் கவிஞர் இராமலிங்கனாருக்கு நூற்றாண்டு விழா அஞ்சல் தலை வெளியிட்டபோது நான் அந்தக் கட்டிடத்துக்கு நாமக்கல் கவிஞர் மாளிகை என்று பெயர் சூட்டினேன். அந்தத் தேசியக் கவிஞர் எழுதிய தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா! என்ற கவிதை வரிகளும் அந்த மாளிகை முகப்பில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன இப்போது!

தேசியவாதிகளுக்கு தமிழ் உணர்வாளர்களைப் பார்த்தால் எதிரிகளாகத் தெரிந்தாலும்; தமிழ் உணர்வாளர்களான நமக்கு தேசியவாதிகள்மீது மதிப்பும் மரியாதையும் என்றைக்கும் உண்டு!

அண்ணா இருந்து நடத்திய உலகத் தமிழ் மாநாட்டில்; பத்து சிலைகள் அமைத்தபோது பாரதிக்கும், வ.உ.சி.க்கும் சிலைகள் அமைத்த பெருமை கழக அரசுக்கு உண்டு!

அண்ணா மறைவுக்குப் பிறகு முதல்வர் பொறுப்பை ஏற்ற நான்; தில்லையாடி வள்ளியம்மை நகரையே உருவாக்கி அங்கே எழுச்சிமிக்க சின்னமொன்றை நிறுவினேன். சிதம்பரனார் இழுத்த செக்கு எந்த சிறையில் உள்ளது எனத் தேடியெடுத்து, சென்னை அரசினர் தோட்டத்தில் அதனைக் காட்சிப் பொருளாக வைத்தேன். கிண்டி காந்தி மண்டபத்தை பல லட்ச ரூபாய் செலவில் வசதியும் அழகும் மிக்கதாய் ஆக்கியது கழக அரசுதான். மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கு நினைவு மண்டபத்திற்கான வரை படம் நானே வரைந்து கொடுத்து ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களைக் கொண்டு திறப்பு விழா நடத்தினேன். பெருந்தலைவர் காமராசர் மறைந்தபோது அரசு மரியாதையுடன் அடக்கம் செய்தது மட்டுமல்ல; காந்தியடிகள், ராஜாஜி, காமராஜர் மூவரின் நினைவு மண்டபங்களும் ஒரே வரிசையில் இருக்க வேண்டுமென்று கிண்டியில் அவ்வாறே அமைக்குமாறு செய்தேன். பெருந்தலைவர் காமராஜருக்கு விருப்பமான இராட்டைச் சின்னம் நினைவு மண்டப

முகப்பில் உருவாக்கப்பட்டது. அந்தப் பணிகளைப் பார்த்து விட்டு கவர்னர் கே.கே. ஷா நடத்திய காந்தி விழாவுக்குச் சென்றேன். காந்திய வழியில் ஆட்சி நடத்துகிற மாநிலம் தமிழ்நாடு என்று கே.கே. ஷா அந்த விழாவில்தான் சொன்னார். ஆனால் மறுநாள் ஆட்சி கலைக்கும் உத்தரவு டெல்லியில் இருந்து வந்தது. கவர்னர் ஷா, அதில் கையெழுத்துப் போடும் கட்டாயம் வந்து சேர்ந்தது. கடைசியாக என்னிடம் கேட்டனர்; இப்போதாவது எமர்ஜன்சி எதிர்ப்பு தீர்மானத்தை கழகம் வாபஸ் வாங்கினால் இன்னும் ஓராண்டு ஆட்சி நீடிக்குமென்று!

ஜனநாயகக் கொள்கைதான் முக்கியம்; ஆட்சியல்ல என்றேன்! மறுநாள் மாலை ஆட்சியைக் கலைத்தனர்.

காமராசர் நினைவு மண்டபத்தில் இருந்த இராட்டையை அகற்றிவிட்டு, அந்த மண்டபத்தை பிரதமர் இந்திரா காந்தி திறந்து வைத்தார். சில நாட்களுக்குப் பிறகு வள்ளுவர் கோட்டத்தில் என் பெயர் பொறித்த அடிக்கல்லை அகற்றிவிட்டு குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமதுவைக் கொண்டு வள்ளுவர் கோட்டத் திறப்பு விழா நடத்தினர்.

பின்னர் ஜனதா ஆட்சி டெல்லியில் வந்த பிறகுதான் காமராஜர் நினைவு மண்டபத்தின் முகப்பில் மீண்டும் இராட்டை வந்தது!

13 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் வள்ளுவர் கோட்டம் எழுப்பியவனின் பெயர் பொறித்த கல் மீண்டும் வைக்கப்பட்டது.

உடன்பிறப்பே, நாமக்கல்லார் மாளிகை என்று எழுதத் தொடங்கியதும் எண்ணங்கள் எங்கெங்கோ சிறகடித்துப் பறக்கக் கிளம்பிவிட்டன! பரவாயில்லை; தேசிய ஒருமைப்பாடு என்பதற்கான உண்மையான இலக்கணத்தை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டுமல்லவா? உணர்வு இருந்தால்தானே செயலில் வரும்? தேசிய ஒருமைப்பாடு என்பதை உதட்டளவு உச்சரிப்பாகவும் பொழுதுபோக்காகவும் கொண்ட சிலர் இந்த உணர்வுகளைப் புரிந்து கொள்ள மறுத்திடுவர்!

சென்னையில் விமான நிலையத்தில் வந்து இறங்கியதும் காமராஜர், அண்ணா பெயர்களில் உள்ள நிலையங்களைக் கண்டு பூரித்துப் போனேன் என்று செப்டம்பர் 16-ந் தேதி

கடற்கரை கூட்டத்தில் பிரதமர் வி.பி. சிங் உணர்ச்சிபொங்கிடக் குறிப்பிட்டாரே; அந்தப் பெயர்கள் வைக்கப்பட வேண்டுமென்று அவரிடம் கோரிக்கை வைத்து; அதில் வெற்றி பெற்றதும் கழக அரசுதானே! அந்த வெற்றியை வழங்கியது கழகமும் பங்கேற்றுள்ள தேசிய முன்னணி அரசுதானே! அந்த அரசின் தலைவர் வி.பி. சிங் அவர்கள்தானே!

தேசிய ஒருமைப்பாட்டின் சின்னம் ராஜீவ்காந்திதானே! என்று சுவரொட்டி ஒட்டுகிறார்களே; விமான நிலையங்களுக்கு அந்தப் பெயர்கள் வைத்திட அவர் விரும்பியதுண்டா? வேண்டுகோளைக் காங்கிரஸ் ஆட்சியில் ஏற்றதுதான் உண்டா?

கடற்கரைச் சாலை காமராஜர் சாலையாயிற்று; கழக ஆட்சியில்!

காமராஜரின் அன்னையார் பெயரில் சிதம்பரனார் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்கு அன்னை சிவகாமி வளாகம் எனப் பெயர் சூட்டப்பட்டதும் இப்போது கழக ஆட்சியில்தான்!

காமராஜர் அவர்களின் குடும்பத்திற்கும், அவரது அருமைச் சகோதரியாருக்கும் கழகமும், கழக அரசும் பல்வகையிலும் துணையாக இருந்தது மட்டுமல்ல; பெருந்தலைவரின் வாழ்நாள் முழுவதும் அவரது அருகிலேயிருந்த விசுவாசமிக்க ஊழியர் வைரவனை திருமலைப் பிள்ளைத் தெரு காமராஜர் நினைவகத்திலிருந்தே வெளியே அனுப்பி விட்டனர். பதினான்கு ஆண்டுகள் பரிதவித்துக் கொண்டிருந்த வைரவனின் குடும்பத்தைப் பற்றி நண்பர் நாத்திகம் ராமசாமிக்குத்தான் கவலையேற்பட்டு என்னிடம் அழைத்து வந்தார். வைரவன் அவர்கள் குடும்பம் வாழ ஒரு வீடும் தந்து; வைரவன் அவர்களுக்கும் மாதம் ஆயிர ரூபாய் ஊதியத்தில் திருமலைப் பிள்ளைத் தெரு காமராஜர் நினைவாலயத்தில் நற்பணியும் அரசின் சார்பில் வழங்கியுள்ளேன். வைரவனின் மகள் திருமணத்திற்கும் சென்று நடத்தி வைத்தேன். தேசியத் தலைவர்கள் பல பேரை அங்கு காணவில்லை. ஒரு சில எளிய தேசியவாதிகளே வந்திருந்தனர்.

அண்மையில் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் - மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சுப்பிரமணிய சிவா பெயரும், வளாகத்திற்கு வேலு நாச்சியார் பெயரும் சூட்டியதை; உடன்பிறப்பே! நீ மறந்திருக்கமாட்டாய்!

காமராஜர் மாவட்ட ஆட்சியாளர் வளாகத்துக்கு முன்னாள் முதல்வர் குமாரசாமி ராஜா பெயர் சூட்டியதும் இப்போது நமது ஆட்சியில்தான்!

திரு.வி.க. விருது, திரு.வி.க. பாலம், தேசிய விநாயகம் பிள்ளை பெயரால் நினைவுச் சின்னங்கள், மதுரையில் தியாகி என்.எம்.ஆர். சுப்பராமன் பெயரால் பாலம்! வேலூரில் உபயதுல்லா பெயரால் பேருந்து நிலையம்! சென்னையில் நேரு சிலையையொட்டி நேரு சாலை!

தமிழ் உணர்வாளர்களான நமக்கு தேசியவாதிகளின்பால் மதிப்பும் மரியாதையும் உண்டு என்பதற்கு இன்னும் எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் கூறமுடியும்!

இன்னும் சொல்லப்போனால் காங்கிரசார் மறந்துவிட்ட - அவர்களால் கைவிடப்பட்ட - தேவைப்படுகிறபோது மட்டும் அரசியல் ஆதாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிற பெயர்களுக்குச் சொந்தமாகிவிட்டவர்கள் அந்த சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் என்று நம்மால் அழுத்தம் திருத்தமாகக் கூறமுடியும்!

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என மொழிந்திட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் மரபன்றோ நமது மரபு!

அதனால்தான் பத்து மாடிக் கட்டிடம் நாமக்கல் கவிஞர் மாளிகை ஆயிற்று!

அங்கு நாட்டின் ஒருமைப்பாடு காத்திட, தேசிய ஒருமைப்பாடு குழு கூடிற்று! இன்றைய கடிதம் கூடினோம் என்பதுடன் இருக்கட்டும்! அடுத்த கடிதத்தில் நடந்தவை குறித்து எழுதுகிறேன்!

அன்புள்ள,

மு. க.

25-09-1990

1666. தேசிய ஒருமைப்பாடு கூட்டம்! - 2

உடன்பிறப்பே,

நேற்றைய கடிதத்தில் தமிழ் உணர்வாளர்கள்; தேசியத் தலைவர்களை - தேசியக் கவிஞர்களை மதிக்கவும் போற்றவும் தவறியதில்லை என்பதை எடுத்துக்காட்டுகள் சில கூறி விளக்கியிருந்தேன்.

அதுமட்டுமல்ல; அண்ணா கற்றுத் தந்த அரசியல் பெருந்தன்மையிலிருந்து நாம் அணுவும் விலகியதுமில்லை. அதற்கும் பல உதாரணங்கள் உண்டு.

என் அன்னை அஞ்சுகம் அம்மையார் பெயரால் ஒரு இல்லம் சென்னையில்! அன்பில் விவசாய அமைச்சராக இருந்தபோது விரும்பி வைத்த பெயர் அஞ்சுகம் பாசிப் பயறு என்பது! இந்த இரண்டு பெயர்களையும் முன்பிருந்த ஆட்சியாளர்கள் நீக்கிவிட்டனர்! ஆனால் நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்தபிறகு அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் என்ற பெயர் அப்படியேதானிருக்கிறது! மாற்றிடும் மனப்போக்கு நமக்கில்லை!

சில கல்லூரிகளுக்கு இருந்த என் பெயர்களை முன்பிருந்த ஆட்சியாளர் அகற்றி, வேறு பெயர்கள் சூட்டிவிட்டனர். ஆனால் நான் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக திறப்புவிழாவை இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்களை அழைத்துச் சிறப்பாக நடத்தினேன். ஓராண்டுக்கு மேலாகக் கேட்பாரற்றுக் கிடந்த எம்.ஜி.ஆர். நினைவிடத்தை அழகுற அமைத்து அதன் தொடக்க நிகழ்ச்சியையும் நட்புறவுடன் நடத்தியதும் நமது அரசுதான்! கலையுலக விருதுகளில் மூன்று சிறப்பான விருதுகளில் எம்.ஜி.ஆர். விருதினை அறிவித்து ஆண்டுதோறும் அதனை வழங்குவதும் இந்த அரசுதான்! கழகச் சார்பில் அண்ணா சிலை அமைத்திட நாம் கோரிய இடங்கள் எதையும் அனுமதிக்காமல் - இறுதியாக

வள்ளுவர்கோட்டத்திற்கு எதிரில் வைத்துக் கொள்ளச் சொன்னது முன்பிருந்த அரசு! இப்போது எம்.ஜி.ஆர். சிலை வைக்க அண்ணா சாலையில் அவர்கள் கோரிய இடத்தைக் கொடுத்துள்ளதும் நமது கழக அரசுதான்! அவ்வளவு ஏன்; அண்ணா பெயரால் அமைந்த அறிவாலயத்தை இடித்துத் தகர்த்திட அதிகாரிகளும் காவல்துறையினரும் படையெடுத்ததும்; நாம் உடனே நீதிமன்றம் சென்று தடை ஆணை பெற்று அதன்பிறகே அண்ணா அறிவாலயத்தைக் கட்டிமுடித்ததும்; பழைய நிகழ்ச்சி எனினும் நெஞ்சில் என்றும் பசுமையான நிகழ்ச்சியன்றோ!

இவைபோன்ற பெருந்தன்மை - அரசியல் பண்பாடு - பழிவாங்காத் தன்மை - ஆகியவற்றைக் கொண்டுதான் தேசிய ஒருமைப்பாட்டையும் வளர்க்க முடியும்! கட்டிக் காக்க முடியும்!

தேசிய ஒருமைப்பாடு என்பதை; டெல்லியிலிருப்போர் ஒரு வழிப் பாதையாகவே கடந்த காலத்தில் கருதினர்! நீ அவல் கொண்டு வா! நான் உமி கொண்டு வருகிறேன்! இருவரும் ஊதி ஊதித் தின்போம்! என்ற ஏமாற்றுப் பேச்சும்; அதற்கு இணங்கும் ஏமாளித்தனமுமே ஒரு காலத்தில் ஒருமைப்பாட்டின் இலக்கணமாகக் கருதப்பட்டது.

ஆனால் இன்று? நமது தேசிய முன்னணி ஆட்சியில் மாநிலங்கள் மத்திய ஆட்சியுடன் சமநிலையில் மதிக்கப்படுகின்றன! அதனால்தான் தேசிய ஒருமைப்பாடு குழுவின் கூட்டம்; சென்னையிலே! மாநில முதலமைச்சர் வரவேற்புரை நிகழ்த்துபவராக இருந்து!

காலை 10.30 மணிக்குக் கூட்டமென்றால் 8 மணி அளவில் ஏதோ ஒரு குண்டு மிரட்டல்! காவல் துறையினர் அதைக் கண்டுபிடித்து; செயலற்றதாக்கி விசாரணை நடத்திடத் தொடங்கினர். அதனால் பாதுகாப்புக்கான கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டன. இரண்டு மூன்று நாட்களாகவே காவல்துறை அதிகாரிகளும், காவலர்களும் பாதுகாப்பு முயற்சிகளில் மிகுந்த எச்சரிக்கையுடன் ஈடுபட்டதால்; திசை திருப்ப நினைத்தோர் திட்டமிட்டபடி எதுவும் நடக்கவில்லை!

எனது வரவேற்புரையில் தேசிய ஒருமைப்பாடு கூட்டம்; டெல்லியை விடுத்து ஒரு மாநிலத் தலைநகரில் நடைபெறுவதே; ஒருமைப்பாட்டுக்கு வழி வகுக்கும் செயல் என்றும் - அந்தப்

பெருமை முதன்முதலாகத் தமிழ்நாட்டுக்குக் கிடைத்தது மகிழ்ச்சிக்குரியதென்றும் குறிப்பிட்டேன். சாதி மத பேத உணர்வுகளால் தூண்டப்படும் வன்முறைகளை ஒடுக்கிட கட்சிக்கு அப்பாற்பட்டு மத்திய அரசின் கரத்தை வலுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இந்தியாவில் உள்ள தேசிய மொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சி மொழிகளாகும் வரையில் ஆங்கிலம் நீடித்தே தீரவேண்டுமென வலியுறுத்தினேன். மாநிலங்களுக்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு மத்தியில் கூட்டாட்சி அமைப்பும், மாநிலங்களில் சுயாட்சியும் உருவாக முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டேன். சிறுபான்மை மக்களுக்கான கமிஷன் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளதைத் தெரிவித்தேன். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ள வி.பி. சிங் அரசுக்கு செப்டம்பர் 16 அன்று தமிழ் மக்கள் தெரிவித்த ஆதரவைக் கோடிட்டுக் காட்டி அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டுள்ள மக்களைப் புறக்கணித்தால் எதிர்காலத்தைப் பற்றி கண்ணை மூடிக் கொண்டிருக்கிறோம் என்றுதான் பொருள் என எச்சரித்தேன்.

அடுத்து உள்துறை அமைச்சரும், அவரைத் தொடர்ந்து பிரதமரும் உரையாற்றினார்கள்.

முதலமைச்சர்கள், கட்சிகளின் தலைவர்கள், சில மாநில ஆளுநர்கள் விரிவாகப் பேசினார்கள்!

இதுபோன்ற கூட்டங்களில் முதலமைச்சர்கள், மற்றும் கட்சித் தலைவர்கள் தங்களது பேச்சுக்களே அச்சிள்யேற்றி விநியோகிப்பது வழக்கம்! நானும்கூட பல கூட்டங்களில் என் பேச்சை அச்சிள்யேற்றி விநியோகித்தது உண்டு! ஆனால் ஒன்று; அந்தப் பேச்சை அந்தக் கூட்டத்தில் நான் பேசினால் மட்டுமே அதை பத்திரிகைகளுக்குக் கொடுப்பேன்! பேசா விட்டால், அந்த அச்சுப் பிரதிகளை ஏடுகளில் பிரசுரிக்கத் தரமாட்டேன்!

இந்தக் கூட்டத்தில் முழு நேரமும் கலந்து கொண்டு பலர் கருத்துக்களை தெரிவித்தனர். ராஜீவ் காந்தி அவர்கள் ராமஜென்ம பூமி கிளர்ச்சி குறித்து மட்டும் சில நிமிடம் பேசினார். ஆனால் அவர் பேசியதாக ஏடுகளில் பிரசுரமாயிருப்பது; அச்சிள்யேற்றப் பெற்று விநியோகிக்கப்பட்டதேயாகும்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பற்றியும், விடுதலைப் புலிகள் நடமாடும் இடமாகத் தமிழகம் ஆகிவிட்டது பற்றியும், மண்டல் கமிஷன் பற்றியும் - அவர் அந்தக் கூட்டத்தில் எதுவும் பேசவில்லை! பேசியிருந்தால் அவரது கருத்தில் உள்ள தவறுகளை சுட்டிக்காட்ட என் போன்றோர்க்கு வாய்ப்பு இருந்திருக்கும். டைப் அல்லது அச்சு அடிக்கப்பட்ட பல பேச்சுக்களில் அது ஒன்றாக இருந்ததே அல்லாமல்; அவர் அவையில் எதுவும் பேசவில்லை! விடுதலைப் புலிகளுக்கு ஒருகாலத்தில் ஆயுத சப்ளை செய்த ராஜீவ் காந்தி அரசு; பிறகு ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த ராஜீவ் காந்தி அரசு; இன்றைக்குக் கடந்த காலத்தை மறந்துவிட்டுத் தமிழ் மக்களை ஏமாற்ற வீண் பழி தூற்றும் படலத்தில் இறங்கியிருப்பதை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டியிருக்க முடியும். ஆனால் அதுபற்றி அவர் குழு கூட்டத்தில் பேசவில்லை. பேசியதாக பத்திரிகைகளில் மட்டுமே வந்துள்ளது!

பெரியார், அண்ணா சிலைகளுக்கு மாலை போட முடியாமல்; வீட்டுக்குள் படம் வைத்து மாலை போட்ட அ.தி.மு.க. தலைவியார் தேசிய ஒருமைப்பாட்டுக் கூட்டத்துக்கு மட்டும் வந்து விட்டார். அவரும் ராஜீவைப் போலவே ராம ஜென்ம பூமி பிரச்சினையில் சில வார்த்தைகள் பேசினார்! இந்தப் பிரச்சினையில் அரசியல்வாதிகளே தலையிடக் கூடாது என்றார்! இந்தக் கருத்தை அந்தக் கூட்டத்தில் யாருமே ஏற்றுக் கொள்ளவில்லை! ராஜீவ் உட்பட!

அந்த அம்மையாரும் ஒரு பேச்சை டைப் செய்து விநியோகித்திருந்தார். ஆனால் அதில் உள்ள விஷயங்கள் எதையும் அவர் படிக்கவுமில்லை பேசவுமில்லை. பத்திரிகைகளில் மட்டும் அவர் பேசியதாக - ஆனால் பேசாத கருத்துக்கள் பல வெளியிடப்பட்டுள்ளன!

பொதுவாக நான் இதுபோன்ற விஷயங்களை விமர்சிப்பதில்லை! எனினும் மக்களைத் தவறான திசையில் திருப்பும் முயற்சிகளை அம்பலமாக்காவிடில்; பொறுப்பைத் தட்டிக் கழித்தவனாகி விடக் கூடுமல்லவா; அதனால் சிலவற்றைச் சொல்லுகிறேன்!

இதோ; அந்த அம்மாள் பேசாதது - ஆனால் டைப் செய்து குழுக் கூட்டத்தில் தரப்பட்டது!

"In the last Lok Sabha elections the All India Anna D.M.K. won all the seats it contested. Therefore we can legitimately claim to have the moral support and sanction of the people of Tamil Nadu to speak on their behalf"

அதாவது; கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. நின்ற இடங்களில் எல்லாம் ஜெயித்தது. எனவே தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்களுக்காகப் பேச எங்களுக்குத்தான் ஆதரவளித்திருப்பதால் அந்த சட்டபூர்வமான உரிமையை நாங்கள் பெற்றுள்ளோம் என்பது டைப் செய்யப்பட்ட பேச்சின் தொடக்கமாகும்.

ஆனால் இதைக் கூட்டத்தில் பேசவில்லை. பேசியிருந்தால் அவர்களுக்குப் பதில் கிடைத்திருக்கும்; 1980-ல் அ.தி.மு.க. பாராளுமன்றத்தில் 2 இடம் தவிர எல்லா இடங்களிலும் தோற்கடிக்கப்பட்டதே; அப்போது அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் தாங்களே முன்வந்து ராஜினாமா செய்து விட்டார்களா என்று!

உடன்பிறப்பே, இந்த டைப் பேச்சுக்குக் கவலைப்பட வேண்டியவர்கள் காங்கிரசிலேயுள்ள மானஸ்தர்களே தவிர நாமல்ல!

பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் வென்ற இடம் 25 - அ.தி.மு.க. வென்ற இடம் 11 - ஆனால் அதன் தலைவியார்; காங்கிரசுக்குக்கூட தமிழ் மக்களைப் பற்றிப் பேச தகுதியில்லை என்பது போல; சட்டரீதியான தகுதி 11 இடங்களில் வென்ற அ.தி.மு.க.வுக்கே இருப்பதாகப் பறைசாற்றியுள்ளார்!

பேசப் போவதாக டைப் செய்யப்பட்டு மேசையில் வைத்த பேச்சு இது! அதே டைப் பேச்சில், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று குற்றச்சாட்டு! பத்திரிகைகளில் மட்டுமே வந்தது - குழுக் கூட்டத்தில் பேசவில்லை!

இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டுக்காக எல்லா தலைவர்களும், முதலமைச்சர்களும் பொதுவான அரிய கருத்துக்களை எடுத்துரைத்த அருமையான நிகழ்ச்சியில்; இவர்களைப் போன்ற ஓரிருவர் மட்டும் அபசுரப் பேச்சுகள் டைப் செய்யப்பட்ட தாள்களை விநியோகித்தனர். ஆனால் அதை அங்கு பேசத் தயக்கம்! தக்க பதில் கிடைக்கும் என்பதால்! எனவே பத்திரிகைகளில் பிரசுரிக்கச் செய்து விட்டனர்!

ஒருமைப்பாடு என்பதை அரசியல் உள்நோக்கமின்றி - கன்யாகுமரி முதல் காஷ்மீர் வரை நிலைபெறச் செய்வதற்கு தன்னலமற்ற தூய மனப்பான்மை தேவை!

கட்சி என்பதை சிறிது மறந்துவிட்டு; நாடு அதுவும் அமைதியான நாடு என்ற குறிக்கோளுடன் அனைவரும் பொதுவில் ஒருசில முக்கிய பிரச்சினைகளிலாவது ஓரணியில் நின்றால்தான் தேசிய ஒருமைப்பாடு உண்மையான அர்த்தமுள்ளதாக விளங்க முடியும். இதுவே இந்தக் குழு கூட்டத்தில் கிடைத்துள்ள பாடமாகும்.

அன்புள்ள,

மு. க.

26-09-1990

1667. சரித்திரம் சபிக்கும்! சாபத்திற்கு ஆளாகாதீர்!

உடன்பிறப்பே,

உரிமையைப் பறித்துக் கொண்டவர்கள்; அந்த உரிமையைப் பறி கொடுத்தோர் அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ள முனையும்போது; ஆத்திரப்படாமல் திருப்பிக் கொடுத்து விடுவதுதான் நியாயமாகும்! நேர்மையாகும்! அறநெறியுமாகும்!

நாள்தோறும் காலையில் நடக்கும் பழக்கம் கொண்ட ஒரு செல்வந்தன் சாலையில் இறைந்து கிடக்கும் சில ரூபாய் நாணயங்களைப் பொறுக்கி எடுத்துத் தன் பையில் போட்டுக் கொள்கிறான். ஒரு சாதாரண மனிதன் தனது சட்டைப் பை ஓட்டையாக இருந்த காரணத்தால் சாலையில் கொட்டிவிட்ட நாணயங்களைத் திரும்பப் பெறத் தேடி வருகிறான். இரக்கமுள்ள செல்வந்தன்; எடுத்த நாணயங்களை அந்த எளியவனிடம் கொடுப்பதுதான் முறை; இரக்கமுள்ள செல்வந்தன் என நான் குறிப்பிட்டது உண்மையாக இருக்குமானால்!

பயணச் சீட்டு வாங்கிக்கொண்டு மூன்று பயணிகள், புகைவண்டியில் ஏறுகிறார்கள். புகைவண்டியில் கூட்டம் அதிகம். மூன்று பயணிகளுமே இடம் கிடைக்காமல் திகைத்து நிற்கிறார்கள். நாலு பேர் உட்காரக்கூடிய பலகை ஒன்றில் ஒரு பயணி கால்களைப் பரப்பிக்கொண்டு குறட்டை விட்டுத் தூங்குவதை மூவரும் காண்கிறார்கள். மூவரும் அந்தப் பயணியை எழுப்பி அய்யா! இது நாலு பேர் உட்காரக்கூடிய இடம்! இதில் நீங்கள் ஒருவர் ஆக்கிரமித்துக்கொண்டு தூங்குவது முறையல்ல! எழுந்து உட்காருங்கள்! நால்வரும் வசதியாகப் பயணம் செய்யலாம் என்கிறார்கள்.

பண்பாடு உள்ள பயணியாக இருந்தால் அந்த மூவர் சொன்னதை ஏற்றுக்கொண்டு; நால்வரும் நல்ல முறையில் பயணம் மேற்கொண்டிருப்பார்கள்!

இல்லையேல் நீங்கள் யார் என் தூக்கத்தைக் கலைக்க? இந்தப் பலகையில் முதலில் நான்தான் படுத்துறங்கினேன். அதனால் உங்களுக்கு இடமில்லை! என்று சீறி விழுந்திருக்கக்கூடும்!

உடன்பிறப்பே; இரக்க சுபாவமுள்ள செல்வந்தனாகவும் - எல்லோரும் வசதியாகப் பயணம் செய்யவேண்டும் என எண்ணுகிற பண்பாடுமிக்க பயணியாகவும் - இந்திய நாட்டில் ஆண்டாண்டு காலமாக கல்வித் துறையிலும் வேலைவாய்ப்புகளிலும் தேவைக்கு மேலாக அதிக வசதிகளைப் பெற்ற சமூகத்தினர்; தங்களை மாற்றிக்கொள்ளும் மனப்பான்மை படைத்தவர்களாக இருப்பின்; மண்டல் கமிஷனுக்காக இத்தனை எதிர்ப்புகள் கிளம்ப வேண்டிய அவசியமே இல்லை!

சாலையில் சிதறிக் கிடந்த பணம் சாமான்யனுக்குரியதாயினும்; அது தனது சட்டைப் பையைத்தான் நிரப்ப வேண்டுமெனக் கருதுகிற கனவானைப் போலவும்; நாலு பேர் உட்காரக் கூடிய புகைவண்டிப் பலகையில் மூவருக்கு இடம் தராமல் - தன்னொருவனுக்கு மட்டுமே முழுப் பலகையும் உரிமை என வாதிடுகிற பயணியைப் போலவும்; பல ஆண்டுகளாக சமுதாய அந்தஸ்து, பொருளாதார அந்தஸ்து, அதிகார அந்தஸ்து அனைத்தும் பெற்றுள்ள ஆதிக்கக்காரர்கள் சிலர்; தங்களின் எதிர்காலம் அஸ்தமித்துவிட்டதுபோலக் கற்பனை செய்துகொண்டு மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்திட முன்வந்துள்ள வி.பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசைக் கவிழ்க்கத் துடிக்கின்றனர்!

அவர்களது இந்தச் செயல் நியாயமா என்பதை அவர்கள் அடிக்கடி உச்சரிக்கும் தர்மம் என்பதற்குக் கட்டுப்பட்டு மனச்சாட்சிக்கு விரோதமின்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்போது தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் பல ஆண்டுக்காலமாக இட ஒதுக்கீடு முறை; கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இருந்து வருகிறது. இந்த மாநிலங்களில் உள்ள அளவு இட ஒதுக்கீடு சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மத்திய அரசு வேலைவாய்ப்புகளில் வேண்டுமென்று வலியுறுத்தாமல் - ஓரளவாவது; பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகிதம் வழங்கவும் - ஏற்கனவே தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு

இருபத்தி இரண்டரை சதவிகிதம் என்பது வெறும் ஏட்டளவில் இருப்பதை செயலளவில் கொண்டுவரவும் பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு மொரார்ஜி ஆட்சியில் சரண்சிங் அவர்களின் முயற்சியால் நியமிக்கப்பட்ட மண்டல் குழு பரிந்துரை செய்து அந்த அறிக்கையை 1980-இல் பிரதமர் இந்திரா காந்தியிடம் அளித்தது. பத்தாண்டு காலம் இந்திரா ஆட்சியிலும், ராஜீவ் காந்தி ஆட்சியிலும் இந்தியா முழுமையுமுள்ள பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கான உரிய வாய்ப்புக்களை வழங்கும் அந்த மண்டல் குழு பரிந்துரை குப்பைக் கூடையில் போடப்பட்டுக் கிடந்தது.

இப்போது தேசிய முன்னணி தனது தேர்தல் அறிக்கையில் வழங்கிய உறுதி மொழிப்படி பிரதமர் வி.பி. சிங் அவர்கள் மண்டல் குழு பரிந்துரையை நடைமுறைப்படுத்த முன் வந்துள்ளார்.

மண்டல் குழு அறிக்கையில் காணப்படும் ஒரே ஒரு புள்ளி விவரத்தை மட்டும் கவனித்தால் இதுவரை மத்திய அரசு வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவருக்கும், தாழ்த்தப்பட்டவருக்கும் எத்தகைய அநீதியும் வாய்ப்புக் குறைவும் இருந்து வந்துள்ளது என்பது புரியும்.

மத்திய அரசு நிதித் துறையில் கிளாஸ் 1 அதிகாரிகள் மொத்தம் 1008 பேர்! இருபத்திரண்டரை சதவிகிதம் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு எனில் 227 பேருக்கு பதவி கிடைத்திருக்க வேண்டும். ஆனால் 66 பேருக்கு மட்டுமே கிடைத்துள்ளது. 27 சதவிகிதம் அறிமுகப்படுத்தப்பட்டால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 272 இடம் கிடைத்திட வேண்டும். ஆனால் அவர்களுக்கு இப்போது கிடைத்தது ஒரே ஒரு இடம்தான்! 1008-இல் உயர் ஜாதியினருக்கு 941 இடம் இந்த ஒரு துறையிலே மட்டும் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

உடன்பிறப்பே; மண்டல் குழு தந்துள்ள இந்த ஒரு புள்ளிவிவரம் போதாதா?

ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோர் இன்று புலி வேஷம் போடுகிறார்கள் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியது எவ்வளவு பொருத்தமாக இப்போதும் இருக்கிறது பார்த்தாயா?

வாருங்கள் இளைஞர்களே! நாமெல்லோரும் ஒன்று கூடிப் பேசி; இளைஞர்களுக்கு இன்னும் சிறந்ததாக, பாதுகாப்பான

ஒரு எதிர்காலத்தை வழங்குவதற்கான உருப்படியான நடவடிக்கை எடுக்கவும், நியாயமான சமூக அமைப்பை நிலை நாட்டுவதற்குமான வழிவகைகளை வகுப்போம்!

என்று இந்தியப் பிரதமர் வி.பி. சிங் அவர்கள் உருக்கமாக விடுத்துள்ள அழைப்பை; யாரோ சில ஆதிக்கக்காரர்களாலும் அரசியல் ஆதாயம் தேடிகளாலும் தூண்டிவிடப்பட்டுள்ள மாணவச் செல்வங்கள் உதாசீனப்படுத்தாமல் - உண்மையை உணர்ந்து எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற மகாகவி பாரதியின் வாக்கை மெய்ப்பிக்கும் வகையில் சமூக நீதி வழங்கப்படும் தேசிய முன்னணி அரசின் முயற்சிக்கு இடையூறு செய்யாமல் - ஆதரவு தர முன்வருவதே முறையாகும்!

இல்லாவிட்டால்; ஏழையின் பணத்தையும் எடுத்துத் தன் பணம் என ஏப்பம்விட நினைக்கும் செல்வந்தனைப் போலவும், நாலு பேர் உட்காரக் கூடிய புகைவண்டிப் பெட்டியில் ஒருவன் மட்டுமே படுத்துறங்குவேன் என அடம்பிடிக்கும் பயணியைப் போலவுமே - ஆதிக்கம் செலுத்துவோரின் கைப்பாவைகளாக இந்திய இளைஞர்கள் ஆகிவிட்டார்கள் என்று எதிர்காலச் சரித்திரம் சபிக்கும்!

அந்த சாபத்திற்கு ஆளாக வேண்டாமென்று; உடன்பிறப்பே உன் மூலமாக இந்தியாவின் இளைய தலைமுறையைக் கேட்டுக் கொள்கிறேன்!

அன்புள்ள,

மு. க.

28-09-1990

1668. காற்றினிலே வரும் கீதம்!

உடன்பிறப்பே,

கல்லக்குடியில் டால்மியா சிமெண்டு தொழிற்சாலையின் பொன்விழா நடைபெற்றது செப்டம்பர் 30ஆம் நாள்!

இசைப் பேரறிஞர் பட்டம் பெற்ற கோகில கான எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் காற்றினிலே வரும் கீதம் என இசைத்திட, அதனைத் தொடர்ந்து விழா நிகழ்ச்சிகள் தொடங்கின!

தொடக்கத்திற்கு அடையாளமாக என்னை விளக்கேற்றி வைத்திடுமாறு பணித்தார்கள் அன்பின் மிகுதியால்; விழா நடத்தியோர்!

டால்மியா சிமெண்டு தொழிற்சாலையின் பொன்விழா விளக்கை ஏற்றி வைக்கும்போது என் நினைவுகள் மெல்ல அலை மோதின; மென் காற்றில் கடற்கரையில் தவழும் கடல் நீரைப்போல!

இந்த முறை மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள ஒன்றரை ஆண்டுக் காலத்தில் எட்டாவது வரை படித்து இன்னமும் திருமணமாகாமல் இருக்கிற ஏழைப் பெண்களுக்கு அரசு நிதி உதவி ஐயாயிர ரூபாய் என அறிவித்து இருபத்தி ஐயாயிரம் வீடுகளில் விளக்கேற்றி வைக்கும் வாய்ப்பு கிட்டியது பற்றியும் ஒரு பூரிப்பு! புளகாங்கிதம்!

அந்த விளக்குகளால் கிடைத்த மகிழ்ச்சியைப் போல அல்லாமல் - இந்தப் பொன் விழா விளக்கினை ஏற்றும்போது இனந்தெரியாத ஒரு பரவச உணர்வுடன் பழைய பசுமையான காட்சிகள். வீடியோ படக் காட்சி அளவுக்குத் தோன்றி - 16 எம்.எம். படக் காட்சியாக விரிந்து - 35 எம்.எம். எனும் நிலைபெற்று - இறுதியாக 70 எம்.எம். திரையகலத்திற்குப் பேருருக் கொண்டன!

போதாததற்கு என்னுடைய நீண்ட கால நண்பரும், காங்கிரஸ் இயக்கத் தமிழகத் தலைவர்களில் ஒருவரும், அரசியல் பண்பாடு உணர்ந்து பழகுபவருமான பழனியாண்டி எம்.பி. அவர்கள் எனக்கு

முன்னர் அந்த நிகழ்ச்சியில் பேசியபோது; அந்தத் தொழிற்சாலையில் 1947-ல் அவர் தொழிற்சங்கப் பணி தொடங்கியதையும் - தன்னால் மறக்க முடியாத ஆண்டுகளில் 1953ஆம் ஆண்டும் ஒன்று எனக் குறிப்பிட்டு - அந்த ஆண்டில்தான் இந்தக் கல்லக்குடி மண்ணில் கலைஞர் அவர்கள் தமிழ் மொழி காத்திட; புகைவண்டி நிலையத்திற்குச் சூட்டப்பட்டிருந்த டால்மியாபுரம் என்ற பெயரை மாற்றிடத் தண்டவாளத்தில் படுத்தார்; போராட்டத்திற்கு அவரை வழியனுப்பிட அன்பில் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த லால்குடி பொதுக்கூட்டத்திற்கு நான்தான் தலைமை வகித்து, வாழ்த்தி வழி அனுப்பி வைத்தேன் எனச் சுட்டிக் காட்டினார்.

புறப்படத் தயாராக நின்ற குதிரை; வேகமாகத் தட்டிவிடப்பட்டது போல; மெல்ல அசைந்து கொண்டிருந்த என் நினைவுகள் பறக்க ஆரம்பித்து விட்டன!

1953 ஜூலை - கல்லக்குடியில் போராட்டம்! டால்மியாபுரம் என்ற புகைவண்டி நிலையத்தை; கல்லக்குடி பழங்காநத்தம் என்று அந்த ஊரின் பெயராலேயே அழைக்க வேண்டுமென்று!

மாநிலக் காங்கிரஸ் அரசும், மத்தியக் காங்கிரஸ் அரசும் மறுத்து விட்டன! பெயருக்குரியவர்களுக்கே இல்லாத பிடிவாதம் அன்றைய காங்கிரஸ் அரசுக்கு!

சென்று வா தம்பி! வென்று வா! என கல்வெட்டுச் சொற்றொடரை உதிர்த்து அண்ணா அவர்கள் சிதம்பரம் கழக மாநாட்டில் எனக்கு வாழ்த்து கூறி வழியனுப்பி உரை நிகழ்த்தினார்!

தொடர்ந்து மயிலாடுதுறையில் மறைந்த என் உயிர் நண்பர் கடலூர் இளம்வழுதி முன்னிலையில் தம்பி கோ.சி. மணி தலைமையில் எனக்கு நடத்தப்பட்ட வழியனுப்புக் கூட்டத்தில் இறப்புலகுக்கே என்னை வழியனுப்பிட பளபளக்கும் பட்டாக் கத்தியுடன் பாய்ந்து வந்த ஒரு வாலிபர்! அண்மையில்தான் அவர் பழுத்த கிழமாகிக் காலமானார்! இறுதிக்காலத்தில் என்னுடன் நேசமாகப் பழகியவர்! நானும் அதை மனதில் வைத்துக் கொள்ளாமல் அவருக்கு உதவிகள் புரிந்ததை பொன்விழா நிகழ்ச்சியில் தம்பி கோ.சி. மணி எடுத்துக்காட்டிப் பேசினார்.

கல்லக்குடி போரில் என்னுடன் வரிசையாகத் தண்டவாளத்தில் படுத்து என்னுடன் ஆறு மாதம் திருச்சி சிறையில் இருந்த முல்லை சக்தி, மணப்பாறை கஸ்தூரிராஜ், உறையூர் குழந்தைவேலு,

மணப்பாறை குமாரவேலன் இவர்களையெல்லாம் ஒவ்வொருவராக காலத்தின் கரங்கள் பெயர்த்தெடுத்துக் கொண்டு போய்விட்டன! அந்த வரிசையில் நான் ஒருவன்தான் மிச்சமிருக்கிறேன்! அடுத்த அணிக்குத் தலைமையேற்ற என் நண்பன் கண்ணதாசக் கவிஞனும் இன்றில்லை! அந்தத் தோழனுக்குக் காரைக்குடியில் அரசின் சார்பில் நினைவு மண்டபம் கட்டிக் கொண்டிருக்கிறோம்! அந்தப் போராட்டத்தை வெளியில் இருந்து நடத்திய அண்ணன் சி.பி. சிற்றரசு மாளிகை எனும் பெயர் சூட்டும் பேறு எனக்குச் சில மாதங்களுக்கு முன்பு கிட்டியது! சிறையில் தொண்டர்க்குத் தொண்டராய் இருந்து பணி செய்த அருமை அண்ணன் காரைக்குடி இராம சுப்பையாவைக் காணும் போதெல்லாம் அன்புவெள்ளம் என் விழிகளில் குளமாகத் தேங்கி, அருவியாக வழியும் இன்றைக்கும்! அவர் வேறு யாருமல்ல; இயக்குநர் முத்துராமன் - இலட்சிய தாகம் கொண்ட வீரபாண்டியன் ஆகியோர்க்கு தந்தைதான்! அவரும் அன்று எம்முடன் இரு மாதங்கள் சிறையில் இருந்து, மீதி நாலு மாதம் எங்கள் ஐவரையும் தனியே விடுத்துச் செல்ல இயலாது கண்ணீர் வடித்துப் பிரிந்த தஞ்சை திருச்சி மாவட்டங்களின் கழக தளகர்த்தர்கள் மன்னை, அன்பில்! இன்னும் எத்தனையோ நினைவுகள்! எத்தனை இளம் தியாகிகள்! முதிர்ந்த வீரர்கள்!

தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்த போராட்ட நிகழ்ச்சியையும்; ரயில் எம்மை நோக்கி விரட்டப்பட்ட கொடுமையையும் - இங்கிருந்து சென்று திரும்பியுள்ள சிவகங்கை சேதுராசனும் - முருகுபாண்டியனும் தத்தம் பல குரல் பாண்டியத்தால் பாடிக் காட்டுவரே; அந்த இசையும் அந்தப் பொன்விழா நிகழ்ச்சியில் காதில் கேட்டது!

கல்லக்குடி கொண்ட... எனத் தொடங்கி விண்ணும் மண்ணும் அதிரப் பாடுவாரே - இளம்பிராயம் முதல் நம்முடன் இருக்கும் இசை முரசு அனிபா; அந்த கம்பீர முழக்கமும் என் நினைவில் அதிர்ந்தது.

போராட்டம் காலையில்! முதல் அணியினரான நாங்களும், இராம சுப்பையா அணியினரும் கைது செய்யப்படுகிறோம்! மாலையில் அரியலூர் சப் ஜெயிலில் மூன்று பேர் அடைக்கப்பட வேண்டிய கொட்டடியில் எட்டுப் பேர்! பத்துப் பேர்! அடைக்கப்படுகிறோம்! கள்ளச் சாராயக் கைதிகள் பலர் அந்த சப் ஜெயிலில் இருந்து வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு அந்தக் கொட்டடிகள் எமக்கு ஒதுக்கப்படுகின்றன! கொட்டடிக்குள்

இருக்க முடியவில்லை! அவ்வளவு துர்நாற்றம்! நெடியேறுகிறது; சாராயக் கைதிகள் கழித்த சிறுநீரின் வெள்ளம்; கொட்டடி முழுதும்! எங்கள் மூக்குகளை மட்டும் சிறைக் கம்பிகளுக்கு வெளியே நீட்டிக்கொண்டு நின்றுகொண்டே அரியலூர் சப் ஜெயிலில் உறங்க முயன்றோம்! முடியவில்லை! மறுநாள் புதிய மண்சட்டிகளில் மஞ்சள்நிறச் சோறு! தின்றால் வாந்தி வரும்! மாலையில் அரியலூர் நீதிமன்றத்தில் விசாரணை! ஆறுமாத தண்டனை! அங்கிருந்து அடாத மழையிலும் காற்றிலும் இரவோடு இரவாக திருச்சி சிறைச்சாலைக்கு லாரியில் கொண்டு செல்லப்படுகிறோம்! அகால நேரமென்பதால் சிறைக் கதவு சட்டப்படி திறக்கப்பட முடியாது என அதிகாரி மறுத்து விடுகிறார்! கொட்டும் மழையில், வாட்டும் குளிரில்; விடியும் வரையில் சிறைக்கு வெளியே பூமியே பாயாக! வானமே கூரையாக!

சிறையில் இருக்கும் மகனைப் பார்க்க அன்னை அஞ்சுகத்தாய் வருகிறார்! தொலைவில் இருந்துதான் பேச வேண்டும்; தொடக்கூடாது என சிறை அதிகாரி சீற்றமுடன் கட்டளையிடுகிறார்!

கலைவாணர் இரண்டு மூன்று முறை வந்து கண்டு செல்கிறார்!

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். வந்தார் – இனிய நண்பர் சிவாஜி வந்தார்!

ஆறுமாதக் கடுங்காவல் முடிந்து விடுதலையான நாளில் சிறை வாசலில் வரவேற்றிட கழகக் கண்மணிகளுடன் கலைவாணர் வந்து கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் உகுத்தார்!

சிறைமீண்ட நான்; சென்னைச் சிறையில் இருந்து விடுதலையான அண்ணாவையும், கழக முன்னோடிகளையும் வரவேற்க சென்னைக்கு ஓடி வருகிறேன்!

எழும்பூர் ரயில் நிலையத்தில் மகத்தான வரவேற்பு! கூட்டத்தின் அலைமோதலில் சிக்குண்ட என்னை நண்பர் எம்.ஜி.ஆர். தூக்கிக்கொண்டு; மக்கள் வெள்ளத்தைக் கடக்கிறார்!

திருக்குவளை மு. கருணாநிதி என்பதுதான் தி.மு.க. என புதிய விளக்கம் தருகிறார்; அன்று கூட்டத்தில் பேசிய எம்.ஜி.ஆர்! இது ஜனநாயக இயக்கம்! எனினும் என்பால் கொண்ட அன்பினால் அப்படிப் பேசுகிறார்!

அதன்பிறகு எத்தனையோ அரசியல் பிணக்குகள்! தனிப்பட்ட முறையில் எனக்கும் கழகத்திற்கும் எதிரான வகையில்கூட எண்ணிலடங்காத் தடவை அவரது ஆட்சியைப் பயன்படுத்தினார்! ஆனால் ஒன்று; அவரும் சரி; நானும் சரி; ஒருவர் மீது ஒருவர் கொண்ட நட்புக்கும் மரியாதைக்கும் என்றைக்கும் விடைகொடுத்து அனுப்பியதே இல்லை!

இத்தனை நினைவுகளும் டால்மியா சிமெண்டு பாக்டரி பொன்விழா மேடையில்! ஆம்; கல்லக்குடி மண்ணில்!

காற்றினிலே வரும் கீதம் என்று திருமதி எம்.எஸ். பாடினார்கள் அந்த விழாவில் என்றேனே; எனக்கு அப்போது காற்றினிலே வந்து, செவி புகுந்து, சிந்தை நுழைந்த கீதம் எது தெரியுமா?

பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் (1965-ல் மொழிப் போரில்) என்னை சந்தித்து விட்டு அன்று மாலை நெல்லையில் நடைபெற்ற கூட்டத்தில் அண்ணா பேசினாரே; தம்பி கருணாநிதி சிறையிருக்கும் பாளையங்கோட்டை எனக்கு யாத்திரை ஸ்தலம் என்று - அதுவும்; பின்னர் என் பிறந்த நாள் விழாவில் சொன்னாரே அண்ணா - தண்டவாளத்தில் தலை வைத்துப் படு என்றாலும், அமைச்சர் பதவி ஏற்றுக்கொள் என்றாலும், இரண்டையும் ஒன்றாகக் கருதுபவன் என் தம்பி கருணாநிதி என்று; அந்த இதய உணர்வில் எழுந்த வரிகள்தான்; அண்ணா என் சிந்தையில் என்றும் உலவவிடும்; காற்றில் வரும் கீதமாகும்!

உடன்பிறப்பே; கல்லக்குடியில் டால்மியா தொழிற்சாலை பொன் விழா! விளக்கேற்றிய போதும், விரிவுரையாற்றியவர்கள் குறிப்பிட்ட போதும்; என்னுள் எழுந்த நினைவுகள்!

அவற்றை இந்த மடலில் பிடித்து நிறுத்தியிருக்கிறேன்! இல்லை; கிறுக்கியிருக்கிறேன்! நினைவு அலைகள் முழுவதையும் நிறைத்திடுவதற்கு நேரமும், கடிதமும் இடம் தரவில்லையே; என் செய்வது!

அன்புள்ள,

மு. க.

02-10-1990

1669. பாவேந்தன் கேள்விக்குப் பதில் என்ன?

உடன்பிறப்பே,

இது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் நூற்றாண்டு விழா கொண்டாடும் ஆண்டல்லவோ; அந்த மனித நேயப்பாவலன் எழுதிய கவிதை வரிகளை எண்ணிக் கொள்கிறேன். ஆம்; தனக்கு வரும் நன்மையை உணராமல்; அந்த நன்மையைத் தந்திட முன் வருவோரை நசுக்கிட முனையும் மனிதர்களும் உள்ளனரே இந்த நாட்டில் என்பதைக் காணும் பொழுதும் தங்களின் காலை விட்டு ஆழம் பார்க்கும் குள்ளநரிக் குணம் படைத்தோரின் வேடத்தைப் புரிந்து கொள்ளாமல் அவர்களுக்குக் கொத்தடிமைகளாகக் கிடக்கும் அந்த மனிதர்களின் பரிதாப நிலையை நினைக்கும் பொழுதும் என்னைப் போன்றவர்களுக்குப் பாவேந்தனின் நெஞ்சுருக்கும் அந்தக் கவிதை வரிகளைக் கண்கலங்க உச்சரிக்காமல் இருக்க முடியாது!

பத்ரகாளிக்குப் பலியிடப்போகும் ஆட்டுக்கு மாலை போட்டு மஞ்சள் தெளிக்கும் போது; சற்று நேரத்தில் சாகப் போகிறோம் என்று தெரியாமல்தானே அந்த ஆடு; தன் கழுத்தில் தொங்கும் மாலையின் மலர்களைத் தின்று மகிழ்ந்து கொண்டிருக்கிறது!

அடிமாடுகள்; கூட்டமாக சாலைகளில் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு, போகும் காட்சிகளைக் கண்டிருக்கிறோம் - சில விநாடிகளில் அவைகளின் தலைகள் வெட்டுண்டு விழப்போகிற செய்தியை அவைகள் அறியாமல்தானே ஒன்றையொன்று முட்டி மோதிக் கொண்டு செல்கின்றன!

கார்ப்பரேஷன், முனிசிபாலிட்டிகளில் பிடிக்கப்படும் நாய்கள்; அந்த வண்டிகளில் வாலாட்டிக் கொண்டு உற்சாகமாகப் பயணம் செல்லும்போது; இன்னும் கொஞ்ச நேரத்தில் மூச்சு முட்டும் விஷக்காற்றுடன் தமது உயிர் கலக்கப் போகிறது என்பது தெரியாதுதானே!

அந்த ஆடுகள் போல் - அடிமாடுகள் போல் - அநாதை நாய்களைப் போல் - தங்களுக்கு வரும் எதிர்காலத் தீமையை உணராமலேயே அடித்தட்டு மனிதர்கள்; லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் இந்த நாற்பதாண்டு காலச் சுதந்திர மண்ணில் மேலும் மேலும் அழுந்திக் கொண்டிருக்கிறார்களே; தாங்கள் அழுத்தப்படுவது தெரியாமல் - அழுத்துகிற கரங்களை ஆண்டவனின் கரங்கள் என பூஜித்துக் கொண்டிருக்கிறார்களே; என்பதை நினைத்துப் பார்க்கிறேன்! பாவேந்தனின் அந்தக் கவிதை வரிகள் என் விழிகளைத் தடாகமாக்குகின்றன!

பள்ளந்தனில் விழும் பிள்ளைச் பூச்சியே,
தலையைத் தாழ்த்து! முகத்தைத் தாழ்த்து!
தோளையும் உதட்டையும் தொங்கவை! என
உளத்தை, உடலை, உயிரைச் சுருக்கு!
நக்கிக்குடி! அதை நல்லதென்று சொல்!
தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்த நாயினும்
தாழ்ந்து போ! குனிந்து தரையைக் கௌவி
ஆமையைப் போல் அடங்கி ஒடுங்கு!
பொட்டுப் பூச்சியே, புன்மைத் தேரையே,
அழு! இனி! அஞ்சு! குனி! பிதற்று!

தன்னையுணராமல்; தருக்கர்களுக்கு அடங்கி ஒடுங்கி, தர்பாரில் நடைபாவாடை விரித்தும், ஆலவட்டம் தூக்கியும், பராக் கூறியும் வயிறு வளர்த்துக் கொண்டிருக்கிற நடைபிணமாம் மனித வடிவைப் பார்த்துத்தான் புரட்சிக்கவிஞன் இவ்வாறு ஏசுகிறான்! ஏச்சா அது? இல்லை! இல்லை! இல்லவே இல்லை! ஏக்கப் பெருமூச்சைப் பின்னணியாகக் கொண்டு கிளம்பும் வேதனைப் பாட்டு! விசார கீதம்! வெடிக்கும் இதயத்தின் சிதறல்!

தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்த நாயினும்
தாழ்ந்து போ! குனிந்து தரையைக் கௌவி
ஆமையைப் போல் அடங்கி ஒடுங்கு!

உடன்பிறப்பே, இட ஒதுக்கீடு எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவாகக் கத்தி தூக்குவோர், கம்பு சுழற்றுவோர், கலாம் விளைப்போர், காந்தி பிறந்த நாளில் அகிம்சா தத்துவத்திற்கே எரியூட்டுவோர் - இவரெல்லாம் யார்? நாடாளுமன்ற உறுப்பினர்களையும்

சட்டமன்ற உறுப்பினர்களையும் கொன்று குவியுங்கள் என்ற வெறிப் பேச்சுக்குத் தலையசைத்து ஆயுதம் தூக்கி அராஜகமும் நடத்துவோர் யார்? தாழ்ந்து, தாழ்ந்து, நாயினும் கீழாய்த், தாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான்! ஆமை போல் அடங்கி ஒடுங்கிக் கிடப்போர்தான்! ஆயிரமாயிரம் ஆண்டுகாலம் அவர்களை அடிமைத் தொழும்பர்களாக்கி அவர்களின் தலைமீது ஏறி சவாரி செய்யும் எஜமானர்களுக்கு - இருக்கின்ற வாய்ப்புகள் அனைத்தையும் விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு, தொடர்ந்து பணி செய்து கிடப்பதே எம் கடன் என்று, அவர்கள் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்களே என் செய்வது! அய்யகோ; அவர்கள் யார் என்று அவர்கள் உணராமல் இருக்கிறார்களே! உணர்த்தினாலும் உணரமறுக்கிறார்களே! சமூக முன்னேற்றம் சமூக அந்தஸ்து என்றால் அவை எந்தக் கடையில் விற்கும்? வாங்கி உண்டால் உயிர் போய் விடுமாமே; உண்மையா? என வினவுகிறார்களே!

ஆமாம் உடன்பிறப்பே; அந்த வட்டாரத்தில் ஒரு தியாகராயர் உதிக்காத காரணத்தால் - ஒரு அண்ணா தோன்றாத காரணத்தால் - திராவிட இயக்கத்தின் உயிர்நாடி போன்ற இலட்சியம் பரவிடவும்; ஏன்; வேரூன்றவும் கூட வாய்ப்பில்லாது போயிற்று!

அதனால்தான் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை திரும்பப் பெறும் வரையில் உண்ணாவிரதம் இருப்பேன் என்று காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான வசந்த சாத்தே கடுங்குரல் எழுப்புகிறார்; டெல்லியில் என்றாலும் - இங்கேயுள்ள காங்கிரஸ்காரர்கள் கொஞ்சம் அடக்கி வாசிக்கிறார்கள்!

மண்டல் கமிஷன் பரிந்துரை நிறைவேற்றத்துக்கு எதிராக ராஜீவ் காந்தி டெல்லியில் மணிக் கணக்கில் பேச முடிகிறது! இங்கு வந்தால் வாயை மூடிக் கொள்ள வேண்டியிருக்கிறது!

1951-ல் பெரியாரும் அண்ணாவும் தமிழகத்தில் கொந்தளிக்கும் கடல்களாயினர்! எதற்காக? 1921 முதல் நீதிக்கட்சி ஆட்சியில் அறிமுகமாகி வளர்ந்து வந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு நீதிமன்றங்கள் வேட்டு வைத்துவிட்ட காரணத்தால்!

சென்னை மாகாணத்தில் உருவாகியுள்ள நிலைகளைக் கவனித்து; இந்த அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது எனப் பாராளுமன்றத்தில் பிரதமர் நேரு அறிவிக்க

வேண்டிய அளவுக்கு இங்கே திராவிட இயக்கம் களத்தில் இறங்கியிருந்தது என்பது வரலாறு! இந்த வரலாற்றை வாய்ப்பந்தல் வீரர்கள் (?) மறைத்துவிட முடியாது!

இந்த அடிப்படை உணர்வுகள் வளர்க்கப்படாத வறண்ட பகுதியான வடக்கு திக்கில் வன்முறைகள் மூலம் - தமக்கு வரும் நலவாழ்வைத் தடுத்து தமக்குத் தாமே அழியும் ஒரு கூட்டம்! அந்தோ; பரிதாபம்; தன்னைத்தானே உணராத சமுதாயம்!

அதனால்தானே உடன்பிறப்பே; அது பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக இருக்கிறது!

ஏற்கெனவே மத்திய அரசில் தாழ்த்தப்பட்டவருக்கு இருபத்தி இரண்டரை சதவிகிதம் இட ஒதுக்கீடு இருந்தும் அது சரியாகச் செயல்படவில்லை! இப்போது அந்த இட ஒதுக்கீட்டையும் அகற்றிட வேண்டுமென தீர்மானமே நிறைவேற்றியுள்ளனர்! யார் அவர்கள்? உயர்ஜாதி அதிகாரிகள்!

இந்த ஆதிக்க உணர்வை, அராஜகச் சேட்டையை அனுமதித்துக் கொண்டே போனால் - உணர்வு வறண்டு கிடக்கும் வடக்கின் பாதிப்பு; தெற்கு நோக்கியும் பரவக் கூடும்!

இல்லாததைப் பெற முடியாமல் வடக்கில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் இருளில் மூழ்கிவிடுவர்!

இங்கோ; இருப்பதையும் இழந்திடும் நிலையில் தெற்கில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் திகைத்து நிற்பர்!

எனவேதான்; ஏக்கக் குரலில் பாடிய பாவேந்தனின் பாட்டின்; இறுதிப் பகுதியை நீயும் நானும் மட்டுமல்ல - இங்குள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், சாதாரண, சாமானிய, நடுத்தர மக்கள் ஆழமாக மனதில் பதிய வைத்துக் கொண்டு கிளர்ந்து எழுந்திடல் வேண்டும்!

அழு, இளி, அஞ்சு, குனி, பிதற்று என ஏசிய அந்த எழுச்சிக் கவிஞன்; இதோ எரிமலையாகிறான்-

மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று!
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!

விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து லோகத்தை!

இந்தக் கவிதை வரிகளை; புரட்சிக் கவிஞன் நமக்கிட்ட புதிய ஆணையாகக் கருதுவோம்!

நாசம்; நயமிகு மொழி பேசி வரும்! நரித் தந்திரம் புரிந்து வரும்! நாம்; எச்சரிக்கையாக இருப்போம்! இல்லையேல்; இந்தச் சமுதாயத்திற்காக பெரியாரும் அண்ணாவும் பட்ட பாடுகள் பட்டுப் போய்விடும்! நாம் நல்கிடும் உழைப்பு பயனற்றதாகி விடும்!

நம் முன்னால் உள்ள கேள்வி இதுதான்!

ஆமையைப் போல் அடங்கி

ஒடுங்குவதா?

அல்லது

தோளை உயர்த்திச் சுடர் முகம் தூக்குவதா?

அன்புள்ள,

மு. க.

04-10-1990

1670. உடுமலையார் எழுதினாரே ஒரு பாட்டு!

உடன்பிறப்பே,

பிரதமர் வி.பி. சிங் அவசரப்பட்டுத் திடீர் என்று மண்டல் கமிஷன் பரிந்துரையை நடைமுறைப்படுத்த அறிவித்து விட்டாராம்!

இந்தியாவில் உள்ள எல்லாக் கட்சிகளையும் கலந்து பேசி பிறகு அறிவித்திருக்க வேண்டுமாம்!

அதனால்தான் அதை வரவேற்க முடியாமல் வி.பி. சிங் ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்கிறாராம்!

இந்த வாதங்களை எடுத்து வைத்து மறைமுகமாக மண்டல் கமிஷன் மீது தனக்குள்ள வெறுப்பை; அதுவும் அடிவயிற்றிலிருந்து கிளம்புகிற வெறுப்பை - ராஜீவ் காந்தியும் வெளியிட்டு அறிக்கை விடுத்து விட்டார்! அவரை மனத்தால் மதிக்காவிட்டாலும்; அரசியல் ஆதாயத்திற்காக ஆதரிப்பது போல நடித்துக் கொண்டிருக்கும் இங்குள்ள அவரது தோழமைக் கட்சியின் தலைவியும் அதேபோல் அறிவித்து விட்டார்!

இல்லாவிட்டால் இடஒதுக்கீடு எதிர்ப்புக்கு தலைமை வகிக்கும் இந்தியன் எக்ஸ்பிரஸ் அந்தக் கருத்துக்களை இவ்வளவு பெரியதாக வெளியிட முன்வருமா?

1978-ஆம் ஆண்டு சரண்சிங் அவர்களின் முயற்சியினால் மொரார்ஜி ஆட்சியில் மண்டல் குழு அமைக்கப்பட்டது!

1980-ஆம் ஆண்டு மொரார்ஜி ஆட்சியும் போய் - சரண்சிங் ஆட்சியும் போய் - இந்திரா காந்தி அம்மையார் ஆட்சி வந்தது! மண்டல் குழு; தனது அறிக்கையைத் தயாரித்து முடித்து பிரதமர் இந்திராவிடம் தந்தது!

அந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் வைக்க வேண்டுமென்பதற்கே பெரும் கூப்பாடு போட வேண்டியிருந்தது!

ஒரு வழியாக 1982-ஆம் ஆண்டு மண்டல் கமிஷன் அறிக்கை பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டது!

அந்த அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்று எட்டாண்டு காலமாக எத்தனையோ போராட்டங்கள்!

அதாவது இந்திரா காந்தி ஆட்சியில் - ராஜீவ் காந்தி ஆட்சியில் - சுமார் பத்து ஆண்டுகள்; இந்த மண்டல் கமிஷன் பற்றி கவலைப்படாமல் - அதைப்பற்றிச் சிந்திக்காமல் - பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் எழுப்பிய குரலையெல்லாம் வறட்டுக் கூச்சல் எனப் புறக்கணித்த பெருந்தகையாளர்கள் (?) பத்தாண்டு கால அவகாசத்திற்குப் பிறகு; இன்று தேசிய முன்னணி அரசு நடைமுறைப்படுத்த முனைந்துள்ள முயற்சியை அவசர முடிவு என அறிவிப்பது என்ன வாதமோ? பிடிவாதமோ? அல்லது நாட்டு மக்களை முட்டாள்கள் எனக் கருதும் முடக்கு வாதமோ?

இன்னும் பல பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் விடுபட்டுப் போய் விட்டனவாம்! அவற்றையும் சேர்த்துக் கொண்ட பிறகே; மத்திய அரசில் இந்த இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்திருக்க வேண்டுமாம்!

பல மாநில அரசுகளில் இப்போது இட ஒதுக்கீடு முறை இருக்கிறது! எல்லாப் பிரிவினரைப் பற்றியும் முற்ற முடிந்த கணக்கினை எடுத்த பிறகே இந்த இட ஒதுக்கீடு முறை மாநிலங்களில் அமல்படுத்தப்படவில்லை!

நமது மாநிலத்தையே எடுத்துக் கொண்டால் 1921 முதல் இதுவரையில் இட ஒதுக்கீடு முறையில் எத்தனையோ வளர்ச்சிகள், மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன!

நான் முதல்வராக 1969 முதல் 1976 வரையில் இருந்தபோதுதான் உருது பேசுகிற முஸ்லிம்களையும், கொங்கு வேளாளர்களையும் இன்னும் சில வகுப்பினர்களையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கப்பட்டது! பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சியிலும் சில புதிய சமூகத்தினர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர்!

மாநில அளவில் செய்யப்பட்ட இத்திருத்தங்கள்; தேவைப் பட்டால்; கோரிக்கைகளின் நியாயத்தின் அடிப்படையில்

மத்திய அரசின் இட ஒதுக்கீட்டிலும் அவ்வப்போது செய்து கொள்ளலாம்!

எனவே; இன்னும் சில பிரிவினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவில்லை என்று காரணம் காட்டி, பத்தாண்டு காலமாக ஊறுகாய் போடப்பட்டு ஊசிப்போகும் நிலையில் இருந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அறவே அழுகிப்போக விட வேண்டுமென்பது ஆதிக்கத்தை இழக்க விரும்பாத குள்ளநரித் தந்திரமேயாகும்!

உடன்பிறப்பே; இன்னொரு வேடிக்கை தெரியுமா? ராஜீவ் காந்தி கூறியதாக ஏடுகளில் வெளிவந்துள்ளது!

மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி இட ஒதுக்கீடு செய்ய சில மாநிலங்கள் தயாராக இல்லையாம்! அந்த மாநில முதல்வர்கள் அதனை அமல்படுத்த மாட்டார்களாம்!

மத்திய அரசு மற்றும் மத்திய அரசு பொது நிறுவனங்களில் 27 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு என்பதையும் இருபத்திரண்டரை சதவிகிதம் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு இட ஒதுக்கீடு என்பதையும்; மத்திய அரசுதான் அமல்படுத்த வேண்டுமே தவிர; இதனை அமல்படுத்த மாட்டோம் என்று மாநில அரசுகள் எப்படிச் சொல்ல முடியும்?

பிற்படுத்தப்பட்டவர்களுக்கே பொருளாதார உச்சவரம்பு; முன்பு ஒன்பதாயிர ரூபாய் என்று எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தாரே; அந்த அபாயகரமான ஆணை! அந்த ஆணை மீண்டும் வரவேண்டுமாம்!

எம்.ஜி.ஆர். பிறப்பித்த அந்த ஆணையை எதிர்த்து தி.மு.க., தி.க., மட்டுமல்ல - காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்டு கட்சிகளிலேயிருந்த பிற்படுத்தப்பட்ட சமூகத் தலைவர்கள்கூட ஒரே மேடையில் எதிர்ப்பு முழக்கம் செய்ததையும்; அந்தப் பெரும் எதிர்ப்பைக் கண்டுதான் அ.தி.மு.க. ஆட்சியில் அந்த ஆணை திரும்பப் பெறப்பட்டது என்பதையும்; வாய்ப்பந்தல்கள் மறைக்கலாம்! வரலாறு மறைக்காது! அப்போதெல்லாம் அரசியலுக்கே வராதவர்களுக்கு இதன் முழு விபரம் புரியாது!

உடன்பிறப்பே; ஒரு உண்மை தெளிவாகி விட்டது - ராஜீவ் காந்தியும், அவரது தமிழகத் தோழமைக் கட்சியின் தலைவியும்;

பத்தாண்டு காலம் கிடப்பில் போடப்பட்ட மண்டல் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற எந்த முயற்சியும் எடுக்காமல்; இப்போது அதற்கான முயற்சி முகிழ்ந்தவுடன்; பிரதமர் வி.பி. சிங் அவர்கள் பதவி விலக வேண்டுமென ஓங்கிக் கூச்சலிடுவதைக் காணும்போது; பராசக்தி படத்தில் குணசேகரன் பாடுகிற உடுமலை நாராயணக் கவிராயரின் பாடல் நினைவுக்கு வந்து தீருகிறது!

ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக்கோனே!

காரியத்தில் கண்வையடா தாண்டவக்கோனே

அன்புள்ள,

மு. க.

06-10-1990

1671. அரசியல் அற்பத்தனம்!

உடன்பிறப்பே,

மேலவையென ஒன்று தேவையா? என்ற ஐயப்பாடு எழுந்தபோது அறிஞர் அண்ணா அவர்கள் அவையிலேயே சொன்னார்; அமெரிக்க அதிபர் வாஷிங்டன் - கீழ் சபையை சூடான தேநீர் உள்ள கோப்பைக்கும்; மேல்சபை என்பதை அந்த சூட்டை ஆறவைக்கும் சாசருக்கும் ஒப்பிட்டார் - அதே உவமையைத்தான் இங்குள்ள சட்டசபைக்கும் மேல்சபைக்கும் நானும் பயன்படுத்த விரும்புகிறேன் என்பதற்காக!

அண்ணா அவர்கள் கூறிய அந்த வாசகத்தை 14.5.86 அன்று மேலவையைக் கலைக்கும் தீர்மானத்தை அ.தி.மு.க. ஆட்சி கொண்டு வந்தபோது நான் நினைவூட்டத் தவறவில்லை. நான் மேலவை உறுப்பினராக - மேலவையில் எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்து விட்டேன் என்பதற்காகவும்; உள்ளாட்சி மன்றங்களின் சார்பில் மேலவை உறுப்பினர்களாக கழகத்தினர் பெரும்பாலோர் தேர்ந்தெடுக்கப்படக் கூடும் என்பதற்காகவும் - அந்த அவை கலைக்கப்பட்டது என்பது அனைவருக்கும் தெரியும்.

கலைக்கப்பட்டபோது அதற்குரிய எந்த விதிமுறைகளாவது கடைப் பிடிக்கப்பட்டதா? இல்லை! இல்லவே இல்லை!

"Business Rules and

Secretariat Instructions"

என்ற நூலில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறபடி; ஒரு அவையைக் கலைப்பதென்றால் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தக் கலைப்புப் பிரச்சினை விவாதிக்கப்படவே இல்லை!

அமைச்சரவை கூட்டப்படாவிட்டாலும் கோப்பு தயாரித்து அதை அமைச்சர்களுக்கு சுற்றோட்டத்தில் அனுப்பி அவர்களின் கையொப்பம் பெற்றிருக்க வேண்டும்!

அவ்வாறு ஒரு கோப்பு அனுப்பப்படவே இல்லை!

வேடிக்கை என்னவென்றால் அதுபோல ஒரு கோப்பு தயாரிக்கப்படவே இல்லை! விதிமுறைப்படி அந்தக் கோப்பு கவர்னரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.

கோப்பே இல்லாதபோது கவர்னருக்கு எப்படி அனுப்ப முடியும்?

அது குறித்து கவர்னர் எதுவும் கேட்டதாக தெரியவில்லை?

அவர் வாயைத்தான் அடைக்க வேண்டிய விதத்தில் அடைத்தாயிற்றே?

மேலவை கலைத்தது பற்றி என்னதான் விதிமுறை பின்பற்றப்பட்டது என்று தேடிப் பார்த்தால் - 9.5.1986-ல் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள்; பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்; அவ்வளவுதான்!

அன்புள்ள ராஜீவ் காந்தி அவர்களே! நான் தங்களை டெல்லியில் சந்தித்தபோது தமிழக மேலவை கலைப்பு சம்பந்தமாக இருவரும் பேசினோம். அதன்படி நான் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளேன். அதுபற்றி காங்கிரஸ் தலைவர் உ. சுப்பிரமணியம் அவர்களிடம் பேசினேன். உங்களிடமிருந்து தகவல் வந்தால் மேலவைக் கலைப்பை அவர் ஆதரிப்பதாக கூறியுள்ளார். எனவே தாங்கள் அவருக்கு உடனே தகவல் கொடுத்து மேலவை கலைப்பை ஆதரிக்கச் சொல்ல வேண்டுகிறேன்.

இது முதலமைச்சர் பிரதமருக்கு எழுதிய கடிதமா?

அல்லது அ.தி.மு.க. தலைவர்; இந்திரா காங்கிரஸ் தலைவருக்கு எழுதிய கடிதமா?

இதனை நடுநிலையாளர்கள்தான் சிந்திக்க வேண்டும்.

உடன்பிறப்பே,

மேலவையைக் கலைப்பதற்கான கோப்பே இந்தக் கடிதம்தான்!

இதைத் தவிர எந்தக் கோப்பும் இல்லை! அமைச்சரவை விவாதிக்கவில்லை! அமைச்சர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை! முறைப்படி கவர்னருக்கு அறிவித்து ஒப்புதல் பெறவில்லை!

9.5.1986-ல் பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஒரு கடிதத்தை எழுதிவிட்டு 14.5.1986-ல் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து மேலவையைக் கலைத்து விட்டார்கள்!

தீர்மானம் நிறைவேறிய பிறகுதான் அந்தத் தீர்மானத்தை டெல்லிக்கு அனுப்பி பாராளுமன்றத்தின் ஒப்புதலை பெற கோப்பு தயாராகிறது!

உடன்பிறப்பே, 1989-ல் மீண்டும் கழக ஆட்சி வந்தவுடன் 1989 பிப்ரவரி 20-ல் மீண்டும் மேலவை கொண்டுவரப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை விதிமுறைகள் அனைத்தையும் மேற்கொண்டு பேரவையில் கொண்டு வந்தோம்!

பிரதமர் ராஜீவை சந்திக்க நான் டெல்லி சென்றபோது; விதிமுறைகள் மதிக்காமல் மேலவை கலைக்கப்பட்ட விபரங்களை எடுத்துச் சொல்லி - ஆதாரங்களைக் காட்டி; மீண்டும் மேலவை வேண்டுமென்ற தீர்மானம் பேரவையில் முறைப்படி நிறைவேற்றப்பட்டிருப்பதையும் எடுத்துக் கூறியபோது அவரும் நான் கூறியது அனைத்தையும் ஏற்றுக்கொண்டார்.

உடனடியாக பாராளுமன்றத்தில் மேலவையை மீண்டும் கொண்டு வரும் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புவதாக வாக்களித்தார். மனச்சாட்சிக்கு மதிப்பளிப்பவராக இருந்தால் இந்த உண்மையை மறுக்க மாட்டார்!

அது மட்டுமல்ல; அவரது காங்கிரஸ் கட்சியின் தேர்தலை உறுதிமொழிகளில் ஒன்று - மீண்டும் மேலவையைக் கொண்டு வருவது என்பதாகும்!

ஆனால் ராஜீவ் என்னிடம் வழங்கிய வாக்குறுதியை அவர் ஆட்சியில் இருந்த அந்த ஓராண்டுக் காலமும் நிறைவேற்ற முன்வரவில்லை!

இப்போது தேசிய முன்னணி ஆட்சியில் அதனை நிறைவேற்றிட மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் பாராளுமன்றத்தில் வேண்டும்!

எனினும் காங்கிரஸ் கட்சி; தனக்கு உடன்பாடான ஒரு கொள்கைக்கு ஆதரவளிக்க முன் வராமல்; மீண்டும் மேலவை என்ற மசோதா வராமல் - என்னென்ன இடையூறு செய்ய வேண்டுமோ; அத்தனையும் செய்து கொண்டிருக்கிறது!

ஆந்திர மாநிலத்திலும் கலைக்கப்பட்ட மேலவையை மீண்டும் கொண்டுவர - திரு. சென்னாரெட்டி ஆட்சியில் தீர்மானம் போட்டு அனுப்பியுள்ளார்கள்!

நமது மாநிலத்திலும், ஆந்திர மாநிலத்திலும் மேலவை கொண்டு வரும் மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவே காங்கிரஸ் கட்சியினர் இடம் தரவில்லை!

எனவே மசோதா பல மாதங்களாக முடங்கிக் கிடக்கிறது. அதுசரி; காங்கிரஸ் மாநிலமான ஆந்திர மாநில அரசின் தீர்மானத்தைக்கூட வரவிடாமல் தடுப்பதற்கு என்ன காரணம் எனக் கேட்கத் தோன்றும்!

திரு. சென்னாரெட்டிக்கு விரோதமான காங்கிரஸ் எம்.பிக்கள்; ராஜீவ் காந்தியின் காதைக் கடித்து - அவரைத் தடுத்து விடுகிறார்களாம்! ராஜீவுக்கேகூட சென்னாரெட்டியென்றால் கொஞ்சம் கசப்புதான்! ஆந்திர மேலவை விவகாரம் இப்போதுதான்!

ஆனால் சென்ற ஆண்டே விதிமுறைப்படி நாம் நிறைவேற்றி ராஜீவ் ஆட்சியில் அனுப்பி வைத்த தீர்மானத்தை ராஜீவ் ஆட்சி ஏன் நிறைவேற்றித் தரவில்லை?

விதிமுறைக்குப் புறம்பாக அ.தி.மு.க. ஆட்சியில் அனுப்பப்பட்ட கலைப்புத் தீர்மானத்தை ராஜீவ் ஆட்சி ஏற்றுக் கொண்டதற்கும் - விதிமுறைகளை மதித்து நாம் 1989 பிப்ரவரியில் அனுப்பி வைத்த தீர்மானத்தை ராஜீவ் காந்தி ஏற்றுக் கொள்ளாததற்கும் என்னதான் காரணம்?

அரசியல் அற்பத்தனம்!

என்பதைத் தவிர வேறு பதில் எதுவாக இருக்க முடியும்!

அன்புள்ள,

மு. க.

07-10-1990

1672. ஆரியப் படை கடந்தார்!

உடன்பிறப்பே,

ஓரங்க நாடகம், பாடல், கட்டுரை, கடிதம் எல்லாவற்றையுமே கதம்ப மாலையாக்கி; இன்று உனக்கு தரப்போகிறேன்! படிக்க-ரசிக்க-தொடர்புடையோர் சிந்திக்க!

டாண்! டாண்! டாண்! மணி அடிக்கிறது! ஆர்மோனியக்காரர்; வாத்தியக் கட்டையை அழுத்துகிறார்! ஆர்மோனியம் அலறுகிறது! இடியோசையுடன் தபேலா அதிர்கிறது! வெளிச்சத்தில் கோரஸ் பாட்டு முழங்குகிறது!

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்

உயிர்நீப்பர் மானம் வரின்

என்ற திருக்குறளைத் தொகையறாவாகக் கொண்ட கம்பீரமான கோரஸ் பாடல்! பிறகு பாடல்!

மானம் போனால் வாழ மாட்டான் தமிழன்!
என ஜென்மம் எடுக்க மாட்டான் தமிழன்!
கூனன்போல வளைய மாட்டான் தமிழன்!
குட்டக் குட்டக் குனிய மாட்டான் தமிழன்!
கோரஸ் முடிந்ததும் திரை விலகுகிறது, ஓரங்க
நாடகத்தின் முதற் காட்சி!
கூடத்திலே ஆடும் ஊஞ்சலிலே அமர்ந்திருக்கிறார்
ஆரியப்படை கடந்தார்!
பின்னணியில் ஒலி கேட்கிறது! என்ன ஒலி அது?
ஆரியப்படை கடந்தார் ஆடுகிறார் ஊஞ்சலில்
ஆடும் ஊஞ்சலைப் போலவே அவர் உள்ளமும்
அலைபாய்ந்து கொண்டிருக்கிறது
ஒலி முழக்கம் நிற்கிறது!

அப்போது வாடி வதங்கி உடல் தளர்ந்த ஓர் உருவினர் அங்கே வருகிறார்.

வாருமய்யா! முத்துதிரும் வாயரே! என்ன இந்தப் பக்கம்கூட காற்றடிக்கிறது?

சிலை திறப்பு விழாவில் சிலம்பப் பயிற்சி அளிக்கச் சென்றிருந்தேன். திரும்பும் வழியில் இந்த ஆரியப்படை கடந்தாரின் ஞாபகம் வந்தது. சரியென்று வந்தேன்!

ஓகோ! பரவாயில்லை; போகும் வழியிலாவது என் நினைவு வந்ததே; நன்றி! எல்லா வேலைகளும் பார்த்து முடித்துவிட்டீரா?

உம்! என்னமோ எலும்பு உடையத்தான் உழைக்கிறேன். பயன்தான் பூஜ்யம்!

என்னய்யா பயன் இல்லை என்கிறீர்? அவ்விடத்தில் அடிமையாக இருப்பதே - நாம் செய்த பூர்வஜென்ம புண்யம் அய்யா!

அது என்னமோ உண்மைதான்! அந்தக் காலத்தில் கல்லாகப் பிறக்கக் கடவாய்! கோழியாக மாறிக் கூவக் கடவாய்! பாம்பாக மாறி படம் எடுக்கக் கடவாய்! என்று முனிவர்கள் சாபம் இட்டது போல்; நமக்கும் இப்படி ஒரு சாபம்! அதுதான் நாம் செய்த பூர்வஜென்ம புண்யம்!

என்ன; முத்துதிர்க்கும் வாயரே! நீரே முகாரி பாடத் தொடங்கிவிட்டீர்! உமக்குத்தான் திண்ணைத் தூங்கிப் பணி கொடுத்துவிட்டார்களே!

அய்யா-ஆரியப்படை கடந்தாரே! என்னைக் கேலி செய்கிறீரா?

ஆமாம் அய்யா! ஆமாம்! நாம் இருவருமே இப்போது கேலிக்குரிய மனிதர்கள்தான்! நாம் பேசிய சுயமரியாதை என்ன? இப்போது சுருண்டு கிடக்கும் பரிதாபம் என்ன? இட ஒதுக்கீடு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இவைகளை எல்லாம் மேடைகளில் புள்ளிவிபரங்களுடன் அள்ளி வழங்கிய காலமெல்லாம் போய் - இப்போது இவ்விடத்தில் நமக்கு உட்காருவதற்கு ஏதாவது இட ஒதுக்கீடு இருக்கிறதா என்று தேடியலைய வேண்டியுள்ளதே!

எப்படியோ நமது கொள்கை வளருது கோபுரம் போல! என்று அவ்விடத்தில் திரியும் அடிமைகள் நம்பிக் கொண்டுதானே

கிடக்கிறார்கள்; நாமும் அவர்களுடன் சேர்ந்து ராகம் பாட வேண்டியதுதான்!

மண்ணாங்கட்டி! கொள்கை கோபுரம் போல் வளரவில்லை அய்யா! குப்பை மேடு போல உயருகிறது! நீதிக்கட்சி காலத்திலிருந்து சுமார் 75 வருஷமா எந்த ஒரு கொள்கையை உயிர் மூச்சா கொண்டிருந்தோமோ; அந்தக் கொள்கைக்கு நம்ம தலைமை குழி தோண்டக் கிளம்பியாச்சு!

நம்ம தலைமைன்னோன்ன எனக்கு உடம்பு சிலிர்க்குது! நம்ப யார் தலைமையிலேயெல்லாம் இருந்தோம். இட ஒதுக்கீடு கொள்கைக்காக அந்தத் தலைவர்களும், அவர்களோடு சேர்ந்து நாமும் செய்த தியாகங்கள்! நடத்திய போராட்டங்கள்! இப்ப இருக்கிற நம்ம தலைமை; எல்லாத்தியும் தலைகீழா தூக்கி அடிச்சுட்டுதே!

என்னய்யா செய்யிறது? இதையும் சரின்னு சப்பைக்கட்டு கட்டிப் பேச வேண்டியதுதானே! இல்லேன்னா இங்க இருக்கிறவனுங்க கூட்டத்துக்குக்கூட கூப்பிட மாட்டானுங்களே!

என்னமோ போங்க! நம்ப கதி இரண்டு ஆட்டில ஊட்டின குட்டி மாதிரி ஆயிட்டுது!

இரண்டு ஆடா? ஆடு இல்லய்யா ஆடு இல்லை! நம்ப கதி இருதலைக்கொள்ளி எறும்பா ஆயிட்டுதுன்னு சொல்லும்!

(இருவரும் சலிப்புடன் பேசிக் கொண்டிருக்கும்போது யாரோ கைதட்டி சபாஷ் என்று சொல்லும் ஒலி கேட்கிறது)

ஒலியைத் தொடர்ந்து ஒரு குள்ளமான நிழலுருவம் - அந்த உருவம் பொடி போட்டுக் கொள்வது; நிழலுருவின் அசைவில் தெரிகிறது!

அந்த உருவத்தைக் கண்டு ஆரியப்படை கடந்தாரும், முத்துதிர்க்கும் வாயரும் எழுந்து நிற்கிறார்கள்!

நிழல் உருவம்:- என்னப்பா ஆரியப்படைக் கடந்தான்! ஏன் என்னைக் கண்டதும் உன் தொடை நடுங்குகிறது - நீ சேர்ந்துள்ள இடத்தில் இப்படி நடுங்கி நடுங்கிப் பழக்கப்பட்டுவிட்டதா?

ஆரியப்படை கடந்தார் கண்களில் நீர் வழிய அசையாமல் நிற்கிறார். முத்துதிர்க்கும் வாயர், அந்த நிழல் உருவத்தை

நெருங்குகிறார். நிழல் உருவம் அவரைவிட்டு விலகித் தொலைவில் போய் ஆத்திரமாகப் பேசுகிறது.

ஏய் - நீ என்னைத் தொடாதே! உன்னை நான் மானமறவன் - சுயமரியாதைச் சுடர் என்றெல்லாம் நினைத்திருந்தேன். இப்போது நீ யாருக்கோ கொத்தடிமை! நீ கொத்தடிமை ஆனது மட்டுமல்ல; தமிழ்க் குலத்தையே யாருக்கோ அடிமையாக்கி, நமது பழம் புகழைப் பாதாளத்தில் போட்டுப் புதைக்கப் பால்கனிப் பாதங்களை பூஜித்துக் கிடக்கிறாய்! நீ என்னைப் பார்ப்பதே தீது! தகாது! எட்டிப்போ! தள்ளி நில்!

நிழலுருவத்தின் சினத்தைக்கண்டு ஆரியப்படை கடந்தார் அருகே வந்து;

அண்ணலே! அவரைத் திட்டாதீர்! அவரும் நானும் வேறு வழியின்றி...

என்னப்பா சொல்கிறாய்! வேறு வழியில்லை உங்களுக்கு? கடையில் கயிறு இல்லை? விஷமில்லை? எண்ணிப்பார்; உன்னை அன்றொரு நாள் நான் எப்படி அழைத்தேன்? ஆரியப்படை கடந்தோனே வா! உன் தலைமைக்குக் கட்டுப்படுகிறேன் வா! ஆணையிடு எமக்கு! எனக் கூறி அரியாசனத்தில் அமர்த்தினேனே; நினைவில்லையா? இன்று நீ அரியாசனத்திலா இருக்கிறாய்? நரியாசனத்துக்குச் சரியாசனத்தில்கூட இல்லையே? முகத்தில் பூசப்பட்ட கரியாசனமல்லவா உனக்குக் கிடைத்திருக்கிறது!

அண்ணலே! என்னை மன்னித்து விடுங்கள்!

மணி முடிகளைச் சாய்த்த செங்குட்டுவன் மாடல மறையோனிடம் மண்டியிட்டதைக் கண்டித்து நான் எழுதிய நாடகம் கண்டிருக்கிறாயே அதனை மறந்தாயா? காகபட்டர் காலில் மாவீரன் சிவாஜி வீழ்ந்ததைக் கண்கலங்க நாடகமாகத் தீட்டினேனே; அதையும் மறந்தாயா? மன்னிக்கச் சொல்கிறாயா? முடியாதப்பா முடியாது! மறப்போம், மன்னிப்போம் என்பதை நான் பலமுறை கூறியிருந்தாலும் - கொள்கை வைரத்தைக் குப்பையிலே தொலைத்துவிட்டு நிற்கும் உன்னை மன்னிக்கவே முடியாது! இதோ பார் - நான் உன்னை வைத்திருந்த இடமெங்கே! அதன் பிறகு என் தம்பி உனக்குத் தந்த மரியாதை மதிப்பு எவ்வளவு? இன்று சீரழிந்து கிடக்கிறாயே; எப்படி உன்னை மன்னிப்பது!

என்ன சொல்கிறீர்கள்? எனக்குப் புரியவில்லையே!

புரியாது புரியாது! நீ எதிர்நோக்கியிருக்கிற பதவி போதையில் எதுவும் புரியாது! அது கிடைக்கப்போவதுமில்லை; நீ கடைத்தேறப் போவதுமில்லை! இதோ என் கையில் இரண்டு விளம்பரங்கள் ஏடுகளில் வந்தவை இருக்கின்றன - ஒன்று செப்டம்பர் 16-ந் தேதி என் தம்பியர் நடத்திய விழா - அந்த விளம்பரங்களில் ஆரூர் தம்பியின் பெயர் மட்டுமல்ல; புரசைவாக்கத்தில் இருந்த என் அன்புத் தம்பியின் பெயரும் இருக்கிறது - உடுமலைத் தம்பியின் பெயரும் இருக்கிறது - நாஞ்சில் தம்பியின் பெயரும் இருக்கிறது - அதுதான் நான் உருவாக்கி வளர்த்த ஜனநாயகத் தோட்டம்! நீங்கள் புகுந்துள்ள தோட்டத்தில் சிலை திறப்பு விழாவிற்கான விளம்பரத்தில் உன் பெயர் எங்கே? அதோ ஒடுங்கி நிற்கிறாரே; அவர் பெயர் எங்கே? மார்தட்டும் சிங்கங்களே! உங்கள் வாழ்வில் மானம் தட்டிப் போனதால் சிலை திறப்பு விழா நிகழ்ச்சி விளம்பரத்திலே கூட உங்கள் பெயர்களைக் காண முடியவில்லை அல்லவா? பாவம்; இந்தியாவைக் கட்டி ஆண்டவர் பெயரே கீழே போய் விட்டதே; பிறகு உங்களுக்கென்ன விளம்பரம் ஒரு கேடு என்று அவ்விடத்திலிருந்து பதில் கிடைக்குமானால்; அதற்கும் பல் இளிப்பவர்களாகி விட்டீர்கள் - பாவம்!

ஆரியப்படை கடந்தார் தலைகுனிந்து நிற்கிறார் - முத்துதிர்க்கும் வாயர், ஏதோ பேசுவதற்கு நிழலுருவின் அருகே நெருங்குகிறார்!

சே! போதும்! உங்கள் முகத்தில் விழிக்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது!

என்று ஓங்கி ஒலித்தபடி நிழலுரு மறைகிறது. திரையும் விழுகிறது!

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்

உயிர்நீப்பர் மானம் வரின்

இந்தக் குறள் மீண்டும் தொகையறாவாக சோக இசையில் கேட்கிறது.

★

உடன்பிறப்பே, கடைக்கோடியில் கிடப்போருக்கு இக்கடிதத்தின் விளைவாகவாவது ஓரளவு கதி மோட்சம் கிட்டுமாயின்; பழைய நண்பன் என்ற முறையில் சிறிது ஆறுதலடைவேன்!

அன்புள்ள,

மு. க.

08-10-1990

1673. ஐம்பெரும் முழு(ட)க்கம்!

உடன்பிறப்பே,

முதலில் சில பொன்மொழிகளை நினைவிலே வைத்துக் கொள்!

சிவகங்கையின் சின்னத்தம்பி சிந்தியவை என்பதால் அவற்றை புண்மொழிகள் என்று ஒதுக்கிவிடாதே!

(1) விபத்தின் பெயர்தான் வி.பி. சிங்!

(2) வி.பி. சிங் சாதிமதக் கலவரத்தைத் தூண்டுபவர்.

(3) பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில்தான் வந்தது.

(4) பின்தங்கிய மக்கள் கருணாநிதியை ஆதரிப்பது உண்மையானால் சட்டசபையைக் கலைத்துவிட்டு மறுதேர்தல் நடத்த கருணாநிதி தயாரா?

(5) வி.பி. சிங்கின் ஆட்சி கவிழ்ந்தால் மறுநாள் கருணாநிதி ஆட்சி கவிழும். முதலமைச்சர் கருணாநிதி, வெறும் முத்துவேல் கருணாநிதி ஆகிவிடுவார்.

சிவகங்கை சின்னத்தம்பியின் ஐம்பெரும் முழக்கங்கள் இவை!

ஏடுகளில் விளக்கம் எழுத நேரமில்லை; நேர்காணலுக்கு வந்தோர்; கூடத்தில், தாழ்வாரத்தில் காத்திருக்கிறார்கள். அதனால் சுருக்கமாகவே சில பதில்கள்! அல்லது அவருக்கே சில கேள்விகள்!

(1) விபத்தின் பெயர்தான் வி.பி. சிங் என்கிறீர்களே; யாருக்கு ஏற்பட்ட விபத்து? ஓ! காங்கிரசுக்கு ஏற்பட்ட விபத்தைச் சொல்கிறீர்களா? குணமடைய வழியுண்டா? அல்லது என்றும்

கோமா நிலைதானா? (கோமாளி நிலையென்று சொல்லவில்லை!)

(2) வி.பி. சிங் சாதி மதக் கலவரத்தைத் தூண்டுபவர் என்கிறாரே; பஞ்சாபில், காஷ்மீரில் மதக் கலவரங்களைத் தூண்டியது காங்கிரஸ் கட்சியல்லவா? ராமஜென்ம பூமி என்ற பிரச்சினைக்குரிய பூதத்தைக் கிளப்பியதும் காங்கிரஸ் ஆட்சியினர் ஆப்பசைத்ததால் வந்த வினைதானே! காங்கிரஸ் ஆட்சி ஆரம்பித்து வைத்த கலவரங்களை அடக்கத்தான் வி.பி. சிங் படாதபாடுபடுகிறார்! மண்டல் கமிஷனுக்கு எதிரான சாதிக் கலவரத்தின் பின்னணியில் காங்கிரஸ் இருப்பதால்தானே வி.பி. சிங் பதவி விலக வேண்டுமென ராஜீவ் காந்தி சொன்னார்! வசந்த சாத்தே சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்றாரே; எதற்காக? மண்டல் கமிஷனை எதிர்த்துத்தானே?

(3) பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு 1921-ல் நீதிக்கட்சி ஆட்சிக் காலத்திலேயே வந்துவிட்டது தம்பி! இட ஒதுக்கீடு கூடாது என்று உயர் சாதியினர் உச்சநீதி மன்றம் வரை சென்று வெற்றி பெற்றனர். எனவே சமூக அடிப்படையில் இட ஒதுக்கீடு தேவையென்றும் அதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்றும் பெரியாரும் அண்ணாவும் கிளர்ச்சி நடத்தினர். வேறு வழியின்றி பண்டித நேரு காலத்தில் அரசியல் சட்டம் இட ஒதுக்கீட்டுக்காக திருத்தப்பட்டது. வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை காங்கிரஸ் ஏற்க மறுத்ததால்தான் 1925-ல் பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறினார் என்பது வரலாறு!

(4) சட்டசபையைக் கலை! தேர்தலை நடத்து! இதுவே இவர்களின் புலம்பலாக இருக்கிறது! பாவம்; இந்தத் தம்பி, கனவிலும் இப்படித்தான் உளறுகிறதாம்! மராட்டியத்தில், ஆந்திரத்தில் எத்தனையோ பிரச்சினைகள் உள்ளன.

அங்கெல்லாம் தம்பியார் இந்த யோசனையைச் சொல்வாரா? மாட்டார்! அவை காங்கிரஸ் ஆளும் மாநிலங்கள்! பிரச்சினையில்லாத மாநிலத்தில்தான் பிதற்றுகிறார்!

(5) மத்தியில் வி.பி. சிங் ஆட்சி கவிழ்ந்தால் மறுநாள் மாநிலத்தில் தி.மு.க. ஆட்சி கவிழுமாம்! அதாவது ராஜீவ்காந்தி பிரதமராகி தி.மு.க. ஆட்சியை கலைத்து விடுவாராம்!

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்பது போல, ராஜீவ்காந்தி கர்நாடகப் பிரச்சினையில் பிரமச்சாரி ஓடம் கவிழ்த்த கதையை நடத்தினார். முதலமைச்சரும் அமைச்சர்களும் இல்லாத ஒரு சூன்ய நிலையில் இடையில் சில நாட்கள்; சட்டசபையை கலைக்காமல்; சஸ்பெண்ட் செய்து வைத்ததற்கே - காங்கிரஸ்காரர்கள் ஜனநாயகம் போச்சு! என்று ஆகாயத்துக்கும் பூமிக்குமாக எகிறிக் குதித்தார்கள்! அந்தக் காங்கிரசின் தம்பிதான்; இங்கே கழக ஆட்சியைக் கலைத்துவிடுவோம் என்கிறது! ஒரு முறையா? இரு முறையா? இந்தியாவில் மாநில ஆட்சிகளை எழுபத்தைந்து முறைக்கு மேல் கலைத்து பவள விழா கொண்டாடிய ஜனநாயகச் சிகரங்கள் அல்லவா காங்கிரசார்?

உடன்பிறப்பே; நீ விரிவாகப் பேசிக் கொள்வாய் என்பதற்காக குறிப்புகளை மட்டும் கோடிட்டுக் காட்டி; இந்தக் கடிதத்தை இன்றைக்கு இத்துடன் முடிக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

17-10-1990

42226

894.8116
கருண-19

1674. ஒற்றுமை காத்திட ! உரிமைகள் பெற்றிட !

உடன்பிறப்பே,

ஒரு பக்தன் ஆலயமொன்றில் ஆண்டவனின் சிலையை நோக்கிக் கால் நீட்டிப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தானாம்!

கோயில் பூசாரியார் அதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து அவனை எழுப்பி வேறு பக்கம் கால் நீட்டிப் படுத்துக்கொள்ளடா பரம பாதகா! என்று வசை பொழிந்தாராம்!

பூசாரியார் ஆணைக்குக் கட்டுப்பட்டு அந்தப் பக்தன்; கால்களை வேறு பக்கம் நீட்டிப் படுத்துக்கொண்டானாம்!

என்ன ஆச்சரியம்! அவன் கால் நீட்டிய திசையில் ஆண்டவன் சிலை வந்து அமர்ந்துவிட்டதாம்!

பூசாரியாருக்கு ஒன்றுமே புரியவில்லையாம்! வில்லும் அம்பும் ஏந்திய அந்த இராமபிரானின் விக்கிரகத்தைப் பார்த்து ஹே இராமா! இது என்ன லீலா விநோதம்? என்று துடித்துப் பதைத்துக் கேட்டாராம்!

உடன் விக்ரகத்திலிருந்து வெளிப்பட்ட இராமபிரான்; அந்தப் பூசாரியை நோக்கி ஒரு புன்னகையை நெளியவிட்டு திருவாய் திறந்தாராம்!

அப்பனே பூசாரியாரே! அந்தப் பக்தன் என் விக்ரகத்தை நோக்கிக் கால் நீட்டக்கூடாது என்றீரே; நான் உம்மைக் கேட்கிறேன்; பதில் சொல்லும்! ஆண்டவனாகிய நான் இல்லாத இடம் எது? எந்தப் பக்கம் கால் நீட்டினாலும் நான் அந்தப் பக்கத்தில் மட்டுமல்ல; எல்லாப் பக்கத்திலும் இருக்கிறேன் என்ற உண்மையை அறியாத உமக்கு எம்மை பூஜை செய்ய அருகதையும் உண்டோ?

இராமபிரானாம் அந்த ஆண்டவனின் கேள்விக்கு விடை அளிக்கமுடியாமல்; பூசாரியார் தலைகுனிந்து, வெட்கிப்போய்,

வியர்வை கொட்டிட - விழுந்தாராம் ஆண்டவனின் பாதார விந்தங்களிலே!

இராமா! நீ எங்கும் இருப்பாய்! எல்லா பெயர்களிலும் இருப்பாய்! எல்லா இடங்களிலும் இருப்பாய்! இந்த இடத்தில் மட்டுமே இருப்பாய்; இல்லை - அந்த இடத்தில் மட்டுமே இருப்பாய்; என்றெல்லாம் சொல்வது தெளிவில்லாத பேச்சு! இப்போது என்னை தெளிய வைத்துவிட்டாய்! அங்கு இங்கு எனாதபடி எங்கும் இருப்பவனே! என்னை மன்னித்துவிடு; உன் மகாத்மியம் அறியாததற்காக இந்த ஜீவனை மன்னித்துவிடு!

பூசாரியார் புலம்பினார்! ஆண்டவன் மறைந்து விட்டார்; மன்னித்தேன் என்று அருள்பாலித்தபடியே!

உடன்பிறப்பே, இப்படிக் கதையொன்று படித்திருக்கிறோம்! கேட்டிருக்கிறோம்! பெரும் பாகவதர்கள் கதாகாலட்சேபம் செய்வதை ரசித்திருக்கிறோம்!

நியாயந்தானே! ஆண்டவன் ஸ்ரீஇராமபிரான் - கிருஷ்ண பரமாத்மா - கைலாசவாசன் - பரமேஸ்வரன் - முருகன் - விநாயகன் - யாராயிருந்தாலும் அவர்கள் எங்குமிருப்பார்கள்; தூணிலும் இருப்பார்கள் துரும்பிலும் இருப்பார்கள்!

- என்று கலாட்சேபம் கேட்ட பக்த சிரோன்மணிகள் தங்களுக்குள் வியாக்யானங்கள் செய்து கொள்வதையும் பார்த்திருக்கிறோம்!

ஆனால் இன்றைக்கு இந்து மதத்தைக் காத்திடுவதாகப் புறப்பட்டுள்ள அறிவாளிகள் சிலருக்கு ஆண்டவனைப் பற்றிய இந்த உண்மை புரியாமல் போனதுதான் வியப்புக்குரிய செய்தி!

கால் நீட்டிப் படுத்த பக்தனைக் கடுமொழி கூறி ஏசிய பூசாரியார்; கடவுளிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட புத்திமதியை - யார் இதுவரையில் மக்கள் மத்தியில் எடுத்துரைத்து எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவனைப் பற்றி நீண்ட பிரசங்கம் புரிந்து வந்தனரோ;

அவர்கள் இன்றைக்கு
இந்த இடத்தில்தான்...
ஆமாம் இதே இடத்தில்தான்...
இந்தக் குறிப்பிட்ட இடத்தில்தான்...

இராமன் பிறந்தான்
இங்குதான் கோயில்
கட்ட வேண்டும்!
இந்த இடத்தில் பல ஆண்டு
களுக்கு முன் கட்டப்பட்ட
பாபர் மசூதியை இடித்துவிட்டு
இராமனுக்கு ஆலயம்
அமைக்க வேண்டும்

என்று போருக்குப் புறப்பட்டிருக்கிறார்கள்! இந்தப் போராட்டத்தில் சங்கராச்சாரியார் சமாதானத்திற்கு வரக் கூடாது; காரணம் அவர் சைவர் என்கிறார்கள்!

அயோத்தியில் இராமன் பிறந்தான் என்பது இராமாயணம்! அந்த விபரங்களை மூலக்கதை எழுதிய வால்மீகியார் விளக்கியிருக்கிறார்!

அந்த அயோத்தியில் இராமர் கோயில் எழுப்பிட யாரும் மறுப்பு தெரிவிக்கவில்லை!

ஏற்கெனவே இருக்கிற பாபர் மசூதிக்குள்ளேயேதான் இராமருக்கு ஆலயம் எழுப்ப வேண்டுமென்கிறபோதுதான்;

நான் முதலில் குறிப்பிட்ட பூசாரியாருக்கும் ஆண்டவனுக்கும் நடைபெற்ற வாக்குவாதம் நினைவுக்கு வருகிறது! கதையாக இருந்தாலும்; அது நல்ல கருத்தல்லவா?

இந்த இடத்தில்தான் இராமன் இருக்கிறான் என்றால்; அவன் சர்வ சக்தி படைத்தவன் - சகலத்திலும் இருப்பவன் - என்றுரைக்கும் தத்துவங்கள் எல்லாம் அவர்களாலேயே தவிடுபொடியாக்கப்படுகிறதா? இல்லையா?

விளைவுகளை எண்ணிப் பார்ப்பவர்கள்; விபரீத விளையாட்டில் ஈடுபடுகிறார்கள் என்றால் - விழித்துக்கொண்டே உறங்குவதுபோல நடிக்கிறார்கள் என்றுதானே எண்ண வேண்டியுள்ளது!

இந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களாக வாழ வேண்டுமென்ற காந்தியடிகளின் உபதேசங்கள்; காற்றோடு போய்விட்டவைதானா?

வடபகுதியில் உசுப்பிவிடப்படும் இந்த வகுப்பு விரோத நெருப்பு; மொத்த இந்தியாவையும் எரித்துப் பொசுக்கி விடாதா?

இந்து மதம் அன்பு மதம் என்று பேசாத நாளில்லை! ஆனால் இந்த மதந்தான்; சங்கராச்சாரியாரையே சைவர் என ஒதுக்குகிறது! சைவர், வைணவர் என்பதோடு போயிற்றா?

ஆயிரம் சாதிகள்! ஆயிரம் சாதிகளையும் ஆதிக்கம் செலுத்த ஓரிரு சாதிகள்!

வாழ்வு, வசதி, உயர்வு, முன்னேற்றம் அனைத்தும் அந்த ஓரிரு சாதிகளுக்கே!

வாட்டம், தாழ்வு, வாய்ப்பற்ற நிலை, பின்னடைவு எல்லாமே ஏனைய ஆயிரம் சாதிகளுக்கும் பட்டா தரப்பட்டவை!

வாய்ப்பற்ற மக்களுக்கு வாய்ப்பு தர ஒரு முயற்சி மண்டல் கமிஷன்!

இந்த மதத்தில் உள்ள மேலோர் - ஆம்; இந்த அன்பு மதத்தில் உள்ள மேலோர்; அந்தக் கீழோரைக் கீழோராக்கவே கிளர்ந்தெழுகின்றனர் - அதுவும் வடக்கே மும்முரமாக! இங்கே முனகலாக!

உடன்பிறப்பே; வகுப்பு ஒற்றுமைக்கு வேட்டு வைக்கவும் - வாய்ப்பற்ற மக்களைத் தொடர்ந்து வாயில்லாப் பூச்சிகளாகவே வாட்டி வதைக்கவும் - வடக்கில் பின்னப்படும் வஞ்சக வலையை அறுத்தெறியவே; தமிழகத்தில் உள்ள நாம்; நமது அறவழிச் சக்தியை அக்டோபர் 23ஆம் நாள்; ஆம் - இன்றைய தினம் அனைத்துக் கட்சிகள் நடத்தும் முழு அடைப்பு மூலம் உணர்த்துகிறோம்!

இந்த ஒருநாள் முழு அடைப்பு வாயிலாக மட்டுமல்ல; வகுப்பு ஒற்றுமை காத்திடவும்; ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பெற்றிடவும் தொடர்ந்து பணியாற்ற அமைதி வழி - அற வழி அனைத்தையும் பயன்படுத்துவோம்!

அன்புள்ள,

மு. க.

23-10-1990

1675. வெறுப்பும் நினைப்பும் நெருப்பில் கருகிட...

உடன்பிறப்பே,

பிரதமர் பதவியிலிருந்து வி.பி. சிங் விலக வேண்டும் என்று; இரண்டு மூன்று நாட்களாக மட்டுமல்ல - ஆகஸ்ட் மாதம் ஏழாம் தேதியிலிருந்தே கூச்சல் கிளப்புகிறவர்கள், பேட்டியளிப்பவர்கள், ஆர்ப்பாட்டம் நடத்துகிறவர்கள் எல்லாம் யார் என்பதும் என்ன நோக்கத்திற்காக என்பதும் உள்ளத்தில் அவர்களுக்கிருக்கும் எரிச்சலுக்கான காரணம் என்ன என்பதும் மர்மமானவை ஒன்றுமல்ல! மக்கள் மன்றத்திற்கு வந்த அந்த வெளிப்படையான ரகசியத்தை இராமஜென்ம பூமி என்ற திரைபோட்டு மூட முயற்சிக்கிறார்கள்.

நெருப்புக் கோழி தனது தலையை மட்டும் கழுத்துவரையில் ஒரு பொந்துக்குள் நுழைத்துக்கொண்டு, யாருமே தன்னைப் பார்க்க முடியாதபடி ஒளிந்து கொண்டிருப்பதாக நினைத்துக் கொள்ளுமென்று கூறுவார்கள்!

அப்படித்தான் இராமஜென்ம பூமி என்ற காரணத்தைக்காட்டி, வி.பி. சிங் அவர்களும் தேசிய முன்னணி அரசும் இந்து மத விரோதிகள் என்று காட்டி; தேர்தலுக்கான ஓட்டு வங்கியை இப்போதே நிரப்பிக் கொள்ளலாம் என திட்டமிட்டுச் செயல்படுகின்றன சில கட்சிகள்!

அந்தக் கட்சிகளில் பிரதான கதாபாத்திரம் தாங்கி அரங்கேறியிருப்பதுதான் பாரதீய ஜனதா என்ற கட்சியாகும்!

அந்தக் கட்சி; தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு தந்த போதிலும் - தி.மு. கழகத்திற்கும் அதற்கும் எண்ணெய்க்கும் தண்ணீருக்குமுள்ள உறவுதான் என்று செப்டம்பர் 30 திருச்சியில் நான் பேசிய பொதுக்கூட்டத்திலேயே திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறேன்.

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம் என்று நாம் பெயர் சூட்டியதைக் கண்டித்து அத்வானி, வாஜ்பேயி போன்ற பாரதீய ஜனதா தலைவர்கள் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களைத் தேசத் துரோகி என்று வர்ணித்துத் தங்களது நஞ்சு நெஞ்சத்தைத் திறந்து காட்டியபோதே அவர்களுக்கும், அவர்களைச் சார்ந்த இந்து முன்னணி, ஆர்.எஸ். எஸ். போன்ற கட்சிகளுக்கும் நமது கடும் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறோம்.

இஸ்லாமிய எதிர்ப்பு என்பது பாரதீய ஜனதாவின் இதயத்தில் புகைந்து கொண்டிருக்கும் தீப்பிழம்பு என்பதற்கு; இந்த ஒரு உதாரணம் போதுமென்றாலும்கூட - திடீரென வி.பி. சிங் மீது ஆத்திரம்கொண்டு அவரைப் பதவியிலிருந்து விரட்டுவதற்குப் பாரதீய ஜனதா எடுத்த முடிவுக்கும் - அதற்கும் பின்பாட்டு பாடுவதுபோல, இந்திரா காங்கிரசும், அதன் தோழமைக் கட்சியாக இங்குள்ள அ.இ.அ.தி.மு.க.வும் வி.பி. சிங் விலகத்தான் வேண்டுமென குரல் கொடுப்பதற்கும் இராமஜென்ம பூமி பிரச்சினை மட்டுமே முழுமையான காரணமல்ல!

அப்படியானால் அந்த முழுமையானதும் முக்கியமானதுமான காரணம்தான் என்ன?

மண்டல் கமிஷன்

மண்டல் கமிஷன்

மண்டல் கமிஷன்

இதைத்தான் அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை!

நேரடியாக மண்டல் கமிஷன் எதிர்ப்பு என்றால்; பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்கள்; ஏன்? பெரும்பான்மை மக்கள் - தங்களின் உண்மை உருவத்தை உணர்ந்துகொண்டு, தங்களை விட்டு ஒதுங்கிப் போய்விடுவார்கள் என்ற பயத்தின் விளைவாகத்தான் இராமஜென்ம பூமி பாபர் மசூதி விவகாரத்தை முன்னுக்குத் தள்ளி, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமலாக்க முன்வந்த வி.பி. சிங் அவர்களைப் பழிவாங்கப் புறப்பட்டுவிட்டார்கள்!

பன்னீர்க் குளியலும், பழரச பானமும் தனக்கு மட்டுமே சொந்தமெனச் சொகுசு கீதம் பாடிக் கொண்டிருந்தவன்; பன்றிகள்

புரளும் சாக்கடையோரம் படுத்துப் புரளும் பாமர மனிதனுக்கு நல்வாழ்வு தரக் கரம் நீட்டுபவனைச் சகித்துக் கொள்வானா?

அந்த ஆதிக்கப் பார்வைதானே ஆயிரம் சாதிகளை உருவாக்கி; அத்தனையும் தமக்கு அடிமை சாதிகள் என வரையறுத்து வாழ்வை உயர்த்திக்கொள்ள இத்தனை நாள் வகை செய்தது! அந்தத் தீமையைத் தீய்த்திட தேசிய முன்னணி அரசு திட்டம் தீட்டலாமா? அதன் கழுத்தை அறுத்திடத் தீட்டுக கத்தியை; என்று தீய சக்திகள் கிளம்பியுள்ளன!

உடன்பிறப்பே, எனக்கிருக்கும் கவலையெல்லாம் இந்த நாட்டில் பிற்படுத்தப்பட்டு, மிகவும் பிற்படுத்தப்பட்டு, தாழ்த்தப்பட்டுக் கிடக்கிற மக்கள்; இன்னமும் தங்கள் தலைமீது தனது முரட்டுப் பாதங்கள் கொண்டு அழுத்திக்கொண்டிருக்கும் சமூக அநீதியின் சண்டாளத்தனத்தை உணராமல் சரிந்து சரிந்து மேலும் சரிந்து போய்க் கொண்டிருக்கிறார்களே என்பதுதான்!

புரையோடிக் கிடக்கும் புண்ணை சல்லாத் துணி கொண்டு மறைப்பதுபோல் இராமஜென்ம பூமியைக் காப்பாற்றப் புறப்பட்டிருக்கிறோம் என நடிக்கிறார்கள்!

இவர்களது இலக்கு; இஸ்லாமிய சகோதரர்களை தாக்குவது - இந்து முஸ்லிம் ஒன்றுமையைத் தகர்ப்பது - என்றாலுங்கூட; இப்போது இராமஜென்ம பூமி பாபர் மசூதி பிரச்சினையை முன்னிலைப்படுத்தி; மண்டல் கமிஷனுக்கு உயிர் கொடுத்த வி.பி. சிங் ஆட்சியை வீழ்த்திடுவது என்பதே முதல் கட்டம்!

அப்படிச் செய்தால்தானே; இந்துக்கள் எனத் தங்களைச் சொல்லிக் கொள்கிற பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் இராமா! இராமா! என்று கூவிக்கொண்டே தமது எதிர்காலத்தைக் கோவிந்தா ஆக்கிக் கொள்வார்கள்! இல்லையா உடன்பிறப்பே!

அயோத்தியில் ராமர் கோயில் கட்டவேண்டுமென்ற உணர்வை மதிக்கிறோம், அதற்காக தகராறு இல்லாத ஒரு நிலத்தை இராமர் கோயில் கட்டுவதற்கு வழங்க முன்வந்தோம். அப்போது சொன்ன நிபந்தனை விவகாரத்திற்குரிய பாபர் மசூதி நிலம் தொடர்பான பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படும்வரையில் அந்த நிலத்தில் எவரும் எதுவும் செய்யக்கூடாது என்பதுதான்.

இவ்வாறு பிரதமர் வி.பி. சிங், அரசின் நிலையைத் தெளிவுபடுத்திய பிறகும் - பாபர் மசூதியே இருக்கக்கூடாது; அதனை இடித்துத் தகர்த்து விட்டு இராமர் கோயில் கட்ட ரத யாத்திரை புறப்படுவோம் - போவோம் - மசூதியை இடிப்போம் - எம்மைத் தடுத்து நிறுத்தினால் ஆதரவை வாபஸ் பெறுவோம்; என்று சவால் விடுவதும்; சர்க்காரைக் கவிழ்க்க சல்லடம் கட்டுவதும் - பிரச்சினை இராமர் கோயில் மட்டுமல்ல; ஆண்டாண்டு காலமாக ஆதிக்கபுரியினர் வசமிருந்த சகல வாய்ப்பு வசதிகளையும் பங்கிட்டு இதுவரை வாய்ப்பிழந்திருந்த மக்களுக்கும் மண்டல் கமிஷன் மூலம் பகிர்ந்தளிக்க முன்வந்துள்ள தேசிய முன்னணி அரசையும், குறிப்பாக அந்த அரசின் தலைவர் வி.பி. சிங் அவர்களையும் வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்பதும்தான் என்ற உண்மையை மறந்துவிடக் கூடாது!

மண்டல் கமிஷனை எதிர்த்த கட்சிகள்; பிறகு ஆதரிப்பதாகச் சொல்லிக்கொண்ட கட்சிகள்; அவசரப்பட்டு விட்டார் வி.பி. சிங் என்று மண்டல் கமிஷனை மறைமுகமாகத் தாக்கிய கட்சிகள்; அடடா; எத்தனை எத்தனை வடிவங்கள் எடுத்தன அந்தக் கட்சிகள்!

அந்தக் கட்சிகளின் தலைமைகளால் தாங்கிக் கொள்ளமுடியாதுதான் மண்டல் கமிஷனை!

அந்தத் தலைமைகளுக்கெல்லாம் தலைமை வகிப்பதாய் விளங்குவது பாரதீய ஜனதா!

அதனால்தான் முதலில் சாதிக் கலவரத்துக்குத் தூபம் போட்டார்கள்!

அடுத்தகட்டமாக மதக் கலவரத்துக்குத் தூபம் போடத் தொடங்கியுள்ளார்கள்!

மண்டல் கமிஷன் கொண்டு வந்த வி.பி. சிங்கின் கையில் கமண்டலத்தை கொடுப்போம்!

என்ற கருத்துப்பட இந்தியிலே அவர்கள் பாட்டுக் கட்டி கூத்தாடுகிறார்களாம்; கண்டவர் கேட்டவர் சொல்கிறார்கள்!

இனியாவது சூடு சொரணை வர வேண்டாமா; ஓராயிரம் ஆண்டுகளாய் ஓய்ந்து கிடக்கும் ஒடுக்கப்பட்ட மனித குலத்துக்கு!

அந்த உணர்வு வந்தால்தான் வகுப்பு ஒற்றுமை காத்திட முடியும்!

ஒரு மதம்; மற்றொரு மதத்தை வீழ்த்திட முயலும் மதவெறிப் போராட்டத்தை தடுத்திட முடியும்!

இதிகாச ராமனுக்கு அயோத்தியில் புதிய கோயில் கட்டலாம்! வரலாற்றுக் காலத்து பாபர் மசூதி அப்படியே இருக்கலாம்!

கர்நாடக மாநிலம் ஸ்ரீரங்கப்பட்டினத்தில் திப்பு சுல்தான் கோட்டைக்குள் ரங்கநாதர் ஆலயமும் இருக்கிறது - இஸ்லாமியருக்கான பள்ளிவாசலும் இருக்கிறது!

இந்த நிதர்சனமான உண்மைகள் எல்லாம் அவர்களுக்குத் தெரியாமல் இல்லை -

என் செய்வது;

மண்டல் கமிஷன்

அவாகளது மணடையைக

குடைகிறதே!

இஸ்லாம் மார்க்கத்தின் மீதுள்ள வெறுப்பு - இந்துக்கள் எனப்படுவோரிலேயே பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், நடுத்தரவர்க்கத்தினர் முன்னேறக்கூடாது என்ற நினைப்பு -

இந்த

வெறுப்பும்

நினைப்பும்

சமத்துவ சமதர்மம் என்ற நெருப்பில் கருகிட நெஞ்சுயர்த்தி நிமிர்வோம்!

அன்புள்ள,

மு. க.

25-10-1990

1676. சூலம் தாங்கி வரும் கோலம் என்ன கோலமே!

உடன்பிறப்பே,

சடாமுடி - சந்நியாசிக் கோலம் - சாந்தி! சாந்தி! என உச்சரிப்பு - கையிலே வேலாயுதம் - சூலாயுதம் - பிற மதத்தினரின் புனித இடங்களைத் தகர்ப்போம் என்ற முழக்கம் - அந்த தபோதனர் (?) கூட்டத்துக்கு மதவெறியூட்டப்பட்ட குண்டர்கள் - அவர்களது கைகளிலும் கொடி, கொம்பு, சூலம் - இத்தனையும் அவர்கள் நடத்திடும் அமைதிப் பேரணிக்காக அல்ல!

சிறுபான்மையினரான இஸ்லாமிய மக்களின் மதத்தின்மீது தாக்குதல் நடத்துவதற்காக!

இதிகாச காலத்து இராமன் இங்கேதான் பிறந்தான் என்று வரலாற்றுக் காலத்து பாபர் மசூதியை அகற்றுவதற்கு ஒரு முற்றுகை! போராட்டம்!

திரேதாயுகத்தில் நடந்ததாகச் சொல்லப்படுவது இராமாயணம்!

உலகில் நாட்டுக்கு நாடு ஒரு இராமாயணம் எழுதப்பட்டு, அதற்கான சின்னங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கேயுள்ள இராமாயணத்தின்படி இராமன் அயோத்தியில் பிறந்தான் என்கிறார்கள்.

இராமாயணப்படி தசரதனுக்கு அறுபதாயிரம் மனைவிகள்!

அவர்களில் முக்கியமானவர்கள்: கோசலை, கைகேயி, சுமித்திரை!

அயோத்தியில் தசரதனின் மனைவிமார்கள் அறுபதாயிரம் பேருக்காக கட்டப்பட்ட அந்தப்புர அரண்மனைகள் ஆயிரக்கணக்கானவைகளில் கோசலை, கைகேயி, சுமித்திரைக்காக மூன்று பெரிய மாளிகைகள் இருந்திருக்க வேண்டும்.

கோசலையின் மாளிகையில்தான் இராமன் பிறந்திருக்க வேண்டும்.

புத்திரகாமேஷ்டி யாகம் நடைபெற்ற இடத்தில் - குதிரைகளை வெட்டி, மது மாமிசம் உண்டு - நடைபெற்றதாகக் கூறப்படும் கதையின்படி; இராமன் வேள்வி நடந்த இடத்திலேகூட பிறந்திருக்கக்கூடும்!

இவற்றில் இராமன் பிறந்த இடத்தைக் குறிப்பாக இதுதான் எனக் கூறிக்கொண்டு; அங்கேயுள்ள பாபர் மசூதியை இடித்துவிட்டு - இராமர் கோயில் கட்ட வேண்டுமென்பதை; நாட்டு நலனில், ஒற்றுமையில், ஒருமைப்பாட்டில் அக்கறையுள்ள எவராவது ஏற்றிட இயலுமோ?

இராமன் அயோத்தியில் பிறந்தார் என்றால் அயோத்தியில் ஒரு கோயில் கட்டிக் கொள்வதில் யாருக்கும் மறுப்பு இருக்க முடியாது!

பாபர் மசூதி இருக்கும் இடத்தில்தான் பிறந்தார் என்று வீண் வம்பு விளைவித்து, நாட்டைக் காடாக்கும் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்திட முன்வருவரோ; அமைதியில் நாட்டமுடையவர்கள்!

இந்துமதப் பெரியோர் - புராணீகப் பண்டித சிரோமணிகள் - பக்த கோடிகள்; இவர்கள் அனைவரின் கூற்றுப்படி மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் இராமாவதாரமும் ஒன்று!

விஷ்ணு பகவான் எடுத்த தசாவதாரப் பட்டியலை இன்றைக்கும் சில பஞ்சாங்க ஏடுகள் படங்களுடன் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்றன.

1. மச்சாவதாரம் - அதாவது மகாவிஷ்ணு மீனாக அவதரித்த புராணம்!
2. கூர்மாவதாரம் - மகாவிஷ்ணு ஆமையாக உருவெடுத்து அவதரித்த புராணம்!
3. வராகவதாரம் - மகாவிஷ்ணு பன்றியாக அவதரித்த புராணம்!
4. நரசிம்மாவதாரம் - மகாவிஷ்ணு சிங்கமாக அவதரித்த புராணம்!

5. வாமனாவதாரம் - மகாவிஷ்ணு குள்ள மனிதராக அவதரித்த புராணம்!

6. இராமாவதாரம் - மகாவிஷ்ணு கோசலை மைந்தனாக அவதரித்த புராணம்!

7. அதே கால கட்டத்தில் மகாவிஷ்ணு பரசுராமனாகவும் அவதரித்திருந்தார் என்றும் புராணம் கூறுகிறது!

8. பலராமாவதாரம்

9. கிருஷ்ணாவதாரம் மகாவிஷ்ணு இந்த இரண்டு அவதாரங்களையும் ஒரே நேரத்தில் எடுத்தார் என்றும் புராணம் புகலும்!

10. கல்கி அவதாரம் - இதுவும் மகாவிஷ்ணு எடுத்துள்ள அவதாரம்தான்!

இந்தப் பத்து அவதாரங்களில் இராமனுக்குப் பிறகும் இராமனுடனும் பரசுராமரும், அதன்பின் பலராமர், கிருஷ்ணன் ஆகியோரும் அவதரித்திருக்கிறார்கள்!

பத்தும் மகாவிஷ்ணுவின் அவதாரங்கள்தான் என்கிறபோது, இராமர் பிறந்ததாக மட்டும் ஒரு குறிப்பிட்ட இடத்தை எவ்வாறு கணிக்கிறார்கள்?

மற்ற அவதாரங்களும் மகாவிஷ்ணுவின் அவதாரங்கள்தானே?

பாபர் காலம் சில நூற்றாண்டுகளுக்கு முந்தையது! வரலாற்றுக் காலம்!

இராமர் காலம் இதிகாச காலம்! இதிகாசமென்றாலே சொல்லப்பட்டு வருகிற பழங்கதை என்றுதானே பொருள்! வேறு பொருள் உண்டா? இல்லையே!

யுகங்கள் நான்கு! கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம்! இப்போது நடப்பது கலியுகம் என்பர்!

ஒரு யுகம் என்பது எட்டு லட்சத்து அறுபத்து நாலாயிரம் ஆண்டுகள்! நான் சொல்லவில்லை! வேத வேதாந்திகள் வகுத்துள்ள கணக்கு!

கிருஷ்ணன் அவதரித்த யுகம்; துவாபரயுகம்!

அந்த யுகத்திற்கு முன்னால் இருந்த யுகம், திரேதாயுகம்!

அதுதான் இராமபிரான் அவதரித்ததாகக் கூறப்படும் யுகம்! இராமாயணம் நடந்த யுகம்!

கிருஷ்ணன், துவாபரயுகத்தில் அவதரித்தான் என்றால் இராமன் குறைந்த பட்சம் எட்டு லட்சம் வருடங்களுக்கு முன் அவதரித்திருக்க வேண்டும்!

அதற்குப் பிறகு கலியுகம் வேறு பிறந்து விட்டதாகச் சொல்லுகிறார்கள்!

இதையும் கூட்டிப் பார்த்தால் அயோத்தியில் இராமன் பிறந்தது; சுமார் பத்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு என்று இதிகாசம் எடுத்துரைக்கிறது!

நமது வசதிக்காகக் குறைத்துக் கணக்கிட்டால்கூட ஒரு லட்சம் ஆண்டுகளுக்கும் குறைவாகக் கணக்கிட்டு; வேத வேதாந்த சாகரங்களின் கணக்கிற்கு எதிர்க்கணக்குப் போட இயலாது!

எனவே உடன்பிறப்பே; வரலாற்றுக் காலத்தில் நானூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பாபர் மசூதியை; லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு அவதரித்ததாகக் கூறப்படும் இராமனுக்குக் கோயில் கட்டுவதற்காக இடித்திட வேண்டும் என்பதிலோ; அகற்றிட வேண்டுமென்பதிலோ நியாயம் இருக்க முடியுமா?

எங்கள் இராமபக்தியை புண்படுத்தாதே! என்று யாராவது சொன்னால் - அயோத்தியில் இராமர் கோயிலைக் கட்டிக்கொள்ளுங்கள் - அதற்காக பாபர் மசூதியில் கைவைத்து இஸ்லாமிய மக்களின் மனத்தைப் புண்படுத்தாதீர் என்று கூறுவது நமது கடமையில்லையா? நமது பொறுப்பு இல்லையா? மதச்சார்பற்ற ஒரு அரசுக்கு அந்த உரிமையில்லையா?

பாரதீய ஜனதாவின் விளம்பரம் ஒன்று ஏடுகளில் வந்துள்ளது!

சிறுபான்மைப் பிரிவினரையே திருப்தி செய்து மற்றவர்களை (பெரும்பான்மையானவர்களை) அவமதிப்பதா?

என்று அந்த விளம்பரம் விளவுகிறது!

மதத்தின் பெயரால் சிறுபான்மையினராக இருப்போரை அவமதிப்பதுதான் சில மத வெறியர்களின் திட்டம் என்றால்;

இந்தச் சிறுபான்மை பெரும்பான்மைக் கணக்கு பிறகு எல்லாத் துறைகளிலும் நுழைந்து விடக்கூடிய அபாயம் தோன்றிவிடக் கூடுமே!

சூலாயுதம் தாங்கி பிற மதத்தினரைப் புண்படுத்த போரிடு என்று எந்தவொரு நாகரீக அரசியல்வாதியும் - மனித நேயப் பண்பாளரும் கூறிடுவாரோ!

நமது கழகக் கூட்டங்களைக் கட்டுப்பாட்டுடன் நடத்திடவும் - கூட்டங்களுக்கு வரும் பொது மக்களுக்குப் பாதுகாப்பு அளித்திடவும் -கழகத் தொண்டர் அணிகள் ஆங்காங்கு அமைக்கப்பட வேண்டும் என்று ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நான் சொன்னதற்கு சீறிவிழுந்து சினத்தைக் கொட்டி எத்தனை பத்திரிகைகள் என்னென்ன எழுதின!

ஆனால் இன்று?

சூலம் தாங்கி வரும் கோலம் என்ன கோலமே!

அன்புள்ள,

மு. க.

01-11-1990

1677. ஆகஸ்ட் 7 - நவம்பர் 7!

உடன்பிறப்பே,

இறுதிவரையில் உறுதி குலையாமல் மதச் சார்பின்மை என்ற கேடயமும், மண்டல் கமிஷன் பரிந்துரை என்ற வாளும் தாங்கி, களத்தில் நின்ற வி.பி. சிங் அவர்கள் விழுப்புண் பெற்று புன்னகை தவழக் காட்சி தரும் மாட்சி கண்டு பெருமிதம் கொள்கிறேன்.

டெல்லி நாடாளுமன்றத்தில் மதச் சார்பின்மை மாவீரன் சீசர் ரோமாபுரி செனட் சபையில் எந்த முறையில் சாய்க்கப்பட்டானோ அந்த முறையில் அவர் சாய்க்கப்பட்டார் என்ற செய்தி என் செவிக்கெட்டியவுடன் - வாலி வதைப்படலம் மீண்டும் டெல்லியில் வரலாறாக உருவெடுத்தது என்ற தகவல் என் இதயத்தைக் குலுக்கியவுடன் பி.டி.ஐ. நிருபர் என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது கருத்தினைக் கேட்டார். கட்டபொம்மன் சரித்திரத்தை அறிந்தவர்களாயிற்றே நாம்! உழுது போடப்பட்ட அவனது பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையெழுப்பி அதனைக் கண்குளிர, வீரம் மிளிரக் கண்டு களிப்பவராயிற்றே நாம்!

அதனால் பி.டி.ஐ. நிருபரிடம் தொலைபேசியில் சொன்னேன் பின்வருமாறு!

ஆகஸ்டு ஏழாம் தேதி வி.பி. சிங் அவர்கள் மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றப் போவதாக பாராளுமன்றத்தில் அறிவித்தார். அதற்கான விலையை இன்று நவம்பர் ஏழாம் தேதி பாராளுமன்றத்தில் கொடுத்துவிட்டார். எலியாக உயிர் வாழ்வதை விடப் புலியாகச் சாவதே பெருமை என்று எண்ணுகிறவன் நான். எனவே அவரது கொள்கை உறுதியைப் பாராட்டுகிறேன்.

பி.டி.ஐ. நிருபரிடம் தொலைபேசியில் அப்படிச் சொன்னதே; நவம்பர் 7-ந் தேதி பற்றிய எனது அறிக்கை ஆயிற்று! அந்த அறிக்கையை மைய இழையாகக் கொண்டுதான் இந்தக் கடிதம் உனக்கு!

பத்தாண்டு காலமாக காங்கிரஸ் ஆட்சியில் இந்திரா காந்தி அம்மையார் அவர்களாலும், ராஜீவ் காந்தி அவர்களாலும், தீண்டியால் திருநீலகண்டம் என மொழிந்து எங்கோ ஒரு மூலையில் முடக்கிப் போடப்பட்ட மண்டல் கமிஷன் பரிந்துரைகளை எடுத்துத் தூசு தட்டி, அதனை இந்த அரசு நிறைவேற்றும் என வி.பி. சிங் அவர்கள் அறிவித்ததுதான் மகாமகாப் பாதகமாகப் போயிற்று! சிலர் வாழப் பலர் வாட வேண்டுமாம்! அந்தச் சிக்கலை அறுத்தால் சிலருக்குச் சினம் பொங்குமாம்! சாதிகள் ஆயிரம் வகுப்பார்களாம் - அந்தச் சனியனைத் தமக்குத் துணையாகக் கொள்வார்களாம்! ஆனால் அந்தச் சாதியினர் சமூக ரீதியில் கல்வியில், அரசுப் பணியில் வாய்ப்பற்றுக் கிடந்து சாகிறோமே; இது சரியா? முறையா? எனக் கேட்டு எமக்கென வாய்ப்பளித்துக் கை தூக்கிவிட இட ஒதுக்கீடு செய்திடுக எனக் குரல் கொடுத்து; அந்தக் குரலை மதித்து ஒரு நாட்டின் பிரதமர் செயல்படத் தொடங்கினால் - ஆகா! சாதிப்பிரச்சினையைக் கிளப்புகிறாரே! என்று சல்லடம் கட்டிப் புறப்படுவார்களாம்! வன்முறையைத் தூண்டுவார்களாம்!

பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் பழைய நிலையில் இருக்கவில்லை; உண்மைகளை உணரத் தலைப்பட்டு விட்டனர் என்றதும் - அந்த மக்களையும் அடக்கியுள்ள இந்து மத வெறியைத் தூண்டிச் சிறுபான்மை மக்களுடன் மோதிட - இந்திய பூமியில் இரத்த ஆறு பெருகிட - இராமனைத் தூக்கிக்கொண்டு ஆடுவார்களாம்!

அதற்கென அத்வானி இரத யாத்திரை! அந்த யாத்திரையின் பின்னணி மண்டல் கமிஷன் எதிர்ப்பு! பிரச்சார அணியோ; இராமர் கோயில் கட்டுவோம் பாபர் மசூதியை இடித்துவிட்டு என்பதாகும்!

தடுத்தால் ஆட்சிக்குத் தந்துள்ள ஆதரவைத் திரும்பப் பெறுவோம் என மிரட்டல்!

இராமர் கோயிலை அயோத்தியில் கட்டிக் கொள்ளுங்கள் - அதற்காக பாபர் மசூதியை இடிப்பதை அனுமதிக்க முடியாது! இதுதான் வி.பி. சிங் அளித்த விளக்கம். இரத யாத்திரை எல்லை தாண்டத் தொடங்கியது, அது தடுக்கப்பட்டது. ஆதரவு திரும்பப் பெறப்பட்டது! அய்யோ! ஆதரவை திரும்பப் பெறாதீர்கள்! நீங்கள் பாபர் மசூதியை மட்டுமல்ல, உங்கள் சாமியார் ஒருவர் அறைகூவல்

விட்டிருப்பது போல தாஜ்மகாலையும் கூட தகர்த்தெறியுங்கள்! என்று வி.பி. சிங் சிறிது விழி அசைத்திருந்தால் அசைந்திருக்காது அவரது ஆட்சி!

அல்லது ராஜீவ் காந்தியும் அவரது ஆதரவைப் பெறுகிறவர்களும் மண்டல் கமிஷனை மறைமுகமாக எதிர்ப்பதற்குத் தலைவணங்கி; அதற்கான நடவடிக்கைகளை வி.பி. சிங் விட்டுக் கொடுத்திருந்தால் வீழ்ந்திருக்காது அவரது அரசு!

சிறுபான்மை மக்களைக் காப்பாற்ற மதச் சார்பற்ற நிலையெனும் கேடயமும் - வாய்ப்பு இழந்து சமூக அந்தஸ்து பறிக்கப்பட்டுக் கிடக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் வழியை அடைத்திருக்கும் ஆதிக்கப் புதர்களில் மறைந்து கிடந்து பாய வரும் ஓநாய்களை வெட்டி வீழ்த்த மண்டல் கமிஷன் எனும் வாளும் - ஏந்திப் போரிட்டவரே வி.பி. சிங்!

இன்று விழுப்புண் தாங்கி நிற்கிறார்! தனி மனிதர்கள் வீழ்த்தப்படலாம்! ஆனால் எய்திட வேண்டுமென்று எண்ணிய இலட்சியங்கள் வீழ்த்தப்படுவதில்லை! இன்று வீழ்ந்தது போலத் தோற்றமளிக்கலாம்! நாளை அந்த இலட்சியங்கள் விசுவரூபம் எடுத்து வெற்றி முரசு கொட்டலாம்!

உடன்பிறப்பே; ஒன்று பார்த்தாயா? அத்வானியும் வாஜ்பேயியும் இராமர் கோயில் கட்ட பாபர் மசூதியை இடிக்க வேண்டுமென்கிறார்கள்!

பாபர் மசூதி என்ன; வி.பி. சிங் ஆட்சிக்கு வந்த கடந்த பதினோறு மாதங்களுக்குள் கட்டப்பட்டதா? இல்லையே!

நானூறு ஆண்டுக் காலமாக அயோத்தியில் பாபர் மசூதி இருக்கிறதே; அப்படியானால் 1977-ல் அத்வானியும் வாஜ்பேயும் ஜனதா ஆட்சியில் மொரார்ஜி தலைமையில் மத்திய அமைச்சர்களாக இருந்தார்களே; அப்போது ஏன் அந்த பாபர் மசூதியை அகற்றிவிட்டு இராமர் கோயில் கட்ட அவர்கள் ஆணை பிறப்பிக்கவில்லை? அப்போது இரத யாத்திரை செல்ல முடியாமல் பதவி என்னும் சாலைத் தடுப்பு அயோத்தி வழியில் இருந்தது என்கிறார்களா? அந்தோ பரிதாபம்!

இன்னொன்று; தமிழ்நாடு இப்போது எல்.டி.டி.இ. கையில் இருக்கிறது என்று பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார் ராஜீவ்!

எல்.டி.டி.இ. ஆயுதம் வாங்கிடக் கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தவர்; ஈழப் போராளிகளுக்கு தமிழ்நாட்டில் இராணுவப் பயிற்சி முகாம்களை நூற்றுக்கணக்கான இடங்களில் அமைத்துக் கொடுத்தவர்; இந்த ராஜீவ் காந்தியும் அவரது காங்கிரஸ் ஆட்சியும்தான் என்பதற்கு புகைப்பட ஆதாரம் வேண்டுமா? ஒளிநாடா ஆதாரம் வேண்டுமா? கோப்புகளின் ஆதாரம் வேண்டுமா?

விடுதலைப் புலிகள் இவரது அடிமைகளாக மாற விரும்பவில்லை என்பதற்காக அவர்கள் மீது புதிய வெறுப்பு! நம்மீது வீண் பழி!

இவரையே மேடையில் வைத்துக்கொண்டு அண்மையில் நடந்த பேரணிக் கூட்டத்தில் அ.தி.மு.க. தலைவி விடுதலைப் புலிகளுக்காக பரிந்து பேசியபோது ராஜீவ் என்ன செய்து கொண்டிருந்தார்? கீழே விழுந்து எடுத்தாரே அந்த கைக்குட்டையால் காதை மூடிக் கொண்டிருந்தாரோ? பிரபாகரனை ஆதரித்து கடந்த வாரம் சென்னை நகரச் சுவர்களில் அ.தி.மு.க. மாணவர் அணியினர் சுவரொட்டி ஒட்டியிருந்தனரே அவை காங்கிரசார் கண்ணில் படவில்லை போலும்!

பாவம்; பண்டித நேருவின் பேரன் இப்படியொரு பச்சைப் பொய்யைத் தமிழ் நாட்டைப் பற்றி பாராளுமன்றத்தில் சொல்லி – பாட்டனாரின் பண்பாடு; பெருமை இவற்றுக்கு வேட்டு வைத்திடக் கூடாது! நேரு கோபக்காரர்! ஆனால் நேர்மையான தலைவர்! அவர் பேரனா இவர்; என்று வியப்படையும் நிலை ஏற்படாதவாறு இனியாவது ராஜீவ்காந்தி நடந்து கொள்வாரா?

மற்றொன்று உடன்பிறப்பே; மண்டல் கமிஷன் பரிந்துரையை அ.தி.மு.க. தலைவியும் அந்தக் கட்சியும் ஆதரிக்க ஒரு நிபந்தனை போட்டுள்ளனர். 27 சதவிகித இட ஒதுக்கீடு என்பதை 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமாம்! இதுதான் நிபந்தனை! இங்குமட்டுமல்ல; நாடாளுமன்றத்திலும் பேசியுள்ளனர்!

27 சதவிகிதத்துக்கே இவ்வளவு இரத்தக் களறி! 50 சதவிகிதம் இப்போதே வேண்டுமாம் இவர்களுக்கு! அதிலும் இரட்டை வேடம்!

இந்தியன் எக்ஸ்பிரசுக்கு தந்த பேட்டியில் ஒருவிதம்! இப்போது அதிக சதவிகிதம் 50 வேண்டுமென மற்றொரு விதம்!

ஒருவேளை இன்றோ; நாளையோ மத்தியில் மாற்று அரசு அமைந்தால் இவர்களின் 50 சதவிகித கோரிக்கையை நிறைவேற்றுவார்களா? அல்லது அரசு அமையாமல் தேர்தல் வந்தால் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையிலும், அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும் மண்டல் கமிஷனில் 50 சதவிகித இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டோருக்கு அளிக்கப்படும் என்று உறுதிமொழி அளிப்பார்களா? இதற்கு திட்டவட்டமான பதிலை எதிர்பார்ப்பது இயற்கைதானே! தவறல்லவே இப்படி நாம் விளக்கம் கேட்பது!

எப்படியோ; மாநிலங்களை மதிக்கவும் - அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றவும் - வீணானதும் வீம்பு நிறைந்ததுமான எதிர்ப்புகளுக்கு வளைந்து கொடுத்து பதவியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற நிலை எடுக்காமலும் - நிமிர்ந்து நின்ற ஓர் ஆட்சியின் முதுகில் குத்தி விட்டார்கள்!

அவர்களின் வலையில் விழுந்தவர்கள்; வெகு விரைவில் தமது நிலையினை அறிவார்கள்!

அவர்கள் அறிந்தாலும் அறியா விடினும்; உடன்பிறப்பே! நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டியது நமது பணியாகும்!

அன்புள்ள,

மு. க.

09-11-1990

1678. மூப்பனார் முத்தார வாசகம்!

உடன்பிறப்பே,

அருமை நண்பர் மூப்பனார் அவர்கள் கூட்டங்களில் அதிக நேரம் பேசமாட்டார். பேசினால் அந்த சில நிமிடங்களில் மணி மணியான கருத்துக்களை உதிர்க்கத் தவறமாட்டார். மாணிக்க வாசகமன்றோ இதுவென மயங்கிடுவோர் உண்டு! தெவிட்டாத தெள்ளமுதத் திருவாசகம் என்று மலைத்து நிற்பார் பலர்! நகைச்சுவைக் கருத்துக்களை பேச்சின் நடுநடுவே வாரி இறைப்பதிலும் வல்லவர் அவர்!

சென்னை மியூசிக் அகடமியில் லட்சக்கணக்கான மக்கள் நிரம்பி வழிந்த கூட்டம் ஒன்றில் அவர் ஆற்றிய பேருரையை ஏடுகளில் படித்து வியப்புற்றவர்களில் நானும் ஒருவன்! அவரது விவேக உரையை, வீர உரையைக் கேட்கும் பாக்கியம் சட்டப் பேரவையில் என் போன்றவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றாலும் - மியூசிக் அகடமியில் அவர் ஆற்றிய ஜனநாயகம் பற்றிய தெளிவுரையைப் படித்துப் பார்க்கும் பாக்கியமாவது கிட்டியதே என்பதில் ஒரு ஆறுதல்! திருப்தி எனக்கு!

பாராளுமன்றத்தில் இருநூறு உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சி ஐம்பது பேர் அடங்கிய ஒரு சிறு குழுவை ஆட்சி பீடத்தில் ஏற்றியது தவறே இல்லை.

இது மூப்பனார் பேச்சின் முத்தாய்ப்பு! இந்த முத்தார வாசகத்தால் அவர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராஜீவ்காந்தியின் செயலை எவ்வளவு லாவகமாகக் கண்டித்திருக்கிறார், பார்த்தாயா?

இருநூறு பேர் கொண்ட பெரும்பான்மை கட்சி, ஐம்பது பேர் அடங்கிய சிறிய குழுவை ஆட்சி பீடத்தில் ஏற்றுவதா?

இந்தக் கேள்வியை இந்தியாவில் மட்டுமல்ல, உலக முழுவதுமுள்ள அரசியல் மேதைகள் கேட்கிறார்கள்! அப்பாவி மக்கள்கூட காரணம் புரியாமல் திகைக்கிறார்கள்!

சோழியர் குடுமி சும்மா ஆடுமா? என்று ஒரு பழைய பொன்மொழி உண்டு!

இப்போது தேர்தல் என்றால்; காங்கிரஸ் கட்சி பெரும் தோல்வியைத் தழுவிக்கொள்ளும் என்று உபதேசிக்கப்பட்டு; அதன் காரணமாக திரு. சந்திரசேகரை ஆதரிக்க ராஜீவ்காந்தி முன் வந்ததை மூப்பனார் அறிந்திருந்தும்கூட - இருநூறு பேர் சேர்ந்து ஐம்பது பேர் கொண்ட கோஷ்டியை கொலுவில் வைத்தது அவருக்குப் பிடிக்கவில்லை; அதனால்தான் இருநூறு என்ற எண்ணிக்கையையும் ஐம்பது என்ற எண்ணிக்கையையும் - மூப்பனார் கோடிட்டுக் காட்டுகிறார்.

ஐம்பது பேர் காங்கிரசை ஆதரியுங்கள் நாங்கள் ஆட்சி அமைக்கிறோம் என்று காங்கிரஸ் கேட்டதை சந்திரசேகர் ஏற்றுக்கொள்ளவில்லை!

ராஜீவுக்கு வேறு வழியில்லை! வி.பி. சிங்கின் ஆட்சி நீடித்தால் மண்டல் கமிஷன் அறிக்கையின் பரிந்துரைகள் எப்படியும் நிறைவேறியே தீரும்! அதைத் தடுத்து நிறுத்தத் தனது கட்சிக்குச் சந்திரசேகர் ஆதரவு தர முன் வராவிடினும் சந்திரசேகரைக் காங்கிரஸ் கட்சி ஆதரிப்பது என முடிவெடுத்தார்.

மண்டல் கமிஷனுக்கு மரணப் படுகுழி வெட்டலாம் என மனப்பால் குடித்தவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்தனர். வி.பி. சிங்கின் ஆட்சியைக் கவிழ்த்தனர்.

இந்தப் பணியில் பாரதீய ஜனதாவும் காங்கிரசும் கை கோத்து நின்றன!

உடன்பிறப்பே; இதைத்தான் நான் சொன்னேன் - இதற்கு; மியூசிக் அகடமி காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் மூப்பனார் ஒரு பதிலை மிகுந்த கண்ணியத்தோடு (?) கூறியிருக்கிறார்!

மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்தியதால்தான் வி.பி. சிங் ஆட்சி போயிட்டதாகக் கலைஞர் கூறுகிறார்! கிராமத்தில் சண்டை வந்தால் பெண்கள்; கோபத்தில் நீ நல்லா இருப்பியா? என்று மண்ணை வாரித் தூற்றுவார்கள்! அதுபோல் வயிற்றெரிச்சலில்தான் கருணாநிதி இப்படிக் கூறுகிறார்!

இது மூப்பனாரின் நகைச்சுவை! ஆகா! என்ன உவமை! என்ன உவமை! உடன்பிறப்பே; உவமை பொருந்தவில்லையே என்று என்னைக் கேட்காதே!

எனக்கு வயிற்று எரிச்சலாம்! மண்ணை வாரித் தூற்றுகிறேனாம்! கண்ணியமிக்க மூப்பனாரின் கற்கண்டுத் தமிழ் உரை இது!

ஆம்! வயிறு எரிகிறதுதான் - எனக்கு மட்டுமல்ல; இந்தியாவில் ஐம்பத்திரண்டு சதவிகித பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வயிறு எரியத்தான் செய்கிறது!

பத்தாண்டு காலமாக அந்த வாய்ப்பற்ற மக்களுக்கு வாய்ப்பளிக்க வந்த வரப்பிரசாதமாம் மண்டல் கமிஷனை எதிர்த்து ஒழிப்பதற்காக பாரதீய ஜனதா ரத யாத்திரை! அயோத்தி படை எடுப்பு! அதற்கு காங்கிரஸ் கட்சி, அதன் வால் பிடிக்கும் கட்சிகளின் மறைமுக ஆதரவு! இதை நினைத்தால் இந்தியாவில் உள்ள சிந்திக்கத் தெரிந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெல்லாம் வயிறு எரியத்தானே செய்யும்!

அதைத்தான் பண்பாளரான மூப்பனார் அவர்கள் மியூசிக் அகடமியில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் வர்ணித்திருக்கிறார்! சிரிக்கும் துணுக்கு ஒன்றும் அவரது பேச்சில் உண்டு!

காங்கிரஸ் கட்சி ஜனநாயக இயக்கமாம்!

அநேக ஆண்டுகளாக அட்டாக் கமிட்டியிலேயே ஆயுளை நகர்த்திக் கொண்டிருக்கும் காங்கிரசை ஜனநாயகப் பேரியக்கம் என்று கூறி எவ்வளவு பெரிய சிரிப்புத் துணுக்கை மூப்பனார் தனது உரையில் நுழைத்திருக்கிறார் பார்த்தாயா?

அவரது சவால் உரையும் அந்தச் சங்கீத மண்டபத்தில் முழங்கியதாம்! ஏடுகள் வெளியிட்டுள்ளன; நான் சொல்லவில்லை!

மண்டல் கமிஷனை முன் வைத்து கருணாநிதி தேர்தலை சந்திப்பாரா?

இது; அவரது கேள்வி!

மண்டல் கமிஷன் என்பது; மாநிலங்களுக்கு மட்டுமல்ல; மத்திய அரசுக்கே மிக முக்கியமாகத் தேவைப்படுவது!

நமது தமிழ் மாநிலத்தில் இட ஒதுக்கீடு இருக்கிறது!

மத்திய அரசு வேலைவாய்ப்புக்களிலும் இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அளிக்க வேண்டும் -

தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீடு சரிவர செயல்பட வேண்டுமென நாம் குரல் கொடுக்கிறோம்!

மண்டல் கமிஷனை முன் வைத்துத் தேர்தலுக்கு நிற்பாரா எனக் கேட்பவருக்கு எனது பதில் கேள்வி இதுதான்!

எப்போது பாராளுமன்றத் தேர்தல்? அப்போது மண்டல் கமிஷனை முன்வைத்து வாக்கு கேட்க நாங்கள் தயார்! அதனை எதிர்த்து வாக்கு கேட்க காங்கிரஸ் தயாரா?

மூப்பனார் அவர்களிடம் விளக்கமான பதிலை எதிர்பார்க்கிறேன்!

பொருளாதார அடிப்படையைப் போட்டுக் குழப்பும் காங்கிரஸ் கட்சியின் உண்மை உருவத்தை நாடு உணர்ந்தே இருக்கிறது!

இறுதியாக மூப்பனார் ஒன்றை சொல்லியிருக்கிறார்! மிக்க மகிழ்ச்சி!

கருணாநிதி போகப் போகிறார்!

இது அந்தக் கனவானின் பேச்சில் ஒரு பகுதி! நான் மட்டுமல்ல! பிறந்தோர் அனைவரும் ஒரு காலத்தில் போகப் போகிறவர்கள்தான்!

அப்படிப் போகிற காலத்திற்குள் மொழிக்கு, நாட்டுக்கு அடக்கப்பட்ட சமுதாயத்துக்கு என்ன செய்தோம்?

பாடுபட்டோமா?

அல்லது பதவியைக்

காத்துக்கொள்ள

பச்சோந்தி வேடம்

போட்டோமா?

இதற்கு நமக்குக் கிடைக்கும் பதில்; பாடுபட்டோம் - அதற்காக பலியாகவும் தயாராக இருந்தோம் என்பதுதான்!

அன்புள்ள,

மு. க.

16-11-1990

1679. அன்பு மாறாமல் ஆயுளை நகர்த்திக் கொண்டிருக்கிறேன்!

உடன்பிறப்பே,

சட்டப் பேரவை நிகழ்ச்சிகளுக்கு மூப்பனார் வராததற்கும் – எப்போதாவது அத்திபூத்தது போல வந்தாலும் எந்த பிரச்சினை குறித்தும் பேசாததற்கும் ஒரு காரணத்தைக் கூறியிருக்கிறார்.

சட்டமன்றத்தில் முதல்வர் நிதிநிலை அறிக்கையை படித்தபோது முதல்வரின் முன்னிலையிலேயே பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் தி.மு.க.வினர் அளித்த மரியாதையைக் கண்ட பின்னர் அங்கு பிரச்சினைகளை வாதிட்டு தீர்வு காணும் எண்ணத்தையே நான் இழந்து விட்டேன்.

இதுதான் நண்பர் மூப்பனார் கண்டுபிடித்துக் கூறியுள்ள காரணம்!

சட்டப்பேரவையில் காங்கிரஸ் கட்சி ஆளுங்கட்சியாக இருந்தபோது எத்தனையோ கட்சிகள் எதிர்க்கட்சிகளாக இருந்திருக்கின்றன! ஏன் தி.மு.கழகமும்கூட எதிர்க்கட்சியாக இருந்திருக்கிறது! முதுகுளத்தூர் கலவரம் போன்ற பிணக்காடு குவிந்த கலவரத்துக்குப் பிறகுகூட சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த தி.மு.க.வோ அல்லது மற்ற கட்சியினரோ காங்கிரஸ் முதலமைச்சரை பேசவிடாமல் தடுத்தது இல்லை! கண்ணியமாக வெளிநடப்பு செய்தது உண்டு; அல்லது முதலமைச்சர் பேசிய பிறகு அதன்பேரில் நடைபெறும் விவாதத்தில் கடுமையாகக் கருத்துக்களை எடுத்து வைத்தது உண்டு!

என் மீதும் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் சாதிக் மற்றும் கழக முன்னணியினர் மீதும் இந்திரா காந்தியை கொலை செய்ய

சதித்திட்டம் வகுத்ததாக எம்.ஜி.ஆர். ஆட்சியில் எங்கள் மீது பொய் வழக்கு போட்டதும் உண்டு!

அதற்கு பிறகு சட்டப்பேரவையில் முதலமைச்சர் உரை நிகழ்த்தியதும் உண்டு! நிதியமைச்சர் பட்ஜெட் படித்ததும் உண்டு!

எதிர்க்கட்சித் தலைவனாக இருந்த நானோ அல்லது கழக உறுப்பினர்களோ; அப்படிப்பட்ட நேரங்களில் எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்க ஜனநாயக முறையில் வெளிநடப்பு செய்திருக்கிறோமே தவிர, எகிறிப் பாய்ந்து முதலமைச்சரை நோக்கி நீ ஒரு கிரிமினல் என்று கூச்சல் போட்டது கிடையாது! முதலமைச்சர் படிக்கத் தொடங்கிய பட்ஜெட் புத்தகத்தைப் பிடுங்கி கிழித்தது கிடையாது! முதல்வர் முகத்தில் குத்தி மூக்குக்கண்ணாடியை உடைத்து கீழே விழச் செய்ததும் கிடையாது!

பட்ஜெட் படிக்க விரும்பவில்லையென்றால் வெளிநடப்பு செய்திருக்க வேண்டும் - படிக்கவே கூடாது என்று திட்டமிட்டு காங்கிரஸ் சார்பில் குரல் எழுப்பியதும்; அவர்களின் துணையுடன் என் கையிலிருந்த பட்ஜெட் புத்தகத்தை அ.தி.மு.க.வினர் பிடுங்கிக் கிழித்ததும்தான் நேர்மையான ஜனநாயக மரபு என்று மூப்பனார் கூறுகிறாரா?

சரியாகவோ தவறாகவோ தங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தலைவன்; தங்கள் கண்களுக்கெதிரே தாக்கப்படுவதை கண்டு அந்த தலைவனை பின்பற்றுபவர்கள் இதைவிட பொறுமையைக் கடைப்பிடித்திருக்க முடியுமா?

முதல்வராக இருந்த பெருந்தலைவர் காமராஜருக்கு எதிராக அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருந்தால்; மூப்பனார் ஒருவேளை எம்.எல்.ஏ.வாக இருந்திருந்தால் எப்படி துடித்திருப்பார்!

என் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்தபோது இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தால் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அக்கினிக் குன்றுகளாக பொங்கியிருக்க மாட்டார்களா?

பட்ஜெட் கூட்டத்தில் பட்ஜெட் படிக்கும்போது, எதிர்க்கட்சிகள் வெளியேறுவது உண்டு!

வெளியேறி, பட்ஜெட் புத்தகத்தை பிடுங்கி - கிழித்தெறிந்த வரலாறு, தமிழக சட்டமன்றத்தில் கிடையவே கிடையாது!

அந்த பெருமையான வரலாற்றை உருவாக்கிய சிறப்பு, மூப்பனாரின் காங்கிரசுக்கும், அ.தி.மு.க. கட்சிக்கும் உண்டு!

முதல்வர் பட்ஜெட் படிக்கும்போது என்ன நடந்தது என்பதை தொலைக்காட்சியினர் படம் எடுத்துள்ளனர். அதை டி.வி.யில் காட்ட வேண்டும் என்று காங்கிரசார் வலியுறுத்தினார்கள். முதலில் பேரவைத் தலைவர் அதனை ஏற்கவில்லை. அந்த படத்தை தொலைக்காட்சியில் காட்ட அனுமதிக்க வேண்டுமென நானே சபையில் பேரவைத் தலைவரை வேண்டினேன். பேரவைத் தலைவர் ஒப்புதல் அளித்தார். ஆனால் ராஜீவ் ஆட்சிதான் அப்போது நடைபெற்றது என்றாலும், தொலைக்காட்சியில் அந்த படம் போடப்படவில்லை! போட்டிருந்தால் என் கையில் இருந்த பட்ஜெட்டை அ.தி.மு.க.வினர் பிடுங்கிக் கிழித்ததையும், என் முகத்தில் குத்தி மூக்குக்கண்ணாடியை உடைத்ததையும், உடைந்த கண்ணாடியை நான் மூப்பனார் அவர்களிடம் காட்டியதையும் காட்சியாக கண்டிருக்கலாம்!

இவ்வளவு உண்மைகளையும் மறைத்து விட்டு -மனச்சாட்சியை விரட்டிவிட்டு - மூப்பனார் அவர்களால் எப்படி இவ்வாறு ஒரு பொய்யைச் சொல்ல முடிகிறது என்பதுதான் எனக்கு புரியவில்லை!

மண்டல் கமிஷனுக்கு நான் எந்த முயற்சியும் செய்யவில்லையாம்! மூப்பனார் அறிவித்துள்ளார்!

1989 மே மாதம் சட்டப் பேரவையில் மண்டல் கமிஷனுக்காக தீர்மானம் நிறைவேற்றி, பிரதமராக இருந்த ராஜீவ் காந்திக்கு அனுப்பியது நான்தான் என்பது மூப்பனாருக்கு தெரியாது! பாவம்; அவர்தான் சட்டசபைக்கு ஆடிப்பிறைபோல வருபவராயிற்றே! அதனால் அவருக்கு தெரியாது!

அந்த தீர்மானத்தை பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் அலட்சியப்படுத்தியதும் கபிஸ்தலம் கனவானுக்கு தெரிந்திருக்க முடியாது!

இப்போது சொல்கிறார்; மண்டல் கமிஷன் பரிந்துரையை காங்கிரஸ் ஆதரிக்கிறது என்று!

மண்டல் கமிஷனை எதிர்த்து ராஜீவ் காந்தி பேசியதை மூப்பனார் படித்துப் பார்க்கவில்லை போலும்!

காங்கிரசின் தோழமைக்கட்சியான அ.தி.மு.க. மண்டல் கமிஷனில் ஐம்பது சதவிகிதம் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்க வேண்டுமென்று புதிய வேடம் கட்டிக்கொண்டிருக்கிறது; ஐம்பது சதவீதத்தை வலியுறுத்தி - மத்தியில் உள்ள புதிய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மூப்பனார் ஓர் அறிக்கையாவது விடுவாரா? அப்படி அறிக்கை விடுத்தால் என்னைவிட மகிழ்ச்சி அடைபவர் யாரே உளர்?

ஏதோ அவாள் இவாள் என்று நான் பேசுவதாக மூப்பனார் குத்திக் காட்டுகிறார்! குடுமிபிடிச் சண்டை வராதா எனக் கனவு காண்கிறார்!

மூப்பனாருக்கு நினைவூட்ட கடமைப்பட்டுள்ளேன்.

தந்தை பெரியார் மறைந்து அவரது பொன்னுடலை பெரியார் திடலில் அடக்கம் செய்தபோது அழுது புலம்பிய என்னை கட்டிப் பிடித்துக்கொண்டு மூப்பனார் சொன்ன வாசகம்தான் இது!

பெரியார் போய்விட்டார்! இனிமேல் பிராமணரல்லாதாருக்கு காமராஜரும், நீங்களும்தான் கதி!

என்னதான் மூப்பனார் என்னை இழித்தும் பழித்தும் பேசினாலும் தந்தை பெரியாரின் உடல் அடக்கத்தின்போது அவர் என்னிடம் கூறிய அந்த வாசகத்தை நினைத்து நினைத்து அவர்பால் கொண்ட அன்பு மாறாமல் ஆயுளை நகர்த்திக் கொண்டிருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

18-11-1990

1680. நிலையற்றதை நினைத்துப் பார்த்தால்!

உடன்பிறப்பே,

உறங்கி விழித்தேன்
உதயத்திற்கு முன்பாகத்
தலை நீட்டும் வைகறை!
காலையில் நாள்தோறும்
நடக்கும் பழக்கம் எனக்கு!
அதற்கென எழுவதற்கு முன்
அமைதியின் மடியில் சிந்தனைக்
குழந்தை;
மெல்லக் கால் கைகளை அசைத்து
விளையாடியது!
சிந்தனையின் மழலையைக்
கடிதமாக்குகிறேன்; புதுக்
கவிதையாக ஆக்கி!

★

நிலையற்றது என்பதுதான்

புதுக்கவிதையின் தலைப்பு!

நிலையற்றதே! நீ எத்தனை பேர் நெஞ்சில்
என்னென்ன நினைவு அலைகளைப்
புரட்டி விடுகிறாய்!
ஆழத்தில் - ஆமாம் இதயத்தின்
ஆழத்தில் படிந்தும் பதிந்தும் போயிருந்த
இலட்சியங்களை; உன்னால் நிலையற்றவை
ஆக்கிவிட முடிகிறதே!

உனக்கு அற்ப ஆயுள் என்று தெரிந்தும்
உன் மோகனக் கிறு கிறுப்புக்காக
மனித ஜீவன்கள் சோரம் போகின்றன!

நிலையற்றது...
எது?
எது?

வாழ்வு நிலையற்றது என்கிறான்!
இது அவன் கண்டுபிடிப்பு அல்ல;
கண் கலங்க வெளிப்படும் வேதனைக் குரல்!
உருண்டோடிடும்
பணம் காசுகள்
நிலையற்றது என்கிறான்;

ஆனால் அந்த நிலையற்றதுகளின்
நிர்வாண உடலில்
உச்சி முதல் உள்ளங்கால் வரையில்
அவன் உதடு பதிக்காத இடமே இருப்பதில்லை!

அதற்கென அவன்
தன்னையே விற்றுக்
கொள்கிறான்!

அதனால்தான்
உன்னை விற்காதே! என்று
பாவேந்தன் பாரதிதாசன் சுடுதழலாய்ச்
சொல் வீசினான்!
நிலையற்றதே!
பதவி என்ற பெயரால்,
பணம் என்ற பெயரால்,
நிலையற்ற உனக்கும்
நிலையான தன்மைக்கும்
இடையில் இருக்கின்ற அகண்ட வெளியை
அந்த மனித வியாபாரிகள்;
தங்கள் வசதிக்காக மறந்தே விடுகிறார்கள்!

நிலையற்றது பணமாக இருக்கலாம்;
ஆனால் பண்பாக இருத்தலாகாது!

நிலையற்றது மகுடமாக இருக்கலாம்;
ஆனால் ஒரு மனிதனின் சுயமரியாதையாக
இருக்கக் கூடாது!

நிலையற்றது உயிராக இருக்கலாம்;
உடலாக இருக்கலாம்!

ஆனால் மானமும் அதில் விளையும்
புகழ் மலரும் நிலையற்றதாக
இருக்கக் கூடாது!
இருக்கவே இருக்காது!
நிலையற்றதைப் பற்றிக்
கவலை கொண்டு அலையாமல்
நிலையற்றதற்காக
நெஞ்சு நிமிர்த்தியவர்கள்தான்
வரலாற்றில்
வாழ்கிறார்கள்!

நிலையற்றதையெல்லாம்
நிலையானது என
எண்ணிக்கொண்டு;
நிழல் மீது விழுந்து
தழுவிக்கொள்ளும் –
மாஜி பகுத்தறிவாளர்கள் இல்லாமலில்லை!

அவர்கள் செத்தபிறகு நிலைக்க வேண்டிய
வீர வரலாறு குறித்துக்
கவலைப் படாமல்
நிலையற்றதைக் கட்டிக்கொண்டு
நிமிர்ந்து நடக்க முயலுகிறார்கள்!
எனினும் இயலவில்லை! வளைகிறார்கள்!
விழுவாய் விளைகிறார்கள்!

நிலையற்ற பதவி சுகமும்
பண சுகமும்; நீர் மேல் எழுத்து!

அந்த எழுத்தே தமது
தலை எழுத்தெனத்
தடுமாறி வீழ்வோர் பதர் மனிதர்!

நிலையற்றது;
ஒரு நீர்க்குமிழி!
அந்தக் குமிழிதான்
சில மனிதர்களுக்குக்
கொற்றக்குடை!

நிலையானது;
தியாகம்
உறுதி
உழைப்பு
மானம்
மரியாதை
மதிப்பு
வீழ்ந்தாலும் அவர்களுக்கு
அதுதான் வெற்றிக் குடை!

அன்புள்ள,

மு. க.

22-11-1990

1681. மறியலும் - மலரும் நினைவுகளும்!

உடன்பிறப்பே,

குங்குமம் இதழில் கலைஞர் பக்கம் என்ற தலைப்பில் சில கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதினேன். அவற்றில் மூன்று கட்டுரைகள் மதுவிலக்கு பற்றியது. அந்தக் கட்டுரைகளின் சில பகுதிகளே இன்றைய கடிதமாகிறது.

கடற்கரையிலே நேற்று காலையில் உலாவப் போனீங்க போல இருக்கே?

உலாவப் போனேனா? என்ன உளர்றே?

இல்லிங்க - என்னை விட்டுவிட்டு கார்ல விர்ருன்னு கிளம்புனீங்க - ஒருவேளை உலாவப் போனீங்களோன்று நினைச்சேன்.

மடையா! மடையா! மலிவு விலை மது கூடாதுன்னு மறியல் நடக்குதே தெரியுமா உனக்கு? அங்க போனேன்!

அப்படின்னா என்னாங்க? மலிவு விலையிலே மது கொடுக்காதே! அதிக விலையிலே கொடுன்னு அர்த்தங்களா?

கள்ளச் சாராயத்தை ஒழிக்கிறேன்னு சொல்லிட்டு மலிவு விலையிலே மது கொடுத்தா என்னடா ஆகும்!

கள்ளச்சாராய வியாபாரம் பாதிக்கப்படும்! இப்ப புரியுதுங்க! கள்ளச்சாராய வியாபாரிங்க பாதிக்கப்படாம இருக்கிறதுக்காக மலிவு விலை மதுவை எதிர்த்துப் போராட்டம் நடத்துறிங்க! இல்லிங்களா?

நானா நடத்துறேன் - உண்மையிலேயே சில காந்தி பக்தர்கள் நடத்துறாங்க! அதில் நானும் போயி கலந்துக்கிறேன்!

இங்கப் போராட்டம் நடத்துறவுங்க பெங்களூருக்கும், ஐதராபாத்துக்கும் எப்ப போவாங்க?

ஏண்டா அதைக் கேக்கற? அவுங்க ஏன் பெங்களூர், ஐதராபாத் போகணும்?

அந்த ஸ்டேட்டிலே எல்லாம் மதுவிலக்கு கிடையாதுங்களே! அங்கேயும் எல்லா சரக்கும் தாராளமாக கிடைக்குதுங்களே?

அட அசடே! அங்கே இரண்டு இடத்திலும் நம்ப கட்சி ஆட்சி நடக்குதுங்கிறது உனக்குத் தெரியாதா?

நம்ப கட்சி ஆட்சி நடந்தா அங்கே மலிவு விலை மது, அதிக விலை மது இரண்டும் விக்கலாங்களா?

அதையெல்லாம் கண்டுக்கப்படாது! உனக்குத் தெரியுமா? குஜராத்திலே மகாத்மா பிறந்த வீட்டுக்கு அடுத்த வீட்டிலேயே பாதாளக் கிடங்கு வெட்டி அதிலே கள்ளச்சாராயத்தை கடல் மாதிரி விட்டு வச்சிருந்தாங்க!

தெரியாதுங்க! ஏங்க அங்கெல்லாம் போயி மறியல் நடத்தினா என்ன?

ஊருக்கு இளைச்சவன் பிள்ளையார் கோயில் ஆண்டின்னு - இங்கே ஆட்சியிலே இருக்கிறவன்தான் நமக்கு எதிரி! அதனாலதான் இங்கே மனிதச் சங்கிலி! மறியல்! எல்லாமே!

நம்ப கட்சி அகில இந்தியக் கட்சியாச்சுங்களே, அதனால கேட்டேன் - இந்தியா பூரா மதுவை எதிர்த்து கன்யாகுமரியிலே ஆரம்பிச்சு, காஷ்மீர் வரையிலே மறியல் நடத்துனா மகாத்மா காந்தி சிலையாக நின்று இல்லீங்க, நிஜமாகவே உயிரோடு வந்து எல்லோருக்கும் ஆசீர்வாதம் வழங்குவாரே!

சரி! சரி! கேலி, கிண்டல் கிடக்கட்டும்! ஆமாம் - இந்த வாரம் நம்ப பகுதியிலே கடைங்க ஏலம் வருதாமே ஒண்ணு ரெண்டு நம்ம பினாமிகளைவிட்டு ஏலம் எடுக்க ஏற்பாடு பண்ணிட்டியா?

இந்த உரையாடலை ரசித்திடும் உடன்பிறப்பே, இதோ மற்றொரு விளக்கம் -

1971-ல் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளராக இருக்கிறார். கோவையில் நடைபெற்ற பொதுக் குழுவிலேதான் மதுவிலக்கை ஒத்தி வைப்பது என்கின்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது அரசுக்கு அனுப்பப்பட்டு, அது ஆராயப்பட்டு, அந்தத்

தீர்மானம் செயல்வடிவம் பெற்றது. 71 - க்கு முன்பே 1969 - ல் 13.9.69 - ல் மாலைமுரசு பத்திரிகையில் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் வெளியிட்ட ஒரு அறிக்கையை கவனத்திற்குக் கொண்டு வருவது நலம் என்று கருதுகிறேன். எம்.ஜி.ஆர். அந்த அறிக்கையில் சொல்கிறார்:

மதுவிலக்கு அமலில் இருந்தாலும், பர்மிட் உள்ள பணக்காரர்கள் சட்டத்தின் உதவியோடு சாதாரணமாகக் குடிக்கிறார்கள். ஏழைகளும் மதுக் கஷாயம் போன்றவற்றை, சட்டத்தின் உதவியோடு குடிக்கிறார்கள். இவை இரண்டையும் மதுவிலக்குச் சட்டம் தடைசெய்ய இயலவில்லை. பர்மிட்டிற்கு மாநில அரசும், மது கஷாயத்திற்கு மத்திய அரசும் தடை போடவில்லை. இருந்தாலும் மதுவிலக்குச் சட்டம் அமல்படுத்தப்படுகிறது. ஆனால் மதுவிலக்கினால் எந்தத் தீமையும் குறையவில்லை. எந்தத் தீமையைப் போக்க மதுவிலக்குக் கொண்டு வரப்பட்டதோ, அது முன்பைவிட இப்போது அதிகமாக உள்ளது.

தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமலில் இருந்தாலும், அதைச் சுற்றியுள்ள மாநிலங்களில் மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிறது. அந்த மாநிலங்கள் மதுவினால் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் பெற்று வருகின்றன. ஆனால் தமிழ்நாடு அந்த நஷ்டத்தை ஏற்றுக்கொண்டே வருகிறது. ஆனால் யாருமே மது அருந்தாது இருக்கச் செய்ய முடியாத நிலையிலே உள்ளது. பணம் இழந்தாலும் லட்சியம் பூரணமாக நிறைவேறியபாடில்லை. மேலே கூறப்பட்ட கருத்தும், கொள்கையும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் உடன்பாடானது. அவருக்கு மாறுபாடு இருக்குமானால், எனது அறிக்கைக்கு மாற்று அறிக்கை விடுத்திருப்பார். ஆகவே கலைஞருடைய கொள்கையும், என்னுடைய கொள்கையும் ஒன்றுதான். இதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். மதுவிலக்குக் கொள்கையில் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள எந்தத் தனிமனிதனுக்கோ, எந்தக் கட்சிக்கோ உள்ள அக்கறையைவிட, இந்தக் கொள்கை மக்களுக்குத் தேவையானது என்ற இலட்சியப் பிடிப்பைவிட, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான கலைஞருக்கு அதிக அக்கறையும் அதிகப் பிடிப்பும் உண்டு என்பதை மற்றையோரைவிட அழுத்தமாக என்னால் துணிந்து

கூறமுடியும் என்று எனது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கே சொன்னார்.

மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் போலீசாரால் கண்டுபிடிக்கப் பட்டு, பதிவு செய்யப்பட்ட குற்றங்களுடைய எண்ணிக்கை மாத்திரம் - கண்டுபிடிக்கப்படாதவை வேறு - பதிவு செய்யப்படாத குற்றங்கள் வேறு - 61-ஆம் ஆண்டு 1,12,889 பேர். 1962-இல் 1,29,977 பேர். 63-இல் 1,23,006 பேர். 64-இல் 1,37,716 பேர். 65-இல் 1,65,052 பேர். 66-இல் 1,89,348 பேர். 67-இல் 1,90,713 பேர். 68-இல் 2,53,607 பேர். 69-இல் 3,06,555 பேர். 70-இல் 3,72,472 பேர் இப்படி ஒரு கணக்கை அன்றைக்கே நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆனந்த விகடன் பத்திரிகையிலே வெளியிட்டிருக்கிறார்.

எனவே, 1971க்குப் பிறகுதான் ஒரு தலைமுறைக்கு கள் என்றால் இன்னதென்று தெரியும். அதற்கு முன்பெல்லாம், அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் சோமா, சுரா என்ற பானங்களின் பெயர்கள்தான். கள்ளையும், சாராயத்தையும் தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்திய கசடன், கயவன் கருணாநிதிதான் என்று சொன்ன வாதத்தை பொடியாக்குகிற வகையில்தான் எம்.ஜி.ஆர். அவர்கள், அந்தப் புள்ளிவிவரத்தை அன்றைக்கே ஆனந்த விகடன் பத்திரிகையில் தந்திருக்கிறார்.

பிறகு 21.3.1981-இல் அ.தி.மு.க. அரசினுடைய நிதிநிலை அறிக்கை நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால் படிக்கப் பெற்றது.

அதையொட்டி மதுவிலக்கைத் தளர்த்தி, சட்டம் கொண்டுவரப்பட்டது. விவாதங்கள் நடைபெற்றன.

சட்டமன்ற மேலவையில் இந்த மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வின்போது வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் 31.8.1981-இல் பேசியது என்ன தெரியுமா?

இன்றைக்கு மதுவிலக்கு ரத்து செய்யப்படும் நிலையில், அதனால் ஏற்படும் சங்கடங்களைப் போக்க திருத்தச் சட்ட முன்வடிவு இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதைக் கொண்டுவர வேண்டிய அத்தியாவசிய நிலைக்கு ஏன் அரசு வந்தது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஒன்றைச் சொல்லலாம். வீட்டிலே நன்றாகக் காய்ச்சி வடிகட்டி, அதில் இருக்கிற கிருமிகளைக் கொன்று தண்ணீரைக் குடிப்பது நல்லது. குளத்தில் உள்ள தண்ணீரைக் குடிப்பது நல்லதல்ல. இருந்தாலும் சிலர் அதைக் குடித்து விடுகிறார்கள். சாக்கடைத் தண்ணீர் இன்னமும் மோசமானது. மது குடிக்காமல் இருப்பது வீட்டிலே இருக்கும் காய்ச்சிய தண்ணீரைக் குடிப்பதற்குச் சமம். குளத்துத் தண்ணீரைக் குடிப்பது அரசு கொடுக்கும் மதுவுக்குச் சமம். அதைக் கொடுக்கா விட்டால் சாக்கடைத் தண்ணீரைக் குடித்துவிட்டுச் சாகிறார்கள். இதிலிருந்து காப்பாற்றத்தான் - மக்களை நல்ல தண்ணீரைக் குடிக்க வைப்பதற்காகத்தான் இந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். சாக்கடைத் தண்ணீரைக் குடிக்காமல் இருப்பதற்குத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று நண்பர் எஸ்.டி.எஸ். அன்றைய அமைச்சர் பேசினார்.

இவை 28.3.90 அன்று நான் சட்டப்பேரவையின் விவாதத்தின்போது சுட்டிக்காட்டிய ஆதாரங்கள்!

இதோ இன்னுமொரு விளக்கம் -

ஏப்ரல் திங்கள் 1989-ஆம் ஆண்டு ப்ரோப் இந்தியா என்ற ஆங்கில ஏட்டில் மிஸ்ரா என்பவர் எழுதியுள்ளதாவது-

குஜராத் மாநிலம் போர்பந்தரில் மகாத்மா காந்தியின் சொந்த ஊரில், ஒரு கள்ளச் சாராய வியாபாரி, தரைக்கு அடியில் பெட்ரோலைச் சேமிப்பதைப்போல, பெரிய குளம் கட்டி 50 ஆயிரம் லிட்டர் சாராயத்தைத் தேக்கி வைத்திருக்கிறார். பெட்ரோல் பங்க் போலவே, அவரது கடையில் ஒரு கை பம்பு இருக்கிறது. கை பம்பை அடித்தால், பாதாளத்திலிருந்து பாய்ந்து வருகிறது சாராயம். எங்கோ, தொலைதூரத்தில், டெல்லி ராஜ்காட்டில், மகாத்மா காந்தி தனது சமாதியில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறார். தனது பிறந்த வீட்டிற்குப் பக்கத்திலே, நான்கு ரூபாய் தந்தால், கள்ளச்சாராயம் ஒரு முழு கிளாஸ் அளவுக்குக் கிடைக்கிறது என்பதை காந்தி அறிய நேர்ந்தால் சமாதியின் அடியிலேயே நெளிவார்.

இது மிஸ்ரா, ப்ரோப் இந்தியாவிலே எழுதிய கட்டுரையாகும். அதற்காகத்தான் அதை நான் இங்கே படித்துக் காட்டினேன்.

மற்றுமொன்று நாடாளுமன்றத்தில் 30.7.80-இல் ரத்தன் சிங் என்பவர் பிரதமர் அன்னை இந்திரா காந்தியை பார்த்துக் கேட்கிறார் ஒரு கேள்வி.

இது முக்கியமான கேள்வி. இந்த அரசு மதுவிலக்கை ஆதரிக்கிறதா அல்லது எதிர்க்கிறதா என்பது தெளிவாக்கப் படவில்லை. மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில் இதுவரை குழப்பமான ஒரு நிலையே நீடித்திருக்கிறது. பம்பாய் உல்லாஸ் நகரைச் சேர்ந்த ஒரு சாராய வியாபாரி வெளியிட்டுள்ள விளம்பரத்தின் மத்தியில் பிரதம அமைச்சர் இந்திரா காந்தியின் படம் இடம் பெற்றுள்ளதே, இது மக்களை மேலும், மேலும் குடிக்க அழைப்பதைப் போன்ற ஒரு எண்ணத்தை ஏற்படுத்துகிறதே. அந்த விளம்பரத்தை பற்றி அறிவாரா, அந்தமாதிரி விளம்பரம் செய்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அரசு தனது மதுவிலக்குக் கொள்கையை தெளிவாக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

அதற்கு அன்னை இந்திரா காந்தி சொல்கின்ற பதில்:-

நான் இந்த விளம்பரத்தைப் பார்க்கவேயில்லை. என்னுடைய படத்தையோ, பொதுவாழ்வில் உள்ள எவருடைய படத்தையோ அதிலும் குடிப்பழக்கத்திற்கு ஆட்படாதவர்களுடைய படத்தையோ இதுபோன்ற விளம்பரங்களில் பயன்படுத்துவது தவறானதாகும். மக்கள் மது அருந்தக்கூடாது என்பதுதான் எங்கள் கட்சியின் கொள்கையாகும். ஆனால் நாம் கடைப்பிடித்து வரும் மதுவிலக்குக் கொள்கை இந்த விளைவை ஏற்படுத்தியிருக்கிறதா என்பதுதான் இப்போதைய கேள்வி. அதுவே நமது கவலை. அதனால்தான் ஆரம்ப காலத்திலேயே மதுவிலக்கைவிட தன்னடக்கத்தை நாம் வலியுறுத்த வேண்டும் என்று சிந்தித்தோம். எப்படி ஆகிலும் இது சம்பந்தமான ஒரு கொள்கையை நாம் உருவாக்கியாக வேண்டும். இதுவரை மதுவிலக்குக் கொள்கை எங்கும் செயல்படவில்லை. பெருமுயற்சி மேற்கொண்டுள்ள குஜராத் மாநிலத்தில் கூட செயல்படவில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் ரத்தன் சிங் எம்.பி. கூறுகிறார்.

இந்த விளம்பரத்தை வைத்தவர் வேறு யாருமல்ல. அம்மையார் அவர்களே, பம்பாயிலே உள்ள லோக்கல் காங்கிரஸ் கட்சித் தலைவர்தான் அந்த விளம்பரத்தை வைத்தார்.

இந்திரா காந்தி பதில்:-

எனக்கு அதுபற்றித் தெரியாது. அது கவனிக்கப்படும்.

இதுவும் 28.3.90 அன்று சட்டப் பேரவையில் நான் ஆற்றிய உரையில் எடுத்துக்காட்டிய ஆதாரங்கள்தான்!

இவை, நிந்தனையாளர்கள் சிந்தனை செய்வதற்காக அல்ல! நிந்தனையாளர்களைப் பற்றி மக்கள் சிந்தனை செய்வதற்காக மலரும் நினைவுகளாகும்!

அன்புள்ள,

மு. க.

24-11-1990

1682. சமூக நீதி அமைப்புகள் சங்கமிப்போம்!

உடன்பிறப்பே,

இந்தத் திங்கள் எட்டு ஒன்பது - சனி, ஞாயிறு நாட்களில் முன்னாள் பிரதமரும் தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவருமான வி.பி. சிங் அவர்களை வரவேற்றிடத் தமிழகம் தயாராகிக் கொண்டிருக்கிறது. ஏழாம் தேதி இரவு பத்து மணி அளவில் சென்னை விமான நிலையம் வந்தடைகிறார். நமது கோரிக்கையை ஏற்று அண்ணா என்றும் காமராஜர் என்றும் விமான நிலையத்தின் இரு பகுதிகளுக்குப் பெயர் சூட்டிய அந்தப் பெருமகன்; ஒளிவிடும் அந்தப் பெயர்களைப் பார்த்து மகிழ்ந்தவாறே கழகத்தினராகிய நாமும் நமது தோழமைக் கட்சித் தலைவர்களும் செயல்வீரர்களும் வழங்கிடும் வரவேற்பைப் பெற்றுக் கொள்வார். அங்கிருந்து அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்திக்க வரும் அவருக்கு சென்னை மாவட்ட கழகமும், செங்கை அண்ணா மாவட்ட கழகமும், தோழமைக் கட்சிகளின் அமைப்புகளும் வழிநெடுக உற்சாக வரவேற்பு ஏற்பாடு செய்கின்றனர்.

மறுநாள் காலை 8ஆம் நாள் சென்னையிலிருந்து காரில் புறப்பட்டு, அன்றிரவு மதுரையில், நடைபெறும் பொதுக்கூட்டத்துடன் முதல் நாள் நிகழ்ச்சி நிறைவு பெறுகிறது. வழியில் செங்கை அண்ணா, தென்ஆற்காடு, திருச்சி, புதுக்கோட்டை, திருப்பத்தூர், மேலூர், மதுரை எனப் பல நிகழ்ச்சிகள். அதற்கடுத்த 9ஆம் நாள் மதுரை விட்டுக் கிளம்பி, திருமங்கலம், விருதுநகர், சாத்தூர், கோயில்பட்டி, நெல்லை, நாகர்கோயில் என அந்தநாள் முழுதும் நிகழ்ச்சிகள். குறிப்பாகச் சொன்னால் இரண்டு நாட்களில் பத்து மாவட்டங்கள்.

எழுச்சிமிக்கதாகவும், இலட்சியத்துக்கு வலிவு சேர்ப்பதாகவும் இந்த நிகழ்ச்சிகள் அமைய வேண்டுமென்பதற்காக நவம்பர் 29ஆம்

நாள் மாலை தளபதி வீரமணி அவர்கள் கூட்டிய ஆலோசனைக் கூட்டத்தில் முஸ்லிம் லீக், பாட்டாளி மக்கள் கட்சி, வன்னியர் சங்கம், தேவர் பேரவை, மற்றுமுள்ள சமூகநீதி அமைப்புகள் கலந்து கொண்டு - பின்னர் என்னுடனும் அவர்கள் கலந்துபேசி வி.பி. சிங் அவர்களின் சுற்றுப் பயணத்தில் ஆங்காங்கு தங்கள் இயக்கங்களின் பெரும் ஆதரவை வழங்கிட ஆர்வமுடன் இருப்பதாக அறிவித்துள்ளனர்.

மறுநாள் 30ஆம் நாள் காலை தேசிய முன்னணியில் உள்ள கட்சிகளின் பிரதிநிதிகளும், மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்டு, அகில இந்திய பார்வார்டு பிளாக் ஆகிய இடதுசாரி கட்சிகளும் கலந்து பேசி மாவட்டங்களில் ஆங்காங்கு வரவேற்புக் குழுக்களை அமைத்துக்கொண்டு இந்தச் சுற்றுப் பயணம் வெற்றிகரமாக அமைய ஏற்பாடுகளைச் செய்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் மீதும், தமிழகத்தின் பாலும் ஒரு தனி அன்பு கொண்டவர் வி.பி. சிங் என்பதை நீ அறிவாய்!

அவர் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே சென்னையில் நாம் நடத்திய தேசிய முன்னணித் தொடக்க விழாவின் மாட்சி கண்டு பூரித்துப் போனவர். அந்த நேரம் நாமும் ஆட்சியில் இல்லை. எனினும் சென்னை நகரம் குலுங்கிற்று நமது பேரணியினால்! இரவு மூன்று மணி வரையில் நடைபெற்ற கடற்கரைப் பொதுக்கூட்டத்தினால்!

1989-ல் கழக ஆட்சி அமைந்ததும், முதன் முதலாக வள்ளுவர் கோட்டத்தில் நாம் அடியெடுத்து வைத்து பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்ட விழாவுக்கு ராமராவ், பொம்மை, நாயனார், உன்னி கிருஷ்ணன், உபேந்திரா போன்றவர்களுடன் அவரும் வந்திருந்து வாழ்த்தி மகிழ்ந்ததையும் - அன்று மாலை கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பொழிந்திட்ட சொல் மழையையும் யார்தான் மறந்திட இயலும்!

பின்னர் அவர் ஆட்சிப் பொறுப்பேற்றார் - நாம் அவருக்குப் பாராட்டு விழா நடத்தினோம். கடற்கரையில் நடைபெற்ற அந்தக் கூட்டமும் கடலுடன் போட்டி போட்ட மாபெரும் கூட்டந்தான்!

பத்தாண்டு காலமாக மூலையில் கிடந்த மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றிடுவோம் என எழுந்தார்! வாய்ப்பற்றுக் கிடந்த அகில இந்திய பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் வாழ்த்தினர் அவரை! மண்டல் கமிஷனை நிறைவேற்றச் சொல்லி 1989-ல் சட்டப் பேரவையில் நாம் நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தைச் சட்டை செய்யவில்லை; அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி! அத்துடன் விட்டார்களா? அதனை நிறைவேற்ற முன்வந்த வி.பி. சிங் அவர்களை வீழ்த்தியே தீருவது எனக் கங்கணம் கட்டினர். அயோத்தி என்றும் இராமர் கோயில் என்றும் காரணங்களைச் சொல்லி, அவரை அழுத்தப் பார்த்தது பாரதீய ஜனதா! வன்முறையில் ஈடுபட்டன ஆதிக்க சக்திகள்! எமது கோரிக்கைக்கு இணங்காவிடில் ஆதரவைத் திரும்பப் பெறுவோம் என மிரட்டியது பாரதீய ஜனதா! கொள்கைதான் பெரிது; கொலு மண்டபம் பெரிதல்ல! என்றார் - அதனால் நமது நெஞ்சங்களை எல்லாம் வென்றார்!

அவரை வரவேற்பதில் நமக்கு ஒரு உணர்வு! ஆம்; ஒருமித்த உணர்வு! நாமும் அவரைப் போலவே ஆட்சியை விலையாகக் கொடுத்தவர்கள் 1976ஆம் ஆண்டில்! அன்று இந்திரா அம்மையாரின் எமர்ஜன்சியை நாம் எதிர்க்காமல் இருந்திருந்தால் ஆட்சியும் போயிருக்காது! ஐநூறுக்கும் மேற்பட்டோர் மிசா அடக்குமுறைக்கு ஆளாகி ஓராண்டு சிறையிலும் வாடியிருக்கத் தேவையில்லை! சிட்டிபாபுவையும் சாத்தூர் பாலகிருஷ்ணனையும் சிறையில் பலி கொடுத்திருக்கவும் மாட்டோம்!

இன்று வி.பி. சிங்; பாரதீய ஜனதாவைப் பார்த்து ஆட்சியைக் காப்பாற்றுங்கள்; மதச் சார்பற்ற கொள்கையைக் கை கழுவி விடுகிறேன் என்று கூறியிருந்தால் - இந்தியப் பிரதமராகவே தமிழகத்திற்கு இப்போதும் வந்திருக்க முடியும்!

பிரதமராக அவர் வரவில்லை; பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக வருகிறார்!

மண்டல் கமிஷனை நிறைவேற்ற முன்வந்தார் என சென்னையில் ஐம்பெரும் விழா நடத்தி அவருக்குப் பாராட்டுத் தெரிவித்தோமே; ஆம் - வரலாற்றுப் பெருவிழா - அது ஒரு நகரில் நடந்தது; சென்னையில்!

இதோ இப்போது அவர் தமிழ் நிலத்தின் பத்து மாவட்டங்களுக்கு வருகிறார்.

எங்கணும் எழுச்சி பொங்கிட வேண்டும் - பதாகைகள் அசைந்தாடி வரவேற்பு வழங்கிட வேண்டும் - கொடிக் காட்டுக்குள் நுழைந்து விட்டோமோ என வியப்புறும் வண்ணம் நமது உழைப்பின் வண்ணம் எங்கணும் திகழ்ந்திடல் வேண்டும்.

உடன்பிறப்பே, உன்னை மட்டுமல்ல - எல்லாக் கட்சிகள் எல்லா அமைப்புகளிலும் உள்ள சமூகநீதியில் நாட்டமுடையோர் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன் - நீதான்; நான் கேட்டுக் கொள்ளாமலே வரவேற்பு விழாக் களத்தில் குதித்திருப்பாயே! எனவே; சமூக நீதிக்குப் போராடும் உள்ளம் படைத்த நல்லோர் அனைவரும் அணி வகுப்போம்! ஆதிக்க வெறியர்களால் திணிக்கப்படும் சமூகஅநீதி எனும் பிணி அகற்றப் புறப்படுவோம்!

அன்புள்ள,

மு. க.

04-12-1990

1683. வெளிச்சத்தில் இருட்டைத் தினிக்கின்றார்!

உடன்பிறப்பே,
சட்டம் ஒழுங்கு அமைதி கெட்ட
துட்ட இருட்டுக்குள் தமிழ்நாடு
தத்தளித்துத் தடுமாறுகிற தென்று
பித்த மனிதர் பேசுகின்ற பேச்சுக்கு
சம்மட்டியாய் ஓர் அடி கொடுப்பதுபோல்
சஞ்சீவ ரெட்டியார் விடை கொடுத்துள்ளார்!

★

அசாமில் அமளி! அராஜகத்தின் மத்தியிலே.- காஷ்மீர்!
ஆந்திராவில், குஜராத்தில் ரத்தச்சகதி!பஞ்சாப்
நிலையோ படுமோசம்!
எனக்கூறிக் கண்ணீர் வடித்த பெருமகன்;

★

எதற்காக அமைதி வெளிச்சத்தில் இருக்கின்ற
தமிழ்நாட்டில்
இருட்டுதனைத் திணிக்கப்பார்க்கின்றீர்?
குருட்டு மனிதர்களே! இந்தியத்தரணியிலே
எங்குமிலா அமைதி இன்பத் தமிழ்நிலமாம்
இங்குதானே இருக்கின்ற தென்றார்!

★

தக்காது இந்த ஆட்சி! தலைகீழாய்த்
தடதடெனக் கவிழ்ந்துவிடு மென்று
நாள் நட்சத்திரம் பார்த்துக்கொண்டு
நாற்காலிக் கனவுகளில் மிதந்திருந்தோர்;
நாக்குகளைப் பிடுங்கிக்கொண்டு சாவதற்கு
முனைந்தார் எனினும் –
எச்சிலாகி விடுமே கையென்று கூறி
எச்சரிக்கையாய்ப் பிழைத்துக் கொண்டார்!

★

தலைமை எங்கே இருக்கின்ற தென்று
நிலைமை தெரியாமல் தேடுகின்ற
நாயன்மார் ஆழ்வாராதியர் எல்லாம்
நடுத்தெருவில் அலைகின்றார் பாவம்!

★

யாருக்கும் தெரியாமல் எவருக்கும் – சொல்லாமல்
ஊருக்குள்ளே இருந்துகொண்டு – அவரின்
தலைமை துப்புகின்ற உமிழ்நீரைப்
பன்னீராய்ப் பாவித்துப் பாதபூஜை செய்கின்ற
பழைய பகுத்தறிவு வாதிகளைப் பாராய்; அந்தோ?

★

எதற்காக இந்த ஆட்சி கவிழ வேண்டும்?
இடக்காகப் பேசுகின்ற குதர்க்க மனிதர்
என்றேனும் சிந்தித்துப் பார்த்தனரா? புகழ்க்
குன்றேறி நிற்கின்ற ஆட்சிமீது – புகார்ப்
புழுதிகளை வாரி வாரித் தூற்றுகின்றார்!
எழுதுகின்ற சிலபேர் ஏடெல்லாம் நஞ்சாக்கி!

★

இம் என்றவுடன் மிகவும் பிற்பட்ட மக்களுக்கு
இருபது சதவிகிதம் ஒதுக்கியது கழக ஆட்சி!

★

இல்லையோ மணவாழ்வு என ஏங்கிய மங்கையர்க்கு
இல்வாழ்வு விளக்கேற்ற ஐயாயிரம் ஈவதும் இந்த
ஆட்சி!

★

இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு எனும் கோரிக்கை
இனிதாக நிறைவேற்றியது எந்த ஆட்சி?

★

மத்திய அரசு அலுவலர் ஊதியத்திற் கீடாக
மாநில அரசு ஊழியர்க்கும் ஊதியம் வகுத்தது – கழக
ஆட்சி!

★

கண்களுக்கு ஒளியூட்ட சிகிச்சை முகாம் – நமது
பெண்களுக்கும் சொத்துரிமை வழங்கியது இந்த
ஆட்சி!

★

மண்டல் கமிஷன் பரிந்துரை நிறைவேற்ற
மத்திய அரசுடன் கைகோத்து நின்றது இந்த ஆட்சி!

★

பத்தாயிர ரூபாய் வரை கடன் பட்டிருந்தோர்
கஷ்டத்தைப் பட்டென்று தீர்த்து வைத்ததும் கழக
ஆட்சி!

★

ஆதி திராவிடர்க்கு இலவச காங்கரீட் வீடுகள்;
அம்பேத்கர் பெயராலே ஒரு மாவட்டம் கண்டது எந்த
ஆட்சி?

★

அடுக்கிக் கொண்டே போகலாம் இந்த ஆட்சியில்
ஆண்டிரண்டின் சாதனையை! மீசைகளை
முறுக்கிக் கொண்டு கலைக்கின்றோம் பார்
என்று ஆசைகளை அள்ளி விடுவோர்; முகத்தில்
ஒட்டவைத்த மீசைகளை எடுத்துவிட்டன்றோ –
தங்கள் தலைமையைத் தரிசிக்கத் தவம் கிடக்கின்றனர்!

★

இவர்கள்தான் இப்படி என்றால்
இதோ இன்னொரு கூட்டம்;
அன்றிருந்த முதல்வரிடம் அன்றாடம் காணிக்கை
பெற்று
ஆராதனை செய்திருந்த காரணத்தால் –
அப்போது சாராயவாடை அவர்கள் மூக்கைத்
துளைக்க வில்லை!
இன்றோ;
உள்ள மிருந்த இடத்தில் பள்ளம் இருப்பதாலே
கள்ளச் சாராய மன்னர்களின் கைக்கூலி ஆகி விட்டார்!

★

குமரி முதல் இமயம் வரை இந்தியா என்கின்றோம் –
குடம் குடமாய் மதுபான வியாபாரம்
அங்கெல்லாம் நடக்கலாமாம்! ஆனால்
இங்குமட்டும் பெரியார் பாஷையிலே மறியலாம்;
வெங்காயமாம்!

★

கோரஸ் பாடுவது போல் கூடிக் கை கோத்து
கோவெனப் புலம்பல்!

★

சட்டம் ஒழுங்கு கெட்டது கெட்டது என்று;
பட்டப்பகலை, நட்ட நடுநிசி எனக் கதைத்திட்டார்!

★

வெளிச்சத்தில் இருட்டைத் திணிக்காதீர் என
ஒளிக்கற்றைச் சொல்லாலே –
சஞ்சீவியார் சாட்டையடி கொடுத்திட்டார்!
சான்றோர் மொழியொன்றுண்டு
நல்ல மாட்டுக்கு ஒரு சூடு

★

புரிகிறதா உடன்பிறப்பே!
புரியாதோர் புலம்பிக் கொண்டிருக்கட்டும் – உன்
புயல் பயணம் தொடரட்டும்!

★

எந்த நிலையிலும் இந்த உயிர்
செந்தமிழர் நாட்டின் மேன்மைக்கே

என்றுரைத்துக்
குன்றேறிக் கொடி நாட்டிடுவோம்!

அன்புள்ள,

மு. க.

19-12-1990

1684. சமுதாய மறுமலர்ச்சி காண...!

உடன்பிறப்பே,

ஆட்சி போய்விடுமோ என்று
அழுகிறேனாம் நான்!

ஆனந்த விகடன் சிரிக்கிறது!
அடடா; என்ன திருப்தி அதற்கு!

செங்கோல் பறிக்கப்படினும்
சிறி.....தும் கவலையில்லை – என் கை
எழுதுகோலை எவரும்
பறிக்க முடியாதென்று
முத்தமிழ்ப் பேரவையில்
முழங்கினேன் நான்! அது

முகாரியாகத் தெரிகிறதாம்
மூதறிஞர் விகடனார்க்கு!

★

எழுதுகோல் இவர் கையில்
இருக்கும்வரை;
செங்கோல் போயினும்
கவலையுறார் கருணாநிதி என்று
கண்ணதாசக் கவிஞன் பலமுறை
கர்ச்சித்த வாசகத்தைத்தான்
கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழாவில்
பீடு தமிழில் பெருமிதமாய்க் கூறினேன் நான்!

★

தழுதழுத்த குரலில் பேசினேன் என்றும் –
தவுலைப்போல் அடிவாங்கத் தயார் என;

தண்டனிடும் தொனியிலே உவமை சொல்லி
தலைதொங்கிப் போனேன் என்பதுபோல் –

தரமுள்ள விகடனார் இந்த வாரம்;
தகுதியென எண்ணி ஓர் விமர்சனம் செய்துள்ளார்!

தலையங்கத்திலும் கூட எனைப் பழித்து
தலையாய வீரத்திற்கு இலக்கண முரைத்துள்ளார்!

★

சென்னை டெல்லிக்கு ஆணையிட்ட நாள்
சென்று விட்டதென்று;

செப்பினார் பிரதமர் என்பதற்காக நான்
சீறி விழவில்லையாம்! சீண்டி விடுகிறார் விகடன்!

அப்படி நான் ஆணையிட்டிருந்தால் அல்லவா
எப்படிச் சொல்லலாம் இப்படி எனச்சினந்திட?

★

ஏனோ விகடனார் மறந்து விட்டார் –
எமர்ஜன்சி நேரத்தில்;

என் வீட்டுக்கே டெல்லி தூதனுப்பி;
எமர்ஜன்சி எதிர்ப்பைக் கைவிட்டால் –

அவதிகள் எவையும் அணுக மாட்டா;
அவதூறு வழக்கும் தொடுக்க மாட்டோம்;

ஆட்சியின் ஆயுளும் ஓராண்டு நீட்டிக்கும் என
ஆசைகளை மூட்டிப்பார்த்தார்!

அசைந்து கொடுத்திருந்தால்
ஆண்டொன்று மிசாச் சிறையில் – என்

அருமைக் கண்மணிகள் ஐநூறு பேர்
அவதிப்பட்டிருக்க மாட்டார்!

ஆட்சியும் தொடர்ந்திருக்கும் –
ஆனால் ஒன்று; மானம் போயிருக்கும்!

எமை நந்துவாயென
எதிரிகள் கோடி இட்டழைத்தாலும்

தொடேன் என்றுரைத்துத்
தோளுயர்த்திக் காட்டிய

பாவேந்தர் பாட்டை மட்டுமல்ல; அவர்
பாட்டையும் மறக்காதோர் நாம்!

★

கேலி புரிகிறார் நமைப் பார்த்து விகடனார்!
போலிக்கும் உண்மைக்குமுள்ள முரண்பாட்டை;

சிரித்து மகிழும் அந்தப் பண்பாளர் (?)
சிந்தித்தால் உணர்ந்திடுவார்!

★

அறுபத்து ஏழாம் ஆண்டு தேர்தலிலே
அண்ணா, ராஜாஜி, காயிதேமில்லத், ம.பொ.சி. – நம்

அணியில் இருந்த பி. இராமமூர்த்தி
அனைவரையும் கழுதை மீது அமர்த்திக்

கார்ட்டூன் போட்டுச் சிரித்தவர்தானே விகடனார்
கற்பூரவாசனையை – கழகத்தின் உறுதியினை;

சுலபத்தில் அவரால் உணரத்தான் முடியாது!
சூரியனைப் பனிக்கட்டி என்கின்றார்!

அன்புள்ள,

மு. க.

22-12-1990

1685. பொங்கலில் பொங்கி எழுக!

உடன்பிறப்பே!

வாழைமரம் கட்டி, வானுயர் கரும்பை நட்டு, இஞ்சியும் மஞ்சளும் மங்கலநாண் எனக் கொஞ்சிடும் புதுப்பானையின் கழுத்தில் குங்குமம் பூசி, எழிற்கோலங்கள் எங்கணுமிட்டு, மனை புதுக்கி, மாடு ஆடு போற்றி, மனிதகுலம் வாழ்விக்கும் மாணிக்க ஞாயிறை வாழ்த்திக் கொண்டாடப் போகிறோம் பொங்கல் விழா!

உழைப்பின் வெற்றிகண்டு உவகை கொள்ளும் விழா! விளைவின் செழிப்பு நோக்கி விழிகளில் ஒளி நிறையும் விழா! தத்தித் தவழும் மழலைச் செல்வம் - தங்கப்பதுமையென இல்லக்கிழத்தி - தாய்தந்தையர் - உடன்பிறப்பு - உற்றார் உறவினர் - வற்றாத அன்புகொள் நண்பர் - இவருடன் குலவி மகிழ்ந்து குடும்பம் குடும்பமாகக் கொண்டாடும் இந்த விழாவில் குளிர் அருவி பாயும் நெஞ்சுடன் கூர்ந்து பார்க்கிறோம்; விழாவுக்கென தயாரித்த பானையில் வெண்சோறு பொங்கும் காட்சியினை! பச்சைக் குழந்தையின் கடை வாயில் ஒழுகும் பால்போல்; அந்தப் பானையின் வாயில் பொங்கி வழியும் பால் கண்டு பூரிப்பு கொள்கிறோம்!

தரிசாகப் போடப்பட்ட நிலத்தைச் செப்பனிட்டு, தண்ணீர் பாய்ச்சி, உழுது பரம்படித்து, விரைந்த காலத்தில் உயர்ந்த விளைச்சலைத் தரும் நெல்வகை எதுவெனத் தேர்ந்து, விதைத்து, நாற்றாக்கி, நடவு செய்து பயிராக்கி, மணிக்கதிர் பார்த்து மனமகிழ்ந்து, நாமே வேலியாக இருந்து பாதுகாத்து, வீட்டுக்கு வந்த அமுதைக் குத்தி உலையிலிட்டு இயற்றல், ஈட்டல், காத்தல், காத்த வகுத்தல் அனைத்திலும் வள்ளுவர் வாய்மொழிக்கொப்ப வல்லவர் என நல்லவர் புகழக்கேட்டு, தமிழையும் தமிழ்நிலத்தையும் வாழ்த்தி நிற்கும் விழா நேரத்தில்; ஓர் ஒலி கேட்கிறது!

குரலில் இனிமையில்லை! கோட்டானின் சாரீரம்! பொங்கல் பானையை உடைத்தெறிக! மஞ்சள், இஞ்சி, கரும்பு அனைத்தையும் இழுத்து கழிவுநீர் வடிகாலில் வீசி எறிக! இந்த அமங்கலச் சொல்லுக்கு உரிமையாளர் யார்? எவர்?

பெயர் எதற்கு! பண்பெனும் ஒரு பொருள் இலா இதயத்தினர்; அவ்வளவுதான்! மன்னிக்கவும்; இதயமே இல்லாதவர்! இருந்தால்தானே; அதில் பண்பு இருக்கிறதா? அல்லது பாறை இருக்கிறதா? என்று பகுத்தறிந்திட!

இரண்டாண்டு காலமாக நமது உழைப்புக்கு, ஆற்றலுக்குக் கிடைத்துவரும் வெற்றிகளைக் கண்டு வெதும்பிக் கிடந்தோர், இன்று பொறாமையால் சூதுவாது ததும்பிடும் நிலைபெற்று நிலைகெட்டுத் திரிகிறார்!

காடாறுமாதம் நாடாறு மாதமெனக் கட்சி நடத்துவோர், கண்கள் குளமாக நாம் கண்டோமே தரிசு நிலம் - அந்த நிலத்தை அந்நிலைக்கு ஆளாக்கியோர், இன்று அது நல்நிலமாக மாறியது கண்டு - பாரதத்துக் காந்தாரிகளாய்ப் பதைக்கின்றனர்! விழா நடத்த விடோம் என்கின்றனர்! பொங்கல் பானையை நொறுக்குவோம் என்கின்றனர்!

உழைத்தோர் கைகள் பூப்பறித்துக் கொண்டிருக்கும் என்ற நினைப்பில் உறுமுகின்றனர்!

இத்தகையோர் இன்று அரசியலிலே பதர்களாகி விட்டனர் எனினும்; பதரும், காற்றில் பறந்து கண்களில் பட்டால் - கெடுதிதானே! அந்தக் கேட்டினைத் தடுத்திடத்தான், நாட்டினைக் காத்திடத்தான் - இதோ அணி வகுக்கிறது நமது இயக்கம்! ஆம்; தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பு இயக்கம்! மக்களாட்சி தத்துவத்தின் மீது மண் அள்ளிப் போடுதற்குக் காங்கிரசாரும், அ.தி.மு.க.வினரும் மண்வெட்டி தூக்கி விட்டனர்!

அதை மக்களுக்கு எடுத்துக் கூறிட - மதோன்மத்தர்களின் செயலுக்கு எதிராக மக்கள் சக்தியைப் பெருமளவுக்கு உருவாக்கி வலிவாக்கிட - எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற எதேச்சாதிகாரப் பேச்சுக்களால் மிரட்டிக் கொண்டிருக்கும் அ.தி.மு.க., காங்கிரஸ் கட்சிகளின் ஆட்சி கலைப்புப் பிரச்சாரத்திற்கு மக்களிடம் செல்வாக்கு இல்லை என்பதை எடுத்துக்காட்டி - ஜனநாயக

முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை; பொங்கல் பானையை உடை எனக்கூறும் பொல்லாதவனைப் போல உடைத்துவிடத் தூண்டும் உன்மத்தப் போக்கை ஊருக்கும் உலகுக்கும் விளக்கி உரைத்திட - வரும் இருபதாம் தேதி முதல் பத்து நாட்கள் தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் இந்தக் கூட்டமைப்புப் படையின் பணி நடைபெற இருக்கிறது!

பத்து நாட்களுடன் முடிவதல்ல இந்தப் பணி! இஃதோர் தொடர்பணி! ஜனநாயகம் காத்திடும் இந்த அணி; அடையாளமாக ஒரு பத்து நாட்கள் மாநில முழுதும் பிரச்சார இயக்கம் நடத்த இருக்கிறது!

பொங்கற் புதுநாள் பூரிப்பில் இருக்கும் நமக்கு; மறைந்து நிற்கும் அபாயம் நினைவுக்கு வராமல் இருத்தலாகாது!

உடனடியாக ஆங்காங்குள்ள அமைப்புகள் தோழமைக்கட்சிகளுடன் தொடர்புகொண்டு தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்புக் குழுக்களை உருவாக்கிக் கொண்டு - முதற்கட்டமாக பத்துநாள் பிரச்சார இயக்கம் வெற்றியடைந்திடச் செயலாற்றுக எனக்கேட்டுப் பொங்கல் வாழ்த்துக்களையும் உனக்கும், நமது தோழமைக் கட்சிகளின் உடன்பிறப்புகளுக்கும், உலகில் தமிழர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ; அவர்கள் அனைவருக்கும் அன்புடன் வழங்குகிறேன்.

அன்புள்ள,

மு. க.

14-01-1991

1686. போர் மூண்டுவிட்டது; பொறுப்பை உணர்வோம்!

உடன்பிறப்பே!

வளைகுடாப் போர் தொடங்கி விட்டது! இது ஒரே நாளில் முடியலாம்; அல்லது பல நாட்கள் நடைபெறலாம்! உலக நாடுகள் முழுதும் உள்ள அமைதியை விரும்பும் மக்கள் எந்த ஒரு கொடுமை நடக்கக் கூடாது என்று பிரார்த்தனை செய்தார்களோ; எந்த ஒரு பேரழிவைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று தவம் கிடந்தார்களோ; அனைத்தையும் மீறி அந்தப் போர் ஆரம்பமாகி விட்டது!

விஞ்ஞான வளர்ச்சியை ஆக்கப் பணிகளுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று உதடுகள் பல உபதேச முணுமுணுப்புகளைச் செய்து கொண்டிருந்தாலும்; பாம்பைக் கண்டு மனிதனுக்குப் பயம் - மனிதனைக் கண்டு பாம்புக்குப் பயம் என்பதுபோல; ஒவ்வொரு நாடும் தனது பாதுகாப்பு என்ற பெயரால் படைக்கலன்களை மிக நவீனமாகத் தயாரித்துக்கொண்டு - ஒரு கட்டத்தில் ஒன்றையொன்று தாக்கி உலகில் பெரும் நாசத்தை விளைவிக்கப் போகின்றன என்று தெரிவிக்கப்பட்ட அச்ச உணர்வுகள்; பொய்த்துப் போகாமல் இன்று செயல்வடிவம் பெற்று அமைதிக்கு அறைகூவல் விடத் தொடங்கி விட்டன!

பல்வேறு நாட்டுத் தலைவர்களும் இந்த யுத்தம் வராமல் தடுக்கப்பட வேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் விழலுக்குப் பாய்ச்சிய நீராகி; விண்ணிலே போர் விமானங்கள் வட்டமிடத் தொடங்கி விட்டனவே என்பதை நினைக்கும்போது; போரின் நேரடிப் பாதிப்பை எதிர்கொண்டு மாண்டு மடியப்போகிற மனித உயிர்களின் கண்ணீரே நம் முன் பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்தோடுகிறது.

களம் புகும் இரு அணியினரும் தயாரித்து வைத்துள்ள படைக்கலன்களின் பட்டியலைப் பற்றிய விபரங்கள் அளிக்கப்படும்போது; அம்மவோ - விட்டுக் கொடுக்கும் குணமில்லாத பிடிவாத மனத்தினரால் பிஞ்சுகளாகவும், பூக்களாகவும், பழங்களாகவும், தளிர்களாகவுமுள்ள மனித குலத்தின் உயிர்கள் பொல பொலவென உதிரப் போகின்றனவே என எண்ணிக் கலங்குகிறேன்!

எந்தப் போரிலும் ஒரு முடிவு ஏற்படும் - முதல் மற்றும் இரண்டாவது உலகப் போர்களிலும் கூட ஆண்டுகள் சில கடந்து அமைதி ஏற்படத்தான் செய்தது!

ஆனால் அந்த அமைதி; எவ்வளவு பெரும் விலை கொடுத்து வாங்கப்பட்டது என்பதை வரலாறு மறந்து விட முடியுமா?

சிதறுண்டு போன நாடுகள் எத்தனை - சிதிலமாகிவிட்ட நகரங்களின் எண்ணிக்கையென்ன கொஞ்சமா - எத்தனை இலட்சோப லட்சம் போர் வீரர்கள் கல்லறைகளாயினர் - அப்பாவி மக்கள் தாயை இழந்து, தந்தையை இழந்து, மகனையிழந்து, மகளையிழந்து - கோடிக் கணக்கானோர் கோவெனக் கதறிய குரல்; இறுதியில் கிடைத்த அமைதிக்குப் பின்னணிச் சோக இசையாக இருந்ததை இன்று நினைத்தாலும் நெஞ்சு நெகிழ்கிறதே!

வளைகுடாப் போரின் விளைவுகளும் அந்த அளவுக்குத்தானே போகும்! இந்தப் போரின் நேரடிப் பாதிப்புக்கு ஆளாகும் நாடுகளில் இனி ஒப்பாரிகள்தானே கீதமாக இருக்கும் - நமது இந்திய நாடும் இந்தப் போரின் பாதிப்புகளை சமாளிக்கவும்; சந்தித்து நிற்கவும் தன்னைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டுமல்லவா?

அதற்கென இன்று (17-1-91) மாலை 5 மணிக்கு இந்தியப் பிரதமர் அவர்கள் மாநில முதலமைச்சர்களின் அவசரக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார். தொலைபேசியில் தொடர்பு கொண்டு17-1-91 காலையில் என்னையும் வருமாறு அழைத்தார். உடன்சென்று உடன் திரும்ப இயலாத சூழ்நிலையில் நாளை (18-1-91) காலையில் தமிழக சட்டப் பேரவையில் ஆளுநர் உரையிருப்பதால்; வர இயலாமைக்கான எனது வருத்தத்தை தெரிவித்துக்கொண்டு; நீர்ப்பாசன மாநாட்டுக்காக டெல்லி சென்றுள்ள பொதுப்பணி அமைச்சரைக் கலந்து கொள்ளச் செய்கிறேன் என்றுரைத்தேன்.

பிரதமரும் அதனை ஏற்றுக் கொண்டார். போரின் பாதிப்பினால் இந்தியாவில் உருவாகக் கூடிய பொருளாதாரப் பின்னடைவு; மற்றும் பல்வேறு பிரச்சினைகளுக்கு எத்தகைய தீர்வுகளைக் காண்பது என்பதற்காக இந்திய அரசின் சார்பில் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு தமிழகத்தில் கழக அரசின் சார்பில் எல்லா வகையான ஒத்துழைப்பும் தரப்பட வேண்டியது கடமையும் பொறுப்புமாகும்.

அந்தக் கடமையையும், பொறுப்பையும் அரசு மட்டுமல்ல; பொது மக்களும் உணர்ந்து நடந்திட வேண்டும்! குறிப்பாக வணிகப் பெருமக்களின் இதயமார்ந்த ஒத்துழைப்பு மிக மிகத்தேவை!

யுத்தம் என்பதைச் சாக்கிட்டு; கலப்படங்கள், கடத்தல்கள், பதுக்கல்கள் இவையனைத்தும் எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பது போல அடங்காப் பிடாரிகளாக அலையத் தொடங்கி விடும்!

இவை; போரில் வீசப்படும் குண்டுகளைவிட மிக மோசமாக மக்களைத் தாக்கும் வலிவுடையவை! இவற்றைத் தடுத்து நிறுத்திட அதிகாரிகளுக்குத் தூயமனமும் துணிவும் தேவை! தவறிழைப்போரை அடையாளம் காட்டிடப் பொது மக்களின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை!

தேசியப் பிரச்சினைகளில் கழக அரசும் சரி; கழகமும் சரி - என்றைக்கும் யாருக்கும் ஒருபடி கீழ் இறங்கி நின்றதில்லை என்பதற்கு எத்தனையோ முன் மாதிரிகள் உண்டு.

கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, சிறைச்சாலையில் இருந்தவாறே சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து இந்திய அரசுடன் கைகோத்து நின்றதையும், பங்களாதேஷ் போரின்போது தமிழகத்தில் கழக அரசு ஆறு கோடி ரூபாய் யுத்த நிதி திரட்டி எல்லா மாநிலங்களையும் மிஞ்சும் வகையில் இந்திரா காந்தி அம்மையாரிடம் அளித்ததையும் - அனைவரும் அறிவர்!

தி.மு.க. அரசின் போக்கு பற்றித் தேசிய மனம் படைத்தவர்கள் தீவிரமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

என்பதாக நேற்று சென்னைக்கும், காஞ்சிக்கும் வந்த ராஜீவ் காந்தி சொல்லிவிட்டதாலேயே தி.மு.க.வுக்கும் தேசிய உணர்வுகளுக்கும் சம்பந்தமில்லை யென்றோ, தேசியப் பிரச்சினை

என்பது ராஜீவ் காந்திக்கு மட்டுமே மொத்தக் குத்தகையென்றோ, நடுநிலையுடன் சிந்திக்கக் கூடிய எவரும் கூறிட மாட்டார்!

எனவே உடன்பிறப்பே, உலகையே கலக்கிடக் கூடிய இந்த வளைகுடாப் போரின் விளைவுகள் மிகக் கடுமையாக இருக்குமென்பதை உணர்ந்துள்ள நாம்; அந்தக் கடுமை தணிக்க இந்திய அரசும், மாநில அரசும் எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் தேவையான கருத்துக்களை வழங்குவதுடன் - கண்ணும்கருத்துமாக இருந்து நமது நாட்டின் பாதுகாப்பையும்; மக்களின் நலனையும் பேணிக் காப்பதில் அனைவரும் ஒன்றுபட்டு ஓரணியில் திரள வேண்டும்.

அன்புடன்,

மு. க.

18-01-1991

1687. அண்ணா கல்லறை முன் சபதம் ஏற்போம்; வா!

உடன்பிறப்பே!

மக்களாட்சி தத்துவத்தின் மாட்சிமையை உணர்ந்து போற்றியவரும் - மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு எனக்கூறி; அரசியலில் நாகரீகம் காத்தவரும் - இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவுநாள் - தேதி சொல்ல வேண்டுமோ; நான் உனக்கு! நாம் அனைவரும் தேம்பித் தேம்பி அழுது திக்குத் தெரியாமல் துடித்தோமே; அந்த 1969 பிப்ரவரி மூன்றாம் நாள்!

அன்றுமுதல் இன்றுவரை ஆண்டுதோறும் அவர் நினைவிடம் நோக்கித் தொடர்ந்து நடந்திடும் நமது கால்கள்! தொழுது வணங்கிடும் கரங்கள்! அழுது சிவந்திடும் கண்கள்!

மூச்சில் - பேச்சில் - இதயத்துடிப்பில் - இரத்தச் சுழற்சியில் எப்போதும் ஒன்றியிருக்கும் அண்ணனின் மொழியாம் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் எனும் உணர்வுடன் நீ செயல்படுவாய் என்பது எனக்குத் தெரியும்!

புயலும் சூறாவளியும் அடித்தபோதும் - பூகம்பக் குலுக்கலே ஏற்பட்டபோதும் - அணையாது காப்பாற்றிய அகல் விளக்கு நமது கழகம்; இதனை விட்டில் பூச்சிகள் மொய்த்து அணைத்துவிட முடியாது என்பதை சரித்திரத்தில் பதிய வைக்க மற்றொரு சந்தர்ப்பம் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது!

சிறைக் கோட்டங்களில் ஐம்பதாயிரம் பேர் நாம் அடைக்கப்பட்டிருந்தபோது; சீன ஆக்கிரமிப்பு - இந்தியாவின்மீது! வேலூர் சிறையிலிருந்த அண்ணா அவர்கள் கட்சி வேற்றுமைகளை விடுத்து நேருவின் கரத்தை வலுப்படுத்துவோம் வாரீர் என அழைப்பு விடுத்தார்! அந்த அண்ணன் வழி வந்த நமக்கு சில வெளிநாட்டு ஏஜெண்டுகள் தேச பக்தியைக் கற்றுக்

கொடுக்க முனைகிறார்கள் என்கிற போது எவ்வளவு வேதனையான வேடிக்கையாக இருக்கிறது!

இந்த அகில இந்தியாவில் எந்த மாநிலமும் தராத அளவுக்கு ஆறுகோடி ரூபாய் யுத்த நிதி வசூலித்து, பிரதமர் இந்திரா காந்தியின் கையில் ஒப்படைத்தேனே; என்னையும் என் உடன் பிறப்பாகிய உன்னையும் நாட்டுப் பற்றில்லாதோர் என நவில்கின்றனர் நாட்டை நல்ல விலைக்கு விற்பதற்குப் பேரம் பேசவும் துணிந்தவர்கள்!

வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும் - நாடு இருந்தால்தான் நமது பிரச்சினைகளைப் பேச முடியும்; எனவே முதலில் நாடு! பிறகுதான் கட்சி!

என்றுரைத்த அண்ணனை அறிந்தவர்கள் நாம். அடி நாள் தொட்டு அவருடன் இருந்தவர்கள் நாம்! இன்றும் அவரது உணர்வுகளுடன் வாழ்பவர்கள் நாம்!

1976-ல் நெருக்கடி நிலையை எதிர்த்து ஜனநாயகம் காத்திட நாம் குரல் எழுப்பியது குற்றமெனக்கூறி; ஜனவரி 30-ல் காந்தியடிகளின் உயிர் பறிக்கப்பட்ட நாளில்தான் நமது ஆட்சியைப் பறித்தார்கள்!

தொடர்ந்து சில நாட்களில் வந்த பிப்ரவரி மூன்றாம் நாள் அண்ணன் நினைவிடம் சென்று ஆறுதல் மட்டுமல்ல; புதிய ஆற்றலும் பெற்றோம்!

இப்போதும் அதே நாள்; உத்தமர் காந்தியின் உயிர் போக்கப்பட்ட நாள் - நமது அரசு கலைக்கப்பட்ட நாள்!

ஆறுதல் பெற்றிட - புதிய ஆற்றலைப் பெற்றிட - அண்ணன் துயிலுமிடத்துக்குச் செல்லுகிறோம்!

ஆட்சி கலைக்கப்பட்டு விட்டதே உடனடியாக உங்கள் கருத்து என்னவென்று பத்திரிகை அலுவலகங்களில் இருந்து தொலைபேசியில் கேள்விகள் எழுந்தன! என் உடனடி பதில் இதுதான்!

ஜனநாயக நெறிமுறைகளைக் காப்பாற்றத் தவறியுள்ள சந்திரசேகர் அவர்கள் என்னுடைய தலைமையில் இருந்த ஆட்சியைக் கலைத்ததின் மூலம் தன்னுடைய ஆட்சியைத் தற்காலிகமாகக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். இதற்கு நாங்கள்

அவருக்குப் பயன் பட்டிருக்கிறோம் என்பதில் எனக்கு ஒரு வகையில் திருப்திதான்.

அண்ணாவின் உண்மைத் தம்பிகள் - அண்ணாவின் சுயமரியாதை உணர்வுகளைப் பெற்றுள்ள தம்பிகள்; வேறு எப்படிக் கருத்து வழங்க முடியும்!

சந்திரசேகராலும் அவரோடு சேர்ந்து ஆட்சி கலைப்புச் சதி செய்துள்ள அ.தி.மு.க., காங்கிரஸ் கட்சிகளாலும் விடப்பட்டுள்ள இந்த அறைகூவல் தமிழ்நாட்டு மக்களுக்கு - உன்னைப் போன்ற என் உயிரினுமேலான உடன்பிறப்புகளுக்கு விடப்பட்ட அறை கூவலாகும்!

இந்த அறைகூவலைச் சந்திக்க அண்ணா கல்லறையில் சபதம் ஏற்போம் வா!

அன்புடன்,

மு. க.

01-02-1991

1688. அடியே அனார்கலி! உனக்குப் பிறகு...

உடன்பிறப்பே!

கழக ஆட்சி கலைக்கப்பட்ட செய்தி கேட்டவுடன் கவிஞர் வைரமுத்து; குங்குமத்தில் ஒரு கவிதை வாயிலாகத் தனது குமுறலை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அடியே அனார்கலி!
உனக்குப் பிறகு
இந்த நாட்டில்
உயிரோடு புதைக்கப்பட்டது
ஜனநாயகம் தானடி!

படித்ததும் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். பதவியில் இருந்த போதும் நான் பல தடவை அவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியதுண்டு! நான் பதவியில் இல்லாத காலத்திலும் அவர் தொலைபேசியிலும் நேரிலும் பலமுறை என்னுடன் தொடர்பு கொண்டதுண்டு! இந்த மாதிரி நேரத்தில் அதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமல்லவா?

என்றைக்குமுள்ள மரியாதைப் பண்பாட்டுடனும் பாச உணர்வோடும், வணக்கம்! வணக்கம்! என்னங்க? என்றார்! ஜனவரி 30-ந் தேதி இரவு துடித்தவாறு வந்தவர் கண்கலங்கினார் - இரண்டு நாட்கள் ஆகிவிட்டதால் சற்று ஆறுதலாகப் பேசினார் தொலைபேசியில்!

ஆட்சி கலைத்ததால் லாபம்தான் என்றேன்!
என்ன சொல்றீங்க?
ஆவலுடன் கேட்டார்! ஆச்சரியத்துடன் கேட்டார்!
ஒரு அருமையான கவிதை
கிடைத்ததல்லவா?

எனது பதில் மீண்டும் அவரைக் கண்கலங்க வைத்திருக்கும் போலும்! தொலைபேசியின் மறுமுனை மௌனம் சாதித்தது!

உடன்பிறப்பே, இப்படி ஜனநாயகம் நடைபெறக் கூடாது என்றுதான் மாநில சுயாட்சி தத்துவமே பிறந்தது! மத்தியில் உண்மையான கூட்டாட்சி அமைப்பும் - மாநிலங்கள் தேவையான அதிகாரங்கள் பெற்று முழுமையான சுயாட்சித் தன்மையும் - இந்திய அரசியல் சட்டத்தில் உறுதி செய்யப்பட வேண்டுமென்று பண்டித நேரு போன்றவர்கள் கூறி; பின்னர் அவர்களே மறந்துவிட்டதை நினைவுபடுத்தி நிறைவேற்றி வைக்கத்தான் 1968 ஜூலை 21ஆம் நாள் ஈ.எம்.எஸ்., காயிதே மில்லத், எம். கல்யாணசுந்தரம், ம.பொ.சி. ஆகியோர் கலந்து கொண்ட மாநில சுயாட்சி மாநாட்டில் அப்போது முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சியை வலியுறுத்திப் பேசியதோடு அதுபற்றி ஆராய்ந்து அறிக்கை தர குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

அண்ணாவின் மறைவுக்குப் பிறகு என் தலைமையில் கழக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அண்ணா விரும்பியவாறு அந்தக் குழுவை ராஜமன்னார், டாக்டர் லட்சுமணசாமி முதலியார், சந்திரா ரெட்டி ஆகியோரைக் கொண்டு அமைத்திட்டேன். அந்தக் குழுவின் அறிக்கை பெற்று 1974ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் மாநில சுயாட்சி தீர்மானத்தைக் கழக அரசு நிறைவேற்றிய போது அதனை அ.தி.மு.க. எதிர்த்தது மட்டுமல்ல; அக்கட்சியின் சட்ட மன்றக் கட்சித் தலைவர் - ராஜமன்னார் குழுவின் அறிக்கை சட்டமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்குத் தகுதியுள்ள புத்தகமல்ல! குப்பைக் கூடையில் தூக்கி எறியப்பட வேண்டிய ஒரு அறிக்கை இது! என்று மிக ஆவேசமாகத் தாக்கி உரையாற்றினார் - ஆம்! சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பில் ஏறியுள்ள உண்மை இது!

ஆனால் உடன்பிறப்பே; ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1983 மார்ச் 3ஆம் வாரம் கர்நாடக முதல்வர் திரு. ஹெக்டே அவர்கள் மாநில உரிமைகள், அதிகாரங்கள் குறித்து விவாதித்து மத்திய அரசுக்கு எடுத்துக் கூற தென்னக முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டினார். தமிழகத்தின் சார்பில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர்., ஆந்திரத்தின் சார்பில் அருமைச் சகோதரர் என்.டி.ஆர்., புதுவை மாநிலத்தின் சார்பில் நமது டி. ராமச்சந்திரன் ஆகியோர் அந்த

மாநாட்டில் கலந்து கொண்டு மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றினார்கள். அந்த கூட்டத்திற்கு கேரள முதல்வர் திரு. கருணாகரன் வரவில்லை! காரணம் அவர் காங்கிரஸ் முதல்வர்!

வராதது மட்டுமல்ல; அந்த மாநாட்டு முயற்சியையே தேசத்துரோகம் என்று காங்கிரசார் வர்ணித்தார்கள்! அந்த மாநாட்டில் புதுவை தி.மு.க. முதலமைச்சர் கலந்து கொண்டார் என்பதற்காக காங்கிரஸ் கட்சி தனது ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டு ஆட்சியைக் கவிழ்த்தது புதுவையில்!

மாநாட்டைக் கூட்டியது ஹெக்டே

அதில் கலந்து கொண்ட எம்.ஜி.ஆர்.

என்.டி.ஆர்., புதுவை டி.ஆர்.

ஆகியோரும் அவரது கட்சிகளும் தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்ட படலம்; காங்கிரஸ்காரர்களால் அரங்கேற்றப்பட்டது.

பெங்களூர் மாநாட்டைப் பாராட்டியும் அதன் முடிவுகளை வரவேற்றும் 1983 மார்ச் 29ஆம் நாள் தமிழக சட்டப் பேரவையில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சித் தோழர் உமாநாத் அவர்கள் பெங்களூர் மாநாட்டு முடிவுகளை விடாமுயற்சியுடன் நிறைவேற்ற வேண்டுமென ஒரு தீர்மானத்தை முன் மொழிந்தார். அதனை நான் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் வழிமொழிந்து பேசினேன்.

(உடன்பிறப்பே, அப்போதெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர்கள் சட்டசபைக்கு வருவது விவாதங்களில் பங்கு கொண்டு பேசுவதற்காகத்தான் - என்பதை நீ அறிவாய்.)

தமிழ்நாடோ, ஆந்திரமோ, கர்நாடகமோ, புதுவையோ - பெங்களூர் மாநாட்டில் பிரிவினைத் தீர்மானம் நிறைவேற்றவில்லை. இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும் ஊறு விளைவிக்காத அளவில் மாநில உரிமைகளைக் கேட்டது எப்படி தேசத் துரோகமாகும்? இது தேசத் துரோகம் என்று மத்தியில் உள்ள காங்கிரஸ் கட்சி கூறுமேயானால் அதை நான் வன்மையாக மறுக்க விரும்புகிறேன்.

1977-78-ல் மத்தியில் ஜனதா கட்சி ஆட்சி இருந்தபோது மாநிலங்களவையில் முரசொலி மாறன் அரசியல் சட்டத்திலிருந்து 356-வது பிரிவையே மாற்ற வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்த போது அதனை கம்யூனிஸ்டு கட்சிகள் ஆதரித்தன! அந்த தீர்மானத்தை எதிர்த்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் வாக்களித்தனர். இப்போது அந்த நிலைமை மாறியிருப்பதற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

356-வது பிரிவுதான் ஒரு மாநில அரசின் தலைக்குமேல் தொங்கிக் கொண்டிருக்கிற கொடுவாள்! சில காரணங்களைக் காட்டி எந்த நேரத்திலும் ஒரு மாநில அரசைக் கலைக்க முடியும் என்ற அந்த வாளுக்குத் தப்பிய கட்சி ஏதாவது இங்கு இருக்கிறதா? கம்யூனிஸ்டு கட்சி ஆட்சி 356-வது பிரிவின்படி கலைக்கப்பட்டுள்ளது. தி.மு.க.ஆட்சி அந்தக் கொடுவாளுக்குத் தப்பவில்லை. ஜனதா ஆட்சி, காங்கிரஸ் ஆட்சிகளை கலைத்திருக்கிறது. பிறகு காங்கிரஸ் ஆட்சி ஜனதா ஆட்சிகளைக் கலைத்திருக்கிறது. அ.தி.மு.க. ஆட்சியும் அந்தப் பட்டியலில் இடம் பெற்றதுதான்! நான் இதனைக் கூறும்போது; நாமேகூட மத்திய ஆட்சியில் இருந்தால் அப்படித்தான் செய்வோமோ; என்னவோ? ஏனென்றால் மத்தியில் ஆட்சிக்கு வந்தாலே அத்தகைய அதிகாரக் குவியலை வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆசை வந்து விடுகிறது.

இவையனைத்தும் இன்றல்ல; 1983 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராக நான் நின்று பேசியவை!

ஆனால் இன்னும் அந்தக் கொடுவாள் அகற்றப்படவில்லை!

அதுமட்டுமா? கூப்பிடு தூரத்தில் டெல்லிப் பட்டினத்திலேயே கவர்னரை வைத்துக் கொண்டு; கையெழுத்துப்போட நீங்கள் ஏன் மறுக்கிறீர்கள்? என்று கூடக் கேட்காமல் - அவசர அவசரமாக ஜனநாயகத்தை உயிரோடு புதைத்து விட்டார்கள் ராஷ்டிரபதி பவனத்தில்!

அடியே அனார்கலி!

உனக்குப் பிறகு

இந்த நாட்டில்

உயிரோடு புதைக்கப்பட்டது

ஜனநாயகம் தானடி!

ஆட்சி போனாலும் பரவாயில்லை; ஒரு அருமையானதும் அர்த்தம் நிறைந்ததுமான கவிதை கிடைத்ததில் ஒரு இலக்கியவாதியின் இதயத்திற்கு இதம் கிடைத்தது என்பது உண்மையல்லவா? என்னை உணர்ந்த உனக்கு இது தெரியாதா என்ன?

அன்புடன்,

மு. க.

09-02-1991

1689. பேசினாரா? அல்லது பிதற்றினாரா?

உடன்பிறப்பே!

பிரதமர் பதவியில் இல்லாமலே பிரதமராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் பெங்களூரில் ஒரு விழாவுக்கு வந்தார்! செய்தியாளர்களைச் சந்தித்தார்!

அந்தச் சந்திப்பில் அவர் வெளிப்படுத்தியுள்ள முக்கியமான விஷயங்கள் சில உண்டு!

கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சியைக் கலைப்பது பற்றி சந்திரசேகருடனோ அல்லது ஜெயலலிதாவுடனோ தாம் பேசவில்லை என்று ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி அவர்களின் இந்தக் கூற்றை தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல; இந்திய நாட்டு மக்கள் நம்ப வேண்டும் என அவர் எதிர்பார்ப்பதுதான் விந்தையிலும் விந்தை!

இதையேதான் பினாமிப் பிரதமராகச் செயல்படும் மாண்புமிகு சந்திரசேகர் அவர்களும் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்.

யாருடைய நிர்ப்பந்தத்தினாலும் நான் தி.மு.க. அரசைக் கலைக்கவில்லை. நான் நிர்ப்பந்தங்களுக்குப் பணிபவன் அல்லன்.

இது தொடர்ந்து சந்திரசேகர் முழங்கி வரும் சத்யமேவ ஜெயதே ஆகும்!

ஆமாம்; அவர் ஒரு நெருப்பு! அவரை நிர்ப்பந்தம் எதுவும் நெருங்கவே முடியாது!

அவரது அமைச்சரவையில் இருந்த ஐவரைப் பாராளுமன்ற சபாநாயகர்; கட்சித் தாவல் சட்டப்படி நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கே தகுதியற்றவர்கள் என்று அறிவித்த பிறகும் அந்த ஐவரையும், அமைச்சர்களாகவே இருப்பார்கள் என்று சந்திரசேகர்

அறிவித்தாரே அதுகூட சத்தியமாக நிர்ப்பந்தம் காரணமாக செய்யப்பட்ட காரியமல்ல!

இப்போது அந்த ஐவரையும் பதவியிலிருந்து வெளியே தள்ளப் போகிறார் என்று செய்தி வருகிறதே; அதுகூட நிர்ப்பந்தம் காரணமாக அல்ல!

சொல்வது பிரதமராக இருப்பவர் அல்லவா; அதனால் நாம் அதனை நம்பத்தான் வேண்டுமென்று நமக்கும் நாட்டுக்கும் ஒரு நிர்ப்பந்தம்!

சரி; ராஜீவின் பெங்களூர் பிரகடனத்திற்கு வருவோம்!

ராஜீவோ, ஜெயலலிதாவோ அல்லது இருவருமோ கழக ஆட்சி கலைக்கப்பட வேண்டும் என்று சந்திரசேகரை நிர்ப்பந்திக்கவில்லையாம்! ராஜீவ் காந்தி இப்படிச் சொல்கிறார்!

பிறகு என்ன காரணத்தினால் கழக ஆட்சி கலைக்கப்பட்டது?

பிரதமர்; ஜனவரி முதல் வாரத்திலேயே தி.மு.க. ஆட்சி மீதும் முதலமைச்சர் மீதும் குற்றம் சாட்டி நாடாளுமன்றத்தில் பேசினார். அதனைக் கண்டித்து ராஜ்ய சபாவில் பெரும் கொந்தளிப்பு. பிறகு எதிர்க்கட்சித் தலைவர்களிடம் (ராஜீவின் தகவல்படி) பிரதமர் சில ஆதாரங்களைக் காட்டினார். அந்த ஆதாரங்கள் ஜோடிக்கப்பட்டவை என்பதையும், வலுவற்றவை என்பதையும் எதிர்க்கட்சித் தலைவர்கள் சந்திரசேகரிடம் தெரிவித்தார்கள். அந்தச் சந்திப்பு முடிவில் சந்திரசேகர் என்ன சொன்னார்? தி.மு.க. ஆட்சியைக் கலைக்க மாட்டேன் என்கிற கருத்தை வெளியிட்டார்.

பிறகு ஜனவரி 15-ந் தேதி செய்தியாளர்களைச் சந்திக்கிறார் அதே சந்திரசேகர்! தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியைக் கலைப்பது பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. ஜெயலலிதாவும் காங்கிரஸ்காரர்களும் கழக அரசின் மீது கொடுத்துள்ள புகார்களின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை.

இதையும் அவரேதான் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்!

ஜனவரி 28-ந் தேதி தமிழக முதலமைச்சரை சென்னையில் சந்தித்துவிட்டு பிறகு இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தைக்குக் கொழும்பு செல்ல வேண்டுமென மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரிடமிருந்து தகவல் வருகிறது சென்னைக் கோட்டைக்கு!

முதல்வர் 28-ந் தேதி சென்னையில் இருக்க மாட்டார். மதுரை நிகழ்ச்சிகளுக்குப் போகிறார்.

பரவாயில்லை! வெளியுறவுத் துறை அமைச்சர் மதுரைக்கே வந்து முதலமைச்சரைக் கலந்து பேசிவிட்டுப் பிறகு கொழும்பு செல்வார்.

ஜனவரி 28ஆம் நாள் மதுரையில் பாண்டியன் ஓட்டலில் முதலமைச்சரை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் அவரது அதிகாரிகளுடன் சந்தித்து பகல் உணவுக்கு முன்பாக ஒரு முறையும் - பிற்பகல் மூன்று மணிக்கு ஒரு முறையுமாக இரண்டு முறை சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை, எல்.டி.டி.இ. பிரச்சினை, இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை போன்ற பல விஷயங்களைப் பேசுகிறார்.

எந்த முதலமைச்சருடன்?

அதாவது; இந்தியப் பிரதமர் கூறிய தகவல்களை தமிழ் ஈழத்தில் உள்ள பிரபாகரனுக்குத் தெரிவித்து விட்டதாகக் குறை கூறப்பட்ட முதலமைச்சருடன்!

உடன்பிறப்பே, எவ்வளவு முரண்பாடு பார்! பிரதமர் சொன்ன தகவல்களை பிரபாகரனுக்குச் சொல்லிவிட்ட முதல்வருடன் இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக மத்திய வெளியுறவு அமைச்சர் ரகசியமாக ஒரு முறையும் - அதிகாரிகளுடன் ஒரு முறையும் மதுரையில் பேசுகிறார்!

ஆமாம்; அவர்களின் கருத்துப்படி - நம்பிக்கைக்கு உகந்தவனாக இல்லாத என்னிடம் மத்திய அமைச்சர் மதுரைக்கே வந்து இலங்கைத் தமிழர் சம்பந்தமாக விவாதிக்கிறார்!!!

பிறகு அவர் மதுரைச் செய்தியாளர்களிடம் முதல்வருடன் பேசிய விபரங்களை வெளியிட முடியாது - அவருடன் பேசியது மிகவும் திருப்தியாக இருந்தது என்று கூறிவிட்டு, இலங்கைக்கு விரைகிறார்!

என்ன இது? 28-ந் தேதி சாலை மறியல் என்றார்கள்! தமிழகமே ஸ்தம்பிக்கும் என்றார்கள்! மதுரையில் எல்லாக் கடைகளும் திறந்திருக்கின்றன! சட்டம் ஒழுங்கு பிரச்சினையே இல்லையே!

மத்திய அரசின் அதிகாரிகள், இங்கு வந்து மட்டுமல்ல - டெல்லியில் இருந்தும் வியப்பும் மகிழ்ச்சியும் தெரிவித்தார்கள்!

அதுதானே திட்டம்! ராஜீவும் ஜெயலலிதாவும் சேர்ந்து ஜனவரி 28 சாலை மறியலில் தமிழகத்தை ரணகளமாக்குவது - அதை வைத்து ஆட்சியைக் கலைக்குமாறு சந்திரசேகருக்கு ஆணையிடுவது! எதிர்பார்த்தது நடக்காமல் போகவே; பிப்ரவரி 2 பட்ஜெட்டுக்கு முன் கலைக்காவிட்டால் பிப்ரவரி 5 ஆதரவு வாபஸ் என்ற எச்சரிக்கை புறப்பட்டது!

அதற்குமேல் நடந்ததை - சென்னை ராஜ் பவனுக்கு செய்தி வந்ததை - கவர்னர் டெல்லிக்குச் சென்றதை - அங்கு தமிழ்நாடு அரசு மாளிகையின் விநாடிக்கு விநாடி நிகழ்ச்சிகளை - இறுதியாக ராஷ்டிரபதி பவனில் ஜனநாயகம் சிரச்சேதம் செய்யப்பட்டதை விளக்க வேண்டுமா என்ன?

நிர்ப்பந்தம் எதுவுமில்லை என்று சந்திரசேகரும் சொல்கிறார்! ராஜீவும் சொல்கிறார்! மக்களை ஏமாற்றலாம்! மனச்சாட்சியை ஏமாற்ற முடியுமா? மக்களே கூட ஏமாறத் தயாராக இல்லை! அவர்கள் மண்டூகங்கள் அல்லர்!

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு மட்டுமல்ல; இன்னொரு அதிமுக்கிய நபருக்கும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உண்டு.

பெங்களூரில் ராஜீவ் காந்தி வெளியிட்ட அறிவிப்பு இது!

யார் அந்த அதிமுக்கிய நபர்? அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சொல்கிறாரா? அல்லது ராஜீவ் காந்தி அவர்கள் தன்னையே சொல்லிக் கொள்கிறாரா?

ஏன் எனில்; ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது நானும் தம்பி மாறனும் அவரை டெல்லியில் சந்தித்தோம்! அப்போது அவர் என்னிடம் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு பேச்சு வார்த்தை நடத்தச் சொன்னார்! நானும் தொடர்பு கொண்டு பேசினேன்! இது ஒன்றும் ரகசியமல்ல! அப்போதே பத்திரிகைகளில் வந்த செய்திகள்தான்! சட்டப் பேரவையில் நான் அறிவித்த செய்திகள்தான்!

விடுதலைப் புலிகளுடன் யாருக்குத் தொடர்பு இல்லை?

அன்னை இந்திரா காந்தி அம்மையாருக்கு தொடர்பு இல்லையா?

அதனால்தானே இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்குத் தமிழ்நாட்டில் மட்டும் முப்பதுக்கு மேற்பட்ட இராணுவப் பயிற்சி முகாம்கள் 1988 வரையில் இருந்தன!

தொடர்பு இருந்ததால்தானே கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்களை அவர்களுக்கு அதிகாரிகளே முன்னின்று வழங்கினார்கள்!

அந்தத் தொடர்பு ராஜீவ் காந்தி காலத்திலும் தொடரவில்லையா?

தேசிய முன்னணி ஆட்சியில் பிரதமர் வி.பி. சிங் அவர்கள்; தமிழ் ஈழப் போராளிகள் அனைவருடனும் என்னைப் பேசச் சொன்னார். தனித் தனியாக அவர்களை அழைத்துப் பல சுற்றுகள் பேசினேன்! ஆம்; அவர்களுடன் தொடர்பு இருந்ததால்தான் பேசினேன்!

ராஜீவ் காந்தி, விடுதலைப் புலிகளுடன் மட்டும் என்னைப் பேசச் சொன்னார்!

வி.பி.சிங்; என்னை எல்லாப் போராளிக் குழுக்களுடனும் பேசச் சொன்னார்!

சகோதர யுத்தத்தை தவிர்த்து ஒன்றுபடுங்கள்! என எவ்வளவோ முயன்று பார்த்தேன்!

அவர்கள் ஒன்றுபடுவது கண்ணை உறுத்தியதால் சில அதிகாரிகள் வெண்ணெய் திரளும் போது தாழியை உடைத்தனர்!

தமிழ் ஈழத்தில் நிலையான அமைதியும், தமிழ் இனத்துக்கான உரிமையும் கிடைத்திட வேண்டும் - இது நமது ஆசை!

போராளிகள், தமிழ்நாட்டை வன்முறைக் களமாக்கிட அனுமதியோம் - இது நமது திட்டவட்டமான அறிவிப்பு!

இலங்கையில் அன்றும் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்!

இன்றும் கொல்லப்படுகிறார்கள்! இந்தக் கொடுமையைக் கண்டித்தால் அது தேச விரோதமா?

தேச விரோதமான காரியத்தில் தி.மு.க. ஆட்சியும் நானும் ஈடுபட்டதாக ஏதோ ஆவணம் இருக்கிறதாமே; அதை ராஜீவ் காந்தி பார்த்தாராமே! என்ன ஆவணம் அது?

திடீரென ஜனவரி 29-ந் தேதியன்று கண்டுபிடிக்கப்பட்ட தேச விரோதமான ஆவணம்தான் என்ன?

தேச விரோதமாக ஸ்வீடனுடன் பேரம் பேசினோமா?

ஸ்விஸ் வங்கியில் பணம் போட்டோமா?

ஆவணம் இருந்தால் அறிவிக்கட்டுமே; பகிரங்கமாக!

முக்கிய தேசியப் பிரச்சினைகளில் சந்திரசேகர் அரசு முடிவு எடுக்க முடியாது! ஏனெனில் அந்த அரசு 54 எம்.பி.க்களை மட்டுமே கொண்ட மைனாரிட்டி அரசு.

பெங்களூரில் ராஜீவ் காந்தி பேசியதுதான் இதுவும்!

தேசியப் பிரச்சினை என்று கூறித்தானே தமிழ்நாட்டு அரசு கலைக்கப்பட்டுள்ளது!

ராஜீவ் காந்தி என்ன சொல்கிறார்; இப்போது?

மைனாரிட்டி சந்திரசேகர் அரசு தமிழக அரசைக் கலைத்தது தவறு என்கிறாரா?

(அல்லது)

தேசியப் பிரச்சினை ஒன்றும் தமிழக அரசு கலைப்பில் இடம் பெறவில்லை என்கிறாரா? மொத்தத்தில் பார்க்கும்போது ராஜீவ் அவர்கள் பெங்களூரில் பேசினாரா? அல்லது பிதற்றினாரா? என்பது கேள்விக்குறியாகி விட்டது!

அன்புடன்,

மு. க.

10-02-1991

1690. சபாஷ் கூறிக்கொள்ளும் சகாய்!

உடன்பிறப்பே!

இன்னும் சில நாட்களோ, சில வாரங்களோ என்று பதவியின் ஆயுட்காலத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருக்கும் சந்திரசேகர் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் உள்துறை அமைச்சர் தமிழகத்திற்கு வந்தார். சட்டம் ஒழுங்கு பற்றிக் காவல்துறையினருடன் விவாதித்தார். பிறகு ஹெலிகாப்டர் விமானத்தில் பறந்து திருச்சி, தஞ்சை, முகவை மாவட்டங்களில் விடுதலைப்புலிகளும் உல்பா தீவிரவாதிகளும் உலவிக் கொண்டிருக்கிறார்களா என்று ஆகாயத்திலிருந்தபடியே பூமியைப் பூதக் கண்ணாடி மூலம் உற்றுப்பார்த்தார். கழனி தெரிந்தது. கடல் தெரிந்தது. புல்தரை தெரிந்தது. சமூக நலக் காடுகள் தெரிந்தன. மதுரைக் கோபுரம் தெரிந்தது. புலியோ, உல்பாவோ தென்படவில்லை! இல்லவே இல்லை!

தமிழ் இனத்துக்கும் அதன் உரிமைகளுக்கும் விரோதமாகவே தொலைக்காட்சியில் செய்திகளை வழங்குவதற்கென்றே நீண்ட நாட்களாக செய்தி தயாரித்து - இடையில் டெல்லி சென்று; மீண்டும் சென்னைக்கு வந்துள்ள செய்தி, ஆசிரியர் ஒருவர்; உள்துறை அமைச்சரின் கூடவே சென்று - ஒலிவாங்கியை அவரது உதட்டருகே நீட்டி; அவரைப் பேசவைத்திருக்கிறார்; தனது விருப்பம்போல!

இரண்டு ஆண்டுக் காலம் தி.மு.க. ஆட்சியில் கட்டுப்படுத்த முடியாத விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை பத்து நாள் ஜனாதிபதி ஆட்சியில் கட்டுப்படுத்தி விட்டோம்.

என்று உள்துறை அமைச்சர் தமக்குத்தாமே ஒரு சபாஷ் போட்டுக் கொண்டார்!

இரண்டு ஆண்டு தி.மு.க. ஆட்சியில் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட எத்தனை போராளிகள் கைது செய்யப்பட்டார்கள் - எத்தனை பேர் மீது தேசப் பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தது - எத்தனை பேர்மீது வழக்கு - எத்தனை பேர் சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டார்கள் - என்ற கணக்கு; சென்றதடவை உள்துறை அமைச்சர் சென்னையில் திரைப்பட விழாவுக்கு பெரும் ரசிகராக (?) வந்திருந்தாரே; அப்போதே காவல்துறை அதிகாரிகள் கூட்டத்தில் அவரது கையில் தரப்பட்டது!

அந்தக் கணக்கை ஒருவேளை அவர் தங்கியிருந்த இடத்தில் மறந்துபோய் விட்டு விட்டுச் சென்றுவிட்டாரோ என்னவோ!

பரவாயில்லை; விரைவில் அந்த விபரத்தை தேதி வாரியாக நாடு தெரிந்துகொள்ளத்தான் போகிறது!

சுபோத்காந்த சகாய் வந்தாராம்; அடையாறு, அண்ணா நகர், கோடம்பாக்கம், வேப்பேரி முதலிய இடங்களில் குடும்பத்தினருடன் தங்கியிருந்தவர்கள் சுமார் அறுபது பேரைப் போலீசார் கைது செய்தார்களாம். தமிழ் நாட்டில் பிற இடங்களிலும் இதுபோலப் போராளிகள் கைது செய்யப்பட்டு வருகிறார்களாம். அமைச்சர் தமிழகம் வந்ததையொட்டி இந்த நடவடிக்கையாம். போராளிகள் கைது பற்றிய விபரங்களை எதுவும் தர காவல் துறையினர் மறுத்து விட்டார்களாம். இப்படி ஏடுகளில் செய்தி வந்துள்ளது.

உடன்பிறப்பே, கடந்த ஆண்டு தமிழக அரசின் சார்பில் ஒரு அறிவிப்பே தரப்பட்டு; 1983 முதல் தமிழகம் வந்து தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள்; தங்கள் முகவரி - தங்களைப் பற்றிய விபரங்களை; அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ள காவல் நிலையங்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்கள் என்பது அனைவரும் அறிந்ததே!

ஏடுகளில் வந்த கழக அரசு அறிவிப்பு விளம்பரத்தின் காரணமாக இலங்கைத் தமிழர்கள் சுமார் ஏழாயிரம் பேர் அளவுக்குத் தமிழ் நாட்டில் பல பகுதிகளில் வீடு எடுத்துக் கொண்டு குடும்பங்களுடன் வாழ்வதாகப் புள்ளி விபரம் கிடைத்ததையும் அரசின் சார்பில் அப்போதே வெளியிடப்பட்டிருக்கிறது!

இப்போது உள்துறை அமைச்சர் வருகையை முன்னிட்டு; போலீசார் பரபரப்பாக இருப்பதாக அவர் தெரிந்துகொள்ள - அல்லது மத்தியில் உள்ள பினாமி அரசு; நிர்ப்பந்தம் காரணமாக நடத்திய கழக ஆட்சி கலைப்பை நியாயப்படுத்த - அந்தக் குடும்பத்தினர் பலரை அவசர அவசரமாகக் கைது செய்து தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் நடமாட்டத்தைக் குறைத்து விட்டதாக டமாரம் அடித்துக் கொள்கிறார்கள்!

விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகள் - வேலூர், புதுக்கோட்டை, புழல் போன்ற இடங்களில் சிறப்பு முகாம்களில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டது எப்போது? கழக ஆட்சி இருந்தபோதுதானே!

வேலூர் முகாமில் கலவரம் செய்த காரணத்திற்காக முகாமிலிருந்து வெளியேற்றப்பட்டு வேலூர் சிறையில் விடுதலைப் புலிகள் அடைக்கப்பட்டது எப்போது? கழக ஆட்சி இருந்தபோதுதானே!

கடந்த ஓராண்டு காலத்தில் அறுபதுக்கு மேற்பட்ட போராளிகள்; தேசப் பாதுகாப்பு சட்டப்படி (என்.எஸ்.ஏ) கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனரே; அவர்களில் சுமார் நாற்பதுக்கு மேற்பட்டோர் விடுதலைப் புலிகள் என்றும் மற்றவர்கள் வேறு போராளிக் குழுவினர் என்றும் நாட்டுக்கு தெரிவிக்கப்பட்டது எப்போது? கழக ஆட்சி இருந்தபோதுதானே!

20-1-90ஆம் ஆண்டு முகவை தர்காவலசை என்னுமிடத்தில் இ.என்.டி.எல்.எப். புதைத்து வைத்திருந்த ஐந்து கோடி மதிப்புள்ள ஆயுதங்களைக் கண்டுபிடித்து எடுத்ததும் கழக ஆட்சியில்தானே!

இப்போது கைது செய்யப்பட்டிருப்பவர்களில் பல பேர் போராளிக் குழுவைச் சேர்ந்தவர்கள் அல்லர்! அப்படியே சில போராளிகள் இருந்தாலும் - அது கழக அரசு காலத்திலேயே எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தொடர்ச்சியே தவிர; புதிது ஒன்றுமில்லை!

புலிகளையும், உல்பாக்களையும் கண்டுபிடித்து விட்டதாக மார்தட்டிக் கொள்ளும் மத்திய உள்துறை அமைச்சருக்கு ஒரு கேள்வி!

முன்பெல்லாம் உங்கள் ஆதரவுக் கட்சிகளும் - நீங்களும் சொன்னது என்ன?

தமிழ்நாட்டில் உல்பா முகாம்கள் ஆறு இருக்கின்றன! புலிகள் முகாம்களும் ஏராளம் இருக்கின்றன! இப்படித்தானே சொல்லிக் கொண்டிருந்தீர்கள்! ஆட்கள் இருக்கலாம்; ஆனால் அவர்களுக்கு பயிற்சி முகாம்கள் எதுவுமில்லை என்றுதானே மத்திய அரசின் சார்பில் கூறப்பட்டது; இப்போது நீங்கள் கண்டுபிடித்த உல்பா முகாம்கள் எங்கே? புலிகள் முகாம்கள் எங்கே?

இனிமேல் நீங்களே சில பயிற்சி முகாம்களை அமைக்கச் செய்து; அதற்காக ஒருமுறை ஹெலிகாப்டர் விமானத்தில் வந்து அவற்றைக் கண்டுபிடித்ததாக கதை அளப்பீர்களோ?

உடன்பிறப்பே; இப்படித்தான் தமிழ்நாட்டு மக்கள் கேட்கிறார்கள்!

உல்பா என்றால் என்ன? அசாம் விடுதலை இயக்க தீவிரவாதிகள் இயக்கத்திற்கு சுருக்கமான பெயர்.

அசாம் எங்கே இருக்கிறது? இந்தியாவுக்குள்தான் இருக்கிறது! அசாமையும் சேர்த்துத்தான் இந்தியா என்கிறோம்!

அசாம் மாநிலத்திலிருந்து எத்தனையோ ஆண்டுக்காலமாக வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு பலபேர் வந்து கொண்டிருக்கிறார்கள். அசாம் மாநில மாணவர்கள் பலர் நீண்ட காலமாக தமிழ்நாட்டுக் கல்லூரிகள் சிலவற்றில் பயிலுகிறார்கள்!

அசாமிலிருந்து நோயாளிகளோ - மாணவர்களோ - அல்லது உல்பா என்று சந்தேகிக்கப்படுகிற நபர்களோ - தமிழ்நாட்டுக்குள் வரக்கூடாது எனத் தடுப்பதற்கு மத்திய அரசு - பாஸ்போர்ட், விசா போன்ற ஏற்பாடுகள் எதையாவது செய்திருக்கிறதா? ஒருவேளை அந்த ஏற்பாடுகளை மீறி கழக அரசு, அவர்களை இங்கே அனுமதித்து விட்டதா? இந்தியாவுக்குள் இந்தியர்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்ற உரிமையை அசாமியர்களுக்கு மட்டும் எவ்வாறு தடுக்க முடியும்?

அசாம் உல்பாக்கள், விடுதலைப் புலிகள், ஆந்திரத்து நக்சலைட்டுகள் - இவர்களுக்குள் தொடர்புகள் இருக்கின்றன என்றால்; அது எச்சரிக்கையுடன் கவனிக்கப்பட்டு நடவடிக்கை

எடுக்கப்பட வேண்டியவைதான் என்பதில் கழக அரசு என்றைக்காவது மாற்றுக் கருத்து கொண்டிருந்தது உண்டா?

தமிழ்நாட்டில் உள்ள புலிகளுக்கும், அசாம் உல்பாவுக்கும், ஆந்திரா நக்சலைட்டுகளுக்கும் தொடர்பு உண்டு என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது

என்பதாக உள்துறை அமைச்சர் கூறியுள்ளார்!

அப்படியானால், அசாமில் மகந்தா ஆட்சியையும் தமிழகத்தில் கழக ஆட்சியையும் கலைத்தது போல் ஆந்திரத்தில் காங்கிரஸ் ஆட்சியை ஏன் கலைக்கவில்லை?

தமிழ்நாட்டில் மூன்று மாவட்டங்களில் மாநில அரசே செயல்படவில்லை என்றும் புலிகளின் நிர்வாகத்தில்தான் அந்த மூன்று மாவட்டங்களும் இருக்கின்றன என்று கதைத்திட்ட சகாய் எனும் உள்துறை அமைச்சர்; இப்போது அந்த மூன்று மாவட்டங்களும் சென்றாரே - அவர் அன்று கதைத்தது உண்மைதான் என்று இப்போதும் கதைக்கிறாரா?

கழக ஆட்சியில் அந்த மாவட்ட நிர்வாகங்களை நடத்திய அதிகாரிகளைத் தானே அவர் சந்தித்து உரையாடிவிட்டுச் சென்றுள்ளார்!

அவர் சொன்ன அந்த மாவட்டங்கள் தமிழகத்தில் இல்லை! ஆந்திராவில் இருக்கின்றன! மூன்றல்ல; ஆறு மாவட்டங்கள்!

அந்த ஆறு மாவட்டங்களிலும் நக்சலைட் ஆட்சி நடைபெறுகிறது!

நீதி விசாரணையைக் கூட அவர்களே நடத்துகிறார்கள்! தண்டனையைக் கூட அவர்களே வழங்குகிறார்கள்! அவர்கள் வாழும் பகுதிகளுக்கு அரசு அதிகாரிகள் செல்வதென்றால்; முன்கூட்டி அவர்களிடம் விண்ணப்பித்து, அவர்களின் அனுமதி கிடைத்த பிறகே அங்கே செல்ல முடியும்!

இந்த இலட்சணத்தில் ஒரு மாநிலம் இருக்கிறது!

ஆந்திரம் மட்டுமா? உத்திரபிரதேசத்தில் என்ன வாழுகிறது? சகாய் சென்னை வருவதற்கு முதல் நாள்கூட

பனிரெண்டு பேர் அங்கே கொல்லப்பட்டிருக்கிறார்கள் குண்டு வெடித்து! நாள்தோறும் அந்த மாநிலத்தில் வன்முறையும், இரணகளமும்தான்! குஜராத்திலும் அமளிதான்!

என்ன செய்வது? அங்கெல்லாம் சந்திரசேகரின் சகாக்கள், அல்லது அவரது சகாயக்காரர்கள் கோலோச்சுகிறார்கள் - எனவே; அங்குள்ள நிலைமைகள் வெறும் சட்டம் ஒழுங்கு பிரச்சினையாகி விடுகின்றன மத்தியில் இருப்போருக்கு!

இங்கே மட்டும் தேசியப் பிரச்சினை - அரசியல் சட்டமே செயல்பட முடியாத நிலை - என்று கூறி; அமைதிப்பூங்காவாக இருந்த மாநிலத்தில் நமது அரசைக் கலைத்து விட்டு - அதனை நியாயப்படுத்த அரசின் பிரச்சார சாதனங்களை வெகு வேகமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

காலம் பதில் சொல்லும் என்பதைக் கபோதிகளுக்கு உணர்த்தும் நேரம் வந்தே தீரும்!

அன்புடன்,

மு. க.

13-02-1991

1691. சரித்திரத்தின் சாகாத எழுத்துக்கள்!

உடன்பிறப்பே!

நீதிக்கும் நேர்மைக்கும் தண்டனை வழங்கப்படும்
காலம் இது!

உண்மைக்கும் உறுதிக்கும் இந்தக் காலத்தில்
உயர்வுமில்லை! மதிப்புமில்லை!

நம் வீட்டுத் திருமணத்தில் பழம்பெரும் காங்கிரஸ் நண்பர் திரு. உமாபதி அவர்கள்; மணமக்களைப் பார்த்து - மணமக்களே! நீங்கள் அரசியலுக்கு வந்து விடாதீர்கள்! இன்றைய அரசியலில் தியாகத்துக்கும் உழைப்புக்கும் எந்தச் சோதனை வரினும் வளைந்து கொடுக்காமல் 13 ஆண்டல்ல; எத்தனை ஆண்டுகளானாலும் கொள்கை உறுதியோடு இருப்பேன் என்று கூறுகிற நெஞ்சுரத்திற்கும் மதிப்பில்லாமல் போய்விட்டது! எனவேதான் சொல்லுகிறேன்; இந்த அரசியலுக்கு வராதீர்கள் என்று! எனக் கூறினாரே; இந்த வாசகத்தில் எத்துணை பொருள் இருக்கிறது பார்த்தாயா?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை; அதன் காலம் இரண்டு ஆண்டுகள் மட்டுமே நிறைவுற்று - மேலும் மூன்றாண்டு காலம் மிச்சமிருக்கும் போதே கலைத்து விட்டார்களே நியாயமா?

இப்படிக் கேட்டால்; 34 சதவிகித வாக்குகளைப் பெற்றுத்தானே கருணாநிதி ஆட்சிக்கு வந்தார் என்ற ஒரு வாதத்தை வைக்கிறார்கள்.

இன்றுள்ள இந்தியாவின் தேர்தல் முறையில் எந்த விதிகளையும் மீறி தி.மு.க. ஆட்சிக்கு வந்துவிடவில்லை.

1977-ல் நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்தபோது அவரது கட்சி பெற்ற மொத்த வாக்குகள் 30 சதவிகிதமேதான் என்பதை வாதமிடுவோர் ஏனோ மறந்து விடுகிறார்கள்!

கோமா நிலையில் உள்ள சந்திரசேகர் அரசின் சுவாசப் பையை சுருங்கி விரியச் செய்யப் பயன்படும் ஆக்சிஜன் குழாயைப் பிடுங்கி விடுவோம் என மிரட்டிய காரணத்தால்; நடுங்கும் நிலையில் நாடி தளர்ந்து போன அந்தப் பினாமிக்கரம்; தமிழகத்தில் கழக ஆட்சி கலைப்புக்கு உத்திரவிட்டு - ஒப்புதல் பெறுவதற்கு இந்தியாவின் மிக உயர்ந்ததும் கௌரவமிக்கதுமான ஜனாதிபதி மாளிகைக்கு அனுப்பி வைத்தது.

அந்த மாளிகையின் மாமனிதரோ; மாநில உரிமைகள் பற்றி முழங்கியவர்! ஜனநாயகம் குறித்து குரல் எழுப்பியவர்! பழைய சுயராஜ்யா பத்திரிகையில் எமர்ஜன்சியைக் கண்டித்து அவர் எழுதிய கட்டுரைகள் இன்றைக்கும் நினைவில் நிற்பவை! கற்ற தர்மங்கள் போதாதென்று மேலும் மேலும் தர்மத்தைக் கற்றிட மாதந்தோறும் காஞ்சி மடம் சென்று பெரியவரை சேவித்து மகிழ்பவர்!

அவரா இப்படி? அவருமா? உண்மையா? என அரசியல் வித்தகர்கள், சட்டம் பயின்ற சான்றோர், நடுநிலையுடன் சிந்திப்போர் அனைவருமே வியந்தனர்! விசனமுற்றனர்!

ஆட்சி கலைப்பு என்னை அதிர்ச்சி அடையச் செய்யவில்லை! செய்யாது! நீ அறிவாய் நன்றாக! ஆனால் ஒன்று; இந்தித் திணிப்பை எதிர்ப்பதற்காக அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவில் இந்தித் திணிப்பு எனும் கருத்தமைந்த பகுதியை மட்டும் கையால் எழுதிக் கொளுத்த முயன்றதற்கே - பெருங்குற்றமென்றுரைத்து சிறைத் தண்டனை வழங்கப்பட்டது! பத்துப்பேர் பேராசிரியர் உள்ளிட்டோர் சட்டமன்ற பதவிகள் பறிக்கப்பட்டன! இப்போது அரசியல் சட்ட புத்தகமே காலில் போட்டு மிதிக்கப்பட்டிருக்கிறது! இந்தக் குற்றத்துக்கு என்ன தண்டனையோ?

அரசியல் சட்டப்படி நடந்து கொள்வேன் - தமிழக அரசைக் கலைக்கும் ஜனநாயக விரோதச் செயலுக்கு எனது ஒப்புதல் கிடையாது - என்பதைச் செயல் மூலம் காட்டியவர் சுர்ஜித் சிங் பர்னாலா! இனி அவரை இப்படித்தான் அழைக்க வேண்டும்; சீக்கியச் சிங்கம் பர்னாலா!

அறிக்கை கேட்கப்படவுமில்லை; நான் தரவுமில்லை என அவர் பெருந்தன்மையுடன் அன்றும் இன்றும் ஒரே நிலை நின்று பதில் அளித்துள்ளார். அதற்கு என்ன பொருள்? புரியவில்லையா?

மாநில ஆளுநரை டெல்லியில் வைத்துக் கொண்டே அவரிடம் அறிக்கை பெற முடியாமல்; அதர்வைஸ் என்ற வேறுவகையில் எஜமானரின் கட்டளையையும், எஜமானியின் ஆசையையும் ஒரு சேர நிறைவேற்றி விட்டார் சந்திரசேகர் என்பதுதானே உலகறிந்த உண்மை!

இல்லை! இல்லை! அப்படியில்லை! கலைத்தமைக்கு காரணம் வேறு என்போர்; பழைய முதுமொழியில் கூறினால் முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைப்போர் - புதுமொழியில் சொல்லப் போனால் தஞ்சைக் கோபுரத்தை சோற்றிலே மறைப்போர்!

ஜனநாயகத்தின் மீது ஜனவரி 30ஆம் நாள் முதல் குண்டு பாய்ந்தது! கழக அரசு கலைக்கப்பட்டது!

மத்திய அரசு தனது மனம் போன போக்கில் மாநில அரசுகளைக் கலைப்பதைக் கண்டிக்கும் உரிமையுடன் பீகார் மாநில முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் அவர்கள் ஆளுநர் உரையைத் தயாரித்தார். அதனை அந்த மாநில ஆளுநர் முகமது யூனுஸ் சலீம் அவர்கள் அவையில் படித்தார்.

மாநில சுயமரியாதைக்காகக் கொடுக்கப்பட்ட குரலுக்குத் துணை போனார் என்று அந்த ஆளுநரை - ஆம்; முகமது யூனுஸ் அவர்களை டிஸ்மிஸ் செய்து விட்டன ராஜீவின் கைப்பாவைகள்!

அதாவது; ஜனநாயகத்தின் மீது இரண்டாவது குண்டு பாய்ந்தது! முகமது யூனுஸ் நெஞ்சை நிமிர்த்தி அந்தக் குண்டை ஏந்திக் கொண்டார்.

பணிய மறுத்த பர்னாலா தண்டிக்கப்பட வேண்டாமா? டெல்லியின் பசி அவரைப் பழி வாங்காமல் தீருமா?

பீகாருக்கு மாற்றல் என்றனர்! பட்டுத் துணி போர்த்திய பட்டாக்கத்தி என்பதை பர்னாலா உணர்ந்தார்!

ஜனவரி 30-ல் பாயத் தொடங்கிய மூன்று குண்டுகளில் மூன்றாவதாகத் தாங்கிடத் தனது நெஞ்சு தயார் எனக் கம்பீரம் காட்டினார்!

பாசத்துடன் பழகிய தமிழக மண் மீது வீரம் செறிந்த விழிகளில் இருந்து பெருகிய நீரைக் காணிக்கையாக்கி விட்டு, பஞ்சாப்புக்குத் திரும்பிவிட்டார்!

எனவேதான் நடுநிலையில் இருந்து சிந்திக்கும் நாட்டுக்கும் நாட்டுப் பற்றாளர்கள்;

நீதிக்கும் நேர்மைக்கும் தண்டனை வழங்கப்படும் காலம் இது

உண்மைக்கும், உறுதிக்கும் இந்தக் காலத்தில் உயர்வுமில்லை! மதிப்புமில்லை

என்று உள்ளம் கலங்குகிறார்கள்.

இந்தக் காலத்தை மாற்ற வேண்டாமா? - மாற்றத்தான் வேண்டும் - மாற்றத்தான் போகிறோம்! அந்தப் புனிதப் பணியில் பழி வாங்கப்படும் நாமோ; அல்லது பர்னாலாவோ - அல்லது முகமது யூனூஸ் போன்றவர்களோ; சரித்திரத்தில் என்றும் சாகாத எழுத்துக்களாக ஒளிவிடத்தான் போகிறோம்!

அந்த நம்பிக்கையுடன் உயர்த்திப் பிடித்திடுவோம் நமது கொடியை!

அன்புடன்,

மு. க.

17-02-1991

1692. கேவலமல்ல! "கிங்டம்"!

உடன்பிறப்பே!

வா! இந்தப் பக்கம்!

வந்தேன்!

அய்யாவோட கையிலே இருக்கிறது என்னா?

கடிகாரம்!

பையிலே இருக்கிறது என்னா?

பேனா!

வா! இந்தப் பக்கம்!

வந்தேன்!

அம்மாவோட கையிலே இருக்கிறது என்னா?

காய்கறி!

காலிலே இருக்கிறது என்னா?

செருப்பு!

அம்மா கழுத்திலே போட்டிருக்கிறது என்னா சங்கிலி?

பித்தளைச் சங்கிலி!

இது போன்ற குரலையும், அந்தக் குரல் ஒலிக்கும் காட்சியையும், சந்தை கூடும் இடங்களில் சந்து முனைகளில் பார்த்திருக்கிறோம் இல்லையா? ஒரு கம்பம் நடப்பட்டிருக்கும். கம்பத்திற்கருகே கை முழுவதும் கண்ணாடி வளையல்கள் அணிந்த ஒரு பெண் உட்கார்ந்து கொண்டு தோல் வாத்தியக் கருவியொன்றை தட்டிக் கொண்டிருப்பாள். ஒரு சிறுவன் கம்பத்தில் ஏறிக் கர்ணம் போட்டுக் கொண்டிருப்பான். ஒரு கையில் கயிற்றில் கட்டப்பட்ட ஒரு குரங்கைப் பிடித்தவாறு ஒரு வாலிபன் அந்த இடத்தில் வட்டமாக நின்று கொண்டிருக்கும் வேடிக்கை பார்க்கும் கூட்டத்தினரிடம் சென்று; அவர்களுக்கு முன்னால் இருந்தபடியே வா! இந்தப் பக்கம்! என்று குரலை எழுப்பி; ஒவ்வொருவரிடமும் உள்ள பொருள் என்னவென்று

கேட்டுக் கொண்டிருப்பான். கம்பத்தின் பக்கத்தில் ஒரு உருவம் முழுமையாக மூடப்பட்டுப் படுக்க வைக்கப்பட்டிருக்கும். கால் முதல் தலை வரையில் ஒரே முக்காடுதான்! அந்த உருவம்தான்; வந்தேன்! என்று பதிலுரைக்கும்! வாலிபன்; ஒவ்வொருவரிடமும் உள்ள ஒவ்வொரு பொருளையும் சுட்டிக்காட்டி - அய்யா வைத்திருப்பது என்ன? அம்மா போட்டிருப்பது என்ன? என்று கேட்கக் கேட்க அந்த முக்காட்டு உருவம்; சரியான பதிலைச் சொல்லிக் கொண்டேயிருக்கும். வேடிக்கை பார்க்கும் மக்கள் அடேடே! அப்படியே சொல்லிவிட்டதே! என்று ஆச்சரியத்தால் திக்கு முக்காடுவார்கள்!

ஒவ்வொரு ஆளிடமும் சென்று ஒவ்வொரு பொருளைக் காட்டி அந்த வாலிபன் கேட்கும் பொழுதும் ஒரு சங்கேதச் சொல்லை முணுமுணுப்பதும் - அதைப் புரிந்து கொண்டு அந்த முக்காட்டு உருவம்; எல்லாப் பொருள்களையும் பற்றிச் சொல்வதும் அந்த வேடிக்கை பார்க்கும் கூட்டத்திற்கு தெரிவதில்லை!

இடையிடையே குரங்காட்டம் வேறு! ராமாரே ராமா! காவடி எடுடா ராமா! கர்ணம் போடுடா ராமா! அய்யாகிட்ட காசு கேளுடா ராமா! கடலை தின்னுடா ராமா! காசிக்குப்போடா ராமா! கையைக் காட்டுடா ராமா! பேனு பாரடா ராமா! பிசாசு ஆடுடா ராமா! இப்படி அந்த வித்தைக்கார வாலிபன் பாடப் பாட அவன் கையிலுள்ள குரங்கும் அவன் சொன்னதையெல்லாம் செய்யும்!

பெண்ணின் வாத்தியம் - பையனின் சேஷ்டை - குரங்கு போடும் கும்மாளம் - இவற்றுக்கு மத்தியிலே அந்த வித்தைக்கார வாலிபன்; அந்தக் கூட்டத்தில் உள்ளோரைத் தன் பக்கம் இழுப்பதற்கான மாயாஜாலத் தந்திரங்கள் - இவையனைத்தும் ஓர் உச்ச கட்டத்தை எட்டும்போது; மருந்து விற்க ஆரம்பித்து விடுவான்!

தேள் கடிச்சா உடனே தீர்க்கும் மருந்து!
பாம்பு கடிச்சா பட்டுன்னு போக்கும் மருந்து!
தலைவலியா? ஒரு மாத்திரை!
வயிற்று வலியா? இரண்டு மாத்திரை
விலை ரொம்ப சரசம்!
இது நமக்கு சகஜம்!

இன்றைக்கு சாப்பிட்டுப் பாருங்க! குணம் இல்லேன்னா நாளைக்கு வந்து கேளுங்க!

எடுங்க ரூபாயை!

புடிங்க மாத்திரையை!

வித்தை காட்டி வியாபாரத்தை முடித்துக் கொண்டு மூட்டையைக் கட்டுவான். ஏமாந்தவர்கள்; ஆளுக்கு ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் கொடுத்து அந்த மண்ணாங்கட்டி மாத்திரையை வாங்கி மிகுந்த கவனத்துடன் மடியிலோ, பையிலோ பத்திரமாக வைத்துக் கொண்டு - வீடு திரும்புவார்கள்!

முக்காட்டுக்குள் கிடந்த உருவம் எழும்! குரங்கைத் தூக்கிப் பையன் தோளில் வைத்துக் கொள்வான்! வாத்தியம் வாசித்த பெண் அந்த வாத்தியத்தைத் தனது தோளில் மாட்டி, முதுகுப்புறமாகத் தொங்க விட்டுக் கொண்டு பயணத்திற்குத் தயாராவாள்! வித்தைக்கார வாலிபன், அன்று கிடைத்த வருமானத்தை எண்ணிப் பையில் போட்டுக் கொண்டு கம்பத்தைச் சுமந்து கொண்டு கிளம்புவான்! பிறகு அந்த வித்தைக்காரக் கூட்டம்; வேறு ஊர் தேடி நடக்கும்!

உடன்பிறப்பே! நீ யோசிக்கிறாய்! என்னடா இது; கேவலம் ஒரு வித்தைக்கார நிகழ்ச்சியைப் பற்றி இவ்வளவு வர்ணித்து எழுதுவதற்கு திடீரென்று என்ன அவசியம் வந்தது - என்று!

கேவலம் ஒரு வித்தைக்கார நிகழ்ச்சி என்று கூறிவிட முடியுமா என்ன?

ஒட்டுப் போட்ட வேட்டியும் - அழுக்கேறிய உடலும் - கிழிந்த சட்டையும் - தெருவீதி முனையும் என்பதால் அந்த வித்தைக்கார நிகழ்ச்சியை கேவலம் என்று எளிதாகக் கூறிவிட முடிகிறது!

அதுவே தெருவீதியில் நடக்காமல் தேசத்தின் தலைநகரான புதுடெல்லிப் பட்டினத்தில் நடந்தால்?

அதற்குப் பெயர் வித்தையல்ல; உடன்பிறப்பே - வித்தையல்ல!

வித்தகர்கள் (?) நடத்தும் அரசியல்!

பஞ்சைப்பராரி போல இருந்துகொண்டு வித்தைக்கார வாலிபன்; வா! இந்தப் பக்கம்! என்றால் அது கேவலமாகத் தோன்றுகிறது!

பளபளப்பான சட்டையும் - பகட்டான அரைக்கோட்டும் போட்டுக் கொண்டு; பாரதத்தின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் -

வா! இந்தப் பக்கம்!

என்றால்; அடடா! அது எவ்வளவு வசீகரமான சொற்றொடர்! வைர வரியன்றோ அது? அந்தக் குரல் கேட்டு வந்தேன் என்று பதில் அளிப்பது முக்காட்டு உருவமாக இல்லாமல் - ஆம்; அந்தச் சாமான்ய மனிதனாக இல்லாமல் - இன்று சர்வ தேசங்களிலும் புகழ்பெற்ற (?) சந்திரசேகராக இருக்கும் பட்சத்தில் - வந்தேன் என்ற அந்தப் பதிலில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் அட்சரம் லட்சம் பெறுமே!

காவடி எடுடா ராமா!

கர்ணம் போடுடா ராமா!

காசு கேளுடா ராமா!

கடலை தின்னுடா ராமா!

காசிக்குப்போடா ராமா!

கையைக் காட்டுடா ராமா!

இந்தக் கட்டளைகளை ஒரு வித்தைக்கார வாலிபன் பிறப்பிக்க அதனைக் கேட்டு; அந்த அழகிய பிராணி செயல்படும்போது - ஆச்சரியம் இருக்குமெனினும்; பலருக்கு அந்தக் காட்சி குறித்த அலட்சியமே இருக்கும்!

அதனால்தான் சந்தைக்கு வந்தோர் - தெருவில் நடமாடுவோர் அனைவருமே அந்த வித்தையைக் காண தமது வேலைகளை மறந்து நிற்பதில்லை! ஒரு சிலரே கூடி நிற்பர்! குதூகலிப்பர்! குளிகை பெற்றுச் செல்வர்!

அசாம் ஆட்சியைக் கலைத்துவிடு ராமா!
தமிழக ஆட்சியையும் கலைத்துவிடு ராமா!
மனச்சாட்சி கவர்னரை மாற்றிவிடு ராமா!
பீகார் கவர்னரை பதவி விலக்கு ராமா!
எம்.பி. தகுதி இழந்தோரை மந்திரியாக்கு ராமா!
மந்திரியானவர்களை டிஸ்மிஸ் செய் ராமா!
பட்ஜெட் படிப்பதை தள்ளி வை ராமா!

தெருமுனைக்குப் பதிலாக தேசத்தின் தலைநகரில் இதுபோன்ற கட்டளைகளும் - அந்தக் கட்டளைகளுக்குப் பணிதலும்; கேவலம் பட்டாணிக் கடலைக்காக அல்ல! பதவிக்காக! பதவிக்காக!! பதவிக்காக!!!

இப்போது சொல் உடன்பிறப்பே; சந்துமுனை வித்தைக்காட்சியை கேவலம் என்று அடைமொழி உதிர்த்து அலட்சியமாகப் பேசிவிடலாம்!

ஆனால், இந்தியாவின் சிகரத்திலேயே நடக்கும் இந்த வித்தைக்காட்சியை - தேசத் தலைநகரிலேயே நடக்கும் ராமாரே ராமா! திருக்கூத்தை - கேவலம் எனக் கூறின்; உன்னையும் என்னையும் தேசத் துரோகி எனக் குற்றம் சாட்டுவர்! கூண்டில் ஏற்றுவர்!

அதனால் இது கேவலமல்ல!

கிங்டம்! KINGDOM!

(தூய தமிழாளர்கள் மன்னிப்பார்களாக!)

அன்புடன்,

மு. க.

21-02-1991

1693. இந்திக்கு தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்; எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!

உடன்பிறப்பே!

எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டி வரும்?

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்;
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!

ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! நீ
தேடிவந்த கோழையுள்ள நாடிதல்லவே!

எட்டுத் திக்கும் அதிரக் கொட்டிய முரசாய் - எழுந்ததே புரட்சிக்கவியின் வீர ஒலி! அந்த ஒலி கேட்டு ஆண்டுகள் ஐம்பதுக்கு மேல் ஓடிவிட்டன! ஆனாலும் 1938-ல் கேட்ட அந்த முழக்கம் இன்னமும் என் செவிகளில் போர்ப்பரணியாகக் கேட்டுக் கொண்டேயிருக்கிறது! மொழிப்போர் தொடங்கியபோது 1938-ல் நான் பள்ளி மாணவன் - பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறந்து வெளிவந்த சிறுத்தைகளுடன் நானுமோர் சிறுத்தை; அன்றைக்கு!

அந்தப் போர் முற்றிப் பெரும் புரட்சியாகத் தமிழகத்திலே சூழ்ந்ததே 1965-ல் - அப்போது நான் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையில்; பாதுகாப்புக் கைதியாக!

அடடா; எவ்வளவு இனிய நினைவுகள்! எத்துணை இன்பமான நிகழ்ச்சிகள் அவை! ஆம்; மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை என்றுரைத்து - செந்தமிழ்க்கொரு தீமை வந்தபின்னும் இந்தத் தேகம் இருந்தொரு இலாபமுண்டோ? எனக்கேட்டுச் சிறை சென்றோர் - தீக்குளித்துச் சிதை புகுந்தோர் - எத்தனை எத்தனை பேர்!

பெரியாரின் வெண்தாடி அசைந்தால் போதும் - அவர் கண் ஜாடை தெரிந்தால் போதும்; இந்தி ஆதிக்க கொடுக்கை நறுக்கியே திரும்பும் வாட்கள்! எனச் சூளுரைத்தோர் அணி அணியாக என்னெதிரே தெரிகின்றனர்!

அழைக்கின்றார் - அழைக்கின்றார் அண்ணா; அருமைமிகு தமிழ்த்தாயின் கண்ணீரைத் துடைக்கத்தான் இன்றே! எனும் அழைப்பு கேட்டு; இழப்பு எதுவாயினும் கவலையில்லை என்ற உறுதியுடன் களங்கண்டனர் கணக்கற்றோர்!

அவரில் பலர் இன்றில்லை - சிலர் இருக்கின்றார்! அந்தச் சிலரில் நானும் ஒருவன்; இன்னும் இருக்கின்றேன் என்கிறபோது உடல் புல்லரிக்கிறது! உள்ளம் சிலிர்க்கிறது!

தள்ளாத வயதில் பெல்லாரி சிறையில் தள்ளப்பட்ட பெரியார் இன்றில்லை!

இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரின் முதல் தளகர்த்தர் அண்ணா இன்றில்லை!

திருச்சியிலிருந்து சென்னை வரையில் தமிழர் பெரும்படை நடத்தி வந்த தளபதியாம் அண்ணன் அழகிரி இன்றில்லை!

மிச்சமிருக்கின்றோம் நாம்! ஆம்; நமது அய்யாவும் அண்ணாவும் தக்கார்தான் என்பதை உணர்த்தும் எச்சமாக இருக்கின்றோம் என எண்ணிப் பெருமையுடன் இருக்கின்றோம்!

இந்தி எனும் ஒரு மொழி மீது நமக்கு வெறுப்பு இல்லை! ஆனால் அது நம்மை ஆதிக்கம் செலுத்தும் மொழியாகத் திணிக்கப்படுவதை ஏற்பதற்கில்லை! எதிர்ப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை!

இந்தி ஆதிக்கம் தமிழ் நிலத்தில் நுழைய முடியாமல் காத்து நிற்கும் காவல் சிப்பாய் இந்தக் கழகம் என்பதை பலமுறை செயல் மூலம், செயற்கரிய தியாகங்கள் மூலம் விளக்கியிருக்கிறோம்; இடையிடையே விஷமம் செய்து வேடிக்கை பார்ப்பவர்களுக்கு!

தமிழக மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாகி விடுவர்; இந்தி திணிக்கப்பட்டால்! என்று மூதறிஞர் இராஜாஜி; அந்த ஆதிக்க வெள்ளத்தைத் தடுக்கும் அரணாக நிமிர்ந்தார்!

இந்தியைக் கட்டாய பாடமாக்குவேன் என்று 1938-ல் கூறிய இராஜாஜியையே திருந்திடச் செய்து 1965-ல் இந்தி ஆதிக்க

எதிர்ப்பாளராக ஆக்கிய பெருமை; பெரியாரும் அண்ணாவும் கண்ட மொழிப் போர்க் களத்திற்கு உண்டு!

தமிழன் தொடுத்த போரின் தணல் தாங்க மாட்டாமல்தானே இந்தியை திணிக்க மாட்டோம் என்ற நேருவின் உறுதிமொழியே பிறந்தது!

நேரு கண்ட ஜனநாயக நெறிகளையே குரல்வளையை நெரித்துக் கொன்றிட முனைவோர்; கொன்று குவித்தோர்; அந்த நேரு தந்த உறுதி மொழியை மட்டும் உயிரோடு விட எண்ணுவார்களா?

அதனால்தான் இந்தி பேசாத மாநிலங்கள் ஏற்கும் வரையில் என்ற நேருவின் உறுதி மொழியை உருக்குலையச் செய்துவிட்டு; வஞ்சக மதியுடன் வால் நுழைத்துப் பார்க்கிறார்கள்!

இந்தியன் ஏர்லைன்ஸ் அலுவலகங்களில் இந்தி ஆதிக்கத்தின் நுழைவுக்கு வாசலில் வாழை மரம் கட்டுகிறார்கள்!

ஒவ்வொரு செவ்வாய் அன்றும் அந்த அலுவலர் வாய்களில் இந்தி மொழி மட்டுமே ஊஞ்சலாட வேண்டுமாம்!

இப்படி ஒரு உத்திரவு!

முதலில் சற்றுக் கடினமாக இருக்கும் - பிறகு போகப்போகச் சரியாகிவிடும் என்று நம்பிக்கையூட்டும் பிரச்சாரம்!

பிறகு, படிப்படியாக தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள் அனைத்திலும் இந்தித் திணிப்பு!

அதற்கு அடுத்த கட்டம்; மாநில அரசு அலுவலகங்களில்!

தமிழன் தூங்கிக்கொண்டேயிருந்தால் அவன் தொடையில் திரிக்கும் கயிறு - தொடர்ந்து நீண்டு கொண்டேயிருக்கும்!

அந்தக் கயிறு தமிழ் மக்களின் எதிர்காலத்தையே கழுத்தையிறுக்கித் தொங்கவிடும் கயிறாகவும் ஆகிவிடும்!

தொடக்கத்திலேயே இந்த முயற்சியைத் துரத்தி அடிக்க வேண்டும்!

அதற்குத்தான் சென்னையில், மதுரையில், கோவையில், திருச்சியில் பிப்ரவரி 22 வெள்ளியன்று மாலை இந்தி ஆதிக்கத்தின் துடுக்கடக்கும் அறப்போர் போராட்டம்!

அதனைத் தொடர் போராட்டமாக ஆக்குவதும் ஆக்காமல் இருப்பதும் துரைத்தனம் நடத்துவோரின் கையில் இருக்கிறது!

எனவே; இளந்தமிழா எழுக! மகளிர் குலமே! தமிழகத்தின் மானம் காத்திட வருக! மொழிப்போர் கண்ட மூதறிஞர்கள் வருக! இந்தியைத் திணிக்கும் சூதினை உணர்ந்த பின்னும்; எலியாக முயலாக வாழ மாட்டோம்! புலியாக வேங்கையாக ஆர்த்தெழுவோம் - என முழங்கிடுக!

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்!

எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!

அன்புடன்,

மு. க.

22-02-1991

1694. இங்கே கலைப்பு ஆர்.வி.க்கு இதிலே ஒரு களிப்பு!

உடன்பிறப்பே!

அவையின் பாதிப் பகுதிக்குமேல் காலியாகவே கிடந்தது!

கட்டாயத்தின் காரணமாக உட்கார்ந்திருந்தோரும் கொட்டாவி விட்டபடி இருந்தனர்.

சிலர் குனிந்த தலை நிமிராமல் கூனிக் குறுகிக் கிடந்தனர்.

உற்சாகம் எள்ளளவும் இல்லை!

உறுப்பினர்களில் ஒருவர்கூட கைதட்டி வரவேற்கவில்லை!

குடியரசு தலைவர் உரையின்போது இதுபோன்ற புறக்கணிப்பு - இதுதான் முதல் தடவை!

இந்த வர்ணனைக்குரிய சிறப்புத் தகுதியுடன் நடைபெற்றிருக்கிறது நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டம்!

தமிழகத்தில் அ.தி.மு.க., இ.காங்கிரஸ் கட்சிகளின் ஆணைக்கும் நிர்ப்பந்தத்திற்கும் கட்டுப்பட்டு - சந்திரசேகர் அவர்கள் கத்தியைத் தீட்டிக்கொடுக்க; அதைக்கொண்டு ஜனநாயகத்தின் கழுத்தை அறுத்துப் புண்ணியம்(?) தேடிக்கொண்ட ஆர். வெங்கட்ராமன் அவர்களின் உரையைக் கேட்பது செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றிக் கொள்வதுபோல எனக் கருதிய எதிர்க்கட்சியினர் அவைக்குச் செல்லாமலே; தங்களின் வன்மையான கண்டனத்தை அனைத்து நாடுகளுக்கும் தெரியப்படுத்தி உள்ளனர்.

இனி ஆர்.வி. அவர்கள் அமெரிக்க நாட்டு வாஷிங்டன் விமான நிலையத்தில் அந்நாட்டு அதிபரால் வரவேற்கப்பட்டாலும் - மாஸ்கோவில் அந்நாட்டுத் தலைவர்களால் வரவேற்கப்பட்டாலும் - அந்நாடுகளின் மக்கள்; அவரது கரங்களையே உன்னிப்பாகக்

கவனிப்பர்! ஆகா! ஜனநாயகத்தின் கழுத்தை நெரித்து ரத்தம் படிந்த கரங்கள் - அடேடே; இன்னும் அந்தக் குருதிக் கறை கூட மறையவில்லையே! மறையாது! மறையாது! என அந்த மக்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வர்!

பிரமனின் ஐந்து தலைகளில் ஒரு தலையைக் கிள்ளியெறிந்த சிவன்; அந்த பிரமஹத்தி தோஷம் கழிந்திட எட்டுக்குடி க்ஷேத்திரத்தில் தீர்த்த மாடினான் என்கிறது புராணம்!

ஆனால் ஆர்.வி.யின் கரங்களுக்கு ஏற்பட்ட தோஷம் கழிக்க; எட்டுக்குடி க்ஷேத்திரமல்ல; பதினாறு குடி க்ஷேத்திரம் சென்றாலும் போதாது! பல்லாயிரம் தீர்த்தங்கள் ஆடினாலும் பாபம் தீராது!

கழகத்திற்கும் காமராஜர் அவர்களுக்கும் எத்தனையோ கருத்து வேறுபாடுகள் - கடுமையான மோதல்கள் உண்டு! ஆனாலும் எமர்ஜன்சி நேரத்தில் காமராஜர் உயிரோடிருக்கும் வரை கழக அரசின் மீது கைவைக்க இந்திரா காந்தி அஞ்சினார்!

கழக அரசைக் கலைக்கக் கூடாது என்று பெருந்தலைவர் பேரரணாக எழுந்து நின்று பிரதமர் இந்திராவைத் தடுத்தார்.

அந்த காமராஜரைத் தனது குருநாதர் என்றும் - தனக்கு தர்ம நியாயங்களைப் போதிக்குமிடம் காஞ்சி மடம் என்றும் ஊருக்கு மட்டுமே தான் சொல்லிக் கொண்டிருந்தார் இந்த உத்தமர் என்ற உண்மை; உத்தமர் காந்தியடிகளை ஒரு கொடியோன் சுட்டுக் கொன்ற நாளாம் ஜனவரி 30-ல் அகிலமளாவ அறிந்து கொள்ளப்பட்டு விட்டது.

தமிழ்நாட்டில் கழக அரசு சட்டம் ஒழுங்கை காத்திட முயற்சிகள் மேற்கொள்ளவில்லையாம்!

பத்திரிகைகளின் கணிப்புப்படி சோர்ந்து கிடந்த மன்றத்தில் ஜனாதிபதி அவர்கள் மிகச் சுறுசுறுப்புடன் ஆற்றிய உரை இது!

குறுகுறுத்திருக்கும்; மனச்சாட்சி மட்டும் விழித்துக் கொண்டிருந்தால்!

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என ஆர்.வி. படிப்பதற்கு முதல் இரண்டு நாட்களிலும் பின்னர் இரண்டு நாட்களிலும் -

எந்தெந்த மாநிலங்களில் எப்படி எப்படி சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுகிறது என்பதற்கான செய்திகள் ஏடுகளில் வரத்தான் செய்தன!

டெல்லி பேருந்து ஒன்றில் குண்டு வெடித்து பத்து பேர் சாவு! முப்பது பேர் படுகாயம்!

காசி வித்யா பீடம் காலவரையன்றி மூடப்பட்டது. பல்கலைக் கழக வளாகத்திற்குள் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்ததே இதற்குக் காரணம்.

சென்னை கோடம்பாக்கத்தில் கத்திமுனையில் ஸ்ரீதர் என்பவர் கடத்தப்பட்டார்.

சென்னை மன்றோ சிலை அருகில் நடந்து சென்ற கணவன் மனைவியைத் தாக்கி மனைவியைத் தூக்கிக் கொண்டு போய் நாலுபேர் கற்பழித்துச் சீரழித்தனர்.

அலகாபாத் அருகே ரயில் கவிழ்க்கப்பட்டு 15 பேர் கொல்லப்பட்டனர்.

லக்னோ 4 இடங்களில் குண்டி வெடிப்பு. 12 பேர் பலி!

உத்திரபிரதேசத்தில் பல பகுதிகளில் ஆதிதிராவிட மக்கள் கொலை!

ஆந்திரா ரயில் தண்டவாளத்தில் வெடிகுண்டு இருவர் சாவு! முப்பது பேர் காயம்!

மகாராஷ்டிரா வங்கியில் (தானே என்னுமிடத்தில்) 121 கோடி ரூபாய் மோசடி!

உ.பி. விவசாயத்துறை உதவி அமைச்சரின் மகன் சுவிர்தீரசிங் கொள்ளைக்காரத் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இஃதன்னியில் காஷ்மீர், பஞ்சாப் படுகொலைகள் ஓய்வின்றித் தொடர்கின்றன! அசாம் மாநில காங்கிரஸ் பொதுச் செயலாளரும் ஐ.என்.டி.யு.சி. தலைவருமான மன்பேந்திரா சர்மா கௌகாத்தி கடை வீதியில் சுட்டுக் கொல்லப்பட்டார் -

உடன்பிறப்பே, இவை இந்த இரண்டு மூன்று நாட்கள் நிகழ்ச்சிகள்!

கழக ஆட்சியில் சட்டம் ஒழுங்கை காத்திட இயலவில்லை; அதனால்தான் கலைத்தோம் என்று கதைக்கிறவர்கள் - இந்தக் கொலைகள், கொள்ளைகள், வன்முறைகள் பற்றி என்ன சொல்லப் போகிறார்கள்?

சுருக்கமாகவும் - சுறுக் எனத் தைக்குமாறும் - கிராமீய மொழியில் சொல்ல வேண்டுமானால்:

மாமியார் உடைத்தால் மண்சட்டி!

மருமகள் உடைத்தால் பொன் சட்டி

என்பதுதானே பொருந்தும்!

கழக அரசு சட்டியை உடைக்கவில்லை! சட்டம் ஒழுங்கை குலைக்கவில்லை!

ஆனால் இங்கே கலைப்பு!

ஆர்.வி.க்கு இதிலே ஒரு களிப்பு!

வாழ்க ஜனநாயகம்!

அன்புடன்,

மு. க.

24-02-1991

1695. உள்ளத்தில் ஒளி இருந்தாலே போதும்!

உடன்பிறப்பே!

1989-ல் கழகம், மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பு தமிழ்நாட்டில் 1989ஆம் ஆண்டு கவர்னர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கவர்னர் ஆட்சி அப்போது ஏன் வந்தது என்ற காரணத்தை மறந்திருக்க மாட்டாய் என்று கருதுகிறேன். இருந்தாலும் நினைவூட்டுவது தவறில்லை அல்லவா?

நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவுக்குப் பிறகு முதலமைச்சர் யார்? என்ற உட்கட்சி பூசல் அ.தி.மு.க.வில் வலுத்தது. காசியென்றும் கல்கத்தா, பம்பாய் என்றும் இருதரப்பு எம்.எல்.ஏ.க்களும் கடத்தப்பட்டுக் கடைசியாகச் சட்டசபைக்குக் கொண்டு வரப்பட்டார்கள்.

அந்த இடைக்காலத்தில் இருசாராரும் ஒருவர்மீது ஒருவர் வாரி வீசிய புழுதி கொஞ்ச நஞ்சமல்ல!

நீதான் பாலில் விஷம் கலந்து கொடுத்து
எம்.ஜி.ஆரைக் கொன்றாய்!
நான் இல்லேடி; நீதாண்டி மோரில்
விஷம் கலந்து எம்.ஜி.ஆர். உயிரைப் பறித்தாய்!

இப்படி எம்.ஜி.ஆரின் சாவுக்குக் காரணம் யார் என்பதில் ஒரு மாபெரும் சக்களத்திச் சண்டையே நடந்தது.

அக்கினியாஸ்திரங்கள்!
பிரம்மாஸ்திரங்கள்!
வருணாஸ்திரங்கள்!
பாசுபதாஸ்திரங்கள்!

எனப் பலவகை அஸ்திரங்கள் அந்தப் போரில் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன.

சட்டமன்றத்தில் யார் முதலமைச்சர்? என்று பலப் பரிட்சை பார்க்கும் நாளும் வந்தது!

நாள் மாத்திரமா வந்தது? ஒவ்வொருவர் கையோடு வாளும் வந்தது!

மைக்கைப் பிடுங்கிக் கொண்டு சூலாயுதம், வேலாயுதம் போல அவைகளை கைகளில் ஏந்திக் கொண்டு அ.தி.மு.க.வின் இரு கோஷ்டியினர், காங்கிரஸ் கட்சியினர்; ஆம் - எம்.எல்.ஏ.க்கள்தான் அடிதடி ரகளை முடிந்து, ரத்தம் சொட்டும் உடைகளுடனும், தலைகளுடனும் வெளியே வந்த காட்சியிருக்கிறதே - புரட்சி என்றால் அதுதான் புரட்சி!

முதல் நாள் இரவு 12 மணி வரையில் திருமதி ஜானகி எம்.ஜி.ஆர். அவர்களுக்குத்தான் ஆதரவு என்று டெல்லியிலிருந்து உறுதியளித்துக் கொண்டிருந்த காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி, மறுநாள் காலையில் திடீரென்று ஜானகி அம்மையாரை நம்ப வைத்துக் கழுத்தறுத்து விட்டார். காங்கிரஸ் கலாச்சாரம் என்பது முதுகில் குத்துவதுதான் என்பதை மீண்டும் ஒருமுறை டெல்லிக்காரர்கள் நிரூபித்து விட்டார்கள். அதனால் ஜானகி அம்மையார் அவர்களின் இருபத்தி எட்டு நாட்கள் ஆட்சி கவிழ்ந்தது - அல்லது கலைக்கப்பட்டது!

ஜானகி அம்மையார் அவர்களை முதலமைச்சர் அல்ல என்று ஆக்கியது மாத்திரமல்ல; எம்.ஜி.ஆரின் இல்லத்தரசியாகப் பல ஆண்டு காலம் வாழ்ந்த அந்த அம்மையார் எம்.ஜி.ஆரின் மனைவியே அல்ல என்று நாவலரும் ஜெயலலிதாவும் சொல்லுகிற அளவுக்கு நாராசமான வாக்கு மூலங்கள் பத்திரிகைகளுக்குப் பேட்டியாகவும் தரப்பட்டு நரகல் நடை அரசியல் தமிழகத்தின் பண்பாட்டுக்கே அறைகூவல் விடும் அளவிற்கு பேருரு எடுத்து நின்றது!

காங்கிரசால் வஞ்சிக்கப்பட்ட ஜானகி அம்மையார் அவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டதும்; குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது!

ஆம்; நான் முதலில் குறிப்பிட்டுள்ளபடி 1988ஆம் ஆண்டு அந்த ஆட்சிதான்! அதாவது கவர்னரைக் கொண்டு நடத்தப்பட்ட ஆட்சி!

அந்த ஆண்டின் இறுதியில் தேர்தல் வந்தது! அதற்குள் 13 தடவைகள் சுமார் ஆறுகோடி ரூபாய் அளவுக்கு மாநில அரசின் செலவில் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் தேர்தல் பிரச்சாரம் தமிழகத்தில் நடைபெற்றது!

தேர்தலுக்காக எத்தனையோ திட்டங்கள் அறிவிப்பு! எத்தனையோ கல் நாட்டு விழாக்கள்!

மாதமொன்றுக்கு மத்திய தொகுப்பிலிருந்து ஐம்பதாயிரம் அல்லது அறுபதாயிரம் டன்களாக மாநிலத்துக்கு வழங்கப்பட்ட அரிசி, பிறகு எண்பதாயிரம் டன்னாக மாதந்தோறும் தமிழ் நாட்டுக்குத் தரப்பட்டது!

தேர்தல் முடிந்தது - தி.மு.க. ஆட்சிக்கு வந்தது!
கஜானாவும் காலி!
களஞ்சியமும் காலி!!

என்கிற நிலையில்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாளில் தமிழக அரசு இருந்தது!

பதவிப் பிரமாணம் எடுத்து முடித்தவுடனேயே மறுநாளே மத்தியில் இருந்த ராஜீவ் அரசு; நமது மாநிலத்திற்கு மாதந்தோறும் மத்திய தொகுப்பிலிருந்து வழங்கி வந்த எண்பதாயிரம் டன் அரிசியை நாற்பதாயிரம் டன்னாக குறைத்தது!

உடனே நான் டெல்லிக்குச் சென்று பிரதமர் ராஜீவை சந்தித்து நேரடியாகவே வேண்டுகோள் விடுத்தேன். உணவு அமைச்சரிடம் கேட்டேன். எத்தனையோ கடிதங்கள்.

கவனிக்கிறோம் என்று சொன்னார்களே தவிர - கவனிக்கவுமில்லை! தமிழ் நாட்டு மக்களுக்காகக் கவலைப்படவுமில்லை.

நாடாளுமன்றத் தேர்தல் வந்தது! தேசிய முன்னணி அரசு பொறுப்புக்கு வந்தது! காங்கிரஸ் ஆட்சியில் ராஜீவ் காந்தி அவர்கள் அரிசி விவகாரத்தில் ஓரவஞ்சனை செய்து, நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழக அரசைத் தவிக்க விட்டதை எடுத்துச்

சொல்லி - இனிமேலாவது கூடுதல் அரிசி மத்திய தொகுப்பிலிருந்து தரவேண்டுமென்று கேட்டோம்.

நமது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு மாதந்தோறும் கணிசமான அளவுக்கு அரிசி தருவது உயர்த்தப்பட்டு இறுதியாக தேசிய முன்னணி ஆட்சி கவிழ்வதற்கு முன்னால் மாநில அரசுக்கு மத்திய தொகுப்பிலிருந்து எழுபத்தி ஐயாயிரம் டன் வரையில் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்தது.

சந்திரசேகரின் பினாமி ஆட்சி வந்தவுடன் உடனடியாக அவர்கள் செய்த நற்பணி; தமிழ் நாட்டுக்கு பத்தாயிரம்டன் அரிசியைக் குறைத்ததுதான்!

அதுமட்டுமல்ல; பாமாயில் கிடையவே கிடையாது - இறக்குமதியே கிடையாது என்றும் கைவிரித்து விட்டனர்!

மாற்றுக் கட்சியின் ஆட்சிக்கு இடையூறு செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணம் உருக்கொண்டதே தவிர; மக்கள் கஷ்டத்தைப் போக்க வேண்டுமே என்று அவர்களுக்கு மனச்சாட்சி உறுத்தவில்லை!

ஆனால் ...

இதோ ...

இப்போது ...

தேர்தல் வரப்போகிறது அல்லவா?

அதற்காக

அவசர அவசரமாக

அறிவிக்கிறார்கள்

மேலும் பத்தாயிரம் டன் அரிசி கொடுக்கிறார்களாம்!

பாமாயிலும் தாராளமாக வழங்குகிறார்களாம்! காந்தியின் பெயரைச் சொல்லித் திரியும் இவர்களை எந்தக் கண்யவான்களின் பட்டியலில் சேர்ப்பது?

ஜெயப்பிரகாஷ் உயிரோடு இருந்தால் மீண்டும் இவர்களுக்காக ஒருமுறை உயிரை விடுவாரா - மாட்டாரா?

உடன்பிறப்பே; மக்களின் அத்யாவசியத் தேவைகளிலேகூட அரசியல் காழ்ப்பு உணர்வுடன் நடந்து கொள்ளும் இத்தகையோரின் உண்மை உருவங்களை; மக்களுக்கு விளக்கிட வேண்டியது நமது வேலையல்லவா?

பத்தாயிரம் பேர் கூடும் கூட்டத்தில்தான் விளக்க வேண்டும் என்பதில்லை! பத்துப் பேர் எட்டுப் பேர் மத்தியிலும் இதனை விளக்கலாம்!

இதற்கொன்றும் பேச்சுக் கலை கற்றிருக்கத் தேவையில்லை!

உள்ளத்தில் ஒளி இருந்தால் போதும்!

உண்மையின் ஒளியை உலகெங்கும் பரப்பலாம்!

அன்புடன்,

மு. க.

01-03-1991

1696. கலைக்கும் சர்க்கார்; நிலைக்கும் சர்க்காரா?

உடன்பிறப்பே!

கவர்னரிடமிருந்து அறிக்கையே பெறவில்லை. கூப்பிடு தூரத்தில் டெல்லியில் இருந்த கவர்னர் அவர்களை அழைத்து விபரம் எதுவும் கேட்கவுமில்லை. நீங்கள் ஏன் அறிக்கை தர உடன்படவில்லை என்ற வினா எழுப்பவுமில்லை. ஜனவரி 29 இரவு டெல்லியிலிருந்து கவர்னரை உடனே வருமாறு பினாமிப் பிரதமர் அழைக்கிறார். ஜனவரி 30 காலையில் கவர்னர் டெல்லி போய்ச் சேருகிறார். ரா மற்றும் ஐ.பி. எனப்படும் உளவு நிறுவனத் தலைமை அதிகாரிகள் கவர்னர் தங்கியிருக்குமிடத்திற்கு வந்து சகலவித முயற்சிகளையும் மேற்கொள்கிறார்கள். இரண்டு அமைச்சர்கள் ஓடிவந்து நெருங்கிப் பார்க்கிறார்கள். பிறகு பிரதமர் எனப்படுபவர் கவர்னரை அழைத்துக் கரம்பிடித்துக் கேட்கிறார். பஞ்சாப் சிங்கம் பர்னாலா அந்த எலிகள் பின்னிய வலையில் விழத்தயாராக இல்லை என்றதும் - தர்மவானும் (?) மனச்சாட்சிக்கு மதிப்பு தரும் மகாபுருஷருமான (?) ஆர். வெங்கட்ராமனிடம் விஷயம் செல்கிறது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தை மாத்திரமின்றி - தமிழ்நாடு காங்கிரஸ், அ.தி.மு.க. ஆகிய கட்சிகளின் தலைமைப் பிரதிநிதி அலுவலகத்தையும், டெல்லி ராஷ்டிரபதி பவனத்தில் நடத்திவரும் பட்டுக்கோட்டை பரமஹம்சர் (கம்சர் அல்ல ஹம்சர்) (???) எவ்வளவு நேரமாக எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்! இந்தா பிடி கையெழுத்தை! என்று நீட்டிய தாளில் போட்டு அனுப்பி விடுகிறார்.

ஜனவரி 30 காலையில் தொடங்கி, இரவு 10 மணிக்குள் காரியம் முடிந்து விடுகிறது. ஒரே நாளில்! கவர்னர் அறிக்கை பெறாமலே! கவர்னரின் அறிக்கை தேவையற்றது என்ற திருவாசக மொழிகளுடன்; தீர்த்துக்கட்டுகிறார்கள் தி.மு.கழக ஆட்சியை!

அறிஞர் அண்ணாவை திருவாளர் அண்ணாதுரை என்று அழைத்து, தெருமுனைக் கூட்டங்களில் அவரை நாராச நடையில் தாக்கிப் பேசிய ஈ.வெ.கி. சம்பத்தின் ஆசைப்படி தி.மு.க. வீழ்ச்சியடைந்து விட்டது என விளம்பரம் போட்டுக் களிப்பவர்கள் - இன்று காங்கிரஸ் கட்சியில்! அன்று அண்ணாவின் முதுகில் குத்திய சம்பத்தின் அணியில்!

ஆட்சியைக் கலைத்ததால் அடித்தள வலிவுமிக்கதும் - அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டதும் - அண்ணா வழியில் அயராது உழைப்பதுமான தி.மு.க. - ஒரேயடியாக வீழ்ந்து விட்டது என்ற அற்ப ஆறுதல் காங்கிரசுக்கும் - முதுகில் குத்தும் காங்கிரசின் கலாச்சாரத்தை உணராத அ.தி.மு.க. தொண்டர்களுக்கும்!

கழக ஆட்சி என்ற காராம் பசுவைத் தமிழகத்தில் வெட்டியவர்கள்; அதன் கன்றாம் புதுவை ஆட்சியை மட்டும் விட்டு வைப்பரோ?

ராஜீவ் காந்தியும், அ.தி.மு.க. தலைவியும் சந்திரசேகர் கையில் 356 என்ற கொடுவாளைத் தூக்கிக் கொடுத்திருப்பது எதற்காக?

தாங்கள் விரல் காட்டி ஆணையிடும் இடத்தில் அந்தக் கொடுவாள் ஜனநாயகத்தின் ரத்தத்தைப் பூசிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தானே! அசாம் மாநிலத்தில் உல்பாவைக் காரணம் காட்டி, மகந்தா ஆட்சியைக் கலைத்திடுமாறு கட்டளை பிறந்தது! அடுத்த கணம் அந்தக் கட்டளை சந்திரசேகரால் நிறைவேற்றப்பட்டது! காங்கிரசார் களித்தனர்! கைகொட்டிச் சிரித்தனர்! இப்போது அசாமில் ஜனாதிபதி ஆட்சி! ஆம்; இங்கு நடப்பதுபோல் கவர்னர் பரிபாலனம்! நிலைமை என்ன? காங்கிரஸ் கட்சியின் அசாமியப் பெருந்தலைவர்களையே காப்பாற்ற முடியவில்லை! இதுவரையில் இருபத்தி ஐந்து காங்கிரஸ் தலைவர்களைச் சுட்டுக்கொன்று வெள்ளிவிழா - அல்ல! அல்ல! வெறிவிழாக் கூத்து நடத்தியுள்ளனர் உல்பாக்கள்! அசாமில் அராஜகம் மேலும் மேலும் பெருகிடும் நிலையில் சட்டம் ஒழுங்கை காப்பாற்ற முடியாமல் திணறும் மத்திய அரசைக் கலைப்பது யார்?

பஞ்சாபில் குடியரசுத் தலைவர் ஆட்சிதான்! நாளொன்றுக்கு சராசரி பதினைந்து பேர் தீவிரவாதிகளின் துப்பாக்கி முனைகளில் பிணங்களாகத் தொங்குகின்றனர். சீக்கியர், இந்துக்கள் என்ற

இருசாராரும் கடந்த மூன்று ஆண்டுகளில் ஜனாதிபதி ஆட்சியில் சுமார் ஐயாயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்! பஞ்சாபில் தேசிய கீதம் பாடுவது தடுக்கப்படுகிறது! பாட முடியவில்லை! பாடுவது இல்லை!

காஷ்மீர்; நம் கையில் இருக்கிறதா? தெரியவில்லை! பாகிஸ்தான் கொடிகள் அங்கே பறக்க விடப்படுகின்றன! இத்தனைக்கும் பட்டாளங்கள் புடைசூழ அங்கே நடப்பதும் குடியரசுத் தலைவர் ஆட்சிதான்!

பாரதத் தாயின் தலைபோன்ற பஞ்சாப், காஷ்மீர், அசாம் மாநிலங்களில் சட்டம் ஒழுங்கு என்பது, இன்றைய மத்திய அரசின் கைகளை விட்டுப்போனது மாதிரிதான்! இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவனும் வேதனைப்பட வேண்டிய விஷயம்!

இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் - கேவலம்; பதவியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக - பாராளுமன்றத்தில் கோரம் கூடுவதற்குக் கூடப் போதுமான எண்ணிக்கையில்லாத ஒரு மைனாரிட்டி அரசு; ராஜீவ் காந்தியின் பினாமியாகச் செயல்பட்டு -

தமிழ் நாட்டில் கழக அரசைக் கலைத்திடு!
உத்திரவு எஜமான்!
அசாமில் மகந்தா அரசைக் கலைத்திடு!
அப்படியே ஆகட்டும் முதலாளி!
பட்ஜெட் தயாரா?
எஸ். சார்
அதை வெளியிடாதே!
ஆணை அய்யா!

நீ இடைக்கால மனிதன்தானே; அதனால் இடைக்கால பட்ஜெட் கொடு.

இஷ்டம் போல் செய்கிறேன் பிரபு!

பாண்டிச்சேரியில் காங்கிரஸ் ஆட்சி மீண்டும் அமைக்க முடியவில்லையாமே; தெரியுமா?

தெரியும் தேவனே! தி.மு.க. ஆட்சி மீண்டும் அமைக்க 18 பேர் கவர்னரிடம் கையெழுத்திட்டு கவர்னரிடம் கொடுத்துள்ளனர்.

அந்தக் கையெழுத்துக்களைக் கிழித்தெறியச் சொல்! இல்லையேல் கவர்னரின் தலையெழுத்து தகர்க்கப்படுமென மிரட்டு!

நானே மிரண்டு போய்க் கிடக்கிறேன். அவர் மிரள்வது பெரிய காரியமா? உத்திரவு என்னவோ; அதை மட்டும் உரைத்திடுக உத்தமனே!

கவர்னர் அறிக்கையைப் பெற்றதாகச் சொல்லி பாண்டிச்சேரி சட்டமன்றத்தையே கலைத்திடு!

ஜனாதிபதி கையெழுத்து தேவை ஈஸ்வரா!

ஜனாதிபதி என்று சொல்லாதே! காங்கிரசின் அக்ரா சனாதிபதி அவர்! நானிருக்க பயமேன்! நாளொரு மாநிலம் பொழுதொரு யூனியன் பிரதேசம் கலைப்பதென்றாலும் அவர் கையெழுத்திடத் தயார்!

உடன்பிறப்பே, இதுதான் இன்று டெல்லி தர்பாராக இருக்கிறது!

தமிழகத்தில் கழக ஆட்சியைக் கலைப்பதற்கு கவர்னர் அறிக்கையே தேவையில்லை என்றவர்கள்; பாண்டிச்சேரியில் மட்டும் கவர்னர் அறிக்கை வந்ததால் கலைக்க நேர்ந்தது என்கிறார்கள்!

பிப்ரவரி 26-ல் புதுவை கவர்னர் ஒரு அறிக்கை அனுப்புகிறார். யாரும் ஆட்சி அமைக்க முன் வரவில்லையென அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறாராம்!

பிறகு மார்ச் 2-ஆம் தேதி ஒரு அறிக்கை அனுப்புகிறார். திரு. டி. இராமச்சந்திரன் அவர்களை முதல்வராக ஏற்று ஆட்சி அமைக்க சட்டமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் முன்வந்திருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் - அமைத்தால் காங்கிரஸ் ஆட்சிதான் அமைக்க வேண்டும் இல்லையேல் சட்டமன்றத்தையே கலைத்து விட வேண்டும் என்று ராஜீவ் உத்திரவிடுகிறார்! திருமதி ஜெயலலிதா ஒத்துப் பாடுகிறார்! 195ம் 10ம் 205 அல்லவா? அந்த 205 தன்னைச்

சாய்த்து விடாமல் இருக்க; ஏற்கெனவே ரத்தம் தோய்ந்துள்ள 356 என்ற கத்தியை புதுவைச் சட்டமன்றத்தின் மீது வீசுகிறார்!

மேலும் மூன்றாண்டு காலம் ஆட்சி நடத்தக்கூடிய வாய்ப்பு இருந்தாலும் - இரண்டாண்டு மட்டுமே நிறைந்திருந்த தமிழகக் கழக ஆட்சி கலைக்கப்படுகிறது!

ஓராண்டு காலம்கூட முடிவுறாமல்; மேலும் நாலு ஆண்டு காலம் வாய்ப்புள்ள புதுவைக் கழக ஆட்சியும் தொடர முடியாமல் - சட்டமன்றம் கலைக்கப்படுகிறது!

இப்படிக் கலைக்கும் சர்க்கார், நிலைக்கும் சர்க்காரா? என்றால் அதுவுமில்லை!

எனினும் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகின்றனர்!

தாங்கள் வகுத்ததே அரசியல் வேதம் என அடித்துப் பேசுகின்றனர்!

இவர்கள் போகிற போக்கைப் பார்த்தால் இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றியே பெரும் கேள்விக்குறி எழுகிறது!

அன்புடன்,

மு. க.

06-03-1991

1697. எய்தவர் தூண்டியவர்; யார்? யார்?

உடன்பிறப்பே!

நம்மைத் தாக்கிய அம்பு முறித்தெறியப்பட்டு விட்டது!

தாக்கப்பட்ட நம்மால் அல்ல!

பாவம்; அம்பு என்ன செய்யும் என்று பரிதாபப்பட்டோம்!

இப்போது எய்தவனே அந்த அம்பை முறித்தெறிந்து விட்டான்.

எய்தது இந்திரா காங்கிரஸ்! தூண்டில் இரை காட்டித்
தூண்டியது அ.தி.மு.க.! (1)

அம்பாகப் பாய்ந்தவர் சந்திரசேகர்!

அந்தோ - இதோ கூர் மழுங்கிச் சாய்ந்து கிடக்கிறார்!

அவர் வீழ்ச்சிக்காக மகிழ்ந்தது போதும்;

அவரைத் தூண்டிவிட்டு

ஜனநாயகத்தைத் துடிக்க

விட்டோர் யார்? யார்? யார்?

அவர்களை அடையாளம் காட்டுவதே

அல்லும் பகலும் உனது

அயராப் பணியாக அமையட்டும்!

அன்புடன்,

மு. க.

07-03-1991

1698. அடையாளம் காட்டப்பட வேண்டியவர்கள்!

உடன்பிறப்பே!

மீண்டும் ஒரு நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு ராஜீவ் காந்தி பிரதமராக வருவதற்கு வாய்ப்பு அறவே இல்லை என்ற அளவுக்கு அவரது செல்வாக்கு மங்கி விட்ட நிலையில் 54 உறுப்பினர்களைக் கொண்ட சந்திரசேகர் கட்சிக்கு ஆதரவளித்து அவரைப் பிரதமராக உட்கார வைத்துவிட்டு, பின்னாலிருந்து உத்திரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருக்கலாம் என்று திட்டமிட்டுப் பின்னப்பட்ட சூழ்ச்சிவலை சுக்கு நூறாகி விட்டிருக்கிறது இப்போது! எனினும் சில காரியானுகூலங்கள் இந்தக் குறுகிய காலத்தில் சந்திரசேகரைப் பலிகடாவாக்கி, ராஜீவ் காந்தியினால் சாதிக்கப்பட்டிருக்கின்றன. அதன் விளைவுகள் எப்படியிருக்கின்றன? மேலும் எப்படியெல்லாம் உருவெடுக்கக்கூடும் என்பது வேறு விஷயம்!

குடியரசுத் தலைவர் உரை படிக்கப்பட்டு - அந்த உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் இந்திய நாட்டு வரலாற்றிலேயே முதல் தடவையாக நாதியற்றுக் கிடக்க வேண்டிய கேவலம்! தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் பாரதீய ஜனதா போன்ற எதிர்க்கட்சிகளின் ஆதரவு பெற்று மட்டுமே நாடாளுமன்றம் நடைபெற முடியும் என்ற நெருக்கடி!

இடைக்கால பட்ஜெட் - இப்படியொரு கூத்து நடத்தி; அதையும் போதுமான வாக்குப் பெற்று நிறைவேற்றினால்தான் மத்திய அரசு நிர்வாகமும் மற்றும் சில மாநில அரசுகளின் நிர்வாகமும் நகர முடியும்! இல்லையேல் நாட்டில் எல்லாமே ஸ்தம்பித்துப் போய்விடும்!

இப்படியொரு இழிவானதும் ஆபத்தானதுமான நிலைமையை ஏற்படுத்திவிட்டு, காங்கிரஸ் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தையே புறக்கணித்து விட்டனர்.

அவ்வளவு கோபம் என்ன ராஜீவ் காந்திக்கு! கோபமுமில்லை மண்ணுமில்லை; கோபிப்பது போல ஒரு நடிப்பு! நடிப்பு, நாடகம் எல்லாம் எதற்கு?

சந்திரசேகர் மீது ஏதாவது குற்றம் கண்டுபிடித்து வேலையை விட்டு நீக்குவதற்காக எஜமானர் கண்டுபிடித்த வழி அது!

ராஜீவ் காந்தி வீட்டு வாசலில் இரண்டு போலீஸ்காரர்கள் வேவு பார்த்தனர்!

அவர்கள் அரியானா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்!

அவர்களை வேவு பார்க்குமாறு அனுப்பியது யார்? என்று விசாரித்து தண்டிக்க வேண்டும் என்பது ராஜீவ் காந்தியும் அவரது கட்சியினரும் விதித்த நிபந்தனை!

இப்படியொரு பிரச்சினையை எழுப்பி அதன் அடிப்படையில் சந்திரசேகருடன் மோதி, பாராளுமன்றத்தில் கோரமில்லாமல் செய்து, அந்த சமயத்தில் எதிர்க்கட்சிகள் சந்திரசேகரைத் தோற்கடித்து - உடனடியாக குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்கள், ராஜீவ் காந்தியை அழைத்து பிரதமர் முடியைச் சூட்டுவார் என்று ஒரு பலத்த எதிர்பார்ப்பு!

அதனால்தான் வேவு பார்த்த விவகாரத்தில் சந்திரசேகர், ராஜீவ் காந்தியின் மிரட்டல்களுக்கு கடைசி வரையில் பணிந்தே போனார்!

அசாம் அரசைக் கலைப்பது - தமிழக அரசைக் கலைப்பது - அறிக்கை தர மறுத்த பர்னாலாவைப் பழிவாங்கியது - பீகார் மாநில கவர்னர் யூனூஸ் சலீமை பதவி விலக்கியது - புதுவை சட்டமன்றத்தைக் கலைப்பது போன்ற பல விவகாரங்களில் குட்டக் குட்ட குனிந்து கொடுத்துக் கொண்டிருந்த சந்திரசேகர், அரியானா மாநிலப் போலீசார் ராஜீவ் வீட்டில் வேவு பார்த்தார்கள் என்பதால் அரியானா முதலமைச்சரைப் பதவி நீக்கம் செய்யக்கூடத் தயார் என்றார். ஆனால் ராஜீவ் காந்தியோ; அரியானா மாநில அரசையே கலைக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்தாராம்! அசாமை,

தமிழ்நாட்டை, புதுவையைக் கலைக்கச் சொன்னவுடன் கலைத்த சந்திரசேகர், அரியானாவைக் கலைப்பதற்கு அஞ்சினார்!

ஏன் அஞ்சினார்? ராஜீவும் ஜெயலலிதாவும் சொன்னவுடன் தமிழகத்திலும் புதுவையிலும் கழக அரசுகளைக் கலைத்தவர்; அரியானாவில் அவ்வாறு செய்தால் தேவிலால் விசுவரூபம் எடுப்பார்! அவரது எம்.பி.க்கள் தமது ஆதரவை விலக்கிக் கொள்வர் - அப்போதும் சந்திரசேகர் கவிழ்வார்! அப்படிக் கவிழ்வதை விட இப்படிக் கவிழலாம் என்று சந்திரசேகர் முடிவு செய்து அரியானா அரசைக் கலைக்க மறுத்து விட்டார்!

இந்தச் சுயமரியாதை உணர்வை அவர் முன்பே பெற்றிருந்திருப்பாரேயானால் - தமிழகம், புதுவை, அசாம் போன்ற சட்டசபைகளைக் கலைக்கச் சொன்னபோது நெஞ்சுயர்த்தி நிமிர்ந்து நின்றிருப்பார்! இந்திய வரலாற்றில் அவரது பொது வாழ்வுக் குறிப்பு ஒரு பொன்னேடாகப் புரண்டிருக்கும்!

சந்திரசேகரைப் போன்றவர்கள் கிடைத்தால் ராஜீவ் காந்திகளுக்கும், ஆர்.வி.க்களுக்கும் மாநில அரசுகளைக் கலைப்பது மிகச் சுலபம்!

எந்த மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்று ராஜீவ் நினைக்கிறாரோ; அந்த மாநிலத்துப் போலீசார் இருவரை டெல்லிக்கு அனுப்பி - யாராவது ஒரு வி.ஐ.பி. வீட்டு வாசலில் வேவு பார்ப்பது போல நடிக்கச் செய்து - அந்த வி.ஐ.பி. அந்தச் செயலைத் தனது கட்சிக்குத் தெரியப்படுத்துவது - உடனே அந்தக் கட்சி, அந்தப் போலீஸ்காரர்கள் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களோ; அந்த மாநிலத்தில் உள்ள அரசைக் கலைக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்து - பாராளுமன்றத்தைப் புறக்கணிப்பது - கோரம் இல்லாமல் செய்வது - அதைத் தொடர்ந்து ராஜீவ் விரும்பியவாறு குறிப்பிட்ட மாநில அரசைக் கலைப்பது; இப்படியொரு எதேச்சாதிகாரம்; ஜனநாயகம் எனும் சல்லாத் துணி போட்டு மூடிக் கொண்டு எத்தனை நாளைக்கு எடுபட முடியும்!

அதனால்தான்

டெல்லியில் எரிமலை வெடித்திருக்கிறது - நெருப்புக் குழம்பு பெருவெள்ள மெனப் பொங்கி வழியத் தொடங்கியுள்ளது - பதவி ஆசைக்காக மிதிபட மிதிபட நெளிந்து கொடுத்துக் கொண்டிருந்த புழு; இப்போது பாயும் புலியாகச் சீறிக் கிளம்பியிருக்கிறது!

ஆம்; எரிமலைத் தணலின் சூடு சந்திரசேகரையும் சூடான மனிதராக ஆக்கியிருக்கிறது!

தனது வாழ்க்கை வரலாற்றை; தானே கஷ்டப்பட்டு வறண்ட சரித்திரமாக மாற்றிக் கொண்ட - அந்த மனிதர்; வருமுன் காப்பவராகவும் இல்லாமல் - வந்த பின் காப்பவராகவும் இருக்க முடியாமல் - நொந்து போய் நிற்கிறார்!

என்னதான் அவர் நொந்து நின்றாலும் - வெந்து வெகுண்டாலும் - அதோ; அவர் கரங்களிலிருந்து சிந்தும் ரத்தத் துளிகள் தமிழ் நிலத்தில் ஒரு பெரும் ஜனநாயகப் படுகொலையைச் செய்ததின் காரணமாகச் சிந்துவதல்லவா?

ஜனநாயக குரல்வளையை நெரித்த கரம் அது! ஆனால் நெரிக்கச் சொன்னவர்கள்; நெருக்கடி கொடுத்தவர்கள்; தமிழ் மக்களின் சுயமரியாதையைக் காலில் போட்டு மிதித்தவர்கள்; ஆகா, அழிந்தது தமிழன் ஆட்சி என ஆரவாரம் செய்தவர்கள் - ஆர்ப்பாட்டம் புரிந்தவர்கள் - குதித்து மகிழ்ந்தவர்கள் - கூடிக் கும்மாளம் போட்டவர்கள் - அவர்களைத்தான் மக்கள் முன்னால் நிறுத்தி அடையாளம் காட்டவேண்டும்.

அந்தப் பணி தொடரட்டும்!

அதுவே ஆக்கப்பணி!

ஆற்றல்மிகு உடன்பிறப்பே!

அப்பணி பட்டி தொட்டி முதல்

பட்டினக் கரை வரையில்

பரவட்டும்!

அனபுடன்,

மு. க.

08-03-1991

1699. அப்பனும் பாட்டனும் ஆற்றுக்குள்ளே!

உடன்பிறப்பே!

நடக்காத கதையொன்று! நாம் பால பாடத்தில் படிக்காமல் இருந்திருக்க முடியாது... இல்லையேல் பாட்டி சொல்லிக் கேட்காமல் இருந்திருக்க முடியாது!

குட்டைத் தாடியுடைய ஆட்டுக் குட்டியொன்று ஆற்றின் கீழ்புறத்தில் நின்று தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது.

ஆற்றின் மேல்புறத்தில் நின்று தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த நீண்ட மூக்கு கொண்ட ஓநாயை அந்த ஆட்டுக்குட்டி கவனிக்கவில்லை.

ஆட்டுக்குட்டி ஓநாயைக் கவனிக்கவில்லையே தவிர, ஓநாய் ஆட்டுக் குட்டியை கவனித்து விட்டது.

அடேடே! அழகான ஆட்டுக்குட்டி! இதை இவ்வளவு நேரம் கவனிக்காமல் விட்டு விட்டோமே - ஒரேயடியாக அடித்தால் இளம் மாமிசம் அருந்திக் களிக்கலாமே! ஓநாயின் நாக்கு ஊறியது! கோரைப் பற்கள் மேலும் நீண்டன! கால் நகங்கள் வெளிக் கிளம்பின!

ஒரே பாய்ச்சல்!
அந்த அழகான ஆட்டுக்
குட்டியின் குரல் வளையைக்
கவ்விக் கொண்டு
ரத்தம் உறிஞ்சுவது போல
ஒரு கற்பனை!

திடீரென்று ஓநாய்க்கு ஒரு தடுமாற்றம்! குட்டைத் தாடி ஆட்டுக் குட்டியைக் கொல்வதற்கு முன்பு; அதற்கு ஏதாவது

ஒரு காரணம் கற்பிக்க வேண்டுமென்று நெட்டை மூக்கு ஓநாய் கருதியது!

ஆற்றின் மேல் கரையில் நின்றவாறு - கீழ்கரையில் நின்று தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த ஆட்டுக் குட்டியைப் பார்த்து;

ஏய்! அற்பப் பதரே! நான் குடிக்கும் தண்ணீரை ஏன் கலக்குகிறாய்? நீ எச்சில்படுத்திய தண்ணீரை உனக்கு ராஜா போன்ற நான் குடிப்பதா? என்ன ஆணவம் உனக்கு?

ஓநாயின் உரத்த குரல் கேட்டு ஆட்டுக் குட்டி நடுங்கியது! அங்கிருந்தவாறே மண்டியிட்டு;

மகாராஜா! என்னை மன்னித்து விடுங்கள்! நானோ ஆற்றின் கீழ்ப்பகுதியில் தண்ணீர் குடிக்கிறேன். தாங்களோ மேல் பகுதியில் நின்று தண்ணீர் குடிக்கிறீர்கள்; இந்த நிலையில் உங்களுக்கு வரும் ஆற்றின் நீரை அடியேன் எப்படி எச்சில்படுத்திக் கலக்கிட முடியும்?

ஆட்டுக்குட்டியின் வாதம் சரியென்றுதான் ஓநாய்க்குத் தோன்றியது! இருந்தாலும் தனது பசியடங்குவதற்கு அந்தப் பச்சிளம் கறி வேண்டுமே; அதற்காக அந்த ஓநாய் -

அட; அடிமை ஆட்டுக் குட்டியே! என்னையா எதிர்த்துப் பேசுகிறாய்? நான் குடிக்கும் ஆற்றுத் தண்ணீரை நீ இப்போது கலக்கி எச்சில் படுத்தாவிட்டாலும் - உன் அப்பன் பாட்டன் யாராவது எப்போதாவது கலக்கி எச்சில் படுத்தியிருப்பார்கள்; அதற்கு நீ தண்டனை அனுபவித்தே தீர வேண்டும்!

என்று ஆத்திரமாகப் பதில் உரைத்துக்கொண்டே ஆட்டுக்குட்டியின் அருகே வேகமாக வந்தது!

எஜமான்! நான் சொல்வதைக் கேளுங்கள் என்று ஆட்டுக்குட்டி கெஞ்சுவதற்குள்ளாக - ஒரே அடி! குட்டி குளோஸ்! ரத்தம் வழியும் கோரமான வாயைப் பிளந்தபடி ஓநாய் ராஜநடை போட்டுக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றது!

ஆட்டுக்குட்டியின் குரல்வளையிலிருந்து சிந்திய இரண்டொரு இரத்தத் துளிகள் மட்டும்; ஓடிக்கொண்டிருந்த நதிநீரில் சில நிமிடங்கள் கரையாமல் மிதந்து - பிறகு நீரோடு நீராகி விட்டன!

உடன்பிறப்பே; நானும் நீயும் பால பாடத்திலோ அல்லது பாட்டி சொல்லியோ அறிந்த இந்தக் கதை, இப்போது அரசியலில் எவ்வளவு பொருத்தமாக ஒப்பிடப்பட வேண்டிய அளவுக்கு அமைந்திருக்கிறது என்பதை கவனித்தாயா?

ஓராண்டுக்கு சந்திரசேகர் அரசுக்கு ஆதரவு தருவதாக உத்திரவாதமளித்து - அதைக் குடியரசுத் தலைவரும் ஏற்றுக்கொண்டு - நாலு மாத காலத்தில் கொத்தடிமையை விட மோசமாகச் சந்திரசேகரை ராஜீவ்காந்தி நடத்தி விட்டார்!

முதல் வேலையாக அசாம் மாநிலத்தில் மாணவர்களால் அமைக்கப்பட்டு மகந்தா தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆட்சியைக் கலைத்திடுமாறு ஆணை பிறப்பித்தார்! சந்திரசேகரும் அந்த உத்திரவுக்கு உடன்பட்டார்!

அதன் விளைவு என்ன?

அசாம் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் என்று சொல்லிக் கொள்ளவே அச்சம்! காங்கிரஸ்காரர்களின் தலைகள் உருண்டு கொண்டிருக்கின்றன! பலர் வேறு மாநிலங்களுக்கு அடைக்கலம் தேடி ஓடிவிட்டனர்! கலவரத்தை அடக்கச் சென்ற இராணுவம் அங்கே நடத்தும் கொடுமைகளை நான் சொல்லவில்லை; இதோ தி பிசினிஸ் அன்ட் பொலிடிகல் அப்சர்வர் என்ற பிரபல பத்திரிகையின் பிப்ரவரி 11ந்தேதி இதழ் சொல்கிறது:-

ராணுவ வீரர்களின் கெடுபிடி நடவடிக்கை அதிகரித்துள்ளது சம்பந்தமாக அப்பகுதி வாழ் மக்களிடமிருந்து ஏராளமான புகார்கள் வந்துள்ளன.

ராணுவ நடவடிக்கைகளில் மேலும் தொய்வு ஏற்படுவதற்கு சமீபத்திய கௌகாத்தி உயர்நீதிமன்ற தீர்ப்பும் காரணமாக அமைந்துள்ளது. இத்தீர்ப்பில் ராணுவ வீரர்கள் சந்தேகத்தின் பேரால் அப்பகுதி வாழ் மக்களை கைது செய்வதற்கும் குறிப்பாக பெண்களை விசாரணை என்ற பெயரில் அழைத்துச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் தேஜ்பூரில் பணியாற்றிய இரண்டு ராணுவ வீரர்களை பணி நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு ராணுவ வீரர்களும் கற்பழிப்பு குற்றம் சாட்டப்பட்டிருந்த போதிலும் அவர்கள் கடமை தவறியவர்கள் என்று காரணங்காட்டி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். ராணுவ கௌரவத்தில்

ஏற்கெனவே இருக்கும் கரும்புள்ளியுடன் உல்பா நடவடிக்கையை சரியாக கண்காணித்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவில்லை என்ற குற்றச்சாட்டும் சேர்ந்து ராணுவத்தின் பங்கை ஆய்வு செய்ய வேண்டிய நிலைக்கு உயர் அதிகாரிகள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

கவர்னரின் ஆலோசகர்களில் ஒருவரான திரு. பி.பி.ஸ்ரீவத்சவா ராணுவத்தினருக்குப் பதிலாக அஸ்ஸாம் காவல்துறையை இப்பணிக்கு படிப்படியாக பயன்படுத்தப்படலாமா என்று அரசு யோசித்து வருவதாக தெரிவித்திருந்தார்.

–The Business & Political Observer

அசாமுக்கு அடுத்து தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியைக் கலைக்கவே மாட்டேன். நான் ஜெயப்பிரகாஷின் சீடன் என்று உறுதி மொழிந்த பிரதமர் சந்திரசேகரை நெருக்கடிக்கு ஆளாக்கிய ஜெயலலிதாவும், ராஜீவ் காந்தியும் படுத்திய பாடு கொஞ்ச நஞ்சமா?

ஜனநாயகப் படுகொலைக்கு உடன்பட மறுத்த பர்னாலாவை பீகாருக்கு மாற்றிட ஆணையிடப்பட்டது! அதையும் சந்திரசேகர் தட்டாமல் செய்தார் - ஆனால் அந்தப் பஞ்சாப் சிங்கம்; தனக்குத் தரப்பட்டது மாறுதல் அல்ல; தண்டனை என்பதை உணர்ந்து கவர்னர் பதவியை உதறிவிட்டுப் போய்விட்டார்.

தமிழகத்தில் கழக ஆட்சி கலைக்கப்பட்டது தவறு என்று பீகார் மாநில கவர்னர் உரையில் குறிப்பிட்டிருந்தது. கவர்னர் உரையென்றால் அது அந்த மாநில அரசின் கருத்து என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். இந்த விளக்கத்தை பீகார் கவர்னர் முகமது யூனுஸ் சலீம் அளித்த பிறகும் அவரை டிஸ்மிஸ் செய்திடுக என ராஜீவ் ஆணையிட்டார்! அதனை நிறைவேற்றினார் சந்திரசேகர்!

இந்தியாவில் ஒரு பிரதமர் இருக்கும்போதே; அவரது ஒப்புதலை பெறாமலே - பெறவேண்டிய அவசியமில்லை என்ற ஆணவத்துடன் - வளைகுடாப் போரை நிறுத்துவதற்கு ராஜீவ் விமானத்திலேறி உலகம் சுற்றி வந்தார்! காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்தது என்பார்கள்; ஆனால் இந்தக் காக்கை உட்கார்ந்தும் பனம்பழம் அசையக்கூட இல்லை! இறுதி வரையில் புஷ்ஷின் பிடிவாதமே உச்சாணிக்கொம்பில் இருந்தது! சமாதானம் நடக்கவில்லை! வெற்றிக்குப் பிறகும் வெறி அடங்கவில்லை!

அப்பாவி மக்களின் பிணக்குவியல் பெருகிற்றே தவிர குறையவில்லை!

இட்ட கட்டளைகளை நிறைவேற்றிக் கொண்டு - பினாமியாக இருந்து கொண்டு - பிரதமர் பணிகளை உலக அளவில் ராஜீவ் நிறைவேற்றத் தொடங்கினால்; அதையும் பொறுத்துக் கொண்டு - சந்திரசேகர்; சரியான சந்தர்ப்பவாத சேகராக தன்னை மாற்றிக் கொண்டதும் கண்டதும் - பாண்டிச்சேரியில் 33க்கு 18 பேர் கவர்னரிடம் சென்று ஆட்சி அமைக்க முன் வந்தபோது; 18 என்பது மைனாரிட்டி! 15 என்பது தான் மெஜாரட்டி! என்றுரைத்து அந்த சட்ட சபையையும் கலைக்குமாறு கட்டளையிடப்பட்டது! அதனையும் கண நேரத்தில் நிறைவேற்றி வணங்கி நின்ற கனவான்தான் சந்திரசேகர்!

இதற்கிடையே ஆட்டுக்குட்டியின் மீது பாய நினைத்த ஓநாய்போல ஆனார் ராஜீவ் காந்தி!

யாரோ இரண்டு அரியானா மாநில போலீசார் ராஜீவ் காந்தி வீட்டு வாசலில் நின்றார்களாம்! அவர்கள் வேவு பார்த்தார்களாம்! அதன் மீது எந்த நடவடிக்கை எடுக்கவும் தயார் என்றார் சேகர்! அரியானா முதலமைச்சரை மாற்றவா? அரியானா உள்துறை அமைச்சரை விரட்டவா? எது வேண்டுமானாலும் செய்கிறேன் என்றார்!

அரியானா மாநில ஜனதா தள (எஸ்) கட்சியின் ஆட்சியைக் கலைக்கக்கூட சந்திரசேகர் சம்மதிப்பார்!

ஆனால் அதன் விளைவாக தேவிலால் சீறுவாரே - அவர் வசமிருக்கும் எம்.பி.க்கள் ஆதரவு போய் விடுமே!

அதை எதிர்பார்த்துத்தானே அரியானா அரசைக் கலைக்கச் சொன்னார் ராஜீவ்!

அரியானா கலைந்தால்; தேவிலால் பொங்கி எழுந்து சந்திரசேகர் ஆட்சியும் கவிழும். ராஜீவ் காந்தியை ஜனாதிபதி அழைத்து என் தேவே! கோவே! தேசத்தை நீதான் காப்பாற்ற வேண்டும்! என்று பிரார்த்தனை செய்வார்! போனால் போகிறது என்று ராஜீவ் காந்தியும் அந்தப் பதவியில் அமர்ந்து மிச்சமிருக்கும் மூன்றரை ஆண்டு காலம் ராஜ்ய பரிபாலனம் செய்ய முடியும்!

இதை மனத்தில் வைத்துத்தான் ஆட்டுக் குட்டியைக் கொல்ல ஓநாய் காரணம் கண்டுபிடித்தது போல அரியானா போலீசார் இருவர் வேவு பார்த்ததாக - இமயமலை போன்ற (?) ஒரு காரணத்தைக் கண்டுபிடித்தார் ராஜீவ்!

ஓநாய் ஆட்டுக் குட்டி கதை

நடக்காத கதை!

அதில் ஆட்டுக்குட்டி

ஏமாந்தது!

இப்போது நடந்திருப்பதோ அரசியல் உண்மைக் கதை! ஆட்டுக்குட்டி ஏமாறவில்லை!

என் அப்பன் பாட்டன் எச்சிலாக்கிக் கலக்கியிருப்பான் என்கிறாயா? அப்படியானால் அந்த அப்பனும் பாட்டனும் அதோ ஆற்றுக்குள் இருக்கிறார்கள் என்று ஆட்டுக் குட்டி கூறிக் கொண்டே ஓடிவிட; அதை நம்பி ஓநாய் ஆற்றில் குதித்து மூழ்கிய கதையாக இந்தக் கதை முடியும் போல் இருக்கிறது!

பொறுத்திருந்து பார்ப்போம்!

அன்புடன்,

மு. க.

09-03-1991

1700. தேசம் என்றால் என்னவென்று தெரியாதவர்கள்!

உடன்பிறப்பே!

சில பேருக்கு திடீரென்று தேசபக்தி பீறிட்டுக் கொண்டு கிளம்பியிருக்கிறது!

தேசத்திற்காக தாங்கள் என்ன தியாகம் செய்தோம் என்ற பட்டியல் போட்டுக் காட்ட வகையில்லாவிடினும் - விரல் மடக்கக் கூடத் தகுதியற்றவர்கள்; என்னைத் தேச விரோதி என்றும் கழகத்தை தேச விரோத இயக்கமென்றும் அறிக்கைகள் எழுதி வெளியிடுகிற காரணத்தினாலேயே தங்களைத் தேச பக்தர்கள் எனக் காட்டிக் கொள்ள முயன்று பார்க்கிறார்கள்.

தேசியக் கொடியை எரிக்கும் போராட்டத்தைத் தந்தை பெரியார் அறிவித்தபோது; சட்டம் ஒன்று கொண்டு வந்தார்களே தவிர - அந்தக் கிளர்ச்சி நடத்திய பெரியார் அவர்களின் ஆதரவைப் பெற்றுத்தான் அப்போதும் தேர்தலில் வெற்றி பெற்றார்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதை நாடு மறந்து விடுமென்று எதிர்பார்த்து ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

இந்தியப் படம் - தேசியக் கொடி - இவற்றையெல்லாம் கொளுத்திட வேண்டுமென்று பெரியார் களம் புகுந்தபோது; எப்படியாவது அவரது ஆதரவினால்; கனம் எம்.எல்.ஏ.ஆக வேண்டும் - கனம் மந்திரியாக வேண்டுமென்று காங்கிரஸ் தலைவர்களும், பிரமுகர்களும் பெரியாரின் காலைச் சுற்றிக் கொண்டிருந்த கதையெல்லாம் மறந்து போய்விட்டது எனக் கருதி, இன்றைக்குப் புதிய கதர்சட்டைகள் தேச பக்தி பரிசோதனைக்குப் புறப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தனியாகப் பிரிய வேண்டுமென வலியுறுத்தி, இந்திய தேசப் படத்தில் தமிழ்நாடு நீங்கலாக மற்ற பகுதிகளைப்

பெரியார் அவர்கள் கொளுத்தியது 1960ஆம் ஆண்டு! எனக்கு நினைவு; அந்தப் போராட்டத்தில் ஆதித்தனாரும் கலந்து கொண்டதாக! பெரியார் அவர்களும் வீரமணி அவர்களும் கைது செய்யப்பட்டு இரண்டே நாட்களில் விடுதலை செய்யப்பட்டார்கள்! அதற்குப் பிறகும் 1962-ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரசின் வெற்றிக்குப் பெரியாரின் ஆதரவும், பெரியார் தொண்டர்களின் தேர்தல் பணியும்தான் தேவைப்பட்டது! ஆகா! இந்திய தேசப்படத்தைக் கொளுத்தியவரின் ஆதரவு காங்கிரசுக்குத் தேவையில்லை என்று அன்றைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசரும் சொல்லவில்லை - காங்கிரஸ் கட்சியும் சொல்லவில்லை!

மாநில முழுதும் இந்திய தேசப் படத்தை பெரியார் ஆணைப்படி திராவிடர் கழகத் தோழர்கள் எரித்துச் சாம்பலாக்கினர்!

அவர்களின் தயவிலேதான் காங்கிரஸ் கட்சி, தேர்தலையே சந்திக்க முடிந்தது!

1957 - 1962 - 1967 - ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று பொதுத் தேர்தல்களிலும் காமராசர் அவர்களின் வெற்றியைக் குறிக்கோளாகக் கொண்டு; அதற்காகப் பெரியார் அவர்கள் காங்கிரசை ஆதரித்தார் எனினும்; தனது கொள்கைகளை நிலை நாட்டுவதற்காக தேசியக் கொடியை எரிப்பேன் என்று அறிவிக்கவும்; தேசப்படத்தை தெருவில் போட்டுக் கொளுத்தவும் அவர் தயங்கவில்லை! அப்போதெல்லாம் அவர் தயவில்லையேல் காங்கிரசுக்குத் தேர்தல் களம் புகும் தைரியமே இல்லை! இன்றைக்கு என்னமோ தேசபக்தியைப் பற்றிப் பூமிக்கும் ஆகாயத்திற்குமாக எகிறிக் குதிக்கிறார்கள்!

உடன்பிறப்பே, ஜனாதிபதி உயர்ந்த இடத்தில் இருப்பவரல்லவா? அவரைக் கருணாநிதி கண்டிக்கலாமா? இழிவுபடுத்தலாமா? இப்படி ஒரு ஓங்காரக் கூச்சல்!

உயர்ந்த இடத்தில் ஒருவரை உட்கார வைக்கக் கூடிய முடிவு எடுக்கக் கூடியவரே பிரதமர் பதவியில் இருப்பவர்தான்! (54 எம்.பி.க்களைக் கொண்ட கட்சியின் பிரதமரை நான் குறிப்பிடவில்லை) பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் அந்தக் காலப் பிரதமரைக் கூறுகிறேன்!

அந்தப் பிரதமரின் கொடும்பாவியைக் கொளுத்தவும் - படத்தைக் கொளுத்தவும் போராட்டம் நடத்திய ஒருவர்; இன்றைக்கு தேசபக்தியைப் பற்றி வாய்கிழியப் பேசுகிறார்!

இந்திரா காந்தியின் கொடும்பாவியைக் கொளுத்துவதாகத் தீர்மானம் போட்டிருக்கிறீர்களே; அவர்கள் ஒரு பெண்மணி அல்லவா? அவர்கள் கொடும்பாவி கொளுத்துவது நாகரிகமாக இருக்குமா?

என்று நான் அந்த நண்பரை நேரிலே கேட்டபோது அவர்;

ஆமாம்! ஒரு பெண்; பிரதமர் என்பதே எனக்கு மறந்துவிட்டது! அப்படியானால் கொடும்பாவி கொளுத்துவதற்குப் பதில் இந்திரா காந்தி படத்தை கொளுத்துவதாக மாற்றி அறிக்கை விடுகிறேன் என்று சொல்லி, அவ்வாறு அறிக்கையும் விட்டு மாநில முழுதும் பட எரிப்புக் கிளர்ச்சியை நடத்தினார்.

அவரெல்லாம் இன்றைக்கு, என்ன அநியாயம்? ஜனாதிபதி என்றால் இந்தியாவின் முதல் குடிமகனல்லவா? அவரைக் கண்டிப்பது தேசத் துரோகமல்லவா? எனக் காய்கின்ற காட்சியும் - பாய்கின்ற காட்சியும் கண்டு; எனக்கு விலா நோகச் சிரிப்புத்தான் வருகிறது!

பிரதமர் பதவியிலிருந்து நான் ராஜினாமா செய்கிறேன். பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு தேர்தலை நடத்த ஆவன செய்யுங்கள்

என்று சந்திரசேகர் அறிவித்த பிறகு - ராஜினாமாவை ஏற்றுக் கொண்ட குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்?

எதிர்க்கட்சிகள் அனைத்தும் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டுமென தெரிவித்து விட்டன.

காங்கிரசும் கூட வேறு வழியின்றி பாராளுமன்றத் தேர்தலுக்குத் தயார் என்று ஒரு கண்துடைப்பு அறிக்கை வெளியிட்டு விட்டது.

இடைக்கால பட்ஜெட்டுகளைப் பாராளுமன்றம் ஏற்றுக் கொண்டவுடன் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும்.

என அறிவித்து அவ்வாறு செயல்பட்டிருக்க வேண்டிய குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் அவர்கள்; எனக்கு 24 மணி நேரம் அவகாசம் வேண்டும் - இன்னும் இரண்டு நாள் வேண்டும் - மூன்று நாள் வேண்டும் - என்று பிரச்சினையை இழுப்பானேன்?

இப்போது ஆயிரம் கேள்வி கேட்டு உன்னைக் குற்றமற்றவன் என்று நிரூபித்துக் கொள்ளப் பார்க்கிறாயே கொற்றவனே! இப்படி ஒரு கேள்வி என் மணாளன் கோவலனைப் பார்த்துக் கேட்டிருந்தால் உன் ஆட்சியில் நீதி செத்திருக்காதே!

என்று கண்ணகி, பாண்டியனைப் பார்த்துச் சொல்வதாக ஒரு உரையாடல் - பூம்புகார் படத்தில்; நான் எழுதியது!

பாராளுமன்றக் கலைப்பு பிரச்சினைக்காக இத்தனை நாள் - இத்தனை சட்ட ஆலோசனை - இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டவர்; ஒரு சில நிமிட நேரம் கூட தமிழ்நாட்டில் கழக அரசைக் கலைப்பது பற்றி யோசிப்பதாக எடுத்துக் கொள்ளவில்லையே - என்று கேட்பது தவறா?

எப்படியும் ராஜீவ் காந்தியை பிரதமராக்கிவிட ஒரு குடியரசுத் தலைவர் துடித்ததும் - அதற்காக திட்டம் தீட்டியதும் - நியாயமா?

குடியரசுத் தலைவர் பதவியின் பெருமையை ஒருவர் சீர் குலைத்தால் - அப்படிச் சீர்குலைப்பவர் யாராயினும் அவரைக் கண்டிக்கும் உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு!

இதைத் தேசத் துரோகம் - தேச விரோதம் என்பவர்கள்; தேசம் என்றாலே என்னவென்று தெரியாதவர்கள்; அவ்வளவுதான்!

அன்புடன்,

மு. க.

12-03-1991

1701. பாவம்; தானாகவே கிழிகின்றன!

உடன்பிறப்பே!

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் இதுவரை நாடாளுமன்றங்கள் காணாத புதுமைகள் பலவற்றை இந்த நாடாளுமன்றம் கண்டதாக நாளேடுகள் அனைத்தும் விளிம்பு கட்டி முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளன.

மார்ச் 11 நாடாளுமன்றத்திலே சரித்திரம் படைத்த நாள்!

பிரதமர், தனது பதவி விலகல் கடிதத்தை குடியரசுத் தலைவரிடம் ஒப்புவித்து நாடாளுமன்றத்தைக் கலைத்து விடும்படி கூறிய பிறகும் நாடாளுமன்றம் கூடியது இதுவே முதல் தடவை!

நிதிநிலை அறிக்கையும், ரயில்வே வரவு செலவுத் திட்டமும் முழுமையாக வைக்கப்படாமல் அதற்குச் சரியான முகாந்திரம் காட்டாமல் இடைக்கால அறிக்கைகளாக அவைகள் வைக்கப்பட்டதும் இதுவே முதல் தடவை!

அந்த இடைக்கால நிதிநிலை அறிக்கைகளை எவ்விதமான விவாதமுமின்றி எல்லாக் கட்சிகளும் நிறைவேற்றிக் கொடுத்த நிகழ்ச்சியும் இப்போதுதான் முதல் தடவை!

நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத் தொடரில் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமே நிறைவேற்றப்படாமல் ஒதுக்கித் தள்ளப்பட்ட நிகழ்ச்சியும் இப்போதுதான் முதல் தடவை!

பிரதமரும் மற்றும் எல்லா அமைச்சர்களும் அனைத்துக் கட்சிகளின் எம்.பி.க்களும் தவறாமல் வருகை தந்ததும் கூட; இதுதான் முதல் தடவை!

இந்த அதிசயங்களுடன் மற்றொரு அதிசயத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் - அதுதான் 54 உறுப்பினர்களை மட்டுமே கொண்ட ஒரு குழு; ஜனதா தளத்திலிருந்து பிரிந்து வந்து அந்தக்

குழு ஜனதா தளம் (எஸ்) என்று பெயர் சூட்டிக் கொண்டு - மத்திய அரசின் ஆளுங்கட்சியாக அமர்ந்ததும் இப்போதுதான்!

அப்படி அமைந்த ஆளுங்கட்சியில் இருந்த ஐந்து அமைச்சர்கள்; கட்சி தாவல் சட்டத்திற்கு மாறாக கட்சி தாவியதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதும் இந்த நாடாளுமன்றத்தில்தான்!

54 பேர் எங்களுக்கு ஆதரவு கொடுங்கள்; சுமார் இருநூறுக்கு மேற்பட்டவர்களாக இருக்கிற காங்கிரஸ் கட்சியான நாங்கள் மத்தியில் அமைச்சரவை அமைக்கிறோம் என்று சொல்லாமல்; 54 பேர் கொண்ட குழுவின் தலைவரைப் பிரதமராக்கியதும் இந்த 9-வது நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அதிசயம்தான்!

பெயருக்கு மட்டுமே பிரதமராக இருந்து கொண்டு - ராஜீவ் காந்தியின் பினாமியாக செயல்பட்ட சந்திரசேகர் என்ற ஒரு புகழ்பெற்ற மனிதர் - தனது பெருமைகளையெல்லாம்; தானே தகர்த்தெறிந்து கொண்ட களங்கப்பட்ட வரலாற்றை சந்தித்ததும் இந்த நாடாளுமன்றம்தான்!

உடன்பிறப்பே; ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஆளுங்கட்சியினாலும், அதன் ஆதரவுக்கட்சியான ராஜீவின் காங்கிரசினாலும், காங்கிரசின் கூட்டாளிக் கட்சியான அ.தி.மு.க.வினாலும்; நிறைவேற்றப்படுவதற்கு அவையில் எடுத்துக் கொள்ளப்படாமலே - நாதியற்று விடப்பட்டதே அதைவிட இந்தியாவின் முதல் குடிமகனை இழிவுபடுத்தும் செயல் வேறு ஏதாவது இருக்க முடியுமா?

ஜனாதிபதி - காங்கிரசின் அக்கிராசனாதிபதியாகச் செயல்படுவதைச் சுட்டிக் காட்டி; அந்த உயர்ந்ததும் உன்னதமானதுமான பதவிப் பீடத்தின் பெருமையைக் காப்பதற்காகத்தான் நாம் கண்டனக் குரல் எழுப்புகிறோமே தவிர - தேச பக்திக்கு விரோதமாக அல்ல!

மேதகு ஜெயில்சிங் அவர்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது துக்ளக் பத்திரிகையின் அட்டைப்படத்தில் ஒரு கேலிச் சித்திரம் வெளியிடப்பட்டதையும் அந்தக் கேலிச் சித்திரத்தில் இரண்டு கழுதைகள்; குப்பைத் தொட்டியில் காகிதம் தின்றுகொண்டே, இனி மேல் நாமும் ஜனாதிபதியாகலாம் என்று பேசிக் கொள்வதாகச்

சித்தரிக்கப்பட்டிருந்ததே - (இதனை 11-3-91 விடுதலை இதழ் சுட்டிக் காட்டியுள்ளது) அப்போது பாழ்படாத தேச பக்தி, களங்கப்படாத தேச பக்தி, இப்போது நாம் ஒரு கண்டனக் குரல் எழுப்புவதால் மட்டுமே பட்டுப் போய்விடுமென்று பசப்புகிறார்களே! பதறுகிறார்களே! அலறுகிறார்களே! பாபீ எனச் சாபமிடுகிறார்களே! பார்த்தாயா; தேச பக்தியை?

இந்தியாவின் முதல் குடிமகனைக் கழுதையுடன் ஒப்பிட்டும் - ரப்பர் ஸ்டாம்பு என்றும் அவர்கள் எழுதலாம் - பேசலாம் - கேலிச் சித்திரம் போடலாம்!

இந்தியாவின் முதல் குடிமகனாக இருந்த ஜனாதிபதி ஜெயில் சிங் - தேச விரோதச் செயலில் ஈடுபடுகிறார் என்றும், அவர் தேச விரோதி என்றும் கலிஸ்தான் பிரிவினை ஆதரவாளர் என்றும், திவாரி என்ற காங்கிரஸ்காரர், நாடாளுமன்றத்திலேயே குற்றஞ்சாட்டினார் - அதனைப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியும் புன்னகை நெளிய ரசித்துக் கொண்டிருந்தார்!

நான்; அப்படியொன்றும் சொல்லிவிடவில்லை! கோவாவுக்கு ஒரு நீதி - புதுவைக்கு ஒரு நீதி என்றும்; அசாமுக்கு ஒரு நீதி - உ.பி.க்கு ஒரு நீதி என்றும்; பாராளுமன்றத்துக்கு ஒரு நீதி - தமிழக சட்டமன்றத்துக்கு ஒரு நீதி என்றும்; நேரத்திற்கு நேரம் நினைவையும், சிந்தனையையும் எடுக்கும் நிலையையும் மாற்றிக் கொள்கிற அளவுக்கு நடந்து கொண்ட இந்தியாவின் முதல் குடிமகனை; பாதிக்கப்பட்ட இந்தத் தமிழ்க் குடிமகன், ஜனநாயகத்தின் பெயரால் இது நியாயமா? எனக் கேட்டுக் கண்டனக் குரல் எழுப்புகிறேனே; அதுதான் மகாப்பாதகமாம்!

பதவிக்காக மட்டும் தைக்கப்பட்ட கதர் சட்டைகள், என் கருத்தை எதிர்த்துக் கிழிகிழி என கிழிக்கின்றன!

பாவம்; தானாகவே கிழிகின்றன!

அன்புடன்,

மு. க.

13-03-1991

1702. மாசு கற்பித்தது யார்? எவர்? எப்போது?

உடன்பிறப்பே!

சர்வ அதிகாரங்களையும் பேரவையிலும் சரி; பாராளுமன்ற அவையிலும் சரி; தன்னகத்தே கொண்டுள்ள சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு விதி முறைகளில் இடம் இருக்கிறது! அதையும் மீறி சபாநாயகர் தமிழ்க்குடிமகனை அவரது இருக்கை வரையில் சென்று மேலே தாவி அவரைத் தாக்கிய நிகழ்ச்சியும்கூட தமிழக சட்டப் பேரவையில் அ.தி.மு.க.வினரால் நடத்தப்பட்டது; அண்மைக்காலத்தில்தான்! தாக்கப்பட்டது தமிழ்க் குடிமகன் அல்லவா; அதனால் காங்கிரஸ் கட்சிகூட அ.தி.மு.க.வுடன் சேர்ந்து கொண்டு பேசியது! எடுத்த எடுப்பில் கண்டித்த காங்கிரஸ் கட்சியினர்; பிறகு அ.தி.மு.க.வின் தயவுக்காகத் தடம் மாறிப் போயினர்!

நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபாநாயகர் மீதும் கொண்டு வர விதிமுறை வகுக்கப்பட்டிருப்பதால் யாரும் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்று கூறக்கூடாது என்றோ; அது இமாலயத் தவறு என்றோ; இழிவுபடுத்தும் காரியம் என்றோ எவரும் விமர்சிக்க இயலாது! ஒரு நீதிபதி மீது கொடுக்கப்பட்ட இம்பீச்மெண்ட் (பதவி விலகும் தீர்மானம்) பாராளுமன்ற சபாநாயகர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கென ஒரு குழு அமைத்து அறிவித்திருக்கிறார் என்பதற்காக காங்கிரஸ் கட்சியின் சார்பில் பாராளுமன்ற சபாநாயகரைக் கண்டனம் செய்து அறிக்கை வெளியிட்டிருப்பதாக ஏடுகளில் செய்திகள் வெளிவந்துள்ளன. கண்டன அறிக்கை வெளியிட்டவர் சாதாரண காங்கிரஸ்காரர் அல்ல! மத்திய அரசின் முன்னாள் சட்ட மந்திரியாக ராஜீவ் அமைச்சரவையில் இருந்த காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான சங்கரானந்த் அவர்களாவார்!

தாங்கள் கருதும் நியாயத்திற்குப் புறம்பாக பாராளுமன்ற சபாநாயகர் முடிவெடுத்தார் என்பதற்காக கண்டிக்கத்தக்கது என்று காரமான சொற்றொடரைக் காங்கிரசின் முன்னாள் அமைச்சர் பயன்படுத்தியிருப்பது ஜனநாயகத்தில் அவருக்குள்ள வரைமுறையான உரிமை என்பதை மறுக்க முடியாது!

சபாநாயகர் மீது கண்டனக் கணை வீசலாம் - நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம் என்று ஜனநாயகத்தில் வரையறுக்கப்பட்ட உரிமைகள் இருப்பது போலவே - ஜனாதிபதி மீதும் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து பதவி விலக்கம் செய்ய வேண்டுமென்று (இம்பீச்மெண்ட்) கோருவதற்கு வரையறுக்கப்பட்ட உரிமையும் அரசியல் சட்டத்தில் விதியும் இருக்கிறது.

அரசியல் சட்டம் 61-வது பிரிவு; பின்வருமாறு தொடங்குகிறது.

"Procedure for Impeachment of the President - (1) When a President is to be impeached for violation of the Constitution, the charge shall be performed by either House of Parliament."

குடியரசுத் தலைவர் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு அவர் அரசியல் சட்டத்திற்கு மாறாக நடந்தார் என்ற குற்றச்சாட்டு பாராளுமன்றத்தில் சாட்டப்பட வேண்டும்.

உடன்பிறப்பே, ஆகா! ஊகு! குடியரசுத் தலைவரை பதவி நீக்கம் செய்வதா? தேச விரோதமல்லவா? தேச கௌரவம் என்ன ஆவது? என்று தேசத்தின் கற்பையே சூறையாடத் துடிக்கும் சில பேர் அறிக்கைகள் விட்டுத் துள்ளுகிறார்கள் அல்லவா; அவர்கள் அரசியல் சட்டத்தின் 61-வது பிரிவைப் படித்துப் பார்த்தால் குடியரசுத் தலைவரையும் பாராளுமன்றத்தில் இம்பீச்மெண்ட் கொண்டு வந்து விலக்கலாம் என்றிருக்கிற பிரிவையே எடுத்து விடவேண்டுமென்று கூப்பாடு போடுவார்களோ என்னவோ தெரியவில்லை!

பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பகுதியினர் அப்படியொரு தீர்மானத்தைக் கொண்டு வரலாம் என்றும் மூன்றில் இரண்டு பகுதி உறுப்பினர்களின் ஆதரவு இருந்தால்தான் அந்தத் தீர்மானம் நிறைவேறுமென்றும் பிரிவு 61-ன் துணைப் பிரிவுகள் குறிப்பிடுகின்றன!

இது அரசன் கட்டளை!

ஆண்டவன் கட்டளைக்கே காரணம் கேட்க ஆரம்பித்து விட்டார்கள் அரசே!

இது நான் எழுதிய ஒரு படத்தில் வரும் உரையாடல் மட்டுமல்ல; மக்களாட்சியின் மாண்பு போற்றப்பட வேண்டிய ஒரு நாட்டில் அந்த மாண்பினைப் பேணிக் காத்திட வேண்டிய இடத்தில் (preserve, protect,and defend) என்ற மூன்று வார்த்தைகளை உச்சரித்து - அரசியல் சட்டத்தைப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும், காத்திடுவதற்குப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் குடியரசுத் தலைவர் அதற்கு மாறாகச் செயல்படும்போது இது இம்பீச்மெண்ட் எனும் பதவி விலக்கத்திற்குரிய ஒன்று என ஜனநாயக வரைமுறைக்குட்பட்டு;

எவரே ஆயினும் அவர்
எந்த இடத்தில் இருந்திடினும்
தவறிழைப்பின் அந்தத் தவறைத்
தட்டிக் கேட்கத் தயங்கக் கூடாது!

என்ற உரிமைக் குரலை யார் வேண்டுமானாலும் உயர்த்தலாம் என்பதற்கான உத்திரவாதமுமாகும்.

தி.மு.க. அரசைப் பதவி நீக்கம் செய்ததில் குடியரசுத் தலைவர் நடந்து கொண்ட முறை விமர்சிக்கப்பட வேண்டியதாகவே அமைந்தது என்பதை ஏற்றுக் கொள்ளலாம். ஆளுநர் பர்னாலா எந்த அறிக்கையும் தராத நிலையில் தமிழக அரசைப் பதவி நீக்கம் செய்ய மத்திய அமைச்சரவை எவ்வாறு பரிந்துரைத்தது என்று குடியரசுத் தலைவர், பிரதமரைக் கேட்டிருக்கலாம். அரசியல் சட்டம் 74 (2) பிரிவின்படி மத்திய அமைச்சரவையின் பரிந்துரையை அதன் மறு பரிசீலனைக்குக் குடியரசுத் தலைவர் அனுப்பியிருக்க முடியும். அல்லது தமது இறுதி ஆணையை தாமதப்படுத்துவதின் மூலம் அமைச்சரவையின் பரிந்துரையைத் தாம் விரும்பவில்லையென்று நாட்டுக்கு உணர்த்தியிருக்கலாம். அவ்வாறு செய்யாமலே நீட்டிய தாளில் குடியரசுத் தலைவர் உடனே கையெழுத்திட்டது துரதிருஷ்டமான செயல்தான்

என்று எழுதுகிற தினமணி கூட; ஆனால் இந்த அரசியல் முடிவுக்காக பெருமைக்குரிய குடியரசுத் தலைவரின் பதவிக்கு மாசு கற்பிப்பது ஏற்புடையதல்ல! என்ற கருத்தினை முடிவாகக் கூறியுள்ளது.

பெருமைக்குரிய அந்தப் பதவிப் பீடத்தை மாசுபடுத்தும் நோக்கம் என்னுடையதல்ல! அதில் அமர்ந்திருப்போர் அந்தப் பெருமையை மாசுபடுத்துதல் கூடாது! தகாது! முறையல்ல!

இந்த நோக்கத்துடன் எழுந்ததுதான் எனது கண்டனம்!

13 ஆண்டுக்கால கடும் சோதனைகள், மிசாக்கள், அடக்குமுறைகள், பழிவாங்கும் நடவடிக்கைகள், கேவலங்கள், அனைத்தையும் இனமானம் காப்பதற்காக ஏற்றுக் கொண்டும் பொறுத்துக்கொண்டும் சமுதாயப் பணியாற்றிய ஒரு இயக்கம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்க மக்கள் அளித்த ஜனநாயகத் தீர்ப்பை காலில் போட்டு மிதித்துவிட்டு - பெரும்பான்மை பலம் வாய்ந்த கழக அரசை அதர்வாய்ஸ் என்ற வார்த்தையை மட்டும் பயன்படுத்திக்கொண்டு, இல்லாத பொல்லாத குற்றங்களைக் கூறிக் கலைப்பதற்கு ராஜீவ் காந்திக்கும், திருமதி ஜெயலலிதாவுக்கும் உடந்தையாக இருந்தார் குடியரசுத் தலைவர் என்பதற்காக மட்டும் நான் இம்பீச்மெண்ட் என்ற கண்டனத்தைக் கூறிவிடவில்லை!

கழக அரசைக் கலைத்த கோபத்தில் கூறுவது என்றால் பிப்ரவரி முதல் தேதியிலோ அல்லது முதல் வாரத்திலோ கூறியிருப்பேன்.

ஆனால் நான் கூறியது மார்ச் மாதம் எட்டாம் தேதி!

என்ன காரணம்? கழக அரசைக் கலைத்ததோடு நில்லாமல் அடுக்கடுக்கான பாணங்கள் அதுவும் அக்கினி பாணங்கள் ஜனநாயகத்தின் மீது பாயத் தொடங்கின! அத்தனைக்கும் குடியரசுத் தலைவர் உடந்தையாக இருந்திருக்கிறார்!

கழக அரசைக் கலைக்க பொய்யான ஒரு அறிக்கை தர மறுத்துவிட்டார் என்பதற்காக ஆளுநர் பர்னாலாவை பீகாருக்கு மாற்றிட ராஜீவ் ஆணையிட - அதனை சந்திரசேகர் ஏற்றிட - அதற்கும் குடியரசுத் தலைவர் உத்திரவில் கையெழுத்திடுகிறார்! பர்னாலா பதவியைத் தூக்கி எறிகிறார்!

தமிழ் மாநில அரசைக் கவிழ்த்தது தவறு என்று மாநில உரிமை உணர்வுடன் பீகார் மாநில கவர்னர் உரையில் குறிப்பிட்டதற்காக; மாநில அரசின் மீது பாயாமல் அந்த உரையைப் படித்த கவர்னர் முகமது யூனூஸ் சலீம் மீது பாய்ந்து அவரை டிஸ்மிஸ்

செய்யும் கொடுமைக்கும் குடியரசுத் தலைவர் தலையசைத்துக் கையெழுத்திடுகிறார்!

டெல்லியில் அரசியல் புயல் வீச ஆரம்பித்தவுடன்; ராஜீவ் காந்தி ராஷ்டிரபதி பவனில் ஒரு அறையில் தங்கியிருப்பவர் போல ஒருநாளைக்குப் பலமுறை குடியரசுத் தலைவரைச் சந்திக்கிறார் - விவாதிக்கிறார் - என்று செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன!

சரண்சிங் பதவி விலகி, பாராளுமன்றத்தைக் கலைக்கச் சொன்னபோது; குடியரசுத் தலைவராக இருந்த சஞ்சீவ ரெட்டியார் அவர்கள் - உடனடியாக செயல்பட்டு; ஜனநாயகம் காத்திட முனைந்தார்! அரசியல் சட்டத்திற்கு மதிப்பளித்தார்!

(1970-ம் வருடம் - ஆகஸ்ட் மாதத்தில் சரண்சிங் மந்திரிசபை எடுத்த முடிவை - உடனடியாக நிறைவேற்றி வைத்த ஜனாதிபதி சஞ்சீவ ரெட்டியைப் பற்றி - இன்றைய பிரதமர் - அன்று சொன்ன கருத்து என்ன தெரியுமா? அப்போது அவர் ஜனதா கட்சியின் தலைவராக இருந்தார். பாராளுமன்றத்தைக் கலைக்க உத்திரவிட்ட - ஜனாதிபதி சஞ்சீவ ரெட்டி மீது கண்டனத் தீர்மானம் (இம்பீச்மெண்ட்) கொண்டு வந்து அவரைப் பதவியிலிருந்து விலக்க வேண்டும் என்று அறிக்கை விடுத்தார் சந்திரசேகர்! அப்போது யாரும் ஜனாதிபதியின் கௌரவத்துக்கு குந்தகம் நேர்ந்து விட்டதாக கூச்சலிடவில்லை!

ஆனால் சந்திரசேகர் பதவி விலகி, பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு குடியரசுத் தலைவரிடம் கூறி, வாரம் ஒன்று ஆகிறது! இடைக்கால பட்ஜெட்டுகளுக்காக கால தாமதம் என்று வாதிடக் கூடும் சிலர்! பாராளுமன்றத்தைக் கலைக்கப் போவதாக தெரிவித்துவிட்டு, தேர்தலுக்கான தேதி விரைவில் அறிவிக்கப்படுமெனக் கூறிவிட்டு இடைக்கால பட்ஜெட்டுகளையோ, ஏனைய சட்டமுன்வடிவுகளையோ நிறைவேற்றியிருக்கக் கூடாதா? முடியாதா? அதுதான் போகட்டும் - மீண்டும் ராஜீவ் காந்தியையே மூன்றாண்டுகளுக்குப் பிரதமராக்கலாம் என்ற முயற்சிக்கும் - அல்லது சந்திரசேகரின் ராஜினாமாவை திரும்பப் பெறுகிற ஏற்பாட்டுக்கும் - அவருக்கே மீண்டும் பதவிப் பிரமாணம் செய்கிற திட்டத்திற்கும் - பஞ்சாயத்து பேசுகிற இடமாக ராஷ்டிரபதி பவனம் மாறியது நாடறிந்த விஷயமல்லவா?

இவ்வளவுக்கும் பிறகுதான் அந்தப் பெருமைமிக்க பதவி பீடத்திற்கு மாசு ஏற்படக் கூடாதென்று நான் கருதி கண்டனத் தீர்மானம் என்ற கருத்தை வெளியிட்டேனேயல்லாமல்; அந்த உயர்ந்த பீடத்திற்குரிய கௌரவத்தைக் குலைக்க வேண்டுமென்ற குறுமதி கொண்டல்ல!

ஒரு கண்டனக் குரலாலேயே குடியரசுத் தலைவர் பதவியின் கௌரவம் குறைந்துவிடுமென்கிறார்களே; அவர்கள் 15-7-1982ஆம் ஆண்டு துக்ளக் இதழின் அட்டைப்படக் கேலிச் சித்திரத்தைப் பார்க்கட்டும்!

அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு நான் அப்போது எழுதிய முரசொலிக் கடிதத்தின் சில பகுதிகளைப் படித்துப் பார்த்தால்; அந்தப் பெருமைக்குரிய பதவியைப் பற்றிய எனது கருத்தை - அவசரக்காரர்களும், ஆத்திரக்காரர்களும், அரசியல் அரை வேக்காடுகளும் புரிந்து கொள்வார்கள்!

இதோ அந்தக் கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு:-

இந்தியத் துணைக் கண்டத்தின் பெருமைமிக்க பதவிகளிலே ஒன்று குடியரசுத் தலைவர் பதவி! அந்தப் பதவியில் அமர்ந்தவர்களையோ அல்லது அமருகிறவர்களையோ கொள்கை ரீதியாக விமர்சிக்க யாருக்கும் உரிமை கிடையாது என்று கூறிவிட முடியாது! ஆனால் அந்தப் பதவியிலே ஒரு கழுதை கூட உட்கார முடியும் என்று ஒரு பத்திரிகை கேலி செய்கிற அளவுக்குத் தனது ஆத்திரத்தைக் கொட்டியிருக்கிறதென்றால் - இதை எப்படித்தான் பொறுத்துக் கொள்ள முடியும்?

ஆனால் எதிலும் ஒரு அளவு இருக்க வேண்டும்! ஒரு சாதாரணக் குடிமகன் - இன்று ஜனாதிபதி மாளிகையில் இந்திய நாட்டுப் பெரும் பதவியில் அமர்ந்துவிட்டார் என்பதற்காக தனது உள்ளத்தை அக்கினி குண்டமாக்கிக் கொண்டு - இப்படியொரு கேலிச்சித்திரத்தை துக்ளக் பத்திரிகையின் அட்டையில் வெளியிட்டிருக்கிறார் என்றால்; பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போர்க்கொடி உயர்த்தி நிற்கும் இயக்கங்களின் பணி இன்னும் எந்த அளவுக்கு அவசியமாகத் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறதல்லவா?

சீக்கிய மத வேத நூலை ஓதும் பயிற்சி பெற்று கியானி என்ற பட்டம் பெற்றவர்! இளம் வயதிலேயே பொதுவாழ்விலே

ஈடுபட்டவர்! வெள்ளையர்களின் ஆதரவாளராகச் செயல்பட்ட பரீத்கோட் சமஸ்தான மகாராஜாவை எதிர்த்துத் தடையை மீறிக் காங்கிரஸ் கட்சியைத் தொடங்கியவர்! 1938-ஆம் ஆண்டு விவசாயிகளுக்காக நடத்திய கிளர்ச்சியில் கைது செய்யப்பட்டு ஐந்து ஆண்டுக்காலம் தனிமைச் சிறைத் தண்டனை பெற்றவர்!

பரீத்கோட் சமஸ்தான ஆணையை உடைத்தெறிந்து பண்டித நேருவை அழைத்து வந்து காங்கிரஸ் கொடியை ஏற்றியவர்! அந்த சமஸ்தானத்திற்கு எதிராகப் போட்டி அரசாங்கமே அமைத்தவர்! அதிலே கைது செய்யப்பட்டு பல சித்ரவதைகளை ஏற்றுக் கொண்டவர்! அவரது தலைமுடியை ஜீப்பிலே கட்டி நடுவீதியிலே இழுத்து வருமாறு மன்னராட்சி; கொடுமையான உத்திரவு பிறப்பித்தும்கூட அஞ்சாது நின்று விடுதலைப்போர் நடத்தியவர்!

இவ்வளவு தியாகங்கள் செய்திருந்தும் என்ன பயன்? ஜெயில்சிங் ஒரு தச்சன் வீட்டுப் பிள்ளையாக அல்லவா பிறந்துவிட்டார்! அதனால்தானே இனி மேல் கழுதைகூட ஜனாதிபதியாகலாம் என்று சோவின் பத்திரிகையில் கேலி செய்ய முடிகிறது!

முதல் தடவையாகக் குடியரசுத் தலைவர் பதவிக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப் படுவதை ஒரு சிலரால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

(முரசொலி - கலைஞர் கடிதம் - 18-7-82

-என்று அன்றே நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

அரசியல் சட்டத்தின் பாதுகாப்பைப் பெருங்கடமையெனக் கொண்டவராக இருந்தாலும் ஜெயில்சிங் போன்றவர்கள் அமர்ந்திருந்தால் அது கழுதையாசனம்; அரசியல் சட்டத்தின்படி ஜனநாயக நெறிமுறைகளைக் காத்திடத் தவறுகிறவர் வெங்கட்ராமன் போன்றவர்களாக இருந்தால் அவர்கள் அமருமிடம் மாத்திரம் சிங்காசனம் - தேச கௌரவத்தைக் காப்பாற்றப் புறப்பட்டுள்ள புதிய தேச பக்தர்கள் இதைத்தான் ஜனாதிபதி பீடத்துக்குரிய இலக்கணமாக வகுத்திருக்கிறார்கள் போலும்!

உடன்பிறப்பே, நானும் கேட்கிறேன்; நீயும் கேள்!

பெருமைக்குரிய குடியரசுத் தலைவர் பதவியை மாசு படுத்தியது யார்?

அந்தப் பதவியில் இருப்பவரின் தவறுகளைச் சுட்டிக்காட்டி கண்டனத் தீர்மானம் தேவை என்று கூறியது மாசுபடுத்தும் காரியமா?

(அல்லது)

ஜனாதிபதி பதவியையே கழுதைகள் அமரும் பதவி என்று சித்தரித்தது மாசுபடுத்தும் காரியமா?

இந்தக் கேள்விக்கு தேசபக்த சிகாமணிகளிடமிருந்து உரிய பதில் கிடைக்காது!

ஏன் தெரியுமா?

எதைச் சொல்வதற்கும் ஒரு தகுதி (?) வேண்டுமல்லவா?

நாம்; அத்தகைய மேட்டுக்குடியில் பிறக்கவில்லையே; அதனால்தான்!

அன்புடன்,

மு. க.

14-03-1991

1703. ஆச்சரியக்குறியும்! கேள்விக்குறியும்?

உடன்பிறப்பே!

Suprisingly, Mr. Chandrashekar got President's Rule imposed without Recommendation by the Governor - Mr. Rajiv Gandhi said.

ஆச்சரியப் படத்தக்க வகையில் கவர்னரின் பரிந்துரை அறிக்கை இல்லாமலே சந்திரசேகர், (தமிழ்நாட்டில்) குடியரசுத் தலைவர் ஆட்சியைத் திணித்துவிட்டார் என்று ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட செய்தி வந்ததைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்றக் கட்சிக் கூட்டம் ராஜீவ் காந்தி தலைமையில் மார்ச் 13ந் தேதி டெல்லியில் நடைபெற்றபோதுதான் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் என்று ராஜீவின் ஆச்சரியம் எனத் தலைப்புகட்டி இந்தியாவில் உள்ள எல்லா ஏடுகளும் செய்தி வெளியிட்டுள்ளன.

தொலைக்காட்சியில் திட்டமிட்டு இந்தச் செய்தி சொல்லப்படாவிட்டாலும் கூட; வானொலியில் இந்தச் செய்தியைத் தெரிவித்தார்கள் எனக் கேள்வி!

தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகள் பிரச்சினை குறித்துப் பேசிக் கொண்டிருந்த சந்திரசேகர்; அந்த மாநில அரசைக் கலைப்பது பற்றி ராஜீவ் காந்திக்குத் தெரிவிக்காமல்; அவர் ஆச்சரியப்படும் அளவுக்கு - ஆளுநர் பர்னாலாவிடமிருந்து அறிக்கை பெறாமல் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வந்தது தவறு என்று ராஜீவ் காந்தி எப்போது கூறுகிறார் பார்த்தாயா? எல்லாம் முடிந்து, நாடாளுமன்றத்துக்கான தேர்தல் தேதி மே மாதம் இறுதி வாரத்தில் என அறிவிக்கப்பட இருக்கிறநிலையில் அல்லவா கூறுகிறார்!

மந்திரி நமது மாநகர் தன்னில்

மாதம் மும்மாரி மழை

பொழிகிறதா?

எனப் பழைய காலத் தெருக்கூத்து மகாராஜா கேட்பார்! அதே கேள்வியை இப்போது கேட்டால் மகாராஜா என்ன; மலேசியா சிங்கப்பூருக்கா போயிருந்தார்! மழை பெய்வது கூடத் தெரியாமல்? என்றுதானே மந்திரி, பதில் கேள்வி கேட்பார்!

ஜனவரி 30 காலை முதல் கவர்னர் பர்னாலா அவர்களை, டெல்லி தமிழ்நாடு அரசு மாளிகையில் வைத்து 'ரா' அதிகாரிகளும், 'ஐ.பி.' அதிகாரிகளும், சுப்பிரமணியம் சாமிகளும், சுபோத் காந்த் சகாய்களும் குடைகிறார்கள்! அவர்கள் போதாதென்று சந்திரசேகரும் துளைத்தெடுக்கிறார்! பர்னாலா, பொய் அறிக்கை தர முடியாதென்று மறுத்துவிடுகிறார் - கவர்னர் அறிக்கை இல்லாமல் ஆட்சியைக் கலைப்பது நியாயமா? என்று வி.பி.சிங் அவர்கள் தலைமையில் தலைவர்கள் சென்று ஜனவரி 30 இரவு 9.30 மணிக்கு ஜனாதிபதி வெங்கட்ராமன் அவர்களைக் கேட்கிறார்கள்! இன்னும் தனக்குத் தகவலே வரவில்லை என்று அவர் கூறி அவர்களை அனுப்பி வைக்கிறார்! அடுத்த 20-வது நிமிடம் கழக ஆட்சிக் கலைப்புக்கு ஜனாதிபதி உத்திரவிடுகிறார்!

இவ்வளவு நிகழ்ச்சிகளும் டெல்லியிலிருந்த எல்லா பத்திரிகைக்காரர்களுக்கும் தெரிகிறது! சென்னைக்கு தெரிகிறது! ராஜீவ் காந்தி அவர்கள் வெளியூரில் இருந்தால்கூட தெரிந்திருக்க வேண்டிய விஷயம்தானே இது?

காலையில் ஒரு அதிகாரியை மாற்றச் சொல்லி காங்கிரஸ் பிரமுகர்கள் உத்திரவிடுவார்கள். நான் அப்படியே மாற்றுவேன்! மாலையில் அதே அதிகாரியை இன்னொரு இடத்துக்கு மாற்று என்பார்கள்! ஏ, அப்பா - இந்த நாலு மாத காலத்தில் நான் படாதபாடு பட்டு விட்டேன்

என்று பிரதமர் சந்திரசேகர் புலம்பியிருக்கிறார்! பினாமியாக இருந்ததால் வந்த வினை!

அதிகாரி மாற்றத்துக்கே ராஜீவ் கட்சியினரிடம் ஆணை பெற்றவர் - அதனை அமல் படுத்தியவர்; ஐந்து கோடி மக்கள் கொண்ட ஒரு பெரிய மாநிலத்தில் 143 சட்டமன்ற

உறுப்பினர்களைத் தன்னகத்தே கொண்டதும் மற்றும் தோழமைக் கட்சிகளின் கணிசமான உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றதுமான கழக ஆட்சியைக் கலைத்திடுவதற்கு; ராஜீவ் காந்தியிடம் ஆலோசனை பெறவில்லை என்பது நம்பக் கூடியதாக இருக்கிறதா?

சரி; ராஜீவ் காந்திக்கு ஏற்பட்ட ஆச்சரியம் ஜனாதிபதி வெங்கட்ராமன் அவர்களுக்கு ஏன் ஏற்படவில்லை!

கவர்னர் பரிந்துரையில்லாமல் ஆட்சியைக் கலைப்பதா?

ராஜீவ் ஆச்சரியப்பட்டதாகச் சொல்கிறார்; நம்புவோம்! ஒரு வாதத்திற்காக மட்டும்!

அதே ஆச்சரியம் ஆர்.வி. அவர்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டாமா?

கவர்னர் பரிந்துரையின்றி கழக ஆட்சியைக் கலைக்குமாறு ஜனாதிபதியிடம் சந்திரசேகர் சொன்னது ராஜீவுக்கு ஆச்சரியமென்றால் -

கவர்னர் பரிந்துரை அறிக்கை எங்கே; என்று கூட கேட்காமல் - தினமணி பாஷைப்படி - நீட்டிய இடத்தில் உடனடியாக ஜனாதிபதி கையெழுத்துப் போட்டது ராஜீவ் காந்திக்கு மிகப் பெரிய ஆச்சரியத்தைத் தந்திருக்க வேண்டுமல்லவா?

அதைச் சொல்லாமல் ராஜீவ் காந்தி சந்திரசேகரைப் பற்றி மட்டும் சொல்கிறாரே என்பது நாட்டுக்கே ஆச்சரியமாக இருக்குமல்லவா?

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நன்றாகவே இருக்கிறது. விடுதலைப் புலிகளிடமும், தமிழ் ஈழத்தில் அவதிப்படுகிற தமிழ் மக்களிடமும் தி.மு.க. அனுதாபம் கொண்டிருக்கிற கட்சி உண்மையென்றாலும், போராளிகள் எவரும் தமிழ்நாட்டில் பலாத்காரம் மற்றும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதைக் கழக ஆட்சி அனுமதிக்கவில்லை. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாடு பல்லாயிரம் மடங்கு மேல்.

இந்தக் கருத்துக்களை தனது அழுத்தம் திருத்தமான வாதமாகவும் - விளக்கமாகவும் - வாய்மையுடன் எடுத்து வைத்த கவர்னர் பர்னாலாவை பற்றிக் கவலைப்படாமலே பிரதமர்

சந்திரசேகர் நடந்து கொண்டார் என்பது அரசியல் சட்ட மீறல் என்றால்; அந்த கவர்னர் டெல்லியில் ராஷ்டிரபதி பவனுக்கு அருகில் தமிழ்நாடு அரசு மாளிகையில் இருக்கிறார் என்று தெரிந்தும், அவரை அழைத்து நிலைமையை விளக்கச் சொல்ல வெங்கட்ராமன் அவர்கள் தவறியதும் அதைவிட மிகப் பெரிய அரசியல் சட்ட மீறல் அல்லவா?

கவர்னர் ஒருவர் ஒரு மாநிலம் விட்டு மற்றொரு மாநிலம் செல்ல ஜனாதிபதியின் ஒப்புதல் பெற வேண்டுமே - எனவே ஜனாதிபதிக்குத் தெரிந்து தானே பர்னாலா அவர்கள்; டெல்லிக்குச் சென்றிருக்க முடியும்!

சந்திரசேகர், கவர்னர் அறிக்கையைப் பொருட்படுத்தாதது ராஜீவுக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியும் தரக்கூடியதென்றால்; அரசியல் சட்டத்தைப் பேணிப் பாதுகாத்திடும் காவல் அரணாக இருப்பேன் என்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டுள்ள ஜனாதிபதி அவர்கள்; அடுத்த கட்டிடத்தில் இருந்த ஆளுநர் பர்னாலாவைக் கலந்து கொண்டு காரியமாற்றாதது; மேலும் ஆச்சரியத்தையும் - அதிர்ச்சியையும் தந்திருக்க வேண்டுமல்லவா?

கவர்னரின் அறிக்கை இல்லாமலே தமிழக அரசைக் கவிழ்க்கச் சொல்லிவிட்டார் சந்திரசேகர் என்று இப்போது ஆச்சரியப்படுகிறாரே ராஜீவ் காந்தி; இதுவாவது உண்மை என்றால் தமிழக ஆட்சிக் கலைப்புக்கு அங்கீகாரம் கோரும் தீர்மானம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டதே; அப்போதே இந்த தவறைச் சுட்டிக்காட்டி, ஆகவே இந்தத் தீர்மானத்திற்கு காங்கிரஸ் ஆதரவு தராது என்று அறிவித்திருக்கலாமே ராஜீவ் காந்தி!

இப்போது சந்திரசேகருக்கும் காங்கிரசுக்கு மிடையில் கருத்து வேறுபாடுகள் முற்றிவிட்ட நிலையில், தமிழக அரசைக் கலைத்ததில் காங்கிரசுக்கு பங்கில்லை; அது சந்திரசேகர் தாமாகவே செய்த காரியம் என்பது போன்ற பிரமையை உருவாக்க முயற்சிக்கிறார் என்றால் - பொதுமக்கள் என்ன சொன்னாலும் நம்பி விடுவார்கள்; அவர்களை ஏமாற்றுவது சுலபம் என்று ராஜீவ் காந்தி பலமாக நம்புகிறார் என்பது தவிர வேறு என்ன?

அரியானா மாநில அரசைக் கலைக்கச் சொல்லி ராஜீவ் வற்புறுத்தினார் - நான் மறுத்து விட்டேன் என்று இப்போது சந்திரசேகர் கூறுகிறார்!

அரியானாவைக் கலைத்தால் தேவிலால் தனது ஆதரவை விலக்கிக் கொள்வார்!

அதேபோல தமிழக அரசைக் கலைக்காவிட்டால்; ராஜீவும் ஜெயலலிதாவும் தமது ஆதரவை விலக்கிக் கொள்வார்கள்! எனவே இதைக் கலைப்பது சந்திரசேகருக்கு சுலபமாக இருந்தது! ஜனாதிபதியும் நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டார்; எப்படியோ ஒரு தமிழன் ஆட்சி ஒழிந்தால் சரியென்று!

இப்போது ஒன்பது வீழ்ந்து, பத்தாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடக்கப் போகும் நேரத்தில் - அதாவது எல்லாம் முடிந்த நிலையில் - சந்திரசேகரும் ராஜீவும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக் கொள்கிறார்கள்!

இது எப்படியிருக்கிறதென்றால் நண்பர் எம்.ஜி.ஆர். இறந்தபோது -

நீ மோரில் விஷம் கலந்து
கொடுத்துக் கொன்று விட்டாய்
என்று ஒரு அம்மையாரும் -
இல்லை! பொய்! நீதான் பாலில்
விஷம் கலந்து கொடுத்துக்
கொன்றுவிட்டாய்!
என மற்றொரு அம்மையாரும் - ஒருவருக்கொருவர்;

தெருச்சண்டை போட்டுக் கொண்டார்களே; அதைப்போல இருக்கிறது!

எனவே உடன்பிறப்பே; உன் உழைப்பால், வியர்வையால், கண்ணீரால், செந்நீரால் உருவாக்கப்பட்ட கழக அரசைக் கலைத்துக் கூத்தாடியவர்கள் யார் என்பதை நீ தெளிவாக அறிந்திருக்கிறாய்!

அதனைத் திசையெட்டும் எடுத்துக் கூறு!
தெருத் தெருவாகக் கூறு!
திண்ணைக்குத் திண்ணை பேசு!
நடக்கலாமா இந்த அநியாயம்? என்று கேள்!
இத்தனை சாதனை புரிந்த ஆட்சியைக்
கலைத்த கும்பல் எதுவென விளக்கு!

கலைத்தது நியாயமா?
எனக்கேள்!
நியாயமா?
நியாயமா?

இந்த வினா; வீதிகளில் வீடுகளில் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் ஒலிக்கட்டும்!

அன்புடன்,

மு. க.

15-03-1991

1704. களம் அதோ! அணி திரள்க; பணிபுரிக!

உடன்பிறப்பே!

1962-ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நேரத்தில் அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை இருபத்தி எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு - படித்துப் பார்த்தாலும் இப்போதைய நிலைமைக்கும் அது பொருத்தமானதாகவே இருக்கிறது. இதோ அண்ணாவின் அந்தக் கடிதத்திலிருந்து சில பகுதிகள்; எனக்கும் - உனக்கும் - எதிர் முகாம் அமைத்துக் கொண்டு ஏசிப் பேசுவோர்க்கும்; இன்றைக்கும் பொருந்துகிற பகுதிகள்:

என்னைப் பொறுத்தவரையில் எதிர்ப்பாளர்களாகி நம்மை விட்டுச் சென்று விட்டார்களே, அவர்களின் அளவிடற்கரிய ஆற்றலால், நாம் அழிக்கப்பட்டு போய் விடுவோம்; என்ற கவலை எழுந்ததே இல்லை! எனக்கிருந்தது எல்லாம், மன உளைச்சல்! பாசப் பிணைப்பினால் ஏற்பட்ட உணர்ச்சிகள் என் கண்களைக் குளமாக்கின, கருத்தைக் குழப்பின, செயலற்றவனாகி விட்டேன். நல்லவேளை; அவர்கள் என்னையும் கழகத்தையும்; வேகமாகவும், கடுமையாகவும், கேவலமாகவும், முன் தொடர்பு பற்றிய நினைப்புக்கே இடமில்லாத முறையில் இழிவாகவும், பேசியும் எழுதியும் இராவிட்டால், நான் நெடுங்காலம் பாச உணர்ச்சியின் காரணமாகக் குழம்பிய மனத்தினனாகத்தான் இருந்திருப்பேன்; செயலாற்றும் நினைப்புகூட நசித்துப் போயிருக்கும். ஆனால், இவை எதற்கும் இடம் இல்லாத முறையில் என் உருவிலிருந்து உரை வரையில், கொள்கையிலிருந்து கூட்டுத் தோழர்கள் வரையில் இழிவாகப் பேசி,

ஓ! இவர்கள் எதுவும் புதிய கொள்கை கூறவில்லை; மூண்டு கிடக்கும் பகையைக் கக்குகிறார்கள்; தூண்டி விட்டபடி தாக்குகிறார்கள்.

என்பதனை நான் உணரச் செய்து விட்டனர். தம்பி! இப்போது கூர்ந்து பார், தேர்தல் களத்தை! ஒருபுறத்தில் கழகம் கலகலத்துக் கிடக்கிறது - தாக்கும் சக்தியும் தாங்கும் சக்தியுமில்லை - சலித்துப் போய், களைத்துப் போய், பீதியுடன் தள்ளாடிக் கொண்டு வருகிறது; இதனை ஒரு தட்டுத் தட்டினால் கீழே வீழ்ந்து விடும் என்ற நம்பிக்கை வேகத்துடன் எல்லாவிதமான போர்க் கருவிகளையும் ஏராளமான அளவு குவித்து வைத்துக் கொண்டு, ஆடுநர், பாடுநர், எடுபிடிகள் உடன்வர, காங்கிரஸ் கட்சியின் அணிவகுப்பு!

மற்றோர் புறம் களத்தின் தன்மையைக் கண்டறிய வேண்டிய நேரத்தில் கலாம் விளைப்போரைக் கவனித்திடும் வேலையில் ஈடுபட்டிருந்த காரணத்தால் ஆற அமர ஏற்பாடுகளைச் செய்ய முடியாமல் போதுமான படைக்கலன்கள் இல்லாமல்; கோட்டைக் காவலர்களாக இருக்க வேண்டியோர் காட்டிக் கொடுப்போர்களாகி விட்டனரே என்ற கவலை குடையும் நிலையில் - மாற்றாரின் படை வரிசையில் பளபளப்பான போர்க் கருவிகள் இருக்கக் கண்டு, போதுமான படைக்கலன்களைத் தேடிக் கொள்ள நேரம் கிடைக்கவில்லையே என்ற அளவிலே நமது கழக அணிவகுப்பு!

உடன்பிறப்பே, 1962-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் தனது கடித வாயிலாக நமக்குப் படம் பிடித்துக் காட்டிய தேர்தல் களத்தின் இரு அணிவகுப்புகளும் இப்போதும் அப்படியேதான் காட்சி தருகின்றன!

அந்தச் சூழலிலும் தன்னலம் பற்றிக் கவலை கொள்ளாமல்; தனக்குக் கழகம் என்ன செய்தது என்று கேள்வி எழுப்பாமல் - நாம் கழகத்திற்கு என்ன செய்தோம் என எண்ணிப் பார்த்துச் செயலாற்றும் இரத்த நாளம் போன்ற கழக உடன்பிறப்பைப் பற்றி அண்ணா என்ன எழுதுகிறார் தெரியுமா?

பாய்ந்தோடிப் பதுங்கிக்கொள்ள, அடர்ந்த புதர் ஒரு பக்கத்தில்; இரத்த வாடையுடன் கூடிய வாயைத் திறந்தபடி உறுமிக் கொண்டு தாக்க வரும் வேங்கை ஒருபுறம்; எதிர்ப்புறத்தில் வழுக்குப் பாறை மீது காலை மிகக் கஷ்டப்பட்டு ஊன்றிக் கொண்டு, காம்பு ஒடிந்த வேல் கரத்தில் தாங்கி, தாக்கத் தயாராக நிற்கும் துணிவுமிக்க இளைஞன்!

இப்படி வர்ணிக்கிறார் உன்னை நமது அண்ணன்! நானும் அப்படித்தான் உன்னை எண்ணிக் கொண்டிருக்கிறேன் - நம்பிக் கொண்டிருக்கிறேன்!

எழுச்சியுற்ற இளைஞன்தான்
ஏறுநடை சிங்கந்தான் -
வீழ்ச்சியுற்ற தமிழகத்தின்
விடிவெள்ளி அவனேதான்;
கொழித்துவிட்ட உமிகள்தான் - இனிக்
குள்ள நரிக்கூட்டத்தார்!

எப்போதோ நான் எழுதியது இது! ஆனால் எப்போதும் உடன்பிறப்பே; உன்னைப் பற்றிய என் கணிப்பு இதுதான்!

நீ அயர்ந்துள்ளாய்!
சோர்வுற்றுக் கிடக்கிறாய்!
உன்னிடம் மிடுக்கு இல்லை!

எனவே தேர்தல் பணி ஆற்றிட மாட்டாய் என்றெல்லாம் எதிர்முகாம்கள் பேசுகின்றன! ஏடுகள் எழுதுகின்றன! ஏன்? என்ன காரணமாம்!

கழக ஆட்சியில் உன்னைக்

கவனிக்கவில்லையாம்?

அப்படிச் சொல்பவர்கள் யார்? கோள் மூட்டி உன் தோள் சீண்டுவோர் எவர்?

கிராம நலப்பணியாளர் பதவி
காவலர்கள் தேர்வு
கூட்டுறவு இயக்குனர்கள்
கூட்டுறவுத் தலைவர்கள்
அறங்காவலர்கள்

எல்லாவற்றிலும் கழகத்துக்காரனைத் திணித்து விட்டனர் என்று தெருவில் நின்று யார் கூச்சல் போடுகிறார்களோ; அவர்களேதான் உனக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று கலகமூட்டிக் கழகத்திற்குள் கசப்பும் கலகமும் விளையாதா; என ஏங்கித் துடிக்கின்றனர்!

பொதுவில் மக்களுக்கு - குறிப்பாகவும் சிறப்பாகவும் நலிந்த பிரிவு மக்களுக்கு - இரண்டாண்டு காலம் கழக அரசு நிறைவேற்றியுள்ள சாதனைகளில் உன்னைப் போன்றோரும் பயன்பெற்றிருக்க முடியும்!

விவசாய பம்ப் செட்டுகள் அனைத்துக்கும் இலவச மின்சாரம் என்பதில் பனிரெண்டு லட்சம் விவசாயிகள் பயனடைகிறார்கள் எனில் அந்தப் பட்டியலில் உன் போன்றோரும் இருக்கக்கூடுமன்றோ!

ஐநூறு கோடி ரூபாய் செலவில் பதினெட்டு லட்சம் விவசாயிகளும், கைவினைஞர்களும் பயன்பெற்றிட - பத்தாயிர ரூபாய் வரையிலான கடன்களை ரத்து செய்தது கழக அரசு என்கிறபோது அந்தப் பட்டியலில் உன்னைப்போன்ற உடன்பிறப்புகளும் இருக்கக் கூடுமன்றோ!

முப்பத்தி ஐயாயிரம் பெண்களுக்கு இந்த இரண்டு ஆண்டுகளில் திருமண உதவியாக தலா ரூபாய் ஐயாயிரம் தரப்பட்டதே; அவ்விதம் ஏற்றி வைக்கப்பட்ட விளக்குகளில் சில நூறு விளக்குகள்; உடன்பிறப்பே - உன் போன்றோர் வீடுகளிலும் ஒளிவிடுமல்லவா? அந்தப் பெண்களில் உன் தங்கையோ தமக்கையோ இருக்கக் கூடுமல்லவா?

மத்திய அரசு ஊதியத்துக்கு நிகராக மாநில அரசு அலுவலர்க்கும், ஆசிரியர்க்கும் ஊதியம் வழங்கியதோடு நெடுநாள் கோரிக்கையான போனசும் வழங்கியதே இந்த அரசு; அந்தப் பயன்பெற்ற அலுவலராகவோ - ஆசிரியராகவோ உன் அண்ணனோ தம்பியோ அல்லது நீயே கூட இருக்கலாமல்லவா?

முன்னேறிய வகுப்பென்று கூறப்பட்டு முன்னேறாமல் தடுக்கப்பட்ட கொங்கு வேளாளர் சமூகத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தும், உருது பேசும் முஸ்லிம்களையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இருபது சதவிகித ஒதுக்கீடு செய்து பெரும்பான்மையான வன்னியர், மற்றும் சீர்மரபினர் பயன்பெறுவதற்கு வழி வகுத்ததே இந்த அரசு; அந்தப் பயனாளிகளிலும், பதினாறு சதவிகிதத்தை பதினெட்டாக்கி, பிறகு அதையும் பத்தொன்பது சதவிகிதம் என்று ஆதிதிராவிடர்க்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டதே அந்தப் பயனாளிகளிலும் நீயோ அல்லது நின் சகோதர - சகோதரிகளோ இருக்கக் கூடுமல்லவா?

ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் ஆகியோர்க்குக் கல்லூரி இளங்கலைப் பட்டப்படிப்பு வரை (பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்) இலவசக் கல்வி!

ஏழை நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த எந்த சமூகத்து பெண்களாக இருப்பினும் அவர்களுக்கும் கல்லூரி இளங்கலை பட்டப் படிப்பு வரையில் இலவசக் கல்வி!

கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்த ஆதிதிராவிடர்க்கு மறுக்கப்பட்டிருந்த கல்விச் சலுகைகளையும் வழங்க முன் வந்தது!

இந்தச் சாதனைகளின் பட்டியலிலும் நீயோ அல்லது நின் குடும்பத்தினரோ இடம் பெற்றிருக்கலாமல்லவா?

எட்டாவது வரை படிக்கும் இளம் மாணவர்க்கு இலவச பஸ் பாஸ் என்ற திட்டத்தினால் பயன்பெறும் லட்சக்கணக்கான தம்பி தங்கைகளில் உன் வீட்டு செல்வங்களுக்கும் இடமுண்டல்லவா?

இரண்டு ஆண்டுகளில் ஒன்றா? இரண்டா? ஒருநாள் முழுதும் எடுத்தியம்பக் கூடிய எண்ணற்ற சாதனைகள் - அனைத்துப் பயனும் மாநில மக்களுக்குப் போய்ச் சேரும் என்கிற போது; அந்த மக்கள் சமுதாயத்தில் நாமும் ஓர் அங்கம் என்ற உணர்வு உனக்கு ஏற்படாமல் போய்விடுமா என்ன?

குதர்க்கம் பேசி உன்னைக் குத்திவிட்டுக் கோட்டைக் காவலர்களாக இருப்போரைக் காட்டிக் கொடுப்போராய் ஆக்கி விடலாமென மனப்பால் குடிப்போரின் மண்டையில் என்றும் மாறாத குடைச்சல் ஏற்படுத்தும் வண்ணம், நீயும் ஏனைய உடன்பிறப்புகளும் ஏற்றமிகு வெற்றியைத் தேர்தல் களத்தில் மட்டுமல்ல; தி.மு.கழகத்தின் நீண்ட நெடிய இலட்சியப் பயணத்திலும் பெற்றுத் தருவீர்கள் என்ற திடமான நம்பிக்கையுடன் தெம்பு குலையாமல் நிமிர்ந்து நிற்கின்றேன் நான்!

நான் தரும் இத்தனை விளக்கங்களையும் மீறி, உனக்கு ஏதாவது அதிருப்தி இருந்தால் - உள்ளூரில் எழுந்த புகைச்சலினால் மனக் கசப்பு இருந்தால் - இந்தக் கடிதம் கண்ட மாத்திரத்தில் அவற்றை அறவே ஒதுக்கித் தள்ளி விட்டு - உதவாதினி ஒரு தாமதம் என உடனே விழித்தெழுக!

நாளும் நாங்கள் உழைத்துக் கொண்டிருக்கும் போதே நமக்கு, இவ்வாறு ஒரு வேண்டுகோள் கடிதம் எழுதி, என்

மனத்தை நோகச் செய்து விட்டாயே என்று பல உடன்பிறப்புகள் சீறிப் பாய்ந்து எனக்கு மடல் தீட்டிடுவர், அதுவும் தெரியும் உனக்கு!

உரிமையின் காரணமாக நான் உன்னைக் கடிந்து கொள்ளவும் - நீ என்னைக் கடிந்து கொள்ளவும் - அதே நேரத்தில் இருவருக்கும் உள்ள கடமையாகக் கழகம் காத்திடும் பணி ஆற்றவுமான ஒரு குடும்ப பாச உணர்வு நம்மிடையே உண்டல்லவா? அந்தப் பந்தபாசத்தை எவர்தான் துண்டித்திட முடியும்? எவரால் அது இயலும்?

ஏழை எளியோர்க்காக - நலிந்த மக்களுக்காக - தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, நடுத்தர வர்க்கத்திற்காக - மகளிர் முன்னேற்றத்திற்காக - பாட்டாளிகளின் உயர்வுக்காக - விவசாயிகள், நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் மேண்மைக்காக - வீழ்ந்த தொழில் துறையை வேகப்படுத்துவதற்காக - கறுப்புப் பணமாக எங்கோ சென்று தேங்கிக்கொண்டிருந்த அரசாங்கத்திற்குரிய வருவாய்த் தொகையை அரசுக் கருவூலத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்காக - உனது உழைப்பால் அமைக்கப்பட்ட ஆட்சி; தமிழக மக்களின் வாக்குகளால் உருவாக்கப்பட்ட ஆட்சி; ஒரு நொடியில் கலைக்கப்பட்டு விட்டது!

ஆம்; உனது சுயமரியாதைக்கும் - தமிழ் மக்களின் சுயமரியாதைக்கும் - சவால் விடப்பட்டாகி விட்டது!

இந்த அறைகூவலைச் சந்திக்க; என் அடலேறே! எழுக!

காலை மிதித்தவனின் தலையை மிதிப்பேன் என்று சூளுரைப்போர் உண்டு!

ஆனால் இப்போது தலையையே மிதித்திருக்கிறார்கள்; தன்மானச் சிங்கமே! தக்க பதில் அளிக்க நின் தடந்தோளைத் தட்டிக் கிளப்பிடும் ஓசை; தருக்கர்களைத் தலைதெறிக்க ஓட வைக்க வேண்டாமோ; ஜனநாயகத் தேர்தல் களத்தில்!

அண்ணன் காட்சியளிக்கக் காட்டியுள்ளார்; தேர்தல் களத்தின் இரு அணிகளை!

எதிர் அணியில் பகைவர்கள் மட்டுமல்ல; எட்டப்பர்களும் இருக்கின்றனர் என எச்சரித்துமிருக்கிறார்!

நமது அணியின் தூய்மை - துணிவு - உறுதி - வாய்மை குறித்தும் அண்ணாவின் எழுதுகோல் உயிரோவியம் தீட்டியுள்ளது!

களம் அதோ!
அணி திரள்க!
பணிபுரிக!
வெற்றி நமதே!
வீறுநடை போடுக!
வெற்றி நமதே!

அன்புடன்,

மு. க.

16-03-1991

1705. மாதிரிப் பட்டியல் - நமது மாநிலப் பட்டியல்!

உடன்பிறப்பே!

புதுடெல்லியில் காந்தி அடிகளின் சமாதி மீது தாக்குதல்! உடைத்து நொறுக்கினர்! அணையா விளக்கை அணைத்தனர்! சமாதி ஒரு நாள் மூடப்பட்டே கிடந்தது! இதோ; சென்னை ஷனாய் நகரில் காந்தியார் சிலைக்குத் தார் பூசியுள்ளனர் - தேச விடுதலைக்காகத் தியாக வரலாறாக இருந்து - விடுதலை பெற்ற நாட்டில் உயிரையும் தியாகம் செய்த அந்த உத்தமருக்கு இப்படி ஒரு பரிசு!

இந்தியாவில் சட்டம் ஒழுங்கை மிக நன்றாகப் பாதுகாக்கிறார்கள்!

பஞ்சாப்பில் ஒரு நாளைக்கு சராசரி பத்து பேருக்கு குறையாமல் சுட்டுக்கொலை!

அங்கே தேசிய கீதம் பாட முடியாது - பாடக் கூடாது!

காஷ்மீரில் நடுவீதியிலேயே இந்திய தேசியக் கொடியைத் தீ வைத்துக் கொளுத்துவதை இல்லஸ்ட்ரேட் வீக்லி இந்த வார இதழ் படம் பிடித்து அந்த வண்ணப்படத்தை அட்டையிலேயே வெளியிட்டிருக்கிறது!

அசாமில் அமளி அடங்கவில்லை - உல்பாக்களின் கை ஓங்குகிறது - காங்கிரஸ் கட்சிக்காரர் எனக் கூறிக்கொண்டு யாரும் நடமாட முடியவில்லை! கலகத்தை அடக்கச் சென்ற இராணுவத்தினர் பெண்களிடம் நடந்துகொள்ளும் முறையை கௌகாத்தி நீதிமன்றமே கண்டித்துள்ளது!

உத்திரபிரதேசத்தில், குஜராத்தில், ஆந்திரத்தில் - தேசிய முன்னணிக் கட்சிகளின் ஆட்சி இல்லை! அந்த மாநிலங்களில் அமைதியும் இல்லை!

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று கூறி; சாலை மறியல் போர் நடத்தி; அது தோல்வியுற்ற காரணத்தால் காங்கிரசும் அ.தி.மு.க.வும் கைகோத்துக்கொண்டு; ஜனாதிபதியின் கையைப் பிடித்து கையெழுத்துப் போட வைத்து - கழக ஆட்சியை ஜனவரி 30-ந் தேதி கலைத்தார்களே; அதற்குப் பிறகு சுமார் நாற்பத்தி ஐந்து நாட்களில் சுமார் நாற்பது நிகழ்ச்சிகள் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு எவ்வளவு அழகாக இருக்கிறது என்பதற்கு; இதோ சாட்சியங் கூறுகின்றன!

1-2-91 .. சென்னை செம்பியம் காவல் நிலையத்தில் லாக்கப் கம்பியை அறுத்து ஐந்து கைதிகள் தப்பியோட்டம்.

3-2-91 .. பாகிஸ்தான் நாட்டு கடத்தல்காரர்கள் புதுக்கோட்டை அருகே 3 கோடி ரூபாய் வெள்ளிக் கட்டிகளுடன் பிடிபட்டனர்.

7-2-91 .. தூத்துக்குடியில் பட்டப்பகலில் இரட்டைக் கொலை.

7-2-91 .. சத்தியமூர்த்தி பவனில் வாழப்பாடி உதவியாளர் கண்ணனுக்கு கத்திக்குத்து.

8-2-91 .. பண்ருட்டியில் போலீஸ் லாரி டிரைவர்கள் மோதல் - துப்பாக்கிச் சூடு - ஒருவர் காயம்.

9-2-91 ..வாலிபர் கொலை - சாக்கு மூட்டையில் பிணம் மிதந்தது.

10-2-91 .. திருவள்ளூர் அருகே பாங்கியில் துணிகர கொள்ளை.

13-2-91 ..வருமான வரி அதிகாரிகள் போல நடித்து சென்னை நுங்கம்பாக்கம் மில் அதிபர் வீட்டில் துப்பாக்கி முனையில் நகை கொள்ளை.

13-2-91 .. ரெயில்வே ஊழியரிடம் வழிப்பறி.

14-2-91.. எழும்பூர் ரெயில்வே போலீஸ் நிலையத்தில் வாலிபரை தலைகீழாகத் தொங்கவிட்டு சித்ரவதை - உயர்நீதி மன்றத்தில் தாய் புகார் மனு.

15-2-91 ..7 லட்ச ரூபாய் மதிப்புள்ள வெள்ளிக் கட்டிகள் பறிமுதல் - மூன்று பேர் கைது.

16-2-91 ..மனைவி, குழந்தைகளை கட்டிப் போட்டு விட்டு - சென்னை மைலாப்பூரில் தொழில் அதிபர் வீட்டில் கொள்ளை.

அதே நாளில் .. அண்ணா நகர் மேற்கு டி.வி.எஸ். காலனியில் எல்லையன் வீட்டில் நகைகள் கொள்ளை.

அதே நாளில் .. கூடுவாஞ்சேரியில் சீனிவாச ராகவன் என்ற ஓய்வுபெற்ற அதிகாரியின் வீட்டில் கொள்ளை.

17-2-91.. ஆவடி டாங்கி தொழிற்சாலை அதிகாரி ரஞ்சித் சிங் ராணா தலையில் அம்மிக் குழவியால் அடித்துக் கொலை.

18-2-91 .. சென்னை சூளை - ரேஷன் கடையில் இருந்து கடத்தல் - பத்தாயிரம் கிலோ பதுக்கல் அரிசி பறிமுதல்.

19-2-91.. சென்னை - சூளைமேட்டில் சிவா என்ற சிவலிங்கம் பணத் தகராறு காரணமாக வெட்டிக் கொலை.

20-2-91.. சென்னை அம்பத்தூரில் லாரி டிரைவர் அடித்துக் கொலை - பிணத்தை மின்கம்பத்தில் தொங்க விட்டனர்.

22-2-91 .. ஆவடியில் பூட்டை உடைத்து ஒன்றரை லட்ச ரூபாய் திருட்டு.

22-2-91 .. ஆவடியில் குமார் என்பவரது மனைவி தாரணியின் விரல்கள் துண்டிப்பு.

25-2-91 .. துரைப்பாக்கம் அருகே தொழிற்சாலையில் காவல்காரர் கொலை - வேனில் வந்து மின் கம்பிகள் கொள்ளை.

அதேநாளில் .. கலெக்டர் அலுவலகத்தில் தஞ்சை கலெக்டர் வெட்டப்பட்டார்.

27-2-91 .. தாம்பரத்தில் அடுத்தடுத்து பத்து கடைகளில் திருட்டு.

28-2-91 .. ராமேஸ்வரம் மீனவர் நடுக்கடலில் சுட்டுக் கொலை - சிங்கள கடற்படை வெறிச்செயல்.

அதேநாளில் .. வியாசர்பாடி அடுக்குமாடி வீட்டில் கழுத்தை நெரித்து ஆசிரியை கொலை - நகை கொள்ளை.

2-3-91 .. ஜனதா தளத் தொண்டர்கள் மீது தடியடி. நேதாஜி மண்டையை பிளக்க தடியால் அடி.

4-3-91 .. சென்னை முகப்பேரில் அடுத்தடுத்து ஐந்து இடத்தில் ஒரே சமயம் திருட்டு - கத்தி முனையில் துணிகரம்.

5-3-91 .. தஞ்சை கரந்தையில் பெண் கொலை - நகை கொள்ளை.

10-3-91 .. சென்னை கிண்டியில் உள்ள நேரு நகரில் பயங்கர கோஷ்டி மோதல் - குடிசைக்கு தீ வைப்பு - ஏழு பேர் காயம்.

11-3-91 .. சென்னையில் தொழில் அதிபரின் மகள் கல்லூரி மாணவி ஆண்டாள், மற்றும் சத்தியா ஆகியோர் கடத்தல்.

12-3-91 .. அண்ணா சாலையில் பட்டப் பகலில் நடந்து சென்ற பெண் கடத்தல் - மூன்று பேர் வந்து காரில் தூக்கிப் போட்டு போனார்கள்.

அதேநாளில் .. பஸ்சுக்குள் கண்டக்டர் - போலீஸ்காரர் அடிதடி - கைகலப்பு.

12-3-91 .. திருச்சி துறையூரை அடுத்த மேலக் குண்ணுப்பட்டியில் சொத்து தகராறு காரணமாக சிறுவன் கொலை.

14-3-91 .. கோவை அருகே மேட்டுப்பாளையம் அருகில் - ஓடும் லாரியில் கிளீனர் சுட்டுக் கொலை.

14-3-91 .. அடையாறு பொறியாளர் வீட்டில் கொள்ளை.

அதேநாளில் .. சென்னை அருகே சிட்லபாக்கத்தில் பூட்டை உடைத்து கத்தி முனையில் நகைகள் கொள்ளை.

15-3-91 .. ஆயிரம் விளக்கில் மற்றொரு தொழில் அதிபர் மகள் கடத்தல்.

15-3-91 .. சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் நடு ரோட்டில் 21 வயது பெண்ணை கட்டிப் பிடித்து முத்தம்.

பார்த்தாயா பட்டியலை! குடியரசுத் தலைவர் ஆட்சியிலும் மற்றும் தேச பக்த சிகாமணிகள் நடத்தும் ஆட்சிகளிலும் சட்டமும் ஒழுங்கும் எவ்வளவு அழகாகப் பாதுகாக்கப்படுகின்றன என்பதற்கு இந்திய நாட்டு அளவில் இன்னும் பெரிய பட்டியலே உண்டு!

இன்றைய கடிதத்தில் நான் தந்துள்ளது ஒரு மாதிரிப் பட்டியல்! அதுவும் நமது மாநிலப் பட்டியல்!

அன்புடன்,

மு. க.

18-03-1991

1706. புயலைக் கீறிக் கொண்டு புறப்படுக!

உடன்பிறப்பே!

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கும் தமிழகம், புதுவை போன்ற மாநிலங்களில் சட்டப் பேரவைத் தேர்தலுக்கும் அரசியல் கட்சிகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

விஷவாயுப் புகழ் போபாலில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தை ராஜீவ் காந்தி அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்.

இந்தியாவில் ஜனநாயக சுவாசத்தையே திணற வைத்துக் கொண்டிருக்கும் விஷக்காற்றாகக் காங்கிரஸ் (இ) கட்சி விளங்குகிறது என்பதற்கு ஒரு மறைமுகமான எடுத்துக்காட்டுதான் பல்லாயிரவர் வாழ்வைப் பொசுக்கிய போபாலில் அந்தக் கட்சியின் தேர்தல் பிரச்சார ஆரம்ப உற்சவம்!

நமது தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்புத் தேர்தல் பிரச்சாரத் தொடக்கத்திற்கான கொடியேற்று விழா, பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவில் நடைபெற்றது. தேசிய முன்னணியில் ஆரம்ப காலந்தொட்டு அங்கம் வகிக்கும் தி.மு.கழகத்தின் சார்பில் நானும் அழைக்கப்பட்டிருந்தேன். என்னுடன் தம்பி கோபால்சாமியும் வந்திருந்தார். லோக்நாயக் எனப் போற்றப்படும் ஜெயப்பிரகாஷ் நாராயண் எந்தக் காந்தி மைதானத்தில் எந்த நாளில் இந்தியாவில் முழுப் புரட்சிக்கான குரல் கொடுத்தாரோ; அதே இடத்தில் அதே நாளில் ஏற்றப்பட்ட தேர்தல் தொடக்கப் பிரச்சாரக் கொடி, வெற்றிக் கொடியாக விண்ணோக்கி உயர்ந்த காட்சி, கண்கொள்ளாக் காட்சி!

பீகார் முதல்வரும் - தமிழக ஆட்சிக் கலைப்புக்காக பீகார் கவர்னர் உரையிலேயே கண்டனக் குறிப்பை இணைத்தவருமான எனது அருமை நண்பர் லல்லுபிரசாத் யாதவ் அவர்களின்

உழைப்பின் அடையாளமாகவும் திறமையின் சான்றாகவும் பாட்னா நிகழ்ச்சி அமைந்தது.

சமூக நீதி -

ஜனநாயகப் பாதுகாப்பு -

பிற்படுத்தப்பட்டோர்,

தாழ்த்தப்பட்டோர்

மற்றும் சிறுபான்மை

மக்களின் நல உரிமை -

மத்தியில் குவிந்துள்ள

அதிகாரங்களை

மாநிலங்களுக்குப் பகிர்ந்தளித்தல் -

இப்படிப் பல முற்போக்கான கொள்கைகளைச் செயல்படுத்தும்

நிலையான ஆட்சி

அமைந்திட வேண்டுமென்றும்; அந்த நிலையான ஆட்சி தேசிய முன்னணி ஆட்சியாக இருந்தால் மட்டுமே இவற்றை நிறைவேற்றிட இயலுமென்றும்; கடந்த காலத்தில் இவற்றை நடைமுறைப்படுத்த முற்பட்ட போதுதான் நிலையற்ற தன்மையை சில ஆதிக்க சக்தியினர் உருவாக்கினார்கள் என்றும்; இனி அதற்கு இடமேயில்லாமல் - வாக்காளர் பெருமக்கள் தேசிய முன்னணி அரசை மிகப் பெரும்பான்மை பலத்துடன் உருவாக்க வேண்டுமென்றும் பாட்னாவில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அந்த வேண்டுகோளின் விரிவாக்கமாக; டெல்லியில் மறுநாள் (19-3-91) நடைபெற்ற தேசிய முன்னணியின் மேல்மட்டக் குழுவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தேர்தலில் மக்களைக் கவரலாம் என்ற நினைப்புடன் பாரதீய ஜனதாக் கட்சியினர் மீண்டும் ராம்! ராம்! என்று முழங்கத் தொடங்கியுள்ளனர். அதாவது அவர்களுடைய தேர்தல் கோஷம்; ராம், ரொட்டி என்பதாகும்!

வணங்குவதற்கு ராமர்!
வயிற்றுக்கு ரொட்டி!

ரொட்டி கொடுத்து வயிற்றுப் பசியை அடக்கி விட்டால் மட்டும் போதுமா? பசியடங்கியதும் மக்கள், தமக்குள் மதப்பகையை வளர்த்துக் கொண்டு - ஒருவரையொருவர் தாக்கி ரத்தம் சிந்த வேண்டாமா? அதனால்தான் ரொட்டியை முதலில் சொல்லாமல் - ராம் என்பதை முதலில் சொல்கிறார்கள்! ராமர் கோயில் பாபர் மசூதி தகராறை மீண்டும் இழுத்துவிட்டால்; அதில் சிந்துகிற ரத்தத்தில் ரொட்டியை நனைத்துச் சாப்பிடலாமல்லவா? ரொட்டியே கிடைக்காவிடினும் குடிப்பதற்கு ரத்தமாவது தாராளமாகக் கிட்டுமே என்ற எதிர்பார்ப்பு!

ரதயாத்திரை என்ற பெயரால் மதயாத்திரை நடத்தி; சகோதரர்களாக வாழும் இந்து, முஸ்லிம், கிறிஸ்துவ, சீக்கிய மதத்தினரிடையே துவேஷத் தீயை வளர்ப்பதற்கான யாக குண்டங்களைத் தயார் செய்வதே பாரதீய ஜனதாவின் இலட்சியமாக ஆகிவிட்டதை மக்கள் தெளிவாகவே உணர்ந்து கொண்டுவிட்டார்கள்! எனவே அவர்கள், அந்தக் கட்சிக்கு சரியான தீர்ப்பு வழங்குவார்கள்!

இராமன் அயோத்தியில் மட்டுமல்ல;

இராமன் இருக்கும் இடமெல்லாம்

அயோத்திதான்!

என்று அந்த மக்கள் அவர்களுக்கு விளக்கமளித்து விரட்டியடிக்கத் தயாராகி விட்டார்கள்!

உடன்பிறப்பே; இந்திரா காங்கிரஸ் கட்சி தனது தேர்தல் கோஷமாக நிலையான ஆட்சி என்று கூவத் தொடங்கியுள்ளது!

நேருவின் மகளே வருக!

நிலையான ஆட்சி தருக!

என்று நான்கூட பத்து ஆண்டுகளுக்கு முன்பு சொன்னேன்!

நிலையான ஆட்சி என்பது மத்தியிலே அமையும் ஆட்சியை மட்டும் குறிப்பதல்ல! மாநிலங்களில் அமையும் ஆட்சிகளையும்; தனக்குப் பிடிக்காத மாற்றுக் கட்சி ஆட்சிகளாக இருப்பினும் - அவற்றையும் மதித்து - அந்த ஆட்சிகளின் நிலைத்த தன்மையையும் போற்ற வேண்டும் என்பதையும் குறிப்பதாகும்!

1976-ல் கழக ஆட்சியை இந்திரா காந்தி அம்மையார் கலைத்தார்!

1991-ல் கழக ஆட்சியை சந்திரசேகர் கலைத்தார்! இல்லை - இல்லை - அவர் கையில் பேனாவைக் கொடுத்து - அவர் தலைக்கு மேல் ஆதரவு என்ற வாளைத் தொங்க விட்டு; ராஷ்ட்ரபதி பவனமெனும் புனித ஆலயத்தின் ஆசியுடன் - ஒரு புண்யவானும் (?), ஒரு புண்யவதியும் (?) நிலையான ஆட்சியை கவிழ்க்கும்படி செய்தனர்!

அசாம் மாநில ஆட்சி நிலையாகத்தானே இருந்தது! அதைக் கலைக்கச் சொன்னது ராஜீவ் தானே!

முதலில் நிலை குலைந்து - மீண்டும் நிலையான ஆட்சிக்குரிய பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆளுநரிடம் உறுதி கூறிய பிறகும்; பாண்டிச்சேரியில் அமைந்தால் காங்கிரஸ் அரசு - இல்லையேல் கலைப்பு - என்று முடிவெடுத்து சந்திரசேகரை செயல்பட வைத்தது யார்? ராஜீவ் அல்லவா? ஜெயலலிதா அல்லவா?

இரண்டு போலீஸ்காரர்கள் வேவு பார்த்தார்கள் என்பதற்காக; அரியானா, மாநில அரசைக் கலைக்குமாறு ராஜீவ் வற்புறுத்தினாரே; மாநிலங்களில் நிலையான ஆட்சி இருப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாத இவரா மத்தியில் நிலையான அரசைப் பற்றி பேசுவது?

தனது சொந்தக் கட்சி மாநிலங்களிலேகூட ராஜீவ் காந்தியின் கையிருப்பு காட்டப்பட்டு; ஆத்திரத்தில் சென்னா ரெட்டியும், கர்நாடகத்தில் வீரேந்திர பாட்டீலும் தூக்கி எறியப்பட்டு - அந்த மாநில ஆட்சிகளின் நிலை குலைந்த தன்மைக்கு இப்போது காங்கிரஸ் கட்சியே காரணமாக ஆகி விடவில்லையா?

காங்கிரஸ் கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கிறது; இனி அதைக் கரை சேர்க்க முடியாது என்று காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான கனிகான் சௌத்திரியே வாக்குமூலம் வழங்கியுள்ளாரே!

உடன்பிறப்பே; வடபுலத்து மாநில மக்கள் கடந்த தேர்தலைவிட இந்தத் தேர்தலில் மிகத் தெளிவான தீர்ப்பு வழங்கத் தயாராகி விட்டார்கள்!

மதப் பகை மூட்டத் துடிக்கும் கட்சிகளுக்கோ; அல்லது ஜனநாயகப் படுகொலை செய்தும் - செய்வதற்குத் தூண்டியும்

சர்வாதிகாரப் பாதையில் நடக்கும் கட்சிகளுக்கோ; வடபுலத்து மக்கள் வாக்களிக்கப் போவதில்லை!

நிலையான ஆட்சி அமையுமா என்ற தேவையற்ற சந்தேகத்துடன் தென்னகத்து மக்கள் வாக்களித்த காரணத்தால் - திரு. வி.பி. சிங் அவர்கள் நாடாளுமன்றத்தில் போதுமான பெரும்பான்மை பெறமுடியவில்லை!

இந்தத் தேர்தலில் தென்னகத்தின் தீர்ப்பும் தெளிவானதாகவும், திட்டவட்டமாகவும் இருந்திடல் வேண்டும். அதிலும் குறிப்பாகத் தமிழகம்; நாடாளுமன்றத் தேர்தலிலும் - சட்டப்பேரவைத் தேர்தலிலும்; நமது அணிக்குப் பெரும் வெற்றியைக் குவித்துப் பெருமை பெற வேண்டும்!

என் தங்கம் நிகர் உடன்பிறப்பே; தன்னலம் மறந்து; தமிழர் நலம் நினைத்து - தளராது உழைத்திடின் - வெற்றி நம் பக்கமே!

வெற்றி என்பது பூஞ்சோலையின் கொடியிலிருந்து கிளம்பி, தென்றலிலே மிதந்து வந்து, நம் கரத்தில் வந்து தவழக் கூடிய மலர் அல்ல! அந்த மலர் பறிக்க - புயலைக் கீறிக்கொண்டு; நாம் செல்ல வேண்டும் பூந்தோட்டத்திற்கு!

ஆர்வம் -

ஆற்றல் -

உழைப்பு -

இவற்றால் மட்டுமே பெறக்கூடிய மணமலர்தான் அந்த வெற்றி மலர்!

அந்த மலர் கிட்டும் என்ற ஊக்கத்தையும் நம்பிக்கையையும் உன் பாசமிகு விழிகள் மட்டுமல்ல; பாட்னாவில் கூடிய இளைஞர் பட்டாளத்தின் நடையும்கூட எனக்கு வழங்கிடத் தவறவில்லை!

அன்புடன்,

மு. க.

21-03-1991

1707. வெற்றி! வெற்றி! வெற்றியன்றி வேறில்லை!

உடன்பிறப்பே!

கழகப் பணி ஆற்றுவது என்றாலே எனக்கோர் உற்சாகம் பிறக்கும் - தெம்பு வரும் - களைப்பு பறந்து போகும் என்பதை நீ அறிவாய்!

ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும்கூட, காலை எழுந்ததும் உடன்பிறப்புக் கடிதம் - பிறகு பார்வையாளர் சந்திப்பு - அதன்பிறகு வீட்டிலும், கோட்டையிலும் பொதுமக்கள் குறை அறிதல் - அதைத் தொடர்ந்து தலைமைச் செயலகத்தில் நிர்வாகப் பணிகள்; அதிகாரிகளுடன் ஆலோசனை - பிற்பகல் இரண்டு மணிக்கு மேல் மதிய உணவு, மாலையில் அரசு அல்லது பொதுவான நிகழ்ச்சிகள், இரவு ஏழு மணியிலிருந்து அண்ணா அறிவாலயத்தில் இரவு ஒன்பது மணி வரையில் உன்போன்ற கழக உடன்பிறப்புகளை சந்தித்து உரையாடுதல், குறை அறிதல், கழகப் பணி கவனித்தல் - இப்படித் தொடர்ந்ததே என் தொண்டு!

இப்போது அரசுப்பணிகள் இல்லையெனினும் அதை மிஞ்சும் வண்ணம் அரசியல் பணிகள்!

தேர்தல் வந்தால் பதவியில் அமரலாம் என்ற பரபரப்புடனும் - பணம் திரட்டலாம் என்ற நப்பாசையுடனும் அந்த நேரத்தில் மட்டும் கட்சி அலுவலகத்திற்கு வருவதும், தொண்டர்கள் குடும்பங்களுக்கு அக்கறையுடன் உதவுவது போல் நாடகமாடுவதும்; சில தலைவர்களுக்கு சில கட்சிகளில் கைவந்த கலை!

நான் அப்படிப் பழகியவன் அல்லவே - திருவாரூரில் கூட்டங்களில் கலந்து கொள்ள தலைவர்களை அழைத்து வந்த தொண்டன்! அந்தக் கூட்டங்களுக்கான விளம்பரச்

சுவரொட்டிகளைச் சுவர்களில் பசைதடவி ஒட்டிய கழக ஊழியன்! பேச வருகிற தலைவர்களுக்கு மேடை போட்டுக் கொடுத்த செயல்வீரர்களில் ஒருவன்! நானே முன்னின்று திருவாரூரில் நடத்திய தி.மு.க. மாவட்ட மாநாட்டுக்கு இரவெல்லாம் கண்விழித்துத் தொண்டர் படையில் ஒருவனாக இருந்து தெருக்களில் தோரணம் கட்டி, பதாகைகள் அமைத்த சாதாரணத் தொண்டன்!

தேர்தல் வருவதற்கான வெளிச்சம் தெரிந்தால் மட்டுமே வெளியே தலைநீட்டுவது என்றில்லாமல் என்றுமே என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளின் இன்பதுன்பங்கள் கண்டு; முறையே மகிழ்ந்தும், துடித்தும் போகக் கூடிய மன இயல்பு படைத்தவன் நான்!

ஒளியில் நடைபெற்ற நமது பயணம்; இருள் வந்தமைக்காகத் தடைப் பட்டதில்லை! ஒட்டகம் படுத்துவிட்டதே என்று கவலைப்படாமல் கால் கொப்பளிக்கும் பாலைவனத்திலும் நடந்து செல்லும் மனஉறுதி மிக்க பயணியைப்போல நாம் இருக்கிறோம் என்பது நாடறிந்த உண்மை!

அந்த நாம் நாள்தோறும் இப்போது அண்ணா அறிவாலயத்தில் சந்திப்பது; தேர்தலில் வேட்பாளர்களின் விண்ணப்பங்களை ஆய்வு செய்யும் வேலைக்காக மட்டுமல்ல!

பதவி; வரும் - போகும்! நம் வரலாற்றில் அவ்வாறு வந்ததும் உண்டு; போனதும் உண்டு! ஆனால் நிலையானது நமது இலட்சியம்! அய்யா அவர்களும், அண்ணா அவர்களும் நமது இதயத்தில் பதிய வைத்த கொள்கை உறுதி! திராவிட இனமான உணர்வு!

இந்தத் தொகுதியில் போட்டியிட்டே தீர வேண்டுமென ஒற்றைக்காலில் நிற்பவர்களா அண்ணா அறிவாலயத்திற்கு வருகிறார்கள்! இல்லை - இல்லவே இல்லை! அப்படி யாராவது, இருப்பினும் அந்த எண்ணிக்கை விரல்விட்டு எண்ணக்கூடியதாகவே இருக்கும்!

மிகப்பலரோ கழகம் பெற்றுள்ள வலிவுபற்றிக் கூறிட வருகிறார்கள். மேலும் வலிவு பெற ஆற்றிட வேண்டிய செயல்கள் குறித்துக் கருத்துப் பரிமாற்றத்திற்கென வருகிறார்கள்!

அவர்களில் தொண்ணூறு சதவிகிதத்தினரை நேர்காணலின் போது; நானோ நமது பேராசிரியர் அவர்களோ; தம்பிகள் முரசொலி மாறன், வை. கோபால்சாமியோ விபரமறிவதற்கான வினாக்கள் விடுக்கும்போது;

எத்தனை ஆண்டுகளாகக் கழகத்தில் இருக்கிறீர்கள்? எனக் கேட்கிறோம்! பதில் கூறுகிறார்கள்!

போராட்டங்களில் கலந்து கொண்டது உண்டா? சிறை சென்றது உண்டா? எனக் கேட்கிறோம்!

இந்தக் கேள்வியைக் கேட்கும் நாங்கள் சிறைவாசமோ, அடக்குமுறைகளோ காணாதவர்களாக இருந்திருந்தால் - ஆய்வுக்காக எதிரே வந்து அமர்ந்திருப்போர் எம்மீது ஒரு குறும்புப் பார்வையை வீசுவர்! அந்தப் பார்வையில் நீ எத்தனை முறை போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றுள்ளாய்? என்ற கேலி மின்னலிடும்! ஆனால் நாங்கள் ..... எத்தனையோ விதமான சோதனைகளையும் வேதனைகளையும் விழுப்புண்களாகவும் தியாகத் தழும்புகளாகவும் ஏற்றுக் கொண்டவர்கள் என்ற பெருமிதத்துடன் தான் அந்தக் கேள்வியைக் கேட்கிறோம்!

பத்து முறை சிறை சென்றவர் -

ஏழு முறை சிறை சென்றவர் -

என்ற பதில்கள் வருகின்றனவே தவிர; பத்து லட்சம் செலவழிக்கக் கூடிய பண்ணைக்காரர்கள் - ஏழு லட்சம் அள்ளி வீசக்கூடிய சீமான்கள், பூமான்கள், மிட்டாக்கள், மிராசுகள் என்று எவரும் கூறிடவில்லை! இருந்தால் அல்லவா அவ்வாறு கூறிட!

மும்முனைப் போராட்டத்தில்

தண்டனை பெற்றோர் -

கல்லக்குடி போராட்டத்தில்

கடுங்காவல் பெற்றோர் -

மொழிப் போரில்

சிறை புகுந்தோர் -

இலங்கைத் தமிழ் இனத்துக்காக

சிறைகளில் அடைக்கப்பட்டோர் -

இப்படிக் கேள்வி கேட்போரும் - பதில் அளிப்போரும் ஒரே சாதியாக - ஆம்; தியாக பரம்பரையாக; உலவிடும் இடமாக அண்ணா அறிவாலயத்தில் ஆய்வு நடத்துமிடம் திகழ்கிறது!

1977-ல் முப்பது சதவிகித வாக்குகளை மட்டும் பெற்று அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததையே மறந்துவிட்டு 1989-ல் முப்பத்தி நான்கு சதவிகித வாக்குகளைப் பெற்று 145 கழக சட்டமன்ற உறுப்பினர்களுடன் அமைந்த கழக ஆட்சியைக் கலைத்த சதிகாரர்கள் தமிழ் மக்களுக்கும்; உடன்பிறப்பே - உனக்கும் விடுத்துள்ள அறைகூவலை எதிர்கொள்வதற்காகப் பீடுநடை போட்டுவரும் உன் போன்றோரின் நிமிர்ந்த நெஞ்சைக் காணுகிறேன்! கம்பீரப்பார்வை உமிழும் திருமுகம் காணுகிறேன்!

நமது அடிப்படைக் கொள்கைகளைப் போராட்டத்தின் வாயிலாகவே வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற நிலைக்கு மாறாக; ஆட்சிப் பொறுப்பை ஒரு நல்வாய்ப்பெனக் கொண்டு நிறைவேற்றிட முடியும் என்பதைக் கடந்த கால அனுபவத்தில் உணர்ந்தமையால்; மீண்டும் அந்த முயற்சியில் ஈடுபடுகிறோம் அவ்வளவுதான்!

திராவிட இயக்கக் கொள்கைகளையும், திட்டங்களையும் ஆட்சி மூலம் நடைமுறைப்படுத்துவது அண்ணா வகுத்த வழி!

அந்த வழியும் வகையும் கிடைக்காத பட்சத்தில் - இருக்கவே இருக்கிறது பெரியார் வகுத்த வழி!

தேர்தலில் நின்று திராவிட இயக்கக் கொள்கைக்கு வலுவூட்டுவது அண்ணாவின் திட்டம்!

தேர்தலில் நிற்காமலே திராவிட இயக்கக் கொள்கைகளுக்கு வெற்றி ஈட்டுவது பெரியாரின் திட்டம்!

பெரியாரும் அண்ணாவும் வகுத்தளித்த கொள்கைகளை அண்ணா வழியில் நடைமுறைப்படுத்தும் வாய்ப்பு கிடைப்பினும்; அல்லது பெரியார் வழியில்தான் நடைமுறைப்படுத்த வேண்டிய நிலை அமைந்திடினும் - கிடைக்கும் வாய்ப்பு எதுவோ அதற்கேற்பச் செயல்படும் இலட்சியச் செல்வங்களைத்தான் ஆய்வுக்காக நடைபெறும் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கண்டு மகிழ்கிறேன்!

கடந்த தேர்தலில் இரண்டு மூன்று கட்சிகள் பெற்ற வாக்குகளைக் கூட்டிப்பார்த்து; அந்தக் கணக்குப்படியும் - வேண்டுமென்றே திட்டமிட்டு சில ஏடுகள் சிலரைத் தூக்கி நிறுத்தி பூதாகரமாகச் சித்தரிக்கும் பிரச்சார யுத்தியின்படியும் - தி.மு.கழகம் இந்தத் தேர்தலில் தோற்றுவிடும், துவண்டுவிடும், எனக் கர்வம் கொண்டு பேசுகிறவர்களின் கூற்றுக்குச் சற்றும் அஞ்சாமல் ஒவ்வொரு தொகுதியிலும் பல உடன்பிறப்புகள் வேட்புமனுவுக்கான ஆய்வுக்கு வருவதைக் கண்டு; எஃகு அன்றோ இந்த இயக்கமென எண்ணி இதயம் பூரித்துப் போகிறது!

1977-ல் 30 சதவிகிதம் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. கட்சி; 1980-ல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலிலே புதுவை உள்ளிட்ட 40 நாடாளுமன்றத் தொகுதிகளில் 38 இடங்களில் தோற்று இரண்டே இடங்களை மட்டுமே பெற்றது!

அடுத்து சில மாதங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில்; அதே கூட்டணிகள்தான் மோதின; ஆனால் அ.தி.மு.க. ஆட்சி அமைத்தது!

1984-ல் பெரும் அனுதாப அலை வீசியபோது தமிழகத்தில் மீண்டும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது!

ஆனால் 1986-ல் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி வாகை சூடவில்லை. மாறாக தி.மு.க.வும் தோழமைக் கட்சிகளும்தான் பெரும்பான்மையான இடங்களில் வென்றன.

1989-ல் சட்டமன்றத் தேர்தலில் ஆட்சியை அமைத்த கழகம் - பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் தோல்வியைச் சந்தித்தது.

ஏறத்தாழ கேரளத்திலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கூட்டணிக்கு இதே நிலைதான் 1989 நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்டது.

எனினும் இப்போது கேரளத்தில் நடந்து முடிந்த மாவட்ட கவுன்சில் தேர்தலில் மார்க்சிஸ்ட் அணி மிகப்பெரும் வெற்றிபெற்று; காங்கிரசுக்குப் படுதோல்வியை வழங்கியிருக்கிறது.

இப்படி அவ்வப்போது எழும் சூழல்; அரசியல் நிலவரத்திற்கு ஏற்ப - வாக்காளர்களின் தீர்ப்பு அமைகிறது என்பதை

உணர்ந்துள்ள காரணத்தாலும்; எந்த நிலையிலும் உறுதி தளராதவர்கள் என்ற காரணத்தாலும் வெற்றி முரசு கொட்டிட நமது வீரமிகு அணிவகுப்பு, தினந்தோறும் திரள்கிறது அண்ணா அறிவாலயத்தில்!

அதனால்தான் சொல்கிறேன்; நாம் இந்தத் தேர்தலில் பெறப் போகிற வெற்றி - வெறும் பதவிக்கான வெற்றியல்ல! பகுத்தறிவு அடிப்படையில் முழங்கிவரும் நமது முற்போக்குக் கருத்துகளுக்கும் திட்டங்களுக்கும் செயலாக்கம் தருவதற்கான வெற்றியாகும்! பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மற்றும் சிறுபான்மை மக்கள் நடுத்தர மக்களுக்கான சமநீதி வழங்கி நேர்மையான நிர்வாகம் நடத்திட வகை செய்யும் வெற்றியாகும்!

தமிழ் இனத்துக்கும் அதன் சுயமரியாதைக்கும் காவல் அரணாக இருக்கும் உண்மையான திராவிட இயக்கத்துக்கு விடப்பட்டுள்ள சவாலை; சந்தித்து, முனைமழுங்க வைத்து, அறவே முறியடிக்கும் வெற்றியாகும்!

அந்த வெற்றியைப் பெற்றிட வீரத்திருமுகம் காட்டி; பட்டாளத்து சிப்பாய் நடைபோடும் என் அன்பு உடன்பிறப்பே - உன்னை நான் வாழ்த்துகிறேன்! இந்த எளிய தொண்டனை உன் இனிய தலைவனாக நீ ஏற்றுக் கொண்டதற்கு; என்னையே உனக்கும் இந்த சமுதாயத்திற்கும் ஒப்படைத்துக் கொண்டிருக்கிறேனே என்பதை நினைத்துப் பெருமிதம் கொள்கிறேன்!

இந்த உணர்வே நம்மை நாடிவரும் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கட்டும்! வெற்றி! வெற்றி! வெற்றியன்றி வேறில்லை!

அன்புடன்,

மு. க.

22-03-1991

1708. நடுவர் மன்றம்; நமது நியாயத்தை உணரட்டும்!

உடன்பிறப்பே!

கடந்த பிப்ரவரி திங்கள் 24-ஆம் நாளன்று கர்நாடக மாநிலத்தில் உள்ள குடகனாறுப் பகுதிக்குச் சென்றிருந்தேன். அப்போது அந்த மாநிலத்தில் உள்ள ஏடுகளில் காவிரி நடுவர் மன்றக் குழுவினர் காவிரியாற்றுத் தோற்றம் முதல் அது பாய்ந்து வரும் பல்வேறு இடங்களை நேரில் கண்டறிவதற்காக வந்திருப்பதாகவும் - கிருஷ்ணராஜ சாகர் அணைப் பகுதியில் பிருந்தாவனம் ஓட்டலில் தங்கியிருப்பதாகவும் செய்திகள் வந்திருந்தன. நடுவர் மன்றக் குழுவினர் செல்லுமிடங்களில் எல்லாம் விவசாயிகள் கூட்டம் கூட்டமாக நின்று நடுவர் மன்றத்தினரிடம் காவிரி நீர்ப் பிரச்சினை குறித்துத் தங்கள் கருத்துக்களை வெளியிடுகிற புகைப்படங்கள் நாளிதழ்களில் வெளிவந்திருந்ததையும் கண்டேன்.

நான் சென்றிருந்த குடகுப் பகுதியில்தான் காவிரி பெண் பிறந்து; புகுந்த வீடாகத் தமிழகத்தை ஆக்கிக் கொண்டு - பூம்புகார் வரை சென்று புன்னகை மாறாமல் அவளும் வாழ்ந்து; தமிழக விவசாயிகளையும் பேணிப் பாதுகாத்து வந்தாள் - நீண்ட நெடுங்காலமாக!

பிறந்தகத்து வளமும் குறையாமல்; புகுந்த வீட்டு வாழ்வும் கெடாமல் இருக்க 1892-ஆம் ஆண்டிலும் - 1924-ஆம் ஆண்டிலும் ஒப்பந்தங்கள் மூலம் வழி வகைகள் காணப்பட்டன.

1924-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தை 1974-ஆம் ஆண்டு உபரி நீரைப் பொறுத்து கலந்து பேசி, 1924-ஆம் ஆண்டின் ஒப்பந்த அடிப்படை மாறாத நிலையில் ஒப்பந்தப் பிரிவின் 10 (I) முதல் 10 (III) வரையிலான விதிகள் நிலையானவை என்ற

உத்திரவாதத்துடன் பரிசீலிக்கலாம் என்று தெளிவாகவும், திட்டவட்டமாகவும் குறிப்பிட்டிருந்தும் கூட அந்த 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்று கர்நாடக மாநில அரசின் சார்பில் வாதம் செய்வதை, தமிழ்நாடு அரசு எப்போதுமே ஏற்றுக்கொள்ளவில்லை. டெல்டா பகுதியில் உள்ள பழைய ஆயக்கட்டுகளின் பாசனத்திற்கு வழங்கப்பட்ட உத்திரவாதத்தை திரும்பப்பெற்றுக் கொள்ள கர்நாடகம் திட்டமிட்டுப் பல அணைக்கட்டுகளை நிறுவிட முன்வந்த செயல்; தமிழக அரசினால் மத்திய அரசுக்கு 1968-ல் அண்ணா முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்து சுமார் இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து எடுத்துக் கூறப்பட்டும்கூட, நல்ல முடிவு எதுவும் ஏற்படவில்லை.

தொடர்ந்து தமிழகத்தின் வற்புறுத்தல் - தஞ்சை விவசாயிகள் சார்பில் போடப்பட்ட வழக்கும், தமிழக அரசின் சார்பில் போடப்பட்ட வழக்கும் - மத்திய அரசின் ஆலோசனைப்படி திரும்பப் பெறப்பட்டும் நல்ல முடிவு ஏற்படாத நிலை - மீண்டும் தஞ்சை விவசாயிகள் சார்பில் தொடரப்பட்ட வழக்கு - அந்த வழக்கில் தமிழக அரசும் இணைந்து வாதாடிய நிகழ்ச்சி - இனிப் பேச்சு வார்த்தைக்கே இடமில்லையெனக் கடந்த ஆண்டு, தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் - அந்தத் தீர்மானத்தை மத்திய அரசு, உச்சநீதி மன்றத்துக்கு அறிவித்து அந்த நீதிமன்றத்தின் வழிகாட்டுதலைப் பெற்று, காவிரிப் பிரச்சினைக்காக நடுவர் மன்றத்தை அமைத்து தமிழக மக்களை மகிழச் செய்த செய்தி; இவற்றைத் தொடர்ந்து இப்போது அந்த நடுவர் மன்றத்தினர் தென்னகத்தில் ஆய்வு மேற்கொண்டு நடத்தும் சுற்றுப் பயணம்!

உடன்பிறப்பே, அந்த சுற்றுப் பயணத்தின் முதற் கட்டமாகத்தான் பிப்ரவரி 24-ஆம் நாளன்று நான் கர்நாடக மாநிலம் சென்றிருந்த போது காண நேரிட்டது.

காவிரிப் பங்கீடு நடுவர் மன்றத்தினர் கர்நாடகத்தில் பயணம் செய்வது குறித்து பெங்களூரிலிருந்து வெளிவரும் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு (20-9-91) அன்று பின்வரும் செய்தியை முதல் பக்கத்தில் வெளியிட்டிருந்தது.

"SLOGANS GREET CAUVERY TEAM"

என்பது அந்தச் செய்திக்குத் தலைப்பு!

காவிரிக் குழுவை

வரவேற்ற கோஷங்கள்!

இந்தத் தலைப்பில் வந்த செய்தியில் சில வரிகளையும் உன் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"Slogans like "Save our water" "Save our Lives" "Save the people of Karnataka" "Save the Farmers of Karnataka" greeted the Cauvery Tribunal Team which visited Mandya and Hassan Districts on Tuesday, on its first leg of the week-long tour of the State. However, there were welcome arches for the team at Hemavathy river project area near Kamply in Mandya District, Nagamangala, Chinya, and Bagur Navile canal project area in Channarayapatnam ..."

கர்நாடக மாநிலத்தில் காவிரி நடுவர் மன்றத்தினர் வருகையை யொட்டி, ஹேமவதி நதி அணைக்கட்டுப் பகுதியிலும் மற்றும் நாகமங்கலா, சின்யா, பாகூர் நவிலி திட்டப் பகுதிகளிலும் வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டதோடு - மாண்டியா, ஹசன் மாவட்டங்களுக்கு அந்தக் குழுவினர் வந்தபோது மக்கள் கூடி நின்று; எங்கள் தண்ணீரை காப்பாற்றுக! எங்கள் வாழ்வைக் காப்பாற்றுக! கர்நாடக மக்களைக் காப்பாற்றுக! கர்நாடக விவசாயிகளைக் காப்பாற்றுக! என முழக்கமிட்டார்கள்.

இதனைக் கர்நாடக ஏடுகளில் நான் படித்தபோது - கர்நாடகத்திலேயே இப்படி என்றால்; நடந்தாய் வாழி காவேரி! என இளங்கோ அடிகள் பாடிய நிலை மாறி, இன்று; வறண்டாய் நீயே காவேரி! என வாடிய முகத்துடன், வயிற்றைப் பிசைந்து கொண்டு சோக கீதமிசைக்கும் தமிழகம் மற்றும் புதுவை மாநில விவசாயிகளின் வேதனைக் குரல் நடுவர் மன்றத்தினரை நோக்கி எப்படி ஒலிக்குமென எண்ணிப் பார்த்தேன்.

நான் எண்ணியவாறே, காவிரியை நம்பி வாழும் உழவர் பெருங்குடிமக்கள், தங்களின் நிலையை நடுவர் மன்றத்தினரிடம் விளக்கிடத் தயாராகி வருகின்றனர் எனக் கேட்டு ஆறுதல் பெருமூச்சு விடுகின்றேன்.

காவிரியின் மடியில் பிறந்தவனல்லவா? காவிரியின் நீர் அருந்தி வளர்ந்தவனல்லவா? அதன் கிளை நதிகள், துணை நதிகள் அனைத்துடனும் உறவு கொண்டவனல்லவா? அதனால்தான் அந்த ஆறுதல் பெருமூச்சு!

அண்ணா அவர்களின் ஆணையேற்று 1968-ஆம் ஆண்டு அன்றைய பொதுப்பணி அமைச்சராகிய நான் டெல்லி சென்று, மத்திய அமைச்சர்கள் முன்னிலையில் கர்நாடக மாநில முதல்வர் வீரேந்திர பட்டீல் அவர்களுடன் பேசத் தொடங்கிய நாள் முதல் - இதுவரை; ஏ! அப்பா! எத்தனை முயற்சிகளும்! எத்தனை தடைகள்!

நடுவர் மன்றம் வேண்டுமென 1975-ல் மத்திய அரசை - கழக அரசு வலியுறுத்தத் தொடங்கி மீண்டும் ஆட்சி பொறுப்பேற்று கடந்த ஆண்டு தான் நடுவர் மன்றம் அமைப்பதில் வெற்றி காண முடிந்தது! அதற்கு ஒத்துழைத்த அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் - அந்தத் தீர்மானத்தை மதித்து செயல்பட்ட அன்றைய பிரதமர் வி.பி. சிங் அவர்களுக்கும் நன்றிகளைக் குவித்துக் கொண்டேயிருக்கலாம்!

நடுவர் மன்றத்தின் முன்னால் வழக்கறிஞர்கள் புள்ளி விபரங்களை, சட்ட நுணுக்கங்களை, ஆதாரங்களை எடுத்துரைப்பர் எனினும் - இங்கே காவிரி நதி தீரத்தில் கழனிகளை நம்பி வாழும் விவசாயிகள் பாதகமாய்த் தீர்ப்பு வரின் பழைய ஆயக்கட்டுதாரர்களின் வாழ்வு பட்டொழிந்து போய் விடும் என்பதையும் - கெட்டழிந்து தொலைந்து விடும் தமிழ்க்குடி என்பதையும்; அந்த குழுவினர்க்கு உணர்த்துவதற்காக - கட்சிகளுக்கு அப்பாற்பட்டு இணைந்து நின்று அணி வகுக்கிறார்கள் விழி நீரால் நனைந்த கண்களுடன்!

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கட்சித் தலைவர்களின் கருத்தறிந்தே நடுவர் மன்றத்தை அமைக்குமாறு இறுதிக் கோரிக்கையை உறுதியாக வைத்து கடந்த ஆண்டு அந்தக் கோரிக்கையில் வெற்றி பெற்றுள்ளோம்.

இனி அந்த நடுவர் மன்ற விசாரணையில் நமது வழக்கை தெளிவாக எடுத்து வைக்க வேண்டும் என்பதே முக்கியம்! இடையே அபஸ்வரங்கள் ஒலித்தல் தமிழகத்திற்கு கேடு விளைக்கும்!

நடுவர் மன்ற வருகையையொட்டி, கர்நாடக மாநில விவசாயிகள், தங்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறி; வழிகாட்டியிருக்கிற காரணத்தால்; தமிழக விவசாயிகள், தங்களின் தர்ம நியாயங்களை நடுவர் மன்றத்திடம் எடுத்துக்கூறி; சலைவனமான தமிழகக் காவிரி தீரத்தைப் பாலைவனமாக்கிட விடாதீர் எனக் கோரிக்கை வைத்திடக் கூடுகின்றனர்!

தமிழ் நிலத்துக்கே உரிய பண்பாட்டுடனும்; உரிமை உணர்வுடனும்; அமைதியும் ஒழுங்கும் அணுவளவும் குறையாமல் ஆயிரமாயிரமாய்க் கூடி நின்று நிலையையும், நியாயத்தையும் எடுத்துரைத்திட; ஒன்று திரண்டிடுவோம்! வென்று காட்டிடுவோம்!

அன்புடன்,

மு. க.

24-03-1991

1709. விழல் விளைந்திடக் காரணமாவதோ?

உடன்பிறப்பே!

வர இருக்கும் தேர்தலுக்காக வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் பணிகளை அநேகமாக எல்லாக் கட்சிகளுமே தொடங்கிவிட்டன என்றே கூறலாம்.

ஒரு கட்சியில் நடைபெற்ற வேட்பாளர் தேர்வு பற்றி அந்தத் தேர்வுக் குழுவிலேயுள்ள எனது பழைய நண்பர்கள்; குமுறும் நெஞ்சுடன் கூறிய சில நிகழ்ச்சிகளைச் சொல்லக் கேட்டு - நானும் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு வேதனை கலந்த புன்னகையை வெளிப்படுத்தினோம்.

என் செய்வது? இன்று நேற்றா? எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு பெரியாரின் பாடிவீட்டில் - அண்ணாவின் பாசறையில்; பாசமுடன் ஒன்றாகப் பழகி, ஒருவரையொருவர் சமநிலையில் மதித்து இந்த இயக்கம் வளர்த்தவர்கள் நாங்களும் அவர்களும்!

ஆனால் இன்று பதவியென்னும் அக்கார வடிசலுக்காகவும் - பணவேட்டை எனும் அதிரச ருசிக்காகவும்; அந்தப் பழைய நண்பர்கள் படும்பாடு; ஈசா! பஞ்சுதான் படுமோ? என்ற நிலையில் அல்லவா பாடிப்பரிதவிக்க வேண்டியிருக்கிறது!

ஒரு வேட்பாளர் வந்தாராம்! நமஸ்காரம் என்றாராம்! வணக்கம் எனும் தமிழ்ச் சொல் வழக்கத்தில் வந்ததையே அறியாத ரசிகர் உலகில் வாழும் பிரமுகர்!

அத்துடன் விட்டாரா? குழுவின் உறுப்பினர்களாகச் சுற்றிலும் அமர்ந்திருந்த நமது பழைய நண்பர்களைச் சுட்டிக்காட்டி இந்தப் பாவிகள் பேச்சைக் கேட்காதீர்கள்! இவர்கள், கூடவே இருந்து உங்களுக்குக் குழி பறிப்பார்கள்! என்று சொல்லிவிட்டுப் போனாராம் அவர்! உண்மைதான்! இருந்தாலும் மிகவும்

உரைப்பான உண்மை! என் செய்வது அவர்கள் உடலில் உறைத்ததாகத் தெரியவில்லை!

இன்னொருவர் நேர்காணலுக்கு வந்தாராம்; மூலவிக்கிரகத்தை வணங்கியதோடு நிற்காமல்; அருகில் இருந்த உற்சவ விக்கிரகங்கள் இரண்டைப் பார்த்துக் கரம் குவித்து வணக்கம் என்றாராம்! உடனே மூலவிக்கிரகத்துக்கு மூக்கின் மீது கோபம் வந்து விட்டதாம்! ஏடா! மூடா!! இதற்குத்தான் வந்தாயா? போ உடனே வெளியே! என ஆணை பிறப்பிக்கப்பட்டதாம் - நேர்காணலுக்கு வந்தவர், தமது கால்கள் கோணலிட, அதைவிட்டு - வந்த வேகத்தில் திரும்பி நடையைக் கட்டிவிட்டாராம்! நேர்காணலுக்கு வந்தவர் எவ்வளவு பெரிய மண்டு! மூல விக்கிரகத்தை வணங்கியதோடு நில்லாமல் உற்சவ விக்கிரகங்களை வணங்கிவிட்டு எப்படி மூக்குடைபட்டுப் போனார்; பாவம்!

உற்சவ விக்கிரகங்களே மூல விக்ரகத்திடம் நேர்காணலுக்காகச் சென்று - இராமர் பட்டாபிஷேகத்தின்போது அனுமன் அமர்ந்திருந்த பாணியில் அமர்ந்து கேள்விகளுக்கு பதில் சொன்ன காட்சியைக் கண்டு - அண்ணா மட்டும் அங்கிருந்திருந்தால் கண்ணீர் வடித்து நனைந்து போயிருக்குமாம்! அப்படிச் சுயமரியாதையை மூட்டைக்கட்டிச் சுருட்டி வைத்துவிட்டு நேர்காணலின்போது கூனிக்குறுகி வளைந்து நெளிந்து பதில் அளித்து தமது பவ்யத்தைக் காட்டிக் கொண்டனராம்! பனிக்கட்டிக்குக் கூட சூடு உண்டு!

அண்ணா அறிவாலயத்தில் கழக வேட்பாளர்களின் நேர்காணலின் போது வருகின்ற பல உடன்பிறப்புகள்; தங்களது நீண்டகால இயக்கப் பணியை எடுத்துரைப்பதற்குச் சான்றாக; மங்கிப் போன புகைப்படங்களைக் காட்டுகின்றனர்! மகிழ்கின்றோம்!

இளமைத் தோற்றத்துடன் அண்ணா - அவருக்கருகே சின்னஞ்சிறு பிள்ளையாக; இன்றைய வேட்புமனு விண்ணப்பதாரர் - அந்தப் புகைப்பட வரிசையில் நானுமிருக்கிறேன். நமது பேராசிரியரும் இருக்கிறார். இன்று எங்கோ சென்று; கண்ணாம்பா நடித்த கண்ணகி படத்தில் மானமெல்லாம் போன பின்பு

வாழ்வதுதான் ஒரு வாழ்வா? என பி.யு. சின்னப்பா பாடும் பாடலுக்கு ஏற்றவர்களாக ஆகிவிட்ட அந்தப் பழைய நண்பர்களும்கூட அந்தப் புகைப்படத்தில் அண்ணாவுடன் இருக்கிறார்கள். அந்தப் பொற்காலம் எங்கே? இன்று ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி கதையில் தோற்றுப்போன அரசர்களாகச் சீரழிந்து நிற்கும் கற்கால வாழ்வு தான் எங்கே?

அந்தோ; இப்போதும் இதைக்காண நமது கண்களில் நீர்! ஆனால் இந்த நிலைமையிலும் பழைய நண்பர்களின் கண்கள்; கருணை கேட்டுக் கெஞ்சிக் கொண்டிருக்கின்றனவே! என்னே காலத்தின் கொடுமை!

ஒரு விண்ணப்பதாரர் நேர்காணலுக்கு வந்தார். மனுவில் குறிப்பிட்டிருந்த விபரங்களுடன் பிறிதொரு கடிதமும் கொடுத்தார். அதில் அவர் எழுதியிருந்தது வருமாறு:-

நீங்கள் குளித்தலைத் தொகுதியில் தேர்தலுக்கு நின்ற 1957-ஆம் ஆண்டு நான் பிறந்தவன். என் சித்தப்பா மணவாசி அங்கப்பன் உங்கள் வெற்றிக்காக உங்களுடன் இருந்து தேர்தல் பணி ஆற்றியவர். அவருக்கு நீங்கள் தபாலில் அன்பளிப்பாக அனுப்பி வந்த முரசொலியைப் படித்து நான் தமிழ் கற்றுக் கொண்டது மட்டுமல்ல, குழந்தைப் பருவத்திலிருந்தே கொள்கைப் பிடிப்புள்ளவனாகவும் ஆகிவிட்டேன்.

இந்த மடலைப் பார்த்ததும் ஆனந்தக் கண்ணீர் எனக்கு அருவியாகப் பொழிந்தது!

மணவாசி அங்கப்பனைப் போன்றவர்கள் சிந்திய வியர்வையும் கண்ணீரும் தானே இந்த இயக்கத்தை வளர்த்தன. இந்த இயக்கத்தில் தோழமையுடன் பழகிய எனது பழைய நண்பர்கள் சிலரின் தோள்கள் இன்று எங்கேயோ துவண்டு போய்க் கிடக்கின்றனவே! மதிப்பும் மரியாதையும் போய் ஏங்கித் தவிக்கின்றனரே! இதை நினைத்தால் நெஞ்சம் நெகிழாதா?

மணப்பாறையைச் சேர்ந்த அழகிரி எனும் ஓர் இளைஞரணித் தம்பி - நேர்காணலுக்கு வந்தார் அண்ணா அறிவாலயத்திற்கு!

சில ஆண்டுகளுக்கு முன்பு கழகம் நடத்திய ஈழத்தமிழர் ஆதரவுப் போராட்டத்தில் அவர் திருச்சி சிறையில் அடைபட்டு, அங்கிருந்து சென்னை சிறையில் உள்ள எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதற்கு நான் சிறையிலிருந்து திருச்சி சிறை முகவரிக்கு பதில் கடிதம் எழுதியிருக்கிறேன். அதை அப்படியே பத்திரப்படுத்திக் கொண்டு வந்து காட்டினார்.

அவர் கொண்டு வந்த இன்னொரு கடிதம்; அவரது தந்தைக்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பத்திரிகை முகவர் குறித்து எழுதியது!

மற்றொரு கடிதம் மணப்பாறை அழகிரியின் தாத்தாவுக்கு ஈரோடு நகரிலிருந்து பெரியார் எழுதிய கடிதம். ஒரு கூட்டத்திற்கான தேதி குறித்து ஒப்புக்கொண்டு, அதை உறுதி செய்து பதில் தெரிவிக்குமாறு ஈ.வெ. ராமசாமி எனக் கையெழுத்திட்டுக் கடிதம் எழுதியுள்ளார்! அதாவது அஞ்சலட்டை! பெரியார் சிக்கனக்காரர் ஆயிற்றே! கவரில் கடிதம் எழுதுவாரா?

பெரியாரின் கையெழுத்து மட்டுமே இடப்பட்ட அந்தக் கடிதம்; மற்றொருவரால் எழுதப்பட்டிருக்கிறது. எழுதியவர் உறுதி செய்து பதில் தெரிவிக்கவும் என்று மட்டுமே எழுதிக் கடிதத்தை முடித்துள்ளார். அதில் வரி பிளந்து, பெரியார் அவர்கள் தனது கைப்பட உறுதி செய்தது என்பதுடன் தயவு செய்து என எழுதியிருப்பதைப் பார்த்து அடடே! என்னே; பெரியாரின் மரியாதைப் பண்பாடு! என நானும் பேராசிரியரும் இமைகளின் ஓரம் ஈரமாக வியப்பு தெரிவித்துக் கொண்டோம்.

அந்த மரியாதைப் பண்பாடு கொண்ட மாமேதையின் நிழலில் இருந்தவர்கள்; இன்று

மரியாதை இழந்து

மதிப்பு இழந்து

. . . . . இழந்து

. . . . . இழந்து

என எவ்வளவோ சொல்லலாம்! அப்படியாகி விட்டார்கள் என் செய்வது!

இன்று ஒரு சிலரின் சுயமரியாதைக்கு அறைகூவல் விடப்பட்டு; அவர்கள் சரணடைந்து கிடக்கிறார்கள்!

ஆனால் உடன்பிறப்பே; பெரியார், அண்ணா பிறந்த இந்த மண்ணின் மக்களது சுயமரியாதைக்கு விடப்பட்டுள்ள சவாலை; சந்தித்து வெற்றி காண்பதில் - சிறிது தயக்கம் காட்டினாலும்; நீயும் நானும் இந்த வீரர் நிலத்தில்; விழல் விளைவதற்குக் காரணமான நீராக ஆகிவிடுவோம் என்பதை மட்டும் மறந்து விடாதே!

அன்புடன்,

மு. க.

28-03-1991

1710. இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!

உடன்பிறப்பே!

கடந்த எட்டு நாட்களில் ஏறத்தாழ இரண்டாயிரம் உடன்பிறப்புகள்; வேட்பாளருக்காக விண்ணப்பித்தவர்கள் - கருத்துக் கூற வந்த மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய செயலாளர்கள் என்ற வகையில் சந்தித்திருக்கிறோம். இன்று ஐந்தாறு நாட்கள் நேர்காணல் நிகழ்ச்சி இருக்கிறது. வேட்பு மனுவுக்காக விண்ணப்பித்துள்ளவர்கள் சந்திக்க வரும்போது பெருக்கெடுக்கும் குடும்ப பாச உணர்வும், சகோதர உணர்ச்சியும் எந்த அளவுக்கு நெஞ்சை நெகிழ வைக்கிறது என்பதைச் சொல்லிப் புரியவைக்க முடியாது. அனுபவித்தால் மட்டுமே தெரிந்துகொள்ள முடியும்.

சட்டமன்றத் தேர்தலுக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் விண்ணப்பத் தொகை கட்டிவிட்டு, எம்மைக் காண வருவோர்; தமக்குப் போட்டியிடக் குறிப்பிட்ட தொகுதி வேண்டுமென்று கோருவதற்கான காரணங்களை அடுக்குவதைக் காட்டிலும் - யாரை அந்தத் தொகுதியில் நிறுத்தினால் வெற்றி வாய்ப்பு இருக்கும் என்பதை மனதிற்கொண்டு, அதற்கான பரிந்துரைகளைச் செய்யும் போதும் - தேவையான விளக்கங்களை வழங்கும்போதும் மெய் சிலிர்த்துப்போகிறது.

வெட்டிக் கதை பேசிக்கொண்டோ, வீண் பொழுது போக்கிக் கொண்டோ, விஷமச் சேட்டைகளில் ஈடுபட்டுக் கொண்டோ, உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறிக்கொண்டோ இருப்பதை; வெறுத்து ஒதுக்கி விட்டு; அவர்கள் வீணர்கள் மட்டுமல்ல; வீடணர்களாகி விட்டவர்கள் என்பதையும் புரிந்துகொண்டு வியர்வைத் துளிகளும், கண்ணீர் துளிகளுமட்டுமல்ல; கழகத்திற்கு செந்நீர்த் துளிகளையும் சிந்திடும் சிங்கங்கள் தூய தங்கங்கள் அண்ணா அறிவாலயத்தில் உலவுகின்ற காட்சி; என்னைக் களிப்பிலாடும் கான மயிலாக்குகிறது!

மயில் உவமை; மங்கையர்கன்றோ; நீ உன்னை களிப்பிலாடும் கான மயில் என்கிறாயே! எனக் குறும்புப்புன்னகை அவிழ்க்காதே! ஆடும் தோகை மயில் ஆண்மயில்தான்! இயற்கையில் பெண் மயிலுக்கு தோகையில்லை!

பவளவிழா கொண்டாடிய திராவிட இயக்கம்; பல்வேறு கட்டங்களில் பலவிதமான சோதனைகளைக் கடந்து வந்துள்ளது என்பதை; வரலாற்றைத் திரும்பிப் பார்ப்போர் - அல்லது அந்த வழியில் தொடர்ந்து நடந்து வந்து அறுபதுகளைத் தாண்டிவிட்ட என்னையும் பேராசிரியரையும் போன்றோர் - அறிந்திருக்க நியாயமுண்டு!

சமுதாயத்தில் பெரும் பிரிவினர் பின்னுக்குத் தள்ளப்பட்டு - தாழ்த்தப்பட்டு; சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டபோதுதான் திராவிட இயக்கத்துக்கானவோர்; இந்தப் பூமியில் பாவிற்று என்பதை சரித்திரம் செப்புகிறது!

வேர்விட்டு முளைத்துச் செடியாகி மரமாகி இன்று நிழல் தரும் நிலை வரையில் இந்த இயக்கத்திற்கு எத்துணையோ விபத்துக்கள்! ஒவ்வொரு விபத்திலும் இந்த இயக்கம் மீண்டது மாத்திரமல்ல - புதுப் பொலிவும் வலிவும் பெற்றிடத் தவறவில்லை! விபத்துக்கள் இயக்கத்தில் பிளவுகளைக்கூட ஏற்படுத்தின! ஆனால் ஒரு காலகட்டம் வரையில் பிளவின் காரணமாக பிரிந்திட நேரிட்டோர்; இந்த திராவிட இயக்கத்தின் வேரைச் சிதைக்கும் விஷ நினைப்புடன் வெந்நீர் ஊற்றிட முனைந்ததில்லை! அமளிகள் கூட மூண்டதுண்டு; இந்த இயக்க வரலாற்றில் - ஆனால் அடிப்படையைத் தகர்த்திட இரு சாராரில் எவரும் எண்ணிச் செயல்பட்டதில்லை!

நீதிக் கட்சியை மாளிகையிலிருந்து மண்குடிசைக்குள் குடியமர்த்தப் பெரியாரும் அண்ணாவும் இணைந்து திராவிடர்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்து, இயக்கத்தை, ஏழை - எளியோர் - சாதாரண - சாமானிய - நடுத்தர மக்களின் இதய நாதமாக ஆக்கியபோது; சீறிப் பாய்ந்தோர் சிலரும்கூட, நீதிக் கட்சி என்ற பெயரின் நிழலில் தான் நிற்போம் எனப் பிடிவாதம் காட்டினர் எனினும் - கிளர்ந்தெழுந்த திராவிடர் கழக எழுச்சியை வீழ்த்திடக் காழ்ப்பு கொண்டு அலைந்திடவில்லை! மாறாக, நாளாக - நாளாக; மகிழ்ந்து வாழ்த்தவும் செய்தனர். கடைசிவரை

நீதிக்கட்சியிலிருந்து மறைந்தாலும் - கழக வெற்றிகள் கண்டு பூரித்துப்போன பொன்னம்பலத் தியாகராஜன் எனும் பி.டி. இராஜன் அவர்கள் இதற்கோர் உதாரணமாவார். டபிள்யூ.பி.ஏ. சௌந்தரபாண்டியன், விருதுநகர் வி.வி. இராமசாமி நாடார், முத்தையா முதலியார் ஆகியோர் மேலும் எடுத்துக்காட்டுகளாகத் தொடர்ந்தனர்!

அடுத்து ஒரு திருப்பம் - பெரியார் அண்ணா பிரிவு! திராவிட முன்னேற்றக் கழகம் தொடக்கம்! அப்போதும் பெரியார் அவர்களின் செயல்முறைத் திட்டங்களில் வேறுபட்ட அண்ணா அவர்கள்; திராவிடர் கழகத்தை அழித்துவிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்ப்போம் என்று எழுதவில்லை - பேசவில்லை - ஏன்; அவ்வாறு எண்ணிடவுமில்லை! வேர் நிலைத்தால்தான் மரம் நிலைக்கும் என்ற விவேகத்தைக் கற்றிட விண்வெளிக்குச் செல்லத் தேவையில்லை! குக்கிராமத்துக் கைநாட்டுக் குப்பனுக்குக்கூடத் தெரிந்த விஷயம்தானே! அதனால்தான் அண்ணா அவர்கள் தி.க.வும், தி.மு.க.வும்; தமிழ்ச் சமுதாயம் காப்பதில் இரட்டைக் குழல் துப்பாக்கி எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

வலுவும் வளமும் கொண்டு விரிந்து பரந்து பெரும் நிழல் தருவாக நின்ற இந்த இயக்கம் 1972-ல் மேலும் ஒரு சோதனைக்கு ஆளாயிற்று!

உடன்பிறப்பே; அதற்கு முன்பே 1960-ல் அண்ணா இருந்தபோதே - தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்களின் தலைமையில் ஆங்காங்கு சிறு சிறு குழுக்கள்; அழகிய முகத்தில் குறுமருக்கள்போலத் தோன்றித் தொல்லை தந்து; அண்ணாவின் தலைமைக்கு அறைகூவல் விடுத்து கனன்று எழுந்து - கடலாய்த் தோற்றம் காட்டப் போவதாகச் சொல்லி, கடுகாய் சிறுத்து - கடைசியில் காங்கிரசில் போய்க் கரைந்து முடிந்தது என்பதை நீ மறந்திருக்க மாட்டாய்!

நாற்பதாண்டு காலம் திராவிட இயக்கத்திற்கு ஏற்பட்ட விபத்துக்களால் அடிப்படைக் கொள்கைக்கு ஊறு தேடிட எண்ணாத நிலை மாறி 1960-ல் அந்த வேருக்கே அழிவு தேடும் முயற்சி தொடங்கியது! பின்னர் 1972-ல் கழகத்தைப் பிளக்கும் முயற்சியில் அன்றைய டெல்லி தர்பார் வெற்றி பெற்றாலும்கூட; 1952 முதல் கழக உறுப்பினராக இணைந்து; செயல்பட்டு,

அண்ணா மறைவுக்குப் பிறகு கழகப் பொருளாளர் பொறுப்பும் ஏற்றிருந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1972-ல் புதுக்கட்சி கண்டார் எனினும்; மேலெழுந்த வாரியாக தி.மு.க. மீது கடும் எதிர்ப்பைக் கொட்டினார் என்பது உண்மையாக இருந்த போதிலும் - அவரும் ஒருமுறை சட்டமன்றத்தில் இந்தித் திணிப்பு போன்ற சில பொதுப் பிரச்சினைகளில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கி எனக்கூறி; அடிப்படையை தகர்க்கும் நினைவு தனக்கு இல்லை என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்!

உடன்பிறப்பே, இத்தனை விபத்துக்களிலும் திராவிட இயக்கத்தின் அடிப்படைக்குத் தீ மூட்டும் திருவிழாக் கொண்டாட எவரும் எண்ணிடவில்லை! 1960-ல் சிலர் எண்ணினர்! அவர்களே அடிப்படையற்றுப் போயினர்!

ஆனால் இன்று நிலை என்ன? எழுபதாண்டு காலத்திற்கு மேற்பட்ட வரலாறு படைத்த இந்த இனமான இயக்கத்தை - தியாகராயர் கண்ட இயக்கத்தை - பெரியாரும் அண்ணாவும் தமது பேராற்றலால் வளர்த்திட்ட இயக்கத்தை - இதன் அடிப்படை தகருமளவுக்கு, வேர் பட்டுப்போகுமளவுக்கு வீழ்த்திக் காட்டுகிறேன் எனச் சூளுரைத்து, வீடணர்கள் துணையுடன் ஒரு சூன்யக்கார குரல் ஒலிக்கிறது! சூழ்ச்சிக் குரல் கேட்கிறது!

உடன்பிறப்பே; நம் ரத்தச் சேறு கொண்டு குழைத்துக் கட்டப்பட்ட கோட்டை இது! இதனை தரைமட்டமாக்குவேன் என ஆணவம் பேசுவோர்க்கு அடிமைகளாய் ஆயுதம் ஏந்தி நிற்போர் கண்டு அனுதாபப்படுகிறேன்!

அரக்கு மாளிகையல்ல; அண்ணா கண்ட இந்த அரசியல் இயக்கம்! பெரியார் கண்ட இந்த சமுதாய இயக்கம்! எஃகுக் கோட்டையப்பா இது! எஃகுக் கோட்டை!

இது பதவிப் பறவைகள் வந்து போகும் சரணாலயமல்ல! வேணஜனம் வரும் வேடிக்கை பார்க்க என்பதற்கு!

இது பாசறை! பாடி வீடு! அதற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு - இதோ;

விருத்தாசலமிருந்து ஒரு வழக்கறிஞர் வந்தார் நேர்காணலுக்கு! விண்ணப்பக் கட்டணம் ஆயிர ரூபாய் செலுத்தியுள்ளார்!

நான் தொகுதி கேட்க வரவில்லை!

தலைவர் மீது குறை கூற வந்தேன்

என்றார்!

என்ன குறை? என வினவினேன்!

எமர்ஜன்சியின் போது விருத்தாசலம் வந்து ஒரு திருமணத்தில் கலந்து கொண்டேன். டி.பி.யில் தங்கியிருந்தேன். எனக்கு அனுப்பப்பட்ட சாப்பாட்டை உள்ளே விடாமல் போலீசார் தடுத்து விட்டனர். பிறகு நண்பர்கள் சுவரேறிக் குதித்து உணவு கொண்டு வந்து எனக்குத் திருட்டுத்தனமாக தந்தனர். அப்போது எம். செல்வராசு மிசா கைதியாக சென்னை சிறையில் இருந்தார்.

என இவ்வளவு விபரங்களையும் சில மாதங்களுக்கு முன்பு விருத்தாசலத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கூறினீர்கள். ஆனால் அந்த எமர்ஜன்சி கெடுபிடியிலும் திருமணத்திற்கு உங்களை அழைத்த என் பெயரைக் கூறாமல் விட்டு விட்டீர்களே; என்று அந்த வழக்கறிஞர் என்னைக் குற்றம் சாட்டினார்.

தொகுதி கேட்க வராமல் என்னை இப்படிக் குற்றம் சாட்டிய அந்த வழக்கறிஞரின் பெயர்; கு. ராமலிங்கம்!

அவரிடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டேன்! அவருக்காகவே இந்தக் கடிதம் எழுதத் தொடங்கினேன்; ஆனால் கடிதம்; கடந்து வந்த பாதையைப் பற்றி அதிகமாகப் போய் விட்டது!

அத்தகைய பாதைகளைக் கடப்பது எளிதானதற்குக் காரணமே; இத்தகைய உடன்பிறப்புகள் தானே!

இப்படை தோற்கின்

எப்படை வெல்லும்!

அன்புடன்,

மு. க.

29-03-1991

1711. அன்று தந்த விலையும் இன்று தந்த விலையும்!

உடன்பிறப்பே!

தமிழ் ஈழ மக்கள்; தங்களின் உரிமைகளுக்காகப் போராடுவதை ஆதரிக்கிற அதே நேரத்தில் - ஈழப் போராளிக் குழுவினர் யாராயினும் அவர்கள் தமிழ் நாட்டில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதை ஆட்சியில் இருக்கும் நிலை - அல்லது ஆட்சியில் இல்லாத நிலை; ஆகிய எந்த நிலையிலும் ஆதரிக்க மாட்டோம் என்பதைச் சொல்அளவில் மட்டுமல்ல செயல் அளவிலும் நிரூபித்தவர்கள்தான் நாம்!

ஆனால் ஈழத் தமிழர்களுக்கு அன்பும், அனுதாபமும், ஆதரவும் காட்டுவதே; தேசத் துரோகம் எனக்கூறி - இல்லாத குற்றச்சாட்டுக்களைக் கழக ஆட்சியின் மீது சுமத்தி; ஒரு நாளைக்கு சட்டம் ஒழுங்கு தமிழ்நாட்டில் நன்றாகவே இருக்கிறது என்று பேசியும் - இன்னொரு நாள் தமிழ்நாட்டில் நாலைந்து மாவட்டங்கள் விடுதலைப் புலிகளால் ஆளப்படுகிறது என்று கயிறு திரித்தும் - ஏதோ தஞ்சை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் கலெக்டர் அலுவலகங்களில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குப் பதிலாக எல்.டி.டி.ஈ. புலிகள்தான் அமர்ந்திருப்பதைப் போலவும், எஸ்.பி. அலுவலகங்களில் தேசியக் கொடிக்குப் பதிலாக புலிக்கொடிதான் பறப்பது போலவும் - இங்குள்ள காங்கிரஸ்காரர்களும், அ.தி.மு.க. கட்சியினரும் பாடிய பாட்டை, கீறல் விழுந்த கிராமபோன் ரிக்கார்டு போல நிருபர்களிடத்திலும், நாடாளுமன்றத்திலும் திரும்பத் திரும்பப் பாடி - இறுதியாக சதி, சாகசம், இவற்றுக்குப் பணிந்தால்தான் தற்காலிக ஆட்சி சில நாட்களுக்காவது தப்பும் எனத் தப்புக் கணக்கு போட்ட சந்திரசேகர்; கவர்னர் அறிக்கையில்லையென்று கவலைப்படாமல் இதில் கையெழுத்துப் போடுங்கள் என்று தமிழ்நாட்டுப் பெருமகனாரும் இந்திய நாட்டுத்

தலைமகனாருமான வெங்கட்ராமன் அவர்களிடம் ஒப்பம் பெற்று, தமிழ் நாட்டில் ஜனநாயகப் படுகொலையைச் செய்து முடித்து விட்டார்.

நிர்ப்பந்தங்களால்தான் அவர் இதைச் செய்தார் என்பதற்கு - அரியானா மாநில ஆட்சியைக் கலைக்குமாறு ராஜீவ் நிர்ப்பந்தப்படுத்தினார்; அதனால்தான் நான் ராஜினாமா செய்து விட்டேன் என்று இப்போது சந்திரசேகர் தரும் வாக்குமூலங்களே தக்க சான்றாகும்.

டிசம்பர் 4-ந் தேதி டெல்லி நிருபர்களிடம் உள்துறை அமைச்சர் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நன்றாகவே இருக்கிறது என்கிறார்.

பிறகு சில நாட்களில் அவரே சென்னை வருகிறார். கழக ஆட்சியில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டிட எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் பேசுகிறார். என்னுடன் பேசுகிறார். ஆளுநருடன் பேசுகிறார். எல்லாம் திருப்தியாக இருக்கிறது என்று கூறிவிட்டுப் போகிறார்.

ஜனவரி 10-ஆம் நாள் அனைத்து நாடுகள் திரைப்படத்துறை விழா சென்னையில் தொடங்குகிறது. அப்போதும் உள்துறை அமைச்சர் வருகிறார். நிருபர்களிடம் பேசுகிறார். சட்டம் ஒழுங்கு பிரச்சினை எதுவுமே இல்லை, எல்லாம் சரியாக இருக்கிறது என்கிறார்.

ஜனவரி 20 வெளியுறவு அமைச்சர் என்னை மதுரையில் வந்து சந்தித்து பேசுகிறார். பேச்சு வார்த்தை பூரண திருப்தி என்று நிருபர்களிடம் கூறியவர்; கொழும்பு சென்று ஜனவரி 30-ந் தேதி காலை நிருபர்களிடம்; தேசிய நலனில் அக்கறையுடன் தமிழக முதலமைச்சர் இலங்கைத் தமிழர் பிரச்சினையை அணுகுகிறார் என்று பாராட்டிப் பேசுகிறார்.

ஆனால் அன்றிரவே கழக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சரியில்லை - கழக அரசுக்கு தேச நலனில் அக்கறையில்லை என்று கூறி; பட்டுக்கோட்டை பரமஹம்சர் (?) அவர்கள் நீட்டிய தாளில் கையெழுத்துப் போட்டு - தமிழ்நாட்டில் இரண்டு ஆண்டுக்கால அற்புத சாதனைகளை நிகழ்த்திய அரசை கலைத்து விடுகிறார்கள்.

அதன்பிறகு; தாங்கள் முதலில் சொன்ன சொத்தைக் காரணங்களுக்குச் சப்பைக்கட்டு கட்டத் தொடங்கினார்கள். அது; விஷயமறிந்தோர் மத்தியில் எடுபடவில்லை! எனினும் அந்தச் சப்பைக்கட்டு கட்டும் காரியத்தை; பினாமி சர்க்காராக இருந்து, இன்று காபந்து சர்க்காராக ஆகியிருக்கும் காதொடிந்த ஊசியின் சர்க்கார் இன்னமும் கைவிட்ட பாடில்லை!

திருப்பதியில் திடீர்த் திருமணம் செய்து கொள்ள ஒரு மின்னல் வேகப் பயணம் மேற்கொண்டார் உள்துறை இணை அமைச்சர்! வாழ்க தம்பதிகள் என வாழ்த்துவோமாக!

ஆனால் மணவிழாவுக்குப் போகும் வழியில் சென்னையில் அதிகாரிகளுடன் எல்.டி.டி.ஈ. நடவடிக்கைகளைத் தமிழ்நாட்டில் அறவே ஒடுக்கியாகி விட்டதா என்பதை கண்டறிந்திருக்கிறார்! விவாதித்திருக்கிறார்!

அதிகாரிகள் பாவம்; இப்போதுதான் தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு அமைதி - நாற்பது அல்லது ஐம்பது நாட்களில் தென்றலாக வீசுகிறது என்பது போல அடிக்கடி அறிக்கை விட்டுத் தீர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்!

எமர்ஜன்சி நேரத்தில்கூட அதிகாரிகள் நம்மைப் பார்த்தால் நலமா? எனச் சிலர் கேட்பார்கள்! நன்றியுள்ளவர்களைச் சொல்லுகிறேன்! இன்றோ அந்த எமர்ஜன்சி காலத்தை விட அதிகமாக நடுங்குகிறார்கள்! என் செய்வது; முதுகெலும்பே முளைக்காமல் சிலர் பிறந்து விடுகிறார்களே! சிலரைத்தான் சொல்லுகிறேன் - இதயத்துடன் பிறந்தவர்கள் பலர் உண்டு!

எமர்ஜன்சி முடிந்த பதின்மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு - இந்த ஆட்சிக் கலைப்பு மீண்டும் ஒருமுறை எனக்குப் பலரை அடையாளம் காட்டியிருக்கிறது! பாடமும் புகட்டியிருக்கிறது!

அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டிப் பேசிவிட்டு, நிருபர்களைச் சந்தித்து உள்துறை அமைச்சர் ஏதோ; உல்பாக்களையும், புலிகளையும் விரட்டிவிட்டது போல வெற்றி முரசு கொட்டுகிறார்.

உல்பாக்கள்; இந்தியாவுக்குள்ளே இருக்கிற அசாமுக்குள் இருந்து காங்கிரஸ் பிரமுகர்கள் பலரை பிணங்களாக்கி

வருகின்றனர். அதைப் பற்றி உள்துறையார் பேசவில்லை! திருப்பதிக்கு வந்த வேகத்தில் தீர்த்துக் கட்டிவிட்டேன் தமிழ் நாட்டில் உல்பாவை! என்கிறார்! எல்.டி.டி.ஈ.க்கள் இத்தனை பேரை கைது செய்து தேசப் பாதுகாப்பு சட்டப்படி சிறை வைத்துள்ளோம் என மார் தட்டுகிறார்!

பாவம்; பல் இளிக்கும் சில அதிகாரிகள் பழைய கணக்கைக் காட்டவில்லை போலும்! காரணம்; பயம்!

காஷ்மீரில் தேசியக் கொடியைத் தெருவில் போட்டுக் கொளுத்துகிறார்கள்.

பஞ்சாபில் தேசிய கீதத்தின் ஒலி கேட்கக் கூடாது!

உ.பி.யில் பிணக்குவியல் நாள்தோறும்!

ஆனால் இங்கே வந்து உள்துறை அமைச்சர்; முண்டா தட்டுகிறார்;

மனோகராவில் வசந்தன் - வாளை வீசுவேன் என்பதற்கு மாறாக - வாலை வீசுவேன்! என்று கர்ச்சிப்பது போல இருக்கிறது - அவரது பேச்சு!

தமிழ் ஈழ மக்கள் மீது, இலங்கை அரசு விமானங்களை ஏவிக் குண்டுகளை வீசி வருகிறது. ரசாயனப் பொருள்களை பயன்படுத்தி ஈழத் தமிழ் மக்களைக் கொடுமைக்கு ஆளாக்குகிறது. எரிபொருள், மின்சாரம், உணவு, கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசியத் தேவைகள் அனைத்தையும் தடுத்து அவர்களை அலைக்கழிக்கிறது.

தமிழர் என்ற உணர்வோடு இல்லாவிடினும்; மனித நேய மனப்பான்மை யுடனாவது இந்தக் கொடுமைகளைத் தட்டிக் கேட்க முன்வராத மத்திய அரசு; இன்னமும் தமிழ் நாட்டில் ஆட்சியைக் கலைத்தமைக்குக் காரணம் கற்பித்து - அதற்கென அரசின் பிரச்சார சாதனங்களைப் பயன்படுத்துவதில்தான் அக்கறை காட்டுகிறது!

காரணம் தேடி எதற்காகக் கால் கடுக்க அலைய வேண்டும்!

ஒரு தமிழன் இன்னொரு தமிழனுக்காகக் கண்ணீர் விடக்கூடாது! குரல் கொடுக்கக் கூடாது!

அப்படி அனுதாபம் காட்டியதால்தான் நம்மீது அபாண்டங்கள் கற்பனைகளாக சுமத்தப்பட்டு ஆட்சியை இழந்துள்ளோம்!

முன்பு ஜனநாயகத்தைக் காத்திடக் குரல் கொடுத்து 1976-ல் ஆட்சியை விலையாகக் கொடுத்தோம்!

இப்போது 15 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கையில் அழியும் நமது தமிழ் சாதியைக் காத்திட முனைந்தோம் என்பதற்காக ஆட்சியை விலையாகக் கொடுத்துள்ளோம்.

இதனை மக்கள் உணருமாறு

செய்ய வேண்டியது;

உடன்பிறப்பே!

உன் பொறுப்பு!

அன்புடன்,

மு. க.

30-03-1991

1712. என் வேண்டுகோள் ஏற்றிடுக!

உடன்பிறப்பே,

மண்ணாடிப்பட்டு (புதுவை) தொகுதியில் அருள் என்ற கழக மாவீரன், இருவேல்பட்டு கிராமத்தில் மணி என்ற கழக மாமணி ஆகிய இருவர் உயிரைப் பலி கொண்டதோடு நிற்காமல் பருகூருக்கு அருகே போச்சம்பள்ளியிலும் கழக உடன்பிறப்புகளை அ.தி.மு.க. அம்மணிக்கட்சியினர் வெட்டியும் தாக்கியும் காயப்படுத்தி அபாயகரமான நிலையில் அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். செய்திகள் வருகின்றன இப்படி!

போலீசார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சில இடங்களில் வன்முறைக்குத் துணையும் போகின்றனர். நான் வேட்புமனு தாக்கல் செய்யப் போகும் பாதையிலேயே அ. தி.மு.க. வினர் மோதுதலுக்கு திட்டம் வகுத்துச் செயல்படவும், போலீஸ் அதிகாரிகள் வேடிக்கை பார்க்கவுமான நிலை! எப்படியிருக்கிறது பார்த்தாயா சட்டம் ஒழுங்கு அமைதி காத்திடும் பணி?

சின்னங்கள் வரைவதற்கே எனது உடன் பிறப்புகள் செங்குருதி சிந்த வேண்டியிருக்கிறது என்றால்; கவர்னர் ஆட்சி என்ற பெயரால் நடைபெறும் அ.தி.மு.க. அம்மணி அதிகாரத்தில் (ஆமாம்; இப்போதே அவர்கள் ஆட்சிக்கு வந்து விட்டதாக எண்ணிக்கொண்டு அடிக்கும் கும்மாளம், ஆடும் கூத்து, போடும் வேஷம், அதிகாரிகளை ஆட்டிப் படைக்கும் போக்கு அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் பரவி விட்டதே இன்னும் எத்தனை வன்முறை வெறியாட்டங்களைச் சந்திக்க வேண்டுமோ தெரியவில்லை!

எது நேரினும் கலங்காமல் எதையும் தாங்கும் இதயத்துடன் பணியாற்றுவோம்! உன்னுடன் என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்!

"நமது கரங்கள் பூப்பறிப்பதற்காகவா இருக்கின்றன?" என கேட்கத் தோன்றும் உனக்கு! ஆம்; கழகமும் நமது தோழமைக் கட்சிகளும் அடையப்போகும் வெற்றிக்கான வாகைமாலை தொடுத்திடப் பூப்பறிப்பதற்காகத்தான் நமது கரங்கள் இருக்கின்றன! பொறுமையுடன் பொல்லாதவர்களின் செயல்களை சந்திப்போம்!

வன்முறை வெறியாட்டங்களை அவ்வப்போது போலீசாருக்குத் தெரிவிக்கவும், போலீசார் நடவடிக்கை எடுக்காமல் பாரபட்சமாக நடந்து கொண்டால், நீதிமன்றங்களை நாடவும், தலைமைக் கழகத்திற்கும் - மாவட்டக் கழகத்திற்கும் அறிவிக்கவும் ஆங்காங்கு கழக வழக்கறிஞர் குழுக்களை உடனடியாக அமைத்திடுமாறு வேண்டுகிறேன்.

ஏற்கனவே பொதுச் செயலாளர் அறிவித்துள்ளவாறு, மாவட்ட அளவில் தேர்தல் பணிக் குழுக்கள் உடனே அமைக்கப்பட வேண்டும். மாவட்டச் செயலாளர் வேட்பாளராக இருந்தால் அந்தக் குழுவுக்கு கழக முன்னணி உடன்பிறப்பு ஒருவரை தலைவராக நியமித்துக் கொள்ளலாம். அந்தக் குழுவில் வேட்பாளர் உறுப்பினராக இருக்க வேண்டும்.

நாடாளுமன்ற தொகுதி ஒவ்வொன்றுக்கும், சட்டப்பேரவை தொகுதி ஒவ்வொன்றுக்கும் அளவில் சிறிதாக ஐந்து அல்லது ஏழு பேருக்கு மேற்படாமல் தேர்தல் பணிக்குழுக்கள் கழக முன்னணி உடன் பிறப்புகளின் தலைமையில் அமைக்கப்படல் வேண்டும். அந்தக் குழுக்களில் தொடர்புடைய தொகுதி வேட்பாளர் ஒரு உறுப்பினராக இருந்திடல் வேண்டும்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் அமைதி காத்திடவும், பொது மக்களுக்கு பாதுகாப்பு அளித்திடவும், தொண்டர் அணிக்குழுக்கள் அமைத்து, அதன் உறுப்பினர்கள் கழகச் சீருடை அணிந்து வன்முறைக்கு எவராலும் ஒரு துளி அளவு தூண்டுதலும் ஏற்படாதவாறு கண்காணித்திட வேண்டும்.

இந்த வேண்டுகோளை; மாவட்டங்களில் ஒன்றியங்களில் - தொகுதிகளில் உடனடியாக நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தோழமைக்கட்சி தொகுதிகளும் நமது தொகுதிகளேதான்!

அங்கே; நாம் சிறிது சோர்வுற்றிருந்தாலும்; அந்தத் தொகுதியை மாற்றாருக்கு நம்மையறியாமல் வழங்கி; அவர்களது எண்ணிக்கைக் கணக்கை உயர்த்துகிறோம் என்று பொருள்!

உடன்பிறப்பே! இந்தக் கடிதம் எழுதும் போது கோவையிலிருந்து தம்பி மோகன் தொலைபேசியில் பேசினார்!

யார் மோகன்? முன்பு ஒருமுறை தலைமைக் கழகத்தினால் மூன்று தடவை பெயர் அறிவிக்கப்பட்டு; சிங்கநல்லூர் தொகுதியிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டு அத்தொகுதியை தோழமைக் கட்சிக்கு விட்டுக் கொடுத்தவர்!

சென்ற முறை அவர் நின்று வென்ற அதே சிங்க நல்லூர் தொகுதியை இந்த முறை ஜனதா தளத்திற்கு விட்டுக் கொடுக்கச் சொன்னவுடன்; மாற்றுத் தொகுதிகூடக் கேட்காமல் மகிழ்ச்சியுடன் விட்டுக் கொடுத்துவிட்டு 'தொலைபேசியில் என்னோடு பேசினார்! ஜனதா தள வேட்பாளருடன் சென்று வேட்புமனு தாக்கல் செய்ததை கலகலவென சிரித்துக் கொண்டே உற்சாகத்துடன் கூறிவிட்டு; துறைமுகம் தொகுதியில் நான் வேட்புமனு தாக்கல் செய்வதற்காக "இதோ உங்கள் தம்பியின் வாழ்த்து!" என்று பூரிப்புடன் சொன்னார்!

அவர் போன்ற அன்பு உடன்பிறப்புகளையெல்லாம் காண, மே தினத்தன்று சென்னையில் உள்ள மேதின சின்னத்திற்கு மரியாதை செய்து விட்டு புறப்படுகிறேன் - அதற்குள் இந்தக் கடித வாயிலாக நான் விடுத்துள்ள வேண்டுகோள்கள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையுடன்!

அண்ணா வழியே நமது வழி! அவ்வழி நடப்போம்! வெல்வோம்! இது உறுதி! உறுதி!

அன்புள்ள,

மு.க.

25-04-1991

1713. உன்னை நம்பித்தான் முரசறைகிறேன்!

உடன்பிறப்பே,

“எழுச்சியுற்ற இளைஞன்தான்
ஏறுடை சிங்கந்தான்;
கொழித்துவிட்ட உமிகள்தான் – இனிக்
குள்ள நரிக் கூட்டத்தார்!.”

என்று மாணவப் பருவத்தில் எழுதிய உன் சகோதரன்தான் இன்றைக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

“சிறுத்தையின் உறுமல்
சிங்கத்தின் சீற்றம்
கறுத்த கழுதையே
அங்கேன் கனைக்கிறாய்?”

என அன்றொரு நாள் எழுதிய நான்தான் இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

“ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை;
மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று!”

என்று எழுதியவன் தான் இன்றைக்கு உனக்கு எழுதுகிறேன்.

“புலியின் குகையினிலே அழகில்லை; புதுமையல்ல!
கிலியும் மெய்சிலிர்ப்பும் கீழிறங்கும் தன்மையும்
தலைகாட்டா மானத்தின் உறைவிடம்
மறவன் மாளிகை...”

என வர்ணித்தும்;

“இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் – இங்கு
வீணை நரம்பினிலே இசை துடிக்கும்;
அதுவும் –

மானம்; மானமென்றே முழக்கும்-”

எனச் சிறப்பித்தும்;

“கட்டிய நாய்காவ்ல நாம் எட்டியமட்டும் பாய்வதற்கு;
தட்டிய மாத்திரத்தில் தருக்கர்கொட்டம்
அடங்க வேண்டும்!
விருப்பமுள்ளவராம் வெறும் பதவியில்
சில பேர் அவர் வேண்டாம்;
நெருப்பின் பொறிகளே! நீங்கள்தான் தேவை!”

என அழைத்தும் - எழுதியவன் எழுதுகிற கடிதம்தான் இது!

“கினம்பிற்றுக் காண் தமிழச்சிங்கக் கூட்டம் -
கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை!”

எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிடம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே வீர வாழ்த்துப் பெற்றவன்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்!

கடந்த காலத்தையெல்லாம் நினைவூட்டுவதற்குக் காரணம் புரிகிறதல்லவா?

இன்று என் வயது அறுபத்து ஏழு எனினும் இருபது வயது இளைஞனின் இதய வலுவுடன்; உறுதியுடன், உத்வேகத்துடன் உன் முன்னால் நிற்கிறேன்!

இதற்கென தாதுபுஷ்டி லேகியம் எதுவும் சாப்பிடவில்லை!

அந்த மருந்துகளுக்கென செய்யப்படும் விளம்பரங்களைப் பார்த்திருப்பாய்! -

கம்பீர முகம் - கட்டு மஸ்தான தேகம்- கட்ட விழ்த்த களிறு போன்ற தோற்றம் - இத்தனை அற்புதங்களும் அந்த மருந்தினால் விளைகின்றனவோ இல்லையோ; எனக்குத் தெரியாது. ஆனால் ராஜீவ் காந்தி அவர்கள் தி.மு.கழகத்தை ஜெயலலிதாவுடன் சேர்ந்து ஒழித்து விடப் போவதாக அறிவித்துள்ள செய்தி - அவர் ஆற்றியுள்ள உரை - என் வயது முதிர்ச்சியை எங்கேயோ ஒரு மூலைக்குத் திடீரென ஒதுக்கித் தள்ளி விட்டு: என்னை -

திருவாரூர் வீதியிலே
கொடியேந்தி

பவனி வந்த
இளைஞனாக,

இப்போது ஆக்கிவிட்டது!

கல்லக்குடியில் தண்டவாளத்தில்
தலை வைத்துப் படுத்த அந்தக் காளையாக,
என்னை மாற்றி விட்டது! -

பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைபட்டுக் கிடந்த 1965 ஆம் ஆண்டுக் கருணாநிதியாக என்னை ஆக்கிவிட்டது!

முதுமை என்பதும் இளமை என்பதும் உருவ மாற்றம் - உடலின் முறுக்கு அல்லது தளர்வு இவற்றால் கணக்கிடப்படுவது அல்லவே!

மலையைப் பந்தாடும் மாவீரனைப் போலத் தோன்றினாலும் - மன நடுக்கம் கொண்டு கிடப்போன்; கிழடு தட்டி ஈளை கட்டி இருமிடும் முதியோர்க்குச் சமமாகத்தானே எண்ணப்படுவான்!

நரை, திரை வந்துற்ற போதிலும் நடுங்கா உள்ளம் கொண்டு நிலைகுலையா உறுதியுடன் அநீதிகளை எதிர்த்திடும் போது; அவன் இளைஞன்! இளைஞன்! ஆம்; அரிமா இளைஞன்.

அந்த இளைஞனாக ஆகிவிட்ட நான்; எல்லா உடன்பிறப்புகளையும் அழைக்கிறேன்; நீங்கள் முதியோராயினும்- நடுவயதினராயினும்- இளங் கன்றுகளாயினும், ராஜீவ்காந்தியின் அறை கூவலை எதிர்கொள்ளத் தயாராவீர் என அழைக்கிறேன்!

தி.மு.கழகத்தை யாருடனோ சேர்ந்து அறவே அழித்து விடுவாராம்!

இந்த வார்த்தைகளை ஏடுகளில் தலைப்புச் செய்தியாகப் படித்த போது; ஆயிரம் ஈட்டிகள் என் நெஞ்சில் பாய்ந்தன! இன்னமும் அந்த ஈட்டிகள் பாய்ந்த இடத்திலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருக்கிறது!

பண்டித நேரு அவர்கள் ஒரு காலத்தில் தி.மு. கழகத்தை ஒழிக்க நினைத்தார்! முடியவில்லை!

இந்திராகாந்தியேகூட தி.மு.க.வைத் தீர்த்துக் கட்டுவேன் என முழக்கமிட்டதுண்டு!

பின்னர் தி.மு.க.வின் தயவிலேதான் அவர், ஆட்சிக்கே திரும்ப முடிந்தது!

இன்றைக்கு ராஜீவ்காந்தி அவர்கள்; சென்னையில் காமராஜர் நினைவாலயத்தைத் திறந்து வைத்த விழாவில்; காமராஜருக்காகக் கடுகளவு நேரம் ஒதுக்கிவிட்டு மீதி நேரத்தைத் தி.மு.க.வை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற விளக்கத்திற்காகவே செலவிட்டிருக்கிறார்! -

அண்ணா உருவாக்கிய கழகத்தை - அண்ணா ஏற்றிய இரு வண்ணக் கொடியை - அண்ணா கண்ட உதயசூரியன் சின்னத்தை - துரத்தியடிப்பேன், தூளாக்குவேன் எனத் துடுக்கு மொழி பேசிடும் துணிச்சல் ராஜீவுக்கு எப்படி வந்திருக்கிறது கவனித்தாயா? ஜெயலலிதாவுடன் இணைந்து நின்று: அதாவது "அண்ணா தி.மு.க." வுடன் இணைந்து நின்று: அண்ணா வின் தி.மு.க.வை ஒழித்துவிடப் போகிறாராம்!

புருஷோத்தமனை, அவன் மனைவி பத்மாவதியை, அவர்கள் செல்வன் மனோகரனை, அவனது துணைவியை, குழந்தையை; ஏன் அந்தக் குடும்பம், கொற்றம் அனைத்தையுமே அழித் தொழிக்கப் போகிறேன் என்று உக்கிரசேனன் என்னும் - இமயபுரி மன்னன்; சாமியார் வேடத்தில் அரண்மனைக்குள் நுழைந்து ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுப் பாடுவானே; மனோகரா படத்தில் - நினைவிருக்கிறதா? பழைய படம் எங்காவது நடந் தால் மீண்டும் ஒருமுறை பார்த்திடு!

அப்போதுதான்; அ.தி.மு.க.வுடன் சேர்ந்து கொண்டு நமது தி.மு.க.வை சிதற அடிக்கப் போவதாக, சீரழித்து முடிப்பதாக, சிதையில் வைத்துக் கொளுத்துவதாக ராஜீவ் காந்தி அவர்கள் காமராஜர் விழாவில் கர்ச்சித்திருப்பதை அந்தக் காட்சிகளோடு ஒப்பிட்டுச் சிந்திக்க முடியும்!

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் எனத் தொண்டாற்றுவது தி.மு.க!

அதை அழிக்க வேண்டுமாம்; அலகாபாத் புவனத்தில் தவழ்ந்த அரசிளங்குமரர் முழங்குகிறார்!

ஜனநாயகக் காவலன் தி.மு.க! அந்தக் காவலவின் கழுத்தை முறித்துப் போடுவாராம்; சர்வாதிகார சாம்ராஜ்யம் சமைத்திடப் புதிய ஜார் மன்னனாகப் புறப்பட்டிருக்கும் பழைய "பைலட்"/

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கும் எல்லைப்புறத்துச் சிப்பாய் தி.மு.க! இதைத் தொலைத்து விட்டால் தொல்லை நீங்குமென எண்ணித் துந்துபிநாதம் கிளப்புகிறார்!

சமூக நீதிக்கு எதிராக எழும் சண்டமாருதத்தை சந்தித்து வெற்றி காணும் ஆற்றல் பெற்ற தீரா முகாம் தி.மு.க! இதற்குத் தீயிட்டு விட்டால் அடக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர், வாய்ப்பு முடக்கப்பட்டோர் தலையெடுக்க முடியாமல் தளை அவிழா அடிமைகளாகவே இருப்பர் எனத் திட்டமிட்டுப் பேசுகிறார்; திக் விஜயம் மேற் கொண்டுள்ள தில்லி நகரத்துரை!

மாநிலங்கள் உரிமை- சமத்துவம் என்றெல்லாம் பேசுவதும், சுயமரியாதைக் குரல் கொடுப்பதும் டெல்லி ஏகாதிபத்தியத்தின் செவிகளில் இடியாக விழுகிறபோது - இந்த இடி, மின்னல், புயலுக்குத் தி.மு.க.வும் காரணமெனக் கருதி; மாநிலங்களைக் கொத்தடிமைகளாகவே நடத்துவதற்கு ஏதுவாக; மலைப்பாம்பு வாயைத் திறக்கிறது, மானை விழுங்குவதற்காக!

கழக மானும் தப்ப வேண்டும் - கடும் பாம்பின் வாயும் கிழிய வேண்டும்; கழகக் காளையே! கண்மணியே! வெட்டி வா என்றுரைத்தால் கட்டி வரும் என் செல்வமே!

இன்னமும்கூட உன்னில் சிலர் உறங்குவதாகச் சொல்லப்பட்டது! தூங்கும் புலியை இடறியது போல இதோ ராஜீவ் காந்தியார்; அவர்களையும் துள்ளி எழச் செய்துவிட்டார்!

கைது செய்து கச்சத் தீவில்
வைப்போம்!
ஆஸ்ரமத்துக்கு அனுப்புவோம்!

இவ்வாறு என்னைத் தண்டிக்கப் போவதாக ஒரு மத்திய அமைச்சர் பேசினார்!

என்னைக் கைது செய்தால் பரவாயில்லை
கச்சத் தீவுக்கு அனுப்பினால் பரவாயில்வை
ஆஸ்ரமத்துக்கு விரட்டினாலும் கவலையில்லை !

ஆனால் என் கண்ணீராலும்கூட கட்டப்பட்ட இந்தக் கோட்டையை - என் வியர்வையாலும் உழைப்பாலும் வெங்குருதிச் சேற்றாலும்கூட உருவான இந்தப் பாசறையை - உன் போன்ற உடன் பிறப்புகள் பலர், தீக்குளித்தும் - அடக்குமுறை வேல்களை நெஞ்சில் ஏந்தியும் - வெட்டுண்டும் - வெஞ்சிறை புகுந்தும் - ஆகாயமானதும் எழுப்பியுள்ள இனமான உப்பரிகையை; ஆமாம் தமிழர்களின் உயிர் மூச்சாம் இந்தக் கழகத்தையே தகர்த்துத் தரைமட்டமாக்குவேன் என்றொருவர் சொல்லக் கேட்டபிறகும் சொரணையற்ற பிண்டமாய், சோற்றுத்துருத்தியாய், இருக்க முடியுமா?

இருந்தால் அந்த உடலில் தமிழ் ரத்தம் ஓடுகிறது என நம்ப முடியுமா?

தொட்டிலில் சிரிக்கும் குழந்தையைக் கௌவிச் செல்ல ஓநாய் பாய்ந்திடும்போது - அருகிலிருக்கும் தாய், அவள் உயிர் தப்பினால் போதுமென்றா ஓடுவாள்?

இளந்தளிரை வெடுக்கெனத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு, ஓநாய்க்குத் தன்னை இரையாக்கினாலும் பரவாயில்லை; தன் குழந்தையைக் காப்பாற்றிட வேண்டுமென்று தானே எதிர்த்துப் போரிடுவாள்!

கழகம் காப்பதில் அந்தத் தாயாக நானும் நீயும் இருக்க வேண்டிய நேரம் வந்து விட்டது!

காக்கப்படுவது கழகமாகவும், கால் ஒடிய துரத்தப்பட வேண்டியது ஓநாயாகவும் இருந்திடல் வேண்டும்! - கழகத்தை ஒழிக்கப் போகிறார்களாம்- அழிக்கப் போகிறார்களாம் - துரத்தப் போகிறார்களாம் - துவம்சம் செய்யப் போகிறார்களாம் - முடியுமா; நீ இருக்கும் வரையில்! முடியாது! முடியவே முடியாது!

உடன்பிறப்பே; கழகத்தை முற்றாக ஒழிப்பது என்ற கர்வமிகுந்த பேச்சைக் கேட்டபிறகு அமைதி! அமைதி! எனத் தலைவர் அண்ணாவைப் போல் அறிவுறுத்திக் கொண்டிருக்கும் நான்; அண்ணன் தளபதி அழகிரியைப் போல் ஆவேசங் கொண்டு நிற்கிறேன்!

<u>என்னை வீழ்த்தி விடலாம்!</u>
<u>என் இதயத் துடிப்பாம்</u>

கழகத்தை வீழ்த்த முடியாது!
என் உயிரை நிறுத்திவிடலாம்!
என் உயிர் மூச்சாம்
கழகத்தின் உயிரைப் போக்க முடியாது!

இந்த உறுதியான நம்பிக்கை மொழியை;

உன்னை நம்பித்தான்
உன் ஆற்றலை நம்பித்தான்
உன் ஓய்வறியா உழைப்பை நம்பித்தான் நான்
முரசறைகிறேன்!

அன்புள்ள
மு.க.
01-04-1991

1714. இன்றைய கடிதம்! இல்லை; கடிதங்கள்!

உடன் பிறப்பே,

இன்று ஒரு வித்தியாசமான கடிதம்!

என்செய்வது தவிர்க்க முடியாத அளவுக்கு அவசியம் ஏற்பட்டதால் இந்த பாணியில் இந்தக் கடிதம் எழுத நேரிட்டதற்காக எனக்கே வருத்தமாக இருக்கிறது.

தம்பி ஏ.கே.வில்வம் எழுதியுள்ள ஒரு கட்டுரை முரசொலியில் வெளிவந்ததை நீ படித்திருப்பாய்.

"குறிப்பும் சிறப்புமாக - கலைஞரின் படைப்பு கள்; அவை நாடகமானாலும் - நவீனமானாலும் - கற்பனை சித்திரமானாலும் - கதையானாலும் - திரைப்படங்களானாலும் - பெண்களுக்காகவே அவர் பேனா பரிந்து பேசும்! வாதாடும் - வக்காலத்து வாங்கும்! நியாயம் பேசும் - நீதி கேட்கும் "

என்று வில்வம் குறிப்பிட்டிருப்பதைப்போல மருத நாட்டு இளவரசி, மந்திரிகுமாரி, மணமகள், பராசக்தி, பணம், திரும்பிப்பார், மனோகரா, பூமாலை, பூம்புகார் போன்ற அன்று எழுதிய திரைப் படங்களானாலும், நீதிக்குத்தண்டனை, பாலை வன ரோஜாக்கள், புயல்பாடும் பாட்டு போன்ற அண்மைக்காலத்தில் எழுதிய படங்களானாலும் சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட அந்தத் திரைப்படங் கள்; பெண்ணின் பெருமை கூறுவதாகவே அமைந்தவை என்பதை நீ அறிவாய்!

எனது புதினங்கள் பொன்னர் சங்கர் ஆகட்டும்; தென்பாண்டிச் சிங்கமாகட்டும், பாயும் புலி பண்டாரக வன்னியன் ஆகட்டும் - பெண்ணின் பெருமை போற்றியே எழுதப்பட்டவையாகும்!

கலை, இலக்கியம் இவற்றில் மட்டுமல்ல, அரசியலிலும் - அந்த அரசியல் வழிவந்த ஆட்சியிலும்;

- பெண்ணுக்கு சொத்துரிமைச் சட்டம்
- பெண்களுக்கு வேலை வாய்ப்பில் 30 சத விகிதம் என்ற அரசு ஆணை
- ஆரம்ப பள்ளி ஆசிரியர்களாக பெண்களே நியமனம் என்ற உத்திரவு.
- ஏழைப்பெண்களுக்கு இளங்கலைப் பட்டப் படிப்புவரை இலவசக் கல்வி - அத்திட்டத் திற்கு நாகம்மையார் நினைவுத் திட்டம் எனத் தலைப்பு.
- உள்ளாட்சி நகராட்சி மாநகராட்சி தேர்தல்களில் பெண்களுக்கு 30 சத விகித இட ஒதுக்கீடு.
- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திட்டம் என்ற தலைப்பில் ஏழைப் பெண்களுக்கு ஐயாயிரம் ரூபாய் திருமண உதவி.
- முத்துலட்சுமி ரெட்டி நினைவுத் திட்டமாக கருவுற்ற ஏழைப்பெண்களுக்கு இருநூறு ரூபாய் நிதி உதவி.
- டாக்டர் தர்மாம்பாள் நினைவுத் திட்டமாக விதவைகள் மறுமணத்திற்காக ஐயாயிரம் ரூபாய் வழங்கும் நடைமுறை.
- அஞ்சுகம் அம்மையார் நினைவுத் திட்டமாக கலப்பு மணத்தை ஊக்கப்படுத்த ஐயாயிரம் ரூபாய் நிதி அளிக்கும் திட்டம்.

இத்தனை திட்டங்களும் இன்னும் பல சாதனைகளும் பெண்களுக்காகவே அறிவிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

இவற்றையெல்லாம் தமிழகத் தாய்மார்கள், தேர்தல் நேரத்தில் நினைவுகூர்ந்து தீர்ப்பளிக்க முனைந்தால் என்ன செய்வது என அஞ்சிய சிலர்; என்னைப் பெண்களுக்கு எதிரி என்பது போல சித்தரிக்க முயலுகின்றனர்.

அவர்களின் திசை திருப்பும் காரியத்தின் காரணமாக; கழகமும் சரி - நானும் சரி - கழக அரசும் சரி; தமிழகத்துத் தாய்க்குலத்திற்கு எத்தகைய உரிமையும், பெருமையும், மதிப்பும், மரியாதையும்

அளித்து வருகிறது என்பதை உன் போன்ற உடன்பிறப்புகள் தொகுத்துச் சொல்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பேற்பட்டிருக்கிறது.

பீகார் மாநிலத்தில் பாட்னா மாநாட்டில் நான் பேசியதைத் திரித்துக்கூறி ஆதாயம் தேடப் பார்க்கிறார்கள்.

யார் அவர்கள் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு: சுமார் ஓராண்டுக் காலம் தெருமுனைக் கூட்டங்களில் மேடைகளில் நின்றும், ஏடுகளில் அறிக்கை விட்டும், பேட்டி அளித்தும் பெண் இனத்தின் கீர்த்திக்கே சமாதி கட்டியவர்கள்!

எழுதக் கை கூசுகிறது எனக்கு! எம்.ஜி.ஆர். எனது நண்பர்! அவர் இல்லை இப்போது! அவரது தொண்டர்கள் இருக்கிறார்கள்! அவரை இதய தெய்வம் என்று இன்றைக்கும் போற்றுகிற தொண்டர்கள் இருக்கிறார்கள்! ஆனால் அந்த இதயதெய்வத்தின் துணைவியார் ஜானகி அம்மையார் அவர்களை; இன்றைய அ.தி.மு.க. தலைவி எத்தகைய வார்த்தைகளால் ஏசிப் பேசினார்! எம்.ஜி.ஆர்; யாரைத் தனது மனைவி எனக் கொண்டு வாழ்க்கை நடத்தினாரோ; யாருக்குத் தாலி கட்டிக் குடும்பம் நடத்தினாரோ; அந்த ஜானகி அம்மையார் எம்.ஜி.ஆர். அவர்களின் மனைவியே அல்ல என்று இன்றைய அ.தி.மு.க. தலைவி அறிக்கை விடவில்லையா? அத்துடன் முடியவில்லை ஆபாச அர்ச்சனை! ஜானகி அம்மையார்மீது அ.தி.மு.க. தலைவியும், அந்தக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர்கள் கூட்டத்தில் ஒருவராக இன்றுள்ள நாவலர் அவர்களும் என்ன சொன்னார்கள், என்ன பேசினார்கள், அத்தனையும் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக அச்சாகி இன்றைக்கும் ஆதாரங்களாக தேதி வாரியாக இருக்கின்றனவே!

கொலுமண்டபத்தில்: ஆமாம் - மனோகரா படத்தில் - புருஷோத்தமனின் மனைவி பத்மாவதி தேவியைப் பார்த்து (வசந்தசேனையின் சூழ்ச்சியாலும் தூண்டுதலாலும்) சொல்லப்பட்ட ஒரு வார்த்தையைக் கேட்டு மனோகரன் துடித்தானே; அந்த வார்த்தையை அல்லவா அ.தி.மு.க. தலைவியும், நாவலரும் அன்றைக்கு; பதவுரை விளக்க உரை, விரச உரை எனும் விதத்தில் அறிக்கைகளாகவும் பேட்டிகளாகவும் விடுத்தனர்.

அப்போது தன்னை வளர்த்த தலைவனுக்காகவும் தலைவனின் துணைவியாருக்கு இழைக்கப்படும் களங்கத்தைப்

போக்குவதற்காகவும் நண்பர் ஆர்.எம். வீரப்பனைப் போன்றவர்கள் வெகுண்டெழுந்து விடுத்த பதில்கள் எல்லாம் சாதாரணமா?

10.6.1968-ல் ஆர்.எம். வீரப்பன் அவர்கள் ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இன்றைய அ.தி.மு.க. தலைவியை "ஒரு கேடு கெட்ட பெண்" என்று குறிப்பிட்டு (அதற்குமேல் வீரப்பன் வெளியிட்டிருந்த விபரங்களை என்னால் திரும்ப எழுத முடியாது) எவ்வளவு கொடூரமாகத் தாக்கியிருந்தார்.

அவ்வளவு ஏன்; அ.தி.மு.க. தலைவியே தன்னைப்பற்றி "குமுதம்" பத்திரிகையில் தானே கொடுத்த பேட்டியை ஒருமுறை இப்போது மீண்டும் படித்துக் கொள்ளலாமே!

இன்று வேடிக்கை என்னவென்றால், நான் பாட்னா மாநாட்டில் பண்பாட்டுக்கு விரோதமாகவோ - பெண் குலத்திற்கு எதிராகவோ - எதுவும் பேசாததைப் பேசியதாகக் கூறி மக்களை ஏமாற்றப் புறப்பட்டிருக்கும் இவர்கள் எல்லாம் "பெண்குலத்தை" எப்படி மரியாதையாகப் பேசினார்கள்: நடத்தினார்கள் என்று தெரியாதா?

திண்டுக்கல் மாலா என்ற இளம்பாவையை - வரதட்சிணைக் கொடுமைக்காகத் தீயிட்டுச் சாம்பலாக்கியவர்கள்; இன்று தெருவில் நின்று கூவுகிறார்கள்: பெண்ணின் பெருமை காப்போம் என்று! சிரிப்பதா? அழுவதா என்றே தெரியவில்லை !

1972 டிசம்பர் முதல் தேதி நிகழ்ச்சியை சட்டசபையில் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு முன்னே டிசம்பர் 2-ம் நாள் சப்தமிட்டு விளம்பரப்படுத்திய சிங்கம்புணரியார்கூட இன்று என்மீது சீறி விழுகிறார்!

நாராச நடையில் ஜானகி அம்மையாரை: அதாவது எம்.ஜி.ஆரின் துணைவியாரை நடுத் தெருக் கூட்டத்தில் ஏசிய நாவலர்; எனக்குப் பெண்ணின் பெருமை கற்றுத்தர முற்படுகிறார்!

தனது தலைவனின் தாரத்தை இகழ்ந்த ஒரு பெண்ணை: அன்று மிக மிக மிகத் தரக்குறைவான வார்த்தைகளால் அர்ச்சித்து அறிக்கை விடுத்த நண்பர் வீரப்பன் கூட; இத்தனை நாள் எங்கிருக்கிறார் எனத் தெரியாமல் இருந்து திடீரெனப் புறப்பட்டிருக்கிறார்! -

தி.மு.க.வும், அ.தி.மு.க. (2) கட்சியும் தொகுதி உடன்பாடு செய்து கொள்ளலாம் என்று வந்த செய்திகளை வைத்துக் கொண்டு

"தி.மு.க. மேடையில் அ.தி.மு.க. கொடியா? முன்பு நாங்கள் இரண்டாகப் பிரிந்து நின்றோம். எனவே இடையில் புகுந்து ஆட்சிக்கு வந்து விட்டார்கள். தி.மு.க.வை மக்கள் ஓடஓட விரட்டுவார்கள்!" என்று கர்ச்சித்துவிட்டு; "எங்கள் தங்கத் தலைவியைக் கருணாநிதி தாக்கிப் பேசலாமா?" என்று என்னையும் மிகக் கடுமையாக விமர்சித்துள்ளார் என சென்னை மாலை ஏடு பெரிய செய்தி வெளியிட்டுள்ளது.

சூளைமேட்டில் ஒரு எம்.ஜி.ஆர். சிலையைத் திறந்துவைத்துவிட்டுத்தான் அவர் இவ்வளவு சூடாகப் பேசியுள்ளார்!

அந்த முகாமில் இருப்போர் சிலர். இந்த நேரமறிந்து பேசுகிறார்கள்! அது புரிகிறது எனக்கு! என்மீதுள்ள சினமல்ல காரணம்! எல்லாம் "சீட்" பிரச்சினைதான்! தொலையட்டும், என் கால் லாபம் கிடைத்தால் சரி! மகிழ்ச்சி.

ஆனால் ஒன்று, அந்தக் கூட்டத்தில் நண்பர் வீரப்பன் அவர்கள் - தி.மு.க.வும் திருநாவுக்கரசுவின் அ.தி.மு.க.(2)ம் தேர்தல் உடன்பாடு என்ற செய்தியை எடுகளில் படித்துவிட்டு, இப்படி ஆத்திரப்பட்டு - இருகொடியும் சேர்ந்து பறப் பதா எம். ஜி. ஆர்.படம் தி.மு.க. மேடையில் இருப்பதா, என்றெல்லாம் கோபத்தில் கொந்தளித்திருக்கிறாரே - அதை நினைத்துத்தான் ஆச்சரியப்படுகிறேன்!

சில நேரங்களில் சில மனிதர்கள்" என்ற நண்பர் ஜெயகாந்தனின் புத்தகத் தலைப்புதான் என் நினைவுக்கு வந்தது!

அத்துடன் மற்றொன்றும் நினைவுக்கு வந்தது!

15.4.1989 ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் எனக்கு எழுதிய கடிதம்!

அந்தக் கடிதத்திற்குப் பிறகு நானும் அவரும் தனியாகச் சந்தித்து இரண்டொரு முறை நீண்ட நேரம் பேசியதும் உண்டு!

நான் பத்திரமாக பாதுகாத்து வைத்துள்ள அந்தக் கடிதத்தை அப்படியே இந்தக் கடிதத்தில் இணைத்துள்ளேன் - நீயும் படித்துப் பார்.

இதோ அந்தக் கடிதம்:

15.4.69

“மாண்புமிகு தமிழக முதல்வர்

பேரன்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கட்கு, வணக்கம்... தமிழகத்தின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில், புரட்சித் தலைவரின் பெயரையும், புகழையும் பயன்படுத்திக்கொண்டு அடாவடி அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் மோசடிக் கூட்டத்தை முறியடித்து, இலட்சக்கணக்கான புரட்சித் தலைவரின் உண்மையான தொண்டர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவர்களை மனம்மாறச் செய்வதற்கும், மீண்டும் உண்மையான திராவிட இயக்கங்களின் ஒற்றுமை உணர்வுகள் வளர்வதற்கும் சில நடவடிக்கைகளை அருள்கூர்ந்து தாங்கள் மேற்கொள்ள வேண்டுமென அன்போடும், உரிமையோடும் தங்களின் மேலான பரிசீலனைக்கு வைக்க விரும்புகிறேன்.

கடந்த 15 ஆண்டுகளில் எப்படியோ, வளர்க்கப்பட்டுவிட்ட விரோத உணர்வுகளை, உணர்ச்சிகளைப் போக்கடிக்கவும், இயலுமானால் நட்புறவாக மாற்றவும் அடிப்படையாகச் சில உணர்வுகளை நமது கழகத்தினரிடையேயும், பேச்சாளர்களிடையேயும், குறிப்பாக மேல் மட்டத் தலைவர்களிடையேயும் உண்டாக்க வேண்டிய முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்று நம்புகிறேன்.

இந்த முயற்சி என்பது அவ்வளவு சுலபத்தில் நடைபெறாது என்பதை நான் உணருகிறேன்; என்றாலும், எதிர்காலத்தில் ஏற்பட வேண்டிய கட்டாயமான நல்ல விளைவுகளுக்காக, தாங்கள், தியாக உணர்வோடு, எதையும் தாங்கும் இதயம் பெற்றவர் என்பதை எடுத்துக்காட்டும் வகையில், “நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும், நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்” என்ற தூய உணர்வோடு சில நட

வடிக்கைகளை மேற்கொண்டால், நமது இயக்கத்தவரும் அந்த வழியில் நடைபோடத் தொடங்கி விடுவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

1944-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் புரட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டார்கள். ஆனால் அது தொடர வில்லை; தொடரவில்லை என்பது மட்டு மல்ல, முழுமை பெறாமலே முறிந்து விட்டது....

ஆனால் 1959-ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் தங்களுடைய தோழமையால், முயற்சியால், தி.மு.கழகத்தில் இணைந்தார்கள்.

16 ஆண்டுகளுக்கு பிறகு தங்களால் கழகத்தின் பொருளாளராக ஆக்கப்பட்டார்கள்.

1972-ஆம் ஆண்டில் விரும்பியோ, விரும்பாமலோ இயக்கத்தின் நிறுவனராக, பிறகு தமிழகத்தின் முதல்வராக மாறியதற்கும் எப்படியோ தாங்கள் தான் காரணமாக இருந்தீர்கள் .... "பாரத ரத்னா பட்டம் பெற்று இன்று மிகப் பெரிய புகழையும், பெருமையையும் புரட்சித்தலைவர் பெறுவதற்கு அவருடைய செயலும், சிறந்த குணமும், காரணமாக இருந்தாலும் அந்த விளக்கிற்குத் தூண்டுகோலாக அமைந்தவர்கள் தாங்கள்தான்.....

"புரட்சி நடிகர்" என்று அழைத்து மகிழ்ந்தீர்கள். செங்கை மாவட்டம் என்ற பெயரே, கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரத்திற்குச் சொந்தக்காராராக, செங்கை உடைய எம்.ஜி.ஆர். இருப்பதால்தான் அந்தப் பெயர் ஏற்பட்டது என்று பாராட்டிப் போற்றினீர்கள்,

தி.மு.க. என்றால் தெரியாத, கிராமப்புறத்து மக்கள் எம்.ஜி.ஆர். கட்சி என்று குறிப்பிட்டதைக் கண்டு மகிழ்ந்து அண்ணா அவர்கள் இதயக்கனி என்று பாராட்டி வாழ்த்தினார்கள்.

இவ்வளவு உறவுகளும், உணர்வுகளும் கடந்த 15 ஆண்டுக் காலத்தில் எப்படியோ மறக்கடிக்கப்பட்டு விட்டது.

புரட்சித் தலைவர், தங்களைக் குறிப்பிடும் போதெல்லாம் டாக்டர் கலைஞர் என்று அழைக்கத் தவறியதே இல்லை.... கட்சியையும் ஆட்சியையும் காப்பாற்றுகிற ஆற்றல் மிக்க தலைவர் என்பதை உளமார ஏற்றுத்தான் டாக்டர் நாவலர் முதல்வராக வருவதற்கு ஒப்புதல் அளிக்காமல் முழு மூச்சோடு தாங்கள் தான் முதல்வராக வர வேண்டும்; கட்சியின் தலைவராக வர வேண்டும் என்று பாடுபட்டு வெற்றி பெற்றார்கள் .....

கெட்ட காலமும், கயமைக் குணம் கொண்ட சிலரும் மேற்கொண்ட தகாத செயலால், தமிழகத்தில் நடக்கக் கூடாத சம்பவங்கள் நடந்தேறிவிட்டன. எனினும் எல்லாம் நன்மைக்கே என்று ஆறுதல் பெறுகின்ற வகையில் மீண்டும் தங்களின் ஒப்பற்ற தலைமையில் கழக ஆட்சி, அண்ணா அமைத்த அரசு, புரட்சித்தலை வரும், தாங்களும் காப்பாற்றிய திராவிட இயக்க அரசு காலத்தின் கொடையால் அமைந்து விட்டது.

இதை காப்பாற்றியாக வேண்டும். புகழையும், பெருமையையும் மேலும் மேலும் வளர்க்க வேண்டும்.

எனவே அருள் கூர்ந்து, ஏற்படுத்தப்பட்ட காயங்களை மறந்துவிட்டு, சந்தித்த துன்பங்கள், துயரங்களையெல்லாம் 67 ஆம் ஆண்டிற்கு முன்பு அனுபவித்தவைகளாக எண்ணி தங்களின் தியாக வரலாற்றின் பகுதிகளாக மாற்றுகிற ஆற்றல் தங்களுக்கு உண்டு ...

“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்” என்ற நெறி இன்றைக்கு இந்த மோசடி அரசியல் சூழ்நிலைக்கு இன்றியமையாத தேவை என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனெனில் என் போன்றோர் திராவிட இயக்க உணர்வுகளைக் காப்பாற்ற வேண்டுமென்று முயற்சிப்பவர்கள், களங்கமற்ற தூய நம்பிக்கையும் பாச வெறி உணர்வும் கொண்ட தூய தொண்டர் களைப் பலி கொடுக்கும் மோசடிக் கூட்டத்தோடு போராடவும்,

களத்திலே சந்திக்கவும் தங்களின் தூய உணர்வும், அன்புள்ளமும் துணையாகத் தேவைப் படுகிறது.

தயவு செய்து, 15 ஆண்டுக்கால எம்.ஜி. ஆர். அவர்களை மறந்துவிட்டு தங்களின் பழைய தோழர் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களை மனதிற்கொண்டு தங்களின் பேச்சுக்களில், செயற் திட்டங்களில், அறிவிப்புகளில் இணைத்துச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.....

தனிப்பட்டவர்கள் செய்த தவறுகளை எடுத்து விளக்குகிற பொழுது புரட்சித் தலைவரைத் தொடர்புபடுத்தாமல் விளக்குவதற்கு வழிகாட்டுங்கள்....

இல்லையேல், மோசடிக் கூட்டம் புரட்சித் தலைவரின் மீது பாசம் கொண்டுள்ள ஏழை எளிய மக்களைத் திசை திருப்பி விடுவதற்கு ஏதுவாகி விடுகிறது. வடுக்களையும், பழிகளையும் தாங்கிக் கொண்டுள்ள உள்ளங்களால் புரட்சித் தலைவரைப் பாராட்டுவதென்பது அவ்வளவு சுலபத்தில் முடியாத காரியம் என்பது எனக்குத் தெரியும்... என்றாலும் ஒரு நல்ல இலட்சியத்தை அடையப் பாடுபடுபவர்கள் தருகிற விலையில், பழிகளையும், பாவங்களையும் ஏற்றுக் கொள்வதும் அடங்கும் என்பது பேரறிஞர் அண்ணா நமக்குக் கற்றுத் தந்துள்ள பாடந்தானே....

என் உள்ளத்தில் எழுந்த உண்மையான தூய்மையான உணர்வுகளை, விளைவுகளைப் பற்றிக் கவலை கொள்ளாமல் எழுத்துக்களில் வடித்திருக்கிறேன். இந்த உணர்வுகள் தங்கள் உள்ளத்தில் சிறிய கிளர்ச்சியை ஏற்படுத்தினாலே எனக்கு மன நிறைவு கிடைக்கும்... இக்கடிதத்தில் உள்ள கருத்துக்கள் தாங்கள் ஏற்றுக் கொள்ளவோ, சிந்தனைக்குரியதாகவோ அமையுமானால், அருள்கூர்ந்து

நாளை நடைபெறவுள்ள திரை உலக பவள விழாவில்

1. ஆண்டுதோறும் "எம்.ஜி.ஆர். விருது" என்று திரையுலகிற்கு வழங்குவதாக அறிவிக்கலாம்.

2. குடியரசுத் தலைவர் திறப்பதாக விருந்த எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் முறையான தொடக்க

விழாவை மீண்டும் குடியரசுத் தலைவர் திறப்பதற்கு ஒரு விழாவை நாளை விழாவில் அறிவிக்கலாம்....

ஏதாவது ஒரு போக்குவரத்துக் கழகப் பிரிவிற்கு எம்.ஜி.ஆர். பெயரை இந்தச் சட்டமன்றத் தொடர் முடிவதற்குள் அறிவிக்கலாம்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, தங்களின் உரைகளில் வாய்ப்புக் கிடைக்கிற போது எம்.ஜி.ஆர். அவர்களின் சிறந்த திட்டங்களைப் பாராட்டி, அதை மேலும் விரிவு படுத்துவோம் என்று பாராட்டினால், உண் மைத் தொண்டர்கள் பெருமகிழ்ச்சியடைவார்கள்.....

காலமெல்லாம் எதிர்த்தோம், அவர்களை வென்றுதான் ஆட்சி அமைத்தோம்..... ஆனால் அவர் மறைந்ததற்குப் பிறகு பெருந்தலைவர் காமராஜர் என்று பாராட்டுகிறோம்.

எவ்வளவு கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் காலமானவர்களைப் பாராட்டுவது மரபு. ஆனால் புரட்சித் தலைவர் நம்முடைய தோட்டத்தின் நறுமலர். அண்ணாவின் இதயக்கனி.... கலைஞரின் நாற்ப தாண்டுக்கால நல்ல குடும்ப நண்பர். உற்ற சகோதரர்... இப்படிப்பட்டவர்களின் புகழ் பாடும் ஒரு தொண்டனின் உரிமைக்குரல் இக்கடிதம்... நான் எந்தத் தகுதியும் பெற்ற வனில்லை; ஆனால் உண்மைத் தொண்டன்...

சென்னை

அன்புள்ள,

15.4.89

இராம வீரப்பன்

படித்தாயா கடிதத்தை! நண்பர் வீரப்பன் கடிதத்தில் வைத்த கோரிக்கைகளை; எம்.ஜி.ஆர். விருது, எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் திறப்பு விழா இரண்டை நிறைவேற்றி விட்டேன்.

ஏன்; அதற்கு மேலும் கூட எம்.ஜி.ஆர். நினைவிடம் - கட்டப்படாமலே கிடந்ததை; உடனடி ஆணை பிறப்பித்து பல லட்ச ரூபாய் செலவில் அழகுற அமைத்திட்டேன்!

ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது அந்த நினைவிடம் சென்று மலர் வளையம் வைத்த நிகழ்ச்சிகளும் உண்டு!

அவர் நினைவாகச் செய்திட இன்னும் சில எண்ணியிருந்தேன்; அவற்றை அறிவிக்கும் நிதி நிலை அறிக்கை வருவதற்கு: முன்பே ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது!

1989-ல் நண்பர் வீரப்பனுக்கு ஏற்பட்ட உணர்வு: 1990ல் நண்பர் திருநாவுக்கரசுக்கும் அவருடன் அ.தி.மு.க. (2)வை நடத்துகிறவர்களுக்கும் ஏற்படக் கூடாது என்று வீரப்பன் அவர்கள் எதிர்ப்புக் குரல் கொடுப்பது என்ன நியாயம்?

இதனை நீ மட்டும் சிந்தித்தால் போதாது நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் உண்மைத் தொண்டர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதற்காகவே; இன்றைய கடிதம்! இல்லை கடிதங்கள்!

அன்புள்ள,

மு.க.

03-04-1991

1715. தவமிருப்போராக நாம்; வரம் தருவோராக அவர்களா?

உடன்பிறப்பே,

"உண்மையான கூட்டாட்சி முறை (Federalism) ஏற்றுக் கொள்ளப்பட்டு, மாநிலங்களுக்கு முழுமையான சுயாட்சி அளிக்கப்பட வேண்டும் - இல்லாவிட்டால் டெல்லியில் உள்ள மாநில அரசுகளின் இல்லங்கள் அந்தந்த மாநிலங்களின் தூதுவராலயங்களாக மாறிவிடும்"

இந்த வாசகத்திற்குப் பொருள் புரிகிறதா உனக்கு?

"மாநிலத்தில் சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி என்பதை ஒப்புக் கொள்ளாவிட்டால்; மாநிலங்கள் தனித்தனி நாடுகளாகப் பிரிந்து அந்த நாடுகளுக்கான தூதுவராலயங்கள் டெல்லியில் அமையும்" என்பதுதான் மேலே கண்ட வாசகத் நிற்குப் பொருள்!

ஏ; அப்பா! இது என்ன பயங்கரமான எச்சரிக்கையாக இருக்கிறதே!

திரைமறைவில் தேசவிரோத உணர்ச்சி ஒளிந்து கொண்டிருப்பதுபோல் தெரிகிறதே! - "தெரிகிறது என்ன தெளிவாகவே புரிகிறது - இது தேசவிரோதம்தான்! அசல் தேச விரோதம்தான்! கடைந்தெடுத்த தேசவிரோதம்தான்" என்று இங்குள்ள காங்கிரஸ் கனவான்கள் மட்டுமல்ல, இந்தியத் திருமுடியாம் டெல்லி நகரில் உள்ள தேசபக்த சிரோன்மணிகளும்கூட இப்படித்தான் மேசையை முஷ்டியால் ஓங்கிக் குத்தியவாறு கூச்சலிட்டுச் சொல்வார்கள்.

ஒரிசா முதல்வர் பிஜூபட்நாயக் தனது மாநிலம் பெருமளவுக்குப் புறக்கணிக்கப்படுகிறது என்ற ஆதங்கத்தில் பேசியதை சில ஏடுகள் பிஜூவின் கூற்றுப்படி தவறாகப் பிரசுரித்துவிட்ட நிலையில்; அதைத் தூக்கிவைத்துக்கொண்டு இமயம் முதல் குமரி வரையில் இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் துள்ளிக் குதிக்கிறார்கள்! அள்ளி வீசுகிறார்கள்.

பிஜூபட்நாயக் அவர்களுக்கு நான் வக்காலத்து வாங்குகிறேனாம்: பிரிவினைவாதிகள் ஒன்று சோந்து விட்டோமாம் - 1962ல் அண்ணா அவர்கள் பிரிவினைக் கோரிக்கையை விட்டுவிட்டோம் என்று அறிவித்து - கழகத்தின் சட்ட திட்டங்கள் பொதுக்குழுவில் திருத்தப்பட்டு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கிற மாநில சுயாட்சிக் கோரிக்கையைக் கழகம் தொடர்ந்து விளக்கி வரும் நடைமுறையை அறிந்திருந்தும்கூட, வேண்டுமென்றே திட்ட மிட்டு நம்மைப் பிரிவினைவாதிகள் எனத் தூற்றுகின்ற வேலையிலிருந்து இன்னும் சிலர் விடுபட வில்லை!

மாநில உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு; மாநில நலன்கள் அலட்சியப்படுத்தப்பட்டு; மாநிலங்களை அடிமைகளாகவும், எடுபிடிகளாகவும் நடத்துகிற நிலை மத்தியிலே நீடித்துக் கொண்டே போனால்; இந்தியாவில் நாம் கட்டிக் காக்க எண்ணுகிற ஒற்றுமையும் ஒருமைப்பாடும் பட்டுவிடுமோ என்ற பயத்தில்தான்; மாநிலங்களை மத்திய அரசு தோழமை உணர்வுடன் - சமத்துவ நிலையுடன் - அவற்றின் சுயமரியாதைக்கு பங்கம் ஏற்படாத அளவில் நடத்துவதற்கு ஏதுவாக டெல்லியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டுமென நீண்டகாலமாகச் சொல்லி வருகிறோம்.

1972 ஆம் ஆண்டு மே திங்கள் 30 ஆம் நாள் டெல்லியில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் நான் பேசும்போது:

> "Decentralisation is particularly necessary if a large country like ours is to cope with the problems of a modern economy. It is in this sense that our demand for State autonomy should be understoodas a request for more efficient management of the country's resources, as a means to enable the Centre to be strong in areas of vital national concern, as a method of enabling the minimum demands of our people to be met in the quickest time and in the most efficient manner"
>
> ("நமது நாடு போன்ற பெரிய நாட்டின் தற்காலப் பொருளாதாரச் சிக்கல்களை சமாளிப்பதெனில் அதிகாரங்கள் பரவலாக இருப்பது அத்தியாவசியமானது. நாங்கள் எழுப்பியுள்ள மாநில சுயாட்சி கோரிக்கையின்

நியாயத்தினை இக்கோணத்திலிருந்து காண வேண்டும். நாட்டின் வளங்களை இன்னும் திறமையாக நிர்வகிப்பதற்கான வேண்டுகோளாகவும், நாட்டின் ஆதாரமான காரியங்களில் மத்திய அரசு வலுவுடன் இயங்குவதற்கான சாதனமாகவும், மிகத் திறம்படவும் மிக விரைவிலும் நம் மக்களின் குறைந்த பட்சத் தேவைகள் கிடைப்பதற்கான வழிவகையாகவுமே மாநில சுயாட்சிக் கோரிக்கையைக் கொள்ள வேண்டும்.")

என்ற அளவில் கழகத்தின் கொள்கையையும், கழக அரசின் கொள்கையையும் தெளிவாக்கி இருக்கிறேன்.,

நான் டெல்லியில் பேசியது 1972-ல்! 1968ஆம் ஆண்டிலேயே அண்ணா அவர்கள் முதலமைச்சராகத் திகழ்ந்த காலத்தில் சட்டப்பேரவையில் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியதோடு சிலம்புச் செல்வர் கூட்டிய மாநாட்டில் மாநில சுயாட்சிக்கான குரலையும் எழுப்பினார்! அந்த மாநாட்டைக் கூட்டியவர்: இப்போது அதனை மறந்திருக்க முடியாது!

அண்ணா கூறிய மாநில சுயாட்சி தத்துவம்: மத்திய அரசு வலுவோடு இருக்க வேண்டும். அப்படி வலுவோடு இருக்க மாநில அரசுகள் வலுவாக இருந்து தீரவேண்டும் என்பதாகும்!

எதற்கெடுத்தாலும் டெல்லியை நோக்கித் தவம் கிடக்கும் நிலைமை மாநிலங்களுக்கும் வரம் கொடுக்கும் தகுதி டெல்லிக்கும் இருப்ப தென்பது நியாயமற்ற ஒன்றாகும்!

அரிசி பற்றாக்குறையா?
டெல்லியை நோக்கித்
தமிழ்நாடு கையேந்த வேண்டும்!
டெல்லியிலே உள்ள அரசு
இஷ்டப்பட்டால் அரிசியைத்
தேவைக்கு மேலும் வழங்கும்!
இங்கே எதிர்க்கட்சி ஆட்சி
என்றால் அரிசி இருந்தாலும்
தர மறுக்கும்!

மண்ணெண்ணையா? டெல்லியிடம்தான் மண்டியிட வேண்டும்!

டெல்லியோ: தனக்கு ஆதரவான ஆட்சி மாநிலத்தில் இருந்தால் - இங்கு ஏழை வீடுகளில் விளக்கெரியவிடும்!

மாற்றுக்கட்சி ஆட்சி என்றால்; ஏழையின் வீட்டை இருளில் மூழ்க அடிக்கும்!

இந்த மனப்பான்மை மாறவேண்டுமென்றுதான் திரு.வி.பி.சிங் அவர்கள் பிரதமர் பொறுப்பை ஏற்றவுடன் சொன்னார்;

கிடைக்கிற ஒரு ரொட்டித் துண்டை மத்திய மாநில சகோதரர்கள் சமமாகப் பகிர்ந்து கொள்வோம்'

வி.பி.சிங் அவர்களின் 'சொல்ல மட்டுமல்ல செயலும் அவ்வாறே இருந்தது!

"தமிழகத்தின் தேவைகளை உணர்த்த முதலமைச்சர் அடிக்கடி டெல்லிக்கு வரத் தேவையில்லை. சென்னையிலிருந்து என்னிடம் தொலைபேசியில் பேசினாலே போதும்!

என அவர் சென்னைக் கடற்கரையில் உரையாற்றியது இன்றும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

ஆனால் ராஜீவ்காந்தி காலத்தில் அப்படியல்ல!

மாதந்தோறும் கொடுக்கப்பட்டு வந்த அரிசி, கழகம் ஆட்சிக்கு வந்ததும் மிக மோசமாகக் குறைக்கப்பட்டது.

இது ஒரு உதாரணம் போதும்; மாற்றுக் கட்சி ஆட்சி என்றாலே மத்திய அரசில் இன்றுள்ள அதிகாரக் குவியல் அமைப்பு முறையில், பொறுப்பேற்கிற பிரதமர்களைப் பொறுத்துதான் மாநிலப் பிரச்சினைகள் அணுகப்படும் என்ற உண்மை!

அதனால் தான் சட்டப்படி மாநிலங்களின் உரிமைகள் உத்திரவாதம் செய்யப்பட வேண்டும் என்பதிலும் - ஓர் இடத்தில் அதிகாரம் குவிந்து கிடப்பது ஆரோக்யமான ஜனநாயகத்திற்கும் நாம் அக்கறை காட்டுகிற ஒருமைப்பாட்டுக்கும் உகந்ததாகாது என்ற கருத்திலும் உறுதியாக நின்று அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டு மென்பதில் முனைப்புடன் இருக்கிறோம்!

இந்த உரிமைக் குரலுக்குத் தடைகள் - தடங்கல்கள் - ஏற்படும் பொழுதுதான், நான் இந்த மடலின் தொடக்கத்தில் எடுத்துக்காட்டியுள்ள வாசகத்தை நினைவூட்ட நேரிடுகிறது.

உண்மையான கூட்டாட்சி முறை (Federalism) ஏற்றுக் கொள்ளப்பட்டு, மாநிலங்களுக்கு முழுமையான சுயாட்சி அளிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் டெல்லியில் உள்ள மாநில அரசுகளின் இல்லங்கள்; அந்தந்த மாநிலங்களின் தூதுவராலயங்களாக மாறிவிடும்”

இந்த வாசகத்தை நானோ அல்லது நமது கழகமோ வெளிப்படுத்தியதாக எண்ணிக்கொண்டு எதிர் முகாமில் உள்ள சிலர் கத்தியைப் பரபரவென்று தீட்டிட ஓடுவர்; அறிவேன் நான்!

ஆனால் உடன்பிறப்பே, இந்தக் கடுமையான வாசகத்திற்குச் சொந்தக்காரர் நானல்ல; கழகமும் அல்ல!

1971 ஆம் ஆண்டு வீரேந்திர பட்டீல் அவர்கள் தலைமையிலான கர்நாடக காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் மாநிலங்களுக்கு முழுமையான சுயாட்சி தேவை என வலியுறுத்தப்பட்டது.

அந்தக் கோரிக்கையையொட்டி நண்பர் வீரேந்திர பட்டீல் அவர்கள் “The States” (தி ஸ்டேட்ஸ்) என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்தான்.

“It is feared at this rate there may be urgent demands for more Autonomy by the States and a day might come when different Houses and Bhavans of the States in Delhi are constrained to assume the Character of Embassies”

மேற்கண்ட வாசகத்தை கூறியிருக்கிறார்.

இதற்கான தமிழாக்கத்தினைத்தான் கடிதத்தின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

வீரேந்திர பட்டீல் அப்போது கர்நாடக காங்கிரஸ் தலைவர் - அதாவது பெருந்தலைவர் காமராஜ், மொரார்ஜி, நிஜலிங்கப்பா ஆகியோர் வழிநடத்திய சிண்டிகேட் காங்கிரசின் தலைவர் - அது மட்டுமல்ல கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சர்!

அவர் அன்று 1971 வாக்கில் வெளியிட்ட வாசகத்தை இன்றைய வசைபாடிகளின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

அன்புள்ள

மு.க.

05-04-1991

1716. வெற்றி முகட்டில் ஏறிடு!
வீரத்திருமுகம் காட்டிடு!

உடன்பிறப்பே,

லாயிட்ஸ் சாலையில் கலகலப்பும்; அண்ணா அறிவாலயத்தில் இறுக்கமான அமைதியும் காணப்படுவதாகக் கல்கியார் எழுதி: தனது பற்று பாசத்தை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறார்.)

எப்போதுமே சாலையில் கலகலப்பு சலசலப்பு இருக்கத்தான் செய்யும்! காரணம்: சாலையல்லவா?

ஆலயத்தில் இறுக்கமான அமைதியிருப்பதில் வியப்பில்லை! அதிலும் அறிவாலயம்! அது மட்டுமா அமைதியின் வடிவமான அண்ணா பெயரால் அமைந்துள்ள அறிவாலயம்!

கல்கி யாரையோ விண்ணில் தூக்கி நிறுத்தி நம்மை மண்ணில் புதைத்திடும் நோக்குடன் மிகுந்த பற்றுணர்வுடன் எழுதினாலும்கூட; உண்மையை மறைக்க முடியாமல் எழுதியிருக்கிறது!

உயரத்தூக்கிப் பறக்கவிட்டாலும்; ஊர்க்குருவி, பருந்தாக முடியாது! பற்றின் காரணமாக இந்த பழமொழியைக் கல்கித் திருக்கூட்டத்தினர் ஒருவேளை மறந்திருக்கக் கூடும்.

கல்கிக் கட்டுரையின் முத்தாய்ப்பு என்ன தெரியுமா?

“பல தி.மு.க.வினர், கட்சியில் கண்ணியத்தைக் காப்பாற்றுவதற்காகப் போட்டியிடக் கட்சியிடம் மனுத்தாக்கல் செய்திருந்தாலும் ஓர் உற்சாகத்துடன் செய்யவில்லை என்பது பளிச்சென்று தெரிகிறது.

கல்கியாரின் கணிப்பு இது! என்ன நவீனமான “எக்ஸ்ரே” கருவியை வைத்துக் கொண்டு, கல்கியின் கட்டுரையாளர் இதனைக் கண்டுபிடித்தாரோ தெரியவில்லை!

உற்சாகமாக மனு வாங்குவதென்றால்: குதித்துக் கும்மாளம் போட்டுக்கொண்டு பராசக்தி படத்தில் குணசேகரன் "கட்டி அழும்போதும் " தாண்டவக்கோனே, பணப்பெட்டி மேலே கண் வையடா தாண்டககோனே" என்பதுபோல சதிராடிப் பாடிக்கொண்டும் விசில் அடித்துக் கொண்டும் - அண்ணா அறிவாலயத்திற்குள் நுழைந்திருக்க வேண்டுமென்று அந்தக் கட்டுரையாளர் கருதுகிறார் போலும்!

"அறிவாலயத்தில் இறுக்கமான அமைதி வேட்பாளர் களாவதற்கு மனுச்செய்கிற கழகத்தினரிடம் உற்சாகமில்லை"

-என்று திசை திருப்பித் தேர்தலில் ஈடுபடும் வாக்காளர்களையும், கழகச் செயல்வீரர்களையும் சோர்வடையச் செய்து; தம்மவரை வெற்றி பெறச் செய்து - நம்மவரை வீழ்த்துவதற்கு கல்கி; தனக்கேயுரிய இயல்பான தந்திரத்தைக் கையாண்ட போதிலும் - அதனால் எந்தச் சோர்வும் எனக்கோ கழகத் தலைமைக்கோ திணை யளவுகூட ஏற்படவில்லை ! ஏற்படாது!

காரணம்; வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினர்களாக இரண்டு ஆண்டு காலமே பணியாற்றி இருக்கக்கூடிய கழகத்தினரின் தொகுதிகளிலும்கூட, பெரும்பாலான இடங்களில் இருபதுபேர் முப்பதுபேர் என்ற எண்ணிக்கையில் மனுச்செய்துள்ளனர்.

அந்தத் தொகுதிகளில் போட்டியிட முனைவோர், பரிந்துரை செய்யும் அமைப்புகளின் நிர்வாகிகள் எத்தகையோர் என்பதையெல்லாம் பல கடிதங்களில் விவரித்து எழுதியிருக்கிறேன் கழக இலட்சியங்களுக்காக சிறை சென்றோர், சித்ரவதையுற்றோர், வெட்டுண்டோர், வேதனைப்பட்டோர், மிசா கைதிகளாக அடைபட்டோர் என அந்தப் பட்டியல் காட்டும் தியாக வரலாற்றுத் தீபங்களையெல்லாம் அந்த மடல்களில் குறிப்பிட்டிருக்கிறேன்!

எனவே மனுச் செய்தோர் எண்ணிக்கையும் அவர் பற்றிய தியாக வரலாறுகளும் மகிழ்வைத் தரும் அளவுக்கும் உற்சாக மூட்டுமளவுக்கும் இருந்தன என்பதை எமது மனச்சாட்சி எமக்குக் கூறினால் போதுமானது.

இப்பொழுது இருக்கிற பிரச்சினையே அதுவல்ல!

ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான தந்திகள், கடிதங்கள் வருகின்றன!

இந்தத் தொகுதியைத் தோழமைக் கட்சிக்குத் தந்துவிடாதீர்கள்

இப்படிப் பல நூறு தந்திகள்! படிக்க நேரமில்லை!

இந்தத் தொகுதியில் இவருக்குத்தான் வெற்றி வாய்ப்பு! எனவே இவரையே வேட்பாளராக நிறுத்துங்கள்!

இப்படி நூற்றுக்கணக்கில் தந்திகள்! நேரிலேயே எடுத்துக்கூற பல பார்களில் இருந்து படையெடுப்புகள்!

எல்லா சட்டமன்றத் தொகுதிகளிலும் நாடாளுமன்றத் தொகுதிகளிலும் கழக வேட்பாளர்களே நிறுத்தப்பட வேண்டு மென்று பொதுக் குழுவில் ஒரு முடிவெடுத் திருந்தால்; அதற்குக் கட்டுப்பட்டு நடக்கநானும் பொதுச் செயலாளரும் தயாராகவே இருப்போம்!

தோழமைக் கட்சிகளுடன் இடங்களைப் பகிர்ந்துகொண்டு; தேர்தலில் போட்டியிடுவது என்ற முடிவை பொதுக்குழு எடுத்த பிறகு - கழக அமைப்புகளாயினும், கழக உடன்பிறப்புக்களாயினும் கருத்துக்களை எங்களுக்குத் தெரிவிக்கலாமே தவிர; இதைத்தான் செய்யவேண்டுமென்று வலி புறுத்துவதோ வற்புறுத்துவதோ கூடாது!

மாவட்டம், ஒன்றியம் போன்ற பல்வேறு அமைப்புகள் எந்தத் தொகுதியில் யார் கழக வேட் பாளராகப் போட்டியிடலாம்; வெற்றிக்கு யாருக்கு வாய்ப்பு உண்டு; எனக் கருத்துரை வழங்கலாம்! ஆனால் இறுதி முடிவு எடுக்கும் உரிமை தலை மைக்கேயுண்டு என்பது புதிய நிகழ்வு அல்ல! அண்ணா காலத்திலிருந்து தொடர்கின்ற நடைமுறையே ஆகும்!

அதைப்போலவே; தோழமைக் கட்சிகளுடன் எந்தெந்த தொகுதிகளைப் பகிர்ந்து கொள்ள லாம் என்பதற்கான கருத்து விளக்கங்களை வழங்கிடக் கழக அமைப்புகள் கடமையும் உரி மையும் பெற்றுள்ளன! ஆனால் தோழமைக் கட்சிகளுடன் விவாதித்து வெற்றி வாய்ப்புள்ள இடங்கள் பற்றி ஆய்வு செய்து நிலைமைக்கேற்ப முடிவு செய்து அறிவிப்பது தலைமையின் பொறுப்பே ஆகும்!

ஜனநாயகப் படுகொலையொன்றை நடத்துவதற்கு சந்திரசேகரை கைப்பாவை ஆக்கிக் கொண்டு திரு ராஜீவ் காந்தியும் திருமதி ஜெயலலிதாவும் நடத்திய சதிக்குத் தயாராகக் காத்திருந்து நீட்டிய இடத்தில் குடியரசுத் தலைவரும் கையெழுத்திட்டு அநியாயமாகக் கலைக்கப்பட்ட கழக ஆட்சி, மீண்டும் தமிழகத்தில் அமைய வேண்டும் என்பதும்: தவளையை நம்பி நட்புக் கொண்டு ஒன்றோடொன்று காலைக்கட்டிக் கொண்ட எலியைப்போல் ராவுக்கு அரசியல் சிநேகிதரான சந்திரசேகர் அவர்கள் புரிந்த துரோகத்தாலும் - மண்டல் கமிஷன் நடை முறைப் படுத்தப்படுவதை நேரடியாக எதிர்க்க முடியாமல் மறைமுகமாக எதிர்த்து இராமர் கோயில் பிரச்சினையை எழுப்பி, பாபர் மசூதியை இடிக்க ஒப்புக்கொள்ளாமல் தடுத்தவரின் ஆட்சிக்கு ஆதரவு தரமாட்டோம் என்று கூறி பாரதிய ஜனதா: காலை வாரி விட்டதாலும், கவிழ்ந்துபோன திரு.வி.பி.சிங் அவர்கள் மீண்டும் இந்தியப் பிரதமராக அமர வேண்டும் என்பதுமே நமது குறிக்கோள் என் நாட்டின் தேவையும்கூட!

இந்தத் தேவையை நிறைவு செய்திட, இந்திய வாக்காளப் பெருமக்கள் நாடாளுமன்றத் தேர்தலிலும் - தமிழக வாக்காளப் பெருமக்கள், சட்டப்பேரவைத் தேர்தலிலும் நல்ல தீர்ப்பு வழங்கிடக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ராஜீவ் காந்திக்கு வடக்கு மாநிலங்களில் ஆதரவு அலைமோதுகிறது என்றும் - மக்கள் கடலில் நீந்திச் செல்கிறார் என்றும் - ஏடுகளில் வெளியிடப்படுகிற செய்திகள், படங்கள் எல்லாமே வெறும் தயாரிப்பு: இயற்கை அல்ல!

ஆம்; தானாக வருகிற கூட்டத்திற்கும் தயாரிக்கப்பட்டு வருகிற கூட்டத்திற்கும் உள்ள வேறுபாட்டை எளிதில் உணர்ந்து கொள்ள முடியும்!

வடக்கேயுள்ள மாநிலங்களில் வி.பி.சிங் அவர்கள்தான் அடுத்து பிரதமர் என்கிற அளவுக்கு நாளுக்கு நாள் அமோகமான ஆதரவு பெருகிக் கொண்டே இருக்கிறது! தென்னகமும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலைப் போல சோடை போகாது! பெரிய வெற்றியைக் குவிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை!

செயற்கை சிலபேருக்கு; அதுவும் கல்கியார் போன்றவர்களுக்கு கலகலப்பாகத் தெரியக் கூடும்!

தேசிய முன்னணி, இடது சாரிக் கட்சிகள், தி.மு.கழகம் என்றாலே கல்கிக்குக் கசப்புதானே!

அதனால்தான், பாரதிய ஜனதாவின் பொருளாதாரக் கொள்கைகள் நல்லவை - அவற்றால் நாடு பயன் பெறும், என்று கல்கி, தலையங்கம் தீட்டுகிறது. அத்துடன் நிறுத்தவில்லை அந்த ஏடு!

"மண்டல் கமிஷன் அறிக்கையொன்றுதான் தங்களுக்குக் கை கொடுக்கும் என்பதாக தேசிய முன்னணி தலைவர்கள் என்றுவதாகத் தோன்று கிறது. இது குறுகிய கண்ணோட்டம் என்பதுடன் யதார்த்த நிலையை உணராத போக்கும் ஆகும்."

என்று கல்கி, தனது தலையங்கத்தை முடிக்கிறது!

மாநில அரசுகள் பலவற்றில் கடைப்பிடிக்கப்படுகிற சமூக அடிப்படையிலான இட ஒதுக்கீடு மண்டல் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதின் வாயிலாக, மத்திய அரசிலும் கடைப்பிடிக்கப்படத் தொடங்குமேயானால் கோடானு கோடி பின் தங்கிய மக்கள் மத்திய அரசிலும், மத்திய அரசு சார்புடைய பொது நிறுவனங்களிலும் படிப்படியாக வேலைவாய்ப்புகளைப் பெறுவர் என்பதும் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்கென அமைந்த இட ஒதுக்கீட்டின் முழுப்பயனைப் பெறுவார்கள் என்பதும், படித்துவிட்டு அலையும் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மக்களின் வேலைவாய்ப்பும் மேலும் அந்த சமூகத்தினர் படித்து முன்னேற கல்வி வாய்ப்பும் தொடர்ந்து கிடைத்திடும் என்பதும்; சமூக நீதிக்கான "வரப்பிரசாதம்" என்று வரவேற்கப்பட்டு, போற்றப்பட்டு, அதற்காக எந்த தியாகமும் செய்திடத் தயாராகி பதவியையும் இழந்த தேசிய முன்னணியின் கொள்கை; குறுகிய கண்ணோட்டமாம்; கல்கி விமர்சிக்கிறது இப்படி!

இந்த எரிச்சலில்தான் தேசிய முன்னணியை மட்டுமல்ல; தேசிய முன்னணியில் ஒரு அங்கமாக தொடக்க காலந்தொட்டு இருந்து வருகிற தி.மு.கழகத்தையும் வெற்றி பெற முடியாமல் தடுத்திடும் நோக்குடன்

குறுகிய கண்ணோட்டம் என்றும்
இறுக்கமான அமைதி என்றும்

எழுதிப்பார்த்து "ஆத்மதிருப்தி" கொள்கிறது!

தேசிய முன்னணியில் இருக்கிற கட்சிகளும் சரி; இடது சாரிக் கட்சிகளும் சரி; தேர்தல் கூட்டு சேரவோ - அல்லது தேர்தல் உடன்பாடு கொள்ளவோ; சந்தர்ப்பவாதமாக,

சமூக நீதி
மதச்சார்பற்ற தன்மை
ஜனநாயகப் பாதுகாப்பு
சமத்துவம்
சம தர்மம்
மாநில சுயாட்சி
மத்தியில் கூட்டாட்சி

போன்ற கொள்கைகளை வகுத்துக் கொண்ட கட்சிகள் அல்ல!

தி.மு.கழகத்திற்கும் மற்ற தோழமைக் கட்சிகளுக்கும் ஏற்கனவே இந்தக் கொள்கைகள் உண்டு!

உடன்பாடு கொண்டிருந்தாலும்; ஒருவேளை உடன்பாடு கொள்ளாமல் தனித்தனி கட்சிகளாகத் தேர்தலில் ஈடுபட்டிருந்தாலும் - அந்தந்தக் கட்சி களுக்குரிய தனித்தன்மையோடு மேற்கண்ட கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தி வெற்றி காணத்துடிக்கும் இயக்கங்கள்தான் அவை!

தனித் தனியாக நின்றுகூட இந்தக் கொள்கை - களுக்காகக் குரல் கொடுக்கமுடியும்!

எனினும் இந்தக் கொள்கைகளின் விரைவான வெற்றிக்காகவும்- நிலையானதும் நேர்மையானது. மான ஆட்சியைத் தருவதற்காகவும் - வலுவானதும், நாட்டை வளமாக்கிடக் கூடியதுமான நிர்வாகத்தை நடத்துவதற்காகவும் - நாமும் நமது தோழமைக் கட்சியினரும் போட்டியிடும் இடங் களைக் கலந்து பேசிப் பகிர்ந்துகொண்டு தேர்தல் உடன்பாடு காண முனைகிறோம்!

இந்தத் தொகுதி உடன்பாட்டுத் தோழமை முறை, தமிழ்நாட்டில் அண்ணா அவர்களால் பெரிதும் முயற்சி எடுக்கப்பட்டு; அரும்பாய் மலராய் ஆகிப் பின்னர் 1967-ல் கனியாக மாறிய ஒன்றாகும்!

அப்போதிருந்தே "இந்தத் தொகுதியை விட்டு விடாதே!" அந்தத் தொகுதியை விட்டு விடாதே!" என்று அந்தந்தக் கட்சிகளின் அமைப்புகளும்அந்தக் குறிப்பிட்ட தொகுதியில் போட்டியிட எண்ணியிருப்போரும் தொகை தொகையாகத் தந்திகளை அனுப்புவதுண்டு! தூதுக் குழுக்களை விடுவதுண்டு!

இப்போதும் அதே பழக்கம்;

"இந்தத் தொகுதி நமக்கே வேண்டும்" என்றும் "இந்தத் தொகுதியில் இன்னாரைத்தான் நிறுத்த வேண்டும்" என்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது!

கடமை உணர்வோடு, கண்ணியமாக கருத்துக்கள் வெளியிடப்படுவதை வரவேற்கும் தலைமையே தி.மு.க. தலைமை!

"கடமை"

"கண்ணியம்"

எனும் இரண்டு கனிகளை மட்டும் அறிஞர் அண்ணா நமக்குத் தந்துவிட்டுப் போகவில்லை!

"கட்டுப்பாடு"

என மூன்றாவது கனியும் தந்துள்ளார் என்பதை கழக அமைப்புகள் அனைத்தும் உணர்ந்திடல் வேண்டும்! உடன்பிறப்புகள் சிந்தித்துப் பார்த்துச் செயல்பட வேண்டும்!

உடன்பிறப்பே; உனக்கு
உற்சாகமில்லையாம்!

இப்படிக் கேலி செய்வோர்; கூனிக் குறுகிப் போகுமளவுக்கு கழகக் கொடியை உயர்த்திப் பிடித்திடு! வெற்றி முகட்டில் ஏறிடு! வீரத்திரு முகம் காட்டிடு! "வாழ்க கழகம்" என உன் வாய் ஒலிக்கட்டும்! அது வான் முகட்டை எட்டட்டும்!

அன்புள்ள
மு.க.
06-04-1991

1717. ஆற்றிடுக கடமை!

அளித்திடுக தேர்தல் நிதி!

உடன்பிறப்பே,

இன்னும் இரண்டொரு நாட்களில் தேர்தல் தேதி திட்டவட்டமாக அறிவிக்கப்பட இருக்கிறது. மாநில முழுதும் எல்லா மாவட்டங்களிலும் நமது மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அளவிலும், ஒன்றிய, நகர அளவிலும் - தொகுதிகள் அளவிலும் கழகச் செயல் வீரர்களின் கூட்டங்களை நடத்தி முடித்துள்ளனர். ஒரு சில மாவட்டங்களில் ஓரிரு நாட்களில் அந்தப் பணி நிறைவு பெற்றுவிடுமென்று மாவட்டச் செயலாளர்கள் தகவல் தந்துள்ளனர்.

சென்னையில் பகுதிக் கழக செயல் வீரர் கூட்டங்களைக் கூட்டுமாறும், அதற்கான நாள், நேரம் இவற்றை மாவட்டக் கழகத்திற்கு அறிவிக்குமாறும் சென்னை மாவட்டச் செயலாளர் அறிக்கை விட்டுள்ளார்.

எனவே தேர்தல் பணிகள் முடுக்கிவிடப்பட்டு நடைபெறத் தொடங்கியுள்ளன - முடுக்கிவிடப்பட்டுள்ளன - முடுக்கிவிடப்பட இருக்கின்றன என்ற மூன்று சட்டங்களாக செயல்படுவதைக் காண முடிகிறது!

சில நாட்களுக்குள்ளாக எல்லா மாவட்டங்களிலும், ஒன்றியங்களிலும், நகரங்கள், கிராமங்கள், பட்டி தொட்டிகள் அனைத்திலும் நாமும் நமது தோழமைக் கட்சிகளின் செயல் வீரர்களும் தேனீக்கள் என சுறுசுறுப்புக்காட்டி: தேசிய முன்னணி இடதுசாரிக் கூட்டமைப்பின் வெற்றிக் கொடியைப் பறக்கவிடப் பட்டாளத்துச் சிப்பாய்கள் எனப் பணிபுரியப் போகும் காட்சி, இப்போதே என் கண்ணுக்குத் தெரிகிறது!

ஊர்களில் பொதுக்கூட்டம் - தெருக்களில் பிரச்சாரம் - திண்ணைகளில் விளக்கங்கள்: இப்படி எப்போதும் மக்கள் மத்தியில் இருந்து கொள்கை முழக்கம் செய்திடல் வேண்டும்.

நமது தேர்தல் சின்னத்தை; ஒரு ஆள் வைத்து எழுதச் செய்யும்போது ஏற்படுகிற மகிழ்ச்சியை விட ஆயிரம் மடங்கு அதிக மகிழ்ச்சி , நமது இயக்கங்களில் செயல்வீரர்களே எழுதிடும் பொழுது நிச்சயமாக ஏற்படத்தான் செய்யும்!

அப்படியொரு காலத்தில், கரத்தில் தூரிகை பிடித்து சுவரில் எழுதியவன்தான். போஸ்டர் ஒட்டியவன்தான் எழுதுகிறேன்!

எனவே இப்படி அறிவுறுத்த எனக்கு உரிமை இருக்கிறதல்லவா?

ஏராளமானவர்கள் வருகின்றன வானொலி, தொலைக்காட்சி, என எத்தனையோ நவீனமான பிரச்சார சாதனங்கள் - ஆனால் இவற்றின் பெரும்பான்மையான தொண்டு: பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்து, பொய்யையே பயின்று, பொய்யையே மணந்து, பொய்யிலே வாழ்கின்ற பொய்த் தொண்டு என்பதை - வாக்காளர்களுக்கு எடுத்து விளக்க, நமக்குள்ள வசதி, வாய்ப்பெல்லாம் பொதுக் கூட்டங்களும், தெருமுனைப் பிரச்சாரங்களும், திண்ணை உரையாடல்களும்தானே!

தேர்தலில் நிற்க மனுச் செய்துள்ளீர்களே; எவ்வளவு செலவு செய்வீர்கள்? எனக் கேட்கும் போது எங்கள் எதிரே தலையைச் சொரிந்து கொண்டவர்களும், மெல்லச் சிரித்து அசடு வழிந்தவர்களும்தான் மிகப் பலர்!

1967 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நேரத்தில் நான் தான் கழகப் பொருளாளர். பத்து லட்ச ரூபாய் தேர்தல் நிதி திரட்டுவோம் என்று கடற்கரை கூட்டத்தில் அண்ணா அவர்களின் முன்னிலையில் அறிவித்துவிட்டு - "என்னடா தம்பி, வெறுங் கையால் முழம் போடுகிறாய்" என அண்ணாவிடம் சரியாக வாங்கிக் கட்டிக்கொண்டேன்.

இருப்பினும் உறுதி இழக்கவில்லை! 1966 முதல் 1967 தொடக்கத்திற்குள் ஓராண்டில் நாடு முழுதும் சுற்றியலைந்து நாடகம் போட்டு, கூட்டங்களில் வசூலித்து, கொடியேற்றப் பணம் வாங்கி, உணவு அருந்தக்கூட உண்டியலில் நூறு இருநூறு

போடு என நிபந்தனை விதித்து, விருகம்பாக்கம் தேர்தல் சிறப்பு மாநாட்டில் அண்ணா அவர்களிடம் பதினோரு லட்சம் ரூபாய் நிதியை நான் வழங்கிய போது "நிதி" என்று உன் பெற்றோர் முன்னரே அறிந்துதான் பெயர் சூட்டியுள்ளனர், என்று அண்ணா மகிழ்ந்து உரையாற்றினாரே. அப்போது பத்து லட்ச ரூபாய் தேர்தல் நிதி, ஒரு ஆட்சியையே அமைக்கப் போதுமானதாக இருந்தது!

ஆனால் இன்று? ஏப்ரல் ஏழு சென்னை தின மணி இதழில் "சாதாரண மக்களுக்கு எட்டாத தேர்தல்" எனத் தலைப்பிட்டு, தேர்தல் செலவுகள எப்படிப் பல மடங்கு உயர்ந்து விட்டன என்பதை விவரித்து ஒரு கட்டுரையே வெளியாகி யிருக்கிறது

கட்சித் தோரணம், கொடி, சுவரொட்டி, இவற்றுக்கு ஆகும் செலவு - வாகனப் போக்குவரத்துச் செலவு - ஏன், கட்சித் தொண்டர்கள் பருகும் காபி, டீ செலவு அனைத்தும் உயர்ந்து விட்டன என்று குறிப்பிடும் அந்தக் கட்டுரை, சாதாரண மக்களுக்கு எட்டாத தேர்தல் இதுவென்று முத்தாய்ப்பு வைக்கிறது!

உடன்பிறப்பே, நாம் சாதாரணமானவர்கள் தான் சாமான்யர்கள் தான்!

இந்தச் சாதாரணமானவர்கள்தான் 13 ஆண்டுக்காலம் எதிர்க்கட்சியாக இருந்தபோது - பல் வேறு போராட்டங்களையும் நடத்திக்கொண்டு - சிறைச்சாலைக்கும் அடிக்கடி சென்று வந்து பயங்கரமான வழக்குகளுக்காக நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்கிக்கொண்டு, சோதனைகளை, வேதனைகளைத் தொடாந்து அனுபவித்த காலகட்டத்தில் சுமார் இரண்டு கோடி ரூபாயை உன்போன்ற உடன்பிறப்புகள் உத்வேகத்துடன் வழங்கிட, அதனைக்கொண்டு 1987-ஆம் ஆண்டு அண்ணா அறிவாலயம் என்னும் எழில் மாளிகையை அமைத்துக்களித்தோம்!

அதன் தொடர்பாக ராயபுரத்தில் நமது அண்ணன் காலத்தில் வாங்கியதும் - களமாகிவிட்டது மான அறிவகத்தையும் கழக அலுவலகமாய் கண்ணுக்கு விருந்தாய் கட்டி முடித்திருக்கிறோம்.

சாதாரண, சாமான்ய மக்களின் பாசறைதான், எனினும் சிறு துளி பெருவெள்ளமெனப் பெருகி நிற்கும் காட்சி கண்டு; தேசிய முன்னணி தொடக்க விழாவுக்கு 1988-ஆம் ஆண்டு சென்னை

வந்திருந்த தலைவர்கள் எல்லாம் பாராட்டிப் பெருமை சேர்த்தனரே நமது உழைப்புக்கு நமது ஆர்வத்துக்கு! நமது ஆற்றலுக்கு

இப்போது வரும் தேர்தலில் - மாற்றார் முகாம்களில் மலையெனப் பணம் குவிந்திருக்கிறது! நிதியென்று அதற்குப் பெயர் இல்லை! தலை விதியே என்று பயந்து கொண்டு பலர் தந்தது! அந்தப் பணத்தோட்டாக்கள் இந்தத் தேர்தலில் நம்மீது பாயும் தோட்டா பட்டெனத் தெறித்து விழுமளவுக்கு பலம் வாய்ந்த நெருகரம் கொண்டது நமது அணி என்பதில் ஐயமில்லை! அதனால் அச்சமில்லை!

இருந்தபோதிலும் ஏழை வீட்டுக்கல்யாணம் என்றாலும்; சீமான் வீடுபோல "டிஷ்யூ" சேலை எடுக்காவிடினும் - எளிய கூறைப்புடவை ஒன்று எடுத்தாக வேண்டுமே - தங்க, வைர வளையல்கள் இல்லாவிடினும் கண்ணாடி வளையல்களா வது வேண்டுமே! நடனம், இசை, பேண்டுவாத் தியம், முழங்காவிடினும் உள்ளூர் நாயனமாவது மங்கல இசை எழுப்ப வேண்டுமே!

உடன்பிறப்பே, புரிகிறதா பொல்லாத உடன்பிறப்பாயிற்றே, உனக்கா புரியாது! -

அங்கு சுற்றி, இங்கு சுற்றி, எங்கும் சுற்றி அண்ணன் எதற்கு வருகிறான் என்று உனக்கா புரியாது!

தேர்தல் நிதி வேண்டும் என்பதற்குத்தான் இத்தனை பீடிகை!

நீயே உன் வசதிக்கேற்ப உன் கையில் உள்ளதை: இயன்றவரையில் தேர்தல் நிதியாக வழங்கிடு!

அதற்கென நிதிச் சீட்டுகள் அச்சடித்து, அது வலிக்கத் தேவையில்லை!

அந்தச் சீட்டுகளுக்கு தலைமைக் கழகம் முத்திரைகுத்தி ஒப்புதல் வழங்கிட இப்போது நேரமில்லை !

யாரிடமும் சென்று, யாரையும் கேட்டு, எவரையும் வலியுறுத்தி, வற்புறுத்தி - தேர்தல் நிதி பெற்றிட வேண்டாம்!

உன்னால் முடிந்ததை அனுப்பு! அல்லது நேரில் வந்து அண்ணா அறிவாலயத்தில் வழங்கு!

நீ சிறு தொகை தரினும் அது நம் இனப்பகை நொறுக்கும் படைக்கலன்!

நாட்கள் அதிகமில்லை;
இக்கடிதம் கண்டவுடன்
ஆற்றுக் கடமையை!

அன்புள்ள,
மு.க.
08-04-1991

குறிப்பு:- நிதி அனுப்ப வேண்டிய முகவரி

பொருளாளர்,
தி. மு.க. தலைமைக் கழகம்,
அண்ணா அறிவாலயம். அண்ணாசாலை,
சென்னை - 600 018

1718. கலைஞர் வேண்டுகோள்!

உடன்பிறப்பே!

ஏழை வீட்டுத் திருமணம்தான்; இருந்தாலும் சீமான் வீட்டைப் போல டிஷ்யூ சேலை, பட்டு வேட்டி பட்டு சட்டை, வைர வளையல் இல்லாவிடினும் ஒரு கூறைப் புடவை, கைத்தறி வேட்டி சட்டை, பெண்ணுக்கு கண்ணாடி வளையல்களாவது வேண்டுமல்லவா?

பொதுத் தேர்தலைச் சந்திக்கும் நம் நிலை அப்படித்தான்! அண்ணன், தம்பி, மாமன், மச்சான், அக்காள், தங்கை, இப்படி உற்றார் உறவினர் உதவியால் நடைபெறும் மணிவிழா! நடனம், இசை, பேண்டு வாத்தியம் எதவுமில்லாவிடினும் மங்கல நிகழ்ச்சிக்காக உள்ளூர் நாயனமாவது வேண்டுமல்லவா!

பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை எனச்சொல்லி; டெல்லியிலிருந்து கொண்டு வந்து கோடி கோடியாகக் கொடுக்கும் விமானங்கள்; அண்ணா அறிவாலயம் கோட்டத்தில் இறங்குவதில்லை! அதனை நாம் விரும்பியது மில்லை!

முதுகெலும்பில் புலி, வில், கயல் எனும் மூவேந்தர் கொடியைக் கட்டி 14-ஆம் வயதில் மொழிப் போர்க்களம் புகுந்து 67-ஆம் வயது வரையில் மூச்சைப் பிடித்துக் கொண்டு இந்த சமுதாயத்திற்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டவன் என்ற முறையில் உடன்பிறப்புத்தானே என்ற உரிமையுடன் கேட்கிறேன்;

நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்! என்று - தருவாய் என்ற நம்பிக்கையுடன் கேட்கிறேன்! நான் கேட்டு நீ என்றைக்குத் தயங்கியிருக்கிறாய் நிதி வழங்க! தியாகம் செய்ய! உழைக்க! ஒற்றுமையுடன் பணியாற்ற!

மத்தியில் தேசிய முன்னணி ஆட்சி! நமது மாநிலத்தில் தி.மு.க. ஆட்சி!

இது உறுதி! உறுதி!! உறுதி!!!

இந்த உறுதிக்கு உறுதுணையாக இருந்தது; உன் தொண்டு மாத்திரமல்ல - நீ வழங்கிய சிறு தொகையும் கூட என்ற உண்மையை உலகு அறிய வேண்டாமா?

உதவாதினி ஒரு தாமதம் -
உடனே குவியட்டும் தேர்தல் நிதி!

அன்புடன்,

மு. க.

10-04-1991

1719. உன் நினைவுக்கு ஒரு நிகழ்ச்சி!

உடன்பிறப்பே!

இந்த நேரத்தில் உன் நினைவுக்காக ஒரு செய்தி!

மொரார்ஜி தேசாய் தலைமையில் இருந்த ஜனதா ஆட்சி கவிழ்ந்து சரண்சிங் அவர்கள் காபந்து சர்க்காரின் பிரதமராக நீடிக்கிறார். சில மாதங்களில் 1980-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்படுகிறது. சரண்சிங் அவர்களின் அமைச்சரவையில் அ.தி.மு.க. சார்பில் அம்மையார் சத்தியவாணிமுத்துவும், நண்பர் பாலாபழனூரும் இருக்கிறார்கள். அப்போது சரண்சிங் அவர்கள் பிஜுபட்நாயக் அவர்களையும், மத்திய அமைச்சராக இருந்த கரூர் கோபால் அவர்களையும் தமிழ்நாட்டுக்கு அனுப்பி தி.மு.க.வையும், அ.தி.மு.க.வையும் ஒன்றாக இணைந்து அதரவு தருமாறு முயற்சி செய்யச் சொல்லுகிறார்.

பிஜுபட்நாயக்கும், கரூர் கோபாலும் என்னிடத்திலும் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலும் பேசுகிறார்கள். அதைத் தொடர்ந்து நானும் பேராசிரியரும் அதைப் போல அருமை நண்பர் எம்.ஜி.ஆர்., நாவலர், நாஞ்சிலார், ஆகியோரும் பிஜுபட்நாயக் முன்னிலையில் சென்னை சேப்பாக்கம் செம்பியன் விடுதியில் சந்தித்துப் பேசுகிறோம்.

தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் இணைந்தி, நான் கூறிய கருத்துகள்; பின்வருமாறு:-

1. கட்சிக்குப் பெயர் - அண்ணா அவர்கள்; திராவிடம் முன்னேற வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகமென சூட்டியுள்ளார்; எனவே திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரே நீடிக்க வேண்டும்.

2. அண்ணா உருவம் பொறித்த கொடி, கட்சியின் கொடியாக இருப்பதில் ஆட்சேபனை இல்லை.

3. எம்.ஜி.ஆர். அவர்களே முதலமைச்சராக தொடரலாம்.

4. கட்சிகள் ஒன்றாக இணையும்போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் யாருக்கும் அமைச்சர் போன்ற எந்தப் பதவியும் தேவையில்லை.

5. கட்சியின் தலைமை நிர்வாகிகள் யார் எவர் என்பதை, இரு கட்சிகளும் இணைந்த பிறகு இரு பொதுக் குழுக்களையும் ஒரு சேரக்கூட்டி கலந்து பேசி தேர்வு செய்து கொள்ளலாம்.

6. முக்கியமாக ஒரே நிபந்தனை:- பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு சமூக அடிப்படையில் என்று இருந்ததை எம்.ஜி.ஆர். அவர்கள் இப்போது வருமான அடிப்படையில் என்று உச்ச வரம்பு வைத்து ஆணை பிறப்பித்துள்ளார். அது திராவிட இயக்கக் கொள்கைகளுக்கும், பெரியார் அண்ணா லட்சியத்துக்கும் எதிரானது. எனவே எம்.ஜி.ஆர். அரசு அந்த ஆணையைத் திரும்பப் பெற வேண்டும்.

இந்தக் கருத்துக்களில் ஐந்தை எம்.ஜி.ஆர். அவர்கள் ஏற்றுக் கொண்டார். ஆறாவதாகச் சொன்ன நிபந்தனையை ஏற்றிடத் தயங்கினார். உண்மையைச் சொல்வதென்றால் அவர்கூட ஏற்றுக்கொள்ளத் தயாராகத்தான் இருந்தார். பின்தங்கிய மக்களுக்கு இடஒதுக்கீடு கொள்கை பிடிக்காத ஒரு சிலர், அவர் மனதைக் கலைத்து ஆறாவது கருத்தாக நான், சொன்ன அந்த நிபந்தனையை எம்.ஜி.ஆர். ஏற்கக் கூடாதெனக் கலகம் செய்து இணைப்பு முயற்சியையே கெடுத்து விட்டனர்.

பிறகு நாடாளுமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆர். அவர்களின் அ.தி.மு.க. கட்சி இரண்டே இடங்களைப் பெற்று பெரும் தோல்வி அடைந்தது. உடனடியாக எம்.ஜி.ஆர். அவர்கள் பின்தங்கியவர்களுக்கான இட ஒதுக்கீட்டுக்கு இனிமேல் வருமான உச்சவரம்பு இல்லை என அறிவித்துப் புதிய அரசாணை பிறப்பித்தார்.

கழக ஆட்சி 31 சதவிகிதம் என உயர்த்தியிருந்த பின்தங்கிய மக்களின் இடஒதுக்கீட்டையும் 50 சதவிகிதம் என உயர்த்தினார்.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால்; பிஜூபட்நாயக் வந்த போதே நான் கூறிய ஆறாவது நிபந்தனையை எம்.ஜி.ஆர். அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தால்; அதாவது எம்.பி. தேர்தல் தோல்விக்குப் பிறகு ஏற்றுக் கொண்டதை முன்பே ஏற்றுக் கொண்டிருந்தால் - தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் அன்றே இணைந்திருக்கும்.

இந்தச் செய்தியை இப்போதல்ல; அப்போதே நான் வெளியிட்டு - பல ஏடுகளில் வெளிவந்திருப்பதை நீயும் மற்றவர்களும் நினைத்துப் பார்ப்பதற்காகவே இந்தக் கடிதம்!

அன்புடன்,

மு. க.

11-04-1991

1720. பொங்கி எழ வேண்டும்!
புதுவேகம் காட்ட வேண்டும்!!

உடன்பிறப்பே!

தமிழ் மக்களின் புத்தாண்டு நாளாகக் கருதப்படும் சித்திரைத் திங்கள் முதல் நாளில் என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

என் கடன் பணி செய்து கிடப்பதே எனத் தொண்டுள்ளம் கொண்டோர், இந்த நாட்டுக்கும் இந்த சமுதாயத்திற்கும் தம்மை ஒப்படைத்துக்கொள்ள இந்நாளில் சூளுரை மேற்கொள்ளல் வேண்டும்.

அறிவுள்ள மக்கள் இல்லாத நாடு; அது சுதந்திர நாடாக இருப்பினும் அடிமைகளின் நாடே என்ற பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை வெற்றிபெறவும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற அண்ணாவின் குறிக்கோள் நிறைவேறவும் நாம் தொடர்ந்து தொண்டாற்றுவோம்.

அடித்தளத்து மக்கள், நடுத்தர வர்க்கத்தினர், உழைப்போர், ஒடுக்கப்பட்டோர், பின்தங்கிய மக்கள், மிகவும் பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், சிறுபான்மை சமுதாயத்தினர்; நல்வாழ்வும் உரிமைகளும் பெற்றிட, தடைக்கற்களைக் கடந்து தளராது நடவடிக்கை மேற்கொள்ளத் தடந்தோள் தட்டுவோம்!

எதிர்காலத்தை ஒளிமயமாக்க இளைய தலைமுறைக்கும், மகளிர் குலத்துக்கும் வாய்ப்புகள் வழங்குவோம். அதற்கென சட்டங்கள், திட்டங்கள் செயல்படுத்துவோம்!

நெறிமுறைகளுக்கு மாறாகவும் நீதிக்குப் புறம்பாகவும்; எழுதி வைக்கப்பட்ட அரசியல் சட்டத்திற்கு எதிராகவும் நடப்போர், மக்கள் மன்றத்தின் முன்னே நிறுத்தப்பட்டுள்ளனர்.

நல்ல தீர்ப்பு வழங்கி; மக்கள் மன்றம் தனது நடுநிலை மாறாத் தன்மையை நிலை நாட்டுமென அகிலமே ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

மத்திய ஆட்சிக்கு வி.பி. சிங் வருவது நிச்சயம்!

இங்கே மாநில ஆட்சிக்கு மீண்டும் கழகம்தான் பொறுப்பேற்கப் போகிறது!

நாடாளுமன்ற சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட நான், நீ என்று நமது கழக உடன்பிறப்புகள் நாள்தோறும் என்னிடமும் பேராசிரியர் அவர்களிடமும் படையெடுப்பது கண்டு எனக்கே ஒருபுறம் மகிழ்ச்சி! ஒருபுறம் வருத்தம்!

ஆம்; வலிமை கண்டு மகிழ்ச்சி!
வாய்ப்பு அளிக்க இயலவில்லையே
அனைவருக்கும்; என்பதால் வருத்தம்!

எனக்கு வழங்கும் வாய்ப்பைக்கூட மற்றொரு உடன்பிறப்புக்கு விட்டுத் தந்து, தேர்தல் பிரச்சாரப் பணிக்கு என்னை முழுமையாக ஒப்படைத்துக் கொள்ள கழகத்தின் அனுமதியை வேண்டி நிற்கிறேன்.

இந்த ஜனநாயகப் போர்க்களத்தில் ஒரு தொகுதி வெற்றி முக்கியமல்ல!

மிகப் பெரும்பான்மையான தொகுதிகளில் நமது அணியினரும் வெற்றி வாகை சூட வேண்டும்.

அதற்கான வியூகம் தேவை! தியாக மனப்பான்மை தேவை!

இந்தத் தேவை நிறைவு செய்யப்பட்டால்தான்; தொடக்கத்தில் நான் குறிப்பிட்டுள்ள சித்திரைத் திருநாள் சபதத்தை;

பெரியார்
அண்ணா
இருவரின் இலட்சிய வழி நின்று நிறைவேற்ற
இயலும்
புத்தாண்டு என பூரிப்பு கொண்டால் போதாது!
பொங்கி எழ வேண்டும்!
புதுவேகம் காட்ட வேண்டும்!

அன்புடன்,

மு. க.

13-04-1991

1721. போலி நாடகங்கள்!
பொல்லாத வார்த்தைகள்!
முஸ்லீம்களை ஏமாற்றும் முயற்சிகள்!

உடன்பிறப்பே,

தொடர்ந்து உனக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கும்போது இடையில் சில நாட்கள் ஏற்பட்டுவிட்ட தொய்வுக்கு உனக்குக் காரணம் தெரியும்.

தேர்தல் களத்தில் ஜனநாயகப் படுகொலையாளர்களை எதிர்த்து முரசு முழங்கிட, நமது அறப்போர் வீரர்கள் அணிவகுத்துக் கிளம்பும் வேளையில் தடந்தோள் தட்டி எழுந்த தளகர்த்தர் களில் ஒருவரை இழந்துவிட்ட தாளாத் துயரில் இருந்து என்னால் இன்னமும் மீளமுடியவில்லை!

நல்லரசு கலைக்கப்படக் காரணமாயிருந்தோர் கலைத்தோர் மீது ஏற்பட்ட வெறுப்பைவிட ஆயிரம் மடங்கு அதிக வெறுப்பன்றோ நமது தென்னரசைக் கொள்ளை கொண்ட இயற்கையின்மீது நமக்கு ஏற்பட்டுள்ளது!

முகவை மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்படாமல் ஒன்றாக இருந்தபோது அந்த மாவட்டக்கழகத்தை ஒரு குடைக் கீழ் ஆண்டு - "கொண்டு வந்தேன் வெற்றியை" என்று நமது அண்ணாவின் காலடியில் நூற்றுக்கு நூறு எனும் விதத்தில் அந்த மாவட்டத் தொகுதிகளைக் காணிக்கையாக்கிய கடமையாளரன்றோ அந்தக் கண்மணி! சிந்தாமணி எனும் இயற் பெயர் கொண்டு கொள்கையில் சிந்தாமல் சிதறாமல் வாழ்ந்த சிந்தனைமணி!

அவர் இன்றிருந்தால் முகவையின் வெற்றிக்கு வழிகாட்டிக் கொண்டிருப்பாரே என எண்ணும் போது; அடித்தெழுதாப் பழக்கம்

கொண்ட என் பேனாகூட இன்று தினறுகிறது!

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்ற அண்ணாவின் மொழி நினைந்து - தென்னரசு போன்ற என் இதயம் கவர்ந்த இனிய உடன் பிறப்புகளின் ஏற்றமிகு குறிக்கோள்கள் நிறை வேற, அவர்களின் நினைவையே போர்க் கவசங்களாக்கிக் கொண்டு தேர்தல் களத்தில் உண்மையான ஜனநாயகம் வெற்றிபெற, நீதி நிலைக்க வீறுநடை போடத் தொடங்கிவிட்டோம்.

கழக வேட்பாளர்களின் முதல் பட்டியல் வெளியிடப்பட்டு விட்டது. தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களும் நம்முடன் இணைந்து களத்தில்!

மாற்று முகாமிலிருந்து எதிர்பார்த்தவாறு போலி நாடகக் காட்சிகள் - பொல்லாத வசனங்கள் - சுருதிகெட்ட வசைப்பாடல்கள் ஆரம்பமாகி விட்டன. இன்னும் ஆரம்பமாக இருக்கின்றன

என்னைத் "தீயசக்தி" என்று இன்றல்ல; நீண்ட காலமாக ஒரு திருமதி - அறிக்கைகளில் பேச்சுக்களில் அடாவடித்தனமாக வர்ணித்துக் கொண்டிருக்கிறார்!

தீயசக்தி எது? தூயசக்தி எது? என்பதை அவரவர்கள் கண்ணாடி முன் நின்று: அல்லது தமது வாழ்க்கை ஏட்டைப் புரட்டிப்பார்த்து அனைத்துக்கும் மேலாக மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்து தெளிவடைவதற்கு எளிதான வழி இருக்கிறது!

1972 டிசம்பர் மாதம் முதல் தேதி நள்ளிரவில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் : யாரைப்பார்த்து "தீயசக்தி" எனக் கூறினார் என்பது; என்றைக்கும் அவர் குரல் ஒலியுடன் குவலயம் அதிரச் செய்யும் உண்மையானதும் ஆதாரபூர்வமானதுமான நிகழ்ச்சியாகயிருக்கவே செய்கிறது! இதனை இப்போதைக்கு மேலும் விளக்கிட விரும்பவில்லை அரசியல் நாகரீகம் கருதி! எனவே இப்போது பொறுமை! பொறுத்தது போதும் என்று நினைப்பது என் கையில் இல்லை! அது: என்னைத் தீயசக்தி என்போர் பேச்சையும் நடத்தையையும் பொறுத்திருக்கிறது! இத்துடன் இன்றைக்கு இதனை நிறுத்துகிறேன்!

திடீரென மாற்று முகாம் தலைவர்களுக்கு முஸ்லீம் மார்க்கத்தின்மீதும், முஸ்லீம் மக்களின் மீதும் அபாரமான அன்பு

ஏற்பட்டு அது கரைபுரண்டு ஓடுகிறதே; கவனித்தாயா?

காயிதே மில்லத் பிறந்த நாளன்று ஆண்டு தோறும் அவர் அடக்கமாகியுள்ள புனித இடம் சென்று பூவாடை போர்த்தி வணங்கி வருகிறோம் நாம்!

அந்தக் கண்ணயவானின் கல்லறை எங்கிருக்கிறது எனக் கேட்டறியாதவர்கள் இன்று தொழுகை நடத்த ஓடுகிறார்கள்; சில சந்தர்ப்பவாதிகளின் துணையோடு!

காயிதே மில்லத் பெயரை திண்டுக்கல் மாவட்டத்துக்கு வைத்ததை எதிர்த்து சட்ட மன்றத்தில் பேசியவர்கள்; அ.தி.மு.க. கட்சியினர் "அவர் தேசத் துரோகி. அதனால் அவர் பெயரை ஏற்கமாட்டோம்" எனக்கூறும் மத வெறியர்களுடன் சேர்ந்து இன்னமும்கூட, தங்களின் கட்சி அறிவிப்புகளில் "திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்" என்று குறிப்பிடு வதில்லை - ஆனால் இப்போது தேர்தலுக்காக; ரம்சான் தொழுகை! நாட்டு மக்களை எவ்வளவு ஏமாளிகள் என எண்ணிவிட்டனர் பார்த்தாயா?

ஷரியத் சட்டப் பிரச்சினை வந்தபோது முஸ்லீம்களுக்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் கழக சார்பில் கருத்தறிவித்தார் கழக உறுப்பினர் தம்பி கோபால்சாமி என்பதை அனைவரும் அறிவர்.

ஆனால் அ.தி.மு.க. தலைவியோ; ஷரியத் சட்டத்திற்கு மாறாக பொது சிவில் சட்டம் வேண்டும் என்று இரண்டு மாதங்களுக்கு முன்பு கூட பத்திரிகைக்கு பகிரங்கமாகப் பேட்டியளித்தவர்! இன்று மார்க்கம் போற்றும் இஸ்லாமியப் பெருமக்களை சுலபத்தில் ஏமாற்றிவிடலாம் தொழுகை நடத்தி எனக் கருதுகிறார்!

பெரியார் மறைந்த நாளுக்கு - அண்ணா மறைந்த நாளுக்கு ஓராண்டு தவறாமல் சென்று மலர் வளையம் வைத்து அவர்களின் கல்லறைகளைக் கண்ணீரால் நனைப்பவர்கள் நாம்! ஏன்; ராஜாஜி, காமராஜர், எம்.ஜி.ஆர். நினைவிடங்களுக்கும் செல்பவர்கள்! -

ஆனால் அங்கு அப்படியில்லை! எப்போதாவது தேவையிருந்தால்: பெரியாரும் அண்ணாவும் பெயரளவில் உச்சரிக்கப்படுவார்கள்!

தனது பிறந்த நாளுக்கு எம்.ஜி.ஆர். நினைவிடம் செல்ல நினைவில்லை! அல்லது விருப்பமில்லை! ஆனால் நாள்தோறும்

கட்சி அலுவலகம் சென்றிட முடிகிறது!

பாவம்; கடந்த ஆண்டுகளில் அண்ணல் அம்பேத்கர் சிலையை நினைத்துப் பார்த்தனரோ - ஆனால் இந்த ஆண்டு? தேர்தல் அல்லவா தேர்தல்! அடிக்கிறது அதிர்ஷ்டம் அம்பேத்கருக்கு! அம்பேத்கர் பெயரால் மாவட்டம் மற்றும் கல்லூரிகள் அமைத்த நமக்கு இதைப் பார்த்து சிரிப்புத்தான் வருகிறது! சிந்திக்க வேண்டாமோ; மக்கள்,

தேர்தல் அறிவிப்பு வரையில் தேக நிலை சரியில்லை என செய்தி! ஆனால் இன்று; உடல்நிலை மிகவும் தரம்! மகிழ்ச்சிதான்; ஆனால் மக்களை ஏமாற்றக் கூடாதல்லவா? என் செய்வது போலி நடிப்புகளை அரசியல் தியாகங்களாக எண்ணிடும் ஏமாளிகள் இன்னமும் நாட்டில் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு!

உடன்பிறப்பே, இனி தொடர்ந்து இதுபோன்ற நாடகங்கள் புதிது புதிதாக அரங்கேறும்! "தீயசக்தி"யைவிட கடுமையான சொற்பிரயோகங்கள் நம்மீது நடத்தப்படும்! இப்போதே நடத்தப் படுகிறது! "நடந்த உண்மைகள் மறைக்கப்படும்! நடக்காதவைகள் நடந்தவைகளாக சித்தரிக்கப்படும்! அதற்கான முயற்சிகள், பழிகூறும் இழி செயல்கள், விரசமான விளம்பரங்கள், அடுக் கடுக்காக அந்த வட்டாரங்களில் தொடர்ந்திடும்! நானறிவேன் அதனை! -

"பொறுமை கடலினும் பெரிது" என்ற அமைதி காக்கும் பழமொழியும் உண்டு! "பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு" என எச்சரிக்கை விடுக்கும் பழமொழியும் உண்டு!

அண்ணா அடிக்கடி சொல்வாரே; வில்லில் கணை பூட்டிக் குறிபார்க்கும் வீரனுக்கு - மரத்தில் இருக்கும் கிளைகள், தழைகள், கொப்புகள் கண்ணுக்குத் தெரியக்கூடாது, குறிக்கு இலக்கான பறவையின் கழுத்து மட்டுமே தெரிய வேண்டுமென்று அர்ச்சுனனைப் பற்றிய பாரதக் கதையொன்று; அதுபோல எதிர் முகாமிலிருந்து எந்தவகை இழி சொல், பழிசொல், இல்லாதது, பொல்லாதது பேசப்படினும், எழுதப்படினும், ஏன்; சுவர்களில் தேர்தல் நேரத்தில் விளம்பரப்படுத்தப்படினும் அவற்றை அரசியல் ரீதியாக மட்டுமே சந்தித்து; நமது குறிக்கோள் தேசிய முன்னணி இடதுசாரிக் கூட்டமைப்பின் வெற்றியும் மத்தியில் வி.பி.சிங்

தலைமையிலான ஆட்சியும் மாநிலத்தில் கழக ஆட்சியும் அமைந்து;

மதச்சார்பற்றநிலை
மண்டல் கமிஷன் செயல்படுத்தல்
மாநில உரிமைகளைப் பெறுதல்
சமூக நீதி
ஜனநாயகப் பாதுகாப்பு
எல்லா மக்களின் நல்வாழ்வு

என்பன போன்றவைகளை உறுதியாகவும், உண்மையாகவும், நடைமுறைக்குக் கொண்டு வருவதேயாகும்!

இதற்கெனக் களம் காணும் வீரர்களில் உன் உடன்பிறப்பான நானும் ஒருவனாக இருக்கிறேன்!

நான் போட்டியிடும் தொகுதியில்; போட்டியிட விரும்பி, அந்த வாய்ப்பு கிட்டாத உடன்பிறப்புகள் என் வெற்றிக்கு எப்படி இதயசுத்தியுடன் பாடுபட்டுப் பணியாற்றுவார்களோ; அதுபோல எல்லா தொகுதிகளிலுமே போட்டியிட வாய்ப்பு பெற்றோருக்கு; அந்த வாய்ப்பு பெறாத உடன்பிறப்புகள் உளமார்ந்த உணர்வுடன் ஆதரவு தந்து அயராது உழைத்து, வெற்றி தேடித்தர வேண்டுகிறேன்.

போலி நாடக வேடதாரிகளின் ஏமாற்று வித்தைகளை அரசியல் ரீதியாகவும், ஆபாசத்திற்கு இடமின்றியும், தரக்குறைவான வாசகங்களின் பக்கம் தலைவைத்துப் படுக்காமலும், சந்தித்து வெற்றி காண விரைந்து வாரீர் என்று உன் போன்ற என் உடன்பிறப்புகள் அனைவரையும் அழைக்கிறேன்!

தேர்தல் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டும், வன்முறைகளுக்குத் துளியளவு இடம்கூடத் தராமலும் ஜனநாயகக் கடமை ஆற்றக் கூடியது நமது அணி! அந்தப் பெருமையை மீண்டும் நிலை நிறுத்துவோம்!

இதோ; தேர்தல் தொடக்கத்திலேயே புதுவை மண்ணாடிப்பட்டு தொகுதியில் கடப்பாறை கொண்டு கயவர்களால் தாக்கப்பட்டு அருளானந்தன் என்ற கழகக் காளை களப்பலி ஆகியிருக்கிறான் - எதிர் முகாம்; வன்முறைக் கணக்கை இப்படி ஆரம்பித்துள்ளது!

"பொறுமை கடலினும் பெரிது"

என்பது பழமொழி!

"பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு!"

என்பதும் பழமொழிதான்!

இந்தப் பட்டிமன்றப் பழமொழிகளுக்கு நடுவர் தீர்ப்பாக ஒரு பழமொழி உண்டு! அதுதான்:

"பொறுத்தார் பூமி ஆள்வார்"

அன்புள்ள

மு.க.

19-04-1991

1722. பகலை இரவென்று சொல்பவர்கள்!

உடன்பிறப்பே,

பகலை இரவென்று சொன்னாலும் "ஆமாம்" என்று தலையசைத்துப் பல் இளித்து ஏமாறுவதற் கென்று பாமரர்கள் கூட்டம் ஒன்றிருக்கும்போது 18ந் தேதி சென்னை கடற்கரை கூட்டத்தில் காங்கிரஸ் அ.இ.அ.தி.மு.க. தலைவர்கள் அவிழ்த்துவிட்ட பொய்மூட்டைகள் ஒன்றிரண்டு, நூறு, ஆயிரமாக அடுக்கப்பட்டதில் ஆச்சரியம் இருக்க முடியாதல்லவா?

தி.மு.க. ஆட்சியில் தமிழகம் சீரழிந்து விட்டதாம்! அவர்கள் பேசியிருக்கிறார்கள்!

முதலில் அவர்கள் மேடை போட்டுப் பேசிய கடற்கரையேகூட பல ஆண்டுகாலம் புழுதிப் பொடி மணலாக மாறிக்கிடந்ததை, கடந்த ஆண்டு கழக ஆட்சியில்தான் ஏராளமான "புல்டோசர்"களைப் போட்டு உழுது, ஆழத்தில் இருந்த பெருமணலை வெளிக் கொணர்ந்து, கடற்கரையும் அழகுபடுத்தப்பட்டது என்பதை, சென்னை மக்கள் கூடவா மறந்துவிடுவார்கள்!

மண்டல் கமிஷன் பரிந்துரை நிறைவேற்றப்படும் என்று பிரதமர் வி.பி.சிங் அவர்கள் பாராளுமன்றத்தில் அறிவித்தபோது அதனை எதிர்த்து ராஜீவ் காந்தி அவர்கள் மூன்று மணி நேரம் பேசினார் என்பதை நாடறியும்! ஆனால் இப்போது மண்டல் கமிஷனை காங்கிரஸ் எதிர்க்கவில்லை எனக் கூறுகிறார். தேர்தலுக்காக நடத்தப்படும் மாய்மாலம் என்று இதைச் சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்!

அ.தி.மு.க. தலைவி, இந்தியன் எக்ஸ்பிரசுக்கு அளித்த பேட்டியில் சமூக ரீதியிலான இட ஒதுக்கீட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து பொருளாதார அடிப்படையில்தான் இட ஒதுக்கீடு

இருக்க வேண்டுமென்று கூறியதை பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில் மண்டல் கமிஷன் பரிந்துரையில் 27 சதவீதம் இடஒதுக்கீடு போதாது; அதை 50 சதவீதம் ஆக்க வேண்டுமென்று பேசுகிறார் இப்போது!

மண்டல் கமிஷன் அறிக்கையை நிறைவேற்ற முன்வந்த பிரதமர் வி.பி.சிங் அவர்கள், அந்த 'இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து, தனது ஆட்சியின்மீது நம்பிக்கை வாக்கு கோரிய நேரத்தில் காங்கிரசுடனும், பாரதிய ஜனதாவுடனும் சேர்ந்து கொண்டு அ.தி.மு.க., நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கை கோரும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்து வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கும் சமூக நீதியை சாய்ப்பதற்கும் துணை நின்றதை தெளிவுள்ள மக்கள் அதற்குள் மறந்தாவிடுவார்கள்! -

காங்கிரஸ் கட்சிதான் இட ஒதுக்கீட்டுக் கொள்கையையே கொண்டு வந்தது என்று ராஜீவ் காந்தி கூறுவதும்; அதற்கு அ.தி.மு.க.வின் திருமதி ஆமாம் போடுவதும் - இருவருக்குமே திராவிட இயக்க வரலாறு தெரியாது என்பதையே காட்டுகிறது. - 1927 ஆம் ஆண்டில் நீதிக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே திராவிடச் செம்மல் முத்தையா அவர்களின் முயற்சியால் கிடைத்ததே இந்த இட ஒதுக்கீடு!

இந்தக் கொள்கையைக் காங்கிரஸ் கட்சியும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று காங்கிரசுக்குள்ளிருந்து கொண்டே தொடர்ந்து போராடி, 1925 காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் இதனைத் தீர்மானமாகவே கொண்டு போய்; அது ஏற்கப்படாத காரணத்தால் தந்தை பெரியார் காங்கிரஸ் கட்சியைவிட்டு வெளியேறினார் என்பது வரலாறு!

இந்த வரலாற்று உண்மைகளை மறைக்கும் பித்தலாட்ட முயற்சிகளை, பின் தங்கிய மக்கள் எப்படிப் புரிந்து கொள்ளப் போகிறார்கள் என்ற எண்ணம் காங்கிரஸ் தலைமைக்கும், அ.தி.மு.க. தலைமைக்கும். பாவம்; பின் தங்கிய மக்கள் என்றால் அவர்களுக்கு அவ்வளவு இளக்காரம்! அதனால் தான் எதையும் பேசுகிறார்கள்!

இட ஒதுக்கீட்டு முறை சமூக அடிப்படையில் இருக்கவே கூடாது என வழக்கு தொடரப்பட்டு, உச்ச நீதி மன்றமும் அதற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியபோது தமிழ்நாட்டில் பெரியாரும்

அண்ணாவும் நடத்திய பெருங் கிளர்ச்சியின் காரணமாகத்தான் வேறு வழியின்றி நேரு பெருமகனார் அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் கொண்டுவந்து, சமூகம் மற்றும் கல்வி அடிப்படையில் பின் தங்கிய மக்களுக்கு இட ஒதுக்கீட்டுக்கு மீண்டும் உத்திரவாதம் வழங்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டார். இதுவும் வரலாறு!

கடற்கரையில் 18ந் தேதி பேசியோர், வரலாறு தெரியாமல் பேசினார்களா? அல்லது வரலாற்றை மறைக்கும் முயற்சியா?

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் 1979ல் சமூக ரீதியிலான இட ஒதுக்கீடு கொள்கைக்கு மீண்டும் ஒரு ஆபத்து ஏற்பட்டது. அதாவது ஆண்டு வருமானம் ஒன்பதாயிரத்துக்கும் குறைவாக இருப்பவர்களே பின் தங்கிய சமூகத்தினர் என அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணையைத் திரும்பப் பெறக் கோரி திராவிடர் கழகமும், தி.மு.கழகமும் தமிழகத்தில் பெரும் கிளர்ச்சி தொடங்கி - 1980 நாடாளுமன்றத் தேர்தலில் 40 இடங்களில் அ.தி.மு.க; இரண்டே இடங்கள் மட்டும் பெற்று படுதோல்வி கண்டு; அதன்பிறகு நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் - வருமான வரம்பு ஆணையைத் திரும்பப் பெற்றுக் கொண்டதோடு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டை உயர்த்தி 50 சதவிகிதமென அறிவித்தார்!

நான் 1969ல் முதல்வர் பொறுப்பை ஏற்ற பின்பு தமிழகத்தில்; பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவிகித இட ஒதுக்கீடு என்பதை 31 சதவிகிதமாக ஆக்கினேன். தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு 16 சதவிகிதமாக இருந்ததை 19 சதவிகிதமாக ஆக்கினேன். மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் மலை வாழ் மக்களுக்கு ஒரு சதவிகிதம் தனியாக இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு 50 சதவிகித பிற்பட்ட மக்களின் இடஒதுக்கீட்டிலிருந்து தனியாக 20 சதவிகித ஒதுக்கீடு: 1989ல் மீண்டும் நமது கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற ஓரிரு மாதங்களிலேயே அறிவித்து நடைமுறைக்கும் கொண்டு வரப்பட்டு அதன் பயனை மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களின் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்!

இந்த சரித்திர நிகழ்ச்சிகளையெல்லாம் திரைபோட்டு மறைத்துவிட முடியும் என நினைத்துத்தான் திரை கடல் ஓரத்தில் கூட்டம் நடத்திக் கூடிப் பேசியோர் இடஒதுக்கீடு கொள்கை: காங்கிரசின் கொள்கை எனக் கதைத்திருக்கிறார்கள்.

பொய் சொல்லியே அரசியல் நடத்தலாம் எனக் கணக்கிட்டு; தமிழ்நாட்டு மக்களை இளித்த வாயர்களாக ஆக்கும் முயற்சி நடைபெறுகிறது!

மாநகராட்சி தேர்தல் வாக்காளர் பட்டியலில் தனது பெயரே இல்லை என்று ஒரே ஓலமிடவில்லையா? பத்திரிகைகளில் ஒப்பாரி வைக்க வில்லையா? அதைப் பத்திரிகைகளும் பரபரப்பாக வெளியிடவில்லையா? உடனடியாக நிருபர்களை அழைத்து, அப்போது உள்ளாட்சி அமைச்சராக இருந்த தம்பி கோ.சி.மணி: மாநகராட்சி வாக்காளர் பட்டியலில் அந்தத் திருமதியின் பெயரும், அவரது குடும்ப நண்பர்களின் பெயரும் ஒரே வீட்டு விலாசத்தில் இருப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டவில்லையா?

திட்டமிட்டுப் பொய் கூறியவர்கள், திகைத்துப் போய்த் தலைகுனியவில்லையா?

காவிரி ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டுடன் முடிந்து காலாவதி ஆகிவிட்டது - நடுவர் மன்ற தீர்ப்பை கர்நாடக அரசு மதிக்கத் தேவையில்லை என்று நடுவர் மன்றக் குழுவினர் தமிழகம் வருகிற நேரம் பார்த்து அறிக்கை விடுத்து தமிழக விவசாயிகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டது யார்?

பிறகு அந்த துரோகச் செயலை மறைக்க, வண்ண சுவரொட்டிகளை தஞ்சைத் தரணி முழுதும் ஒட்டி: "வருக! வருக! நடுவர் மன்றமே; வருக!" என வரவேற்பது போல, தமிழக விவசாயிகளை ஏமாற்றப் பார்க்கவில்லையா?

நிலையான ஆட்சி தரப்போகிறார்களாம்! இந்தப் பேச்சைக் கேட்டபோது; கடற்கரையில் நிற்கும் காந்தி சிலை கண்ணீர் வடித்திருக்குமே!

எண்ணற்ற சாதனைகளை ஏழைகளுக்காகச் செய்து, இரண்டு ஆண்டு காலமே நடைபெற்ற நேரத்தில் - சந்திரசேகருக்கு கிடுக்கிப்பிடி போட்டு, தமிழகத்திலிருந்த நிலையான ஆட்சியைக் கலைத்தவர்கள்; நிலையான ஆட்சி தரப் போகிறார்களாம்!

உடன்பிறப்பே! அதுமட்டுமா? 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் 19 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் நமது அணிக்கு ஒரு இடம் கூடத் தர மாட்டார்களாம்!

யார் சொல்வது தெரியுமா?
காங்கேயம் டு பருகூர்தான்
அப்படிச் சொல்லியிருக்கிறது!

அன்புள்ள
மு.க.
20-04-1991

1723. ஆசையும் பாசமும் அங்கே! அடியும் உதையும் இங்கே!

உடன்பிறப்பே,

“பூரண மதுவிலக்கு கொண்டு வருவோம் என்றும், தமிழகத்தில் ஆலயங்களின் புனிதம் காக்கப்படுமென்றும், பக்தர்கள் மனம் புண்படும் படியாக எந்தக் காரியமும் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டிருப்பது திவ்யமான கருத்து” என்று தினமணி தலையங்கம் சிலாகித்துக் குறிப்பிட்டிருக்கிறது.

அத்துடன் விட்டிருந்தால் தினமணியின் பாராட்டுக்குக் குறுக்கே நிற்க நாமொன்றும் முனையப் போவதில்லை. மது அருந்துதல் தீது; அது சாதாரணமான சாராயமானாலும் உயர்ந்த சரக்கான ஜின் ஆனாலும் உயிர் குடிக்கும் விஷம்தான் என்பதிலும் நமக்கு இருவேறு கருத்துகள் இல்லை.

கோயில் கூடாது என்பதல்ல; கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்பதே நமது கொள்கை என்பது என்றைக்கோ விளக்கப்பட்ட ஒன்று என்பதும் மக்கள் அறியாத செய்தியல்ல! பகுத்தறிவுக் கருத்து, மக்களைப் பண்படுத்தும் விதத்தில் எடுத்துரைக்கப்பட வேண்டுமே தவிர, அவர்கள் மனதைப் புண்படுத்தும் விதத்தில் அமையக் கூடாது என்பதே தி.மு.க. வின் கொள்கை! இதனையே கழகம், அரசுப் பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நடைமுறையில் கடைப்பிடித்து வருகிறது.

தினமணியாருக்கு அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையை சிலாகித்து எழுத உரிமையும் உண்டு. அத்தகைய பாசம் கலந்த உணர்வும் உண்டு! நான் மறுக்கவில்லை! நாடறிந்த உண்மை என்பதால்!

ஆனால் தினமணியார் சிலாகித்து எழுதும் இரண்டு அம்சங்களையும் முந்தைய ஆட்சி கடைப்பிடித்ததில் நடைமுறைக்

கோணல்கள் இருந்தன என்றும் அந்தத் தலையங்கத்தில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

தினமணி குறிப்பிடும் இரண்டு அம்சங்களிலும் கழக அரசின் அணுகுமுறை என்ன என்பதை, தனித் தனியாகப் பார்ப்போம்.

இந்தியா ஒரு நாடு என்றும் இமயம் முதல் குமரி வரையில் உள்ள மக்கள் ஆனந்தமாகவும், ஆரோக்யமாகவும் வாழ வேண்டுமென்றும் பேசிக் கொண்டே, ஆந்திரத்தில், கர்நாடகத்தில், கேரளத்தில், மராட்டியத்தில், இப்படி எல்லா மாநிலங்களிலும் - ஏன்; டெல்லித் தலைநகரிலே கூட மதுக்கடைகள் இருக்கலாம், மது அருந்தலாம் என்று உரிமைகள் வழங்கப்பட்டு தமிழ்நாட்டில் மாத்திரம் அந்த உரிமையைத் தடுப்பதால் அரசின் கஜானாவுக்கு வரவேண்டிய வருமானம்; சாராய சாம்ராஜ்யாதிபதிகளுக்கும், கள்ளச்சாராய மன்னர்களுக்கும், மாமூல் போர்வழிகளுக்கும் போய்க் கொண்டிருக்கும் என்பதைக் கடந்த கால வரலாறு, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து உணர்த்திக் கொண்டிருக்கிறது, கள்ளச்சாராயம் காய்ச்சியோர், விற்றோர் , குடித்தோர் என காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே போடப்பட்ட வழக்குகளும், சிறையில் அடைக்கப்பட்டோரும் 61 முதல் 66க்குள் 8,57,989 என்ற புள்ளி விபரக் கணக்கை அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களே, ஆனந்தவிகடனில் எழுதிய "நான் ஏன் பிறந்தேன்" என்ற தொடர் கட்டுரையில் குறிப்பிட்டு, எனவே மது விலக்கு சட்டத்தை ஒத்தி வைப்பது தவிர வேறு வழியில்லை என்று நியாய மான காரணங்களை அடுக்கிக் காட்டியிருக்கிறார்.

நான் முதல்வராக 1969ல் பொறுப்பேற்ற பிறகு மதுவிலக்கு சட்டம் ஒத்திவைக்கப்பட்டது - பிறகு மீண்டும் அந்தச் சட்டம் கடுமையாக்கப்பட்டு மதுக்கடைகள் அனைத்தும் மூடப்பட்டன.

அப்படி மூடப்பட்டிருந்த மதுக்கடைகளை 1977ல் ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர். அவர்கள் மீண்டும் திறந்தார். சாராயக் கடைகளை ஏலம் விடாமல் தனது கட்சிக்காரர்கள் நடத்திக் கொள்ள உரிமை கொடுத்துவிட்டார் என்பதற்காக அதனை ஆட்சேபித்து, சில மது வியாபாரிகள் சுப்ரீம் கோர்ட்டு வரையில் வழக்காடச் சென்றார்கள். சுப்ரீம் கோர்ட்டு, சாராயக் கடைகளை ஏலம் விடாமல் தனியார்களுக்கு உரிமை கொடுத்தது தவறு என்று அ.தி.மு.க. அரசைக் கண்டித்துத் தீர்ப்பு வழங்கக் கூடும் என்ற அச்சம் ஏற்பட்ட

காரணத்தால், அவசர அவசரமாக அந்தத் தனியார் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டன. இதற்கெல்லாம் மறுக்க முடியாத ஆதாரங்கள் கோப்புகளில் உண்டு!

அதன்பிறகு எம்.ஜி.ஆர். ஆட்சியில் சாராயக் கடைகள் மூடப்பட்டு, பிராந்தி, ஒயின், பீர் போன்ற உயர்ந்த ரக மதுக்கடைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டது!

அந்த உயர்ந்த ரக மதுக்கள் மூலம் அரசுக்கு வந்திருக்க வேண்டிய வருமானத்தில் நூறு கோடி ரூபாய்க்கு மேல் எங்கேயோ வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குப் பொசிந்தது என்பதால்தான் மீண்டும் 1989ல் கழக ஆட்சி பொறுப்பேற்றதும், சாராய சாம்ராஜ்யக் கோட்டை தகர்க்கப்பட்டு அரசின் வருமானம் ஆண்டொன்றுக்கு இந்தத் துறையின் வாயிலாக மட்டும் சுமார் இருநூறு கோடி ரூபாய் அளவுக்கு மேலும் உயர்த்தப்பட்டது.

எனினும், சாதாரண சாமானிய மக்கள், விவசாயத் தொழிலாளிகள், பாட்டாளி மக்கள் கள்ளச் சாராயத்தை குறைந்த விலை கொடுத்து அருந்தி, குடல் அழுகிச் சாவதைத் தவிர்க்கவும், அவர்களை வைத்துத் தங்கள் கள்ளச் சாராய வியாபாரத்தை பெருக்கிக் கொள்ளும் போர்வழி களுக்கு அரசின் வருமானம் செல்வதை பெருமளவுக்குத் தடுக்கவும் - மலிவு விலையில் நாட்டு மதுக்கடைகளுக்கு அனுமதித்து, அவைகள் பொது ஏலம் விடப்பட்டன.

மதுவிலக்கு என்பது இந்தியா முழுதும் நடைமுறைக்கு வரவேண்டுமென்பது காந்தியடிகள் கொள்கை! அதற்கு மாறாக ஒரு சில மாநிலங்களில் மட்டும் கடைப்பிடிப்பதால்; மது இருக்கும் மாநிலத்திலிருந்து மதுவிலக்கு சட்டமுள்ள மாநிலத்திற்குக் கடத்தல் மறு வியாபாரம்தான் நடைபெறும். இது மறைக்கமுடியாத உண்மை!

ஏன்; குஜராத்தில் கூட காந்தியடிகள் பிறந்த போர்பந்தரில்; அவரது வீட்டுக்கு அருகிலேயே கள்ளச் சாராயப் பாதாளக் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு, அமோகமாக வியாபாரம் நடைபெற்ற செய்தியை வடநாட்டு ஏடுகள் எழுதியிருந்தனவே! பூரணமதுவிலக்கு என்பது நமது கொள்கை என்றாலும் அதனை நடை முறைப்படுத்த இயலாது என்பதை நாடாளுமன்றத்தில்

இந்திரா காந்தியே கூறியுள்ளதை நான் சட்டப் பேரவையிலேயே படித்துக் காட்டி யிருக்கிறேனே!

எனவேதான், கள்ளச் சாராயத்தை ஒரேடியாக ஒழிக்க முடியாவிட்டாலும் - படிப்படியாகப் பெருமளவு ஒழித்துவிட முடியும் என்ற நம்பிக்கையுடன் அந்தக் கலப்பட விஷத்தை அருந்தி சாகிற மக்களை அகால மரணத்திலிருந்து தடுத்திடவும், அரசின் கஜானாவுக்கு மேலும் சில நூறு கோடி ரூபாய்கள் வந்து சேரவும் - மலிவு விலையில் நாட்டு மதுக்கடைகள் அனுமதிக்கப் பட்டு; அதிலும் சாராய சாம்ராஜ்யாதிபதிகள் ஆதிக்கம் வந்து விடக்கூடாதென்று, நஞ்சு கலவாத நல்ல மதுவை அரசே தயாரித்து விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டது.

இப்போது சுமார் முன்னூறு கோடி ரூபாய்க்கு மேலான அரசு வருமானத்தை இழந்துவிடத் தயாராகி, பூரணமாக மதுவிலக்கை அமல் படுத்துவோம் என்று அ.தி.மு.க. கட்சி தேர்தல் அறிக்கையில் கூறியிருப்பது "தேர்தலுக்காக" மட்டுமே என்பதைத் தினமணியார் புரிந்து கொண்டிருந்தாலும்; திவ்யமான வாக்குறுதி எனப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

மலிவு விலையில் நாட்டு மதுவை அரசே தயாரித்து ஏலம் மூலம் விற்பனை உரிமை அளிப்பதும், பிராந்தி, பீர் போன்ற உயர் ரக மது வியாபாரத்தில் நடந்த கடந்தகாலத் தவறுகளை அறவே நீக்கியதும், சாராய சாம்ராஜ்யாதிபதிகளுக்கும், கள்ளச் சாராய மன்னர்களுக்கும் பிடிக்காத காரியம் - அதனால் அவர்களுக்கு தி.மு.க. ஆட்சியின் மீது கோபமும் உண்டு!

இப்போது "பூரண மது விலக்கு" என்பது, அந்த சாராய சக்கரவர்த்திகளுக்கும், சாம்ராஜ்யங்களுக்கும் மிகவும் சந்தோஷமான அறிவிப்பேயாகும்!

உடன்பிறப்பே; ஒன்றைக் கவனித்தாயா? தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது நாட்டுமதுக் கடைகளின் முன்னால் மறியல், போராட்டம், ஆர்ப்பாட்டம், மனிதச் சங்கிலி, அதற்கு தினமணியில் நாள்தோறும் விளம்பரம் என்றெல்லாம் செய்தி வந்ததே; ஆனால் இந்த மூன்று மாதமாக அந்த "மதுவிலக்கு மகாத்மாக்கள்" வாய் மூடிக்கிடக்கிறார்களே; கவனித்தாயா? போராட்டமாவது, மறியலாவது - ஒரு வாலாட்டமும் கிடையாது!

என் செய்வது; "ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி" என்ற பழமொழி நமக்குத்தானே மெத்தவும் பொருத்தமாயிருக்கிறது!

அப்போது நடந்த போராட்டங்களுக்குப் பின்னணியில் கள்ளச் சாராய வியாபாரிகள் பலர் இருந்தார்கள். அல்லது அந்தப் போராட்டங்களை பலமாக ஆதரித்தார்கள் - இது பாரறிந்த உண்மை என்பதற்கு அந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் கூட அந்த சாம்ராஜ்யத்து சிப்பாய்கள் அணிவகுத்துச் சென்றதே ஆதாரபூர்வமான சாட்சி!

அடுத்தது; தினமணியார், தி.மு.க. ஆட்சியில் கோயில்களின் புனிதம் கெட்டுவிட்டது என்பது போல தலையங்க வாசகத்தை அமைத்துள்ளது பற்றியதாகும்.

பல ஆண்டுகள் ஓடாமல் கிடந்த திருவாரூர் தேரை மீண்டும் சீர் செய்து ஓட்டியதும், தேரோடும் வீதிகளை செம்மையுற அமைத்ததும், தி.மு.க. ஆட்சியில்தான்!

1967-ல் கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் கும்பகோணம் மகாமக விழாவுக்கு பொதுப்பணி அமைச்சராக இருந்த நானே நேரில் சென்று மகாமகக் குளத்தின் கொள்கால், வடிகால் சீர் செய்து தந்து, மக்கள் நெருக்கடியைச் சமாளிக்க குடந்தையைச் சுற்றி புறச் சாலைகளை உடனடியாக உருவாக்கி; இத்துனை வசதிகளும் செய்து கொடுத்தமைக்காக கும்பகோணம் சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினரும் பிராமண சங்கத் தலைவருமான காசிராமன் அவர்கள் சட்டப் பேரவையிலேயே என்னைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்.

நமது கண்ணப்பன் அறநிலைய அமைச்சராக இருந்தபோது கழக ஆட்சியில்; நீண்டகாலமாக கோயில்களுக்குச் சொந்தமான பல லட்சம் ஏக்கரா நிலங்களை தனியார்கள் அனுபவிப்பது கண்டு பிடிக்கப்பட்டு - அவைகளை மீட்டு கோயில்களுக்கே சொந்தமாக்கியிருக்கிறோம்.

நமது கே.பி.கே. அறநிலைய அமைச்சருக்குப் பொருத்தமான பழுத்த ஆத்திகர். திருவிடந்தை போன்ற இடங்களில் கோயில் சொத்துக்களை தனியாரிடமிருந்து மீட்டுத்தந்தவர். இப்படிப் பல சொத்துக்களை ஆலயங்களுக்காக மீட்டுத் தந்தார்!

கோயில் விவகாரங்களில் கழக அரசின் நடவடிக்கைகள் கோணல் மாணல்களாக இருந்ததாம்! தினமணி கூறுகிறது!

ஆலயங்களின் நிர்வாக சீரமைப்புக்கு ஒரு குழு அமைத்து அதன் பரிந்துரைகள் பலவற்றைப் படிப்படியாக செயல்படுத்த தொடங்கிய அரசுதான் கழக அரசு!

தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று எடுத்த முடிவைத் தவிர; கழக அரசு வேறு எந்தத் தவறும் செய்து விடவில்லையே!

திருச்செந்தூர்
உண்டியல் கொள்ளை
தட்டிக் கேட்ட
அறங்காவல் அதிகாரி
சுப்பிரமணிய பிள்ளை கொலை

சுப்பிரமணியர் கோயிலில் நடை பெற்ற சுப்பிரமணிய பிள்ளை கொலைக்கு விசாரணை தேவை எனக் கேட்டதும்; விசாரணை முடிவுகளை மூடிமறைக்காதீர் என முழங்கியதும் - நீதி கேட்டு மதுரையிலிருந்து - செந்தூர் வரையிலே எட்டுநாள் இருநூறு கிலோ மீட்டர் நெடும்பயணம் நடத்தியதும் - நான்தான் என்பதும், அந்தப் பயணத்தில் என்னுடன் லட்சத்துக்கு மேற்பட்டோர் நடந்து வந்தனர் என்பதும் நாடறியும்! நமது - தினமணியாரும் அறிவார்! அறிந்து என்ன பயன்?

ஆசையும் பாசமும் அங்கே!
அடியும் உதையும் இங்கே!

புரிகிறதா உனக்கு? புரியாமலா இருக்கும்! ஐம்பத்திரெண்டு ஆண்டுகளாக அரசியல் பணி அனுபவம், சமுதாயப்பணி அனுபவம் பெற்ற அண்ணன் கோடிட்டுக் காட்டுவது: என் அருமை உடன்பிறப்பே; உனக்குப் புரியாமலா இருக்கும்!

அன்புள்ள
மு.க.
21-04-1991

1724. மானம் காக்கும் யுத்தம்; மறவாதே!

உடன்பிறப்பே!

தேர்தல் களத்தில் நிற்கிறோம் இப்போது!

வேட்பு மனுக்களை நமது உடன்பிறப்புகள் புடைசூழ ஆங்காங்கு கழக வேட்பாளர்களும் - தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களும்; தாக்கல் செய்து வருகிற செய்திகள் சிந்தைக்குத் தேனாக வந்து கொண்டிருக்கின்றன.

இயக்கம் எனக்கு என்ன செய்தது என்று கேட்காமல் இயக்கத்திற்கு நான் என்ன செய்தேன் எனக்கேட்டு இடையறாப் பணி ஆற்றுபவரே இயக்கத்தின் இரத்த நாளங்கள் - அஃதன்றி, தன்னைப் பற்றி மட்டுமே சிந்திப்போர் தன்னலமின்றி இயக்கப் பணி எதுவுமில்லை என எண்ணிக் கிடப்போர் இயக்கத்தில் வளரும் புற்று நோய் என்று நான் அடிக்கடி சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

அந்தப் புற்று நோய்க் கிருமிகள் இந்த இயக்கத்தில் எங்கு தலைகாட்டினாலும் அவற்றை தொடக்கத்திலேயே அடையாளம் கண்டு அழித்து வருவதால்தான் ஆயிரமாயிரம் சோதனைகள், வேதனைகள் அடுக்கடுக்காக வந்த நேரத்திலும் இந்த உண்மையான திராவிட இயக்கத்தைச் சேதாரமின்றிக் கட்டிக்காக்க முடிகிறது.

ஆட்சிமன்றப் பொறுப்புகளுக்குப் போட்டியிடுவது என்பது அதிகார அந்தஸ்துகளைப் பெறுவதற்காக என எண்ணிடும் இழிதகைப் பண்பு இந்த இயக்கத்திற்கும் கிடையாது! இயக்கத்திலே யாருக்கும் இருக்கவும் கூடாது!

என்னையே எடுத்துக் கொள்ளேன்; ஆட்சி மன்றத்தில் அமர்ந்து தானா மதிப்பும், மரியாதையும், மக்களின் அன்பையும் பெற வேண்டிய நிலையில் இருக்கிறேன்! இல்லையே!

தமிழ் நிலத்தில், தஞ்சைத் தரணியில், எங்கோ ஒரு சிற்றூர் திருக்குவளை எனும் கிராமத்தில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்து, இன்றைக்கு உன் போன்ற உடன்பிறப்புகளுக்குத்

தலைவனாக இருக்கிறேன் என்பதை விடப் பெருமை; வேறு எந்த உயர் பதவியிலே எனக்குக் கிடைத்து விடப் போகிறது!

இப்போது நடப்பது ஆட்சிக்காக நடக்கும் போராட்டமல்ல!

ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெறும் அறப்போர்!

சமூக நீதிக்காகக் கிளர்ந்தெழுந்து திராவிட இயக்கமெனும் இந்த சுயமரியாதைப் பாசறையில் பயின்று பகுத்தறிவுப் படைக்கலன் கொண்டு நூற்றுக் கணக்கான தலைவர்கள், ஆயிரகக்கணக்கான தளபதிகள், இலட்சக்கணக்கான வீரர்கள் இன்றைக்கும் இந்த இனமானம் காத்திட அணிவகுத்து நிற்கிறார்கள் என்றால்; இது பவளவிழா கொண்டாடிய பழம்பெரும் இயக்கம் என்பதை மறந்து விடாதே!

பெரியார், அண்ணா வளர்த்த கொள்கைகளை அவர்களின் பெயர்களை உச்சரித்துக் கொண்டே அறவே அழித்தொழிக்கும் சூழ்ச்சியை, சுக்கு நூறாக்குவதற்காகப் பெரியாரின் உண்மையான மாணவர்களும், அண்ணாவின் உண்மையான தம்பிகளும் அணிவகுத்துள்ள களத்திற்குத் தேர்தல் களம் என்று பெயர் இருப்பினும்; உண்மையில் இது திராவிட இயக்கத்திற்கு, ஜனநாயகத்திற்கு, சமூக நீதிக்கு, சிறுபான்மை மக்கள் பாதுகாப்பிற்கு, ஏழை எளியோர், பாட்டாளிகள், நடுத்தரப் பிரிவினர் நலன் காப்பதற்கு எழுந்துள்ள மறைமுகமான எதிர்ப்பையும் நாசவேலையையும் தகர்ப்பதற்காக நாம் புகுந்துள்ள அறப்போர்க் களம்!

இதை உணர்ந்து உடன்பிறப்புகள் பணியாற்ற வேண்டும்!

உள்ளூரில் சில கசப்பு உணர்வுகள் இருக்கலாம்!

உன்னையும், உன் எதிர்கால சந்ததிகளின் உரிமைகளையும் அடித்துச் செல்லப் பெருகி வரும் அழிவு வெள்ளத்தை அணை போட்டுத் தடுக்க வேண்டுமா? வேண்டாமா?

முதலில் காட்டுத் தீயை அணைப்போம்! ஏன்; காட்டுத் தீ எனக் கூறுகிறேன் தெரிகிறதா?

ஜனநாயகம் வீட்டு விளக்கு
சர்வாதிகாரம் காட்டுத் தீ!

இது அண்ணா சொன்னது! அண்ணா சொன்னார் என்று யாரோ எழுதிக் கொடுத்து நான் சொல்லவில்லை!

அண்ணாவுடன் இருந்து அவர் சொல்லக் கேட்டு இன்று உனக்கு நினைவூட்டுகிற; உன்னால் தலைவனாக ஏற்றுக் கொள்ளப்பட்டவன் சொல்கிறேன்!

கீறல்களை பெரிது படுத்தாதே! மண் பாண்டத்தில் விழும் கீறல்தான் பாண்டத்தை உடைத்து விடும்!

தங்கத் தாம்பாளத்தில் கீறல் விழுந்தால் உருக்கி ஒன்றாக்கி விட முடியும்!

இந்த இயக்கம் தங்கத் தாம்பாளமல்லவா? அதில் பதிந்திருக்கும் வைரங்கள் அல்லவா உன்போன்ற உடன்பிறப்புகள்?

எந்த ஒரு வைரத்திலும் எண்ணெய் படிந்து ஒளி மங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு எனக்கும் பொதுச் செயலாளர் பேராசிரியருக்கும் உண்டல்லவா?

சிறு சிறு தவறுகள் எங்கு நிகழ்ந்திருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல்;

திராவிட இயக்கத்தின்
மானம் காக்கும்
இந்த யுத்தத்தில்
அறப்போர்ப் படைக்கலன் தாங்கி
அணுப்பொழுதும் தாமதிக்காமல்
ஆர்த்தெழுந்திடு!

அப்போதுதான் நீ எனக்கு உடன்பிறப்பு; நான் உனக்கு அண்ணன்!

அன்புடன்,

மு. க.

22-04-1991

1725. உயிரோட்டத்தில் ஒரு வேறுபாடும் இல்லை!

உடன்பிறப்பே,

தேர்தல் களத்தில் புதுவை மண்ணாடிப்பட்டு தொகுதியில் அருளானந்தன் என்ற கழகக் காளையைப் படுகொலை செய்து வன்முறை வெறியாட்டத்தின் கணக்கைத் தொடங்கி வைத்த எதிர் முகாமின் கயவர்கள்; இதோ விழுப்புரம் அருகேயுள்ள இருவேல்பட்டு என்னும் கிராமத்தில் கழகக் கண்மணி சுப்பிரமணியத்தை வெட்டிக் கொன்று "எண்ணிக்கை இரண்டு" என எடுத்துக்காட்டியுள்ளனர். இந்தக் கொலைகள் பற்றி இரு மாநிலங்களிலும் நடக்கும் கவர்னர் ஆட்சியில் காவல் துறையினர், மிகுந்த கவலையுடன் விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார்களாம்!

தேர்தல் நாமினேஷன் தேதிகள் முடிவுறுவதற்கு முன்பே இரண்டு கொலைகள்! இரண்டு வீர இளைஞர்கள்; கழக மாமணிகள் வீழ்த்தப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலை வெறிக்கெல்லாம் காரணம்; அந்தக் கொடியவர்களின் தலைமை நடத்தும் வன்முறைப் பேச்சும் எழுத்தும்தான் என்பதை நான் விளக்கவே தேவையில்லை.

அண்மையில் நமது முன்னாள் கவர்னர் பர்னாலா ஒரு பயங்கரமான லாரி விபத்திலிருந்து தப்பினார் என்று செய்தி வந்தது. ஆனால் அந்தப் பெரிய மனிதர் பர்னாலா அவர்கள், தன்னை லாரியை விட்டுக் கொல்ல முயற்சி என்று கூறி அரசியல் ஸ்டண்டு அடிக்கவில்லை ! பண்பாளர் அவர்!

இங்கே ஒரு அம்மணி; சென்ற வருடம் நடந்த ஒரு லாரி கார் விபத்தைக் "கொலை முயற்சி" என இன்னமும் கூடைப் பொய்யைக் கொட்டி என்மீதே திட்டமிட்டு வீண்பழி சுமத்திக் கொண்டிருக்கிறது.

அதைச் சில ஏடுகளும் பெரிதுபடுத்தி வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

திட்டமிட்டுச் செய்யப்படும் இந்தப் பொய்ப் பிரச்சாரத்தை முறியடிக்க வேண்டுமேயானால் நான் வழக்கு மன்றம் செல்வதைவிட வேறு வழி என்ன இருக்கிறது!

எடுத்தேன் கவிழ்த்தேன் எனப் பேசும் அந்த அம்மணியும், அந்தப் பொய்யுரைகளை வெளியிடும் ஏடுகளும் என்மீது வன் முறை தூண்டப்படுவதற்குத் திட்டமிடுகிறார்கள் என்றே எண்ணிட வேண்டியுள்ளது.

பரவாயில்லை; மண்ணாடிப்பட்டு அருளானந்தனும், இருவேல்பட்டு சுப்பிரமணியனும் பெற்ற பரிசு எனக்கும் கிடைக்குமேயானால் ஐம்பத்தி இரண்டு ஆண்டுக்காலப் பொது வாழ்வில் அடையாத மகிழ்ச்சியை அப்போதாவது அடைந்து "அய்யா! அண்ணா !" என உச்சரித்தபடி கண் மூடுவேன்!

இருவேல்பட்டு மணிக்கும்

மண்ணாடிப்பட்டு அருளுக்கும்

அவர்களின் தலைவனான எனக்கும்

உயிரோட்டத்தில் ஒரு வேறுபாடும் இல்லை!

இதனை உணர்ந்தே இந்த இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தி வருகிறேன்!

அன்புள்ள

மு.க.

23-04-1991

1726. எதிரி ஏடுகளும், இனத்துரோக ஏடுகளும்!

உடன்பிறப்பே,

"அண்ணா அறிவாலயத்தில் கூட்டமே இல்லை தி.மு.க. தொண்டர்கள் சோர்ந்து போய்க் கிடக்கிற காரணத்தால் அறிவாலயம் பக்கம் யாருமே தலை காட்டுவதில்லை! தேர் தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்திட வருகிற சிலரது முகத்தில் கூட உற்சாகமில்லை! எண்ணெய் வடிகிறது! போட்டியிடுவதற்குக் கழகத்தில் ஆளைத்தேடி அலைகிறார்கள். அவர்களோ "அய்யோ நான் மாட்டேன் என்று ஓடுகிறார்கள்!"

இப்படியெல்லாம் திராவிட இயக்க எதிர்ப்பு ஏடுகள் மட்டுமல்ல; திராவிட இயக்கம் எழுப்பிய உணர்வினால் மனிதர்களாக நடமாட முடிந்தவர்கள் நடத்துகிற ஏடுகளிலே கூட; நம்மைப் பற்றிக் கேலியான செய்திகளும், நமது இயக்க உணர்வை அழிக்கும் செய்திகளும் கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக வெளியிடப்படுவதோடு; திராவிட இயக்கத்தின் பெயரைச் சொல்லியே திராவிட இயக்கத்தை அழிக்கப் புறப்பட்டுள்ள அபாயப் பிறவிகளுக்கு பூதாகாரமான விளம்பரங்களை அளித்தும் வரு வதை; ஆதிக்க சக்திகளால் அடக்கப்பட்டு இப்போதுதான் கரை யேறிக் கொண்டிருக்கிற இந்தப் பெரிய சமுதாயம் கவனித்துக் - கொண்டுதான் இருக்கிறது.

நான் குறிப்பிடும் இந்த ஏடுகள் பகை உணர்வோடும், இனத்துரோக உணர்வோடும் தி.மு.க. அயர்ந்து கிடக்கிறது என அங்கலாய்த்துக் கொண்டிருந்த நேரத்தில்தான், அண்ணா அறிவாலயம் நோக்கி சுமார் மூவாயிரம் பேருக்கு மேற்பட்டோர், அந்தந்த மாவட்டக் கழக, ஒன்றியக் கழக நிர்வாகிகளுடன் வந்து நாடாளுமன்றத் தொகுதிகளிலும் சட்டப்பேரவை தொகுதிகளிலும் நிற்பதற்கான வேட்புமனு விண்ணப்பங்களை அளித்து, அதன் பிறகு தொடர்ந்து நேர் காணலுக்கும் வந்து போயினர்.

கடந்த இரண்டு மூன்று பொதுத் தேர்தல்களாகவே; நேர்காணலுக்கு வருவோர் யாரும் தங்களது ஆதரவாளர்கள் என்று கழக உறுப்பினர்களை நூற்றுக்கணக்கில் அழைத்து வரக்கூடாதென்றும் - அதனால் அடித்தளத்து செயல் வீரர்களிடையே கசப்பு உணர்வு உருவாகிறது என்பதால்; மாவட்ட ஒன்றிய அமைப்புகளின் நிர்வாகிகள் மட்டுமே நேர் காணலின் போது வந்து, தங்களின் கருத்துக்களை கூறிச் செல்ல வேண்டுமென்றும் தலைமைக் கழகம் அறிவித்து, அந்த நடை முறையே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. அதனால்தான் லாரிகளில், வேன்களில் தொண்டர்கள் வந்து அண்ணா அறிவாலயத்தில் குவிந்திடவில்லை!

இந்த விபரம் புரிந்திருந்தும் கூட, எதிரி ஏடுகளும், இனத்துரோக ஏடுகளும் - அண்ணா அறிவாலயம் தூங்கி வழிகிறது என்று எழுதிக் கொண்டே ; அதில் ஓர் அற்ப மகிழ்ச்சி மட்டுமல்ல - அபாயப் பிறவியை அரியாசனத்தில் அமர்த்துவதற்கான உபயத் தைச் செய்வதாகவும் ஓர் ஆறுதலையும் பெற்றன!

எதிரி ஏடுகள் சரி; இனத்துரோக ஏடுகள் கூட தங்கள் விரலால் தங்கள் கண்களைக் குத்திக்கொள்வது போல இந்த உண்மையான திராவிட இயக்கத்தை முதுகில் குத்த முனைவது ஏனோ; என எண்ணும்போதுதான் “ஏ, தாழ்ந்த தமிழகமே!” என்ற தலைப்பில் அண்ணா அவர்கள் பேசியது நினைவுக்கு வருகிறது!

அந்த ஏடுகள் அறிவாலயத்தில், ஆள் அரவமில்லை - வேட்பு மனு தாக்கல் செய்வோர் வரவில்லை - வந்தாலும் அவர் முகத்தில் சிரிப்பில்லை; செழிப்பில்லை- என்றெல்லாம் எழுதினவே; ஆனால் அதற்கு நேர்மாறாக “சீட்” கிடைக்கவில்லை என்ற ஏக்கத்தில், கோபத் தில் சிலர் கட்சியை விட்டுப் போயிருக்கிற செய்திகளையும் அந்த ஏடுகள்தானே வெளியிடுகின்றன! - “ஆளைவிட்டால் போதும் நான் போட்டியிடவில்லை !” எனும் நிலைமைக்கு தி.மு.க. வில் ஒரு மனப்பான்மை இருந்தால்; “சீட்” கிடைக்கவில்லை என்பதற்காக ஆத்திரப்பட்டுக் கட்சியிலிருந்து விலகியிருப்பார் களா என்பதை அறிவுள்ளோர் ஆய்ந்து பார்க்கத் தவறமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்! -

அப்படி விலகியவர்கள் சிலர் மீது எனக்கு வருத்தமில்லை! ஆனால் அவர்கள் மேடைகளில் நின்று “பதவிக்காக நான் இந்தக்

கட்சியில் இல்லை! என் பிணத்தின் மீது கறுப்பு சிவப்பு இரு வண்ணக் கொடிதான் போர்த்தப்படும்" என்றெல்லாம் வீராவேச மாகப் பேசினார்களே; அதை நானும் நம்பி ஏமாந்தேனே என்பது தான் எனக்குள்ள வேதனை!

அதுமட்டுமல்ல; எப்பதவியும் பெறாமல் வியர்வை சிந்தி, ரத்தம் சிந்தி, உழைத்துக் கொண்டே இருக்கும் கழகத்தின் செயல்வீர மாமணிகள் ஒரு பக்கம் - முடவனுக்கு இறக் கிய இடத்தில் கோபம் என்பது போல; பதவிச் சுகம் அனுபவித்தவர்கள் சிலருக்கு அதில் கொஞ்சம் தொடர்ச்சி கெட்டால் பொல்லாத சினம் பொங்குகிறது! போய்விடுகிறார்கள்!

இதையேன் குறிப்பிடுகிறேன் என்றால்; நின்று, வென்று, பதவியில் அமரலாம் என்ற நம்பிக்கையிருப்பதால்தானே - நிற்பதற்கு வாய்ப்பில்லை என்றதும் கட்சித் தாவும் செயலுக்கு ஆட்படுகிறார்கள்!

அப்படியானால் அறிவாலயத்தில் யாரும் வந்து விண்ணப்பிக்க சுறுசுறுப்பு காட்ட வில்லையென ஏடுகள் சில வர்ணித்தனவே; அது பொய்தானே!

இதோ ஒரு பரபரப்பான செய்தியை நமது பிறவிப்பகை ஏடுகள் கொட்டை எழுத்தில் வெளியிட்டு; அறிவாலயத்தில் நடக்காததை எல்லாம் எழுதி, தமது கற்பனைக்கு ஓர் எல்லையே இல்லாமல் புளுகு மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டியிருக்கின்றன!

சென்னை பூங்காநகர் தொகுதியில் ரகுமான்கான் "சீட்" கேட்கவில்லை! நாஞ்சிலார் போட்டியிடும் திருவல்லிக்கேணி தொகுதியிலும், பேராசிரியர் போட்டியிடும் சேப்பாக்கம் தொகுதியிலும் "சீட்" கேட்டு, மனுக்கள் அளித்திருந்தார். பொதுச் செயலாளரும், துணைப் பொதுச் செயலாளரும் நிற்கும் தொகுதி என்பதால் அவர் விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லை!

எனவே பூங்காநகர் தொகுதிக்கு கொ.சி. நடராசன் பெயர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டது!

மாநில அளவில் முஸ்லீம் லீகுக்கு நான்கு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் - கழக வேட்பாளர்களாக ஷம்சுதீன் என்ற கதிரவன், கடையநல்லூரிலும்; உபயதுல்லா, தஞ்சாவூரிலும்; முகமதுகாதர், இராமநாதபுரத்திலும் நிறுத்தப்பட்டிருந்த

போதிலும்- சென்னை மாநகரத்தில் ஒரு முஸ்லீம் வேட்பாளர் கூட இல்லையே என்று தலைமைக் கழகத்திற்கு நூற்றுக்கணக்கான முறையீடுகள் வரத் தொடங்கின!

'உடனே நானும் பேராசிரியரும் கலந்து பேசி, சென்னை மாநகரில் கழக முஸ்லீம் வேட்பாளருக்கு பிரதிநிதித்துவம் தருவது தான் முறை' என முடிவெடுத்து, ரகுமான் கான்; 'சென்ற தேர்தலில் வெற்றி பெற்ற பூங்காநகர் தொகுதியில் போட்டியிடுவார்' என அறிவித்தோம். அதற்கு முன்பு கொ.சி நடராசனையும் அழைத்துப் பேசினோம். தலைமை எந்த முடிவெடுத்தாலும் கட்டுப்படுவதாக அவர் கணயமாகக் கூறினார்.

எனினும் பூங்காநகர் தொகுதி செயல் வீரர்கள், தங்களின் கருத்தை வலியுறுத்த நூற்றுக்கணக்கானோர் அறிவாலயத்திற்கு வந்தது உண்மை! அவர்களின் பிரதிநிதிகளை அழைத்து பேராசிரியரும் நானும் விளக்கமளித்ததும் உண்மை! அவர்கள் "அண்ணா வாழ்க!" "கலைஞர் வாழ்க!" என ஒலிமுழக்கம் செய்தவாறு, உணர்ச்சிப் பிழம்புகளாய் விடை பெற்றுச் சென்றதும் உண்மை!

"வேட்பாளரை மாற்ற வேண்டுமென்று அந்தத் தொண்டர்கள் வலியுறுத்திக் குரல் கொடுத்த போதிலும், தி.மு.க. தலைமையை எதிர்த்து எந்தவித கோஷத்தையும் எழுப்பவில்லை

என்று 23.4.91 சென்னை தினமணி ஏட்டிலேயே முதல்பக்கத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால் சில ஏடுகளில்: (அவை எந்த ஏடுகள் என நீ அறிவாய்) அறிவாலயம் வந்த தொண்டர்கள் கருணாநிதியைக் கேரோ செய்தார்கள் என்றும் - "தலைவரை மாற்று" என்று கோஷமிட்டார்கள் என்றும் - அ.தி. மு.க. தலைவியின் பெயரைச் சொல்லி வாழ்த்தொலி முழங்கினார்கள் என்றும் - அந்த அம்மணியின் தேர்தல் சின்னத்திற்கே வாக்களிப்போம், என்று குரல் எழுப்பினார்கள் என்றும் 'கோயபல்ஸ்' பிரச்சாரம் செய்யப் பட்டிருக்கிறது!

"வேட்பாளரா? வேண்டாம் ஆளை விடு!" என ஓடுகிறார்கள்! அவர்களை தி.மு.க. தலைமை விரட்டிப்பிடிக்க வேண்டியிருக் கிறது"

எனக் கேலி செய்த ஏடுகளில் தான் வேட்பாளராக நிற்கப் போட்டி - அதனால் தொண்டர்கள் கொதிப்பு - தொகுதி கிடைக்காத தால் சிலர் கட்சி தாவினர் - என்ற செய்தி கள் பெரிதுபடுத்தப்படுகின்றன!

கழகமும் தோழமைக் கட்சி அணியும் வெற்றிமுனை நோக்கி நடைபோடுகின்றன என்ற உண்மை; அந்த வட்டாரத்தைக் கலக்கத் தொடங்கிவிட்டதால் - இனிமேல் இதுபோன்ற கயிறு திரிப்புச் செய்திகள் கணக்கின்றி வந்து கொண்டேயிருக்கும்!

கவலையை விடு!
கடமையைச் செய்திடு!
வெற்றி நமதே!

அன்புள்ள
மு.க.
24-04-1991

1727. சத்தான கருத்துக்களை முத்து முத்தாக....

உடன்பிறப்பே,

“எதிர்மேடைகளில் இழிவாகப் பேசுகிறார்கள். எங்களால் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. அவர்களைப் போல பதிலுக்குப் பதில் அதே பாணியில் பேசாதே: என்று எங்களுக்கு மட்டும் வாய்ப்பூட்டு மாட்டுகிறாயே; எங்கள் தலைவரின் குடும்பத்தை, குடும்பத்துப் பெண்டிரை, நாக்கூசாமல் நாராச நடையில் மாற்றுக் கட்சி மேடைகளில்; கேட்போர் நெஞ்சு பதறிட - குமுறிட - இதைக் கேட்டுக்கொண்டு; தடுத்து நிறுத்த முடியாமல் உயிர் வாழ வேண்டுமா, என என் விடும் நிலையில் ஆபாசமாகப் பேசுகிறார்களே; அதற்கு எப்படிப் பதில் கூறாமல் இருக்க முடியும் மலம் வாரி நம்மீது வீசுவோர் மீது பதிலுக்கு மணமிகு மலர்களையா அள்ளித் தூவமுடியும்?”

என்று நமது கழக சொற்பொழிவாளர்களில் சில உடன்பிறப்புகள் என்னைப் பார்த்துக் கேட்கிறார்கள்; நான் அவர்களது பேச்சு பாணியைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று கூறும் பொழுது

நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி! அந்த நிகழ்ச்சியை ஒரு பெருங்கூட்டத்தில் கூட குறிப்பிட்டிருக்கிறேன்! அந்தக் கூட்டப் பேச்சினை நமது அடியார் (ஆம்; அப்துல்லா அடியார்) ஒலி, ஒளி நாடாவாகத் தயா ரித்து வெளியிட்டிருக்கிறார். இப்போது அந்த நிகழ்ச்சிக்கு வருவோம்.

நபிகள் நாயகம், நாள்தோறும் ஒரு வீதி வழியாக நடந்து செல்வது வழக்கம். அப்படிச் செல்லும்போது அவரையும், அவரது கருத்துக்களையும் வெறுத்த ஓர் அம்மணி; மாடிப் பால்கனியில் நின்றுகொண்டு, கூடை நிறையக் குப்பையை நாயகப் பெருமானின் தலையில் கொட்டுவார். இது, அன்றாடம்

தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. நபிகள் நாயகம், தன் மீது விழுந்த குப்பைக் கூளங்களைப் பொருட்படுத்தாமல் அவர் வழியில் சென்று விடுவார். ஒருநாள் நாயகப் பெருமான் அந்த வீதியில் அந்த வீட்டைக் கடந்து நடந்தபோது, அவர் மீது குப்பை கொட்டப்படவில்லை. எனவே அவர் வியப்புற்று நின்றார். அடுத்த வீட்டிலிருந்தோரைப் பார்த்து என் மீது வழக்கமாகக் குப்பைக் கொட்டும் அந்த அம்மணிக்கு என்ன ஆயிற்று. எங்கே அவர்? எனக்கேட்டார். "அந்தப் பெண்மணிக்கு உடல் நலமில்லை" என்று அடுத்த வீட்டார் கூறினர்.

உடனே நபிகள் நாயகம், சற்றும் தயங்காமல் மட மடவென மாடி ஏறிச் சென்று நோயுற்று எழ முடியாமல் படுக்கையில் சுருண்டு கிடந்த அந்த அம்மணியின் உடல் நலம் பற்றி மிகவும் பரிவுடன் விசாரித்து, விரைவில் நலம் பெற வேண்டுமென வாழ்த்தினார். அந்தப் பெண்மணி; நபிகள் நாயகத்தின் பொறுமைகண்டு அதிர்ந்து, அவரிடம் மன்னிப்புக்கோரி, இஸ்லாத்தில் சேர்ந்தார்.

உடன்பிறப்பே, நம்மையும், நமது இயக்கத்தையும் இன்று நேற்றல்ல - ஆரம்ப காலத்திலிருந்தே ஆபாசமாகத் தாக்குவது, எழுதுவதற்கென்றே ஒரு திருக்கூட்டம், தெருக் கூட்டங்களில் தோன்றி இன்னமும் தொடர்ந்து தனது தொண்டினை ஆற்றிக் கொண்டிருக்கிறது.

அவர்களுக்கு அண்ணா சூட்டிய அழகான பெயர் என்ன தெரியுமா? "சந்து முனை சிந்துபாடிகள்!" என்பதாகும்.

அவர்களின் நடுங்கா நாக்கழகுப் பேச்சுப் பற்றியும்; நம்மனோர் எவ்வாறு அணுகுமுறை கடைப்பிடிக்க வேண்டுமென்பது பற்றியும் நமது ஆருயிர்த்தலைவர் அண்ணா அவர்கள் 1960-ஆம் ஆண்டு "தம்பிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சில பகுதிகளை மட்டும் உனக்கு நினைவூட்டுகிறேன். இதோ அண்ணாவின் கடிதம்:

"தம்பி! சீற்றம் மேலிட்டுப் பலர், நமது கழகத்தைத் தாறுமாறான முறையில் தூற்றித் திரிகிறார்களே; வரலாறு படித்தறியாதார்கள், நாம் காட்டும் வரலாற்றினை வெற்றுரை என்று கூறுகின்றனர்; உள்ள உணர்ச்சியை உளறல் என்றும், நாட்டுப் பற்றை நாச நினைப்பென்றும் பேசி வருகின்றனரே. இந்நிலையில் நமக்கு ஆதரவு

பெருகி வருகிறது என்று கூறுவது, எங்கனம் பொருந்தும் என்று கேட்கத் தோன்றும்.

தம்பி ஒருகணம் எண்ணிப் பார். எதைக் கண்டு நீ, இதுபோலக் கேட்கிறாயோ, அதிலேயே ஓர் பேருண்மை அடங்கிக் கிடந்திடும் அற்புதம் காண்பாய்.

ஏன் எதிர்க்கிறார்கள் தம்பி! ஏன் ?

நமது பேச்சு, மக்களுக்குப் பிடித்து விட்டது, புரிந்தும் விட்டது! அது தெரிந்ததால், ஆதிக்கக்காரர்கட்கு அவர்தம் அடி வருடிகட்கு, அச்சம் குடைகிறது. எத் துணையோ பாடுபட்டு நாம் அமைத்துக் கொண்டுள்ள ஆதிக்கம் அழிந்தொழிந்து போய்விடும் போலிருக்கிறதே, என் செய்வது என்ற எண்ணம், அவர்களைப் பிடித் தாட்டுகிறது.

கிளைக்குக் கிளை தாவிடும் கடுவன் சில வேளைகளில் மந்தியிடம் சொக்கியதால் அதுபோலச் செய்வதுண்டு. எனினும், பெரும்பாலும், தன்னைப் பிடித்துக் கொள்ள யாராரோ முயற்சிக்கிறார்கள் என்று தவறாக எண்ணிக்கொண்டு, அதன் காரணமாகத் திகில் கொண்டு விடுகிறது; தப்பிப் பிழைக்க வேண்டும் என்றோர் தவிப்பு, கடுவனுக்கு ஏற்பட்டு விடுகிறது. தாவுகிறது, குதிக்கிறது, குறும்புச் சேட்டைகள் செய்கிறது, பற்களைக் காட்டுகிறது. அதைக் கண்டு, கருத்திலே தெளிவுள்ளோர், கண் சிமிட்டியும் குறுநகை காட்டியும், செல்வரேயன்றி, "ஏ! கடுவனே! உன்னால் மட்டுந்தானா, உச்சாணிக் கிளைக்குத் தாவ முடியும், இதோ பார், என்னை " என்று கூறி, மரமேறித் தாவவா செய்வர். சிறுமதியின் விளைவாக ஏற்பட்ட சீற்றத்தாலோ, சில லறை கிடைத்திடும் என்ற எண்ணத்தாலோ, இவர்கள் இத்துணை ஏற்றம் பெறுவதா என்ற அருவருப்பாலோ சிலர், இழி மொழி பேசித் திரிவரேல், அதனை ஒரு பொருட்டாகவும் கொள்ளலாமோ? தள்ளு குப்பையை என்று கூறிவிட்டு, நமது தூய பணியினைத் தொடர்ந்து நடாத்திச் செல்ல வேண்டும். எங்கிருந்து கிளம்பி னோம்! எந்த நிலையில் தொடங்கினோம்! துணை நிற்க யார் இருந்தனர். ஆயினும், இன்று எந்த அளவுக்கு

முன்னேற்றம் கண்டு விட்டோம் என்பதனை எண்ணிப் பார்த் தால், தம்பி! ஏற்படும் எழுச்சியும் மகிழ்ச்சியும் உன்னையும், என்னையும் இன்பபுரிக்கல்லவா அழைத்துச் செல்கிறது. அந்த இடம் சென்றிட்டால், விடம் கொண்ட நாவினர் வீசிடும் சுடுசொல் நம் செவி புகவும் இயலாது என்பதனை ஏன் மறந்தாய் நிரம்பாத குடம் தளும்பிடும்பான்மை போல. கொள்கை பதியாத மனத்தினர், குளறுவர், வேறென்ன செய்வர். அது நம்மைத் தீண்டவும் முடியாத உயர் இடமல்லவா, நாம் இருப்பது. அதை மறத்தல் அழகல்லவே! பெற்றெடுத்த செல்வியின் பேச்சொலி கேட்டு இன்புறும் தாயின் செவிக்கு குழலும் யாழும்கூடக் குதூகலம் தாராது என்றனர் ஆன்றோர். இலட்சிய ஒலி இசை எனச் செப்பி, இனிமை தந்திடும் இடம் வந்த பிறகு, உன் செவியில், ஊளையும் உறுமலும் வீழ்த்திட, இடமளிக்கலாமோ!

தம்பி ஒன்று கூறுவேன். அதனை என்றும் மறவாதே. நம்மைவிட மிகப் பெரியவர்கள், அறிவிலும், ஆற்றலிலும், தியாகத்திலும், தரத்திலும், திறத்திலும், மிகமிக மேலோர் என்று நாமே, நெஞ்சு நெக்குருக ஒப்புக் கொண்டு தீர வேண்டிய பேரறிவாளர்கள், இன்று நம்மீது வீசப்படும் இழி மொழிகளைவிட மிகமிகக் கேவலமான இழிமொழிகளையும் பழிச் சொற்களையும் தாங்கிக் கொண்டனர்.

உலகே இன்று புகழுகிறது; அறிவியலுக்கே அடித்தளம் அமைத்த ஆசான் என்று, கிரேக்க நாட்டு சாக்ரடீசை. அவர் பட்டபாடு, கொஞ்சமா ஆம், அன்னா மாபாவிகள், நஞ்சு கொடுத்தல்லவா சாகடித்தார்கள், என்பாய். நான், அதைக் கூற வில்லை , தம்பி! அது, அவர் கிரேக்க நாட்டுக்கொடியவர்களுக்குத் தந்த தண்டனை. இறந்துபட்டார்; எத்தகைய இழி மக்கள் கிரேக்கத்தில் இருந்தனர் என்பதனை உலகு அறிந்து காறித்துப்பச் செய்துவிட்டுச் சென்றார். நான் அவர் இறந்துபட்டதைக் கூறவில்லை. அவர் உயிருடன் இருக்கும்போதே, எத்துணை இழிமொழியைக் கேட்டுக்கொண்டார் தெரியுமா

நாடகம் தீட்டி, நாட்டு மக்களிடம் செல்வாக்குப் பெற்ற புலவனொருவன், வெறும் பொச்சரிப்புக் காரணமாக, சாக்ரடீசை, முட்டாள், முரடன், கயவன், காமுகன், பொய்யன், புரட்டன் என்றெல்லாம் சி, ஒரு நாடகம் தீட்டி, சாகரமல வாழ்ந்த நாட்களிலேயே, அவர் உலவிய ரதன்ன நகரத்திலேயே, நாடகத்தை நடத்திக் காட்டினான். நையாண்டி செய்தனர். சென்சே, இவ்வளவு தானா, இந்தச் சாக்ரடீஸ் இலட்சணம் என்று ஏளனம் பேசினர் பலர். சாக்ரடீஸ் துளியும் பொருட்படுத்த வில்லை! தாங்கிக் கொண்டார்! தடுத்தார் இல்லை! திருப்பித் தாக்கவுமில்லை! மல காப்புகழொனி ஒன்றும் அவருக்கு; அறிவாய்.

அவரை விடவா, நாம் ஏற்றமிக்கோர். இல்லை அல்லவா! ஆமானின் தம்பி, நமக்கு ஆத்திரமூட்ட வேண்டும். அதன் காரணமாக அமளி மூள வேண்டும் என்ற அற்ப நோக்குடன், நாராசநடை பயிலுவோர் நாலாறு வார்த்தைகளை வீசினால், தாங்கிக்கொள்ளக் கூடாதா! கல்லடியாம். கலிலியோவுக்குக் கிடைத்தது! முள் முடியாம், ஏசுவுக்கு! நெருப்பிலிட்டனர். ப்ரூனோவை! சுட்டே கொன்றனர். ஆபிரகாம் லிங்கனையும், அண்ணல் காந்தியாரையும். எனினும், அண்ணா! அடக்கிக் கொள்ள முடியவில்லை ஆத்திரத்தை! அவ்வளவு மோசமாக ஏசுகிறார்கள், என்றும் ஆயாசப்படுகிறாயே, நியாயமா?

தம்பி உன்னையும் என்னையும்தான், அந்த "உயர்" பண்பு படைத்தோர் ஏசுவர், தூற்றுவர்! அறிஞனாம் அறிஞன், எவன் கொடுத்தான் பட்டம் என்று பேசுவர்! ஆளைப்பார் ஆளை என்று கேலி செய்வர். அவர் யோக்யதை தெரியுமா? என்று கூசாமல் பொய்யுரைத்து பேசுவர்.

அவன் பொய்யன், புரட்டன், கள்ளர், காமுகன், அடுத்துக் கெடுப்பான், ஆகா வழி காட்டுவான், அர்த்தமற்ற பேச்சுப் பேசுவான், ஆதாரமற்ற காரணம் காட்டுவான், இப்படிப்பட்டவனை அடித்தாலும் கடித்தாலும் கொன்றாலும் மென்று உமிழ்ந்தாலும் குற்றம் இல்லை,

பாபம் இல்லை. நாட்டுக்கு இவன் துரோகி, நல் லன எல்லாம் அழித்தான், நாசப்பாதைதான் காட்டுவான், நம்பினோரை நட்டாற்றில் விடுவான், பெட்டி பேழை நிரப்பிக் கொள்வான், பேயாய் அலைவான்...

'போதுமா, தம்பி! இவ்வளவு தான், ஏச முடியும்; ஏசட்டும், ஏசுகிறார்கள்.

ஆனால், என்னை இப்படியும், உன்னை ஓரளவுக்கும் தூற்றிப் பேசவும், இழி மொழியால், ஏசவும் தான், வசவாளர்களால் முடியுமே தவிர, தாய்த்திரு நாட்டினை, தமிழகந்தன்னை, ஒரு துளியேனும், இழித்தும் பழித்தும் ஏளனம் செய்தும், பேச இயலுமா? என்னிடம் வண்டி வண்டியாகக் குறைகள் உள்ளன என்று பேசி, ஆசையைத் தீர்த்துக் கொள்ளட்டும்.

தாயகத்தின் எழிலையும், ஏற்றத்தையும், இல்லை என்று கூறக் கொல்லைச் சரக்கின் நாற்றத்தையும் மிஞ்சவல்ல கொடிய மொழி பேசிடும் குணாளர்களாலும், முடிய வில்லையே! முடியாதே!

எனக்குத்தான் அறிவு இல்லை, ஆற்றல் இல்லை, தரம் கிடையாது, திறம் இல்லை, என்று ஏச முடிகிறதேயன்றி, நமதரும் நாடு வளமற்றது, வகையற்றது, மரபற்றது, மாண்பற்றது, வீரமற்றது, வரலாறற்றது என்று கூற முடிகிறதா!

என் தாய் மலடி என்று கூறிடும் மகன் எங்குளான்?

விரலிலே புண் என்று கூறட்டும் கண் அல்ல, கருத்துக் குருடானதன் விளைவு அந்தப் பேச்சு என்போம்--ஆயின், விரலில் உள்ள மோதிரத்திலே பதிந்துள்ள வைரத்தின் ஒளியையும் உயர்வையும் கூடவா மறுத்திட இயலும். தம்பி! எனக்குள்ள மகிழ்ச்சி, இதிலேதான்.

தாயகத்தின் அருமை பெருமை, மரபு மாண்பு இப்போது மிக மிகச் சாமான்யர்களுக்கும் பளிச்செனத் தெரிந்து விட்டது; எனவே தான், நம்மை இழித்தும் பழித்தும் பேசிடும் போக்கினர் கூடத் தாயகத்தை பேசக் கூசுகிறார்கள்.

நமக்கென்று உண்மையான, பொருத்தமான, தரம் திறம் இருக்குமானால், தருக்கரின் தாக்குதல், நம் தான்படு தூசு ஆகிப் போகும். எனவே கவலை கொள்ளத் தேவையே இல்லை!"

உடன்பிறப்பே, பலாச்சுளை அனைய அண்ணனின் கடிதத்தைப் படித்தாயா? அவர் வழியில் அயராது உழைக்கும் உறுதி மேற்கொண்டுள்ள நாம்; அவர் தரும் அறிவுரையினை நடைமுறையில் காட்டிட வேண்டாமோ? -

நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்க நம்மிடம் கருத்துக்களுக்கா பஞ்சம்? - நாற்பது ஆண்டுக்கு மேற்பட்ட சுதந்திர இந்தியாவின் எதிர்கால நிலை குறித்து, எண்ணிப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது! -

திட்டமிட்டு வெட்டப்பட்ட குழியில் விழுந்த யானை போல் - வெளிநாட்டுக் கடன் பள்ளத்தில் விழுந்து கிடக்கிறது நாடு!

யானையை எவை எவைக்குத் தகுந்தாற் போல் எவனெவன் பழக்குவானோ?

தேக்குமரம் தூக்கிச் செல்லவோ?

கோயிலுக்கு வரும் வி.ஐ.பி.களுக்கு துதிக்கை தூக்கி வரவேற்பு மாலை அணிவிக்கவோ?

அல்லது சர்க்கசில் சவுக்கடிகளுக்கு பயந்து சாகசங்கள் காட்டவோ

அந்த நிலை கடன் பள்ளத்தில் வீழ்ந்துள்ள இந்தியத் திருநாட்டுக்கு வந்துவிடாமல் காத்திட வேண்டுமே!

அதுபற்றிப் பேசலாமே! அதைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல், ஆட்சிகளைக் கலைப்பதும், தேர்தல் தேர்தல் என்று மக்களைக் களைக்க வைப்பதுமான வேலையில் ஈடுபடுகிற செயல் களைக் கண்டித்துப் பேசலாம்!

மக்களுடன் நெருக்கமாக உள்ள மாநில உரிமைகள், சுயமரியாதை உணர்வுடன் பேணப்பட வேண்டிய அவசியம் குறித்துப் பேசலாம்!

மதவாத - சாதி பேதப் பிணக்குகளைத் தூண்டிவிடும் செயல்களை மறுத்துப் பேசலாம்!

மண்டல் கமிஷன் பரிந்துரை நிறைவேற்றப்பட வேண்டிய அவசிய அவசரம் குறித்துப் பேசலாம்!

தேசிய முன்னணி அரசின் ஓராண்டுக் கால சாதனைகளைப் பட்டியல் போட்டுப் பேசலாம்!

கழக ஆட்சியின் இரண்டு ஆண்டுக் கால சாதனைகளையும் - மீண்டும் ஆட்சிக்கு வந்தால் செய்வதாக அளித்துள்ள வாக்குறுதிகள் தாங்கிய நமது தேர்தல் அறிக்கையை விளக்கிப் பேசலாம்!

எல்லாம் சரி; எதிரிகள் பேசுவதற்கு எந்த பதிலும் சொல்ல வேண்டாமா என்று நீ முகம் சுளிப்பது எனக்குப் புரிகிறது!

பதில் விளக்கம் தந்து பொது மக்கள் குழப்பத்தை நீக்க வேண்டுமெனில்; கடந்த காலத்தில் அவர்களே இரு களங்கள் அமைத்துக் கொண்டு, ஒருவரைப் பற்றி ஒருவர் புகழாரம்(?) சூட்டிப் பேசினார்களே; அந்த அரிய உரைகள் வெளியான ஏடுகளை எடுத்து ஆதாரபூர்வமாகத் தேதி வாரியாகப் படித்துக் காட்ட; ஒருமணி நேரப் பேச்சில் ஓரிரு நிமிடங்கள் எடுத்துக் கொண்டால் போதுமானது!

மற்றபடி; மக்கள் பிரச்சினை - நாட்டுப் பிரச்சினை - எதிர்கால இளைஞர்கள் பிரச்சினை - எழுச்சியுற்றுத் திகழ வேண்டிய மகளிர் பிரச் சினை-தொழிலாளர் பிரச்சினை- விவசாயிகள் பிரச்சினை - நெசவாளர்கள் பிரச்சினை- பிற்படுத்தப்பட்டோர் பிரச்சினை - மிகவும் பிற்படுத் தப்பட்டோர் பிரச்சினை- தாழ்த்தப்பட்டோர் பிரச் சினை - தமிழ் ஈழமக்களின் அமைதிப் பிரச் சினை - தமிழ்நாட்டு மக்களின் இனமானப் பிரச்சினையென எத்தனையோ பிரச்சினை களில் சத்தான கருத்துக்களை முத்து முத்தாக உதிர்த்திட முடியாத உடன்பிறப்பா எனது அருமை உடன்பிறப்பு.

எங்கே வில்லாற்றலில் விஜயனையும் வென்றிடும் உன் சொல்லாற்றலைக் காட்டிட எழுந்திடு பார்ப்போம்!

“சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது”

“சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து”

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

எச்சமயச் சார்புமற்ற ஏற்றமிகு குறள் மொழியும், அச்சானி அன்னார் நமது அண்ணன் மொழியும், இவற்றைத் தொகுத்தளித்துள்ள என் அன்பு மொழியும் ஏற்றிடுக உடன் பிறப்பே!

அன்புள்ள

மு.க.

26-04-1991

1728. கழக மென்னும் கண்ணகி கேட்கும் நீதி!

உடன்பிறப்பே,

சட்டப் பேரவையில் தன்னை மானபங்கப்படுத்தி விட்டதாகவும் அதனால்தான் சட்டமன்றம் சென்று எதிர்க்கட்சித் தலைவர் பணியைத் தன்னால் ஆற்றமுடியவில்லை என்றும் அ.தி.மு.க. அம்மணியார், தனது தேர்தல் பிரச்சாரத்தில் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறார்.

நடக்காத ஒன்றை நடந்ததாகப் பொய் சொல்லும் அந்த அம்மணியின் கூற்றை வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும்; "சரி சட்ட சபைக்குத்தான் செல்லவில்லை! உங்களைத் தேர்ந்தெடுத்த போடித் தொகுதி வாக்காளப் பெருமக்களையாவது சந்தித்து அவர்களது குறைகளை நேரில் அறிவதற்கு இந்த இரண்டு ஆண்டுகளில் எத்தனை முறை போடித் தொகுதிக்குச் சென்றீர்கள், தேர்ந்தெடுத்த மக்களுக்கு நன்றி சொல்ல எத்தனை கூட்டங்கள் நடத்தினீர்கள்" என்று நியாயபுத்தி படைத்த மக்கள் நேரில் கேட்காவிட்டாலும், எண்ணிப் பார்க்க மாட்டார்களா?

உடன்பிறப்பே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் நாளேடு "தீக்கதிரில் - அ.தி.மு.க. அம்மணியின் தேர்தல் பிரச்சாரம் குறித்து ஒரு கட்டுரை தீட்டப்பட்டுள்ளது. அதில் சில பகுதிகளை உன் கவனத்திற்கும், வாக்காளப் பெருமக்கள் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

"மக்களை மருட்டும் விலைவாசி உயர்வு, வகுப்புவாதம், யதேச்சாதிகாரம், மாநில உரிமைகள் பறிப்பு, காய்ந்து கிடக்கும் காவிரி, மண்டல் கமிஷன் அமலாக்கத்திற்கு போடப்படும் தடைக் கற்கள், இவை பற்றியெல்லாம் அம்மையார் பேசுவதில்லை. கிளிப்பிள்ளை போல், கீறல் விழுந்த பிளேட்டு போல, பெண்மையை அவமானப்படுத்தி விட்டார்கள் என்று நடக்காத ஒன்றை

நடந்ததாகச் சொல்லி, முதலைக் கண்ணீர் விட்டு சோக நாடகம் ஆடி வருகிறார்.”

இவ்வாறு மார்க்சிஸ்டு ஏடு; “தீக்கதிர் தாது கட்டுரையைத் தொடங்குகிறது.

சட்டசபையில் தி.மு.க. தான் தவறாக நடந்து கொண்டது என்பதுபோல சில ஏடுகள் கூட இன்னமும் திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்து வருகின்றனவே; அந்த ஏடுகளைப் பார்த்தும் அந்த ஏடுகளின் பிரச்சாரத்தால் குழப்பமடைபவர்களைப் பார்த்தும் நான் கேட்கும் கேள்வி ஒன்றே ஒன்றுதான்!

13 ஆண்டுக் காலம் ஆட்சியில் இல்லாமல் எதிர்க்கட்சியாக இருந்து, பல அடக்குமுறைகள், மிசா கொடுமைகள், பேராசிரியர் உள்ளிட்ட பத்து சட்டமன்ற உறுப்பினர்களின் பதவி பறிப்பு. இப்படிப் பல பழி வாங்கும் செயல்களுக்கெல்லாம் உள்ளாகியிருந்த தி.மு.கழகம்; 13 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்று சட் டப் பேரவையில் நுழைந்து, தனது முதல் பட்ஜெட்டை அவையின் முன்னர் வைக்கும் போது; தானே முன் வந்து ஒரு கலவரச் சூழ்நிலையை உருவாக்கி, அமைதியாக நடைபெற வேண்டிய நிதிநிலை அறிக்கை அளிக்கும் நிகழ்ச்சியைக் கெடுத்துக் கொள்ள நினைக்குமா!

இந்தக் கேள்விக்கான பதிலை ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தாலே போதுமானது!

“வந்தவனெல்லாம் வரதட்சணை கேட்டுக் கொண்டிருக்கிறான். மகளோ, வீட்டில் வசந்த மலராக விளங்க வேண்டியவள், வாடிடும் மலராக ஆகிக்கொண்டிருக்கிறாள்! வராதோ இவளுக்கு ஒரு விடிவு காலம்” என ஏங்கிக் கொண்டிருந்த தாயின் மனம் குளிர; மகளுக்கு, மாப்பிள்ளை கிடைத்து - மகளிவின் திருமணம் மங்கல இசை முழங்க நடைபெறத் தொடங்கும் போது, அந்தத் தாய் - தன் பெண்ணின் திருமணத்தில் பெரும் கலகம் மூண்டிடக் காரணமாக இருப்பாளா அமைதியாக, ஆனந்தமாக, அனைவரும் வாழ்த்திட அருமை மகளின் மணவிழா நடைபெற வேண்டுமென்றுதானே எந்தத் தாயும் என்னில் கொண்டிருப்பாள்! தாயே, தன் மகளின் மணவிழாவில் அமளி துமளி ஏற்படுவதற்கு ஆயத்தம் செய்தாள், தூண்டிவிட்டாள் என்று கூறுவது எவ்வளவு பொருத்தமற்ற கட்டுக்கதை!

உடன்பிறப்பே, 1989 மார்ச் 25 ஆம் நாள் அந்தத் தாயின் மனநிலையில்தான் நானிருந்து; தமிழக ஆட்சியின் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்ச்சி மங்களகரமாக நடைபெற வேண்டு மென்று பேரவைக்குள் நுழைந்தேன்!

அ.தி.மு.க. அம்மணியார், நிதிநிலை அறிக்கையைப் படிக்கவிட்டார்களா? "நீ கிரிமினல்! நிதிநிலை அறிக்கையைப் படிக்காதே!" என்று கூப்பாடு போடவில்லையா தமிழக சட்டமன்ற வரலாற்றில் நிதிநிலை அறிக்கை படிக்கும் நாளன்று: அமைதியாக வெளிநடப்புகள் நடை பெற்றதுண்டு! அல்லது சில கட்சியினர் அவைக்கு வராமல் புறக்கணித்ததுண்டு! பட்ஜெட்டைப் படிக்க விடாமலே கூக்குரல் போட்டதுண்டா குழப்பம் செய்ததாக இதற்கு முன் தமிழகப் பேரவை வரலாற்றில் செய்தி ஏதேனும் உண்டா?

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது வி.கே.ஆர்., அண்ணா போன்றவர்கள் சசிவர்ண தேவர், எம். கல்யாணசுந்தரனார் ஆகியோர் எதிர் வரிசையில் இருந்ததுண்டு! நிதிநிலை அறிக்கை படிக்கும்போது இப்படி ஒரு நிலையை எவரேனும் உருவாக்கியது உண்டா?

பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், பெரியவர் பக்தவத்சலம் அவர்களும் முதலமைச்சர்களாக இருந்தபோதும் சரி; அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போதும் சரி; விவாதங்களில் என்னைப் போன்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் வேகம் காட்டியிருப்போமே தவிர; ஆளுநர் உரையாற்றும் நாளிலோ, நிதிநிலை அறிக்கை படிக்கும் நாளிலோ, அமளி துமளியில் அணுப்பொழுதேனும் ஈடுபட்டதாக சரித்திரம் உண்டா?

ஆனால் அன்று சட்டமன்றத்தில் அ.தி.மு.க. அம்மணி: நிதிநிலை அறிக்கையைப் படிக்கக் கூடாது எனக் கூச்சல் போட்டுக் கொண்டே இருந்தது மட்டுமல்ல; பட்ஜெட் புத்தகத்தை என் கையிலிருந்து பறிக்கவும் துணிந்தது! அது மட்டுமல்ல; தன் கட்சி உறுப்பினர் சிலரை என் மீது ஏவியும் விட்டது! அந்த உறுப்பினர் ஒருவர், என் கையிலிருந்த பட்ஜெட்டைப் பிடுங்கிக் கிழித்தார். அதைத் தவிர்க்க முற்பட்ட என் முகத்தில் மற்றொரு உறுப்பினர் முஷ்டியால் குத்திட என் மூக்குக்கண்ணாடி உடைந்து நொறுங்கிக் கீழே விழுந்து தூளாயிற்று.

இப்படி அராஜகத்திற்கு வித்திட்டவர்கள் அன்றைக்கு அந்த அம்மணியாரின் கூட்டம்தான் என்பதை நண்பர் திருநாவுக்கரசு அவர்களே ஒருநாள் சட்டமன்றத்தில் அந்த சதி எப்படி திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டது என்பதை ஆதாரங்களுடன் விளக்கி, அது சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பிலும் பதிவாகியிருக்கிறது.

"சேலையை இழுத்தார்கள், மானபங்கப்படுத்தினார்கள். அந்த காட்சி டி.வி.யில் படமாக எடுக் கப்பட்டிருக்கிறது. அதை டி.வி. நிலையத்தார் காட்ட அனுமதிக்க வேண்டும்" என்று அ.தி.மு. க வினரும், சில காங்கிரஸ் உறுப்பினர்களும் சபாநாயகரிடம் அனுமதி வழங்கும்படி கேட்டார்கள்.

முதலில் பேரவைத் தலைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள்; "அது மரபல்ல! எந்த நிகழ்ச்சியும் டி.வி.யில் காட்டுவதை அனுமதிக்க இயலாது." என்றார்!

பிறகு நான் பேரவைத் தலைவரைக் கேட்டுக் கொண்டேன். டெல்லியில் நடப்பது ராஜீவ் காந்தியின் ஆட்சிதான்! அதனால் டி.வி. நிலையத்தார் எதையும் மறைக்காமல் வெளியிடுவார்கள்! உண்மை என்ன என்பது நாட்டு மக்களுக்குத் தெரிவதற்கு; அந்த நிகழ்ச்சி முழுவதையும் டி.வி. நிலையத்தார் வெளியிடத் தாங்கள் அனுமதிப்பதே நல்லது! என்று நான் பேரவைத் தலைவரிடம் பேரவையிலேயே கேட்டுக் கொண்டேன்.

பேரவைத் தலைவரும், அந்த நிகழ்ச்சிகளின் படங்களோ, நேரில் எடுக்கப்பட்ட காட்சிகளோ வெளியிடத் தடையில்லை என்று சபையிலேயே அறிவித்தார்!

ஆனால் உடன்பிறப்பே; அந்த அனுமதிக்கும் பிறகு ராஜீவ் ஆட்சி நடந்தபோதே. டி.வி. யில் அன்றைய சட்டசபை நிகழ்ச்சி வெளியிடப்பட வில்லை ! என் காரணம் என்ன அ.தி.மு.க. வினர் இட்டுக் கட்டிச் சொன்ன சேலை அவிழ்ப்போ, அல்லது வேறு எந்தவிதமான மானபங்கமோ எதுவும் நடைபெறவில்லை! தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் மண்டைதான் உடைக்கப்பட்டது!

அமளி நடந்தது உண்மை! பட்ஜெட் படிக்க எழுந்த முதலமைச்சராகிய நான் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து கலவரம் மூண்டது உண்மை!

அந்தக் கலவரம்கூட, எம்.ஜி.ஆரின் துணைவியார் திருமதி ஜானகி அவர்களின் ஆட்சி மீது நம்பிக்கையில்லை என்று அ.தி.மு.க.வினர் இரண்டு கோஷ்டியாகப் பிரிந்து கொண்டு, காங்கிரசாரையும் இணைத்துக் கொண்டு பேரவையில் நடத்திய இரத்த வெள்ள அராஜகத்துடன் ஒப்பிட முடியாத அளவுக்கு இரண்டாவது இடம் பெறக்கூடிய கலவரம்தான்

ஜானகி அம்மையார் ஆட்சியைக் கவிழ்க்க நடத்தப்பட்ட கலவரத்தில் அ.தி.மு.க. கோஷ்டியினரும், காங்கிரஸ் நண்பர்களும் மைக்குகளையெல்லாம் பிடுங்கி எடுத்துக் கொண்டு, கோட்டைக்கு வெளியே வந்த காட்சியை ஏடுகள் எல்லாம் வெளியிட்டிருந்தனவே!

1989 மார்ச் 25-ஆம் நாள் கோட்டைக்குள் சபையில் நடந்ததை வெளியிட வேண்டுமென வற்புறுத்தப்பட்டு, சபாநாயகர் அனுமதித்த பிறகும் வெளியிட முன் வராததற்குக் காரணமே; அ.தி.மு.க.வினர் நடத்திய -கோயபல்ஸ் “ பொய்ப் பிரசாரத்தின்படி; எந்த நிகழ்ச்சியுமே நடைபெறாததுதான்!

நான் அமைதியாகப் பட்ஜெட் படிக்கத் தொடங்கும் புகைப்படமும் - அ.தி.மு.க. அம்மணி ஆவேசமாக எழுந்து மறுத்திடும் படமும், ஆளும் கட்சியினரான நாம் அமைதியாக அமர்ந்திருக்கும் படமும், ஒரு அ.தி.மு.க. உறுப்பினர் என் கையில் உள்ள பட்ஜெட்டை பிடுங்கிடும் படமும் - சிங்கப்பூரில் ஒரு தினசரி இதழிலும், தமிழ் நாட்டில் ஒரு வார இதழிலும் அப்பொழுதே வெளியாகியிருக்கின்றன.

இத்தனை உண்மைகளையும் மறைத்து விட்டு, வாக்காளப் பெருமக்களையும் குறிப்பாக தாய்க் குலத்தையும் ஏமாற்றுகிற முறையில்;

நாம் பெண்மையை இழிவுபடுத்திவிட்டோம் என்று அந்த அம்மணி செய்யும் பிரச்சாரத்திற்கு சரியான விளக்கப்பதிலாக, மார்க்சிஸ்ட் கட்சி பின் “தீக்கதிர்” இதழ்; வேறு விவரங்களையும் தந்துள்ளது. பெண்மையை இழிவுபடுத்தியது யார் என்று தீக்கதிர் கேள்வி கேட்டு: அந்த அம்மணியாரை, திணற வைக்கிறது

எம்.ஜி.ஆர்., காலமானவுடன் அவரது துணைவியார் ஜானகி அம்மையாரைப் பற்றி, திருமதி ஜெயலலிதா அவர்கள்

எப்படியெல்லாம் அறிக்கை விட்டார், பேட்டி கொடுத்தார் என்ற செய்திகளைப் பல ஏடுகளில் இருந்து, "தீக்கதிர்" திரட்டித் தந்துள்ளது. அவையாவன:

> நாவலர் கையெழுத்து போட்ட கோப்பிலேயே மீண்டும் கையெழுத்து போட்டு பழகுகிறார் (ஜானகியம்மாள்). அவர் தனது வீட்டில் அமர்ந்து ஸ்ரீராம ஜெயம் எழுதினாலாவது புண்ணியம் கிடைக்கும். ஸ்ரீராமஜெயம் எழுதவேண்டியவர்கள் எல்லாம் கோட்டையில் உட்கார்ந்து கோப்புகளில் கையெழுத்து போட பழகிக்கொண்டிருக்கிறார்கள்..
>
> (தினமலர் 11.88)

சேலம் அருகே நாமக்கல்லுக்கு ஜானகி சென்றாராம். அங்கு ஒரு சாமியாரை, ஜோதிடரை பார்த்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தாராம். அவரிடம் ஜானகி என்ன கேட்டிருக்கிறார் தெரியுமா? எப்படியாவது ஜெய லலிதாவை ஒழித்துகட்டவேண்டும். ஜெயலலிதா உயிரோடு இருக்கக் கூடாது. பூசை அல்லது பில்லி சூனியம் வைத்தாவது ஜெயலலிதாவை சாகடிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். அதற்காக பணமும் கொடுத்து வந்துள்ளார். இன்னும் மலையாள மாந்திரீ கர்களை மந்திரவாதிகளை எல்லாம் அழைத்து வந்துள்ளாராம். இது நியாயமா?

(தினமலர் ! 11.88)

"நாங்களே எம்.ஜி.ஆரின் உண்மையான வாரிசு. 1984-ல் நோய்வாய்பட்டு பின் பேசமுடியாததைப் பயன்படுத்தி புரட்சித் தலைவரைக் கைதிபோல வைத்து இஷ்டம்போல விளையாடினார்கள். அவருக்கு தெரியாமல் கோப்புகளில் போலி கையெழுத்து போட்டிருக்கிறார்கள். காரியம் முடிந்ததும் அவர் உயிரோடு இருக்கக்கூடாது என்று எண்ணினார்கள். டிசம்பர் 23-ந் தேதி இரவு 10 மணிக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதாக செய்தி வந்துள்ளது. அப்படியானால் அவரை மருத்துவமனையில் சேர்க்கவில்லை. ஜானகியின்

கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவர்கள் சிகிச்சை அளித்து இருக்கிறார்கள்.'

(மாலை முரசு 1.4.89)

புரட்சித் தலைவரின் நண்பர்- ஒருவர் - தியாகராய நகரில் உள்ள ஒருவர் தியாகராய நகரில் உள்ள ஒரு தியேட்டரை விலைக்கு வாங்கித் தரச்சொல்லி 22.12.87 அன்று இரவு கொடுத்துவிட்டுப் போன ஒரு கோடி ரூபாய் பணத்தை எங்கே கொண்டு போய் பதுக்கி வைத்திருக்கிறீர்கள்? ராமாவரம் தோட்டத்திற்கு அருகே உள்ள ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் உள்ள சுரங்க அறையில் பதுக்கிவைத்திருக்கிறீர்களா இல்லையா? 1986 -ம் ஆண்டு எம்.ஜி.ஆர். எழுதிய உயில் எங்கே? யாரை கண்டு எம்.ஜி.ஆர். உயில் எழுதவேண்டிய அவசியம் என்ன? பொக்கிஷங்களை பரிசுப் பொருட்களை வளர்ப்பு மகன் அப்பு வீட்டிற்கும், உங்களுக்கும், கண பதிபட்டுக்கும் பிறந்த மகன் கரேந்திரன் வீட்டிற்கும் என மாற்றினீர்களே! இது உண்மையா இல்லையா?

(மாலைமுரசு 15.89)

உடன்பிறப்பே; அந்த அம்மணி பேசியதில், அறிக்கை விட்டதில், எவ்வளவு வெளியிட முடிந்தவைகளை மட்டுமே "தீக்கதிர்" வெளியிட்டு: எம்.ஜி.ஆரின் வாழ்க்கைத் துணைவியாக இருந்த ஜானகி அம்மையாரை, அவரது மனைவியே அல்ல என்றும், எம்.ஜி.ஆர். மரணத் துக்கு ஜானகி அம்மையார்தான் காரணம் என்றும், பேசியதைவிட பெண்மையைக் கேவலப் படுத்தும் பேச்சு ஒன்று இருக்க முடியுமா?" என்று கேள்வி கேட்டு, கட்டுரையை முடித்துள்ளது.

நானும் இன்றைய கடிதத்தை இன்னும் சில வரிகளுடன் முடிக்கிறேன்!

கற்புக்கரசி கண்ணகி, நீதி கேட்டாள்; தன் கணவன் கோவலனை அக்கிரமமாகக் கொலை செய்தார்களே இது நியாயமா? நேர்மையா? என்று!

கழகம் இப்போது நீதி கேட்கிறது; தமிழகத்தில் ஏழை எளியோர் நலிந்தோர் நலம் பெற, விவசாயிகள் மகிழ, தொழிலாளர் துயர்

துடைத்திட, அரசு அலுவலர், ஆசிரியர் ஆறுதல் பெற, மாணவர், மகளிர், நெசவாளர், மற்றும் கைவினைஞர் ஏராள உரிமைகளும் சலுகைகளும் பெற்றுப் பூரித்திட, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் அடைந்திட, தமிழ் மொழி, பண்பாடு, தமிழகம் சிறந்திட நேர்மையான நிர்வாகம் நடத்திய கழக ஆட்சியைக் கலைத்து ஜனநாயகத்தைப் படுகொலை செய்துவிட்டார்களே; இது நியாயமா? நேர்மையா? என்று தமிழ்நாட்டு மக்களைப் பார்த்துக் கேட்கிறது! ஆம்; கழகம் நீதி கேட்கிறது!

கழகமெனும் கண்ணகியின் கேள்விக்குப் பதில் சொல்லும் பொறுப்பு; அந்தப் பத்தினி தெய்வத்தைப் போற்றும் தாய்க் குலத்திற்கும்: ஏன்- மொத்தத் தமிழ்க் குலத்திற்கும் உண்டு!

அன்புள்ள

மு.க.

27-07-1991

1729. சென்னையின் செஞ்சதுக்கத்திலிருந்து!

உடன்பிறப்பே,

உன் அன்பு முகம் காண, இலட்சிய உறுதியுடன் இமைப் பொழுதும் அயராமல் உழைத்திடும் உன் ஒளி விழிகள் காண, கையில் கொடியேந்தி கருத்தில் கழகம் கழக மெனும் நினைவேந்தி நிற்கும் உன் கம்பீரத் தோற்றம் காண, உன் கைவண்ணத்தால் உருவாகிக்கொண்டிருக்கும் தேர்தல் பணிகளின் பாங்கும், பக்குவமும்- அதற்கென நீ பம்பரமெனச் சுழலும் காட்சியும் காண, திராவிட இயக்கப் பாசறையின் ஈட்டிகளாய், வேல்களாய், போர்வாள்களாய் வரிசையிட்டு நிற்கும் உன் போன்றோரின் கொள்கைக் கூர்மைகாண, ஜனவரி 30-க்குப் பிறகு மூன்று மாத காலம் வெளியூர் வந்து உன்னை சந்திக்க இயலாமல் பெரும்பாலும் சென்னையிலேயே அடைபட்டுக் கிடக்க வேண்டியிருந்த நிலை மாறி; நீ பொழியும் பாசமழையில் நனைந்திட மே தினத்தன்று புறப்படுகிறேன்.

என் பொதுவாழ்க்கையில் இவ்வளவு நாட்கள் வெளியூர் வந்து உன்னைக் காணாமல் இருந்ததில்லை அல்லவா?

ஆனால் ஒரு ஆறுதல்; வெளியூர் உடன்பிறப்புகள் பலர், செயற்குழுவென்றும், பொதுக் குழுவென்றும் கழகத்தின் ஜனநாயக அமைப்புகள் கூட்டப்பெற்று, அவற்றின் கருத்தறிந்து செயல்படத் தலைமைக் கழகம் முன் வந்தபோது சென்னை வந்தனர்! என்னைக் கண்டனர்! களிப்பு கொண்டேன்!

அமைப்புகளில் இல்லாமல் - ஆனால் அமைப்புகளில் இருக்கும் நிர்வாகிகளுக்கு ஒப்பாகச் செயல்படும் ஆயிரம், பதினாயிரம், லட்சம், லட்சோபலட்சமென உள்ள தூய தொண்டர்கள் - ஆம்; இந்த இயக்கத்தின் நாடி நரம்புகள் எனப்படும் உடன்பிறப்புகள் அனைவரையும் அடிக்கடி பார்ப்பதில் தானே எனக்கு எழுச்சி. ஆயிரமாயிரம் கவலைகளை மறக்கச் செய்யும் அற்புத ஔடதமாயிற்றே அந்தச் சந்திப்பு!

கள்ளம் கபடமற்ற உள்ளம் - சூதுவாது சூழ்ச்சி அறியாத பண்பு - கழகத்தின் வேர் நனைத்திடக் கண்ணீர் தேவையா? செந்நீர் சிந்திடவா எனக்கேட்டு அட்டியின்றி அதனை அளித்திடும் தியாக நெஞ்சம் - குதர்க்கம், குறுக்குச் சால் ஓட்டுதல், குள்ளமனச் செயல் எனும் குறைகளில்லா தூய இதயம் - இத்தனை பெருமையும் கொண்ட உன்போன்ற உயிரனைய; ஏன் - என் உயிரினுமினிய உடன்பிறப்புகளைக் கண்டுகண்டுதானே "எமர்ஜென்சி" காலத்துக் கொடுமைகளைத் தாங்கிக்கொண்டு; இந்தக் கழகத்தையும் தாய் குழந்தையைத் தாங்குவது போலத் தாங்கி நின்றேன்!

தலைமையை வீழ்த்தி விட்டால் கழகத்தையே அடியோடு வீழ்த்தி விடலாமென்று; அன்று தர்பார் நடத்திக்கொண்டிருந்த டெல்லி முயற்சி எடுக்கவில்லையா? அதில் சிலர் அஞ்சி நடுங்கிப் பலியாகவில்லையா? ஒரு சிலர் விலை போகவே இல்லையா?

கழுத்தில் கட்டப்பட்டு இறுக்கப்படும் தூக்குக் கயிறு கண்டு கலங்காத கட்ட பொம்மன்; காட்டிக் கொடுக்கும் எட்டப்பர்களைக் கண்டன்றோ கலங்கினான்!

அந்நிலை எனக்கு ஏற்பட்டபோதெல்லாம் - ஏற்படும் போதெல்லாம் - உடன்பிறப்பே! உன் வீரத்திருமுகம் கண்டுதான்; இனி நமக்கு வெற்றிமுகம்தான் என்று நம்பிக்கை கொள்ளுகிறேன்!

அந்த நம்பிக்கை நாளும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது!

தேசிய முன்னணி இடதுசாரிக் கூட்டமைப்பின் அணிவகுப்புக்கே அடுக்கடுக்கான வெற்றிகள் குவியும் என அரசியல் மேதைகள் கணிக்கின்றனர்!

கோடி கோடியாக பணத்தைக் கொட்டி; எங்கள் பலம் இமயமலையையே இடித்துத் தகர்க்கும் அளவுக்குப் பெருகிவிட்டது எனக் காங்கிரசார் பத்திரிகைகளில் விளம்பரச் செய்திகள் வெளியிட்டுக் கொண்டிருக் கின்றனரேயன்றி - உண்மை அதுவல்ல!

மாநில அரசுகளை நேசப்பான்மையுடன் அணுகிடக் கூடியவரும் - சமூகநீதி காப்பதில் தனியான நாட்டம் கொண்டவரும் - நிலையானது மட்டுமல்ல; நேர்மையான அரசும் தரவேண்டும் என்ற நினைவு பூண்டவருமான, திரு. வி.பி.சிங் அவர்களின் தலைமையில்தான் மத்திய ஆட்சி அமையப் போகிறது!

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ராஜீவ்காந்திக்கு மாற்றுப் பிரதமர் யார்? அதாவது ஆல்ட்டர் நேட்டிவ் என்ன? என்ற ஒரு கேள்வி தென்னகத்தில் தேசிய முன்னணியின் வெற்றி வாய்ப்பை பாதித்தது! ஆனால் இந்தமுறை அந்த வினாவுக்குச் சரியான விடையாகக் கிடைத்திருப்பதுதான் வி.பி.சிங் அவர்களின் பெயர்!

எனவே நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேசிய முன்னணி இடதுசாரிக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளின் சார்பில் பெரும்பான்மையாக டெல்லிக்குத் தேர்வு செய்து அனுப்புவதில் தென்னகமும் அதிலடங்கிய தமிழகமும் நிச்சயம் சோடை போகாது!

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலிலும் வெற்றி நமது அணிக்குத்தான்!

இணையற்ற சாதனைகள் பல புரிந்த கழக ஆட்சியைக் கலைத்தது நியாயமல்ல என்று தமிழக மக்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள்.

நமது தேர்தல் அறிக்கையை பெருங்காய டப்பா என்று மத்திய அரசின் மாஜி குட்டி மந்திரியார் ஒருவர் வர்ணித்துள்ளார் என்றாலும், அறிவார்ந்த தமிழ்மக்கள், அயராத உழைப்பாளிகள், மாணவர், மகளிர், விவசாயிகள், நெசவாளர், ஆதிக்க புரியினரால் அடக்கப்பட்ட பிரிவினர் அனைவருமே பாராட்டிப் போற்றி வரவேற்றுள்ளனர்! வாக்குறுதி அளித்தால் அவற்றை நிறைவேற்றும் வாய்மை தி.மு.கழகத்திற்கு உண்டு என்பதை, அனுபவ ரீதியாக உணர்ந்த மக்கள்; வீண் ஆரவாரங்களால் ஆட்கொள்ளப்பட்டு, தமிழகத்தின் எதிர்காலத்தை இருட்டாக்கிக் கொள்ளத் தயாராக இல்லை!

“தி.மு.க. அணியின் பலம் ஐந்து என்றால்
எங்கள் அணியின் பலம்
மூணும் மூணும் ஆறு!”

என்று போட்டுப் பார்த்துக் களிப்புற்ற கணக்கெல்லாம் மழையில் தெருக்கோலம் போட புள்ளி வைத்த கதையாக ஆகிவிட்டதை இப்போது அவர்களே தெளிவாக உணருகிறார்கள்!

தலைமைக்கழகத்திற்கு வரும் செய்திகள் எல்லாம் ஊக்கமூட்டும் செய்திகளாக, உற்சாகம் தரும் தகவல்களாக இருக்கின்றன!

அந்த மகிழ்ச்சியுடன்தான்; தமிழகம் தாழாது என்ற நம்பிக்கையுடன்; உன் தடந் தோள் உண்டு என்ற துணிவுடன் மேதினத்தன்று புறப்படுகிறேன்.

எங்கிருந்து தெரியுமா? கடந்த ஆண்டு சட்டப் பேரவையில் மார்க்சிஸ்டு உறுப்பினர் நண்பர் வரதராசன்; அடுத்த மேதினத்தன்று திறக்கும்படியாக மேதினச்சின்னம் ஒன்றுக்கு சென்னையில் முக்கியப் பகுதியில் அடிக்கல் நாட்டப்படுமா? என்று கேட்க; அதற்கு நான் "ஆம்" என்று பதில் கூறி: அடிக்கல் மட்டு மல்ல - மேதினச்சின்னத்தை என் கையாலேயே வரைந்து கொடுத்து, மேதினத் தன்றே அந்தச் சின்னத்தைத் திறந்து வைத்து, அந்தச் சின்னம் அமைந்த 'நேப்பியர் பார்க்'கையும், "மேதின பூங்கா" எனப் பெயர் சூட்டி அழைத்தேனே; அந்த இடத்திலிருந்துதான் பயணம் தொடங்குகிறது!

மே முதல் நாள் காலையில் நானும் பேராசிரியர் அவர்களும் அந்தச் சின்னத்திற்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்து கிறோம்!

பேராசிரியர் நிற்கும் சேப்பாக்கம் தொகுதியில் தான் மேதினப் பூங்காவும், மேதினச் சின்னமும் இருக்கின்றன. ஆம்; சென்னை யின் செஞ்சதுக்கம் அது!

காலையில் மேதின உரையை அங்கு நிகழ்த்தி விட்டு, உழைக்கும் வர்க்கம் உவகை யும் மேன்மையுறவேண்டி ஜனநாயகக் கடமையாற்ற அன்று மாலையே கிளம்புகிறேன்

தேர்தல் நேரத்தில் மட்டும் மக்களைச் சந்திக்கும் சந்தர்ப்பவாதத் தலைவனல்ல; உன் தலைவன் மன்னிக்கவும், இந்தத் தொண்டன்

சில தலைவர்கள் இருக்கிறார்கள்; தேர்தல் நேரத்தில் மக்களை மட்டுமல்ல - மதங்களையும், மடங்களையும், மகேஸ்வரன்களையும் கூட ஏமாற்றுகிறவர்கள் அவர்களை நாடறியும் அவர்கள் நடத்தும் சுற்றுப்பயண நிகழ்ச்சியைப் போன்றதல்ல நமது நிகழ்ச்சி என்பதை நீ அறிவாய்!

ஆகையால் உடன்பிறப்பே; நிகழ்ச்சிகளைச் செம்மையாக ஏற்பாடு செய்க! வெற்று ஆரவாரம், ஆர்ப்பாட்டம் வேண்டாம்! மேடைகளில் அதிகம்பேர் ஏறி, பொது மக்களுக்குத் தொல்லை

தராமல் கவனித்துக் கொள்க! மாலைகள், கைத்தறி ஆடைகள் அணிவிக்க வேண்டாம்! நிறைய நிகழ்ச்சிகள் இருப்ப தால் நேரத்தைத் துளியும் வீணாக்காமல் நான் வந்தவுடன் மேடையில் என்னைப் பேசுமாறு செய்து அடுத்த நிகழ்ச்சிக்கு நான் விரைந்து செல்ல உதவிடுக! அன்பை வெளிப்படுத்த அனைத்து அமைப்புகளின் சார்பாக ஒரே ஒரு துண்டு போதும்! மற்றவர் அன்பினை ஐந்து, பத்து ரூபாய்கள் என அந்தத் தொகுதிக்கான தேர்தல் நிதியாக வழங்கிடச் செய்தால் மகிழ்வேன்!

ஏராளமான நிகழ்ச்சிகள்! பதினான்கு வயதிலிருந்து இப்படி சுற்றிக்கொண்டிருக்கிறேன்! உன் அண்ணனுக்கு இப்போது வயது அறுபத்தி ஏழு! இந்த ஜூன் மூன்றாம் நாள் வந்தால் அறுபத்தி எட்டு தொடக்கம்!

இதையும் எண்ணிப்பார்த்து, கொஞ்சம் இரக்க உணர்வுடன் என்னிடம் வேலை வாங்கு!

உம்; இப்படி சொல்லிவிட்டுத்தான் புறப்படுகிறேன்; ஆனால் உன்னைக் கண்டதும் என் அசதி, களைப்பு அனைத்தும் உதய சூரியனைக் கண்ட பனிபோல உடனே அகன்று விடுகிறதே!

அன்புள்ள

மு.க.

28-04-1991

1730. பத்திரிகைகளின் பார்வையில் திராவிட இயக்கம்!

உடன்பிறப்பே,

என்னைப் பொறுத்தவரையில்; கழகத்தின் தலைவனாக இருக்கும் நிலையிலும், கலைத்துறையிலும், இலக்கியத் துறையிலும் ஒரு எழுத்தாளன் என்ற நிலையிலும், ஆளும் கட்சிப் பொறுப்பில் அமைச்சராக, முதல்வராக இருந்தவன் என்ற நிலையிலும், எதிர்க்கட்சித்தலைவர் பொறுப்பிலே இருந்தவன் என்ற நிலையிலும்; குறிப்பிடப்பட்டுள்ள எல்லா நிலைகளையும் விட; பல ஆண்டுகளுக்கு முன்பே முரசொலி பத்திரிகையை தொடங்கி, அது தொடர்ந்து நடந்து வருகிறதே எனவே அந்தப் பத்திரிகையாளன் என்ற முறையில் பத்திரிகை சுதந்திரத்தை மதிப்பவன் பத்திரிகையாளர்களை மதிப்பவன் நிருபர்களிடத்திலே நேச மனப்பான்மையுடன் பழகுகிறவன்!

சில நேரங்களில் சில பத்திரிகைகளின் மீது நான் வழக்கு தொடர நேரிட்டதை வைத்துக் கொண்டு என்னை எந்தவொரு நடுநிலைப் பத்திரிகையாளரும்; பத்திரிகை நிறுவனங்களையோ, பத்திரிகையாளர்களையோ, பகைமை உணர்வுடன் பார்ப்பவன் என்று என்றைக்கும் எண்ணியதில்லை! என்னிடவும் மாட்டார்!

கொள்கை ரீதியாகவோ, அல்லது நடைமுறைகளைப் பற்றியோ, கருத்து மோதல்கள் பத்திரிகைகளுக்கிடையே ஏற்படுவதையோ, அது தொடர்வதையோ குறை சொல்ல முடியாது! அது, தேவையுங்கூட!

ஆனால் அதே நேரத்தில் வேண்டுமென்றே, திட்டமிட்டு, பொய்யாக சில செய்திகளை ஒருவரின் பொது வாழ்வுக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் ஒரு பத்திரிகையில் எழுதினாலோ அல்லது ஒருவர் பேசியதை வெளியிட்டாலோ அதனை மறுத்த பிறகும் கூட, திரும்பத் திரும்ப அந்த அவதூறை வெளியிட்டுக்

கொண்டிருந்தாலோ; சம்பந்தப்பட்டவர், தன்னைக் குற்றமற்ற நிரபராதி என நிரூபிப்பதற்கும், தன் மீது கூறப்பட்டவை, எழுதப்பட்டவை வெளியிடப்பட்டவை பொய் என்று மக்களுக்குத் தெரிவிப்பதற்கும் நீதி மன்றம் செல்வதைத் தவிர வேறுவழியில்லாமல் போய்விடுகிறது!

அப்படிப்பட்ட பத்திரிகையாளர்களையோ அந்தப் பத்திரிகை நிருபர்களையோ சந்திக்கிற நேரத்தில் கூட, அவர்களுடன் நான் தோழமையுடன்தான் பழகிக் கொண்டிருக்கிறேன்.

இது பத்திரிகைகளுடன் நான் கொண்டுள்ள உறவும் நிலையும் ஆகும்!

என்மீது தனிப்பட்ட முறையில் அன்பு இல்லாவிடினும், பகைமையில்லாத பத்திரிகைகள் சில; நான் தலைவனாக இருக்கிற திராவிட இயக்கத்தின் மீது கொண்டுள்ள எரிச்சலின் காரணமாக என்னைக் கடுமையாகத் தாக்குகின்றன. கேலியாக விமர்சிக்கின்றன. இயக்கத்தின் மீதும் காழ்ப்பு உணர்வை ஏதோ ஒருவகையில் கொட்டிக் கொண்டிருக்கின்றன.!

என் மீது கோபப்படுபவர்களைப் பற்றி என்றைக்குமே நான் கவலை கொண்டதில்லை! ஆனால் இயக்கத்தின் மீது யார் கோபங் கொண்டாலும்; அதன் விளைவாக இயக்கத்தைப் பற்றி மக்களிடம் தவறான எண்ணத்தை உருவாக்கிடக் கூடிய நிலைமை ஏற்படின் - நான் அதனைப் பொறுத்துக் கொண்டு இயக்கத்திற்கு மாசு கற்பிக்க முனையும் முயற்சிகளுக்கு இடம் கொடுக்க இயலாது!

இதோ; நம்முடைய தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கையைப் பற்றி 'தினமணி' ஏளனமாகக் கேலி செய்து, சிரிப்பதா? அழுவதா? என்று தெரிய வில்லை என்று கூட தலையங்கம் எழுதித் தள்ளியிருக்கிறது.

நாட்டுமதுவை அரசாங்கமே தயாரித்து, பொது ஏலத்தில் விற்பனை செய்வதை தினமணியும், சில காங்கிரஸ், அ.தி.மு.க.வினரும் எதிர்ப் பது ஏன் என்பதை - நான் பல முறை விளக்கி விட்டேன்! மதுவிலக்குக் கொள்கை நல்ல கொள்கை எனினும், அதனை நடைமுறைப்படுத்த இயலவில்லை என்பதை இந்திரா காந்தி அவர்களே நாடாளுமன்றத்தில் கூறியதையும் - அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களே கட் டுரை தீட்டியதையும், பேசியதையும், அவரே மது விலக்குச் சட்டத்தை தளர்த்தியதையும்

ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டியிருக்கிறேன். எனவே மேலும் விளக்கங்கள் தேவையில்லை, தினமணி தலையங்கத்திற்கு விடையாக!

நலிந்தோர் நல்வாழ்வு, எல்லா சமூகங்களிலுமுள்ள ஏழைகள், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்க்கான படிப்பு முதலிய இலவச உதவிகள், தொழிலாளர் விபத்தில் மாண்டால் குடும்ப நிதி, மாணவர்க்கு பஸ் பாஸ் சலுகைகள், ஏழை இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக அறுவை சிகிச்சைக்கான அரசின் 5.25,000 உதவி போன்ற தேர்தல் அறிவிப்புகளை எல்லாம் மக்களை மேம்படுத்தும் சரியான திட்டங்கள் அல்ல என " தினமணி" கூறியுள்ளது.

சருக்கி விழாமல் இருக்க சாலையை சரிசெய்ய வேண்டும் என்பது முக்கியம் என்பதற்காக இப்போது விழுந்து காயம்பட்டவனுக்கு முதலுதவி அளிக்காமல் இருக்க முடியுமா?

அதுபோலத்தான் இந்த இலவசத் திட்டங்கள்; தற்போதைய ஏழ்மைச் சமுதாயத்தைக் கைதூக்கி விடப் பயன்படுகிற அதே நேரத்தில்; நிலையானதும், உறுதியானதுமான, வளர்ச்சித் திட்டங்கள் தொழில் துறை திட்டங்கள், பாசன திட்டங்களில் கழக அரசின் இரண்டு ஆண்டு கால சாதனைகளும், மேலும் அத்தகைய பெருந்திட்டங்களுக்கான அறிவிப்பும் கழகத் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றிருப்பதை தினமணி ஆசிரியர் காணாதது ஏனோ தெரியவில்லை!

உடன்பிறப்பே! எல்லாவற்றையும் விட - தினமணி தலையங்கத்தின் கடைசிப் பகுதிதான் எனக்கும், உனக்கும்; ஏன் - திராவிட இயக்கத்தின் வரலாறு உணர்ந்தவர்களுக்கும் வியப்பும் திகைப்பும் அளிக்கும் பகுதியாகும்!

மண்டல் அறிக்கைக்கு ஆதரவு. மாநில சுயாட்சிக் கோரிக்கை, இந்தி எதிர்ப்பு போன்ற மற்ற விஷயங்களில் ஒவ்வொரு திராவிட இயக்கங்களுக்கும் (தி.மு.க- அ.தி.மு.க.) கருத்து வேற்றுமை இல்லை .

நான் கோடிட்டுக் காட்டியுள்ள இந்தக் கருத்தை, தமிழ்மக்கள் நெஞ்சில் தினமணி பதிய வைக்கப் பார்க்கிறது! எனவே தலையங்கத்தின் கடைசிப் பகுதி மேற்கண்ட விதத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

எனது தலைமையில் இருக்கிற திராவிட இயக்கமும், திருமதி ஜெயலலிதா தலைமையில் இருக்கிற திராவிட இயக்கமும் ஒரே மாதிரியானவைதான் என்று சாதிக்க விரும்புகிறது தினமணி.

மண்டல் அறிக்கையை மத்திய அரசு நிறைவேற்றவேண்டுமென்று பல ஆண்டுகளாக வலியுறுத்தி, சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, மண்டல் அறிக்கையை நடைமுறைப்படுத்த முன்வந்த வி.பி. சிங் அவர்களுக்கு; ஆதரவாக நின்றது நமது திராவிட இயக்கம்!

மண்டல் அறிக்கையை நிறைவேற்றியதற்காக, வி.பி.சிங் ஆட்சி நாடாளுமன்றத்தில் கவிழ்க்கப்பட்டபோது யானை குழியில் விழும் போது எறும்புகூட ஒரு உதை கொடுக்கும் என்ற பழமொழி போல, மண்டல் அறிக்கையை எதிர்த்து மூன்று மணி நேரம் பேசிய ராஜீவ்காந்தியுடன் சேர்ந்து கொண்டு வி.பி. சிங் மீது நம்பிக்கையில்லை என்று வாக்களித்தது திருமதி ஜெயலலிதா தலைமையிலான திராவிட இயக்கம்!

மாநில சுயாட்சிக் கோரிக்கையை முன்னிலைப்படுத்தும் நமது திராவிட இயக்கத்தைப் பார்த்து இவர்கள் தேசவிரோதிகள், பிரிவினைவாதிகள், தீயசக்திகள் என்று கூறுவது திருமதி ஜெயலலிதா தலைமையிலான திராவிட இயக்கம்!

பொது வாழ்க்கையையே; இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்திலே தொடங்கியவன் தலைமையேற்று நடத்துவது நமது திராவிட இயக்கம்!

ஆனால் அந்த திராவிட இயக்கம், அங்கே நாவலர், மாதவன் போன்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் ஈடுபட்டோர் உண்டு, எனினும் அந்தத் தலைமைக்கும் மொழிப் போருக்கும் "என்ன சம்பந்தம்?

தினமணியார்; ஏளனமும், ஏகடியமும் புரிவது போல இது எளியோர் இயக்கமாகக் கூட இருக்கலாம்! நாம் எலிகளாகக்கூட இருக்கட்டுமே; எலிகளின் இயக்கத்திற்கு இங்கே ஒரு எலி தானே தலைமை!

அங்கே; பூனையின் தலைமையில் அல்லவா எலிகளின் இயக்கம் இருக்கிறது!

இரு இயக்கங்களின் தலைவர்களுக்கிடையே தான் போட்டி என்று தினமணி, தனது தலையங்கத்தை முடித்திருப்பதால் இந்த உவமையை சுட்டிக்காட்டும் அவசியம் எனக்கு ஏற்பட்டுள்ளது!

உடன்பிறப்பே; இக்கடிதத் தொடக்கத்தில் நான் குறிப்பிட்டுள்ளது போல இது கருத்துக்கும் கருத்து என்ற முறையில் அளிக்கப்படும் விளக்கமே தவிர, வெறுப்போ, விரோத உணர்வோ கொண்டு எழுதப்படுவதல்ல! நான் அப்படிப் பகையுணர்வுடன், பழி உணர்வுடன் செயல்படுபவனல்லன்!

பெரிய பத்திரிகைகளில் ஒன்றான "இந்து" வை எடுத்துக் கொள்ளேன். அதற்கு நமது திராவிட இயக்கம் என்றால் "எக்ஸ்பிரஸ்" எடு போலவே பிடிக்காது. நமது திராவிட இயக்கத்தின் செய்திகளின் அளவை எப்படிக் குறைக்கலாம் - எவ்வாறு இருட்டடிப்புச் செய்யலாம் - என சிந்திக்கும் நிறுவனம் அது எப்போதாவது நம்மைப்பற்றி 'இந்து' வில் நல்ல விஷயங்கள் எழுதப்பட்டால் ; அது கோடையில் திடீர் என மழை பெய்வது போலத்தான்.

அந்த 'இந்து' நிறுவனத்தில் 1990-ஆம் ஆண்டு - கழக ஆட்சிக்காலத்தில் உள்ளுக்குள்ளே பெரும் சச்சரவு ஏற்பட்டு: நிறுவனத்திற்கே ஏதாவது சங்கடம் விளையுமோ என்ற நிலை உருவானது.

நீண்டகாலமாக உள்ள ஒரு நிறுவனம் - அந்த நிறுவனத்திற்கும் நமது இயக்கத்திற்கும் கருத்து வேறுபாடுகள் இருப்பினும், ஒரு பெரிய நிறுவனம், புகைச்சலால் புதைந்துவிடக் கூடாதெனக் கவலைப்பட்டேன்.

இருசாராரையும் தனித்தனியாக அழைத்துப் பேசினேன். உரிமையாளர்களின் உறவில் ஏற்படும் விரிசலால் நீண்ட காலத்து நிறுவனம் பாழாகி விடக்கூடாது என வேண்டிக்கொண்டேன். அதனைத் தொடர்ந்து எனது ஆலோசகராக இருந்த நண்பர் குகன் அவர்கள் மூலம், இந்து நிறுவன உரிமையாளர்களுக்கிடையே எழுந்துள்ள பிணக்கைத் தீர்க்குமாறு கேட்டுக் கொண்டேன்.

பிணக்கு தீர்ந்தது! பிரச்சினை முடிவுற்றது! எனது முயற்சிக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்து இந்து கஸ்தூரி அவர்கள் எனக்கு கடந்த செப்டம்பர் பத்தாம் தேதி ஒரு கடிதம் கூட எழுதினார்!

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், பத்திரிகை நிறுவனத்தினர், பத்திரிகையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், பத்திரிகை நிருபர்கள் - அனைவரிடத்திலும் எனக்கு நட்பு உண்டு!

ஆனால், என் தலைமையிலுள்ள இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தடைபோட எண்ணிடுவோரின் முயற்சியையும், பச்சைக் கொடியும் பச்சைப் பாம்பும் ஒன்றுதான் என்று பாமர மக்களை ஏமாற்ற முனைவதையும், என் உயிர் மூச்சு அடங்கும் வரையில், என் இதயத்துடிப்பு நிற்கும் வரையில் - எழுத்தால் - பேச்சால் - செயலால் - அண்ணா வழிநின்று எதிர்த்து முறியடிப்பதில்தான் கண்ணும் கருத்துமாக இருப்பேன்.

என்னைப்போல, பேராசிரியரைப் போல சிலருடன் முடிவதல்ல இந்த திராவிட இயக்கம்!

இது ஆயிரங்காலத்துப் பயிர்! இந்தக் கழனியைக் காத்திட வந்து கொண்டே இருக்கும் இளைய தலைமுறைப் பட்டாளம்! வளர்ந்து கொண்டே இருக்கும் இந்த ஜனநாயகப் பாசறை! வலிமை பெற்றுக் கொண்டே இருக்கும் பெரியார், அண்ணா இலட்சியம்! வெற்றிகள் குவிந்து கொண்டேயிருக்கும் உன் வியர்வையால்; உழைப்பால்; நீ கட்டிக்காக்கும் ஒற்றுமையால்!

அன்புள்ள

மு.க.

29-04-1991

1731. பதவிக்காகப் பறிபோவதோ சுயமரியாதை!

உடன்பிறப்பே!

ஊரிலேனும் நாட்டிலேனும்
உலகிலேனும் எண்ணினால்
நீர் நிறைந்த கடலையொக்கும்
நேர் உழைப்பவர் தொகை!
நீர் மிதந்த ஓடமொக்கும்
நிறைமுதல் கொள்வோர் தொகை!
நேரில் சூறை மோதுமாயின்
தோணி ஓட்டம் மேவுமோ?

பாவேந்தர் பாரதிதாசனின் இந்தக் கவிதைக் கேள்வியுடன் உலகெங்குமுள்ள உழைக்கும் வர்க்கம் தலைநிமிர்ந்து, சங்கம் முழங்கி, எழுச்சி முரசொலித்துக் கொண்டாடும் திருநாளாம்; மேதினத்தன்று கழகத்தின் சார்பில் என் வாழ்த்துக்களை அள்ளி அள்ளிப் பொழிகிறேன்.

அயர்வை அச்சத்தால் போக்கி - இரத்தத்தை
வியர்வைக் குளமாக்கி,
வாடுகின்ற பாட்டாளியும் - மேதினத்தில்
ஆடுகின்றான் திருநாள் என்று!

என; முப்பது ஆண்டுகளுக்கு முன்பே உணர்ச்சி வரிகளால் உழைக்கும் வர்க்கத்தின் ஓவியத்தை எழுத்தில் வடித்து மகிழ்ந்தவன் நான்!

இன்றும் மகிழ்கிறேன்! மனப்பூர்வமான வாழ்த்துக்களை அந்த மனிதகுல மாணிக்கங்களுக்கு மணியாரமாக்கி அளிவிக்கிறேன்!

வாழ்க, பாட்டாளி வர்க்கம்! வாழ்க! வாழ்கவே! இன்று எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி! இன்னொரு மகிழ்ச்சி என்னவென்று உனக்குத் தெரியுமே!

இன்றுதானே தமிழகமெங்கும் வரிப்புலிகளென அணிவகுத்து, தேர்தல் பணிக்களத்தில் நிற்கும் உன்போன்ற என் உயிரனைய உடன்பிறப்புக்களையும், தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களையும் காண்பதற்காக சென்னை விட்டுப் புறப்படுகிறேன்.

தேர்தல் களத்தில் நிற்கும் தேசிய முன்னணி இடது சாரிக் கட்சிகளின் கூட்டமைப்பு வேட்பாளர்களின் வெற்றிக்காக செயல்முறைப் பணிகள்; ஆங்காங்கு தொடங்கப்பட்டு விட்டன!

நமது அணியின் தொண்டுள்ளம் கொண்ட சிப்பாய்கள்; பீடுநடை போட்டு - வீறுகொண்ட உள்ளத்துடன், இடரப்பட்ட வேங்கையென சிலிர்த்தெழுந்து; பாரீர் எமது இலட்சிய வேட்கையை என விழியால் உரைத்து வீட்டுக்கு வீடு பல வீரத் தமிழ் இளைஞர் வந்தனர் எனும் விதத்தில் விரைந்து பணியாற்றும் பாங்கினைக் கேள்வியுற்று பூரிப்பு நிறைந்து பொங்குகிறது என் இதயம்!

பணிகள் ஒருபுறம் - மணிமணியான மேடை விளக்கங்கள், கலை நிகழ்ச்சி விளக்கங்கள் ஒருபுறம்!

எப்பொருள் குறித்துப் பேசினாலும் அப்பொருளின் ஆழம் உணர்ந்து, மக்களுக்குத் தெளிவு ஏற்படும் வகையில் கருத்துக்களைக் கூட்ட மேடைகளிலும், கலை நிகழ்ச்சிகளிலும் பேசும் ஆற்றல் பெற்ற அணியினர் நாம்!

அந்த ஆற்றல் நமக்கு விளைவதற்குக் காரணமே; நமது வழக்கில் நியாயம் இருப்பதுதான்!

எனவே அந்த நியாயத்தை எடுத்துரைக்க தேர்தல் நேரத்தில் எங்கே எத்தகைய வாய்ப்பு கிடைத்திடினும் அதனை நழுவ விடக்கூடாது.

நமக்கென கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? சுவரொட்டி விளம்பரத்தில் நமது பெயர் இருக்கிறதா? நம்மை கூட்டத்திற்கு அழைத்திருக்கிறார்களா?

இந்தக் கேள்விகள் மனத்தில் எழுத் தேவையில்லை!

நமது அணியில் உள்ள அனைவருக்குமே விடுக்கின்ற வேண்டுகோள் இது! பணிவான வேண்டுகோள்!

நமது கழக உறுப்பினர் அல்ல எனினும்; நமது அணியில் உள்ள ஒரு கட்சியின் திறமை வாய்ந்த பேச்சாளர்கரான நண்பர் செங்கம் ஜப்பார் - எனக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில்; எமது கட்சிக்கென தொகுதி ஒதுக்கப்படவில்லை எனினும்; எல்லாத் தொகுதிகளிலும் என்னாலியன்ற தேர்தல் பிரச்சாரப் பணியைச் செய்ய முடிவெடுத்து, என்னை அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் - என் பெயர், கூட்ட விளம்பரத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் - நமது அணியின் மேடைகளில் ஏறிப் பேசிக் கொண்டிருக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நானும் எனது சுற்றுப்பயணத்தில் ஆங்காங்கு விளம்பரப்படுத்தப்பட்டு, ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களில் மட்டும்தான் பேசுவேன் எனக் கூறமுடியுமா?

ஏற்பாடு செய்து முறைப்படி அறிவிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்கும் மற்றொரு நிகழ்ச்சிக்கும் இடையிலே; அது போகிற வழியிலேயே அமையுமானால்; அங்கு கூடியுள்ள மக்களிடமும் கருத்துக்களை வழங்கிட வேண்டிய கடமை இருக்கிற தல்லவா?

இரண்டொரு நாட்களுக்கு முன்பு நான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது போல; நிகழ்ச்சிகளைச் செம்மையாக ஏற்பாடு செய்யவும் -வெற்று ஆரவாரம், ஆர்ப்பாட்டம் வேண்டாம்! என் பயணத்தில் தேவையான அளவு கார்கள் மட்டும் வந்தால் போதும்! ஆங்காங்கு தொகுதி அலுவல்களை விட்டுவிட்டு என் கார்களைத் தொடர்ந்து கார்களில் அணிவகுக்கத் தேவையில்லை! நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் பாதுகாப்புக்கும், அமைதி காப்பதற்கும் தொண்டர் அணியினர் சீருடைகளுடன் ஆங்காங்கு அயராப் பணி ஆற்றிடல் வேண்டும்! மீண்டும் வேண்டுகிறேன்; நான் மேடைக்கு வந்தவுடன் மாலைகள், கைத்தறி ஆடைகள் என நேரத்தை வீணாக்க வேண்டாம்! முதலில் வகுக்கப்பட்ட வழியைத் தவிர, வேறு வழிக்கு வற்புறுத்த வேண்டாம்! மேடைகளில் நாற்காலி இருக்கலாமா? என்று குறும்புப் புன்னகையுடன் நீ கேட்பது புரிகிறது!

அப்படியொரு ஆணவ தர்பாரை உன் அண்ணன் என்றைக்கும் நடத்தியதில்லை! நம் அண்ணனும், நம் அண்ணனும் நாமும் போற்றிடும் தலைவர் பெரியாரும், ஏன்; தமிழ்நாட்டில் எந்தக்

கட்சித் தலைவரும் - தன் முன்னிலையில் யாரும் உட்காரக்கூடாது எனத் தடைபோட்டு ஆணை பிறப்பித்ததில்லை!

கேள்விப்பட்டேன் - பத்திரிகைகளில் செய்தி படித்தேன் - படம் கூடப் பார்த்தேன் - செட்டி நாட்டு சீமான் வீட்டுப்பிள்ளை, மத்தியில் இணை அமைச்சர்களில் ஒருவராக இருந்தவர்; பாவம் - இந்தத் தேர்தலுக்காக, காரைக்குடி மேடையில் கால் கடுக்க நின்றிருக்கிறார்; அவரை ஆதரித்துப் பேசவந்த அம்மணியார் பேசி முடிக்கும் வரையில்! இதைத்தான் காலம், தலைவிதி, கர்மவினை என்று கர்ண பரம்பரையாக நமது மக்கள் சொல்லி வருகிறார்கள் போலும்!

நமது மேடைகளில் அதிகம்பேர் ஏறிச் சூழ்ந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும் எனினும் எப்போதும்போல் நாற்காலிகள் இருக்க வேண்டும் - ஒருவேளை நமது கழக முன்னணியினர் அல்லது நமது கழக வேட்பாளர்கள் உட்காருகிற அளவுக்கு போதுமான எண்ணிக்கை நாற்காலிகள் இல்லாவிடினும்; நமது தோழமைக் கட்சிகளின் முன்னோடிகள் மீதும் தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்கள் மீதும் நாம் எப்பாதும் காட்டி வருகிற மரியாதை, தோழமை உணர்வு தொடர்கிறது என்பதற்கு அடையாளமாக அவர்களுக்கு நாற்காலிகள் போடப்பட வேண்டும்!

எங்கே உட்கார்ந்து விடுவார்களோ; அம்மணியின் அடிமைகள் என்பதை மறந்து அமர்ந்து விடுவார்களோ? என்று அங்கே நாற்காலிகள் மேடைகளில் தவிர்க்கப் படுகின்றன - அல்லது இருந்தால் அகற்றப்படுகின்றன!

என்ன செய்வது; தமிழ்நாட்டு மக்கள் ஏமாந்து போய், தவறு செய்து, இப்படிப்பட்டவர்களை ஆட்சிக்கு அனுப்பிவிட்டால்; (நடக்காது - நிச்சயமாக) ஏதோ; ஒருவேளை நடந்துவிட்டால் - சபாநாயகர் நாற்காலி, தனது நாற்காலிக்கு மேல் உயரமாக இருக்கக்கூடாது என்று கூட ஆணை பிறப்பிக்கப்படலாம்! தன்னைத்தவிர எல்லோரும் பேரவையில் தரையில்தான் அமர்ந்து சபை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டுமென்று அதற்கேற்ப, பேரவை மண்டபம் மாற்றி அமைக்கப்படலாம்!

தமிழ்நாட்டு மக்களின் சுயமரியாதைக்கு சவால் விடப்பட்டுள்ள நேரத்தில்; பாவம் - பதவிக்காகத் தன்மான மிழக்கவும் தயாராகச் சிலர் இருப்பது கண்டு - திராவிட இயக்கத்தில்

அடிநாள் தொட்டு இருக்கிற என் போன்றவர்களின் நெஞ்சம் என்ன பாடுபடும்? பதைக்கவன்றோ செய்கிறது!

அதைப் பற்றி எமக்கில்லாத கவலை உனக்கென்ன வந்தது? என அவர்கள் என் மீதே சீறக் கூடும்!

உன் மீது சாணம் அப்பியுள்ளது; அதை கவனிக்காமல் கடை வீதியில் உலாவருகிறாயே! இப்படிக் கவலைப்பட்டு சுட்டிக் காட்டுபவனைப் பார்த்து;

சாணமா இது? இல்லை!

சந்தனம்!

என சாதித்து, அதன் மணத்தையும் முகர்ந்து மகிழ்வோர் பற்றி நாம் என்ன சொல்ல இருக்கிறது!

இருப்பினும் நமக்குள்ள கடமை; இத்தகையோர், தமிழகத்திலோ - அல்லது மத்தியிலோ பொறுப்புக்கு வந்தால் நாடு என்ன ஆகும்? என்பதை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டுமல்லவா?

இதையும் - இதைவிட மக்கள் புரிந்து கொண்டு தெளிவடைய வேண்டிய பல்வேறு கருத்துக்களையும் எடுத்துச் சொல்லவும், உன்னைக் கண்டு மகிழவும் வருகிறேன்; உடன்பிறப்பே! வருகிறேன்!

அன்புடன்,

மு. க.

01-05-1991

1732. இரு குறள் தரும் எச்சரிக்கை இதுவே!

உடன்பிறப்பே!

மேதினத்தன்று தொடங்கிய தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணத்தின் முதற்கட்டம் நிறைவுற்று மீண்டும் இரண்டாம் கட்டப் பயணம் தொடங்கும் நாளில் இந்தக் கடிதம் உனக்கு எழுதுகிறேன்.

எங்கெங்குக் காணினும் மக்களடா! அது
எழுச்சி மிகுக் காட்சியடா!

எனும் விதத்தில் எனது பத்து நாள் சுற்றுலா அமைந்தது! மகிழ்ச்சி! நம்பிக்கை! உன் ஆற்றல் கண்டு பூரிப்பு! ஆர்வம் கண்டு புளகாங்கிதம்! தானாக வந்த மக்கள் வெள்ளம்! தலைக்கு ஐந்து பத்து என கொடுத்து லாரிகளில் கொண்டு வந்து கொட்டப்பட்ட கூட்டமல்ல! மக்கள் கடலில் நீந்தி வந்தேன் எனினும்; எனக்கு ஆணவம் பிறக்கவில்லை! அண்ணா கற்றுத் தந்த அடக்கமே என்னை ஆட்கொண்டிருக்கிறது!

பயிர் விளைத்து, பாதுகாத்து, களையெடுத்து, கதிர் முற்றி நிலம் நோக்கும் போது காலத்தில் அறுவடை செய்து, களத்துமேட்டில் குவிக்கப்பட்டிருக்கும் நெற்குவியல் கழக அணியின் வெற்றி! அது வீடு வந்து சேரும் வரையில் களத்து மேட்டுக் காவல் பலமாக இருக்க வேண்டுமென்று நமது அண்ணன் ஒவ்வொரு தேர்தலிலும் நினைவு படுத்துவாரே; அது நம் செவிகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கிறதல்லவா? வெட்டிவா என்றால் கட்டிவரும் வீரர்களாம் நமது உடன்பிறப்புகள் ஆற்றல் காட்டிடும் போது வீண்கவலை எனக்கில்லை!

கழகத்தின் செயல்வீரர்களிடம் உற்சாகமில்லையென்றும் சோர்வுற்றுக் கிடக்கின்றார்கள் என்றும் எத்தனை பத்திரிகைகளில் எத்தனை எத்தனை செய்திகள்!

என் உடன்பிறப்புகள் அப்படியா? இல்லையே! தேர்தல் களம் என்ன; அறப் போர்க் களத்துக்கே ஓர் அழைப்பு விடுத்தால்

இலட்சம் பேர்; முதல் அணிக்கே நான் முந்தி - நீ முந்தி என வருபவர்களாயிற்றே! பந்திக்கு முந்தி, படைக்குப் பிந்தி என ஓரிருவர் வளைந்து நெளிந்தால் அவர்கள் இந்தப் பாசறையில் பழிப்புக்கு ஆளாவாரே!

இதோ; இந்தப் படத்தைப் பார்! இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி ஏடுகளில் சென்னைப் பதிப்பில் வெளிவந்த படம்! தேர்தல் பிரச்சாரத்துக்குச் செல்லும் என்னை வரவேற்கத் துறைமுகம் தொகுதியில் மின் விளக்குகளால் ஆன வரவேற்புப் பலவை அமைத்திட, விண்ணோக்கி உயர்ந்த ஏணியின் உச்சியில் ஒரு தம்பி! பாதுகாப்பாக ஏணியைப் பிடித்துக் கொள்ள ஐந்தாறு தம்பிகள்! உச்சியில் பணியாற்றும் தம்பி; கொஞ்சம் தவறினால் என்ன ஆகும்? மெய்சிலிர்க்கிறது எனக்கு; இந்தப் படத்தைப் பார்க்கும் போது!

வன்முறையைப் பற்றி மாற்று முகாமிலிருந்து சிலர் வாய் கிழியப் பேசுகிறார்களே; அந்த அணியினர்தானே தேர்தல் ஆரம்பிக்கும்போதே புதுவை மண்ணாடிப்பட்டில் கழகக் காளை அருளையும், விழுப்புரம் இருவேல்பட்டில் கழக வீரன் மணியையும் - உதயசூரியன் சின்னம் எழுதக் கூடாதெனத் தடுத்துப் படுகொலை செய்து பிணங்களாக வீழ்த்தினர்!

இளந் தமிழர் இருவரைப் பலிகொடுத்து விட்டு, இமைகளின் ஈரம்கூடக் காயாமல் தேர்தல் களத்தில் நிற்கும் தி.மு.க. அணியைப் பார்த்து; இதோ இவர்கள் வன்முறையாளர்கள் என்று இட்டுக்கட்டுகிறார்களே பொய் மூட்டைகளை! இதனைப் போலீஸ் துறையினரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்களோ!

உடன்பிறப்பே, தேர்தல் நெருங்க நெருங்க தரமுடையோர் என நான் எண்ணிக் கொண்டிருக்கும் சில எதிர் அணித் தலைவர்கள் கூட தடித்த வார்த்தைகளை வடித்தெடுத்து நம்மீது வீசுகின்றனர்! வியப்புறுகிறேன்! அரசியல் அரங்கில் ஆயிரம் இருப்பினும் நட்புமுறையில் அளவளாவி மகிழ்பவர் அருமை நண்பர் மூப்பனார்! அவர் கூடவா இப்படி? என ஆச்சரியப்படும்படி பேசியுள்ளார்!

கருணாநிதியைப் பற்றி என்னைவிட அதிகம் தெரிந்தவர்கள் இருக்க முடியாது. காரியம் ஆவதென்றால் பாராட்டுவதும், தேவையில்லையென்றால் பழிப்பதும் அவர் வாடிக்கை! கருணாநிதி சில நாளாக சுவாதீனமாகப் பேசுவதில்லை! வயதும் ஆகிவிட்டது.

எனவே தமிழக மக்கள் அவருக்கு அரசியலில் இருந்து நிரந்தர ஓய்வு தரவேண்டும்.

இது அவரது பேச்சின் பகுதியென்று தினமலர் வெளியிட்டுள்ளது. தினமலரில் கூட்டியும் கூறைத்தும் கூட வெளியிட்டிருக்கலாம். இருப்பினும் மூப்பனார் என்னை; புத்தி சுவாதீனமற்றவன் என்று பேசியதாக தினமலர் கற்பனை செய்தி வெளியிட்டிருக்க முடியாதல்லவா? சுவாதீனமாக பேசுவதில்லை என்றாலே அதுதானே பொருள்!

காரியம் ஆவதென்றால் பாராட்டுவேனாம் - தேவையில்லையென்றால் பழிப்பேனாம்! இது என் வாடிக்கையாம்! மூப்பனார் பெருமகன்தான் இப்படிக் கூறியுள்ளார்!

1980-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இந்திரா காந்தி அம்மையார், தி.மு.க.வுடன் எப்படியும் உடன்பாடு கொள்ள வேண்டுமென்று எத்தனை மாநில காங்கிரஸ் தலைவர்கள் மூலமாக கடுமுயற்சி எடுத்தார் என்று நாட்டுக்குத் தெரியும்! இன்றைய குடியரசுத் தலைவர் அன்றைய ஆர். வெங்கட்ராமன் என்ன; ஆந்திரத்து சென்னா ரெட்டி என்ன; கேரளத்து ஸ்டீபன் என்ன; ஏன்? நமது மூப்பனார் தான் என்ன - அந்த உடன்பாடு ஏற்படும் வரையில், கழகத்தை வளைய வந்தது பழங்கதை! ஆனால் வரலாறு!

நாடாளுமன்றத் தேர்தலில் வென்றதும், சட்டமன்றத் தேர்தல் - அதைத் தொடர்ந்து முகவை திருப்பத்தூரில் ஓர் இடைத் தேர்தல்! காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் வால்மீகி இறந்துவிட்ட காரணத்தால்! அப்போது அன்னை இந்திரா, அந்த இடைத் தேர்தலுக்கு தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆதரவையும் கேட்டு அறிக்கை விடுத்தார்! இருகட்சியினருமே காங்கிரஸ் தேர்தல் பிரச்சார மேடையில் ஏறக்கூடாதென ஒரு நிபந்தனையைக் காங்கிரஸ் விதித்தது! தி.மு.க. அந்தத் தேர்தலில் பிரச்சாரத்திற்கே போகவில்லை! மறுத்து விட்டது! மறுபடியும் என்னிடம் சமரசம் பேச யார் வந்தது என்பதும் வந்தவர் என்னிடம் எவ்வளவு நேரம் பேசினார் என்பதும்; தேவைப்பட்டால் ஆதரவு கேட்பதும், தேவையில்லையென்றால் காலைவாரி விடுவதுமான கலாச்சாரம் தனக்குப் பிடிக்காது என்று காங்கிரசின் போக்கை என் முன்னால் அவர் கண்டித்ததும் - இறுதி வரையில் நான் திருப்பத்தூருக்கு

வரமுடியாதென மறுத்து தஞ்சை மாவட்டத்தில்தான் சுயமரியாதை இயக்கம் வேர் விட்டது என்று நான் அவரிடம் சொன்னதும்; மறந்து போன நிகழ்ச்சிகள் அல்ல! மனச்சாட்சி படம் பிடித்து வைத்திருக்கிறது! என்னிடம் வந்தது யார் என்பது மட்டும் ரகசியமாகவே இருக்கட்டும்.

கருணாநிதிக்கு வயதாகி விட்டது! அதனால் தமிழக மக்கள் அவருக்கு அரசியலில் நிரந்தர ஓய்வு தர வேண்டும் என்கிறார் மூப்பனார்.

என்னைவிட மிக இளையவர் மூப்பனார்! ஆனால் இருவரையும் பார்த்தால் என்னிலும் மூத்தவராகத் தோற்றமளிப்பார்!

ஆனால் அவர் கூற்றுப்படி நான் சித்த சுவாதீனமற்றவன் - அவர் போன்றோர் இப்படிப் பேசலாம்! ஏனெனில் பிரபு அவர்! அவரது சுவாதீனத்தில் நிலபுலம், ஆஸ்திபாஸ்தி ஏராளம்! இருந்தபோதிலும் இதுவரையில் நிதானமாகப் பேசிக்கொண்டிருந்த அந்தக் கண்ணியமான மனிதரையே; தேர்தல் நிதானமிழக்கச் செய்து விட்டது பார்த்தாயா?

எனக்கு நிரந்தமாக அரசியல் ஓய்வு கொடுக்கச் சொல்கிறார்! அரசியலில் இருந்துதான்! வேறுமாதிரியல்ல! அப்படி ஓய்வு கொடுக்கச் சொல்கிற அளவுக்கு அவர் இருதயம் இன்னமும் கல்லாகிவிடவில்லை! ஆகாது என்பதும் எனக்குத் தெரியும்!

அரசியலில் ஓய்வு தருவது எனில்; கழகத்தையும் என்னையும் தோற்கடிப்பது என்ற பொருளில்தான் பேசியுள்ளார்! அவரது அணியின் தலைவியாம் அம்மணியாரைப் போல தனிப்பட்ட வெறுப்பில் தாளிக்கப்பட்ட சொற்கள் அல்ல! அல்லவே அல்ல!

ஒரு சந்தேகம்! திரு. மூப்பனார்தான் விளக்க வேண்டும்! ஒரு கட்சி தேர்தலில் தோற்றுவிட்டால் அதன் தலைவர் நிரந்தரமாக ஓய்வுபெற வேண்டும் என்பதற்கு ஏதாவது முன் மாதிரி வைத்திருக்கிறாரா? தலைமைப் பொறுப்பில் நீடிப்பதும், அல்லது அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்வதும் அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது! ஆனால் 1967-ல் விருதுநகரில் பெருந்தலைவர் காமராசர் தோல்வி அடைந்தார்! காங்கிரசே படுதோல்வி அடைந்தது! அதற்காக பெருந்தலைவர் காமராசர் அரசியலில் நிரந்தர ஓய்வு பெற்றுவிட வில்லையே!

1977-ல் அன்னை இந்திரா காந்தி தோல்வி அடைந்தார்! அவரது காங்கிரஸ் கட்சி பெருந் தோல்வியைச் சந்தித்தது! அன்னையார் உடனே அரசியலில் நிரந்தர ஓய்வு பெற்றுவிட்டாரா? அதையடுத்து சிக்மகளூர் இடைத்தேர்தல்! பின்னர் 1980-ல் தி.மு.க. உறவுடன் தேர்தல் களம் புகவில்லையா அவர்?

என்னை எல்லோரையும்விட அதிகமாகத் தெரிந்து வைத்திருப்பவர் என்று, தன்னைச் சொல்லிக் கொள்பவர் இதையெல்லாம் தெரிந்து வைத்துக் கொள்ளவில்லையே; என் செய்வது!

அவர் என்னதான் பேசியதாக செய்தி வரினும்; நெருப்பு நெஞ்சம் இல்லாதவர்! நம்மீது தனிப்பட்ட வெறுப்பு இல்லாதவர்!

தேர்தல் பிரச்சாரம் என்று போய்விட்டால் ஏதாவது சொல்ல வேண்டியிருக்கிறதே! என்று அவர் தனது நண்பர்களிடம் சொல்லக் கூடும்! அதற்காக வார்த்தைகளைக் கடிவாளம் இல்லாத குதிரைகளாக ஆக்கிவிடக் கூடாதல்லவா? அதுவும், நாம் அவரைப்பற்றி எந்தக்கடு மொழியும், கூறாமல் இருக்கும்போது!

அவர் கூறிவிட்ட காரணத்தால்; தமிழ்நாட்டு மக்கள் எனக்கு அரசியலில் நிரந்தர ஓய்வு கொடுத்துவிடப் போவதுமில்லை! கழகம், தனது கையில் பிடித்த அறப்போர் வாளைக் கீழே போட்டு விடப் போவதுமில்லை! வெற்றி முகடே நமது குறிக்கோள்! அந்த வெற்றி அதோ கண்ணுக்குத் தெரிகிறது! ஆம்; அண்ணா சொன்னது போல களத்து மேட்டில் குவிக்கப்பட்டுள்ளது! காவல் தேவை! கவனம் தேவை! இல்லையேல் அயலார் அபகரிக்க இடம் கொடுத்துவிடும்!

அயலாரிடம் இருக்க வேண்டிய எச்சரிக்கை பற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும் (குறள் 508)

தெரிந்து தெளிதல் என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இந்தக் குறளுக்குப் பொருள் புரிகிறதா?

அயலார் ஒருவரைச் சிறிதும்

ஆராய்ந்து பாராமல் தேர்வு

செய்தால்; அது தற்போது மட்டுமல்ல –

வருங்கால சந்ததிக்கும் தீராத

துன்பத்தை உண்டாக்கும்

தேரான் = ஆராய்ந்து பாராதவனாய்

பிறன் = அயலான்

வழிமுறை = சந்ததி

இடும்பை = துன்பம்

இந்தக் குறளுடன் நிறுத்தவில்லை வள்ளுவர்! இதோ இன்னொரு குறளும் தருகிறார் –

தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும்

தீரா இடும்பை தரும் (குறள் 510)

ஆராய்ந்து பார்க்காத ஒருவரிடம் நம்பிக்கை வைத்தலும் ஆராய்ந்து பார்த்துத் தெளிவடைந்த ஒருவரிடம் சந்தேகம் கொள்ளுதலும் நீங்காத துன்பத்தை உண்டாக்கும்

இந்த இரு குறட்பாக்களும் மூப்பனார் உள்ளிட்ட மொத்தத் தமிழ்நாட்டு மக்களுக்கு எத்தகைய எச்சரிக்கையை விடுத்துள்ளது என்பதை மறந்து விடலாமா? மறந்துவிடும் நேரமா இது? உடன்பிறப்பே! உழைக்கும் கண்மணியே! யாரேனும் இக்குறள் தரும் எச்சரிக்கையை மறந்திருப்பின் – அல்லது அறியாதிருப்பின் அவர்கட்கு நினைவூட்டுவது உன் கடமை! தலையாய கடமை!

என் இதயத்துடிப்பே! உன்னை சந்திக்க, மீண்டும் பயணம் தொடங்கிவிட்டேன் - வருகிறேன்! வாழ்க நீ! வெல்க நீ!

அன்புடன்,

மு. க.

14-05-1991

1733. தேவை; ஓர் அலட்சியப் புன்னகை!

உடன்பிறப்பே!

சில ஏடுகள் ஓலமிடுகின்றன!
ஓங்காரக் கூச்சலிடுகின்றன!
வாலறுந்ததுகள் வக்கணை பேசுகின்றன!
சிலர்; வயிற்றிலும் வாயிலும்
அடித்துக் கொள்கின்றனர்!
குய்யோ முறையோ எனக்
கூக்குரலிடுவோர்;
கூடி அழுகின்றனர்!
ஆடித் தீர்க்கின்றனர் – வசை
பாடித் திரிகின்றனர்!

ஏன் தெரியுமா? எதற்காகத் தெரியுமா? எம்.ஜி.ஆர். அவர்களும் நானும் இணைந்து நடந்து வருவதுபோல துறைமுகம் தொகுதியில் நண்பர் காஜா அவர்கள் ஒரு பெரிய விளம்பரத் தட்டி வைத்துவிட்டாராம்!

அது பொறுக்கவில்லை சிலருக்கும் சில ஏடுகளுக்கும்! சினந்து பார்க்கின்றனர்! சீறி விழுகின்றனர்!

அ.தி.மு.க. (2) எனப் பேரவையில் பிரிந்து அமர்ந்திருந்த (திருநாவுக்கரசு) அணியினர், தி.மு.கழகத்துடன் தேர்தல் உடன்பாடு கொண்டனர். ஒன்பது தொகுதிகளில் அவர்கள் போட்டியிடுவதென்று பகிர்ந்து கொள்ளப்பட்டு; அந்தத் தொகுதிகளில் தி.மு.கழகம் அவர்களை ஆதரித்து பணியாற்றுவதென்றும் - கழகமும் தோழமைக் கட்சிகளும் போட்டியிடும் தொகுதிகளில் அ.தி.மு.க. (திருநாவுக்கரசு) அணியினர், தமது ஆதரவைத் தருவதென்று உடன்பாடு!

தேர்தல் உடன்பாடு என்றாலே இப்படித்தான்! கழகமும்; ஜனதா தளமும் - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டும் - இந்திய கம்யூனிஸ்டும் - முஸ்லீம் லீக் லத்தீப் பிரிவும் - அகில இந்திய பார்வார்டு பிளாக்கும் - ஷெட்யூல் இனவிடுதலை இயக்கமும் - தொகுதி உடன்பாடு செய்து கொண்டுள்ளன! அந்தத் தொகுதிகளில் எல்லாம் அந்தந்தக் கட்சிகளின் கொடிகள் சேர்ந்து பறக்கின்றன! அதே போல அ.தி.மு.க. (திருநாவுக்கரசு) அணியினர், அ.தி.மு.க. (ஜானகி அணி) தி.மு.கழகத்துடன் உடன்பாடு கொண்டுள்ளதால் அந்தக் கொடிகளும் சேர்ந்து பறக்கின்றன!

கொடிகள் இணைந்து பறக்கும்போது, அந்தக் கொடிகளுக்குரிய கட்சிகளின் தலைவர்களது படங்களும் இணைந்து இருப்பதென்பது; கூட்டணியில் தவிர்க்க முடியாதது என்பதை சராசரி அரசியல் புரிந்தவர்களும் தெரிந்தே வைத்திருக்கிறார்கள்.

முன்பு இரு தலைவர்களும் மோதிக் கொண்டார்களே; இப்போது இரு தலைவர்களது படங்களையும் போட்டு விளம்பரம் செய்கிறார்களே என்று விபரீதக் கேள்வி கேட்போர் விவேகம் பெற்றிட சில உதாரணங்களை மட்டுமே கூறுகிறேன்.

1980-ஆம் ஆண்டு தேர்தலில் இந்திரா காங்கிரசும், தி.மு.க.வும் ஓரணி! எம்.ஜி.ஆர். அவர்களின் அ.தி.மு.க.வும் அதன் தோழமைக் கட்சிகளும் வேறு அணி!

1984-ல் நடைபெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரசும், எம்.ஜி.ஆரின் அ.தி.மு.க.வும் ஓரணி! அப்போது இ.காங்கிரஸ் கட்சிக் கொடிகளும் அ.தி.மு.க. கொடிகளும் இணைந்து பறந்தன! அது மட்டுமல்ல; அ.தி.மு.க. தொகுதிகளில் இலைச் சின்னங்களில் ஒரு இலையில் இந்திரா படமும் வரையப்பட்டு ஊரெங்கும் விளம்பரம் செய்யப்பட்டது! அப்போது எந்தப் பத்திரிகையும்; ஏன் எந்தக் கட்சியும் இது என்ன புதுமை? 80-ல் மோதல் 84-ல் இருவர் படமும் இணைப்பு? எனக் கேட்கவில்லை!

1989-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. ஒரு பிரிவின் தலைவியான திருமதி ஜெயலலிதா; தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் இந்தியாவை ராஜீவ் காந்தி அடகு வைத்து விட்டார் என்றும் - போபர்ஸ் ஊழல் பேர்வழியான ராஜீவ் காந்திக்கு வாக்களிக்காதீர்கள், என்றும் முழங்கியதை யாரும் மறக்க முடியாது!

ஆனால் இன்று திருமதி ஜெயலலிதா படமும், காங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ் காந்தி படமும் ஒளிவிடும் சுவரொட்டிகள் ஊரெங்கும் ஒட்டப்படுகின்றன!

1989-க்கும் 1991-க்கும் இடையில் இரண்டே வருடங்கள்தான்!

போபர்ஸ் ஊழலை அக்குவேறு ஆணி வேறாக வர்ணித்துப் பேசிய அம்மணியின் படத்துடன் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ராஜீவின் படமா? என்று எவரும் கூக்குரல் போடவில்லை!

சிலருக்குக் கடந்த கால வரலாறு நினைவிருக்காது! நினைவூட்டுகிறேன்!

1973-ஆம் ஆண்டு உத்திரபிரதேச சட்டமன்றத் தேர்தலும் - புதுவை மாநில சட்டமன்றத் தேர்தலும் ஒரே நேரத்தில் நடைபெற்றன.

பெருந்தலைவர் காமராசரின் ஸ்தாபன காங்கிரஸ் கட்சி, உத்திரபிரதேசத்தில் இந்திரா காங்கிரசை கடுமையாக எதிர்த்தது.

அதே சமயம் காமராசர் அவர்கள், புதுவை மாநிலத்தில் இந்திரா காங்கிரசுடன் கூட்டணி அமைத்துக் கொண்டார்.

அன்னை இந்திரா படமும் பெருந்தலைவர் காமராசர் படமும் அச்சிட்ட விளம்பரங்கள் புதுவை மாநில சுவர்களில் வண்ணங்காட்டின!

இன்னொரு விசித்திரம் என்னவென்றால்; உத்திரபிரதேச இந்திரா காங்கிரஸ்காரர்கள், ஸ்தாபன காங்கிரசை தோற்கடிக்க - தங்களது தேர்தல் விளம்பரங்களில் இந்திரா படமும் காமராசர் படமும் இடம் பெறச் செய்ததுதான்!

அப்போதெல்லாம் குதிக்காதவர்கள்; இப்போது ஆகாயத்துக்கும் பூமிக்குமாகக் குதித்து - ஆகா! என்னே அநியாயம்? தி.மு.க. கொடியும், அ.தி.மு.க. கொடியும் சேர்ந்து பறப்பதா? கருணாநிதி படமும், எம்.ஜி.ஆர். படமும் இணைந்து இருப்பதா? என்று கொதிப்பதின் காரணம் என்ன?

அந்தப் படங்கள் ஒட்டுப் படங்கள் கூட அல்ல! நானும் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும் உறவாடிக் கழகம் வளர்த்த போதும், கலையுலகில் இணைந்து பணியாற்றிய போதும் எடுத்த படங்கள் தான்!

இந்தப் படங்கள் சேர்ந்திருப்பதும், கொடிகள் சேர்ந்து பறப்பதும் மாத்திரம் சிலரின் கண்ணை உறுத்துகிறது பாபம்!

என்னடி மாமியாரும் நாத்தனாரும் உன்னை ரொம்பத் திட்டினார்கள் - ஏன்?

என்று வீட்டு மருமகளை அடுத்த வீட்டுக்காரி அனுதாபத்துடன் கேட்கிறார்.

போன வெள்ளிக்கிழமை கோயிலுக்கு என் மாமியார் தனியாகப் போய் வந்தாள், அதற்கு முதல் வெள்ளிக்கிழமை கோயிலுக்கு என் நாத்தனார் போய் வந்தாள். இந்த வெள்ளிக் கிழமை கோயிலுக்கு நான் போய் வந்தேன். அதற்குத்தான் வம்பு!

என்று மருமகள் விளக்குகிறாள்

அதற்கா இப்படித் திட்டுகிறார்கள் உன் மாமியாரும் நாத்தனாரும்!

ஆமாம்! அவள் போகலாம்

அவள் மகள் போகலாம் -

நான் போனால்தான்

இழவுபட்ட பாடாக இருக்கிறது!

என்று மருமகள் பதில் அளிக்கிறாள் என்று ஒரு கிராமீயக் கதை உண்டு! என் தந்தை சொன்னதாக ஞாபகம்!

அப்படித்தான் இருக்கிறது இந்தக் கொடி விஷயமும் - படப் பிரச்சினையும் இந்தத் தேர்தலில்!

தொகுதி உடன்பாடு - கூட்டணி என்பதற்கான இலக்கணம் தெரியாமல் ஏனோதானோ என்று பேசுகிறவர்களை ஒரு அலட்சியப் புன்னகையால் ஒதுக்கிவிட்டு; உடன்பிறப்பே! நீ உன் பணியினை ஓய்வின்றி ஆற்றிடுக!

அன்புடன்,

மு. க.

(15-05-1991)

1734. இதயங்கள் அருகருகேதான் இருக்கின்றன!

உடன்பிறப்பே!

இந்த ஜூன் மூன்றாம் நாள் எனக்கு அறுபத்தி எட்டாவது பிறந்த நாள்!

இதனை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிடவில்லை. இந்த ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு நீயும் உன்போன்ற உடன்பிறப்புகளும் என்னைக் காண்பதற்கு வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளவே இத்தனை நாள் முன்னதாக இதனைத் தெரிவிக்கிறேன்.

இல்லையேல்; உன்னைத்தான் எனக்குத் தெரியுமே! சென்னைக்குப் பயணமாக நிகழ்ச்சி நிரல் இத்தனை நாள் தயாரித்திருப்பாயே - சென்னையில் இருக்கும் உடன்பிறப்புகளும் அந்த நாளைக் குறித்து வைத்துக்கொண்டு ஆயத்தமாக இருப்பார்களே; அனைத்தையும் முன்கூட்டித் தடுத்து நிறுத்திடத்தான் இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

பெரியார், அண்ணா, காயிதேமில்லத், பாபுஜி, இராஜாஜி ஆகியோரிடமும் என்பால் அன்பு கொண்ட அறிஞர்கள், கவிஞர்கள், ஆன்றோர், சான்றோர் அனைவரிடமும் வாழ்த்து பெற்று, பொது வாழ்வுப் பயணத்தில் ஊக்கம் பெற்ற பிறந்த நாட்கள் பல; கடந்த காலத்தில் வந்து போனதுண்டு. அவர்கள் என்னைத் தழுவி உச்சி முகர்ந்து, வாழ்த்துகள் ஆயிரம் வழங்கிய அந்த நாட்கள்; அடடா; நினைத்தாலே கண்கள் பனிக்கின்றன இப்போதும்!

விழாவுக்கு நான் வரமாட்டேன் எனக் கூறி; சென்னையில் இல்லாமலே மன்னைக்கு ஓடி விட்டேன்! நீ வராவிடினும் விழா உண்டு என்றுரைத்து அன்றைய பாலர் அரங்கத்தில் அண்ணா அவர்கள் எனக்குப் பிறந்த நாள் வாழ்த்துக் கூறிப் பேசிய அந்தப் பேச்சு இன்னமும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அந்த ஒலிப்பதிவு நாடாவை அடிக்கடி போட்டுக் கேட்டு என் விழிகளை அருவிகளாக்கிக் கொள்வேன்.

அன்று விழாவில் கலந்துகொள்ள மறுத்து ஓடியதற்கு காரணம் வெட்கம்!

இன்று விழா வேண்டாமென்பதற்குக் காரணம் வேதனை!

வேதனை இருக்காதா உடன்பிறப்பே; நமது தமிழ் மண்ணில் கடந்த 21-ஆம் நாளன்று சிந்தப்பட்ட இரத்தம் இந்தியத் திருநாட்டின் ஒளிமிகுந்த ஒரு இளந்தலைவனின் இரத்தமன்யோ!

காவலுக்குக் கெட்டி எனப் பெயர் எடுத்த தமிழ்நாட்டுக் காவல்துறைக்கே ஒரு பெரும் அறைகூவலாக - அவமானகரமாக அமைந்துவிட்ட நிகழ்ச்சியன்றோ அது?

காட்டுமிராண்டித்தனம் என்பதா? கோழைகளின் வெறிச்செயல் என்பதா? அரசியல் மாறுபாடுகளை விவாதித்துத் தீர்த்துக்கொள்ள இயலாத - அல்லது விரும்பாத - இரக்கமற்ற கூட்டத்து இழிகுணத்தின் வெளிப்பாடு என்பதா? இரைதேடிய பதவிப் பசியின் பகை தீர்க்கும் படலம் என்பதா? இந்திய நாட்டு அரசியலில் குழப்பம் ஏற்படுத்த எங்கிருந்தோ வன்கணாளர் ஏவிவிட்ட வஞ்சகம், சூது, சூழ்ச்சி என்பதா?

எதுவாயினும்; அது தமிழ் மண்ணுக்கு நேர்ந்த களங்கம்! எளிதில் துடைத்தெறிய முடியாத வெட்கக்கேடு!

நீண்டகாலம் பழகும் வாய்ப்பு ராஜீவுடன் எனக்கு ஏற்படவில்லை - அவரும் நீண்ட காலமாக அரசியலில் இல்லாததால்! எனினும் நீண்ட எதிர்காலத்திற்குரிய அந்த இளந் தலைவருடன் குறைந்த காலமே பழகியவன் என்ற முறையில் அவருக்கு ஏற்பட்ட விபரீத முடிவை சகித்துக்கொள்ள இயலவில்லையே!

இந்த நிலையில் பிறந்த நாள் எதற்கு? அந்த நாள் தானாக வந்து போகட்டும் - விழாக் கோலம் தேவையில்லை! யாரும் வந்து வாழ்த்தத் தேவையில்லை; எனக்கருதியதை மேலும் உறுதி செய்யும் முறையில் தொடர் நிகழ்ச்சிகள் பல தமிழ் நிலத்தில் நடந்து விட்டன!

கழக கண்மணிகள் ஆறேழு பேர்களின் உயிரை அரசியல் ஆதாயம் தேடி கயவர்கள் குடித்து விட்டனர்!

தேர்தலில் நின்ற நமது கூட்டணிக் கட்சியினர் குறிவைத்துத் தாக்கப்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் சூறையாடப்பட்டு; அவர்கள் அலைகடல் துரும்புகளாய் ஆக்கப்பட்டுள்ளனர்!

குடிசைகளில் வாழ்ந்த என் கழக உடன்பிறப்புகள் பலர், நடுத் தெருவில் நிற்கின்றனர்!

பெட்டிக் கடை வைத்துப் பிழைத்துக் கொண்டிருந்த கழகக் குடும்பங்கள் வாழ்வதற்கு வழியின்றி வன்முறையாளர்களின் வெறிச் சேட்டைக்கு ஆளாகித் தவிக்கின்றன!

ஒரு பெரிய தலைவரின் சாவைப் பயன்படுத்திக் கொண்டு மிகச் சிறிய உள்ளம் படைத்த அரசியல்வாதிகள் நடத்திய அராஜகம் இது!

இந்தச் சோக இருட்டில் என் பிறந்த நாள் எனும் நினைவு என் உள்ளத்தில் நிச்சயம் ஒளி சேர்க்காது! உற்சாகம் வழங்காது!

உடன்பிறப்பே; நீ எனக்கு செய்யும் உதவி - ஜூன் 3-ஆம் நாள், நீ என் இல்லம் நாடி வராமல் இருப்பதுதான்!

அன்றைய தினம் நான்; பெரியார், அண்ணா இருவரின் நினைவிடத்திலும் என் பெற்றோர் படத்தின் முன்னும் வணக்கம் செலுத்துவதே; உலகெங்கும் இருக்கின்ற உன் உடன்பிறப்புகளிடமும் வாழ்த்துப் பெறுவதற்கு ஒப்பாகும்!

எனவே இந்த ஆண்டு என் வேண்டுகோளை; ஏற்று நடத்திடுக! நீ இருக்குமிடத்திலிருந்தே வாழ்த்திடுக! நம் இதயங்கள் அருகருகேதான் இருக்கின்றன! தொலைவில் இல்லை! எனவே உன் வாழ்த்து எனக்குத் தெளிவாகக் கேட்கும்!

அன்புடன்,

மு. க.

29-05-1991

1735. நான் மீண்டும் பணி தொடங்குகிறேன்!

உடன்பிறப்பே,

ஜூலை மூன்றாம் நாள் உனக்குப் பொறுப்பு மிக்க பணியொன்று வாய்த்திருக்கிறது. நமது அணியின் வேட்பாளர்கள் போட்டியிடும் அனைத்துத் தொகுதிகளிலும் தேர்தல் பணியாற்றிடத் தேவைப்படும் தொகையை உண்டியல்கள் வாயிலாகப் பொது மக்களிடம் வேண்டி, வசூலித்து ஆங்காங்குள்ள தேர்தல் பணிக்குழுக்கள் மூலம் கணக்குப் பார்த்து அந்தந்தத் தொகுதிகளுக்கான செலவுகளை செய்து கொள்ளவேண்டிய ஒரு சூழ்நிலை!

இதயமற்றோர் நடத்திய இரக்கமற்ற வெறியாட்டத்தினால் உயிரிழந்தோர் ஏழுபேர்! உடைமைகளைப் பறி கொடுத்தோர் எல்லாத் தொகுதிகளிலும் ஏராளமானோர் நமது அணி யைச் சார்ந்தோர்! கட்சிச் சார்பற்ற பொதுமக் கள், வணிகர்கள், தொழிற்கூடங்கள் இழந்தது கணக்கில!

எத்தனை எத்தனை வண்ண வண்ணச் சுவரொட்டிகளை வன்முறை விலங்கினங்கள் கொடிய நகங்கொண்டு பிராண்டிக் கிழித் தெறிந்துள்ளன!

- அலங்கோலப்படுத்தப்பட்ட “கட்அவுட்” உருவங்கள்
- அறவே அழிக்கப்பட்ட தேர்தல் விளம்பரப்பதாகைகள்

எண்ணிலடங்கா! சமூக விரோத வெறியர்களின் கொள்ளிவாய்க் கோரப்பற்களுக்கு இரையாகிக் கிழித்தெறியப்பட்ட அந்த எழில்மிகு எழுச்சி ஏற்பாடுகனை; மீண்டும் செய்வதென்பது நினைக்கவே இயலாத ஒன்று!

கண்கலங்க அவற்றினைப் பார்த்து, கைபிசைந்து நிற்கும் கழக உடன்பிறப்புகள்; சோகத்தை உதறிவிட்டு - கோபத்தையும் புறந் தள்ளிவிட்டு - இன்னும் பதினைந்து நாட்கள் ஆற்றிட வேண்டிய பணியினை; ஆக்கபூர்வமாக ஆற்றுவதற்காகத்தான் உண்டியல் எடுக்கும் இந்த முறை அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிக்கப்பட்ட குடிசை வீடுகள் - இடிக்கப்பட்ட துணை மன்றங்கள் - நொறுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் - சாம்பலாக்கப்பட்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட கார்கள், வேன்கள், பல்லாயிரக் கணக்கான சைக்கிள்கள் - நாள்தோறும் தொடர்ந்து நமது ஏடுகளில் வெளிவரும் புகைப்படங்களைப் பார்த்தாலே நெஞ்சம் குலுங்கு கிறது!

"முரசொலி" பல லட்ச ரூபாய் இழப்புக்கு ஆளாகியிருக்கிறது! என் வேதனை பெரும் சொத்து சேதமாகி விட்டதே என்பதற்காக அல்ல! முப்பது ஆண்டுகாலமாக நாள்தோறும் பட்டியல் இட்டு வைக்கப்பட்டிருந்த முரசொலி நாளிதழ்களின் மொத்த இணைப்பும் முழுமையாகத் தீயில் கருக்கப்பட்டு விட்டது என்பதைக் காணும் பொழுது; என் அன்புக்குழந்தையின் கழுத்தை முறித்துப் போட்டது போலிருக்கிறது!

இப்படி எத்தனைபேர் மாநில முழுதும் வயிறு - எரிந்து வாடுகிறார்கள் என்பதை இதயமுள்ளோர் எண்ணித் துயரமுறுகிறார்கள் என்பதை நானறிவேன்!

அந்தப் பரிவுகொண்ட உள்ளங்களிடம்தான்; நீ உண்டியல் ஏந்திச் செல்ல வேண்டும்.

சிறு தொகையாயினும் முகமலர்ந்து உண்டியலில் அளிப்போரிடம் மட்டுமே நிதியினைப் பெற்றிடுக!

முகஞ்சுளிப்போர் பெருந்தொகை தருவோராயிருப்பினும் - நீ முகம் திருப்பித் திரும்பிடுக! வலியுறுத்தல், வற்புறுத்தல் கூடவே கூடாது!

1967 பொதுத் தேர்தலையொட்டி சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்ற கழக மாநாட்டில் அண்ணா சொன்னது நினைவிருக்கிறதா?

"தம்பி கருணாநிதி பதினோரு லட்சம் நிதி திரட்டி தந்துள்ளார்! இது தலைமைக் கழக வாயிலாக தேர்தல் செலவுக்கு எனினும் - ஆங்காங்குள்ள கழக வேட்பாளர்கள் நிலை உணர்வேன் நான்! இருந்தபோதிலும் உங்கள் வீடுகளில் உள்ள தட்டுமுட்டு சாமான்களை விற்றாவது தேர்தல் செலவு செய்து வெற்றியினை ஈட்டிடுமாறு வேண்டுகிறேன்!"

இப்படிப் பேசினார் அன்று நமது அண்ணன்!

அந்தத் தட்டுமுட்டு சாமான்களுக்கும் வழியின்றி: சண்டாளர்கள் சதி செய்து - பெரும்பாலான தொகுதிகளில் அவற்றையும் எரித்துக் கருக்கிவிட்டார் - என்பது எத்துணை பெரிய கொடுமை!

எனவே உடன்பிறப்பே; தயாராகட்டும் உண்டியல்கள்! உண்டியல் வசூல் பணி, தொகுதிகளில் எல்லா பகுதிகளிலும் நடைபெறுவதற்கேற்ப திட்டங்கள் வகுக்கப்படட்டும்!

ஊர் ஊராக - கிராமம் கிராமமாக - வீதிவீதியாக - வீடு வீடாக - உண்டியலுடன் சென்றிடுக; அமைப்புரீதியாக செயல்படுக!

ஜூன் 3 - யாரும்; தாங்கள் பணியாற்றிடும் தொகுதியை விட்டு, இடத்தைவிட்டு நகரக் கூடாது!

பத்துப்பேர் இருபது பேர் பகுதி பகுதியாக தொகுதிகளில் உண்டியல் ஏந்திச் சென்றிட வேண்டும்!

அமைதி காப்பதில் தகுந்த எச்சரிக்கை வேண்டும்!

பொறுப்பானோர் தலைமையில் ஒவ்வொரு தொகுதியிலும் - பல பிரிவுகளாகச் சென்று, இந்தக் கடமையை ஆற்றிட வேண்டும்!

ஆங்காங்குள்ள தேர்தல் பணிக்குழுக்கள் வசூலாகும் தொகையைக் கணக்கிட்டு, அந்தந்த தொகுதிகளின் தேர்தல் பணிகளுக்கு பகிர்ந்து கொண்டு - செயலாற்ற வேண்டும்!


உடன்பிறப்பே; ஜூன் முதல் தேதி நான் மீண்டும் தொடங்குகிறேன் தேர்தல் பணியை வேலூரிலும் செங்கற்பட்டிலும்!

நீயும் தொடங்கியிருப்பாய்; எனவே தொடர்ந்திடுவாய்!

அன்புள்ள

மு.க.

01-06-1991



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜி.ஜி டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதற்பதிப்பு 2022